ஆசிரியர் : பிரைட்சிங்

தமிழாக்கம் : சி. சுந்தரராஜன்

1939 முதல் இந்தியாவில் பணவீக்க விளம்போக்குகள்

TNSDA

04425

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழ்நாடு - அரசாங்கம்

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—131

1939 முதல் இந்தியாவில் பணவீக்க விலைப்போக்குகள்

ஆசிரியர்

D. பிரைட் சிங், எம்.ஏ., பி.எச்டி.,
பொருளாதாரப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக்கழகம்.

மொழிபெயர்ப்பாளர்

S. சுந்தரராஜன், எம்.ஏ., எம்.லிட்.,
பொருளாதாரத் துறைத் தலைவர்,
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்

First Edition—November, 1966

B.T.P. No. 131

© Bureau of Tamil Publications

Inflationary Price Trends In India Since 1939

D. Bright Singh

Translation

S. Sundararajan

PRICE Rs. 7-50

Original English edition

© 1961, D. Bright Singh.

This Tamil edition has been published under an agreement with Messrs. Asian Publishing House, Publishers of the English edition entitled Inflationary Price Trends in India Since 1939.

Printed by

BHARANI PRESS,

55, Perambur Barracks Road,

Vepery, Madras-7.

அணிந்துரை

(திரு. எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்துவருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி—இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்றுவருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றுன 'இந்தியாவில் பணவீக்க விலைப்போக்குகள்' என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் ஆவது131 வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 166 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ் வன்னையை வாழ்த்துவோமாக. உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

எம். பக்தவத்ஸலம்

முகவுரை

சென்ற உலகப் போரின் அவசரத் தேவையும், அதற்கு இந்திய அரசாங்கம் நிதியளிப்பதற்கு மேற்கொண்ட வழிகளும் அதிக விலைக் காலத்தைத் தொடங்கின. அது இதுவரையில் தொடர்ந்துள்ளது. 1945-ல் அமைதி திரும்பியதால், பின்னிறக்கம் ஏற்படவில்லை. அதற்கு மாறுக, 1945 முதல், விலைகள் சில சமயங்களில் சிறிதளவு குறைந்தாலும், மொத்தத்தில் விலைகளில் ஏறுமுகம் தொடர்ந்திருந்தது. அது நெடுகப் பணவீக்கத் தன்மையுடையதாக இருந்திருக்கிறது. இது சில வெளிக்காரணங்களாலும் பெரிதாக்கப்பட்டது. வெவ்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக மத்திய அரசாங்கமும் இராச்சிய அரசாங்கங்களும் பெரிய செலவுகளைச் செய்த ஒரு முக்கியமான உள்நாட்டுக் காரணத்தாலும் இது வளரலாயிற்று. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் விலையேற்றத்தில் உண்டான கடைசிக் கட்டமானது, அதிக முதலீட்டுச் செலவுகளால் உண்டாகக்கூடிய பணவீக்க அபாயத்தை நன்கு வெளிக்கொணர்ந்து காட்டி, நிலைப்புத் தன்மையுடன் கூடிய பொருளாதார வளர்ச்சியை உண்டாக்குவதற்கான வழிகளைக் காண்பதில் நம் கருத்தைத் திருப்பியுள்ளது. ஆனால், இந்த நோக்கத்தை அடைவதற்காக மேற்கொள்ளப்படும் எக் கொள்கையும், நம் நாட்டில் விலையளவைப் பாதிக்கும் அடிப்படைக் காரணங்களை நன்கு உணர்ந்து அதன் அடிப்படைமீது அமைக்கப்படவேண்டும். 1939 முதல் நம் நாட்டில் இருந்த விலைப்போக்குகளின் பொதுவான தன்மையைப் பகுத்தாயவும், போர்க்கால நிதி, அபிவிருத்திச் செலவுகள், அயல்நாட்டுக் கொடுப்பல் நிலை, உள்நாட்டு உற்பத்திப் போக்கு போன்ற அம்சங்கள் விலைகளை எந்த அளவுக்குப் பாதித்துள்ளன என்பதை ஆராயவும், நான் இந்த நூலில் முயன்றிருக்கிறேன்; அன்றியும், விரைவான விலையுயர்வு மக்களின் துய்ப்புப் பழக்கங்களையும் வாழ்க்கைத்தரத்தையும் எப்படிப் பாதித்திருக்கிறது என்பதையும் ஆராய முயன்றிருக்கிறேன். இறுதி அத்தியாயத்தில், விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள முறைகளையும், அண்மைக் காலத்தில் விலைக் கொள்கை என்று கூறக்கூடிய ஒன்று எப்படித் தோன்றியுள்ளது என்பதையும்பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இந்த நூலை எழுதுவதில் நான் பலரிடமிருந்து உதவி பெற்றிருக்கிறேன். சென்னைப் பல்கலைக்கழகப் பொருளாதாரப்

பேராசிரியர் டாக்டர் R. பாலகிருஷ்ணு என் பணியில் தொடர்ந்து அக்கறை காட்டியதற்காக அவருக்கு நான் என் வணக்கத்துடன்கூடிய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னைப் பல்கலைக்கழக விவசாயப் பொருளாதார ஆராய்ச்சி நிலையத்தின் துணை இயக்குநரான திரு. C. W. B. சகரியாஸ் அவர்களும், சென்னைப் பல்கலைக்கழகப் பொருளாதார ஆராய்ச்சித் (சர்வே) துணை இயக்குநரான திரு. K. S. சோணைசலம் அவர்களும் சில அருமையான யோசனைகளைக் கூறியதற்காக, அவர்களுக்கும் என் நன்றி உரியது. 1955 மத்தியில் பூனாவில் பன்னாட்டுப் பொருளாதாரக் கழகங்கள், இந்தியப் பொருளாதாரக் கழகம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட உயர் தரப் பொருளாதாரப் பள்ளியில் நான் சந்தித்து அளவளாவும் பேறுபெற்ற ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் லோரி டார்ஷிஸ், ஆக்ஸ்ஃபோர்டு புள்ளியியல் கழகத்தைச் சேர்ந்த திரு. J. டெளனி ஆகியவர்களால் நான் பெரிதும் பயனடைந்தேன். இவர்களுக்கும் என் நன்றி.

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எழுத்தர் திரு. M. மகிமை நாதன் என் கையெழுத்துப் படியைத் தட்டெழுத்தாக்கித் தந்ததற்கு என் நன்றி அவருக்கும் உரியது.

சென்னைப் பல்கலைக்கழகம், இந் நூலை வெளியிடுவதற்கு எனக்கு அனுமதி தந்ததற்காகமட்டுமன்றி, ஆராய்ச்சி செய்வதற்குத் தக்க சூழ்நிலையை உருவாக்கித் தந்தமைக்காகவும் அதற்கு என் நன்றி சிறப்பாக உரியது. சென்னைப் பல்கலைக் கழகச் சஞ்சிகை (மனிதவியல்) பதிப்பாசிரியர், அதில் நான் வெளியிட்டிருந்த (Vol. XXVI, 1954-55) '1939 முதல் இந்தியாவில் விலைப்போக்குகள்' என்ற கட்டுரையின் பெரும்பகுதியை இந் நூலில் சேர்த்துக்கொள்வதற்கு அனுமதித்ததற்காக அவருக்கு நான் நன்றியுடையவனுவேன்.

இந்த நூலின் இரண்டாவது பதிப்பை வெளியிடுவதற்கு முக்கியக் காரணம், நம் பொருளாதாரத்தில் பணவீக்கம் உயிருள்ள பிரச்சினையாக இருந்துவருவதுதான் என்று நான் கருதுகிறேன். அண்மை ஆண்டுகளில் பணத்தின் மதிப்புப் படிப்படியாகக் குறைந்து திடீரென்று வீழ்ந்ததால், உற்பத்தி அனுமதிக்கும் அளவுக்குத் துய்ப்போர் தம் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்ளமுடியாமல் தடுக்கப்பட்டதுமட்டுமன்றிப் பொருளாதார முன்னேற்றத்திற்கே அது பெரிய அபாயமாகவும் இருக்கிறது. பொருளாதார வளர்ச்சி என்பது முதலீட்டு வளர்ச்சி விகிதத்திலும் முதலினத் தீவிரத் திட்டச் செலவீட்டு வளர்ச்சி

விகிதத்திலும் அடங்கியிருக்கும்வரையில், பணவீக்கம் நம்மைத் தொடர்ந்து வந்துகொண்டே யிருக்கும். நம் பொருளாதார இலட்சியங்களை நோக்கி நாம் முன்னேறும்போது இந்த அபாயத்தை நாம் எப்பொழுதும் உன்னிப்பாகக் கவனித்து வரவேண்டும்.

இந் நூலை இரண்டாம் பதிப்பிற்காகத் திருத்தும்போது, பொருளாதார வளர்ச்சிக்கும் பணவீக்கத்திற்கும் உள்ள இத் தொடர்பை நான் மறந்துவிடவில்லை. முதல் பதிப்பின் பல அத்தியாயங்கள் திருத்தப்பட்டுள்ளன. எல்லா அத்தியாயங் களிலும் புள்ளிவிவரங்கள் இன்றுவரையுள்ள நிலைப்படி தரப் பட்டுள்ளன. இரண்டாம் திட்ட ஆண்டுகளில் விலையளவை அபிவிருத்தி நிதி எப்படிப் பாதித்தது, பொருளாதார அமைப் பில் பணவீக்க நெருக்கடியைக் காட்டும் பல அறிகுறிகளின் முக்கியத்துவம் என்ன என்பதைப்பற்றிக் கூறும் புதிய அத்தி யாயம் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. கல்கத்தா 'Indian Finance' பதிப்பாசிரியர், 1958 அக்டோபர் 18-ல் நான் அப் பத்திரிகையில் வெளியிட்டிருந்த கட்டுரை ஒன்றைப் பயன்படுத்திக்கொள் வதற்கு அனுமதி தந்ததற்காக நான் அவருக்கு என் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்தில் கிடைத்த ஆராய்ச்சி வசதிகளும், பொருளாதாரப் பிரிவில் உள்ள என் உடனுழைப்போரிடமிருந்து நான் பெற்ற உதவியும் இந் நூலை நான் எளிதில் திருத்துவதற்கு உறுதுணையா யிருந்தன.

சென்னைப் பல்கலைக்கழகம்,
1961, ஜூன்

D. பிரைட் சிங்

மொழிபெயர்ப்பாளரின் முகவுரை

'இந்தியாவில் பணவீக்க விலைப்போக்குகள்' என்ற இந்த நூல் தமிழாக்கம் செய்யப்படவேண்டுமென்று 'தமிழ் வெளியீட்டுக் கழகம்' எனக்கிட்ட ஆணைக்கிணங்க இப் பணியை யான் செய்யலானேன். கல்லூரிகளில் தமிழ் மொழியில் பாடங்கள் எல்லாம் கற்பிக்கப்படவேண்டுமென்ற கோட்பாட்டினை நிறை வேற்றுவதில் இந்நூல் பெரிதும் உதவும் என்பது என் நம்பிக்கை. மூலத்தை மொழிபெயர்ப்பதில் நான் சிறிதும் கருத்தும் உணர்ச் சியும் சிதையாமல் பாதுகாத்திருக்கிறேன் என்று உறுதியாக நம்புகிறேன். இந்நூலில் கையாளப்பட்டுள்ள கலைச்சொற்கள் அரசாங்கம் தந்துள்ள கலைச்சொல் அகராதியிலிருந்து எடுக்கப் பட்டவையே. அதில் இல்லாத சொற்களுக்கு நிகராகப் புதுச் சொற்கள் ஆக்கப்பட்டு இதில் கையாளப்பட்டுள்ளன. இந்நூல் பொருளாதார மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் பெரிதும் பயன்படும் என்பது என் கருத்து. இப் பணியில் என்னை ஊக்கிய 'தமிழ் வெளியீட்டுக் கழகத்திற்கு' என் நன்றி.

சி. சுந்தரராஜன்

பொருளடக்கம்

பக்கம்

1. பணவீக்கத்தின் பொருளாதாரம் 1

பணவீக்கத்தின் பொருள்—பணவீக்கத்தின் சிறப்பியல்புகள்—வளர்ச்சி குறைந்த பொருளாதார அமைப்பில் பணவீக்கம்—பணவீக்கத்தின் விளைவுகள்.

2. போர்க்கால விலைப்போக்குகள், 1939–45 ... 32

இரண்டாம் உலகப் போர் தொடங்கும் சமயத்தில் விலைகளின் நிலைமை—போர்க்கால விலை இயக்கங்களின் வெவ்வேறு கட்டங்கள்: (அ) ஊக வணிகப் பொருளாதார வீக்கமும் வீழ்ச்சியும் (1939, செப்டம்பர் முதல் 1940, ஆகஸ்டுவரை); (ஆ) ஏற்ற காலம் (1940 ஆகஸ்டு முதல் 1943 ஜூன் வரை); (இ) ஓரளவு நிலைப்புடைய காலம் (1943 ஜூன்முதல் 1945 ஆகஸ்டுவரை)—மற்ற நாடுகளுடன் ஒப்பிடுதல்.

3. போருக்குப்பின் விலைப்போக்குகள் 56

ஏறுமுகம் : 1945, ஆகஸ்டுமுதல் 1951, ஏப்ரல் வரை; (அ) கட்டுப்பாட்டு நீக்கமும் பிறகும்; (ஆ) மதிப்பிறக்கமும் அதன் மட்டான விளைவுகளும்; (இ) கொரியப் பொருளாதார வீக்கம்—பின்னிறக்கமும் மறுமலர்ச்சியும், (1951–53)—திட்டமிட்ட வளர்ச்சியும் விலை ஏற்ற இறக்கங்களும்.

4. பண அளிப்பில் வேறுபாடுகள் 89

பண அளிப்பின் கூறுகள்—பண அளிப்பில் பருவகால மாறுதல்கள்—பண அளிப்பில் நீண்டகால வேறுபாடுகள்—1947–48 வரை செலாவணிப் பெருக்கம்—1950–51 முதல் பண அளிப்பு.

5. போர்க்கால நிதியும் பணவீக்கமும் 123

போர்க்கால நிதியின் தன்மை—போர்க் காலத்தில் வரிக்கொள்கை—போர்க்காலத்தில் வரி அமைப்பில் மாறுதல்—போர்க்காலத்தில் கடன் வாங்கும் கொள்கை.

6. அபிவிருத்தி நிதியும் பணவீக்கமும் 145

போருக்குப் பிறகு பட்ஜெட் கொள்கை, 1946-51—அபிவிருத்தி நிதியும் பணவீக்கமும்.

7. அபிவிருத்தி நிதியும் பணவீக்கமும் (தொடர்ச்சி) ... 163

திட்டச் செலவின் மதிப்பீடு, மே 1958—இரண் டாம் திட்டத்தின் முன்னேற்றம்—இந்தியப் பொருளாதாரத்தில் பணவீக்க நெருக்கடி—காரணி விலைகளின் இயக்கம்.

8. அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையும் விலைகளும் ... 187

அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையின் பொருளும் முக்கியத்துவமும்—இந்தியாவில் அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையின் போக்குகள்: (a) பற்றுக் குறைகள், 1946-49; (b) உபரிகள், 1949-51—மதிப்பிறக்கமும் கொரியப் பொருளாதார வீக்க மும்; (c) பற்றுக்குறைகள், 1951-52—போர்த் தேவை குறைதல்; (d) 1952-ன் மத்தியிலிருந்து 1955-56 வரை உபரிகள்; (e) இரண்டாம் திட்ட காலத்தில் பாதகமான போக்குகள்—அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையும் விலைகளும்.

9. விலைகளும் உற்பத்தியும் 222

1939 முதல் உற்பத்திப் பொருள்களின் பொது வான தன்மை—போர்க் காலத்தில் விலைகளும் உற்பத்தியும்—விலைகளும் உற்பத்தியும், 1945-51—1951 முதல் விலைகளும் உற்பத்தியும்.

10. விலைகளும் வாழ்க்கைச் செலவும் 253

இந்தியாவின் வாழ்க்கைச் செலவுக் குறியீட் டெண்கள்—வெவ்வேறிடங்களில் வாழ்க்கைச் செலவுப் போக்குகள்—சில்லறை விலை இயக்கமும் வாழ்க்கைச்செலவும்—தொழிலாளரின்வாழ்க்கைச்

செலவும் சம்பாத்தியமும்—உண்மை வருமானம்—உண்மைச் செலவு—நடுத்தர வகுப்பாரின் வாழ்க்கைச் செலவைத் தொழிலாளரின் வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடுதல்—இந்தியாவில் அண்மைக் கால வாழ்க்கைச் செலவுப் போக்குகளை மற்ற நாடுகளுடன் ஒப்புநோக்குதல்.

11. விலைக் கட்டுப்பாடு 288

விலைக் கட்டுப்பாட்டுக் கொள்கையும் நுட்ப வினைமுறையும்—இந்தியாவில் விலைக் கட்டுப்பாட்டின் தன்மை—1939-42-ல் ஆரம்பக் கட்டுப்பாட்டு முறைகள்—கடுமையான கட்டுப்பாட்டு முறைகளை மேற்கொள்ளுதலும், விலைகளை அவை பாதித்த தன்மையும், 1943-47—கட்டுப்பாட்டு நீக்க முயற்சியின் தோல்வி, 1947-48—1949-51-ல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்.

12. விலைக்கொள்கை தோன்றுதல் 315

விலையளவை நிலைநிறுத்த ஏற்றுமதி இறக்கு மதிகளை ஒழுங்குபடுத்துவது, நேரடியான விலை மாற்றங்கள்—விலைக்குப் பண ஆதரவளித்தல்—விவசாய விலைகள் ஏறுவதைத் தடுப்பதற்கு அண்மையில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள்—கட்டுப்பாடுகளின் எதிர்காலம்.

கலைச்சொல் அகராதி 353

பொருள் அகவரிசை 360

அட்டவணைகள்

		பக்கம்
1.	மொத்த விலைக் குறியீட்டெண்கள் ...	38
2.	1939 இறுதிக்கும் 1943-ன் முதல் காற்பகுதிகளுக்கும் இடையில் நோட்டுப் புழக்கத்தில் உயர்வு.	44
3.	மொத்த விற்பனை விலைகளின் பொதுக் குறியீட்டெண்கள், 1941 ...	47
4.	விலைக் குறியீட்டெண்கள்—காலாண்டு இறுதி விவரங்கள் ...	49
5.	மொத்த விற்பனை விலைகள்: ஒவ்வோர் காலண்டர் ஆண்டிலும் சதவீத உயர்வு (+) அல்லது குறைவு (—) ...	51
6.	புழக்கத்தில் உள்ள தாள்கள் ...	54
7.	அத்தியாவசியப் பொருள்களின் உற்பத்தியில் வேறுபாடு ...	63
8.	மதிப்பிறக்கத்திற்குப் பிறகு விலைக் குறியீட்டெண்களின் இயக்கம் ...	68
9.	கொரியாவில் போர் தொடங்கியபிறகு விலைக் குறியீட்டெண்களின் இயக்கம் ...	72
10.	1951-ல் பொருள்களின் விலைகள் ...	75
11.	வெவ்வேறு வகைப் பொருள்களின் விலைக் குறியீட்டெண்களின் இயக்கம் ...	76
12.	இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் மொத்த விறபனை விலைக் குறியீட்டெண்கள்.	77
13.	வெவ்வேறு வகைப் பொருள்களின் விலைக் குறியீட்டெண்கள் இயக்கம் ...	82
14.	1952–53 முதல் பொது விலையளவில் இயக்கம் ...	84
15.	பண அளிப்பில் பருவகால மாறுதல்கள் ...	98
16.	பிரிக்கப்படாத இந்தியாவில், 1938–39 முதல் 1947–48 வரை பண அளிப்பு ...	100
17.	1950–51 முதல் 1959–60 வரை இந்திய யூனியனில் பண அளிப்பு ...	102
18.	போர்க்காலச் செலாவணி உபயோகம் ...	106
19.	பண அளிப்பின் ஆதாரங்கள் ...	108

		பக்கம்
20.	பண அளிப்பில் வேறுபாடுகள் ...	113
21.	பணவருமான வேகத்தில் மாறுதல்கள், 1939–40 முதல் 1946–47 வரை ...	115
22.	நடப்பு வைப்புகள் புழங்கும் வேகம் ...	116
23.	சோம்பிக் கிடந்த இருப்புகளின் மதிப்பீடு ...	117
24.	தேசிய வருமானமும் பணவருமான வேகமும், 1950–60 ...	118
25.	போர்க்காலத்தில் இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவு ...	129
26.	போர்க்காலத்தில் இந்திய அரசாங்கத்தின் மொத்த இராணுவச் செலவு ...	130
27.	போர்ச்செலவும் நோட்டுப் புழக்கத்தில் அதிகரிப்பும் ...	132
28.	இந்திய அரசாங்கத்தின் வட்டி பெறும் பொறுப்புகள் (இந்தியாவில்) ...	141
29.	அரசாங்க வருவாயும், செலவும், பணவீக்க இடைவெளியும் ...	143
30.	1946–47 முதல் 1950–51 வரை இந்திய அரசாங்கத்தின் பொதுவான பட்ஜெட் நிலை ...	151
31.	புதிய கடன்கள்மூலம் வசூல் ...	152
32.	அரசாங்கத்தின் ரொக்க இருப்புகள், 1946–51 ...	153
33.	முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவு, 1951–56.	154
34.	முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதியளித்தல், 1951–52 முதல் 1955–56 வரை மத்திய அரசாங்கமும் இராச்சிய அரசாங்கங்களும் ...	156
35.	முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதியளிக்க பட்ஜெட் சாதனங்கள் ...	158
36.	இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரிய தலைப்புகளில் முதலீட்டுச் செலவைப் பங்கிடுதல்.	165
37.	இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதியளித்தல் ...	167
38.	இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்றாண்டுகளில் செலவுகளின் முன்னேற்றம்.	169

பக்கம்

9. இரண்டாம் திட்டச் செலவும் முதல் மூன்றாண்டுகளில் நிதியளிப்பும் ... 170

40. 1955–56 முதல் 1959–60 வரையில் அரசாங்கப் பற்றாக்குறை, பாங்குச் செலாவணி, அயல் நாட்டுச் செலாவணிக் காப்பு நிதிகள் ... 175

41. விலையளவிலும் பணஅளிப்பிலும் வேறுபாடுகள்... 178

42. இந்தியாவின் கண்கூடான வாணிபக் கொடுப்பல் நிலை, 1939–45 ... 200

43. இந்தியாவின் அயல்நாட்டுக் கொடுப்பல்நிலை—நடப்புக் கொடுப்பல் வாங்கல்கள் ... 201

44. அயல்நாட்டுக் கொடுப்பல்நிலைப் பற்றாக்குறைக்கு நிதியளித்தல், 1946–49 ... 206

45. வெளிநாட்டு வாணிபத்தை மதிப்பிறக்கம் பாதித்தது ... 207

46. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மொத்த அயல்நாட்டுக் கொடுப்பல்நிலை ... 211

47. அயல்நாட்டுச் செலாவணிக் காப்பு நிதியின் இயக்கம், 1951–56 ... 212

48. இந்தியாவில் உற்பத்தியின் போக்குகள், 1939–50. 225

49. இந்தியாவில் உற்பத்தியின் போக்குகள், 1950–51 முதல் 1960–61 வரை ... 226

50. இந்திய யூனியனில் நாட்டின் மொத்த ஆக்கம், நடப்பு ரூபாய்களிலும் 1939ஆம் ஆண்டின் ரூபாய்களிலும் ... 228

51. 1948–49 முதல் தேசிய வருமானத்தின் போக்குகள். 229

52. இந்தியாவில் விவசாய உற்பத்தி, 1939–44 ... 231

53. இந்தியாவில் தொழில் உற்பத்தி, 1939–44 ... 231

54. பிரிட்டிஷ் இந்தியாவில் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் சராசரி தினசரி எண்ணிக்கை, 1939–44 ... 233

55. இந்திய யூனியனில் விவசாய உற்பத்தி, 1945–51. 237

பக்கம்

56. இந்தியாவில் தொழில் உற்பத்தி, 1944–51 ... 238

57. தொழிலாளர் உற்பத்தித் திறனும் உண்மை வருமானமும் ... 242

58. 1946–47முதல் 1954–55 வரை கூலிகள், லாபங்களின் குறியீட்டெண்கள் ... 243

59. இந்தியாவில் உணவு தானிய உற்பத்தியும் தொழில் கச்சாப் பொருள் உற்பத்தியும், 1951–58 ... 246

60. இந்தியாவில் தொழில் உற்பத்தி, 1951–59 ... 247

61. இந்தியாவில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவும் பொதுவிலைக் குறியீட்டெண்களும், 1939–51 ... 261

62. இந்தியாவில் தொழிலாளர் துய்ப்புப் பொருள் விலைக் குறியீட்டெண்ணும் பொதுவிலைக் குறியீட்டெண்களும், 1951–60 ... 261

63. ஆண்டு முழுவதும் நடைபெறும் தொழில்களில் வேலை செய்வோரின் சராசரி ஆண்டுவருமானம், 1939–54 ... 269

64. இந்தியாவில் தொழிற்சாலைகளில் வேலை செய்வோரின் பணவருமானமும் உண்மை வருமானமும், 1939–54 ... 272

65. சில முக்கிய இடங்களில் பணவருமானம், உண்மை வருமானம் ஆகியவைகளின் குறியீட்டெண்கள். 274

66. பருத்தித் துணி ஆலைத்தொழிலாளரின் பண வருமானமும் உண்மை வருமானமும், 1954–59 ... 278

67. பம்பாயில் கிராமப் பகுதிகளில் சராசரி தினசரிக் கூலி விகிதம், 1949–53 ... 279

68. பம்பாயில் கிராமப் பகுதிகளில் சராசரி தினசரிக் கூலி விகிதம், 1955–59 ... 280

69. போருக்கு முன்பும் அண்மைக் காலத்திலும் இந்தியாவில் தலா உணவளிப்பு ... 281

70. போர்க்காலத்தில் இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் வாழ்க்கைச் செலவுப் போக்குகள் ... 285

71. இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் துய்ப்புப் பொருள் விலைக் குறியீட்டெண்கள், 1950–59 ... 286

72. விலைக் குறியீட்டெண்களின் இயக்கம், 1947–49 ... 310

படங்கள்

		பக்கம்
1.	மொத்த விலைகளின் குறியீட்டெண்கள், 1939–46	37
2.	மொத்த விலைகளின் குறியீட்டெண்கள், 1947–53	58
3.	மொத்த விலைகளின் குறியீட்டெண்கள், 1953–60	86
4.	1938–39 முதல் 1959–60 வரை பணஅளிப்பில் மாறுதல்கள் ...	103
5.	1938–39 முதல் 1946–47 வரையிலும், 1952–53 முதல் 1959–60 வரையிலும் பணஅளிப்புக் குறியீட்டெண்ணும் விலைக் குறியீட்டெண்ணும் ...	120
6.	1939 முதல் உற்பத்திப் போக்குகள் ...	227
7.	1946–47 முதல் 1955–56 வரை கூலிகள், இலாபம், செய்பொருள் விலைகள் ஆகியவற்றின் குறியீட்டெண்கள் ...	244
8.	பம்பாய், நாகபுரி, சென்னை ஆகிய இடங்களில் பொது விலையளவும் வாழ்க்கைச் செலவும், 1939–60 ...	262
9.	1939 முதல் பம்பாய்த் தொழிலாளர் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் ...	264
10.	இந்தியாவில் தொழிற்சாலைகளில் வேலை செய்வோரின் பணவருமானம், வாழ்க்கைச் செலவு, உண்மை வருமானம், 1939–54 ...	273

1939 முதல் இந்தியாவில் பணவீக்க விலைப்போக்குகள்

1. பணவீக்கத்தின் பொருளாதாரம்

1939-ல் இரண்டாவது உலகப் போர் தொடங்கியதுமுதல், இந்தியாவில் பொதுவாக விடாத விலையேற்றப் போக்குக் காணப் படுகிறது. போர் நடந்துகொண்டிருந்த ஆண்டுகளில் விலை யேற்றமானது சராசரி ஆண்டொன்றுக்கு 16 சதவீதமாக இருந்தது. 1945-க்கும் 1951-க்கும் இடையில் 10 சதவீதமாக இருந்தது; பிந்திய ஆண்டுகளில் ஆண்டொன்றுக்குச் சராசரி ஒரு சதவீதத்திற்குமேல் சிறிதே அதிகமாயிற்று. எனினும், இந்த மூன்று காலப் பிரிவுகளில் அதிகரிப்பு வீதம் ஒரே மாதிரியாக இல்லை. போர் முடிவதற்குச் சுமார் இரண்டாண்டுகளுக்கு முன்பு இவ்வதிகரிப்பு 42 சதவீதத்தை எட்டியது. 1950-ல், முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத் தொடக்கத்தின்போது, அது 16 சத வீதமாக இருந்தது. இரண்டாவது திட்டத்தின் முதல் ஆண்டில் (1956-57), பொதுவாக விலை உயர்வு 10 சதவீதத்திற்குமேல் ஏறிவிட்டது. பொருள் மிகுந்த இவ் விலையேற்றம்மட்டுமன்றி, நம் நாட்டில் கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக மிக அதிக மான பணவீக்க நிலைமைகள் இருந்துவருகின்றன என்பதைத் தப்பாமல் காட்டக்கூடிய வேறு பொருளாதாரக் குறிப்புகளும் உள்ளன. விலையேற்றம் மிக அதிகமாக இருந்த சில ஆண்டுகளைத் தவிர மற்ற ஆண்டுகளில் இந்த அதிக விலை உயர்வுநிலை அச்சத்தை அளிக்கவில்லையென்றால் அதற்குக் காரணம், நம் பொருளாதாரம் அதிக விலை நிலைக்குத் தன்னை ஏறக்குறைய ஒத்துப்போகும்படி சரிசெய்துகொண்டுவிட்டது என்பதும், பொதுமக்கள் அதிகப் பணத்திற்குக் குறைந்த அளவு பண்டங்களை வாங்கும் பழக்கத்தை அடைந்துவிட்டார்கள் என்பதுமேயாகும். இருப்பினும், பணவீக்க நிலைமை கைகடந்துபோய்விடக்கூடிய அபாயம் எப்பொழுதும் போலவே உள்ளது. சேம நல அரசைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள வளரும் பொருளாதாரத்தில் விலையளவை நிலையாக்கிக் கட்டுப்படுத்தவேண்டியதன் அவசியத்தைப் பொது நலம் ஆய்வோரும், அரசியல் வல்லமையுடையோரும் சிந்திக்க

வேண்டும். அதிக தேசிய உற்பத்தியைப் பெறுவதற்குப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களில் மேலும்மேலும் அதிகமாக அரசாங்கம் செலவீடு செய்வது பயனுள்ள ஒரு வழியாயினும், ஆண்டுதோறும் அதிக முதலீடு செய்வதைத் தொடர்ந்து உண்டாகும் விலை அமைப்பின் ஏற்றப் போக்கைக் கட்டுப்படுத்தி வைப்பது, சிறந்த பங்கீட்டு முறையையும், பொருளாதார வளர்ச்சியின் பயனைத் துய்ப்பதையும் உறுதிப்படுத்துவதற்கு முன்னேற்பாடான இன்றியமையாத செயலாகும்.

பின்வரும் அத்தியாயங்களில், போர்க்காலத்திலும் போருக்குப் பிந்திய காலத்திலும் காணப்பட்ட பொதுவான விலைப் போக்கையும், இந்தப் பணவீக்க விலைப்போக்கின் காரணங்களையும், அதன் சமூக, பொருளாதார உட்கிடைகளையும் ஆராயும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், அண்மைக் காலத்தில் இந்தியாவில் ஏற்பட்டுள்ள விலை இயக்கத்தைப் புரிந்து கொள்வதற்குப் பணவீக்கத்தின் பொருளாதாரத்தைப்பற்றிய பொதுவான கருத்தைத் தெரிந்துகொள்வது அவசியம்.

பணவீக்கத்தின் பொருள்

'பணவீக்கம் என்பது, பொதுவான விலையளவில் அதிகமாகவும் விரைவாகவும் உண்டாகும் ஏற்றமே என்று மிக அதிகமான மக்கள் கருதுகிறார்கள்'.[1] பணவீக்கம் என்பது அதிக விலைகளோடு தொடர்புடையது. ஏனெனில், மக்களுடைய கருத்தை எளிதில் கவர்வது, பணப்பகுதியின் மதிப்பு மிக விரைவாகக் குறைந்துவருவதுதான். உண்மையில் விலை ஏற்றம் என்பது ஒரு நோயின் அறிகுறியே. அது சில சமயங்களில் தவறான ஒரு முடிவுக்கும் நம்மைக் கொண்டுசெல்லும். விலை வீழ்ச்சியானது எப்படிப் பணச்சுருக்க நிலையைக் கட்டாயமாகக் குறிக்காதோ, அதேபோல விலை ஏற்றமும் பணவீக்க நிலையைக் குறிக்க வேண்டுமென்னும் கட்டாயம் கிடையாது. ஒடுக்கப்பட்ட பணவீக்க நிலையில், திறமையான கட்டுப்பாடுகள், பங்கீடு ஆகியவற்றால் விலைகள் ஏறுமல் தாழ்த்திவைக்கப்படினும், பணவீக்க நிலை குறைந்துவிட்டதாகக் கூறமுடியாது. அந்த நிலையில் பணவீக்க நெருக்கடி வன்மையாகக் கட்டுப்படுத்திவைக்கப்படுகிறது. ஆதலால், அது பொதுமக்களின் பார்வைக்குத் தெரியாமல் மறைக்கப்படுகிறது. ஏனினும், நெருக்கடியானது மறைவாக இருக்கத்தான் செய்கிறது. ஆனால், கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டவுடன் அல்லது நீக்கப்பட்டவுடன், அது அதிக விலைகள்

1 A. J. பிரௌன் எழுதிய 'விளைவியல் பொருளாதாரம்' (Applied Economics), 1942, பக்கம் 92.

உருவத்தில் வெளிப்படத் தயாராகவிருக்கிறது. இருப்பினும் பணவீக்கத்தின் பொதுவான அம்சம், பொது விலையளவில் உண்டாகும் ஏற்றம்தான். பணவீக்கத்தைப்பற்றிக் கூறப்படும் எந்த விளக்கத்திலும் இந்த நிகழ்ச்சி தெளிவாக்கப்படவேண்டும்.

இக் காரணத்தினால், பணவீக்கத்தை விளக்கும் இரண்டு வழிகளுக்குள் வேற்றுமையைக் காணமுடிகிறது. பழைய நூலாசிரியர்கள் பிரசித்தமான பணப் பரிமாணக் கோட்பாட்டை (Quantity Theory of Money) யொட்டிப் பணவீக்கத்தினால் உண்டாகும் விலையேற்றப் போக்குகளைப் பண அளிப்பில் (Supply of money) ஏற்படும் அதிகரிப்போடு தொடர்புபடுத்தி விளக்கம் கூறினார்கள். இவ்வாறுதான் இர்விங் ஃபிஷர் (Irving Fisher) தம் 'பணவீக்கம்' (Inflation) என்னும் நூலில், பண அளிப்பானது விலைகளைப் பாதிப்பதைப்போலப் பண்ட அளிப்புப் பாதிக்கவில்லை என்கிறார். பத்தொன்பதாவது நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஐரோப்பாவிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் உண்டான விலைப்போக்குகளை ஆராய்ந்து, அவர், 'தங்கம், வெள்ளி, காகிதம், கடன் வசதி (பாங்குச் செலாவணி) ஆகிய பண அம்சங்களைப் பொறுத்து விலையளவு அநேகமாகத் தவறுமல் மாறுகிறது; பண்ட அம்சங்களைப் பொறுத்து அதிகம் மாறுவதில்லை. பிற்கூறியவை சராசரி விலை இயக்கத்திலிருந்து தனிப்பட்ட சிலவற்றின் விலைகள் வேறுபடுவதைமட்டும் கட்டுப்படுத்துகின்றன. சுருங்கக் கூறின், அளிப்பும் தேவையும் (Supply and demand) விலையளவுக்கும் தனிப்பட்ட பொருள்களின் விலைக்கும் உள்ள தொடர்பை நிர்ணயிக்கின்றன. ஆனால், பணமானது விலையளவையே நிர்ணயிக்கிறது' என்று முடிவு கட்டுகிறார்.[1] இது பண அளிப்பைப் பொறுத்துத் தரப்படும் விளக்கம் என்பது தெளிவு.

இவ்வாறு பணவீக்கத்தை விளக்குவதனால் உண்டாகக்கூடிய நியாயமான அடுத்த முடிவு யாதெனில், ஒருபுறம் பணத்தின் அளவிற்கும், மற்றொருபுறம் விலைகளுக்கும் காரண காரியத் தொடர்பை ஏற்படுத்துவதுதான். பண்ட அளிப்பைவிடப் பண அளிப்புதான் விலையளவை நிர்ணயிக்கிறது என்று ஒப்புக்கொண்டுவிட்டால், தக்க அளவு பண்ட அளிப்புப் பெருக்கம் இன்றிப் பணப்பெருக்கம் ஏற்பட்டால் விலைகள் ஏறுவதைத் தடுக்க முடியாது என்ற முடிவு உண்டாகிறது. இப்படிப் பார்த்தால், 'பண்டங்களுக்கும் பணிகளுக்கும் விலை பேசக்கூடிய பணத்தின் அளவானது, கிடைக்கக்கூடிய பண்ட அளிப்பைவிட விரைவாக

[1] இர்விங் ஃபிஷர் எழுதிய 'பணவீக்கம்' என்னும் நூல், 1933, பக். 45.

அதிகரித்தால், அதாவது, பொருட் பகுதியில் உள்ள தேசிய வருமான வளர்ச்சியைவிடப் பணப்பகுதியில் உள்ள தேசிய வருமான வளர்ச்சி அதிகமாக இருந்தால், பணவீக்கம் ஏற்படுகிறது.' [1]

ஆனால், பணப்பெருக்கம்தான் காரணம், அதன் விளைவுதான் விலையேற்றம் என்ற இந்த விளக்கம் உண்மை நிலையோடு மாறுபடுகிறது. 1920ஐ அடுத்த சில ஆண்டுகளில் ஜெர்மனியில் இருந்த பணவீக்கத்தைப்பற்றி அறிந்தவர்கள், ஜெர்மனியில் இருந்த அக் குழப்பமான நிலையில் விலைகள் பணத்தின் அளவினால் உயர்த்தப்படுவதற்குப் பதிலாகப் பணத்தை மேலும் மேலும் அதிக அளவில் புழக்கத்திற்கு வெளிக்கொணர்வதற்குக் கருவியாக அமைந்தன. அப்பொழுது விலைகள் இலட்சக்கணக்கான மடங்குகள் உயர்ந்துவிட்டன. அதனால் பண அளிப்புக்கும் விலைகளுக்கும் உள்ள காரணகாரியத் தொடர்பு தலைகீழாக மாறிவிட்டது. விலைகள் அளவுகடந்த விரைவுடன் ஏறிக் கொண்டுவந்ததால், தேவையான அளவுக்குப் பணப்பெருக்கத்தை அளிக்க முடியவில்லை. அக் காலத்திய பொதுநல ஆய்வாளரும் நூலாசிரியர்களும் பண அளிப்பு அதிகரிப்பினால்தான் பணவீக்கம் உண்டாயிற்றென்று கூறவில்லை. இதற்கு மாறாக, அவர்கள் போதிய அளவு பண அளிப்பு இல்லாத குறையை வற்புறுத்திக் கூறினார்கள்; ஜெர்மனியில் இருந்த பாதகமான அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையே (unfavourable balance of payments position) விலையேற்றத்திற்குக் காரணம் என்று கண்டார்கள். ஹெல்ஃபெரிச் (Helfferich) என்பவர் 'டாஸ் கெல்ட்' ('Das Geld', Leipzig, 1923) என்ற தம் நூலில் வெளிநாட்டுச் செலாவணியில் ஜெர்மன் நாட்டு மார்க் நாணயத்தின் மதிப்பிறக்கமே விலைகளின் ஏற்றத்திற்கும் காகித மார்க் வெளியீடுகளுக்கும் காரணம் என்றும் கூறினர்.[2] ஆகவே, அதிகப் பண அளிப்பினால் விலையேற்றம் உண்டாவதே பணவீக்கமாகும் என்ற இந்த விளக்கமானது, மிக அதிகமான பணவீக்க நிலைக்குப் பொருந்தாது என்பது தெளிவு. இவ்வாறு தோன்றும் முரண்பாட்டையுணர்ந்தே டாக்டர் பால் ஐன்ஸிக் (Paul Einzig), பணவீக்கத்திற்கும் விலைவீக்கத்திற்கும் உள்ள வேற்றுமையைக் குறிப்பிடுகிறார். முன்னது பணவீக்கத்தின் முதல் நிலையைக் குறிக்கும். அதில் சாதாரணத் தேவைகளுக்குமேல் உண்டாகும்

[1] கோல்டன் வீசர் எழுதிய 'பணவீக்கம்', Federal Reserve Bulletin, April 1947, பக். 291.

[2] பிரெஸ்ஸியானி-டுர்ரோனி எழுதிய 'பணவீக்கத்தின் பொருளாதாரம்' என்னும் நூல், 1937, பக். 45,

அதிகப் பணப்பெருக்கமானது விலைகளை உயர்த்துகிறது. பின்னது அடுத்த நிலையைக் குறிக்கிறது. அதில் விலைகள் கட்டுக்கடங்காமற் போய்விடுகின்றன. அவை மிக விரைவாக உயர்வதால், பண அளிப்பு பின்தங்கிவிடுகிறது. பணவீக்கம் என்பது 'வாங்கும் திறனில் உண்டாகும் பெருக்கமானது விலையளவை உயர்த்துவதற்குக் காரணமாகவோ, அதன் விளைவாகவோ இருக்கும் சலன நிலையே (disequilibrium)' என்று அவர் குறிப்பிடுகிறார்.[1] இந்த விளக்கமானது மிகக் குறைந்த பண்டங்களை மிக அதிகப் பணம் பற்ற முயலும் சாதாரண நிகழ்ச்சியைமட்டுமன்றி, ஒவ்வொன்றும் ஒருங்கே காரணமாகவும் விளைவாகவும் உள்ள கூலி, ஆக்கச் செலவு, விலை ஆகியவற்றின் ஏற்றத்தால் ஏற்படும் பிரச்சினையாகிய மற்றொரு தீய அம்சத்தையும் பணவீக்கத்திற்குள் அடக்கியிருக்கிறது.

இந்த விளக்கத்தை அடிப்படையாகக்கொண்ட பணவீக்கக் கோட்பாடு, பண அளிப்பிற்கும் விலைக்கும் உள்ள தொடர்பையே பணவீக்கம் என்று விளக்க முற்படுகிறது. இது இப் பிரச்சினையின் ஓர் அம்சத்தைப்பற்றிக் கூறுவதேயாகும். பண்டங்களின் அளவு வரையறுக்கப்பட்டிருக்கும்போது, நடமாடும் பணத்தின் அளவு அதிகரிக்கப்பட்டால் அதிகமாகச் செலவுசெய்யும் நிலை உண்டாகிறதென்றும், இது விலைகளில் ஏற்றத்தை ஏற்படுத்துகிறதென்றும் அது குறிப்பிடுகிறது. அதிகப் பணப்பெருக்கத்தினால் ஏற்படும் இந்த விலை ஏற்றமே பணப்பெருக்கம் எனப்படுகிறது. இந்த விளக்கம் பணவீக்க விலை இயக்கத்திற்கு உதவும் காரணங்களைக் கூறுகிறது. ஆனால், இத்தொல்லைக்கு மூலகாரணத்தை விளக்கவில்லை என்பது தெளிவு. பணவீக்கத்தைப்பற்றிய சரியான விளக்கமானது அசாதாரணமான விலை ஏற்றத்திற்கான காரணிகளைக் குறிப்பிடுவதோடு, இக் காரணிகள் எப்படிச் செயற்பட்டுப் பணவீக்க நிலையை ஏற்படுத்துகின்றன என்பதையும் குறிப்பிடவேண்டும். சுருங்கக் கூறின், பணவீக்கக் கோட்பாடு, இப் பிரச்சினையின் சலன நிலையைமட்டுமன்றி இயக்க நிலையையும் தழுவியதாக இருக்கவேண்டும்.

பணவீக்கத்தைப் பணப்பரிமாணக் கோட்பாட்டினால் பகுத்தாயும் வழி மற்றுமோர் பெரிய குறையுடையதாயிருக்கிறது. இந்த விளக்கத்தின்படி, பண அளிப்புப் பெருக்கத்தைத் தொடர்ந்து விலையேற்றம் ஏற்படுவது பணவீக்கம் எனப்படும். மந்தம் உண்டாகும் காலத்தில், மந்தத்தினால் ஏற்படும் தீமை

1 பால் ஜான்ஸிக் எழுதிய 'பணவீக்கம்,' 1952, பக். 22.

கூலைப் போக்குவதற்கு அரசாங்கங்கள் வழக்கமான வரி முறைகளையும் பணவாக்க முறைகளையும் மேற்கொண்டால், அதன் விளைவாகப் பண அளிப்பு அதிகரிப்பும் விலையேற்றமும் உண்டாவதிலிருந்து பணவீக்க நிலையை இவ்வாறு விவரிப்பது சரியன்று என்றும், அது நம்மைத் தவறான முடிவுக்குக் கொண்டு செல்லும் என்றும் அறியலாம். உண்மையில், பண அளிப்புப் பெருக்கமும், தக்க பணவாக்கக் கொள்கையினாலும் அரசாங்கச் செலவீட்டினாலும் பயனற்றுக் கிடக்கும் நிதிகளைப் பயன்படுத்துவதும் எந்த அளவுக்கு விலையளவை மீட்கவும், தொழில் நடவடிக்கையை உயிர்ப்பிக்கவும் முடியவில்லையோ அந்த அளவுக்கு இந்த முறைகள் தோல்வியுற்றவையாகக் கருதப்படும். ஆனால், இத்தகைய விலையேற்றத்தைப் பணவீக்க விலையேற்றம் என்று கூறுவது நியாயமற்றதும் தவறானதும் ஆகும்.

இப்படிப் பார்த்தால், பணவீக்கப் பிரச்சினையை வேறு நூலாசிரியர்கள் காணும் முறையானது, முற்கூறிய முறைக்கு ஒரு திருத்தம்போல உள்ளது. இந்த ஆசிரியர்களில் சுவீடன் நாட்டுப் பொருளாதாரத்துறையினராகிய விக்சல் (Wicksell), பென்ட் ஹான்ஸென் (Bent Hansen) என்பவர்களும், ஜெ. எம். கெய்ன்ஸும் (Keynes) அடங்குவர். இவர்கள் கருத்துப்படி, 'சம்பந்தப்பட்ட சில பண்டங்களின் மொத்தத் தேவையையும் மொத்த அளிப்பையும் பொறுத்துப் பொது விலையளவு ஏற்படுகிறது. இவற்றின் விலைகளே பொது விலையளவை நிர்ணயிக்கின்றன'.[1] ஆகையால், பணவீக்கம் என்பது, அளிக்கப்படும் பணத்தினால் குறிக்கப்படுகின்ற மொத்தப் பண்டத் தேவையானது, நிலவர விலைகளுக்குக் கிடைக்கக்கூடிய பண்ட அளிப்பை விட அதிகமாக இருக்கும் நிலையேயாகும். இப்படிப் பகுத்தாய்வதில் அதிகத் தேவையே பணவீக்கத்தின் முக்கிய அறிகுறி என்பது புலப்படும். பணவீக்கத்தைப் பகுத்தாய்வதில் இக் கருத்து அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தது. சுருங்கக் கூறின், ஒரு குறிப்பிட்ட விலைக்குக் கிடைக்கக்கூடிய பண்டங்களின் அளவிற்கும், அவற்றிற்கு உள்ள தேவைக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைத்தான் அதிகத் தேவை என்பது குறிப்பிடுகிறது. இது பண்டங்கள், பணிகள் ஆகிய இரண்டிற்கும் பொருந்துவதோடு, உற்பத்திக் காரணிகளுக்கும் (factors of productions) பொருந்தும். ஒரு குறிப்பிட்ட அளவுள்ள பொருள்களுக்கு உள்ள நிலவர விலையைவிட அதிக விலையைக் கொடுத்து வாங்க மக்கள் தயாராயிருக்கும் நிலையை இது காட்டுகிறது. ஒடுக்கப்பட்ட

[1] பென்ட் ஹான்சென் எழுதிய 'பணவீக்கக் கோட்பாடுபற்றிய ஆராய்ச்சி' என்னும் நூல், 1951, பக். 2.

பணவீக்கத்திற்கும் வெளிப்படையான பணவீக்கத்திற்கும் அதிகத் தேவை என்பது பொதுவான அம்சமாகும். முற்கூறியதில் அது கட்டுப்பாட்டு முறைகளால் மறைக்கப்படுகிறது. பிற்கூறியதில் அது அதிகப் பணவிலைகளாகப் பளிச்சென்று தெரிகிறது.

மேற்கூறிய இரண்டு வகை நூலாசிரியர்களிடையே அடிப்படைக் கொள்கையில் அதிக வித்தியாசமில்லை என்பது எளிதில் புலப்படும். ஏனெனில், பிற்கூறிய நூலாசிரியர்களின் பகுத்தாய்வுக்கு முக்கியமான அதிகத் தேவை என்னும் அம்சம், அதிகப் பண அளிப்பினால்தான் செயற்படுகிறது. ஆனால், பழைய பணப் பரிமாணக் கோட்பாட்டு நிலைமையை உள்ளபடி விளக்குகிறது; அது இத் தொல்லைக்கு மூலகாரணத்தைக் குறிப்பிடத் தவறி விட்டது. பிற்கூறிய தேவை—அளிப்பு முறை, இப் பிரச்சினையின் மூலத்தைக் குறிப்பிடுவதுடன், காரணமான அம்சங்கள் எப்படிப் பணவீக்கத்தை உண்டுபண்ணுகின்றன என்பதையும் நாம் புரிந்து கொள்ள உதவுகிறது. இதுவே இவ்விரண்டு முறைகளால் பகுத்தாய்வதில் உள்ள சிறப்பான வேற்றுமையாகும். எனினும், பணவீக்க வளர்ச்சியைப்பற்றி இவ்வாசிரியர்கள் கூறும் இவ்விரண்டு விதமான வாதங்களுக்கிடையே உள்ள வேற்றுமையை நாம் காண முடியும். சுவீடன் நாட்டு ஆசிரியர்களும் கெய்ன்ஸும் (தமது 'பணத்தைப்பற்றிய கட்டுரை'யில்) இப் பிரச்சினைக்கு மூல காரணம் முதலீட்டுக்கும் சேமிப்புக்கும் இடையில் உள்ள வித்தியாசமே என்று கூறுகின்றனர். இதன்படி சேமிப்பைவிட முதலீடு அதிகமானால், அது காரணி அங்காடிகளில் பணவீக்க நெருக்கடியாக வெளிப்படுகிறது; அது பிறகு பண்ட அங்காடிகளுக்கும் பரவுகிறது. ஆகவே, பணவீக்கத்தைப்பற்றிய இப் பகுத்தாய்வில் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது என்னவென்றால், காரணி அங்காடிகளில் ஏற்படும் அதிகத் தேவையை, 'பண்ட விலை உயர்வையும், காரணி விலை உயர்வையும் உண்டாக்கும் காரண காரியத் தொடர்பில் உள்ள ஒரு முக்கிய இணைப்பு'[1] என்று அது குறிப்பிடுவதுதான். இதற்கு மாறுகக் கெய்ன்ஸ் தமது 'போர்ச்செலவை எப்படி அளிப்பது (1940)' என்ற நூலில்—இந் நூலில் கூறப்படும் பணவீக்கத்தைப்பற்றிய பகுத்தாய்வை ஒத்துக்கொள்ளும் பிறரும்—பண்ட அங்காடிகளில் அதிகத் தேவை என்னும் உருவத்தில் பணவீக்கம் தொடங்குகிறது என்பதை வற்புறுத்துகிறார். பண்ட அங்காடிகளில் உண்டாகும் விலை உயர்வு பிறகு காரணி அங்காடிகளுக்கும் பரவுகிறது.

1 பெண்ட் ஹான்ஸன் எழுதிய 'பணவீக்கக் கோட்பாடுபற்றிய ஆராய்ச்சி' என்னும் நூல், 1951, பக். 18.

இந்த விளக்கம் கூறும் பரிகாரங்களைப் பார்க்கும்போது, பணவீக்கத்திற்குத் தோற்றுவாயாக உள்ள காரணி அங்காடிகளுக்கும் பண்ட அங்காடிகளுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை வற்புறுத்தும் முறை மிக முக்கியமாக இருக்கிறது. ஆகவே, பண்டங்களுக்காக அங்காடிகளில் தொல்லை ஏற்பட்டால், அதற்கு நியாயமான, திறமிக்க பரிகாரம் அதிக உற்பத்தியும், சிறந்த பங்கீட்டு முறையும், ரேஷன் முறையும், விலைக் கட்டுப்பாடுமே. ஆனால், மாற்று விளக்கத்தை ஒப்புக்கொண்டால், இப் பரிகாரங்கள் பிரச்சினையின் அடிப்படையைத் தீண்டாமல் தற்காலிகத் தன்மையுடையவையாகவே இருக்கும். பணவீக்கப் போக்குகளை உண்டாக்குபவை காரணி அங்காடிகளில் உண்டாகும் அதிகத் தேவை அல்லது அதிக வேலை என்று ஒப்புக் கொண்டால், இத் தொல்லைக்குத் தோற்றுவாயாகவும் ஊற்றுக் கண்ணாகவும் உள்ள இடங்களை முடக்கிவிடுவதே பரிகாரமாகும்.

ஆகவே, பேராசிரியர் பிகோ (Pigou), 'சாதனங்களின் அளவு வரையறுக்கப்பட்டிருக்கும்போது, உற்பத்தி ஏஜெண்டுகளுக்குக் கொடுக்கப்படும் சம்பள உயர்வோடு பணவீக்கத்திற்குக் கட்டாயமாகத் தொடர்பு உண்டாகிறது. ஆனால், இறுதியாக வாங்குவோர் பெறும் பணிகளோடும் பண்டங்களோடும் கட்டாயமாகத் தொடர்பு ஏற்படுவதில்லை' என்று குறிப்பிடுகிறார்.[1] இப் பகுத்தாய்வின்படி பணவீக்க நெருக்கடியைக் குறைப்பதற்குத் திறமிக்க வழி, தக்க கூலியளிக்கும் கொள்கை தான் என்று பரிந்துரை கூறப்படுகிறது.

உற்பத்திச் செலவினால் விலை ஏறுவது, தேவையினால் விலை ஏறுவது ஆகியவற்றால் உண்டாகும் பணவீக்கங்களுக்குள் வேற்றுமை உண்டு என்று இவ் விஷயத்தைப்பற்றி இக் காலத்து ஆராய்ச்சியாளர் கூறுவர். வாங்குவோர் அங்காடியில் தேவைக்கு ஏற்றவாறன்றி மிக விரைவாக விலைகள் ஏறினால், முற்கூறிய பணவீக்கம் உண்டாகிறது. கூலி விகித அதிகரிப்பினால்தான் அநேகமாக உற்பத்திச் செலவு உயர்கிறது. இத்தகைய நிலையின் சிறப்பான அம்சம் என்னவென்றால், உற்பத்திச் செலவுகளும், விலைகளும், வேலையின்மையும் ஒருங்கே அதிகரித்தலாகும். இதற்கு மாறுகத் தேவையினால் பணவீக்கம் உண்டானால், பொருள் அளிப்பைவிடத் தேவை அதிகமாக ஏற்பட்டு விலைகள் ஏறத் தொடங்கும். பணவீக்க நிலையில் தேவை மிகுதியாக இருக்கும் போது, விலைகள், உற்பத்திச் செலவு ஆகியவற்றுடன் வேலையளவும் அதிகரிக்கும். கொள்கை வகுப்பதில் இவ் வேற்றுமை

[1] A. C. பிகோ எழுதிய 'பணத்திரை' (Veil of Money) என்ற நூல், 1951, பக். 14.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், தடையாக உள்ள பணக்கொள்கை அல்லது வரிக்கொள்கையானது அதிகத் தேவையைக் குறைத்து, அதனால் தேவையினால் உண்டாகும் விலையேற்றம் அல்லது வாங்குவோரினால் உண்டாகும் பணவீக்கத்தைத் தடுக்கும். அதே சமயத்தில் அது உற்பத்திச் செலவு அதிகரிப்பதனால் உண்டாகும் பணவீக்கத்திற்கும் பரிகாரமாகாமல் மேலும் அபாயத்தை விளைவிக்கும். இந்த நிலையில், தொழில் துணிவுடையவர்கள் எதிர்பார்க்கும் அளவுக்குத் தேவையானது அவ்வளவு அதிகமாக இராது (அப்படி இருந்தால் அவர்கள் கூலி உயர்வுக்கு இணங்கமாட்டார்கள்). ஆகையால், செலவீட்டிற்குத் தடை விதித்தால், வேலையளவு மேலும் குறையும். அதனால் திடீரென்று மந்த நிலைமை உண்டாகும்.[1]

பணவீக்கத்தின் தன்மைகள்

பொருளாதாரத்துறையினர் பணவீக்கத்தின் பொருளைப் பற்றி எவ்வளவு கருத்து வேற்றுமை கொண்டிருப்பினும், இப் பிரச்சினையின் வெவ்வேறு அம்சங்களை அவர்கள் வெவ்வேறு விதமாக வற்புறுத்தினாலும், பணவீக்க நிலைக்கு அறிகுறியான பொருளாதார முறையின் சில அம்சங்களை அவர்கள் எல்லாரும் பெரும்பாலும் ஒத்துக்கொள்கிறார்கள். முதலாவதாக, விலை உயர்வுக்கும் பணவீக்கத்திற்கும் தொடர்பு உண்டு என்று மக்கள் கருதுவதில் முக்கியமான உண்மை ஒன்று இருக்கிறது. கருதுகோள் பகுத்தாய்வில், பொருளாதாரப் பிரச்சினைகளைப்பற்றிய பொதுமக்களின் விளக்கங்கள் அதிகப் பயனுள்ளவையாயோ, மனத்தைத் திருப்திசெய்பவையாயோ, விஞ்ஞான முறைப்படி அமைந்தவையாயோ பெரும்பாலும் இருப்பது அரிது. எனினும், இவ் விஷயத்தில் ஒடுக்கப்பட்ட பணவீக்கத்தையும், அரசாங்கத்தின் பணக்கொள்கை, வரிக்கொள்கை ஆகியவற்றால் அதிக மந்த நிலையில் ஏற்படும் விலை உயர்வையும் நீக்கிவிட்டால், அதிக விலையேற்றமானது எப்பொழுதும் பொதுவாகப் பணவீக்கத்தின் ஒரு முக்கிய அறிகுறியாகும் என்பது உண்மையே. 1920ஐத் தொடர்ந்த சில ஆண்டுகளில் ஜெர்மனியில் மிக அதிகப் பணவீக்கத்தின்போது, நம்பமுடியாத அளவுக்கு விலைகள் உயர்ந்து விட்டன என்பது யாவரும் நன்கு அறிந்த விஷயமே. அதனால் பணத்திற்கு இருந்த மதிப்பும் பொருளும் எல்லாம் போய் விட்டன. பணவீக்கத்தினால் ஏற்பட்ட குழப்பத்தினால் மிகப் பெரிய அரசியல் மாறுதல்கள் உண்டாயின. இக் காலத்தில்

[1] F. D. ஹோல்ஸ்மன் எழுதிய 'பணவீக்கம்: செலவு ஏற்றமும் தேவை மிகுதியும்' என்ற கட்டுரை, American Economic Review, மார்ச்சு 1960, பக். 20. இதே சஞ்சிகையில் பக். 121-ல் A. P. லெர்னர் எழுதிய 'பொதுக் கோட்பாட்டைப் பொதுமையாக்குதல்' என்ற கட்டுரை.

பணக்கட்டுப்பாட்டு முறைகளும் நிருவாக முறைகளும் மிகச் சிறப்பாகச் சீர்திருத்தப்பட்டிருப்பினுங்கூட, பணவீக்கத்தினால் ஏற்படக்கூடிய அபாயத்தை நாம் முற்றிலும் விலக்கிவிட்டோம் என்று கூறமுடியாது. சீனா, கிரீஸ்போன்ற நாடுகளில், சென்ற உலக மகாயுத்தத்தின் இறுதிக் காலத்திலும், யுத்தம் முடிந்தபின் சில ஆண்டுகளிலும் பணவீக்கம் முற்றிலும் கட்டுக்கடங்காமற் போய்விட்டது. மற்றும் சில நாடுகளில், 1920-29-ல் ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் உண்டானது போன்ற மிக அதிகப் பணவீக்க நிலை ஏற்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு ஹங்கேரியில் விலைகள் 100,000,000,000,000,000 மடங்கு உயர்ந்துவிட்டன. இதைப்போல எங்குமே எப்பொழுதுமே நிகழ்ந்ததில்லை.[1]

இரண்டாவதாக, மிகுந்த பண அளிப்புதான் சாதாரணமாகப் பணவீக்கத்தின் ஓர் இயல்பாகும். போர்க் காலத்திலும், தேசிய நெருக்கடி நிலையிலும் அரசாங்கத்தின் வரிப்பணம் தேவைக்குச் சிறிதும் போதாமலிருக்கும்போது, அது பாங்குகளை நாடுகிறது. பாங்குகள், அரசாங்கப் பத்திரங்கள், ஆவணங்கள் ஆகியவற்றின்மீது கடன் அளிக்கின்றன. இதனால் காகிதச் செலாவணிப் பெருக்கமும் பாங்குச் செலாவணிப் பெருக்கமும் நாட்டில் ஏற்படுகின்றன. இறுதியாகப் பார்க்கும்போது, இவ்விதமாக பணவீக்கமானது ஒருவகைக் கட்டாய வரிவிதிப்பேயாகும். பல அரசாங்கங்கள் சிறிதும் மனச்சான்றின்றி இவ்வாறு செய்கின்றன. ஏனெனில், இது மிக எளிது; வேறு ஒன்றையுமே கட்டாயமாகச் செய்ய முடியாத வலிமையற்ற அரசாங்கங்கள் கூட இதைக் கட்டாயப்படுத்திச் செய்யமுடியும்[2]. இந்த நடவடிக்கைகளின் நோக்கம் எதுவாயினும், அவற்றின் விளைவு விலை ஏற்றமே. இதற்குக் காரணங்கள் இரண்டு: முதலாவது, அரசாங்கம் போட்டியிட்டுக்கொண்டு வாங்குவதால், பொது மக்களுக்குக் கிடைக்கக்கூடிய பண்டங்களின் அளவு குறைந்து விடுகிறது; இரண்டாவது, அரசாங்கம் இப்படிப் பொருள்களைப் பெறும்போது அதிக அளவு செலாவணியைப் புழக்கத்திற்கு விடுகிறது. இருப்பினும், பண அளிப்புப் பெருக்கமானது வருமானத்தின் வழியாகத்தான் விலையளவைப் பாதிக்கும். அதாவது, துய்ப்போரின் செலவழிக்கக்கூடிய வருமானம் அதிகமானால்தான், அவர்கள் போட்டியிட்டுக்கொண்டு கேட்க, அதனால் விலைகள் உயரும். உண்மையில், நாட்டில் உள்ள அதிகப் பண

[1] Seymour Harris எழுதிய 'The Economics of Mobilization and Inflation', Norton & Co, New York, 1951, பக். 95.

[2] League of Nations, 'The Course and Control of Inflation' 1946, பக். 65.

அளிப்பு, கூலிகளும் சம்பளங்களும் உயர்வதாலும், இலாபங்கள் அதிகரிப்பதாலும், மூலதன மதிப்பேற்றத்தினாலும், இன்னும் இவைபோன்றவற்றாலும் மக்களிடத்து ஏற்படும் அதிக வாங்குந் திறனாக மாறுகிறது. ஆகவே, அரசாங்கமானது பண அளிப்புப் பண்டங்களுக்கும் பணிகளுக்கும் உள்ள அதிகத் திறமிக்க தேவையாக மாறுமல் தடுக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டால், அதிகப் பண அளிப்பினால் உண்டாகக்கூடிய இரண்டாம் நிலை விளைவுகளைக் கட்டுப்படுத்த முடியும். அதாவது, பொது மக்களிடமுள்ள அதிக வாங்குந் திறனைக் குறைப்பதற்கு அதிக வரிவிதிப்பு, கடன் வாங்குதல், கூலி, லாபம் ஆகியவற்றை முடக்குவதற்கு இணைப்பான முறை வகுத்தல் முதலிய நடவடிக்கைகளை மேற்கொண்டால், பணவீக்கம் உண்டாகும் இடத்திலேயே அதைத் தடுத்து நிறுத்திவிடலாம்.

பண அளிப்பின் விளைவும் அது செயற்படும் விதமும்பற்றி மேலே கூறியவற்றால், பணவீக்கத்தைப்பற்றிய மற்றொரு முக்கியமான அம்சம் புலப்படும். அது என்னவென்றால், அது இரண்டு நிலைகளாகப் பிரியும் தன்மையுடையது என்பது. ஒரு நிதானமான விலையேற்றமானது பொருளாதார வளர்ச்சிக்கு உகந்தது என்று சில சமயங்களில் கருதப்படுகிறது. இந்த நிலையில் விலை ஏறுவது, பணவீக்க உயர்வை உண்டாக்கக்கூடிய ஆற்றல் உடையதாயினும், பணவீக்கமென்றே சில சமயங்களில் கருதப்படுவதில்லை. ஆனால், அரசாங்கம் விழிப்புடன் இல்லாமலிருந்தாலும், பல்வேறு பொருளாதாரக் கட்டுப்பாடுகள் தேசிய உற்பத்திப் பெருக்கத்தைத் தடைசெய்வதாய் இருந்தாலும், இதற்கு மேலும் (இதுதான் முக்கியமானது) அரசாங்கம் பணப் பெருக்கக் கொள்கையை விடாப்பிடியுடன் கடைப்பிடித்துவந்தாலும், அடுத்த தடுக்கமுடியாத நிலை உண்டாகும். அப்போது விலைகளின் உயர்வு அளவு விரைவாக அதிகரித்துக்கொண்டேபோய், இறுதியில் கட்டுக்கடங்காமற்போய்விடும். பேராசிரியர் A. G. ஹார்ட் (Hart) முன்னதை 'அதிகத் தேவைப் பணவீக்கம்' என்றும், பின்னதைச் 'செலவு ஏற்றப் பணவீக்கம்' என்றும் சுட்டிக்காட்டுகிறார். பணவீக்கத் தடுப்பு முறைகள் மேற்கொள்ளப்படாவிடினும், பின்வரும் தாமாக இயங்கும் காரணிகளால் சாதாரணமாகப் பணவீக்கப் போக்குகள் ஓரளவு கட்டுப்படுத்தப்படும் என்று அவர் கூறுகிறார்.[1]

(அ) சேமிப்புக்கு உதவக்கூடிய தேசியச் செலாவணியிடத்தில் நம்பிக்கைவைத்தல்.

[1] A.G. ஹார்ட் எழுதிய, 'பணவீக்கமின்றிப் பாதுகாப்பு' (Twentieth Century Fund, 1951) என்ற நூலில், பக். 71—5.

(ஆ) சிலவற்றின் விலைகளை மாற்றமுடியாத அளவுக்குள்ள பழக்கத்தின் ஆற்றல்.

(இ) பணவீக்கத்தின்போது, செலவு செய்யக்கூடிய மனப் பான்மை குறைவாக உள்ள சிலரிடம் வருமானம் போய்ச் சேருவது.

(ஈ) விலை ஏற்றத்தினால் அரசாங்கச் செலவுகள் குறைதல்.

(உ) பணவீக்கத்தின்போது வரிகளால் கிடைக்கும் அதிக வருமானத்தின் விளைவாகச் செலவு செய்யக்கூடிய வருமானத்தின் அளவானது குறையும் போக்கு.

(ஊ) ரொக்க விருப்பம் அதிகரிப்பதனால் பணம் புரளா திருத்தல்.

எனினும், செலாவணியும் கடன் வசதியும் பெருகிக் கொண்டேபோனால், இந்தக் காரணிகள் உண்மையில் பயன் தருமா என்பது ஐயமே. அந் நிலையில், சாதாரணமாக உற்பத்திக் காரணிகளின் செலவில் உயர்வு ஏற்படும். பொருள்களின் விலைகளும் கூலிகளும் உயரும்போது, செய்வினை முடிந்த பொருள் களின் விலை ஏறும். அதே சமயத்தில், வருமானம் உயரும் அள வுக்குச் செய்வினை முடிந்த பொருள்களுக்குள்ள நிகரத் தேவை அதிகரிக்கும். பலம் மிக்க பாட்டாளிகள் சங்கங்கள் உள்ள இக் காலத்தில், பணப்பெருக்கத்தை அடுத்து உடனே இரண்டாவது நிலை உண்டாவது மிக எளிது. அம்போது 'செலவு ஏற்றம்' என்பது கூலி உயர்வு, விலை குறித்தல் என்ற உருவத்தில் வெளிப் படுகிறது. இந்தப் போக்கின் விளைவு என்னவென்றால், கொடிய கூலி—விலை ஏற்றத்தின் வளர்ச்சியே. இதுதான் கைகடந்த பண வீக்கத்தின் சிறப்பான இயல்பாகும்.

இந்த இரண்டு நிலைகளிலும் ஓரளவு பணவீக்கம் உள்ள எந்தச் சமயத்திலும் வேறுபடுத்திக் காணமுடியும் என்றாலும், முன்னதற்கும் பின்னதற்கும் இடையே தெளிவான வரையறை செய்யமுடியாது. ஏனெனில், முற்றிலும் 'இயல்பான்' பண வீக்க நிலையில்கூட, அதிகப் பணவீக்கத்திற்கான (hyper-inflation) அம்சங்கள் அடங்கியுள்ளன. அரசாங்கத்தின் போக்கையும் கொள்கையையும் பொறுத்தும், பொதுவான பொருளாதார நிலையைப் பொறுத்தும், இரண்டாவது நிலை உண்டாகக் கூடிய அளவும் வேகமும் இருக்கும். இவற்றைப் பணவீக்கப்

போக்கின் இரண்டு நிலைகள் என்று கூறுவதைவிட, இரண்டு தோற்றுவாய்கள் என்று கூறுவது மிகவும் பொருந்தும். இருப்பினும், முதல் நிலையில், தேவை மிகுதியால் உண்டாகும் பண அளிப்பு விலை மாற்றங்களுக்கேற்பத் தன்னைச் சரிப்படுத்திக் கொள்கிறது என்ற உண்மையும், இரண்டாம் நிலையில், பண அளிப்பைவிடத் தேவையும் விலையேற்றமும் அதிகமாகின்றன என்ற உண்மையும் இவ்விரண்டையும் நாம் தனித்தனியே அறிய உதவுகின்றன.

வளர்ச்சி குறைந்த பொருளாதார அமைப்பில் பணவீக்கம்

போர்க்காலத்தில் முக்கியமாக அரசாங்கத்தினுல் உண்டாவதுபோன்ற அளவு கடந்த நிகரத் தேவையினுல் பொதுவாகப் பணவீக்கம் ஏற்படுகிறது. வரிவிதிப்பினுலோ, கடன் வாங்குவதனுலோ, பண அளிப்பைப் பெருக்குவதனுலோ யுத்தத்திற்கு வேண்டிய நிதியை அளிக்கும்போது மக்கள் துய்ப்புக்குத் தடை ஏற்படுவதுடன், நாட்டின் வளப்பொருள்கள் அழிவு வேலைகளுக்காக அரசாங்கத்தினுல் பயன்படுத்தப்படுகின்றன. போர்க்காலத்தில் அரசாங்கமானது கூடுதலான வளப்பொருள்களைப் பயன்படுத்துவதால், மக்கள் துய்ப்பைக் குறைக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. வரிவிதிப்பினுலோ, பணவீக்கத்தை உண்டுபண்ணக்கூடிய பற்றுக்குறை நிதியாக்கத்தினுலோ, மக்கள் இவ்வாறு கட்டாயமாகச் சேமிக்கும்படி வற்புறுத்தப்படுகிறார்கள். அரசாங்கம் கடன் வாங்கும்போதுகூடத் தனிப்பட்டவர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு வளப்பொருள்கள் கைமாறுவதில் கட்டாய அம்சம் இல்லை என்று சொல்ல முடியாது. பணப் பெருக்கத்தினுல் உண்டாகும் அரசாங்கத்தின் நிகரத் தேவையானது இரண்டு விதமாகப் பணவீக்க நெருக்கடியாக மாறுகிறது. முதலாவதாக, போட்டியிட்டுக்கொண்டு வாங்குவதில் அரசாங்கம் எந்த அளவுக்கு அதிக விலைகளைக் கொடுக்க முன்வருகிறதோ, அந்த அளவுக்குப் பொது விலையளவு நேர்முறையில் மாறுகிறது. இரண்டாவதாக, தனிப்பட்டோர் துய்ப்புக்கு வேண்டிய வளப்பொருள்களின் அளிப்புக் குறைகிறது. எப்படியானலும் நாம் காணும் விளைவு விலையேற்றமே. உண்மையில் விலையேற்றமானது, தேவையான வளப்பொருள்கள் கைமாறுவதற்கு ஒரு வழியாகிறது. அதிகமான அரசாங்கத் தேவையினுல் உண்டாகும் விலையேற்றம், மக்கள்தொகையில் இருசாராருடைய வாங்கும் திறனைக் குறைத்துவிடுகிறது. இவர்கள் யாரெனில், அரசாங்க ஊழியர்கள், உபகாரச் சம்பளம் வாங்குவோர், ஆண்டுத் தொகையைக்கொண்டு வாழ்வோர் போன்ற நிலையான வருமானம் பெறுவோரும், கூலியும் சம்பளமும் பெறும்

அளவிறந்த மக்களும் ஆவர். இவர்களுடைய வருமானம் விலை ஏற்ற இறக்கங்களுக்குத் தகுந்தவாறு மாறுவதில்லை. பணவீக்க நிலையில், இந்த வகுப்பினரின் நிலையான வருமானம், உண்மையில் குறைந்த வருமானமாகவே கருதப்படும். இதற்கு மாறாக, தொழில்துணிவுடைய வகுப்பினருக்கு இவ் விலையேற்றம் நேரடியான நன்மையளிக்கிறது. இதனால் அவர்களுடைய உண்மையான வருமானம் அதிகரிக்கிறது. ஆனால், இவர்களுடைய துய்ப்பு மனப்பான்மை முற்கூறியவர்களுடைய துய்ப்பு மனப்பான்மையைவிட மிகக் குறைவாக இருப்பதால், நடுத்தர, கீழ்த்தர வருமானமுடையோருடைய உண்மையான வருமானம் மேல் நிலையில் உள்ள இவர்களுடைய கைக்கு மாறுவதில், மக்களுடைய மொத்தத் துய்ப்புக் குறைந்துவிடுகிறது. இவ்விதமாக உண்டாகும் கட்டாயச் சேமிப்புகளை அரசாங்கம் தன் காரியத்திற்கு—யுத்தம் நடத்துவதற்கு—பயன்படுத்துகிறது.[1]

நிகரத் தேவைக்கும் உற்பத்திக்கும் நடுவில் பெரிய இடைவெளி ஏற்படுவதால்தான் முக்கியமாகப் பணவீக்கம் உண்டாகிறது. இருப்பினும், மக்களுக்குக் கிடைக்கக்கூடிய துய்ப்புப் பொருள்கள் அல்லது வளப்பொருள்களைக் குறைத்துதான் அரசாங்கமானது அதிக வளப்பொருள்களைப் பயன்படுத்த வேண்டுமென்பதில்லை. பயன்படுத்தப்படாமல் இருக்கும் இயற்கைச் சாதனங்கள் கிடைக்கும்வரையில், யுத்தம் போன்ற நெருக்கடி நிலையில் அரசாங்கத்தின் அதிக நிகரத் தேவையானது, அதுகாறும் சோம்பிக் கிடந்த இந்தச் சாதனங்களை வெளிக்கொணர்ந்து பயன்படுத்துவதற்கு உதவுமேயன்றி, மக்களுக்குக் கிடைக்கக்கூடிய துய்ப்புப் பண்டங்களைப் பற்றாது என்பது வெளிப்படை. அதாவது, முழுவதுமாக வேலைகள் கிடைக்கும்வரையில், மொத்த நிகரத் தேவை அதிகரிப்பினால், வேலையளவு உயருமே ஒழிய விலைகள் உயரா. முழுவதுமாக வேலைகள் கிடைத்தவுடன், மேலும் தேவை அதிகரிப்பு உண்டானால், பெரும்பாலும் விலையளவு உயரும். ஆகவே, கோட்பாட்டு அளவிலாவது, வேலையின்மையோ வேலைக்குறைவோ உள்ள பொருளாதார அமைப்பில் பணவீக்கம் உண்டாக முடியாது.

எனினும், முழு வேலையளவில் குறைவு இருக்கும்போது, விலையேற்றம் உண்டாக வழியில்லை என்பது இதற்குப் பொருளன்று. நடைமுறையில், முழு வேலையளவு கிட்டுவதற்கு முன்பே,

[1] Jan Tinbergen எழுதிய 'The Dynamics of Business Cycles' (J. J. Polak மொழிபெயர்த்தது), 1950, பக். 140.

தேவைப் பெருக்கத்தின் விளைவாக இரண்டு காரணங்களால் விலைகள் உயருகின்றன :

(1) போரில் ஏற்படுவதுபோல, அரசாங்கத்தின் அதிகத் தேவையினால் உண்டாகும் அதிகப் பணவருமானம், துய்ப்புப் பொருள்கள், முதற்கருவிப் பொருள்கள் ஆகிய இரண்டிற்கும் தேவையை உண்டாக்குகிறது. அதுகாறும் வேலையின்றி இருந்தவர்கள் வேலைபெற்று வருமானம் பெறுகிறார்கள். மக்களின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது. அதே சமயத்தில், வருமானத்தில் ஒரு பகுதியே துய்ப்புப் பொருள்களை உண்டாக்கப் பயன்படுவதால் (மற்றப் பகுதி முதற்கருவிப் பொருள்களை ஆக்கப் பயன்படுகிறது), துய்ப்புப் பொருள்களுக்குள்ள தேவைக்குக் குறைவாகவே அவை அளிக்கப்படுகின்றன.

(2) முழு வேலையளவில் குறைவு இருக்கும்போது, அதிகத் தேவையானது பயன்படாமல் இருந்த சாதனங்களைப் பயன்படுத்த உதவுகிறது. ஆனால், உற்பத்தியானது அதிகரிக்கும் தேவைக்கேற்ப அன்றி, அதற்குத் தலைகீழ் விகிதத்தில் உண்டாகிறது. ஒரு நிலைக்குப் பிறகு உற்பத்தியே உண்டாவதில்லை. உற்பத்தித்துறையில் இவ்வாறு நெகிழ்ச்சியின்றி இருப்பதும், மற்றக் காரணங்களால் உற்பத்திச் செலவு உயர்வதும் முழுவதுமாக வேலை கிட்டுவதற்கு முன்பே விலையேற்றம் உண்டாவதற்குக் காரணமாகின்றன. இத்தகைய குறைப் பணவீக்கத்திற்குக் காரணம் கெய்ன்ஸ் பிரபுவால் பின்வருமாறு சுருக்கிக் கூறப்படுகின்றன:[1]

(அ) பணத்தின் அளவிற்கேற்பச் சரியான விகிதத்தில் நிகரத் தேவை மாறுவதில்லை.

(ஆ) சாதனங்கள் ஒருபடித்தாக இல்லாமலிருப்பதால், வேலைகள் படிப்படியாக அதிகரிக்கும்போது, மாறு விலை வன்றிக் குறைந்துசெல் விளைவு உண்டாகிறது.

(இ) சாதனங்கள் தமக்குள் பரிமாற்றம் செய்யப்படமுடியாத தன்மையுடையவையாகையால், சில பண்டங்கள் நெகிழ்ச்சியற்ற அளிப்பு நிலையையடையும்; ஏனெனில், மற்றப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு இன்னும் பயன்படுத்தப்படாத சாதனங்கள் இருக்கும்.

1 'General Theory of Employment, Interest & Money,' 1936, பக், 296,

(ஈ) முழுவதுமாக வேலை கிட்டுவதற்கு முன்பே கூலிப்பகுதி உயரத் தொடங்கும்.

(உ) இறுதிநிலைச் செலவை நிர்ணயிக்கும் காரணிகளின் ஊதியம், அதே விகிதத்தில் மாறுவதில்லை.

உற்பத்திக் காரணிகளின் ஒருபடித்தற்ற தன்மை, சில காரணிகளின் அளிப்பு நெகிழ்ச்சியற்றிருத்தல், தொழிலாளர் அதிகக் கூலிகளைக் கேட்டுப்பெறுதல் முதலிய சில நெகிழ்ச்சியற்ற போக்குகள் பொருளாதார அமைப்பில் இருப்பதால், மொத்தத் தேவை அதிகரிக்கும்போது உற்பத்தி அதிகரிப்பதில்லை என்பதை மேற்கூறிய குறிப்புகளால் அறியலாம். இந்த 'இக்கட்டு நிலைகள்' தொழிலமைப்பின் பல்வேறு இடங்களில் வளர்வதால், பணப் பெருக்கத்திலுலும் தேவை அதிகரிப்பிலுலும் விலைகள் உயர்கின்றனவேயன்றி உற்பத்தியோ வேலையோ அதிகரிப்பதில்லை.[1] அதாவது, சில உற்பத்திக் காரணிகள் முற்றிலும் இயங்கும் தன்மையற்றவையாய் இருக்கும்வரையில், முழுப் பொருளாதார அமைப்பும் நிறை ஆற்றலோடு வேலைசெய்யத் தொடங்கு முன்பே, பணவீக்கம் ஏற்படக்கூடும்; ஏற்படவும் செய்கிறது. உண்மையில், பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட வேண்டுமாலுல், அதிகரித்துவரும் தேவைக்கு ஈடுகொடுப்பதற்கு உள்ள சாதனங்களே அன்றிச் சாத்தியக்கூறான சாதனங்கள் உதவா.[2]

இந்த ஆராய்ச்சியின்படி நம் நாட்டிலும், இதே வளர்ச்சி நிலையில் உள்ள பிறநாடுகளிலும் பயன்படுத்தப்படாத சாதனங்களும் வேலைக்குறைவும் சிறப்பான அம்சங்களாக இருப்பினும், இரண்டாவது உலக யுத்தத்தின்போதும் அதன் பிறகும் அரசாங்கச் செலவு தொடர்ந்து அதிகரித்துக்கொண்டுவந்ததன் பயனுக, நம் பொருளாதார அமைப்பில் அதிகப் பணவீக்க நிலை வளர்ந்ததில் வியப்பொன்றுமில்லை. அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற முன்னேற்றமான நாடுகளில் முழுவதுமாகவும், அதற்கு மேலும் வேலை கிட்டியிருக்கும்போது, இந்தியாவில் இன்னும் முழுவதுமாக வேலை கிட்டவில்லை என்பது உண்மை. பொருளாதார முறையில் பயன்படுத்த முடியாததால், அதிக அளவு தொழிலாளரும் சாதனங்களும் சோம்பிக் கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. போர்ப் பொருளாதாரத்திலிருந்து அமைதிப் பொருளாதாரத்

[1] Gottfried von Haberler, 'Prosperity and Depression', League of Nations, Geneva, 1937, பக். 258.

[2] Goldenweiser, 'Inflation', Federal Reserve Bulletin, April 1941, பக். 292.

திற்கு மாறியதால், இந்தியாவில் 10 இலட்சம் பேருக்குமேல் வேலையற்றிருக்கின்றனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.[1] யுத்த முடிவை அடுத்த சில ஆண்டுகளில் வேலையின்மையின் அளவும் விலைகளின் அளவும் உயர்ந்துகொண்டுவந்தன.

வளர்ச்சி குறைந்த நாடுகளில் இந்த வேலையின்மையின் ஒரு பகுதி சாதாரணப் பிறழ்ச்சிக் காரணமான வேலையின்மையே. இது எந்திரங்களைப் புகுத்துவதாலும், உற்பத்தியில் நுட்ப வினை முறைகளின் காரணமான மாறுதலாலும் உண்டாகிறது. இவற்றால் அடிக்கடி தொழிலாளர் வெளியேற்றப்படுகின்றனர்.[2] இந்தவிதமான வேலையின்மை வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கே சிறப்பாக உரியதன்று; முன்னேற்றமான நாடுகளிலும் மிகச் சாதாரணமாக உள்ளது. இது எப்பொழுதும் இருக்கும். இதுவேயன்றி வேலைக்குறைவு அல்லது வேலையின்மை பணவீக்க நிலையோடு சேர்ந்தே இருக்கும் முரணான நிலைமை அல்லது இவ்விரண்டும் சேர்ந்து ஒருங்கே சீர்கேடடையும் நிலைமை, வளர்ச்சி குன்றிய நாடுகளில் இரண்டு விசேஷ காரணங்களால் ஏற்படுகிறது. அவை, அநேகமாக நெகிழ்ச்சியற்ற அளிப்பு நிலையும், இப் பொருளாதார அமைப்புகள் கச்சா விலைச்சலின் ஏற்றுமதியையே நம்பியிருப்பதுந்தாம். வளப்பொருள்கள் பயனற்று இருக்கும்வரையிலும், அதிகரிக்கும் தேவைக்கேற்ப உற்பத்தியை அதிகரிக்கக்கூடியவரையிலும், அதிகரிக்கும் நிகரத் தேவையானது பணவீக்கத்தை உண்டுபண்ணுது. வளர்ச்சி குறைந்த நாடுகளில் துய்ப்பு மனப்பான்மை அதிகமாகவும், சேமிக்கப்படும் தேசிய வருமானம் அதற்கேற்பக் குறைவாகவும் இருக்கும். ஆகையால், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவேண்டு மானால் விரைவான உற்பத்தி மிகவும் அவசியம். ஆனால், உண்மையில், இந்த நாடுகளில் உற்பத்தி நெகிழ்ச்சி மிகவும் குறைவு. அளிப்பைப் பொறுத்தவரையில் இந்த நெகிழ்ச்சி யின்மைக்குப் பல காரணங்கள் உண்டு. இந்த நாடுகளில் தொழி லாளருக்கு வெளிப்படையாகத் தேவை இல்லாமலிருக்கலாம். ஒத்துழைக்கும் காரணிகள் போதிய அளவு இன்மையால், இந்தத்

[1] United Nations, 'Survey of Current Inflationary and Deflationary Tendencies', 1947, பக். 68.

[2] பொதுவாகப் பிறழ்ச்சிக் காரண வேலையின்மையானது தப்புக் கணக்குப் போடு வதனாலோ, விட்டுவிட்டு வரும் தேவையினாலோ, எதிர்பாராத மாறுதல்களாலோ உண் டாகிறது (General Theory, பக். 6). Lerner கூற்றின்படி, வேலையற்ற மக்களும், திறமிக்க வேலைகளும் தொழில்களும் ஒன்றுடொன்று பொருந்தாததனால், பிறழ்ச்சிக் காரண வேலையின்மை உண்டாகிறது (Economics of Employment, பக். 18); பொதுவாகச் சொன்னால், பொருளாதாரத்தில் உள்ள சில அமைப்புக் காரணிகளால் உண்டாவதே பிறழ்ச்சிக் காரண வேலையின்மை என்று விளக்கலாம் (U.N. Reports on National and International Measures for Full Employment).

தேவையானது அதிக அளவில் சாதனங்களைப் பயன்படுத்துதலும் அதிக உற்பத்தியும் ஆகிய முறைகளில் பயனளிப்பதில்லை. எந்திர சாதனங்களையும், உரங்களையும், கச்சாப்பொருள்களையும், போதிய அளவு இறக்குமதி செய்யாமை, நுட்பத்திறமையும் நிருவாகத் திறமையும் இன்மை ஆகிய இவை அண்மைக் காலத்தில் இந்தியாவில் உற்பத்தியையும் விலைகளையும் எப்படிப் பாதித் திருக்கின்றன என்பதை யாவரும் அறிவர். அதை வற்புறுத்திக் கூறவேண்டியதில்லை.[1] பொதுவாகச் சொன்னால், விவசாயப் பொருளாதார அமைப்புள்ள நாடுகளில் அதிக முதலீடு செய்வதால் விரைவாகச் சாதனங்களைப் பயன்படுத்தலும், அதன் மூலம் முழு வேலையளிப்பும் உண்டாகா. வேலையற்ற தொழி லாளருக்கு இணையாகப் பயன்படுத்தப்படாத தொழிற்சாலைச் சாதனங்கள் இருந்தால்தான், அதிகத் தேவைக்கேற்ப விரைவான உற்பத்தி உண்டாகும். வளர்ச்சி குன்றிய நாடுகளில் இது இயல்பாக இல்லாதவரைக்கும் நிகரத் தேவை அதிகரிப்பினால் அதிக உற்பத்தி உண்டாவதில்லை. அப்படி உண்டானாலும் மிகக் குறைந்த அளவே உண்டாகும். ஆகையால், இதன் முக்கிய விளைவு என்னவென்றால், விலைகள் உயர்வதே. இத்தகைய நாடுகளின் பொருளாதார அமைப்பில் உள்ள சிறப்பான அம்சம் என்னவென்றால், ஆரம்ப முதலீட்டினால் உடனே அதிக உற்பத்தி ஏற்படும்; ஆனால், இரண்டாம் முறையும் மூன்றாம் முறையும் அவ்வாறு முதலீடு செய்வதால் மிகக் குறைந்த பயனே கிடைக் கிறது. அதாவது, அதிக உற்பத்தி தொடர்ந்து இருப்பதில்லை. ஆரம்பத்தில் செய்யும் செலவின் பெருக்கிப் பலன் (multplier effect) பண வருமானமாகக் கிடைக்கிறதேயன்றிப் பொருள் வருமானமாக அதிகம் கிடைப்பதில்லை. மேலும், அதிகத் துய்ப்பு மனப்பான்மையானது பெருக்கிப் பயனை அளிப்பதில் உதவு வதற்குப் பதிலாக விரைவாக விலைகள் ஏறுவதற்கே உதவுகிறது. ஏனெனில், விவசாய உற்பத்தியின் பெரும்பகுதி பரிமாற்றம் செய்யப்படுவதற்காகச் சந்தைக்கு வருவதில்லை. துய்ப்பு மனப் பான்மை அதிகமாக இருக்கிறதென்றால், அதன் பொருள், உற்பத்தியின் பெரும்பகுதி சந்தைக்கு வராமலேயே துய்க்கப் படுகிறது என்பதுதான். சந்தைக்கு வரும் சரக்குக் குறைவாக இருப்பதால் விலை உயர்வுதான் கண்கண்ட பலன்.[2] இறுதியாக டாக்டர். V. K. R. V. ராவ் கூறுவதுபோல, வளர்ச்சியடைந்த

[1] U. N. Department of Economic Affairs, 'Survey of Current Inflationary and Deflationary Tendencies,' Sep. 1947, p. 5; also U. N. 'Economic Survey of Asia and the Far East', 1947, p. 187.

[2] Dr. V. K. R. V. Rao, 'Income, Investment and the Multiplier in an Underdeveloped Economy', Indian Economic Review, February, 1952, p. 59.

நாட்டில் வேலையற்ற நிலையானது அதிகத் தேவைக்கேற்ப அதிக உற்பத்தி செய்ய உதவுகிறது; ஆனால், மறைந்துள்ள வேலையின்மையும் வேலைக்குறைவும் உள்ள இந்தியாபோன்ற நாடுகளில் அவை இவ்வாறு உதவுவதில்லை. அதாவது, வேலையின்மை போல, மறைந்துள்ள வேலையின்மையானது நிகரத் தேவைக்குப் பயன்படுவதில்லை. இத்தகைய வேலையின்மையானது, தொழிலாளர்களுக்கு மேலும் அதிகத் தேவை இருந்தாலும் இருந்து கொண்டே யிருக்கும். அந்த அளவுக்கு உற்பத்திப் பெருகுவதில்லை. அதிகரிக்கும் மொத்தத் தேவையினால், அதிக விலைகளே உண்டாகும்.

அதிகரித்துள்ள மொத்தத் தேவை இருக்கும்போது, உற்பத்தித்துறையில் நெகிழ்ச்சியின்மையானது பணவீக்க நிலையிலுண்டாகும் விலையேற்றத்தைத்தான் விளைவிக்கும். வளர்ச்சி குறைந்த நாடுகளில் இந்தப் பணவீக்கப் போக்கானது மேலும் ஒரு காரணத்தினால் திடப்படுத்தப்படுகிறது. அவை விவசாயப் பண்டங்களின் ஏற்றுமதியை நம்பியிருப்பதுதான் அது. மொத்த உற்பத்தி அதிகரித்தால்தான் அதிகரித்துள்ள மொத்தத் தேவையினால் பணவீக்க நிலை உண்டாகாது. இந்த நாடுகளின் உற்பத்தியில் மிகுந்த அளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. விவசாய சம்பந்தமான கச்சாப் பொருள்களே இதில் பெரும்பாலும் அடங்கும். இத்தகைய நாட்டில் அதிக வாங்குந்திறன், நேரடியாகத் துய்ப்புப் பொருள்களுக்குரிய தேவையையே மிகுதிப்படுத்தும். இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களும் இதில் ஓரளவு அடங்கும். வெளிநாட்டாரிடமிருந்துதான் ஏற்றுமதிப் பொருள்களுக்குக் கிராக்கி வரவேண்டும். ஆகையால், பின்தங்கிய பொருளாதார அமைப்பில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுக்கும் உள்நாட்டுத் துய்ப்புப் பண்டங்களுக்கும் அதிக கிராக்கி இருக்கும்வரையில், ஏற்றுமதிப் பொருள்களின் பெருக்கத்தினால் உள்நாட்டுப் பணவீக்கம் பாதிக்கப்படுவதில்லை. அதாவது, அதிகரித்த நிகரத் தேவையினால் உண்டாகிய பணவீக்கப் போக்கை நாட்டுப் பொருளாதாரத்தின் பெரிய பகுதியானது குறைக்க முடிவதில்லை.[1] இது ஒருபுறமிருக்க, ஏற்றுமதிச் சரக்குகளுக்கு வெளிநாடுகளிலிருந்து அதிக கிராக்கி வரும் நாடுகளின் பொருளாதார அமைப்பில், உள்நாட்டுச் சரக்குகளுக்கு வெளி நாடுகளிலிருந்து வரும் ஈடுசெய்ய முடியாத தேவையினால், 'ஏற்றுமதிப் பணவீக்கம்' உண்டாகக்கூடிய பெரிய அபாயம் இருக்கிறது. பின்வரும் ஐந்து நாடுகளில் அண்மையில் காணப்பட்ட விலைகளின் போக்கு இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்:

1 'U. N. Economic Survey of Asia and the Far East, 1947', p. 187.

மலேயா (ரப்பர், வெள்ளீயம்), பாகிஸ்தான் (பருத்தி, சணல்), இலங்கை (தேங்காய்ப் பொருள்கள், ரப்பர்), இந்தோனீசியா (ரப்பர், வெள்ளீயம்), பிலிப்பைன்ஸ் (அபாகா, தேங்காய்ப் பொருள்கள்). 1950-51-ல் ஏற்பட்டதுபோன்ற அதிக வெளி நாட்டுத் தேவையானது ஏற்றுமதித் தொழில்களில் வரு மானத்தை அதிகரித்தது. ஏற்றுமதி செய்பவர்களும், லாபம் சம்பாதிப்பவர்களும் முதலில் அதிக வருமானத்தைப் பெறு கிறார்கள். இவர்கள் அதிகச் செலவு செய்வதனால் பொருளாதார அமைப்பு முழுவதிலும் வருமான அளவு அதிகரிக்கிறது. அதிக வருமானம் செலவழிக்கப்படும்போது அகவிலைகள் உயருகின்றன. மேலும், மற்றத் தொழில்களிலிருந்து ஏற்றுமதி வியாபாரிகள் தொழிலாளர்களையும் பொருள்களையும் இழுப்பதால் அடக்க விலைகள் அதிகமாகின்றன. விலையேற்றத்தை எதிர்பார்த்து ஊகவாணிகம் செய்யும்பொருட்டு நீடித்த தன்மையுள்ள பொருள்களின் இருப்பை வெளிவிடாமல் இருப்பதால் நிலைமை மேலும் சீர்கேடடைகிறது.[1]

பணவீக்கத்தின் விளைவுகள்

பணவீக்கத்தில் பொதுவான விலையளவு உயர்ந்திருந்தாலும், இந்த விலையுயர்வு பொருளாதார அமைப்பு முழுவதிலும் இராது. பணவீக்கப் போக்கை ஒட்டிய விலைகளில் ஆபத்து இதுதான். பொருளாதார அமைப்பின் வெவ்வேறு பகுதிகளில் ஒரே மாதிரி யாகப் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் விலைகள் உயர்ந்தால், வருமானம் பெறும் வெவ்வேறு வகை மக்களின் நிலை மாறுமல் இருக்கும். அப்போது பணவீக்கத்தின் பொருளாதாரப் பயன் ஒன்றுமில்லாமற்போகும். ஆனால், உண்மையில் எந்தப் பண வீக்கத்திலும் வெவ்வேறு தொகுதியான பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் விலைப்போக்கு அதிகரிக்கும் விகிதத்தில்மட்டு மன்றித், திசையிலுங்கூட வெவ்வேறு அளவு வேறுபடுகிறது. வெவ்வேறு பண்டங்களின் விலைகள் வெவ்வேறு அளவு மாறுவதன் தெளிவான நேரடி விளைவு என்னவென்றால் சமூகத்தில் வரு மானப் பங்கீடு முறை மாறுபடுவதே. பணவீக்கத்தினால் ஏற்படும் இந்த வருமான மறுபங்கீடுதான் அளவு கடந்த விலையேற்றத்தின் பல தீய விளைவுகளுக்குக் காரணம் என்று சாதாரணமாகக் கூறப் படுகிறது.

யுத்தகாலத்தில்போலத் தேசிய நெருக்கடி உண்டாகும் சமயத்தில், அரசாங்கத்தின் அதிகத் தேவையினால் ஏற்படும் பணவீக்கம், மக்கள்மீது விதிக்கப்பட்ட ஒரு கட்டாய வரிபோல

[1] 'U.N. Economic Survey of Asia and the Far East, 1951', pp. 274-6.

ஆகிறது. இது மக்களின் துய்ப்பைக் குறைப்பதால், வளப் பொருள்களைத் திரட்டுவதற்கும் உதவுகிறது. இந்தச் சிறப்பான நோக்கத்துடன் பார்த்தால், பணவீக்கம் பயனுள்ளதே. இது ஒருபுறமிருக்க, நாட்டுப் பொருளாதார அமைப்பின் முது கெலும்புபோன்ற இரண்டு முக்கியமான வகுப்பாருக்குப் பண வீக்கம் நன்மை செய்கிறது என்று பணவீக்கவாதிகள் கூறு வார்கள். இவர்கள் உழவர்களும் தொழில்துணிவோரும் ஆவர். இந்த இரு வகுப்பாரும் கடனுளிகளாகையால், அளவு கடந்த விலையேற்றத்தினுல் அதிக நன்மையடைகிறார்கள். பணவீக்கக் காலத்தில் கடனைத் திருப்பிக்கொடுப்பது எளிது. ஏனெனின், கடன் சுமையின் முகமதிப்பு அப்படியே இருப்பினும், பண வீக்கத்தினுல் பணத்தின் மதிப்புக் குறையும் அளவிற்கு உண்மை யான சுமை குறைகிறது. உழவர்களுக்கு நன்மையுண்டாவதற்கு ஒரு காரணம், அவர்கள் விலைக்கு அளிக்கும் பண்டங்கள் பண வீக்கத்தினுல் மிகுதியாகப் பாதிக்கப்படும் தன்மையுடையவை. மற்றொரு காரணம் அவர்கள் உற்பத்தி செய்யும்போது ஏற்படும் செலவுகளாகிய வட்டி, வரி, கூலி முதலியவை சிறிதளவே உயருகின்றன. பணவீக்கத்தின் ஆரம்ப காலத்தைப் பொறுத்த மட்டிலாவது இது உண்மையே. அவர்கள் விற்கும் பொருள் களின் விலைகளோடு ஒப்பிடும்போது, உற்பத்திச் செலவின் உயர்வு மிகக் குறைவே. இதுபோலவே, தொழில்துணிவோருக்கும் விலைகளைவிடச் செலவுகள் மிகவும் குறைவாக இருப்பதால் அதிக லாபம் கிடைக்கிறது. மேலும், அவர்களுடைய இருப்புகளின் மதிப்பேற்றம், பணவீக்க நிலையில் எதிர்பாராத சம்பாத்தியத் திற்கு வாய்ப்பாக இருக்கிறது. குறிப்பிட்ட சில வகுப்பாருக்குக் கிடைக்கும் லாபத்தினுல் எல்லாருக்கும் நன்மையுண்டாகிற தென்று பணவீக்கவாதிகள் கூறுகிறார்கள். ஏனென்றால், இந்த வகுப்பாருடைய மனப்பான்மையானது நாட்டுப் பொருளாதார அமைப்பை நேரடியாகப் பாதிக்கும் தன்மையுடையது. தொழில் நடத்தும் வகுப்பாரிடையே காணப்படும் உற்சாகமும் நம்பிக்கையும் நிறைந்த மனப்பான்மை புதிய மூலதன முதலீட்டுக்கு ஊக்கமளிக்கிறது என்றும், சோம்பிக் கிடக்கும் சாதனங்களை இழுத்துப் பொருளாதார முறையில் பயன் படுத்த உதவுகிறது என்றும், பொருளாதார அமைப்பின் முழு ஆற்றலையும் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க உதவுகிறது என்றும் கூறப்படுகிறது.

இத்தகைய மாறுதல்கள் நிகழும் என்பதை மறுக்கமுடியாது. குறுகிய காலத்தில் பொருளாதார அமைப்பில் ஏற்படக்கூடிய நன்மைகளையும் மறுக்க முடியாது. இந்தப் போக்கில் இரண்டு விதமான ஆபத்துகள் உண்டு. முதலாவது, ஏற்கெனவே

கூறியபடி, பணவீக்க விலையேற்றப் போக்கு ஆரம்ப நிலையில் சில பொருளாதார நன்மைகளை அளிப்பினும், சமூகத்தில் வருமான மறுபங்கீட்டை உண்டாக்குகிறது; அதனால், கடுமையான பொருளாதார விளைவுகள் ஏற்படும். ஆகவே, தொடர்ந்து பொருளாதார அமைப்பில் சிறிதளவு பணவீக்கம் இருக்கவேண்டுமென்ற வாதம் குறைபாடுடையது. ஏனெனின், பணவீக்க முன்னேற்றத்திற்கேற்ப எல்லாருடைய வருமானங்களிலும் ஒரே மாதிரி மறுபங்கீடு உண்டாகச் செய்வது முடியாத செயலாகும்.[1] இரண்டாவது, மூலதன ஆக்கத்திற்கும் வேலையளிப்புக்கும் ஊக்கமளிக்கக்கூடிய சக்திகளே ஒரு நிலைக்குப்பிறகு எதிர்த்திசையில் இயங்கும் மாறுன சக்திகளாகிவிடுகின்றன. பன்னாட்டுப் பண நிதியைச் (International Monetary Fund) சேர்ந்த பொருளாதாரத்துறையினர் ஒருவர் அண்மையில் நடத்திய ஆராய்ச்சியிலிருந்து[2] நமக்குக் கிடைக்கக்கூடிய சான்றுகளிலிருந்து வளர்ச்சி குறைந்த நாடுகளில் பணவீக்க விகிதம் குறைவாயிருந்தபோது பொருளாதார வளர்ச்சியின் விகிதம் அதிகமாக இருந்தது என்பது பொதுவாகத் தெரிகிறது. ஆனால், திட்டமான முடிவு ஒன்றும் செய்ய முடியவில்லை. 1920–29-ல் ஐரோப்பாவில் உண்டான பணவீக்கத்தைப்பற்றித் தாம் செய்த ஆராய்ச்சியில் பேராசிரியர் ரக்நர் நர்க்ஸே (Ragner Nurkse), 'விலையேற்றம் முன்கூட்டி அறிய முடியாமலும் எதிர்பாராமலும் எந்த அளவுக்கு உண்டாகிறதோ, அதைப் பொறுத்துத்தான் பணவீக்கமானது மூலதன ஆக்கத்திற்குக் கருவியாகப் பெரும்பாலும் பயன்படுவதில் வெற்றியளிக்கும்' என்று குறிப்பிடுகிறார்.[3] மறுபடியும் விலையேற்றம் எதிர்பார்த்து உண்டாவது உறுதியானால், பணப்புழக்கத்தின் வேகம் அதிகரிக்கிறது; சேமிப்பு இல்லாத நிலை மாறிச் சேமிப்பு உண்டாகிறது; பணவீக்கமானது மூலதன ஆக்க சக்தியை இழந்துவிடுகிறது. அதன் பிறகு பணவீக்கம் குவிவு முறையில் உண்டாகிறது. பணவீக்கத்தைப்பற்றி அறிந்தவர்களும், அதிகப் பணவீக்க நிலையை மறவாமல் மனத்தில் கொண்டிருப்பவர்களும், இரண்டாவது உலகப் போரின்போது பணவீக்கம் மிக வேகமாக வளர்ந்தது என்றும், ஆதலால் அது மூலதன ஆக்கத்திற்கு உதவும் கருவியாகப் பயன்படவில்லை என்றும் கருதுகிறார்கள்.[4]

[1] Seymour Harris, 'Economics of Mobilisation and Inflation,' 1951, p. 255.

[2] U. Tun Wai, 'The Relation between Inflation and Economic Development', International Monetary Fund Staff Papers, Oct. 1959, p. 302.

[3] League of Nations, 'Course and Control of Inflation,' 1947. p. 6.

[4] Ibid. p. 67.

மேலும், தொழில்துணிவுடையோர்போன்று மாறும் வருமானமுடையோர் பணவீக்க நிலையில் நன்மையடைகிறார்கள் என்று கொண்டாலும், அந்த நன்மை உண்மையான நன்மையா என்பது ஐயமே. கூடிப்போனால், இந்த நன்மை ஓர் எல்லைக் குட்பட்டதே. விவசாய உற்பத்தி விலைகள்போல, உழவர்களுடைய தொழிற் செலவும் மாறுத செலவுகளும் விரைவில் முன்னேறுததால், உழவர்கள் மொத்தமான நன்மையடைகின்றனர். ஆனால், இந்த நன்மை சிறிது காலத்திற்கே நிலைப்பது; பெரும்பாலும் ஏமாற்றத்தைத் தருவது. தேவை வேறுபடுவதற்கேற்ப விவசாய உற்பத்திப் பொருள்களின் அளிப்பு அவ்வளவாக நெகிழ்ந்துகொடுக்காமலிருப்பதால், விலையேற்றத்தினால் உழவர்களுக்கு லாபம் கிடைக்கிறது; இக் காரணத்தினாலேயே விலையிறக்கத்தினால் அவர்களுக்கு அழிவும் உண்டாகிறது. அவர்கள் நெகிழ்ச்சியற்ற செலவுகளினால், பொருளாதார வீக்கத்தின் போது எவ்வளவுக்கெவ்வளவு நன்மையடைகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு மந்த காலத்தில் துன்பமடைகிறார்கள். எந்திர உற்பத்தியாளர்கள்போன்ற மற்றவர்கள் அடையும் துன்பம் அவ்வளவில்லை. விவசாயம் அதிக வியாபாரமயமாக்கப்பட்டு, விவசாய உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்யும்படியான நாடுகளில் இது மிகவும் உண்மையாக இருக்கிறது. அத்தகைய நாடுகள் ஏற்றுமதிப் பணவீக்கத்தினால் உண்டாகும் அபாயங்களுக்கு எளிதில் இரையாகின்றன. இறுதியாகப் பார்க்கும் போது, மற்ற விலைகள் நிலையாக இருந்து விவசாய விலைகள் உயரும்போதுதான் உழவர்களுக்கு உண்மையான நன்மை ஏற்படமுடியும். சாதாரணமாக, இது நடக்காத காரியம். பணவீக்கத்தின்போது உண்டாகும் விலையேற்றம் தற்காலிகத்தன்மையுடையது என்பதை உழவர்கள் அறியாமலிருப்பது அவர்கள் நிலையை மேலும் சீர்கேடடையச் செய்கிறது. இதன் விளைவாக, பொருளாதார வீக்கத்தின்போது அவர்கள் நிலத்தில் புதிதாக முதலீடு செய்யத் தொடங்குகிறார்கள். முதல் உலகப் போரின் போது அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஏற்பட்டதுபோல, அப்போது நில ஊகவாணிகம் சாதாரணமாகத் தோன்றுகிறது. இதன் விளைவாக விவசாய உற்பத்திப் பொருள்கள், நிலம் ஆகியவற்றின் மதிப்பு வீழ்ச்சியடைகிறது. இதனால், உழவர்களுக்குத் துன்பம், வறுமை, கடன் முதலியவை உண்டாகின்றன.[1]

பொறிவழித் தொழில் செய்வோருடைய நிலையும் உழவர்களுடைய நிலைபோலவே ஏறக்குறைய இருக்கிறது. உழவர்களுக்குக் கிடைக்கும் அதிக லாபத்தைப் போலவே இவர்களுக்குக் கிடைக்கும் அதிக லாபத்திலும் எதிர்பாராத அச்சம்

[1] Willis and Chapman, 'The Economics of Inflation, 1935', pp. 164-75.

உள்ளது. இதிலும் அதேபோன்ற தற்காலிகத் தன்மையும், அதிக ஏமாற்றப்போக்கும் இருக்கின்றன. பணத்தின் வாங்குந் திறன் படிப்படியாகக் குறையும்போது, துய்ப்போரில் முக்கிய மானவர்களுடைய துய்ப்பு மனப்பான்மை குறைகிறது. அதி கரித்துவரும் துய்ப்போரின் எதிர்ப்பும், உற்பத்திச் செலவுகள் உயருவதும், பணவீக்க விலைகளில் புதிய இருப்புகளைச் சேர்க்க வேண்டிய அவசியமும், பணவீக்க நிலையின் பிற்காலத்தைப் பொறுத்தமட்டிலாவது, தொழில் நடத்துவோரின் லாபத்தை மதிப்பற்றதாக்குகின்றன. அவர்கள் பெறும் நன்மை வெறும் பண அளவில்தான் இருக்கிறது. விரைவில் பொறிவழித் தொழில் செய்வோர், வியாபாரிகள் ஆகியவர்களின் லாபம் அவர்கள் கையிலேயே குறைந்து மறைந்து நஷ்டமாக மாறிவிடுகிறது. இருப்பினும், லாபத்தின் இந்த மாயமான தன்மையை அவர்கள் உணர்ந்தபாடில்லை. பணவீக்க லாபத்திலிருந்து தொழிலாள ருக்கு அதிகக் கூலி கொடுப்பதும், பொருள்களுக்கும் இருப்புச் சேமிப்பதற்கும் அதிக விலை கொடுப்பதும் தங்களுடைய மூல தனச் சாதனங்களையே தின்றுவிடுகின்றன என்பதை அவர்கள் அதிகம் உணர்வதில்லை.[1]

தொழில் நடத்துவோருக்கும் உழவர்களுக்கும் உண்டாகும் நஷ்டத்தைவிடப் பணவீக்கத்தினால் உண்டாகும் தீய விளைவுகள் உண்மையில் மிகக் கொடியவை. பொருளாதார முறையில் பார்க்கும்போது, அது உற்பத்தி செய்யும் முயற்சியைத் தடை செய்கிறது. ஏனெனின், அது சமூகத்தில் தொழிலாளர், மூல தனம், நிருவாகம் ஆகியவற்றைப் பாதிக்கிறது. பணத்தின் மதிப்புக் குறைவதும், விலையளவுக்குத் தகுந்தபடி கூலியளவு மாறுமலிருப்பதும் உழைப்போரிடம் தோல்வி மனப்பான்மையை உண்டாக்குகின்றன. அது உழைப்போர் அதிகம் சம்பாதிப் பதற்கு அதிகம் உற்பத்தி செய்யவேண்டும் என்ற மனப் பான்மைக்குத் தூண்டுகோலாக இல்லாமற்போகிறது. அதே சமயத்தில் சமூகத்தில் சம்பாதிக்கும் பணத்தின் அளவு எவ்வள வாயினும் அதனால் பெறக்கூடிய பண்டங்களின் அளவு குறைந்து கொண்டே வருகிறது என்பதனால், மக்களின் சேமிப்புப் பழக்கம் அழிந்து, எதிர்காலத்தைப்பற்றிய எண்ணமின்றி ஊதாரித் தனமாகச் செலவுசெய்யும் பழக்கம் மிகுகிறது. அன்றியும், தொடர்ந்திருக்கும் பணவீக்கம் அல்லது அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டமும் பணக்கொள்கையும் பணவீக்க சக்திகளை நிலைநிறுத்தும் என்ற உணர்ச்சி, முதல் உலகப் போரின் இறுதியில் ஃபிரான்சிலும் ஜெர்மனியிலும் செய்ததுபோல, நாட்டிலிருந்து

[1] Paul Einzig, 'Inflation' 1952, pp. 142, 143.

மூலதனத்தை வெளியேற்றிவிடும். மூலதனப் பெயர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் அப்போது செய்யும் முயற்சிகள் குறைந்த அளவுப் பயனையே தரும். ஆகவே, அதிக அளவில் பணவீக்கம் இருப்பது மூலதனம் குவிவதைத் தடை செய்கிறது. ஆனால், இதைவிட மோசமானது என்னவென்றால், அது, கிடைக்கக்கூடிய மூலதனச் சாதனங்களை அழித்தேவிடுகிறது; அல்லது நாட்டிலிருந்து விரட்டிவிடுகிறது. தொழில் நடத்து வோரின் போக்கும் மனப்பான்மையும் பணவீக்க நிலையில் அதிக உற்பத்திக்குச் சாதகமாகவும் இருப்பதில்லை. முன்னேற்றமான எந்திரத் தொழிற் பொருளாதார அமைப்பில் உற்பத்தியைத் திறமையுடையதாகச் செய்யும் அடக்க விலைக் கணக்குவைப்பு முறை (cost accounting), பணத்தின் மதிப்பு அடிக்கடி மாறும் போது பொருளற்றதாகிவிடுகிறது.[1] தொழில் திறமையும் சாமர்த்தியமும் உற்பத்தி வேலைகளுக்கன்றி ஊக வேலைகளுக்கே பயன்படுத்தப்படுகின்றன. கைவசமுள்ள பொருள்களுக்கு விரை வாக உயர்ந்து செல்லும் விலைகளால் அளவுகடந்த லாபம் கிடைக்கக்கூடுமென்ற வாய்ப்பிருப்பதனால் பதுக்கலும், கள்ள வாணிபமும், கறுப்புச் சந்தையும் தோன்றுகின்றன. சுருங்கக் கூறினால், 'பணவீக்கம், திறமையான உற்பத்திவழியாக அன்றி, மார்க்கெட் பித்தலாட்டத்தின்வழியாக லாபம் பெறுமாறு தொழில் நடத்துவோரைத் தூண்டுகிறது.' உற்பத்தியாளர்கள், தம் சரக்கின் தரம் உயர்வாக இல்லாவிட்டாலும், அதிகச் செலவுகளைத் துய்ப்போர் தலைமீது சுமத்த வழி இருப்ப தால், உற்பத்தியின் போக்கை வீணாக்க முற்படுகிறார்கள். மேலும், பணவீக்கமானது மத்திய, கீழ்த்தர வகுப்பினரின் வருமானத்தை மேல்நிலை வருமானமுள்ளவர்களுக்கு மாற்றும் செயலால், மக்களின் மொத்தத் துய்ப்பு அளவு குறைந்து பொரு ளாதார அமைப்பே நிலையற்றதாகிவிடுகிறது. பொருளாதார வீக்கம் அளவுகடந்த உச்சநிலைக்குத் தங்களைக் கொண்டு சென்றுள்ள நிலையில், இறங்குமுகம் வந்துவிடுமோ என்ற அச்சத் தினால் தொழில் நடத்துவோர் தம் இருப்புகளையும் மூலதனச் செலவுகளையும் சுருக்குகிறார்கள். எந்த நெருக்கடியை அவர்கள் எப்படியாவது தவிர்க்க விரும்புவார்களோ, அந்த நெருக்கடி இதனால் திடீரென்று உண்டாகிவிடும். இறுதியாக, ஏற்றுமதி செய்யும் நாட்டில் உள்ள பணவீக்கத்தினால், வெளிநாட்டுக் கிராக்கிக் குறையும்போது, முதலில் ஏற்றுமதித் தொழில்களில்

[1] A. G. Hart, 'Defence Without Inflation', 1951, p. 13. 'விலைகள் விரைவாக உயரும்போது, கணக்குவைப்பவரின் அடக்க விலைகள், நடப்புக்குச் சம்பந்த மின்றிப் போய்விடக்கூடும். ஆகவே, நிருவாகத்தினர் தங்களுடைய அடக்க விலைகள் காட்டும் குறிப்பைக்கொண்டு நடவடிக்கைகளின் திறமையைச் சரியாக அளக்க முடியாது'.

உற்பத்தியும் வேலையும் குறைகின்றன. பிறகு இந்த நிலை மற்றத் தொழில்துறைகளுக்கும் பரவி, நாட்டின் பொருளாதார அமைப்பு முழுவதையும் வளைத்துக்கொள்கிறது.

பணவீக்கமானது, சம்பாதிக்கும் வகுப்பாரின் வருமானங்களில் உண்டாக்கும் மாறுதல் வேறுபடுவதால், அது சமூகத்தில் கடுமையான விளைவுகளை உண்டாக்குகிறது. பொதுவாக, அது நெகிழ்ச்சியான வருமானமுடையவர்களின் பணவருமானத்தை அதிகரிக்கிறது; நிலையான வருமானமுடைய அரசாங்க ஊழியர்கள், உபகாரச் சம்பளம் பெறுபவர்கள், தொழிலாளர்கள் (ஓரளவு) முதலியவர்களைப் பிரதிகூலமான முறையில் பாதிக்கிறது. பிற்கூறிய வகுப்பாரில், மற்றவர்களிடக் கட்டுக்கோப்பாக இருப்பவர்கள் குறைவாகத்தான் பாதிக்கப்படுகிறார்கள். சாதாரணப் பங்குகளில் முதலீடு செய்பவர்கள் நன்மையடைகிறார்கள்; ஆனால், நிலையான வட்டியளிக்கும் பத்திரங்களில் முதலீடு செய்பவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். நடுத்தர முதலீட்டாளர்கள், நிலையான வட்டியளிக்கும் பத்திரங்களையும், இன்சூரன்சையும், சேமிப்புக் கணக்குகளையும் தேர்ந்தெடுப்பதால், சிறு முதலீடு செய்பவர்கள் பணவீக்கத்தினால் எப்படிப் பாதிக்கப்படுவார்கள் என்பது தெளிவு.[1] ஆகவே, பணவீக்கத்தினால் செல்வம் மறுபங்கீடு செய்யப்படும்போது, தாங்க முடியாத இந்த வகுப்பார்மீது அதிகச் சுமை போடப்படுகிறது. ஒருபுறம் அதிக வருமானமுள்ள வகுப்பாருக்கும், மற்றொருபுறம் நடுத்தர, கீழ்த்தர வருமானமுள்ள வகுப்பாருக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை அது பெரிதாக்குகிறது. இவ்வாறு வருமானம் மறுபங்கீடு செய்யப்படுவதால், ஒரு வகுப்பாருக்கும் மற்ற வகுப்பாருக்கும் இடையே வெறுப்பும், சமூகப் பூசல்களும், விற்போர் மார்க்கெட்டுகளும் உண்டாகின்றன. நேர்மையற்ற வழிகளில் அதிக லாபம் சம்பாதிக்கும் வாய்ப்புகளால் வியாபாரத் தருமத்தின் தரம் குறைகிறது; சமூகத்தின் பெரும் பிரிவில் மிகுந்த பொறுமையுணர்ச்சி உண்டாகிறது. நாட்டுப் பற்று இல்லாத மக்களிடம் அதிக வருமானம் செல்வதையும், ஜாக்கிரதையும் நிதானமும் உள்ளவர்கள் துன்புறுத்தப்படுவதையும் இவர்கள் காண்கிறார்கள்.[2]

சமூகத்தில் வெறுப்பும் பூசலும் உண்டாகுமாறு செய்யக்கூடிய வாய்ப்புமட்டும் பணவீக்கத்தில் அடங்கிய ஒரே அபாயம்

[1] K. Kurihara, 'Monetary Theory and Public Policy', 1951, p. 56.

[2] 1920–29-ல் ஜெர்மனியில் நிலையான வருமானமுடைய நடுத்தர வகுப்பார் பணவீக்கத்தினால் அடைந்த துன்பத்தை அறிய, J. W. Angell எழுதிய 'The Recovery of Germany (1929)' என்ற நூலைப் (பக். 38—9) பார்க்க.

அன்று; அதைவிட முக்கியமானது என்னவென்றால், அது அரசியற் கட்டுப்பாட்டில் குறை இருப்பதைக் காட்டுகிறது. இரண்டாவது உலகப் போரில் பணவீக்கம் மிக அபாயமாக மாறியது. போரில் நேரடியாக ஈடுபட்ட நாடுகளிலோ, பண அளிப்பு அதிகமாக்கப்பட்ட நாடுகளிலோ அன்றி, நிருவாக முறை அவ்வளவு திறமையாக இல்லாத நாடுகளிலும், திறமையாகக் கட்டுப்படுத்தக்கூடிய சாதனத்தை அமைக்கமுடியாத நாடு களிலுந்தாம் என்பது இக் கருத்திற்கு ஆதரவாக இருக்கிறது. அன்றியும், பணவீக்க நிலையில், அரசாங்கத்தின் பொறுப்புகளுக்குத் தக்கவாறு இராச்சியங்களின் வருமானமும், தலத்தாபனங்களின் வருமானமும் ஈடுகொடுக்க முடிவதில்லை. அமெரிக்க ஐக்கிய நாடு களில்கூட 1938-க்கும் 1946-க்கும் இடையில் மொத்தத் தேசிய உற்பத்தி கிட்டத்தட்ட இருமடங்காக மாறினும், இராச்சியங்கள், தலத்தாபனங்கள் ஆகியவற்றின் வருமானம் 26 சதவீதமும், செலவு 10 சதவீதமுந்தாம் அதிகரித்தன. இராச்சிய அரசாங்கங் களைப் பொறுத்தமட்டில் இது பெரும்பாலும் உண்மையாகும். ஏனெனில், அவை நிலவரிபோன்ற நெகிழ்ச்சியற்ற இனங்களி லிருந்து தம் வரிவருமானத்தில் பெரும்பகுதியையும் பெறுகின்றன. பொதுப்பணித் துறை, கல்வி, பொதுச் சுகாதாரம் போன்ற முன் னேற்றப் பணிகள் பணமின்றி வாடுவதே இதன் விளைவாகும். நாட்டின் பொருளாதாரத்தின் வளர்ச்சியும் செழிப்பும் இவற்றைப்பொறுத்தே இருக்கின்றன.

நம்போன்ற வளர்ச்சி குன்றிய பொருளாதார அமைப்புள்ள நாடுகளுக்குப் பணவீக்கத்தின் தீய விளைவுகள் சிறப்பான முக்கி யத்துவம் வாய்ந்தவை. தொழில், விவசாயத் திட்டங்களைத் தொடங்கியுள்ள பின்தங்கிய நாடுகள் பின்வரும் காரணங்களால் பணவீக்க அபாயத்திற்குச் சிறப்பாக இலக்காகின்றன:

முதலாவது, இந்த நாடுகள் திட்டமிட்டுள்ள பொருளாதார வளர்ச்சியின் மாதிரியும் அதற்கு நிதியளித்தலும் பணவீக்கத் திற்கு முக்கியத் தோற்றுவாய்களாகின்றன. பொருளாதார வளர்ச்சியின் அவசியத்தை உணர்ந்துள்ள பெரும்பாலான வளர்ச்சி குன்றிய நாடுகள், அண்மையில்தான் குடியேற்ற நாட்டு நிலையிலிருந்து வெளிவந்திருக்கின்றன. மிகவும் தொழில்மய மாக்கப்பட்டு, நன்கு பொருளாதார வளர்ச்சிபெற்ற நாடுகள் அவைகளுக்கு முன்மாதிரிகளாக விளங்குகின்றன. ஆகவே, அவை களுடைய முக்கிய இலட்சியம் தம்மை விரைவாகத் தொழில்மய மாக்குவதுதான். அவைகளைப் பொறுத்தவரையில், தொழில் மயமாதல் என்றால் பொருளாதார முன்னேற்றம் என்று பொருள்.

ஆனால், இந்த நாடுகளில் தொழில்துணிவுத் திறமையும், முன்னேற்றத்திற்குத் தேவையான அமைப்புமுறையும் போதிய அளவு இல்லை. ஆகையால், தொழில்மயமாக்கும் பொறுப்பும் முன்னேற்றத்தைத் தொடங்கும் பொறுப்பும் அரசாங்கங்களைச் சார்ந்துள்ளன. மேலும், பல பொதுச் செலவுகளுக்கும் வேண்டிய மிகப் பெருந்தொகையை முதலீடு செய்வதற்கு அரசாங்கத்தினால் தான் முடியும். பொருளாதார முன்னேற்றத்தில் அரசாங்கம் முக்கியப் பங்குகொள்ளும்வரையில், அரசாங்கத்தின் முதலீடுதான் மொத்த முதலீட்டின் உயர்வில் பெரும்பங்காக இருக்கும். முதலீடு செய்வதில் மூலதன ஆக்கத்திற்கு வேண்டிய சொத்துச் சாதனங்களைப் பயன்படுத்துவதும் அடங்கியிருக்கிறது. அரசாங்க முதலீடு அதிகரிக்கவேண்டுமானால், சாதாரணத் துய்ப்புக்குப் பயன்படும் சொத்துச் சாதனங்களும், தனியார்துறையில் முதலீடு செய்யப்படும் சொத்துச் சாதனங்களும் அரசாங்கத்துறைக்கு மாற்றப்படவேண்டும். தனியார் துறையில் இச் சாதனங்களுக்கு கிராக்கி மாறுமல் அப்படியே இருந்தால், அரசாங்க அதிக முதலீடு மொத்தத் தேவையை உயர்த்திக் காட்டுகிறது. அதாவது, அரசாங்கத்தினால் செய்யப்படும் அதிக முதலீடு இயல்பான சாதன இருப்பைவிட மொத்தத் தேவையை அதிகரிக்கிறது. ஆனால், பொருள் கட்டுப்பாடு அல்லது மற்ற நேரடியான வழிகளால் துய்ப்பையும் தனியார்துறையின் தேவையையும் குறைத்தால், விலையேற்றம் இல்லாமலே சொத்துச் சாதனங்களைப் பொதுத் துறைக்கு மாற்றமுடியும். இதற்கு மாறாக, இயல்பான மார்க்கெட் வழியாக இச் சொத்துச் சாதன மாற்றத்தைச் செய்வதானால், இச் சாதனங்களை வாங்குவதற்குரிய வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். அதாவது, அரசாங்கம் தன் பழைய சேமிப்புகளைப் பயன்படுத்தவேண்டும்; அல்லது செலாவணியை வெளியிட வேண்டும் அல்லது மத்திய பாங்குகளிலிருந்தும் வாணிக பாங்குகளிலிருந்தும் கடன் வாங்கவேண்டும். இது விலைகளில் பணவீக்கப் போக்கை உண்டாக்கும்.

பொருளாதார வளர்ச்சியின் ஆரம்ப நிலையில் பணவீக்கப் போக்கை உண்டாக்கக்கூடிய இரண்டாவது அம்சம் என்னவென்றால், நுட்பத்திறமை, முதலீட்டுச் சாதனங்கள், போதிய போக்குவரத்துச் சாதனங்கள் இன்மைபோன்ற சில நெகிழ்ச்சியற்ற தன்மைகள் இருப்பதுதான். அதிகத் தேவையினால் விலை நெருக்கடி உண்டாகாமலிருக்கவேண்டுமானால், துய்ப்புப் பொருள்களும் தொழில்களுக்குரிய கச்சாப் பொருள்களும் போதிய அளவு இருக்கவேண்டும் என்பது தெளிவு. ஆனால், உண்மை என்னவென்றால், மேற்கூறிய நெகிழ்ச்சியற்ற தன்மை

களிலுல், பொருளாதார முன்னேற்றமுள்ள நாடுகளிவிட வளர்ச்சி குன்றிய நாடுகளில் வாங்குந்திறன் உயர்வதற்கேற்ப உற்பத்தி உயர்வதில்லை. அதிகரிக்கும் தேவைக்கேற்பப் பொருள் அளிப்பு இன்மையால், உண்மையான வருமானத்தைவிடப் பண வருமானம் உயருகிறது. அதாவது, அரசாங்கம் முன்னேற்றத் திட்டங்களில் முதலில் செய்யும் செலவு, உற்பத்தியை அன்றி விலைகளைத்தான் பாதிக்கிறது. மேலும், தொழில்மயமாக்கு வதையே முக்கியமாகக் கொள்வதால், கச்சாப் பொருள்களின் அளிப்புப் போதிய அளவு அதிகரித்தால்தான், விலை மாறுமல் பொருளாதார வளர்ச்சி ஏற்படக்கூடும். இல்லாவிட்டால், முதன்மையான பொருள்களில் பற்றுக்குறை இருக்கும்போது, பொருளாதார அமைப்பில் மொத்த விலைகள் உயரும். இறுதிப் பொருள்களை உற்பத்தி செய்பவர்கள், செலவு உயர்வதற்கேற்பத் தங்கள் பொருள்களின் விலைகளை உயர்த்துகிறார்கள். இதனால் வாழ்க்கைச் செலவு உயருகிறது; கூலிபெறுவோர் அதிகக் கூலி கேட்கிறார்கள். இதனால் மேலும் உற்பத்திச் செலவுகள் உயரு கின்றன; மற்றப் பணவருமானங்களும் அதிகரிக்கின்றன. இதன் விளைவு பரிபூரணப் பணவீக்கமே.

மூன்றுவதாக, வளர்ச்சி குன்றிய நாடுகளில் முன்னேற்றத் திட்டங்கள் துய்ப்புப் பண்டங்களின் உற்பத்தியை அன்றி, முதற் கருவிப் பொருள்கள் (Capital goods) அல்லது உற்பத்தியாளர் களின் பொருள்களை உற்பத்தி செய்வதிலேயே அதிக நாட்டம் ஏற்படுகிறது.[1] ஆகவே, அரசாங்கம் அதிகம் செலவு செய்வதால் மக்களின் பணவருமானம் உயர, அதே சமயத்தில் அதிக வாங்குந் திறனுல் துய்ப்புப் பொருள்களுக்கு உண்டாகிய அதிகத் தேவைக் கேற்ப அப் பொருள்கள் கிடைக்காமலிருப்பது பொது விலை யளவை உயர்த்துவதற்கு உதவுகிறது.

நான்காவதாக, முதலீடு செய்யக்கூடியவர்கள் கையில் வருமானம் கிடைப்பதற்கு ஓரளவு பணவீக்கம் இருக்கவேண்டும் என்று சிலர் சொல்வார்கள். அப்படியானுல், வளர்ச்சியடைந்த நாடுகளைவிட வளர்ச்சி குன்றிய நாடுகளில் இப்படி வருமானம் கைமாறுவதற்கு அதிக அளவு பணவீக்கம் இருக்கவேண்டும். விலையேற்றம் உண்டாயிருக்கும்போது, லாபம் சம்பாதிப்போரும் கூலி சம்பாதிப்போரும், பணத்தைச் சேமிப்பதிலும் பொருள் களைத் துய்ப்பதிலும் கொண்டுள்ள விருப்பத்தைப் பொறுத்து தான் வருமானம் கைமாறும் அளவும் இருக்கும். லாபத்தில்

1 'The Colombo Plan', The Second Annual Report of the Consultative Committee on Economic Development in South and South East Asia, New Delhi, Oct. 1953, p. 96.

சேமிக்கவேண்டும் என்ற இறுதி விருப்பம் அதிகமாக இருந்தால், விலையேற்றமும் அதற்குத் தகுந்தபடி குறைவாயிருக்கும். வளர்ச்சியடைந்த நாடுகளைப்போல, வளர்ச்சிகுன்றிய நாடுகளில் தொழில் செய்வோர் லாபத்தில் சேமிக்கவேண்டுமென்ற இறுதி விருப்பம் உடையவர்களாயிருப்பார்களா என்பது ஐயமே. மேலும், கூலி பெறுவோரிடமிருந்து லாபம் பெறுவோருக்குச் சாதனங்கள் கைமாறுவதால், மொத்த வருமானத்தில் கூலி வருமானமும் லாப வருமானமும் எவ்வளவு விகிதம் இருக்கிறது என்பதைப் பொறுத்து இப்படிக் கைமாறுவதும் இருக்கும். வளர்ச்சியடைந்த நாடுகளைவிட வளர்ச்சி குன்றிய நாடுகளில் கூலிக்கும் லாபத்திற்கும் உள்ள விகிதம் மிகக் குன்றவு. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் இங்கிலாந்திலும் முறையே இந்த விகிதம் 2·1 : 1, 2·3 : 1. அயர்லாந்திலும் சிலியிலும் இது 1 : 1 ; கென்யாவில் 0·6 : 1. இச் சாதன மாற்றம் செய்யப்படவேண்டிய அடிப்படை இடம் சிறியதாய் இருப்பதால், வளர்ச்சியடைந்த நாடுகளைவிட வளர்ச்சிகுன்றிய நாடுகளில் இச் சாதன மாற்றத்தைப் பெறுவதற்கு அதிக விலைகள் இருக்கவேண்டியது அவசியம்.

ஐந்தாவதாக, இந்த நாடுகளில் அரசாங்கச் செலவீட்டினால் உண்டாகக்கூடிய பணவீக்க நிலையைக் கட்டுப்படுத்துவதற்குரிய வழிகளும் திறமையாக இல்லை. பணவீக்கத்தைக் குறைக்கக்கூடிய துய்ப்புப் பொருள் தொழில்களின் அளவும், வெளிநாட்டுச் சாதனங்களும் குறைவாகவோ முற்றிலுமோ இல்லாமலிருக்கின்றன. ஆனால், அரசாங்கம் அதிகம் செலவழிப்பதால் உண்டாகும் வருமான மிகுதியின் பெரும் பங்கைத் தானாகக் கிரகித்துக்கொள்ளக்கூடிய வரிவிதிப்பு முறையோ, திறமையான கட்டுப்பாட்டு அமைப்போ இல்லை.[1]

விரைவாகப் பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகளின் அரசாங்கங்கள் அதிகம் செலவழிக்கும் கொள்கையை மேற்கொண்டிருக்கும்போது, பணவீக்கத்தை உண்மையில் அபாயமாக மாற்றக்கூடிய காரணங்கள் இவையே. இந்த நிலையில் இந்தியாவிற்கு இவற்றின் முக்கியத்துவம் எளிதில் விளங்கும். ஆனால், இவை ஒருபுறமிருக்க, சேமநல அரசைத் தாபிப்பதையும் இந்த இலட்சியத்திற்கேற்பத் தன் முன்னேற்றக் கொள்கையை உருவாக்குவதையும் இந்தியா தன் நோக்கங்களாகக் கொண்டிருப்பதால், பணவீக்க அபாயம் அதைக் குறிப்பாக எதிர்நோக்கியிருக்கிறது. சேமநல அரசு சாதாரணமாக மேற்கொள்ளக்

[1] U. N. ' Survey of Current Inflationary and Deflationary Tendencies,' 1947, p. 5.

கூடிய சமூக நடவடிக்கைகள், பணவீக்க ஆற்றலைத் தம்மிடம் மிகுதியாகக் கொண்டிருக்கின்றன. இவை என்னவென்றால், முழு வேலையளிப்பு, குறைந்த வேலைநேரம், ஊதியத்துடன் விடுமுறை நாட்கள், அதிகக் கூலி கொடுத்தல், சமூகப் பணிகளுக்கு அதிகம் செலவழித்தல் முதலியன. இவற்றில் சிலவேனும், உற்பத்திச் செலவை அதிகரித்து விலைகளை உயர்த்தும் தன்மையுடையவை. சேமநல அரசில் உள்ள குறிப்பான அபாயம் என்னவென்றால், அரசாங்கத்தின் சமூக, பொருளாதார நடவடிக்கைகளால் நடுத்தர, கீழ்த்தர வருமானமுடையவர்களே மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இவர்களுக்காகத்தான் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆனால், இவர்கள்தாம் பணவீக்க விலைப்போக்கை எதிர்த்துத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியாதவர்களாயிருக்கிறார்கள்.

நன்கு வளர்ச்சியடைந்த நாடுகளைவிட வளர்ச்சி குன்றிய நாடுகளில்தான் பணவீக்க வாய்ப்புகள் அதிகம் என்பதோடு, முற்கூறிய நாடுகளைவிடப் பிற்கூறிய நாடுகளில் அவற்றின் விளைவுகளும் மிகக் கடுமையாக இருக்கும். இவ்விருவகை நாடுகளையும் பாதிக்கும் முற்கூறப்பட்ட பொதுவான திமைகள்மட்டுமன்றி, வளர்ச்சியடையாத நாடுகள் பணவீக்கத்தினால் உண்டாகக்கூடிய ஒரு பெரிய அபாயத்தைப்பற்றிக் குறிப்பாக விழிப்புடன் இருக்கவேண்டும். அது என்னவென்றால், முதல் திரட்சி (capital accumulation) உண்டாகாமலிருக்கக்கூடிய அபாயம்தான். இந்த நாடுகளில் முதல் ஆக்கத்தின் அவசியத்தைப்பற்றி மிகுதியாகக் கூறவேண்டியதில்லை. பின்தங்கிய பொருளாதார அமைப்புகளில் உள்நாட்டில் மூலதனம் கிடைக்கக்கூடிய முக்கியமான வழிகளில் ஒன்றைப் பணவீக்கமானது அடைத்துவிடுகிறது. ஏனெனின், சிறுதொகை முதலீடு செய்பவர்களை அது குறிப்பாகத் தாக்குகிறது. மேலும், பணவீக்கமானது வெவ்வேறு தொழில்களில் கிடைக்கும் லாபத்திற்கு இடையூறாக இருக்கிறது. ஊகத் தொழில்களிலும், தங்கத்தைப் பதுக்குவதிலும், அந்நியச் செலாவணியிலும் அதிக மூலதனத்தைப் போடுமாறு அது மக்களைத் தூண்டுகிறது. வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு மிகவும் முக்கியமான அந்நிய முதலீட்டையும் அது தடுக்கிறது.[1]

[1] U.N. Department of Economic Affairs, 'Measures for the Economic Development of Under-developed Countries,' May 1951, p. 42.

2. போர்க்கால விலைப்போக்குகள், 1939-45

இரண்டாவது உலகப் போருக்குமுன் விலைகளின் நிலைமை

1930-40-ன் முதற்பாதியில் தோன்றிய பெரிய மந்தத்தை அடுத்த சில ஆண்டுகளில், சர்வதேச விலைகளின் போக்கில் ஒரு பொதுவான ஒருபடித்தான தன்மை காணப்படுகிறது. 1932-க்குப் பிறகு பன்னாட்டு வியாபாரத்தில் ஒரு முக்கியமான பொருளாதாரப் புத்துயிர்ப்பு உண்டாயிற்று. அதன் அம்சங்களாவன: பொதுவான விலையேற்றம், அதிக வேலையளிப்பு, அதிக உற்பத்தி, வேகவளர்ச்சிப் போக்கு என்னும் இவையே. 1937-38-ல் இந்த ஏறுமுகப் போக்கிற்கு ஒரு தடை ஏற்பட்டது. உலகில் அது அநேகமாக எல்லா நாடுகளையும் பாதித்தது. ஜப்பான்மட்டும் இதற்கு விதிவிலக்காக இருந்தது. ஏனெனில், அங்குச் சீனப்போரினால் உண்டான அவசர நிலை ஒரு தனிப்போக்குடையதாயிருந்தது எனினும், 1938-ன் பிற்பாதியில் புத்துயிர்ப்பின் அறிகுறிகள் காணப்பட்டன. ஆனால், அப்போது பன்னாட்டு உறவு பாதகமாக மாறியதால், அரசியலிலும் தொழிலிலும் நம்பிக்கை இழக்குமாறு செய்தது. இதன் விளைவாகப் பன்னாட்டுப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அதனுடைய சிறப்பான அம்சங்கள் விலை வீழ்ச்சி, தொழில் உற்பத்தியில் குறைவு, வேலை அளவில் குறைவு, பங்கு மார்க்கெட்டில் விலையிறக்கம், நாணயமாற்று விகிதத்தில் அதிக ஏற்ற இறக்கங்கள் ஆகியவை. 1939 செப்டெம்பரில், போர் தொடங்குவதற்குச் சற்று முன்பு, இப் போக்குகள் மாறிப் பொதுவாகத் தொழிலில் நம்பிக்கையும் அதிகப் பொருளாதார நடவடிக்கைகளும் தோன்றின.

இந்தியா நெருங்கிய வாணிக உறவு கொண்டுள்ள இரண்டு முதன்மையான நாடுகளில் இப் பொதுவான போக்குக் காணப்படுகிறது. 1937-38-ன் பின்னிறக்கத்திற்குப் பிறகு அமெரிக்க ஐக்கிய நாடுகளில், 1938-ன் பிற்பாதியில் மறுமலர்ச்சி காணப்பட்டது. 1938 மேயில் 76 ஆக இருந்த தொழில் உற்பத்தியில்

குறியீட்டெண் அவ்வாண்டின், இறுதி மாதத்தில் 104 ஆக உயர்ந்தது (1923 — 25 = 100). அதே ஆண்டில் வேலையளிப்புத் தொகையில் 4·5 சதவீதம் உயர்வு காணப்பட்டது. எனினும், தொழிற் பங்குச் சீட்டுகள் 1938 நவம்பர்வரை உயர்ந்து, டிசம்பரில் இறங்கிவிட்டன. இது பொதுவான விலையளவையும் குறிக்கும். இங்கிலாந்தில் தொழில் நடவடிக்கையின் குறியீட்டெண் (1935 = 100); 1938 மேயில் 102 ஆக இருந்தது, 1939 மார்ச்சில் 105·5 வரை சென்றது. தொழில் உற்பத்தியிலும் அதேசமயத்தில் முன்னேற்றம் இருந்தது. ஆனால், மொத்த விலைகள் படிப்படியாக மெதுவாக இறங்கின. அதனோடு, இங்கிலாந்தின் வெளிநாட்டு வியாபாரமும் பாதிக்கப்பட்டது. வாணிபச் சரக்குகளின் ஏற்று மதியும் இறக்குமதியும் 1938-ல் 10 சதவீதம் குறைந்தன. ஆனால், 1939-ன் முதல் பாதியில், சர்வதேச நிலை மோசமாகிவந்ததால் உண்டான போர்க்கருவிப் பெருக்கத் திட்டம், அந் நாட்டின் சில தொழில்கள் புத்துயிர் பெறுவதற்கு உதவியது. இரும்பு, எஃகு உற்பத்தி முன்னேறியது. சில தொழிற் பங்குச் சீட்டுகள் உயர்ந்தன. மொத்தத்தில் தொழிற் போக்கு முன்னேற்றத்தைக் காட்டிற்று.

இந்தியாவானது மூலப்பொருள் உற்பத்தி நாடாகையால், வெளிநாடுகளிலிருந்து உண்டான கச்சாப் பொருள் தேவை குறைந்தபோது கடுமையாகப் பாதிக்கப்பட்டது. ஏப்ரல் 1937-க்கும் ஏப்ரல் 1938-க்கும் இடையில், அமெரிக்க ஐக்கிய நாடுகளைவிட இந்தியாவில் விலை இறக்கம் அதிகமாயிருந்தது; இங்கிலாந்தைவிட மேலும் அதிகமாக இருந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 10 சதவீதமும், இங்கிலாந்தில் 7·4 சதவீதமும், இந்தியாவில் 10·5 சதவீதமுமாக விலை இறக்கம் இருந்தது. 1938–39-ல் மொத்த விலைகளின் குறியீட்டெண் முன்னேறியிருந்தாலும், 1939-ன் முதல் மூன்று மாதங்களின் இறுதிப் பகுதியில் இறங்குமுகம் உண்டாயிற்று. கல்கத்தா மொத்த விலைக் குறியீட்டெண் (ஜூலை 1914 = 100) 1938 மார்ச்சில் 67-லிருந்து 1939 பிப்ரவரியில் 69 ஆக உயர்ந்தது; ஆனால், அடுத்த மாதம் 68 ஆக இறங்கியது. ஏறக்குறைய இதுபோலவே பம்பாய்க் குறியீட்டெண்ணிலும் காணப்படுகிறது. மேலும், சர்வதேச அரசியல் நிலையில் சங்கடம் அதிகரித்த காரணத்தினால், முக்கிய ஏற்றுமதிச் சரக்குகளின் விலைகளில் உண்டான திடீர் ஏற்ற இறக்கங்களை, மொத்த விலைக் குறையீட்டெண்களில் காணப்படும் இப் போக்குக் காட்டவில்லை. 1938 மார்ச்சுக்கும் 1939 மார்ச்சுக்கும் இடையில், கச்சாப் பருத்தி, பருத்திச் செய்பொருள்கள், எண்ணெய் விதைகள், தேயிலை, பச்சைத் தோல்கள், பதனிடப்பட்ட தோல்கள் ஆகியவற்றின்

விலைக் குறியீட்டெண்கள் 6 முதல் 11 சதவீதம்வரை குறைந்தன. ஆனால், தானியங்கள், சர்க்கரை, சணல் (கச்சாவும் பொறிவழி தயாரிக்கப்பட்டதும்) குறிப்பிடத்தகுந்த அளவுக்கு விலை ஏறின.

ஆகவே, மற்ற நாடுகளில் போலவே இந்தியாவிலும் போர் தொடங்குவதற்குச் சற்றுமுன்பு விலைகள் நிலையற்றிருந்தன. கெடுபிடியான சர்வதேச நிலையினால் உண்டான மனோபாவ அம்சத்தினாலேயே பெரும்பாலும் விலைகளில் ஏற்ற இறக்கங்கள் காணப்பட்டன. போர் தொடங்குவதற்கு முன்பே, போர்க் கருவிப் பெருக்கத் திட்டம் வேகமாக வளர்ந்ததால், இந்த நாடு களிலெல்லாம் சில தொழில்கள் புத்துயிர்பெறத் தொடங்கின என்பது குறிப்பிடத்தகுந்த ஒரு விஷயமாகும்.

போர்க்கால விலை இயக்கங்களின் வெவ்வேறு நிலைகள்

ஜப்பான் சரணடைந்து அமைதி திரும்பிய ஆகஸ்டு 1945-ல் இந்தியாவில்,[1] பொருளாதார ஆலோசகர் கூறியபடி மொத்த விலைகளின் குறியீட்டெண் 244·1. 1939-க்குப் பிறகு பொது விலையளவில் காணப்பட்ட இந்த 144 பாயின்டுகள் (points), இந்த ஆறுண்டுகளில் ஒரே மாதிரியாகப் பரவவில்லை. ஒவ்வோ ராண்டிலும் அதிகரிப்பு விகிதத்தில் மிகுந்த வேறுபாடுகள் இருந்தன. எனினும், போர்க்காலத்தில் விலைகளின் இயக்கத்தில் மூன்று வெவ்வேறு நிலைகளைத் தெளிவாகக் காணலாம். முதலாவது, 1939 செப்டம்பர்முதல் 1940 ஆகஸ்டுவரை இருந்த ஊகவாணிக ஏற்றமும் இறக்கமும், இந்தப் பன்னிரண்டு மாதங் களில், 1939 டிசம்பரில் பொதுக் குறியீட்டெண் 138·3 வரையில் சென்று, 1940 ஆகஸ்டில் 108·4-க்குத் திரும்பியது; இரண்டாவ தாக, 1940 ஆகஸ்டிலிருந்து 1943 ஜூன்வரையில் பொதுக் குறியீட்டெண் நிதானமாக ஏறிக்கொண்டு 241·7 ஐ அடைந்தது. மூன்றுவதாக, 1943 ஜூன்முதல் 1945 ஆகஸ்டில் போர் முடியும் வரையில் ஓரளவு நிலையாக இருந்தது.

(4) ஊகவாணிக ஏற்றமும் இறக்கமும் (1939 செப்டம்பர்முதல் 1940 ஆகஸ்டுவரை)

இந்தியாவில், 1914–18 உலகப் போரிலும் 1939–45 உலகப் போரிலும் இருந்த விலையளவுப் போக்கில் வேறுபாடு இருக்கிறது. பொதுவாக முதல் உலகப் போரில், முதல் மூன்றுண்டுகளில் விலை ஏற்றம் நிதானமாக இருந்தது. போருக்கு முன்னிருந்த அளவுடன் ஒப்பிடும்போது, பண்ட விலைகளின் குறியீட்டெண், முதல் இரண்டாண்டுகளில் 12 பாயின்டுகளும், முதல் மூன்றுண்டு களில் 28 பாயின்டுகளும்தாம் ஏறியது. 1917-ல் போர் முடியும்

1 1939 ஆகஸ்டு 19ஆம் தேதியோடு முடிவடைந்த வாரம் = 100.

தறுவாயிலும், போர் முடிவு ஒப்பந்தத்தை அடுத்த சில ஆண்டு களிலும்தாம் கடுமையான பணவீக்க நெருக்கடி ஏற்பட்டது. இதற்கு மாறுக, இரண்டாவது உலகப் போரின்போது, சண்டை தொடங்கியவுடனேயே விலைக் குறியீட்டெண்ணில் திடீர் என்று ஏற்றம் உண்டாயிற்று. போரின் முதல் ஐந்து மாதங்களிலேயே விலைகளின் பொதுக் குறியீட்டெண் 38 பாயின்டுகள் ஏறியது. போரின் இரண்டாவது ஆண்டுக்குப் பிறகு பத்தாண்டுகளுக்கு மேல், விலையளவு ஏறிக்கொண்டேயிருந்தது; ஆனால், மேலேறும் போது அதிக ஏற்ற இறக்கங்கள் இருந்தன.

சண்டை தொடங்குவதற்கு முன்பே, சீர்கேடடைந்துவந்த சர்வதேச நிலையும், போருக்குச் செய்யப்பட்ட ஆயத்தங்களும் கச்சாப் பொருள்களுக்குரிய தேவையை அதிகரித்தன. அது உலக முழுவதிலும் கச்சாப் பொருள்களின் விலையில் ஏற்றத்தை உண்டாக்கியது. இந்தியாவில் மொத்த விலைகளின் குறியீட் டெண் (1873 = 100), 1938-ன் இரண்டாவது கால்பகுதியில் 131ஐ ஒட்டியிருந்தது. அது சண்டை தொடங்குவதற்கு நான்கு மாதங்கள் முன்பே, 1939 மேயில், திடீரென்று 137-க்கு உயர்ந்தது. இந்தத் திடீர் ஏற்றத்திற்குக் காரணம் கச்சாப் பொருள்களின் விலை உயர்வே. 1939-ல் முதல் ஆறு மாதங்களில் கச்சாப் பருத்தி யின் விலைக் குறியீட்டெண் 64-லிருந்து 71-க்கு உயர்ந்தது. பருத்தி உற்பத்திப் பொருள்கள் 1939 ஜனவரியில் 93-லிருந்து ஆகஸ்டில் 88-க்கு இறங்கின.

கச்சாப் பொருள்களில் உண்டான இந்த ஏற்றுமதி வீக்கம், போர் தொடங்குவதற்குச் சில மாதங்கள் முன்பு விலை ஏற்றத் திற்குக் காரணமாயிருந்தது; ஆனால், போர் தொடங்கியவுடன் திடீரென்று தடைப்பட்டது. தக்க சுமைகூலியும் இன்சூரன்சும் கிடைப்பது துன்பமாயிருந்ததால், கடல்கடந்த வாணிகம் தம்பித நிலையை அடைந்து, ஏற்றுமதியாளர்கள் அதிக நஷ்டம் அடைந் தனர். ஏனென்றால், அவர்கள் வாங்கிய பொருள்களை உள்ளூர் மார்க்கெட்டிலேயே நஷ்டத்திற்கு விற்கவேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டுவிட்டது. ஆனால், இது ஒரு தற்காலிக நிகழ்ச்சியே; பெரிய வெள்ளம்போன்ற ஊகவாணிகம் தோன்றியதால் இது மறைந்துவிட்டது. உண்மையில் பொருள்களைப் பதுக்கு வதற்காக உண்டாகிய இவ் ஊகத்தேவை கச்சாப் பொருள்கள், செய்பொருள்கள், இறக்குமதிப் பொருள்கள் முதலிய எல்லாப் பொருள்களையும் ஈர்த்துக்கொண்டது. இருப்புகளைச் சேகரிப் பதில் போட்டி தொடங்கியது. அதனால் விலைகள் விஷம்போல் ஏறின. இதற்குக் காரணம், தொழில் செய்வோரும் வியாபாரி களும் பொருளாதாரப் போர் தீவிரமானால், இந்தியத் தொழில்

கூலுக்கும் விவசாயத்திற்கும் நல்ல எதிர்காலம் உண்டாகும் என்று நம்பியதே. உற்பத்தி குறைந்து அல்லது வற்றிப்போய் தேவை அதிகரித்தால் எதிர்காலத்தில் அதிக இலாபம் சம்பாதிக்கலாம் என்ற நம்பிக்கையுடன்தான் பொருள்கள் பதுக்கிக் குவிக்கப்பட்டன. இதன் விளைவு, 1939 ஆகஸ்டில் 100·3 ஆகவிருந்த பொதுக் குறியீட்டெண் டிசம்பரில் 138·3 ஆக உயர்ந்ததிலிருந்து தெரியவரும். பண்டங்களின் விலைகளில் உண்டான இவ்வேற்றம் நாட்டில் எல்லா முக்கிய இடங்களிலும் காணப்பட்டது. சென்னையில் முக்கிய உணவுப் பொருளாகிய அரிசியின் விலை 10 முதல் 20 சதவீதம் உயர்ந்தது ; சர்க்கரையின் மொத்த விலை 30 சதவீதம் அதிகரித்தது; முக்கிய ஏற்றுமதிப் பொருள்களாகிய ஆமணக்கு, தேங்காய், கொப்பரை ஆகியவை 40 முதல் 50 சதவீதமும், தேங்காய் எண்ணெய் 64 சதவீதமும் ஏறின.

ஊகவாணிகத் தேவையினால் உண்டான விலையேற்றம் இந்தியாவில்மட்டுமன்றிப் பெரும்பாலான உலக நாடுகளிலும் பொதுவாக இருந்தது. இருப்பினும், இந்தியாவில் இந்தத் திடீர் விலையேற்றத்திற்கு ஒரு முக்கிய அம்சம் உண்டு. இந் நாட்டில் உணவுப் பொருள்கள், கச்சாப் பொருள்கள், செய்பொருள்கள், இறக்குமதிப் பொருள்கள், ஏற்றுமதிப் பொருள்கள் ஆகிய எல்லாவற்றிலுமே விலையேற்றம் காணப்பட்டது. அட்டவணை 1-ல் இதைக் காணலாம்.

அட்டவணையில் உள்ள எண்கள், சண்டை தொடங்கிய ஒரு மாதத்திற்கெல்லாம் உணவுப் பொருள்கள் 110-லிருந்து 121-க்கு ஏறின (பம்பாய்க் குறியீட்டெண்); அதாவது, 10 சதவீதம் உயர்ந்தன. கச்சாச் சணலும் பருத்தியும் முறையே 19 பாயின்டுகளும் 16 பாயின்டுகளும் அதிகம் பெற்றன (கல்கத்தா குறியீட்டெண்). சணல் செய்பொருள்களிலும் மற்றத் துணிவகைகளிலுங்கூட மிக அதிக விலையேற்றம் உண்டாயிற்று. பச்சைத் தோல், பதனிடப்பட்ட தோல், உலோகங்கள் ஆகிய ஏற்றுமதிப் பொருள்களும் இவ் விதிக்கு விலக்காகவில்லை.

இதற்கு மாறுக, இத்தகைய பொருளாதார வீக்கத்தைப் பெற்ற மற்றப் பல நாடுகளில் இவ் விலையேற்றம் பொதுவாக அன்றிக் கச்சாப் பொருள்களையே குறிப்பாகத் தாக்கியது. 1940 பிப்ரவரிக்குரிய சர்வதேசச் சங்க மாதாந்தரப் புள்ளி இயல் செய்தியின்படி (League of Nations Monthly Bulletin of Statistics), செய்பொருள்களின் விலையைவிட உலகத்தில் பெரும் பாலான மூலஉற்பத்திப் பொருள்களாகிய சோளம், ஆளிவிதை எண்ணெய், பருத்தி விதை எண்ணெய், பருத்தி, கச்சாப் பட்டு,



படம் 1. 1939—46-ல் மொத்த விலைகளின் குறியீட்டெண்கள். (அடிப்படை 1939 ஆகஸ்டு 19 = 100).

ரப்பர், மரம், பண்படாத பெட்ரோலியம், செம்பு, ஈயம், வெள்ளி முதலியவற்றின் விலைகள் மிக வேகமாக ஏறின. இதன் விளைவு என்னவென்றால், 1937-ல் கச்சாப் பொருள்களின் விலை வீழ்ந்ததிலிருந்து பல நாடுகளில் இந்த இரண்டுவகைப் பொருள்களின் விலைகளில் உள்ள வித்தியாசம் அதிகமாகிக்கொண்டே வந்து, 1939 முடிவுக்குள் மிகவும் குறைந்துவிட்டது.

அட்டவணை 1.

மொத்த விலைக் குறியீட்டெண்கள்

(அடிப்படை: ஜூலை 1914 = 100)

பொருள்கள்	கல்கத்தா		பம்பாய்	
	ஆகஸ்டு 1939	அக்டோபர் 1939	ஆகஸ்டு 1939	அக்டோபர் 1939
உணவுப் பொருள்கள் :				
தானியங்கள் ...	83	93	88	95
பருப்புகள் ...	96	104	95	108
உணவுத் தானியங்கள் ...	—	—	89	98
சர்க்கரை ...	162	161	136	158
தேயிலை ...	140	152	—	—
மற்ற உணவு ...	114	155	154	164
எல்லா உணவும் ...	—	—	110	121
கச்சாப் பொருள்களும் செய் பொருள்களும் :				
எண்ணெய் விதைகள் ...	101	107	95	98
கச்சாச் சணல் ...	57	76	—	—
கச்சாப் பருத்தி ...	64	79	67	76
சணல் செய்பொருள்கள் ...	79	126	—	—
பருத்திச் செய்பொருள்கள் ..	97	107	88	92
மற்றத் துணிவகைகள் ...	90	168	83	83
பச்சைத் தோலும் பதனிடப் பட்ட தோலும்	63	74	99	99
உலோகங்கள் ...	142	153	131	227
மற்றக் கச்சாப் பொருள்களும் செய்பொருள்களும்	93	103	120	130
தேக்குமரம் ...	121	123	—	—
உணவல்லாதவை எல்லாம் ...	—	—	99	122
எல்லாப் பொருள்களும் ...	***100***	***118***	***103***	***121***

1940-ன் முதல் மூன்று மாதங்கள் முடியும்போது, சண்டை தொடங்கியவுடன் உண்டான பொதுவான விலையேற்றம் பல

நாடுகளில்—குறிப்பாகக் கச்சாப் பொருள் உற்பத்தி நாடுகளாகிய தென் ஆஃப்ரிக்கா, ஆர்ஜென்டினா, கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகளில்—தடுக்கப்பட்டது; அல்லது பின்னிழுக்கப்பட்டது. இந்தியாவில், போர் தொடங்கிய முதல் மாதத்தில் விலையளவில் உண்டான திடீர் ஏற்றம், ஜூன் 1940-க்குள் அநேகமாகக் குறைந்துவிட்டது. இந்தியாவில் 1939 டிசம்பரில் விலை இயக்கத்தின் முதல் நிலையில் விலைகள் உச்ச அளவை அடைந்தன. அப்போது 1939 ஆகஸ்டில் இருந்ததைவிட அவை 38 பாயின்டுகள் அதிகமாயின. அதன் பிறகு இறங்குமுகம் உண்டாயிற்று. அரசாங்கப் பிரதிநிதிகள், மத்திய அரசாங்கங்களும் மாகாண அரசாங்கங்களும் எடுத்துக்கொண்ட விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கையும், 1940 ஜனவரி 27-ல் வெளியிடப்பட்ட அமித இலாப வரி மசோதாவும்தாம் இதற்குக் காரணம் என்று கூறினர். ஐயமின்றி, அரசாங்கம் விலைகளை அதிகமாகக் கட்டுப்படுத்தும் என்ற அச்சமும், அமித இலாப வரி அமலுக்கு வந்தால் அரசாங்கம் வியாபாரத்தில் கிடைக்கும் இலாபத்தில் பெரும்பகுதியைக் கைப்பற்றிவிடும் என்ற உண்மையுணர்வும், பொதுவாகத் தொழில் நடவடிக்கையில் உற்சாகத்தைக் குறைத்தன; விலைகள் கட்டுப்பாட்டை மீறிப் போகாமலும் தடுத்தன. எனினும், 1940-ன் முதற் பாதியில் விலைகள் இறங்கியதற்கு உண்மையான காரணங்கள், ஊகவாணிகப் பொருளாதார வீக்கத்திற்கு எதிராகத் தோன்றிய இயற்கையான எதிர்ப்பும், ஐரோப்பாவில் போர் முழுவேகத்தில் உண்டானதால் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களுமேயாகும். இந்த விலை இறக்கம், அதற்கு முன்பு நான்கு மாதங்களில் உண்டான ஏற்றத்திற்கு இணையாக அவ்வளவு அதிகமாக இருந்தது. முதலில் உண்டான விலையேற்றம் அளவு கடந்துவிட்டது என்ற ஒரு பொதுவான உணர்ச்சி உண்டாயிற்று. பதுக்கல் தேவையும் தெவிட்டும் நிலைக்கு வந்துவிட்டது. அது குறைந்தபோது மொத்தத் தேவையும் பாதிக்கப்பட்டது. சேர்த்துவைக்கப்பட்ட இருப்புகளில் பெரும்பகுதி வெளிவந்தபோது, மார்க்கெட்டில் பல பகுதிகளில் தற்காலிகமாக இருப்புத் தேக்கம் உண்டாயிற்று. அதனால் விலைகள் சரிந்தன. போர் தீவிரமடைந்தவுடன் இந்தியாவிற்கு இங்கிலாந்தைத் தவிர எல்லா வெளிநாட்டு மார்க்கெட்டுகளும் போய்விட்டதால், வியாபாரத்தில் நம்பிக்கை அதிகமாகப் பாதிக்கப்பட்டது. ஆகவே, 1940-ன் தொடக்கத்திலிருந்து, பண்டமார்க்கெட்டுகள் அடக்கமாகவே இருந்தன. மே மாதத்தில் நிலைமை மோசமடைந்தது. பங்கு மார்க்கெட்டுகளிலும் பண்டமார்க்கெட்டுகளிலும் பீதி உண்டாயிற்று. விற்பனை நெருக்கடியினால் விலைகள் வேகமாகக் குறைந்தன. 1940 ஜூனில் ஐரோப்பா

வில் உண்டான மாறுதலால், தொழில் உலகில் நிச்சயமற்ற நிலை தோன்றிப் பெரும்பாலான முக்கியப் பண்டங்களின் விலைகள் திடீரென்று இறங்குமுகம் கண்டன; சிலவற்றின் விலைகள் போருக்கு முன்னிருந்த நிலையை அடைந்தன. ஏற்றுமதிப் பொருள்கள்தாம் இயல்பாகப் பெரிதும் பாதிக்கப்பட்டன. ஆகவே, போரின் முதல் ஆறு மாதங்களில் கச்சாப் பருத்தியின் குறியீட்டெண் 130-லிருந்து 80-க்கு இறங்கியது; சணல் செய் பொருள்கள் 172-லிருந்து 94-க்கு வந்தன; கச்சாப் பருத்தி 1939 டிசம்பரில் 122 ஆக இருந்து, 1940 ஜூனில் 68-க்கு வந்தது; இதே காலத்தில் பருத்திச் செய்பொருள்கள் 16 பாயின்டுகள் வீழ்ந்தன; எண்ணெய் விதைகள் 126-லிருந்து 97-க்கு, அதாவது, 29 பாயின்டுகள் இறங்கின. அரசாங்கம் முதலில் எடுத்துக் கொண்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைவிட, ஊகவாணிகத் திற்கு ஏற்பட்ட எதிர்ப்பே விலை இறக்கத்திற்குக் காரண மாகும். ஏற்றுமதிப் பொருள்களின் விலையில் ஏற்பட்ட அதிகக் குறிப்பான வீழ்ச்சி, அந்நிய மார்க்கெட்டுகள் போய்விட்டதைக் காட்டுகிறது.

(ஆ) விலையேற்றக் காலம் (1940 ஆகஸ்டுமுதல் 1943 ஜூன் வரை)

ஊகவாணிகப் போக்கு ஓராண்டுக்குள் மறைந்துவிடினும், வேறு சில சக்திகள் நிலைத்திருந்தன. அவை 1940-ன் பிற் பாதியில் வேலைசெய்யத் தொடங்கின. இவை முக்கியமாகப் போர்க்காலத் தன்மையுடையவை. இவை 1943-ன் நடுப் பகுதிவரையில் நீடித்திருந்த ஏறுமுகப் போக்கை உண்டாக்கின. பொதுவாக ஏறுமுகம் இருந்தபோதிலும், ஏற்றம் நிதான மாகவோ தொடர்ச்சியாகவோ இல்லை. மெதுவாக ஏறும் காலங்களும், அவற்றைத் தொடர்ந்து விரைவாக ஏறும் காலங் களும் இருந்தன. அதிகரிப்பு விகிதத்தின் அடிப்படையில், இந்த மூன்றுண்டுக் காலத்தில் நான்கு வெவ்வேறு கட்டங்கள் இருந்ததை அறியலாம். 1940 ஆகஸ்டுக்கும், 1941 ஏப்ரலுக்கும் இடையில் உயர்வு மெதுவாக இருந்தது. அப்போது பொதுக் குறியீட்டெண் 108·4-லிருந்து 116·4-க்குச் சென்றது. இவ் விரண்டு காலங்களுக்கும் இடையில் விவசாயப் பண்டங்கள் மொத்தத்தில் மந்தமாயிருந்தன; ஆனால், ஏற்ற இறக்கங்கள் அதிகமாயிருந்தன; 1941 பிப்ரவரியில் மிகக் குறைந்த 94·5 அள வையும், 1940 செப்டம்பரில் மிக உயர்ந்த 107·1 அளவையும் எட்டின. இதற்கு மாறாக, தொழில் சம்பந்தமான கச்சாப்பொருள் களும் செய்பொருள்களும் ஒரே நிதானமாக ஏறுமுகம் கண்டன. 1941 ஏப்ரலுக்கும் ஆகஸ்டுக்கும் இடையில் எல்லா வகைகளும்

மேலேறின; ஆனால், அதுகாறும் பொதுக் குறியீட்டெண்ணுக்குக் கீழே இருந்த விவசாயப் பண்டங்கள், 1941 ஏப்ரலில் 103·2 ஆக இருந்து, ஆகஸ்டில் 152·7-க்கு உயர்ந்தன. இந்த ஐந்து மாதக் குறுகிய காலத்தில் 48 சதவீதம் உயர்வு கண்டது. 1941 டிசம்பரில் எல்லா வகைகளும் திடீரென்று இறங்கி, மூன்றாவது கட்டத்தில் (1941 டிசம்பர்—1942 ஏப்ரல்) தொடர்ந்து ஏறத்தொடங்கின. ஆனால், அதிகரிப்பு வேகம் மிகவும் மந்தமாயிருந்தது. 1942 ஏப்ரல்முதல் 1943 ஜூன்வரையில், அதாவது, கடைசிக் கட்டத்தில் மீண்டும் அதிக ஏற்றம் காணப்பட்டது. இக் காலத்தில் செய்பொருள்கள் 59 சதவீதம் ஏறின; விவசாயப் பண்டங்கள் 67 சதவீதம் உயர்ந்தன. ஆனால், பொதுக் குறியீட்டெண் 145·9-லிருந்து 241·7-க்கு, அதாவது, 66 சதவீதம் உயர்ந்து சென்றது.

1940-ன் மத்தியிலிருந்து 1943-ன் மத்திவரையில் மூன்றாண்டுக் காலத்தில் விலையளவில் உண்டான ஏற்றம் மிகவும் முக்கியமானது. இந்த விலையேற்றத்திற்குக் காரணமான அம்சங்கள், நாட்டில் மிக அபாயமான பணவீக்கத்திற்கு வழி செய்தன. இருப்பினும், அப்போது நிலைமை எவ்வளவு அபாயமானது என்பது தெரியவில்லை. உண்மையில், தொழில் வகுப்பினர் விலையேற்றத்தை வரவேற்றனர். ஏனெனில், அது 1930–39-ன் மந்தத்தின்பிறகு ஒரு மறுமலர்ச்சியாக இருந்தது. இறக்குமதிகளின் குறைவினாலும், உள்நாட்டுக் கிராக்கியாலும், போரின் தேவையினாலும் வியாபாரிகள் அடைந்த நல்ல இலாபம் வரவேற்கப்பட்டது. போருக்குப்பிறகு வரும் துன்பமான புனரமைப்புக் காலத்தில் உற்பத்தி செய்வோருக்கும் வியாபாரிகளுக்கும் இந்த உபரி லாபம் உதவும் என்று அதற்கு நியாயமும் கூறப்பட்டது.[1] விலைப்போக்குகளைப்பற்றித் தொழிலுலகம் இத்தகைய கருத்துக்கொண்டிருந்ததால், ரிசர்வ் பாங்கு கவலைப் படாமல் இருந்தது வியப்பன்று. 1940–41-க்குரிய அறிக்கையில் அந்த பாங்கு, 'போர் தொடங்கியதுமுதல் விலைப்போக்குகளை ஒப்பிட்டுப் பார்த்ததில், இந்தியாவில் அளவுகடந்த அல்லது பணவீக்கத்திற்கு அறிகுறியான விலையேற்றப் போக்கு இருப்பதாகத் தெரியவில்லை. குறியீட்டெண்கள் காட்டும் ஏற்றம், போரினால் உற்பத்திக்கும் வாணிகத்திற்கும் உண்டான பொதுவான சமனறுநிலையையே (disequilibrium) காட்டுகிறது' என்று குறிப்பிடுகிறது.[2] அரசாங்கத்தின் கருத்தும் இவ்வாறே

1 'Commerce', 15th March 1941, p. 309.

2 'Report on Currency and Finance', 1940–41. p. 5.

இருந்தது. போர் தொடங்கியது முதல் 1942-ன் இறுதியில் வாழ்க்கைச் செலவு இருமடங்காகியும்[1] ஆலைகளிலும், தொழிற் சாலைகளிலும், அரசாங்க ஊழியத்திலும்கூட அதிகக் கூலியும் கிராக்கிப்படியும் வேண்டுமென்று பணியாட்கள் மிகவும் வற்புறுத்திவந்தும், 1940-ல் அத்தகைய படிகள் கொடுக்கப் பட்டுப் பின் ஆண்டுகளில் உயர்த்தப்பட்டுவந்திருப்பினும், அந்த நிலையின் பணவீக்க சக்தியைப்பற்றி அரசாங்கம் உணர்ந்ததாகத் தெரியவில்லை. காத்திருந்து பார்ப்போம் என்ற மனப் பான்மையுடன் அது இருந்தது. 1939 அக்டோபர்முதல் ஆண்டு தோறும் விலையளவைக் கட்டுப்படுத்திக் கூலிச் சம்பாத்தியமும் நிலையான வருமானமும் உடையவர்களுடைய துன்பத்தைப் போக்கும் நோக்கத்துடன் மாநாடுகள் கூட்டப்பட்டன. ஆனால், இந்த மாநாடுகளால் உருப்படியாக ஒன்றும் செய்யப்படவில்லை. விலைகளின் ஏறுமுகப் போக்குத் தொடர்ந்து இருந்தது.

உண்மையில் விலைகளின் இயக்கம் ஒழுங்கின்றி நிதான மற்று இருந்தது. ஆகையால் மக்களில் சில பிரிவினர் நன்மை யடைந்து, மற்றவர்கள் துன்புற்றனர். இந்த விலையேற்றக் காலம் முழுவதிலும் முதன்மையான பொருள்களைவிடச் செய்பொருள்கள் உயர்ந்த விலையளவிலேயே இருந்தன. இதற்குக் காரணம், போர் நிலைமை மோசமாகித் தூரக்கிழக்கிற்கும் அது பரவியதால், வெளி நாட்டுச் செய்பொருள் இறக்குமதி அநேகமாக நின்றுவிட்டது. மூலதனச் சாதனப் பற்றுக்குறையினாலும், வெளியிலிருந்து முதற் கருவிப் பொருள்களை இறக்குமதி செய்வது கடினமாகவோ முடியா மலோ இருந்ததாலும், உள்நாட்டில் அதிகரித்துவந்த திருப்தி செய்ய முடியாத துய்ப்புத் தேவையை இந்தியாவில் இருந்த உற்பத்தித் தொழிற்சாலைகள் சமாளிக்க முடியாமல் இருந்தன. மேலும், இரயிலிலும் பொதுப்போக்குவரத்துச் சாதனங்களிலும் உண்டான நெருக்கடியினால், உற்பத்தி செய்யப்பட்ட சிறி தளவு துய்ப்புப் பொருள்களையும் சரியாக விநியோகம் செய்ய முடி யாமல் இருந்தது. இதற்கு மாறாகக் கச்சாப் பொருள்களின் விலைகள் இதே அளவுக்கு ஏறவில்லை. ஏனெனில், போர்த்தேவை பெருகியிருந்துங்கூட, இப் பொருள்களைக் கடல்கடந்து அயல்நாடு களுக்கு எடுத்துச்செல்வது பெருந்துன்பமாக இருந்தது. ஆகவே, விவசாயிகள் நீண்ட காலம் பரிதாபமான நிலையில் இருந்தனர். இந்த நிலையின் பொது விளைவு என்னவென்றால், நாட்டில் பொரு ளாதார அமைப்பு முழுவதும் இந்த விலையேற்றத்தினால் நன்மை

[1] 1939 ஆகஸ்டுக்கும், 1942 டிசம்பருக்கும் இடையில் பம்பாயின் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் 105-லிருந்து 188-க்கு ஏறியது (1934=100); சென்னையில் 98-லிருந்து 158-க்கு உயர்ந்தது (1936=100); கான்பூரில் 100-லிருந்து 224-க்கு ஏறிற்று (ஆகஸ்டு 1939=100).

அடையவில்லை. பெரும்பாலும் முதன்மைப் பொருள்களை ஏற்று மதி செய்து, செய்பொருள்களை இறக்குமதி செய்துவந்த எல்லா விவசாய நாடுகளிலும், குறைந்த வளர்ச்சியுடைய நாடுகளிலும் இந்த நிலைமை பொதுவாகக் காணப்பட்டது. ஆர்ஜெண்டினாவில், போரின் இரண்டாவது மூன்றாவது ஆண்டுகளில், ஏற்றுமதியின் பெரும்பகுதியாகிய விவசாய உற்பத்திப் பொருள்களின் விலைகள் ஐரோப்பிய மார்க்கெட்டுகள் போய்விட்டதால் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. 1939 ஆகஸ்டுக்கும், 1941 ஜனவரிக்கும் இடையில் அவை 15 சதவீதம் இறங்கின; அதே சமயத்தில் விவசாயப் பொருள்கள் அல்லாதவை 28 சதவீதம் ஏறின. இதன் விளைவை இந்தப் பிரிவைச் சேர்ந்த நாடுகளில் இருந்த பாதகமான வாணிபக் கொடுப்பல் நிலையிலிருந்து அறியலாம்.

உற்பத்தியில் குறைவு ஒருபுறமிருக்க, 1941, 1942-ல் பொது விலையளவில் விலையேற்ற வேகத்தை நிர்ணயித்த முக்கிய மான காரணங்களில் ஒன்று பண அளிப்பின் பெருக்கமே. தொழிற் பகுதியில் குறிப்பாக உற்பத்தி குறைந்ததற்குக் காரணம், போக்கு வரத்துச் சங்கடங்களும் மூலதன அமைப்புக் குறைவுமே. 1939 ஆகஸ்டிற்கும் 1943 செப்டம்பருக்கும் இடையில் நம் நாட்டில் புழக்கத்தில் இந்தக் காகிதச் செலாவணி ரூ. 169 கோடியிலிருந்து ரூ. 760 கோடியாக, அதாவது, நான்கு மடங்குக்குமேல் அதிக மாயிற்று. ஷெடியூல் பாங்குகள், அல்லாதபாங்குகள் ஆகியவற்றின் நடப்பு வைப்புகள் ரூ. 141 கோடியிலிருந்து ரூ. 473 கோடியாக உயர்ந்தன. பல நாடுகளில் இத்தகைய பணப்பெருக்கம் மிகவும் சாதாரண அம்சமாக இருப்பினும், இந்தியாவில் இது அதிகரித்த வேகம் உச்சநிலையை அடைந்துவிட்டது என்பதை அட்டவணை-2 காட்டும்.

இந்தியாவில் செலாவணிப் பெருக்கம் உண்டாவது, இங்கு இங்கிலாந்து வாங்கும் பொருள்களுக்கு நிதியளிக்கும் முறையால் எளிதாயிற்று.[1] ரிசர்வ் பாங்கிலை கட்டவிழ்த்துவிடப்பட்ட புதிய வாங்குந்திறன், முதலில் அரசாங்கத்துடன் நேரடித் தொடர்புவைத்துக்கொண்டிருந்த இராணுவ ஒப்பந்தக்காரர்கள் கைக்கும், பிறர் கைக்கும் வந்து, போருக்கு நேரடியாகத் தேவைப்பட்ட பொருள்களின் விலையை முதலில் உயர்த்திற்று. பிறகு அத்தகைய பொருள்களுக்கு அதிக வாங்குந்திறன் வந்த தும், உணவுப் பொருள்களுக்கும் மற்றப் பொருள்களுக்கும் நிகரத் தேவை அதிகமாயிற்று. அதனால் பொதுவாக விலையளவு உயர்ந்தது. ஒவ்வொரு தடவை பொதுவாக விலையளவு உயர்ந்த

1 விவரங்களுக்கு அத்தியாயம் 5 பார்க்க.

போதும், அதே அளவு பொருள்களை வாங்குவதற்கு அரசாங்கம் அதிகப் பணத்தைச் செலாவணிக்கு விடவேண்டியதாயிற்று. ஆதலால், பணவீக்க நெருக்கடி ஒவ்வொரு முறையும் வேகமாக வளர்ந்து, உறைபனி திரள்வதுபோல விலைகள் ஏறின.

அட்டவணை 2.

1939 இறுதிக்கும், 1943-ன் முதல் மூன்று மாதங்களுக்கும் இடையில் காகிதச் செலாவணிப் புழக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு.

நாடு		உயர்வு சதவீதம்
சுவிட்சர்லாந்து	...	24
சுவீடன்	...	35
இங்கிலாந்து	...	67
ஜெர்மனி	...	106
அமெரிக்க ஐக்கிய நாடுகள்	...	114
ஆஸ்திரேலியா	...	118
பெல்ஜியம்	...	154
ஃபிரான்சு	...	163
இந்தியா	...	179
கனடா	...	209

(தகவல் : 'Commerce', 1943 செப்டம்பர் 18, பக். 408)

போரின் அவசரத்தினால் ஏற்பட்ட மிகுந்த தேவைகளைக் கருதியே பணப்பெருக்கம் உண்டாயிற்று என்பது தெளிவு. இந்தக் காலத்தில் பொருளாதார அமைப்பில் உண்டான பணவீக்க நெருக்கடிகளுக்குக் காரணம், இந்த அதிகத் தேவையும், உள்நாட்டு உற்பத்திக்கும் மக்கள் துய்ப்புக்கும் வேண்டிய பொருள்களின் பற்றுக்குறையுமே. எனினும், அரசாங்கமும் பண அதிகாரிகளும் இத் தேவையின் பொருளையும் பண அம்சங்களின் பொருளையும் உணரவில்லை என்பது வியப்பிற்குரியது. 1942-ன் மத்தியிலேயே ரிசர்வ் பாங்க் கவர்னர் சர் ஜேம்ஸ் டெய்லர் பணப் பெருக்கத்தினால் விலைகள் ஏறவில்லை என்றும், ஆனால், பணமல்லாத காரணங்களால் ஏறின என்றும் வாதாடினார். அக் காரணங்கள், மத்திய அரசாங்கத்தின் கட்டளைக்கேற்பமாகாண அரசாங்கங்கள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கத் தவறியதும், போக்குவரத்துத் துன்பங்களும், பிரிட்டிஷ் அரசாங்கம் அதிகப் பொருள்களை வாங்கியதும். அரசாங்கத்தின் சார்பில் சப்ளை இலாகா வாங்கிய பொருள்களுக்கு அது அதிக விலை கொடுத்ததும் ஆகும் என்று அவர் கூறினார். அதுபோலவே, 1943-44-க்குரிய வரவு

செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும்போது நிதிமந்திரி, செலாவணிப் பெருக்கத்தினால் அன்றிப் பற்றாக்குறையினாலும் பதுக்கலினாலுமே விலை உயர்வு உண்டாயிற்று என்றார்.[1] முடிவாக, இங்கிலாந்து அரசாங்கம் வாங்கிய பொருள்களுக்கு இந்திய அரசாங்கம் இங்கிலாந்திற்குச் சொத்துச் சாதனங்களைக் கடனாகக் கொடுத்தது என்பதுதான் அர்த்தம். இந்தக் கடனுக்கு ஈடாக நாட்டில் உண்மையான சேமிப்பு நடைபெறாமல், செலாவணிப் பெருக்கம் ஏற்பட்டதால், இந்த நிதி ஒப்பந்தத்தின் பணவீக்க ஆற்றல் மிகத் தெளிவாகத் தெரிகிறது. இந்தியாவில் இங்கிலாந்து அரசாங்கம் செலவு செய்ய நேர்ந்ததன் விளைவாக இந்த நாட்டில் அதிகப் பணவருமானம் உண்டாயிற்று. அதே சமயத்தில் அதனால் உள்நாட்டில் துய்ப்புக்கு வேண்டிய சாதனங்கள் வெளியேற்றப்பட்டன. சுருங்கக் கூறின், பண அளிப்புப் பெருகிய சமயத்தில் அதைச் சமாளிக்கக்கூடிய பொருள்களின் அளவு குறைந்ததால், உள்நாட்டில் பணத்திற்குள்ள தேவை குறைந்தது. இதன் தவிர்க்கமுடியாத விளைவு யாதெனின், பணத்தின் மதிப்புக் குறைந்ததே.

அதிகத் தேவையின் அறிகுறியாகவே அதிகப் பண அளிப்பு உண்டாயினும், பணம் அளவு கடந்து பெருகிவிட்டது என்பதை மறுக்கமுடியாது. 1942-ன் நடுவில் போர்ச்செய்தி பிரதிகூலமாக இருந்தபோதும், பம்பாய்ப் பங்கு மார்க்கெட்டின் நிலை உறுதியாயிருந்தது என்பதிலிருந்து, ஓரளவு செலாவணி ஓட்டம் பிடித்து விட்டது என்று அறியலாம். விரைவாக ஏறும் விலைகளும் பண்டங்களின் பற்றாக்குறையும் முதலுக்கு நஷ்டத்தை விளைவித்துவிட்டால், அதற்கெதிரான பாதுகாப்பாகப் பொதுமக்கள் பங்குகளையே உறுதியாக நம்பியிருந்தனர் என்பதை இது காட்டுகிறது.[2] பங்கு டெபாசிட்டுகளும் கர்கிதச் செலாவணியும் கூட அதிக விரைவாக அன்றி மந்தமாகப் புழங்கியதால், அதிகப் பணப்பெருக்கம் விலைகளை மிகுந்த அளவுக்குப் பாதிக்கவில்லை என்பதும் உண்மையே. ஆனால், அரசாங்கத்தின் நிதி நிலைமை தளர்ந்து அதனால் மக்கள் அரசாங்கத்திடம் நம்பிக்கை இழந்தால், கட்டுக்கடங்காத பணவீக்கம் உண்டாகிவிடும் என்ற ஓர் அபாயமும் இருந்தது.

பணப்பெருக்கமேயன்றி, இந்தக் காலப்பகுதியில் விலைகள் ஏறுவதற்கு வேறு காரணங்களும் இருந்தன. போரின் அடுத்த சில மாதங்களில் இருந்த ஊகவாணிக விலையேற்றம், போரினால்

[1] இந்திய அரசாங்கம், நிதி இலாகா, வரவுசெலவுத் திட்டம் 1943-44.

[2] League of Nations, 'World Economic Survey,' 1939–41, p. 111.

உண்டான விபரீத நிலையின் காரணமாக மாறியது. 1940-க்குப் பிறகு உண்டான ஏற்றமானது, அதிகத் தேவைக்கேற்ப இல்லாத குறைந்த பொருள் அளிப்பும், உள்நாட்டுத் தொழிலுற்பத்திக்கு வேண்டிய இறக்குமதிப் பொருள்களின் அதிக விலையும், அரசாங்கச் செலவீட்டில் படிப்படியான அதிகரிப்பும், போக்கு வரத்துச் சங்கடங்களும், சில சமயங்களில் உள்நாட்டு நிகழ்ச்சி களும் ஆகிய முக்கியக் காரணங்களால் ஏற்பட்டது. 1941-ன் நடுவில், பம்பாய், கல்கத்தா, சென்னைபோன்ற முக்கியமான இடங்களில் பல துய்ப்புப் பொருள்களின் விலையில் அதிக ஏற்றம் காணப்பட்டது. ஜப்பானின் போட்டி தவிர்க்கப்பட்டதாலும், பிரிட்டனிலிருந்து இறக்குமதி குறைந்ததாலும், இந்தியப் பொருள்களுக்கு அதிக ஏற்றுமதித் தேவை உண்டான தாலும் துணிகளின் விலைகள் பயங்கரமாக ஏறின. 1941 டிசம்பரில் தூரக்கிழக்கில் போர் உண்டானதும், வருடாந்தர விலைக் கட்டுப்பாட்டு மாநாடுகளில் விலைகளைக் கட்டுப் படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததும் 1942-ல் உண்டான திடீர் விலையேற்றத்திற்குக் காரணங்களாகும். கடைசியாக, அப்போது மறுபடியும் ஊகவாணிகம் தலை தூக்கியது. உணவுப் பொருள்களாகிய கோதுமை, அரிசி, தேயிலை போன்றவை ஊகவாணிகர்களால் பெரும் அளவில் பதுக்கப் பட்டன. இராணுவத்திற்குப் பொருள்களை மேலும் மேலும் அதிகமாக அளிக்கவேண்டிவந்ததால், நம் பொருளாதார அமைப்பு அந்த நெருக்கடியைத் தாங்கமுடியாமல், இப் போக்கு மேலும் வலுவடைந்து எல்லா வாணிகத் துறைகளிலும் பரவியது.

போர்க்கால விலைப்போக்குகளை ஆராய்வதில், 1940-ன் மத்தியிலிருந்து 1943-ன் மத்திவரை உள்ள மூன்றரை ஆண்டுக் காலம் மிக முக்கியமானது. ஏனெனில், 1940 ஆகஸ்டுமுதல் போர் முடியும் வரையில் உண்டான விலையேற்றத்தில் 98 சதவீதம் இக் காலத்தில் ஏற்பட்டதுதான். ஆகவே, இந்தக் காலத்தில் உண்டான விலையேற்றத்தை விரிவாகப் பரிசிலனை செய்வது முற்றிலும் பொருந்தும்.

ஒரு நாட்டில் பொதுக் குறியீட்டெண், விலைகள் இயங்கும் மாதிரியைப் பொதுவாகக் காட்டுகிறது என்பதை முதலில் குறிப்பிடவேண்டும். வெவ்வேறுவகைப் பொருள்களின் விலைகள் எப்படி எந்த அளவுக்கு வித்தியாசப்படுகின்றன என்பதையும், அவை எப்படிச் சில சமயங்களில் எதிரெதிர்த் திசைகளில் இயங்கு கின்றன என்பதையும் அது காட்டுவதில்லை. சாதாரணக் காலங் களில் இத்தகைய வித்தியாசங்கள் வியப்பளிப்பதில்லை. போர்க்

காலத்தின் விசேஷ சந்தர்ப்பங்களிலுல், அவை வெகு சாதாரண மாகவே தோன்றும். இந்த நிகழ்ச்சிக்குப் பல காரணங்கள் உண்டு. அவையாவன: வருமானப் பங்கீடு மாறுவதைப் பொறுத்துத் தேவையின் தன்மையும் மாறுகிறது;சில பொருள்கள் மற்றப் பொருள்களைவிடக் கிடைப்பது அரிதாகிறது; வெவ்வேறு பொருள்களுக்கு மார்க்கெட்டில் வெவ்வேறளவு போட்டி இருக்கிறது; அரசாங்கத்தின் தலையீட்டினலும், சர்வாதீனப் போக்குகளாலும், பழக்கத்தினலும் சில பொருள்களின் விலையில் நெகிழ்ச்சி இருப்பதில்லை. ஆகவே, பொதுக் குறியீட்டெண்களின் பொருளைப் புரிந்துகொள்வதற்கு, அவை எந்தப் பொருள்களின் விலைகளோடு தொடர்புடையவை, என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

37ஆம் பக்கத்தில் உள்ள வரைபடத்தைப் பார்த்தால், 1940 ஆகஸ்டுக்கும் 1941 மேயிக்கும் இடையில் பொதுக் குறியீட்டெண் சிறிதளவே உயர்ந்தது என்பதும், 1942 ஏப்ரலுக்கும் 1943 ஜூனுக்கும் இடையில் அதிகம் உயர்ந்தது என்பதும் தெரியும். முதல் காலப்பகுதியில் சிறிதளவு ஏறியதற்குக் காரணம், பொதுக் குறியீட்டெண்ணை இரண்டு சக்திகள் எதிர்த்திசைகளில் இழுத்ததே. இந்தக் காலம் முழுவதிலும் மற்றப் பொருள்களை விடச் செய்பொருள்களின் விலையும், தொழிற் கச்சாப் பொருள்களின் விலையும் மிகவும் உயர்ந்திருந்தன. இதற்கு மாறுக, உணவுப் பொருள்கள், முதன்மைப் பொருள்கள் ஆகியவற்றின் விலைகள் பொதுவாகத் தாழ்ந்திருந்தன. 1940 ஆகஸ்டுக்கும் 1941 மேயிக்கும் இடையில் பொதுக் குறியீட்டெண் 13·1 பாயின்டுகள்தான் ஏறியது. எனினும், அது அதிக ஏற்ற இறக்கங்களைக் கண்டது (குறிப்பாக 1941-ல்). அட்டவணை 3ஐக் காண்க.

அட்டவணை 3.

மொத்த விற்பனை விலைகளின் பொதுக் குறியீட்டெண், 1941

(பொருளாதார ஆலோசகர் தந்த குறியீட்டெண்)

ஜனவரி	...	114·8
பிப்ரவரி	...	111·1
மார்ச்சு	...	118·8
ஏப்ரல்	...	116·4
மே	...	121·5
ஜூன்	...	130·2
ஜூலை	...	140·9
ஆகஸ்டு	...	142·5

(ஆதாரம்: 'Monthly Survey of Business Conditions in India')

இதைவிட விவசாயப் பொருள்கள், கச்சாப் பொருள்கள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றில் உண்டான அதிக ஏற்ற இறக்கங்களின் சாயலாகவே இது உள்ளது. இவற்றுள், முதலில் உள்ளது மிக அதிக நிலையற்ற தன்மையைக் குறிக்கிறது. இதில் 1941 பிப்ரவரியில் 94·5 ஆக இருந்த அளவு அதே ஆண்டில் ஆகஸ்டு மாதத்தில் 152·7 ஆக மாறியது. உணவுப் பொருள்கள், கச்சாப் பொருள்கள் ஆகியவற்றின் குறியீட்டெண்கள் மிக அதிக அளவுக்கு ஏற்ற இறக்கங்களைக் கண்டன.

பொதுக் குறியீட்டெண்ணில் 1941 மேமுதல் ஆகஸ்டுவரை நான்கு மாதகாலத்தில் உண்டான திடீர் ஏற்றம், எல்லா வகைப் பொருளின் விலை இயக்கங்களுக்கும் ஒரு நல்ல மாதிரியாக விளங்குகிறது. எனினும், இந்தக் குறுகிய காலத்தில் விவசாயப் பொருள்கள், உணவுப் பொருள்கள், முதன்மைப் பொருள்கள் (முறையே 49 சதவீதம், 24 சதவீதம், 23 சதவீதம்) ஆகியவற்றின் விலையேற்ற விகிதம் செய்பொருள்களின் விலையேற்ற விகிதத்தையும் (22 சதவீதம்), தொழிற் கச்சாப் பொருள்களின் விலையேற்ற விகிதத்தையும்விட (14 சதவீதம்) அதிகமாக இருந்தது. 1942 ஏப்ரலுக்கும் 1943 ஜூலைக்கும் இடையில் எல்லாவகைப் பொருள்களும் அதிக ஏற்றத்தைக் கண்டன. ஆனால், செய்பொருள்கள், விவசாயப் பொருள்கள், உணவுப் பொருள்கள் ஆகியவை தொழிற் கச்சாப் பொருள்களையும் முதன்மைப் பொருள்களையும்விட மிக வேகமாக ஏறின. செய்பொருள்களின் ஏற்றம் மிக அதிகமாக இருந்ததற்குக் காரணம், போர் பரவியதால் இறக்குமதிகள் அநேகமாக நின்றுவிட்டதுதான். பர்மாவின் வீழ்ச்சி அரிசி விலையின் குறியீட்டெண்ணில் உடனே பிரதிபலித்தது. 1943 பிப்ரவரியில் 218 ஆக இருந்த அது, அடுத்த மாதத்தில் 496 ஆகத் தாவி, 1943 ஆகஸ்டில் 1,034ஐ எட்டியது.

(இ) ஓளவு நிலையான காலம் (1943 ஜூன்முதல் 1945 ஆகஸ்டு வரை)

போர்க்காலத்தில், 1943-ன் மத்தியிலிருந்து 1945 ஆகஸ்டு வரையில் விலை இயக்கத்தின் கடைசிக் கட்டத்தில் விலைகள் அதிக அளவு நிலையாக இருந்தன. ஆனால், இந்த விலையளவு மிகவும் உயர்ந்திருந்தது. 1943 ஜூனுக்கும் 1945 ஆகஸ்டுக்கும் இடையில் பொதுக்குறியீட்டெண் 2·4 பாயின்டுகளே அதிகமாயிற்று. ஆனால், இதற்கு முன்பு 27 மாதங்களில், அதாவது, 1941 ஏப்ரல் முதல் 1943 ஜூன்வரை, அது 116·7 பாயின்டுகள் அதிகமாயிற்று. 1940-ன் மத்தியிலிருந்து போர்க்காலம் முழுவதிலும் உண்டான மொத்த 135·7 பாயின்டுகளில், 1·8 சதவீதம் 26 மாதங்களில், 1943 ஜூன் முதல் 1945 ஆகஸ்டுவரை ஏற்பட்டது; 70 சதவீதம் 14 மாதங்

களில், 1942 ஏப்ரல்முதல் 1943 ஜூன்வரையில் ஏற்பட்டது. போரின் கடைசி இரண்டாண்டுகளில், மூன்று மாத முடிவில் இருந்த திருப்தியான விலை நிலைமையைக் கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது:

அட்டவணை 4

விலைக்குறியிட்டெண்கள் : மூன்று மாத முடிவில் விவரம்

		எல்லா முதன்மை யான பொருள்கள்	செய் பொருள்கள்	பொதுக் குறி யீட்டெண்	பம்பாய் வாழ்க்கை செலவு
1943–44	I	238·8	263·5	244·0	235
	II	237·5	252·3	240·6	245
	III	232·2	251·6	236·3	247
	IV	231·8	259·8	237·6	223
1944–45	I	240·1	260·1	244·3	236
	II	238·5	258·1	242·6	239
	III	247·8	257·8	250·0	236
	IV	246·8	252·8	248·1	225
1945–46	I	240·3	244·7	241·3	235
	II	243·8	243·1	243·6	240
	III	251·6	235·2	247·9	242
	IV	257·4	242·8	254·2	247

(ஆதாரம் : 'Report on Currency and Finance', 1945–56, p. 14)

மேலே காட்டிய அட்டவணையிலிருந்து இந்தக் காலத்தில் 1943-ன் கடைசி மூன்று மாதங்களில் பொதுக் குறியீட்டெண் மிகத் தாழ்ந்த நிலையை (236) அடைந்தது என்று அறியலாம். அதன் பிறகு அது 240-க்கும் 250-க்கும் இடையில் ஊசலாடிற்று. 1945-ன் மூன்றாவது கால்பகுதியில் 243·6-லேயே நின்றது. 1944-ன் முதல் கால்பகுதியில் முதன்மைப் பொருள்கள் மிகத் தாழ்ந்து (231·8), பிறகு சில ஏற்ற இறக்கங்களுடன் மெதுவாக உயர்ந்தது. ஆனால், செய்பொருள்கள் எதிர்த்திசையில் இயங்கின.

போரின் கடைசி இரண்டு மாதங்களில் உண்டான நிலையான விலையின் போக்கு, வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்ணில் பிரதிபலித்தது. 1944-ல் மொத்த விலைகள் 11·2 பாயின்டு

களுக்குள் வேறுபட்டன ; ஆனால், முன் வருடத்தில் இவ் வேறு பாடு 51·3 ஆக இருந்தது. இந்த நிலையான விலைகளுடன், நகரப் பகுதிகளில் உணவுப் பங்கீட்டு முறை கொண்டுவரப்பட்டதாலும், மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கங்களும் உணவுப் பொருள்களைக் கட்டாயக் கொள்முதல் செய்து பங்கீடு செய்வதை நன்கு மேற்பார்வை செய்ததாலும், உணவுக் குறியீட்டெண் ஓரளவு தாழ்ந்திருந்தது. நாட்டில் வெவ்வேறிடங்களில், இந்திய அரசாங்கத்தின் தொழில்துறை தயாரித்த வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்களும், தொகுதி தொகுதியாகப் பிரிக்கப்பட்ட சில்லறை விலைக் குறியீட்டெண்களும் துய்ப்புக்கு வேண்டிய உணவு. துணிபோன்ற பல முக்கியமான பண்டங்களின் விலைகள் இந்தக் காலத்தில் ஒரு வரம்புக்குள் வைக்கப்பட்டிருந்ததைத் தெளிவாகக் காட்டுகின்றன. போரின் முடிவில் இருந்த இந்தத் திருப்தியான விலைநிலைமை, அரசாங்கம் மேற்கொண்ட திறமை யான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளாலேயே பெரும்பாலும் உண்டாயிற்று.

மற்ற நாடுகளுடன் ஒப்புநோக்குதல்

போரின் இறுதிநிலையில் இருந்த விலைப்போக்கின் முக்கிய அம்சம் என்னவென்றால், அது பல நாடுகளில் பெரும்பாலும் ஒரே மாதிரியாகக் காணப்பட்டதே. 1943-ன் மத்தியிலிருந்து 1945-ல் போர் முடியும்வரை இருந்த விலைநிலைப்பு இந்தியாவிற்கு மட்டும் சிறப்பாக உரியதன்று ; உலகில் வெவ்வேறு அளவு பொருளாதார நிலைமையும், அரசியல் வளர்ச்சியும் அடைந்த பெரும்பாலான நாடுகளுக்கும் அது பொதுவாகக் காணப்பட்டது. போரில் நேரடியாக ஈடுபட்டிருந்த நாடுகளுக்கும், தீவிரமாக வளர்ந்துகொண்டுவந்த போரின் நேரடி விளைவுகளால் பாதிக்கப் படாமல் தப்பிய நடுநிலைமை நாடுகளுக்கும் இது பொருந்தும். இந்தியா, ஆர்ஜென்டினாபோன்ற சிறப்பான விவசாய நாடு களுக்கும், மிகவும் தொழில்மயமாக்கப்பட்டு வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் இது பொருந்தும். இந்த நாடுகளில் எல்லாம், போர் முடியும் தறுவாயில் விலைகள் ஒரு நிலைக்கு வரும் போக்கை அட்டவணை 5 காட்டுகிறது.

இங்கே காட்டப்பட்டுள்ள பதினாறு நாடுகளில், 1944-ல், முன் வருடத்தைவிட ஆறு நாடுகளில்மட்டும் மொத்த விற்பனை விலைகளின் அதிகரிப்பு விகிதம் உயர்ந்திருந்தது ; ஜப்பானில் மட்டும் 1944-ல் அதிகரிப்பு விகிதம் 1942-ல் இருந்ததைவிட உயர்ந்திருந்தது.

அட்டவணை 5

மொத்த விற்பனை விலைகள் : ஒவ்வொரு காலண்டர் ஆண்டிலும் சதவீத உயர்வு (+) அல்லது தாழ்வு (—)

நாடுகள்	1940	1941	1942	1943	1944
கனடா ...	+ 3	+ 11	+ 3	+ 6	0
சுவீடன் ...	+ 21	+ 12	+ 9	0	0
சுவிட்சர்லாந்து ...	+ 31	+ 21	+ 8	+ 2	0
இந்தியா ...	— 15	+ 29	+ 54	+ 27	0
அமெரிக்கா ...	+ 1	+ 17	+ 7	+ 2	+ 1
ஆஸ்திரேலியா ...	+ 12	+ 5	+ 12	+ 1	+ 1
நியூஸிலாந்து ...	+ 13	+ 9	+ 7	+ 6	+ 1
இங்கிலாந்து ...	+ 21	+ 5	+ 4	+ 1	+ 2
ஜெர்மனி ...	+ 3	+ 2	+ 2	+ 1	+ 2
டென்மார்க்கு ...	+ 34	+ 10	+ 2	+ 1	+ 2
பாலஸ்தீனம் ...	+ 25	+ 46	+ 34	+ 13	+ 3
ஆர்ஜென்டினா ...	0	+ 39	+ 13	+ 6	+ 6
ஸ்பெயின் ...	+ 17	+ 19	+ 12	+ 7	+ 8
போர்த்துகல் ...	+ 23	+ 10	+ 19	+ 22	+ 1
எகிப்து ...	+ 15	+ 29	+ 38	+ 17	+ 13
ஜப்பான் ...	0	+ 11	+ 3	+ 9	+ 14

(ஆதாரம் : 'Eastern Economist', 17th August 1945, p. 236).

எனினும், போரின் இறுதிநிலையில்தான் பல நாடுகளின் விலைப்போக்குகளில் ஒற்றுமை காணப்படுகிறது. உலகத்தின் முதன்மையான நாடுகள் எல்லாம் இராணுவ நடவடிக்கைகளுக்காகவும், போரைத் திறம்பட நடத்துவதற்காகத் தங்கள் உற்பத்திச் சக்தியை எல்லாம் ஒன்றுபடுத்துவதற்காகவும் அதிகச் செலவீடு செய்ததால், நடுநிலைமை நாடுகளிலுங்கூட அதன் விளைவுகள் கடுமையாக இருந்தது இயல்பே. ஆதலால், போர்க்காலத்திலும் அதற்குப் பிறகும், சண்டையில் நேரடியாகக் கலந்துகொண்டாலும் இல்லாவிட்டாலும், பல நாடுகளில் பணவீக்கநிலை ஏற்பட்டதில் வியப்பில்லை. ஆனால், உலகம் முழுவதிலும் பண்டங்களின் விலைகள் பொதுவாக உயர்ந்தாலும், இவ்வுயர்வின் அளவிலும், அது உண்டான நேரத்திலும் அதிக வேறுபாடுகள் இருந்தன. பல நாடுகளில் இருந்த தன்னிறைவின் அளவு, பணவீக்க நெருக்கடி, கட்டுப்பாட்டுத் திறமை முதலிய அம்சங்களைப் பொறுத்து அது இருந்தது. விலையுயர்வு அளவைப் பொறுத்துச் செய்யப்பட்ட பின்கண்ட வகையீடு, இந்த விஷயத்தில் பல்வேறு நாடுகளின் நிலையைக் காட்டுகிறது.[1]

1 'Eastern Economist,' the September 1945 ; p. 347.

1.	போர்க்காலத்தில் மொத்த விற்பனை விலைகளில் 50 சதவீதத்திற்குக் குறைந்த உயர்வு	அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, ஜெர்மனி
2.	50 முதல் 100 சதவீத உயர்வு	இங்கிலாந்து, ஜப்பான், நார்வே, சுவீடன், பெல்ஜியம், நெதர்லாந்து, மெக்ஸிகோ
3.	100 முதல் 250 சதவீதம் உயர்வு	ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, போர்த்துகல், ஆர்ஜென்டினா, சிலி, பெரு
4.	250 சதவீதத்திற்குமேல் உயர்வு	இந்தியா, மத்தியக் கிழக்கு நாடுகள்
5.	கட்டுக்கடங்காத பணவீக்கம்	சீனா, கிரீஸ்

இந்த நாடுகளில் செலாவணிப் பெருக்கம் ஏற்பட்ட அளவிற் கேற்ப விலை இயக்கங்களில் வித்தியாசம் உண்டாயிற்றென்று கூற முடியாது. அட்டவணை 6-ல் உள்ள விவரங்கள், செலாவணிப் பெருக்க அளவிற்கும் விலையளவு உயர்விற்கும் தொடர்பில்லை என்பதைக் காட்டும். கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் செலாவணித்தாள் புழக்கம் மிக அதிகமாயிருந்தது; ஆனால், விலையேற்றம் மிகக் குறைவாக இருந்தது. இதற்கு மாறாக, ஸ்பெயினிலும் சுவிட்சர்லாந்திலும் செலாவணிப் பெருக்கம் குறிப்பிடத்தகுந்ததாக இல்லை; ஆனால், விலையேற்றம் மிக அதிகமாக இருந்தது. இந்தியாவில்மட்டும் செலாவணித்தாள் புழக்கத்தின் அளவிற்கும் விலையளவிற்கும் தொடர்பு இருந்தது.

அன்றியும், பணவீக்கத்திற்கும் போரில் நேரடியாக ஈடுபட்ட தற்குங்கூட நெருங்கிய தொடர்பில்லை. ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் விலையுயர்வு, ஐரோப்பாவிலும் மத்தியக் கிழக்கிலும் நடுநிலைமையுடன் இருந்த நாடுகள் பல வற்றில் இருந்த உயர்வைவிட மிகவும் குறைவாக இருந்தது. பொதுவாகப் பின்வரும் குறிப்புகளைக் கூறலாம். முதலில், நல்ல திறமையான நிர்வாக அமைப்பு இருந்த நாடுகளிலும், அதிக அளவுப் பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகளிலும் பணவீக்க அளவு குறைவாயிருந்தது. அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா ஆகிய நாடுகளில், 1939-க்கும் 1945-க்கும் இடையில், பொது மொத்த விற்பனை விலையளவு முறையே 38 சதவீதம், 64 சதவீதம், 39 சதவீதம் உயர்ந்தது. அதேகாலத்தில் வாழ்க்கைச்

செலவு 28 சதவீதம், 29 சதவீதம், 19 சதவீதம் உயர்ந்தது. இதற்கு மாறுக, இந்தியாவில் பொது விலையளவு 99 சதவீதமும், வாழ்க்கைச் செலவு 117 சதவீதமும் உயர்ந்தன.[1]

இந்த நாடுகளில் எல்லாம், 1941 முடிவதற்கு முன்பே விலையளவில் பெரும்பகுதி உயர்ந்துவிட்டது. 1942 ஆரம்பத்திலிருந்து, உயர்வு நிதானமாகவும் படிப்படியாகவும் இருந்தது. இங்கிலாந்தில் 1939 ஆகஸ்டுக்கும் 1941 டிசம்பருக்கும் இடையில் பொதுக் குறியீட்டெண் 58 பாயின்டுகளைப் பெற்று உயர்ந்தது. ஆனால், 1942 ஜனவரிக்கும் 1945 டிசம்பருக்கும் இடையில் அது 14 பாயின்டுகள்தான் உயர்ந்தது. அதுபோலவே, அமெரிக்காவில், முதல் காலப்பிரிவில் உயர்வு 19 பாயின்டுகளும், இரண்டாவது காலப்பிரிவில் 11 பாயின்டுகளுமாக இருந்தது. கனடாவிற்கு இவை முறையே 22-ம் 10-ம் ஆகும். திறமையான நிர்வாக அமைப்பும், உயர்ந்த நாட்டு நல உணர்ச்சியும் எவ்வளவு தூரம் விலைகளைக் கட்டுப்படுத்திவைக்க முடியும் என்பது இங்கிலாந்தில் கட்டுப்பாட்டு முறைகள் வேலை செய்ததிலிருந்து விளங்கும். கூலிகளும் சம்பளங்களும் உயர்வதற்குத் தடைவிதிக்காத நிலையிலும், அதிக விவசாய உற்பத்திக்காக விவசாயிகளுக்கு அதிகக் கூலி கொடுக்கவேண்டியிருந்த நிலையிலும் அந்த நாட்டில் கூலி உயர்ந்துகொண்டே செல்வதற்குரிய சூழ்நிலை இருந்தது. எனினும், இங்கிலாந்தில், 1939-க்கும் 1945-க்கும் இடையில் உணவுப் பொருள்களின் சில்லறை விற்பனை விலை 21 சதவீதமும், வாழ்க்கைச் செலவு 29 சதவீதமும்தாம் உயர்ந்தன. மூன்று வழிகளால் இவ்வாறு செய்ய முடிந்தது அவை விலைகளை நேர்முறையில் கட்டுப்படுத்துதல், சமூகத்தின் தொழில் வருமானத்தில் பெரும்பங்கை வரிகள்மூலம் அரசாங்கத்திற்கு மாற்றுதல், சேமிப்பை ஊக்குதல் என்பன.

போர்க்கால விலைப்போக்குகளில் கவனிக்கத்தகுந்த மற்றோர் உண்மை என்னவெனில், கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் போதிய அளவு முன்னதாகவே மேற்கொள்ளப்பட்ட நாடுகளில் விலைகள் குறைவாகவும் நிதானமாகவும் இருந்தன. இங்கிலாந்தில் 1941-லேயே அடிப்படைப் பொருள்களின் விலை கட்டுப்பாடு செய்யப்பட்டது. ஜெர்மனியில் போர் தொடங்கியவுடனேயே, வாழ்க்கைச் செலவும் உணவுப் பொருள் விலைகளும் 112அளவிலே (1939 ஜூன் = 100) தாழ்த்திவைக்கப்பட்டன. விலைகள் குறிப்பிடத்தக்க அளவில் நிலைத்திருந்தன. ஆஸ்திரேலியாவில் போரின் முதல் நாளே விலைக்கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது.

1 பம்பாய் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் 105-லிருந்து 228-க்கு உயர்ந்தது.

அட்டவணை 6

புழக்கத்திலிருந்த செலாவணித்தாள்கள்

(நாடுகளின் செலாவணி அலகுகளில் 10 இலட்சக் கணக்கில்)

நாடு	1939	1945-ன் இறுதி	புழக்கத்திலிருந்த தாள்களின் குறியீட்டெண்கள் (1939 = 100)	செலாவணிப் பெருக்கத்திற்கேற்பத் தொகுதிகளாகப் பிரிக்கப்படுதல்
ஜப்பான் ...	3818	28456	745	250%-க்குமேல்
இந்தியா ...	2245	12109	953	
கனடா ...	233	1129	484	
ஃபிரான்ஸ் ...	151322	570006	377	
அமெரிக்கா ...	7598	28507	375	
ஆஸ்திரேலியா ...	57	200	351	
போர்த்துகல் ...	2494	7847	315	100 முதல் 250% வரை
துருக்கி ...	281	880	313	
சிலி ...	950	2657	280	
நார்வே ...	575	1478	257	
பெல்ஜியம் ...	27994	70376	251	
இங்கிலாந்து ...	555	1380	249	
ஆர்ஜெண்டினு ...	1191	2722	228	
சுவீடன் ...	1422	2782	196	50 முதல் 100% வரை
சுவிட்சர்லாந்து ...	2050	3835	187	
ஸ்பெயின் ...	10690	17947	168	
நெதர்லாந்து ...	1152	1713	149	50%-க்குக் குறைவு

(ஆதாரம் : 'Commerce,' 1st June 1946, p. 970).

இந்த நாடுகளில் எல்லாம் விலைகள் போர்க்கால முழுவதிலும் கட்டுப்படுத்திவைக்கப்பட்டன. கட்டுப்பாடு வெற்றியளித்ததற்கு, அது முன்னரே தொடங்கப்பட்டதுதான் காரணமாயிருந்திருக்கவேண்டும். ஆனால், அது ஓர் உறுதியான கட்டுப்பாட்டு அமைப்பை உண்டாக்கி, போர் முன்னேறும்போது, மற்ற நாடுகளைப்போல, விலைகள் தம் விருப்பம்போல் போவது தடுக்கப்பட்டது என்பதையும் மறுக்கமுடியாது.

கட்டுக்கடங்காத பணவீக்க நிலை உண்டாகியிருந்த சீனா, கிரீஸ் ஆகிய நாடுகள் தவிர, போர்க்காலத்தில் இந்தியாவும் மத்தியக் கிழக்கு நாடுகளும்தாம் மிக அதிக விலைகளைக் கண்டன. பொருளாதாரத்தில் வளர்ச்சி குன்றியிருந்ததோடு, போரின் போது அவை சில விசேஷ துன்பங்களுக்குமுள்ளாகியிருந்தன.

ஆகையால், வெற்றிகரமாக விலைக் கட்டுப்பாடு செய்வதற்கு அவை தடையாயிருந்தன. இந்த நாடுகள் போர் அரங்குகளாக மாறுவிடினும், அயல்நாட்டுப் படைகள் அங்கே நிறுத்தப் பட்டிருந்தன. ஆகையால், இறக்குமதிப் பொருள்களின் கடுமை யான கட்டுப்பாட்டு நிலையில், அவை அதிகத் தேவையைச் சமாளிக்கவேண்டியிருந்தன. வரிவிதிப்பு, அதிகச் சேமிப்பு ஆகிய வற்றின்மூலம், மக்களிடமிருந்த அதிக வாங்குந்திறனை உறிஞ்சு வதற்கு உதவக்கூடிய திறமையான நிருவாக அமைப்பு இல்லாததால், இந்த நாடுகள் கடுமையான விலை ஏற்றத்தினுல் துன்புற்றன. 1944-ன் மத்திக்குள், 1939-ல் இருந்த அளவைவிட வாழ்க்கைச் செலவு ஈராக்கில் 258 சதவீதமும், துருக்கியில் 342 சதவீதமும், லெபனனில் 407 சதவீதமும், ஈரானில் 746 சதவீதமும் உயர்ந்துவிட்டது. இதேகாலத்தில், இதேபோன்ற காரணங்களினுல், இந்தியாவில் விலைகள் இரண்டு மடங்குக்குமேல் ஏறிவிட்டன.[1]

3. போருக்குப்பின் விலைப்போக்குகள்

1945 ஆகஸ்டில் போர் முடிந்தபோது, இந் நாட்டில் பண வீக்கமும் பணச்சுருக்கமும் ஒருங்கே பரவியிருந்தன. அமைதி உண்டானதும் அரசாங்கச் செலவு குறையும் என்ற உறுதியும், வேலையளவு குறையக்கூடும் என்ற நிலையும், படைக்கலைப்பினாலும் துய்ப்போருக்கு அதிகப்பொருள்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கை யினாலும் வாங்குந்திறன் குறையக்கூடிய நிலையும் பணச்சுருக்கத் திற்குக் காரணமான அம்சங்களாகக் கருதப்பட்டன. இதற்கு மாறுக, போர் முடிந்தவுடன் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் அல்லது நீக்கிவிடுதல், அடங்கியிருந்த துய்ப்போர் தேவை பொங்கி யெழுதல், வரிச்சுமை எளிதாதல், பதுக்கிவைக்கப்பட்ட செலா வணி வெளிவருதல், எல்லாவற்றிற்கும் மேலாகப் போர் முடிந் தது என்ற நிம்மதியான மனநிலையில் சகஜமான சுகவாழ்க்கை அனுபவிக்கலாம் என்ற உணர்ச்சி ஆகியவை எதிர்த்திசையில் இயங்கக்கூடிய சக்திகளாகக் கருதப்பட்டன. 1945-ன் தொடக் கத்தில், போர் முடிந்தவுடன், இந்த மாறுன சக்திகள் வேலை செய்து, போருக்குப்பின் திடீரென்று விலைகள் ஏறுமலும் இறங் காமலும் இருக்கும் என்று தோன்றினும், நாட்டில் விஷயமறிந்த வர்கள், சிறிது காலத்திற்குப் பிறகாவது, போரின் பொருளாதார வீக்கத்தைத் தொடர்ந்து விலைகள் இறங்குமுகம் காணும் என்று கருதினர்.

இப்படி எதிர்பார்த்ததற்கு மாறுக, போருக்குப் பிறகு விலைகள் தொடர்ந்து உயர்ந்துகொண்டேவந்து, 1951 ஏப்ரலில் 457·5 ஆகிய உச்சநிலையை அடைந்தன. 1945 ஆகஸ்டுக்கும் 1951 ஏப்ரலுக்கும் இடையில் மொத்த விலைகள் போர்க்காலம் முழுவதிலும் பெற்ற 144·1 பாயின்டுகளைத் தாண்டி 213·4 பாயின்டுகள் அதிகம் பெற்றன. இது பொருளாதார ஆலோசகர் அளித்த பொதுக்குறியீட்டெண் விவரம் ஆகும். 1945 மத்தியி லிருந்து உண்டான உயர்வைவிட இந்த மொத்த அதிகரிப்பு மிகுதியாக இருப்பதுமட்டுமன்றி, ஏற்ற இறக்கங்களின் அளவும்

மிகுதியாக இருந்தது. 1942 ஜூலைக்கும் 1943 ஜூனுக்கும் இடையில்தான் போர்க்காலத்திலேயே மிக அதிகமான ஏற்ற இறக்கங்கள் உண்டாயின. அப்போது குறியீட்டெண் 159·9 பாயின்டுகளிலிருந்து 241·7 பாயின்டுகளுக்குச் சென்றுவிட்டது. இந்த வித்தியாசம் 81·8 பாயின்டுகள் ஆகும். இதற்கு மாறுக, போருக்குப் பிறகு 1947 ஆகஸ்டுக்கும் 1948 ஜூலைக்கும் இடையில் இந்த வித்தியாசம் 88·2 பாயின்டுகளாக இருந்தது; 1951 ஜூனுக்கும் 1952 மே மாதத்திற்கும் இடையில் 89·2 பாயின்டுகள் இருந்தது. அப்போது குறியீட்டெண் திடீரென்று 456·3-லிருந்து 367·1-க்குப் பின்சென்றது.

1945-லிருந்து பல காரணிகள் சேர்ந்து விலைகளை உயர்த்தி விட்டன. 1945 மேயில் போர் முடிந்தவுடன், விலையளவில் சிறிது இறங்குமுகம் உண்டாயிற்று. இதற்குக் காரணம், பெரும்பாலும் போரினால் விலைகள் உயர்ந்ததுபோல, அதன் முடிவும் விலைகளைக் கீழே இறக்கிவிடும் என்ற மனப்போக்குதான். இதன்பிறகு 1945 ஜூன்முதல் 1951-ன் இரண்டாம் கால்பகுதிவரை தொடர்ந்து ஏற்றம் உண்டாயிற்று. இந்த ஆறு வருடகாலத்தில் உண்டான பொது விலையுயர்வு மூன்று பணவீக்க நிகழ்ச்சிகளால் ஏற்பட்டது. போர் முடிந்தவுடன் உண்டான ஏற்றத்திற்குக் காரணம் பல கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டது அல்லது நீக்கப்பட்டதுதான். இது அடங்கியிருந்த துய்ப்புத் தேவையைப் பொங்கியெழச் செய்து பணவீக்க நெருக்கடியை உண்டாக்கி விட்டது. 1947-ல் நாடு பிரிக்கப்பட்டபிறகு அவ்வாண்டில் இறுதிவரை இந்த ஏறுமுகம் மிகவும் அதிகமாகி, 1948 ஜூலைவரை தொடர்ந்து இருந்தது. அப்போது மீண்டும் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டதால், விரைவாக விலையேறுவது தடுத்து நிறுத்தப்பட்டது. பதினான்கு மாதங்கள்வரையில் விலைகள் ஒரு நிலையில் நிறுத்தப்பட்டன. 1949 செப்டம்பர் 19-ல் ரூபாய் மதிப்பிறக்கம் செய்யப்பட்டவுடன், 1949-ன் கடைசிக் கால்பகுதியிலிருந்து விலையளவில் இரண்டாவது கட்டம் தொடங்கியது. எனினும், மதிப்பிறக்கத்தின் விளைவான விலையேற்றம் அதிகமாகவோ நீடித்தோ இருக்கவில்லை. 1950-ன் நடுவிலிருந்து 1951 ஏப்ரல்வரை மூன்றாவது கட்டத்தில் விலைகள் மிக விரைவாக உயர்ந்ததற்குக் காரணம், சிறிதும் சம்பந்தமில்லாத கொரியப் போர் ஆகும். 1945-ன் மத்தியிலிருந்து 1951 வரை இருந்த இந்த நீண்ட விலையேற்ற காலத்திற்குப்பிறகு, 1951-ன் மத்தியிலிருந்து ஒரு பின்னிறக்கக் காலம் உண்டாகி, 1952 மேயில் மிகத் தாழ்ந்த நிலையை அடைந்தது. அப்போது, ரூபாயின் மதிப்பிறக்கத்திற்குச் சற்று முன்பு இருந்ததைவிட மிகத் தாழ்ந்த நிலைக்கு,



படம் 2. மொத்த விலைகளின் குறியீட்டெண்கள், 1947–53
(அடிப்படை: 1939 ஆகஸ்டில் முடிந்த ஆண்டு = 100)

மொத்த விற்பனை விலைகளின் பொதுக் குறியீட்டெண் தாழ்ந்து விட்டது. 1952 மேயிலிருந்து தொடங்கிய மூன்றாவது காலப் பிரிவு, திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி சகாப்தத்தின் தொடக்கக் காலமாகையால், விலைகளின் மறுமலர்ச்சியுடன் ஆரம்பமாயிற்று. இந்த மறுமலர்ச்சியும் விலையேற்றமும், அரசாங்கம் வளர்ச்சித் திட்டங்களில் அதிகம் செலவு செய்ததால் ஏற்பட்டன. இக் காலத்தின் பிற்பகுதியில் விலையளவில் அதிக ஏற்றம் இருந்தது. 1945 முதல் இருந்த விலைப்போக்கின் மூன்று கட்டங்கள்—1951 வரை விலை ஏற்றம், 1951-ன் இரண்டாம் பாதியிலிருந்து 1953 முடிவுவரை பின்னிறக்கமும் மறுமலர்ச்சியும்—படம் 2-ல் விளக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் கடந்த 15 ஆண்டுகளில் இந்த வெவ்வேறு கட்டங்களில் இருந்த விலை இயக்கத்திற்கான காரணங்களை இனி விரிவாகப் பார்ப்போம்.

ஏறுமுகம்: 1945 ஆகஸ்டிலிருந்து 1951 ஏப்ரல்வரை

(a) கட்டுப்பாட்டு நீக்கமும் அதன் பிறகும்

ஐரோப்பாவில் போர் நின்றவுடனேயே, உலகில் பல நாடுகளில் விலை நிலைமை சீர்திருந்தியது. இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் 1945 ஜூலையில் விலைகள் உயர்ந்து பிறகு இறங்கிவிட்டன. மேல்நாடுகளில்போல இந்தியாவிலும் அனுகூலமான மாறுதல் உண்டாயிற்று. ஆனால், இது முற்றிலும் போர் முடிவினால் ஏற்பட்டது என்று கூறமுடியாது. 1945-ன் தொடக்கம்முதல் தோன்றிய ஒரு விடாப்பிடியான போக்கின் தொடர்ச்சியே. 1945 ஜனவரிக்கும், அதே ஆண்டு ஜூனுக்கும் இடையில் ஆறு மாத காலத்தில் பொதுக் குறியீட்டெண் சுமார் 13 பாயின்டுகள், அதாவது, 250·3-லிருந்து 237·4-க்கு வீழ்ச்சியடைந்தது. முன்பகுதியில் கூறியபடி, 1943 மத்திக்குள் ஏறுமுகப் போக்கு தடுத்து நிறுத்தப்பட்டது. அதுமுதல், பொது விலையளவில் வருடாந்தர உயர்வு விகிதம் குறைந்தது. 1943–44-ல் விலைகள் 38 சதவீதம் உயர்ந்தன; 1944–45-ல் உயர்வு விகிதம் 3 சதவீதத்திற்கு வந்தது; 1945–46-ல் 0·8 சதவீதமாயிற்று.

ஆனால், இந்த இறங்குமுகம் தற்காலிகமாகவே இருந்தது. 1945-ன் நடுவிலிருந்து விலையேற்றப் போக்கு தொடர்ந்தது. போர் முடியும் நிலையில் இருந்த நம்பிக்கைக்கு மாறுக இந் நிகழ்ச்சி இருந்தது. ஆனால், இவ் விஷயத்தில் இந்தியா மட்டும்தான் துன்பத்திற்குள்ளாகவில்லை. அமெரிக்கா, இங்கிலாந்து, ஃபிரான்சு முதலிய நாடுகளில் பணவீக்க அறிகுறிகள்

தெளிவாகத் தென்பட்டன. ஹங்கேரியிலும் கிரீஸிலும், முதல் உலகப் போரின் இறுதியில் ஜெர்மனி அடைந்ததுபோன்ற துன்பம் உண்டாவதற்கான கடுமையான அபாயநிலை ஏற்பட்டது. இவ் விலையேற்றத்திற்குக் காரணங்கள் நாட்டுக்கு நாடு வேறுபட்டன. அமெரிக்காவில் எளிய பணக்கொள்கையும் (cheap money policy), பாங்கு செலாவணிப் பெருக்கமும், கட்டுப்பாட்டு நீக்கமும் 1945 மத்தியில் 106 ஆக இருந்த பொதுக் குறியீட்டெண் 1948-ன் மூன்றாம் கால்பகுதியில் 169 ஆக உயருவதற்குக் காரணமாயிருந்தன. இங்கிலாந்தில், பண அளிப்பு மிகுதியும், பாங்கு டெபாசிட்டுகளின் பெருக்கமும், சேமிப்பு இயக்கத்தில் தயக்கமும் (இதுவே அந்நாட்டில் விலைக் கட்டுப்பாட்டு அமைப்பின் முக்கிய அடிப்படையாக இருந்தது), ஏற்றுமதிப் பெருக்கம், இறக்குமதிச் சுருக்கம் ஆகிய கொள்கையும் விலைகள் ஏறுவதற்கு உதவின. ஃபிரான்சில் பண அளிப்பில் திடீரென்று அதிகரிப்பு ஏற்பட்டது. கனடாவில், தேவை நெருக்கடி, பண இருப்புகள் பரவியிருந்தன. கச்சாப் பொருள் பற்றாக்குறை, உற்பத்திக் காரணிகளின் குறைவு, கட்டுப்பாட்டு நீக்கம் ஆகியவை விலையேற்றத்திற்குக் காரணமாயின. இத்தாலியில் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையும், அரசியலில் நிலையற்ற தன்மையும் காரணங்களாகவிருந்தன.

இந்தியாவைப் பொறுத்தமட்டில், அமைதியினால் உண்டாகக் கூடிய விளைவுகள் விலையிறக்கத்திற்கு உதவக்கூடும் என்ற நம்பிக்கை பொய்த்துப்போனதே விலையேற்றத்திற்குக் காரணமாயிற்று. இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவு குறைந்ததும், ரூ. 90 கோடி மதிப்புள்ள உபரிப் பொருள் விற்பனைக்கு இருந்ததும், ரிசர்வ் பாங்கின் வெளிநாட்டுச் சொத்துகள் குறைந்ததும், ரூபாயின் மதிப்பு அதிகமாக்கப் பட்டிருந்ததும், இறக்குமதி உபரிகளும், பணத்தின் வேகம் மேலும் வீழ்ச்சியடைந்ததும் பணவாட்டத்திற்குக் காரணமாக இருந்திருக்கவேண்டும்.[1] உண்மையில் இவை இவ்வாறு செயற்படவில்லை. ஏனெனில், பணவீக்க அம்சங்கள் மிகவும் வலிமையுடையவையாய் இருந்தன. 1945-ன் நடுவிலிருந்து 1948-ன் நடுவரையுள்ள மூன்றுண்டுக் குறுகிய காலத்தில், பணவீக்க நிலைமையை உண்டாக்கக்கூடிய பல அம்சங்கள்—இவற்றுள் ஒன்றுகூட விலையேற்றத்தை உண்டாக்குவதற்குப் போதுமானது—கூட்டாக முழு ஆற்றலுடன் செயற்பட்டன என்பது வியப்பிற்கு உரியது. போர் முடிந்தவுடன் பணவாட்டத்தை உண்டாக்கக்

1 1947-48-ல் இறக்குமதி உபரி ரூ. 37·58 கோடியும், 1948-49-ல் ரூ. 95·18 கோடியும் ஆகும்.

கூடிய நிகழ்ச்சிகளில் சில நடைபெறவே இல்லை. அவையாவன: முதலாவது, போர் முடிவு வேலையளவில் உடனே குறிப்பிடத்தக்க அளவுக்கு வீழ்ச்சியை உண்டாக்கவில்லை; அது சமூகத்தின் பெரும் பகுதியின் வருமானத்தையோ, வாங்குந் திறனையோ பாதிக்கவில்லை. 1945, 1946ஆம் ஆண்டுகளில் 13 இலட்சம் மக்களுக்குமேல் வெளியேற்றப்பட்டனர்; ஆனால், 1947 இராணுவக் கலைப்பு மிகவும் மந்தமாகிவிட்டது. இராணுவத்திலிருந்து வந்த மக்களில் மிகுதியானவர்கள் வேலைத் தகவல் நிலையத்தின் வாயிலாக வேறு வேலைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர். தொழிற்சாலைகளில் வேலை செய்துகொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை சிறிதே குறைந்தது. அதாவது, 1945-ல் இருந்த தினச் சராசரி 2·44 மிலியனிலிருந்து 1947-ல் 2·23 ஆகக் குறைந்தது. இது 9 சதவீதம்தான். வேலைபார்த்துவந்தவர்களில் இந்தச் சிறிய குறைவுக்கெதிராக, இப் பகுதியினருடைய மொத்தச் சம்பாத்தியம் உண்மையில் உயர்ந்துவிட்டது. இவர்களுடைய வருமானம்தான் விலைப்போக்கை நேரடியாகப் பாதிக்கக்கூடியது. மத்திய, மாகாணச் சம்பளக் குழுக்களின் பரிவுரைகளின்பேரில் வேலை செய்வோரின் சராசரிக் கூலிகளும் படிகளும் உயர்ந்ததுதான் இதற்குக் காரணம்.[1] தனிப்பட்ட முதலாளிகளும் இதேபோல அதிகக் கூலியும் படியும் கொடுத்தனர். இந்தச் சலுகைகளின் விளைவாக, 1947-ல் தொழிற்சாலையில் வேலை செய்வோரின் சராசரி ஆண்டு வருமானம், 1945-ல் இருந்ததைவிட 24 சதவீதம் அதிகமாயிற்று. இந்த அதிக வாங்குந்திறன் ஒருபுறமிருக்க, விலைகள் ஏறுவதற்கு மற்றொரு முக்கியக் காரணம், மக்கள் தம் வருமானத்தை அதிகமாகச் செலவுசெய்ய நேர்ந்ததே. 'ஈஸ்டர்ன் எகனமிஸ்ட்' என்னும் பத்திரிகையின் தேசிய வருமான ஆராய்ச்சியானது, தேசிய வருமானத்தில் முதன்மைப் பகுதிகளின் பங்கு 1945–46-ல் 52·5 சதவீதத்திலிருந்து 1946–47-ல் 57·3 சதவீதமாகவும், 1947–48-ல் 54 சதவீதமாகவும் உயர்ந்தது என்றும், அதே சமயத்தில் தொழில் உற்பத்தியில் தொழிலாளரின் சதவீதப் பங்கு 1942–43-ல் 20-லிருந்து 1944–45-ல் 28-க்கும், 1945–46-ல் 32-க்கும், 1946–47-ல் 38-க்கும், 1947–48-ல் 34-க்கும் உயர்ந்தது. இந்தப் போக்கு, நாட்டில் செலவு செய்யக்கூடிய வருமானம் உயர்ந்துவிட்டது என்பதையே காட்டுகிறது.[2]

1 1946 மேயில் சர் எஸ். வரதாச்சாரியார் தலைமையில் அமைக்கப்பட்ட மத்திய சம்பளக் குழு, 1947-ல் தன் அறிக்கையை அளித்தது. அரசாங்க ஊழியர்களுக்கு அதிகத் தாராளமான கிராக்கிப்படிகளை அளிக்கவேண்டுமென்றும், சம்பள விகிதங்களையே விரிவாக மாற்றியமைக்கவேண்டுமென்றும் அது பரிவுரை கூறியது.

2 'Eastern Economist', 29th July 1949, p. 166.

இரண்டாவதாக, ரூபாய்க்கு அதிக மதிப்பிடப்பட்டிருந்தாலும், அது விலைகளைக் கீழே இறக்கிவைப்பதற்கு உதவவில்லை. உண்மையில், போர் முடிந்த சிறிது காலம்வரையில் இந்தியாவில் உபரி இறக்குமதிகள் இருந்தன. எனினும், வெளிநாட்டு மார்க்கெட்டுகளில் இந்தியக் கச்சாப் பொருள்களுக்கு எப்பொழுதும்போல் தேவை மிகுதியாகவே இருந்தது. போர் நின்றவுடன், யாவரும் எதிர்பார்த்ததற்கு மாறாக, உலகத்தில் பல நாடுகளில் பொருளாதார நிலை சீர்திருந்தவில்லை. இதற்கு மாறாக, பாதகமான பருவகால நிலைகள் பல பண்டங்களில் பற்றாக்குறையை உண்டாக்கிவிட்டன. ஆகவே, இந்தியக் கச்சாப் பொருள்களுக்கு (எடுத்துக்காட்டாக, இந்தியக் சூட்டை இழைப் பருத்திக்கு) வெளியே கிராக்கி மிகுதியாக இருந்ததில் வியப்பில்லை. போருக்குப்பிறகு இந்தக் கிராக்கி எதிர்பாராத விதமாக அதிக ஊக்கமளிப்பதாயிருந்தது. இறுதியாக, நம் நாட்டில் பணவீக்க நெருக்கடி தளர்வதற்கு வெளிநாட்டு விலை நிலைமை சாதகமாக இல்லை. போர் முடிந்தவுடனே அமெரிக்கா கட்டுப்பாடுகளை நீக்கியபோது, விலைகள் திடீரென்று உயர்ந்தன. அப்போது மொத்த விற்பனை விலைகளின் குறியீட்டெண் 1945-ல் 123 ஆக இருந்தது; 1947-ல் 176 ஆயிற்று. உலகில் அமெரிக்காவின் பொருளாதாரம் மிகவும் முக்கிய நிலை பெற்றிருப்பதாலும், வெளிநாடுகளில் உள்ள வியாபாரத்தின்மீது அதன் செல்வாக்கு மிகுதியாக இருப்பதாலும், இந்தியா உட்பட உலகம் முழுவதிலும் விலைகள் ஏறிவிட்டன.

அடிப்படையில் பார்க்கும்போது, பணத்தின் மதிப்புக்குக் காரணம் செலாவணி அளிப்பும், பொருள்களின் உற்பத்திக்கேற்ப அதற்குள்ள தேவையும்தாம். 1947 மார்ச்சு இறுதிக்கும் 1948 மார்ச்சுக்கும் இடையில், பொதுமக்களிடையே இருந்த பணம் ரூ. 106 கோடி அதிகமாகியது. அதற்குமுன் ஆண்டில் ரூ. 18 கோடிதான் அதிகமாயிற்று. 1945-46, 1946-47 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் அரசாங்கம் அதேசமயத்தில் எளிய பணக்கோளை (cheap money policy) மேற்கொண்டது; படிப்படியாகத் தொடர்ந்து அதிகச் சலுகையுள்ள கடன்களை எழுப்பியது; இக் கடன்களுக்கு வட்டியைக் குறைத்தோ, கெடு முடிந்தவுடன் கூடுதலாக அளித்தோ நிகர வட்டி விகிதத்தைத் தாழ்த்தியது.[1] இக் கொள்கையோடு ஒத்த முறையில், கெடுவில்லாத 3½ சதவீதக் கடன்களை 1986-ல் முடிவடையக்கூடிய 3 சதவீதக் கடனுகவோ, 1976-ல் முடிவடையக்கூடிய 2¾ சதவீதக் கடனுகவோ மாற்றியது. இந்தப் பணக்கோளின் பணவீக்கப்

[1] 'Report on Currency and Finance,' 1945-46, p. 68.

போக்கு அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டக் கொள்கையால் மேலும் உறுதியடைந்தது. 1946–47, 1947–48[1] ஆகிய இரண்டு ஆண்டுகளில் வருவாய் இனத்திலும், முதல் இனத்திலும் முறையே ரூ. 51·81 கோடியும், ரூ. 194·93 கோடியும் மத்திய அரசாங்கத்திற்குப் பற்றுக்குறை உண்டாயிற்று. இந்தக் காலத்தில் கிடைத்த மாகாணங்களின் உபரியாகிய ரூ. 17·29 கோடியை இதற்கு ஈடு செய்தால், நிகரமான மொத்தப் பற்றுக் குறை ரூ. 229·45 கோடியாகும். இத் தொகை, அரசாங்கம் தன் வரிக்கொள்கையால் மக்களிடமிருந்து பெற்ற தொகைக்கும், அது தன் செலவிடும் கொள்கையால் மக்களிடம் சேரும்படி செய்த தொகைக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறிக்கும்; மேலும், சமூகத்தின் வாங்குந்திறன் எவ்வளவு அதிகரித்து இருக்கிறது என்பதையும் இது காட்டுகிறது.

பணப்பெருக்கத்திற்கும், மக்களின் வாங்குந்திறனுக்கும் எதிராக விவசாயப் பொருள்கள், தொழிற்சாலைப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தி குறைந்தது.

அட்டவணை 7

இன்றியமையாத பொருள்களின் உற்பத்தியில் வேறுபாடு

பொருள்கள்		1945	1948
உணவுப் பொருள்கள் (ஆயிரம் டன்களில்)	...	46093	44393
எஃகு பொருள்கள் (,,)	...	954	854
பஞ்சுத் துணிகள் (மிலியன் கெஜங்களில்)	...	4711	4319
சணற் பொருள்கள் (ஆயிரம் டன்களில்)	...	1086	1091
சிமெண்டு (,,)	...	2209	1553

(ஆதாரம் : 'Report on Currency and Finance,' 1949–50, pp. 148–50).

விவசாய உற்பத்தியிலும், உணவு நிலையிலும் சீர்கேடு உண்டாகாதும் (குறிப்பாக 1945–46-ல்) பாதகமான பருவநிலைகளால் ஏற்பட்டன. ஆனால், தொழிற்சாலைப் பொருளுற்பத்தியில் குறைவு ஏற்பட்டது, ஓரளவேனும் வேலை நிறுத்தங்கள், தகராறுகள் செய்து தொழிலாளர்கள் அதிருப்தியைக் காட்டியதனால்தான். 1947-ன் முதல் ஐந்து மாதங்களில் தொழில் தகராறுகளின் எண்ணிக்கை 152 ஆயிற்று. ஆனால், 1946, 1939ஆம் ஆண்டுகளில், அதே ஐந்து மாத காலங்களில், இவை முறையே 138-ம், 34-ம்

1 (1947 ஆகஸ்டு 15-லிருந்து 1948 மார்ச்சு 31 வரை) $7\frac{1}{2}$ மாதங்கள். ஆதாரம்: 'Report on Currency and Finance,' 1949–50,' pp. 182–83.

ஆகியிருந்தன. இதே சமயத்தில் வெளியிலிருந்து பொருள்கள் வருவதும் கட்டுப்படுத்தப்பட்டது. 1947 மார்ச்சில், அந்நியச் செலாவணியைப் பாதுகாக்கவும், முக்கியமல்லாத பொருள்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தவும் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டது. எல்லாப் பொருள்களுக்கும் பொதுவான அனுமதி எண் 8 ரத்து செய்யப்பட்டது; 1947 மேயில் பொது அனுமதி எண்கள் 1-ம் 3-ம் நீக்கப்பட்டன.

இவ்வாறு, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு நீக்கக் கொள்கை, பாதியளவு அடக்கப்பட்டிருந்த பணவீக்கத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்குமுன்பு, மீண்டும் விலைகள் ஏறுவதற்கு நிலைமை அனுகூலமாகச் செய்யப்பட்டது. 1947 நவம்பருக்கும் 1945 ஆகஸ்டுக்கும் இடையில் கட்டுப்பாட்டு நீக்கக் கொள்கை வந்தபோது, பொதுக் குறியீட்டெண் 244·1-லிருந்து 302·0-க்கு, அதாவது, 26 மாதங்களில் 57·9 பாயின்டுகள் உயர்ந்தன. 1947 நவம்பரிலிருந்து விலைகள் விரைவாக ஏறி, 1948 ஜூலையில் பொதுக் குறியீட்டெண் 389·6 பாயின்டுகளை எட்டியது; அதாவது, எட்டு மாதங்களில் 87·6 பாயின்டுகள் உயர்ந்தன. கட்டுப்பாட்டுக் கொள்கையைத் தளர்த்தியபோது, பதுக்கப்பட்ட இருப்புகள் வெளியே வரும் என்றும், அதனுடன் விலைகளும் இறங்கும் என்றும் அரசாங்கம் நம்பியது. ஆனால், இந்த நம்பிக்கை ஆதாரமற்றதாகி விட்டது. ஏனெனில், அப்போதைய உற்பத்தி அளவுகள் போதாமல் இருந்தன. நாட்டில் உள்ள பொருள் தேவைக்கேற்ப இருப்புகள் பதுக்கிவைக்கப்படவில்லை. ஆகவே, கட்டுப்பாட்டு நீக்கம் பணவீக்க நிலையைத்தான் மீண்டும் உண்டாக்கியது. இதுகாறும் அது கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார அமைப்பில் மூடி மறைக்கப்பட்டிருந்தது. கட்டுப்பாட்டு நீக்கம், 'கட்டுப்பாட்டிலிருந்து விலக்கப்பட்ட பொருள்களுக்குத் திடீரென்று ஒரே சமயத்தில் வாங்கும் நெருக்கடியை உண்டாக்கி, அதனால் செலாவணிப் புழக்கத்திலும் திடீர் ஏற்றத்தை விளைவித்தது'.[1] இதன் விளைவு விலைக்குறியீட்டெண்கள் மாறியதிலிருந்து தெரிகிறது. 1947-ல் பொதுக் குறியீட்டெண் ஓரளவு நிலையாக இருந்தது. ஆனால், அடுத்த ஆண்டில் அது வேகமாக ஏறி, ஜனவரியில் 15 பாயின்டுகளும், மேயில் 20 பாயின்டுகளும் அதிகம் பெற்றது.

கட்டுப்பாட்டு நீக்கத்தினால் உண்டான விலையேற்றம் நாட்டில் அதிக அதிருப்தியை விளைவித்தது. 1948 மத்தியில் சட்டசபை விவாதங்களில் அரசாங்கக் கொள்கை மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டது. இதற்குள் அரசாங்கம் விலைகள் கட்டுக் கடங்காமற்போவதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கத்

[1] Reserve Bank of India, Monthly Bulletin, August, 1948, p. 499.

தீர்மானித்தது. 1948-ன் கடைசிக் கால்பகுதி முடிவதற்குமுன், அரசாங்கம் பொருளாதாரத் துறையினரையும், தொழில் அதிபர்களையும், தொழிலாளர் பிரதிநிதிகளையும் விலைக்கட்டுப்பாடு பற்றிக் கலந்தாலோசித்து விலைகளைக் குறைப்பதற்கு விரிவான நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்தது. சில குறிப்பிட்ட பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை எடுத்த தோடன்றி (எடுத்துக்காட்டாகத் துணிகளின் மீது மீண்டும் கட்டுப்பாடு விதித்தல், உணவுப்பொருள்கள், இரும்பு, எஃகு ஆகியவற்றின் அளவைக் குறைத்து விலையைக் கட்டுப்படுத்தல், சர்க்கரை விலையை நிர்ணயித்தல், துணிகளின் விலையைக் குறைத்தல்), அரசாங்கம் உற்பத்திக்கு ஊக்கம் அளித்தல், இறக்குமதிகளைத் தாராளமாக அனுமதித்தல், ஏற்றுமதிகளைக் கட்டுப்படுத்தல், சிறுசேமிப்பு இயக்கத்தைத் தீவிரப்படுத்தி வாங்கும் திறனைக் குறைத்தல், கம்பெனிகளின் பங்கு லாபத்தை வரையறுத்தல், பண்டங்களை முன்னேக்கிப் பேரம் செய்யும் ஊக வாணிகத்தைத் தடுத்தல், அரசாங்கச் செலவைக் குறைத்து வரவு செலவைச் சரிக்கட்டுதல் போன்ற பல்வேறுபட்ட திட்டங்களைக் கையாண்டது.

இந்த நடவடிக்கையின் விளைவுகள் விரைவில் தெரிந்தன. 1949-ல் முதல் கால் பகுதியில், தொழில் கச்சாப் பொருள்கள் தவிர மற்ற எல்லா வகைப் பொருள்களின் விலைகளும் குறைந்தன. 1948 ஜூலையில் உச்ச எல்லையை எட்டியிருந்த பொதுக்குறியீட்டெண் 389·6-லிருந்து 1949 மார்ச்சில் 370·2-க்கு இறங்கியது. செய்பொருள்களின் விலைகள் இறங்கி மற்றப் பொருள்களுக்கு வழிகாட்டியாக மாறியது. அவற்றின் குறியீட் டெண் 1949 மார்ச்சில், முந்திய ஆண்டு ஜூலையில் இருந்ததை விட 41 பாயின்டுகள் குறைந்தது. உணவுப் பொருள்கள் 14 பாயின்டுகள் குறைந்தன. செய்பொருள்களில் துணி வகை களும் பருத்தி நூலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு இறங்கின. அறுவடைக் காலத்தில் அதிக விளைச்சல் கண்டதால், உணவுப் பொருள்களும் இறங்கின. இவற்றிற்கு மாறுகத் தொழில் கச்சாப் பொருள்கள் எதிர்த்திசையில் இயங்கின. இதற்குக் காரணம் 1947-ன் இறுதியில் இருந்த போக்குதான். பாகிஸ்தானிலிருந்து பருத்தியும் நூலும் சரிவரக் கிடைக்காததால் இவற்றின் விலைகள் ஏறின.

இவ் இறங்குமுகத்திற்கு வேறு காரணங்களும் உண்டு. பணத்தின் அளவு மொத்தத்தில் நிலையாக இருந்தது. பாங்கு டெபாசிட்டுகள் குறைந்தன. மத்திய, மாநில அரசாங்கங்களின் ரெவின்யூ வரவு செலவுத் திட்டங்கள் ஓரளவு சரிக்கட்டப்

பட்டன. அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையில் அதிகப் பற்றுக் குறைகளும், நீண்டகால வட்டி விகிதங்கள் கடுமையாக்கப் பட்டதும், பணவாட்டத்திற்கு மற்றக் காரணங்களாகும். எல்லா ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் உற்பத்தி பெருகிப் பணவீக்க நெருக்கடியைக் குறைத்தன. பணவாட்ட அறிகுறிகள் உண்டாயின. இவ்வாறு அந்நிய நாடுகளின் நிலையும் விலை இறக்கத்திற்குக் காரணமாயின. 1949-ல் அமெரிக்காவில் விலைகள் 7 சதவீதமும், ஈரான், சுவிட்சர்லாந்து, பெல்ஜியம் ஆகியவற்றில் முறையே 23·3 சதவீதமும், 7·7 சதவீதமும், 6·5 சத வீதமும் குறைந்தன. துருக்கியிலும் கனடாவிலும் தனித்தனி 2·1 சதவீதம் குறைந்தன.[1]

(ஆ) மதிப்பிறக்கமும் அதன் மந்த விளைவுகளும்

கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் நல்விளைவுகள் சிறிதுகாலம் தான் இருந்தன. பொதுக் குறியீட்டெண் 1948 ஜூலையில் இருந்த 389·6 என்ற உச்சநிலையிலிருந்து 1949 மார்ச்சில் படிப்படி யாக 370·2-க்கு வந்தது. அதன் பிறகு அது ஆகஸ்டில் 389·0-க்கு உயர்ந்து சென்றது. அதற்குமேலும் 1950 மேயில் 393-க்கு அது உயர்ந்து சென்றதற்கு முக்கியமான ஒரு காரணம் 1949 செப்டெம்பர் 19-ல் ரூபாயின் மதிப்பு இறக்கப்பட்டதேயாகும். மதிப்பிறக்கம்பற்றி முடிவு செய்யப்பட்டபோது அந்நடவடிக்கை கையானது விலைகளை மேலும் உயரச் செய்யும் என்ற அச்சம் இருந்தது. அவ் வச்சத்திற்குக் காரணமும் இருந்தது. மதிப்பிறக் கத்தின் நேரடி விளைவு, டாலர் பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலை 44 சதவீதம் உயர்ந்துவிடும் என்பதே. அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எந்திரங்களும் மூலதனச் சாதனங்களும் ரூபாய்க் கணக்கில் அதிக விலை பெற்றால், இந்தியாவில் செய்யப்படும் பொருள்களின் உற் பத்திச் செலவு அதிகமாகும். மேலும், அருமைச் செலாவணிப் பகுதிகளில் கிடைக்கக்கூடிய பொருள்களின் விலைகள் ஏறும் போது எளிமைச் செலாவணிப் பகுதிகளில் தேவை குவிவதால், அங்கும் பொருள்களின் விலை ஏறும். இறுதியாக, மதிப்பிறக்கத் தினால் இந்தியாவிலிருந்து ஏற்றுமதிகளுக்கு உற்சாகம் உண்டாகி, அதனால் உள்நாட்டிலும் ஓரளவு பொருள்களின் பற்றுக்குறை ஏற்படும். அதனால் விலைகள் பணவீக்கப் போக்கினையடையும்.

இப்படி எதிர்பார்த்ததற்குப் பதிலாக, 1949 செப்டெம் பருக்குப் பிறகு இந்தியாவில் உண்டான உண்மையான விலை

[1] Report on Currency and Finance, 1949-50, p. 6.

யேற்றம் கட்டுக்குள்ளடங்கியே இருந்தது. 1950 மார்ச்சில், பொதுக் குறியீட்டெண் மதிப்பிறக்கத்திற்கு முன்பு இருந்ததை விட (389·0) 0·9 சதவீதம்தான் ஏறியது. முந்திய வருட இறுதியில் இருந்ததைவிட, 1949-50-ல் அதன் நிகர உயர்வு 6·6 சதவீதம்தான் இருந்தது. இந்த மந்தமான உயர்வுக்குக் காரணம், வெவ்வேறு வகைப் பொருள்களின் விலைகள் எதிரெதிர்த் திசையில் இயங்கியதுதான். பொதுவாக, ஏற்றுமதிப் பொருள்கள் மிக அதிக விலையேற்றம் கண்டன; உணவுப் பொருள்கள், செய் பொருள்கள் ஆகியவற்றின் விலைகள் இறங்கின. முதல் வகையில் எண்ணெய்விதைகள், மாங்கனீசு தாது, ஆட்டுத்தோல், முந்திரிப் பருப்பு, வாசனைப் பொருள்கள் முதலியவை அடங்கும். இந்தப் பொருள்களின் விலைகள் ஏறியதற்குக் காரணம், ஐரோப்பிய மார்க்கெட்டுகளில் உலகின் மேற்குப் பாதியிலிருந்து போட்டியாக வந்த பொருள்களால் இவற்றிற்குக் கிடைத்த நல்ல விலைகளும், அமெரிக்க மார்க்கெட்டில் கிடைத்த சாதகமான வியாபார நிபந்தனைகளும்தாம். வெவ்வேறு விதமான பொருள்களின் விலைகள் ரூபாயின் மதிப்பிறக்கத்தினால் அடைந்த மாறுதல்கள் அட்டவணை 8-ல் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆகையால் மொத்தத்தில் இந்தியாவில் மதிப்பிறக்கத்திற்குப் பிறகு உண்டான விலையுயர்வு, எதிர்பார்த்ததைவிடக் குறைவாகத்தான் இருந்தது. இவ் விஷயத்தில், இங்கிலாந்தைவிட இந்தியாவில் விலைகளின் போக்குகள் அனுகூலமாகவே இருந்தன. 1949-ல் இங்கிலாந்தில் சில்லறை விலைக் குறியீட்டெண் 4 சதவீதமும், உணவுப் பொருள் குறியீட்டெண் 11 சதவீதமும் உயர்ந்தன. 1950-ன் முதல் பாதியில், 1949-ல் இருந்ததைவிட மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண் 9 சதவீதம் அதிகமாயிற்று. இதில் உணவுப் பொருள்கள் மட்டும் 19 சதவீத உயர்வுக்குக் காரணமாயிருந்தன.

மதிப்பிறக்கத்திற்குப் பிறகு இந்தியாவில் உண்டான மந்தமான விலையேற்றம்கூட, மதிப்பிறக்கத்தினால் ஏற்பட்டதென்று கூறமுடியாது. மதிப்பு இறக்கப்படவேண்டுமென்று முடிவு செய்யப்படுவதற்குமுன், இந்தியாவில் பொருள்களின் விலைகள் (குறிப்பாக உணவுப் பொருள்கள், செய்பொருள்களின் விலைகள்) உயரத் தொடங்கின. 1949-ல் பருவமழை தவறியதும், பெரும் பகுதி நிலங்களில் உணவுப் பொருள்களுக்குப் பதிலாக, சணல், பருத்தி போன்ற உணவல்லாத பொருள்கள் விளைவிக்கப்பட்டதும்—இந்தியா பிரிக்கப்பட்டவுடன், நம் நாடு இப் பொருள்களுக்கு இனி பாகிஸ்தானை நம்பியிருக்கக்கூடாது என்பதற்காக

அட்டவணை 8

மதிப்பிறக்கத்திற்குப் பிறகு விலைக் குறியிட்டெண்களின் மாறுதல்

	பொருள்களின் வகைகள்	ஆகஸ்டு 1949 (1)	மார்ச் 1950 (2)	(1)ஐ விட (2) எவ்வளவு சதவீதம் குறைவு/அதிகம்
I.	உணவுப் பொருள்கள் :	410·6	396·2	− 3·5
	தானியங்கள் ...	474	454	− 4·2
	பருப்புகள் ...	461	440	− 4·6
	மற்றவை ...	309	303	− 1·9
II.	தொழில் கச்சாப் பொருள்கள் ...	460·5	490·1	+ 6·4
	நார்கள் ...	423	469	+10·9
	எண்ணெய் விதைகள் ...	633	642	+ 1·4
	தாதுக்கள் ...	336	337	+ 0·3
	மற்றவை ...	347	366	+ 5·5
III.	இடைத்தரமான செய்பொருள்கள்	330·8	338·2	+ 2·2
	பதனிடப்பட்ட தோல் ...	309	361	+16·8
	தாது எண்ணெய்கள் ...	183	199	+ 8·7
	தாவர எண்ணெய்கள் ...	641	678	+ 5·8
	பருத்தி நூல் ...	435	413	— 5·1
	உலோகங்கள் ...	174	172	— 1·1
	பிண்ணாக்குகள் ...	409	424	+ 3·7
	மற்றவை ...	245	290	+18·4
IV.	செய்பொருள்கள் ...	348·6	347·4	— 0·3
	துணிகள் ...	403	402	— 0·2
	உலோகப் பொருள்கள் ...	272	265	— 2·6
	மற்றவை ...	267	270	+ 1·1
V.	பலதரப்பட்டவை ...	541 6	630·6	+16·4
VI.	எல்லாப் பொருள்களும் ...	389·0	392·4	+ 0·9

(ஆதாரம்: 'Report on Currency and Finance', 1949-50, p. 152)

எடுக்கப்பட்ட நடவடிக்கை இது—உணவுப் பொருள் பற்றுக் குறையை ஏற்படுத்தும் இவற்றின் விலைகள் ஏறுவதற்குக் காரண மாயின. நம் நாட்டின் வெளிநாட்டு வியாபாரநிலை மோசமாகி விடக் கூடாதென்பதற்காக இறக்குமதிகளைக் கட்டுப்படுத்திவந்த அரசாங்கக் கொள்கையால் செய்பொருள்களின் விலைகளில் ஏற்றம் உண்டாயிற்று. இதன் விளைவாக 1950 ஜனவரியில் 379·1 ஆக இருந்த உணவுப் பொருள் குறியீட்டெண், ஆகஸ்டில் 426·5 ஆக உயர்ந்தது. இதே காலத்தில் செய்பொருள்களின் விலை 344·6-லிருந்து 349·9-க்கு உயர்ந்தது. நாம் கவனிக்கத்தக்க

மற்றொரு விஷயம் என்னவென்றால், 1950 முழுவதிலும், பின் ஆண்டுகளிலும் விலைகளை ஏற்றிவிடக்கூடிய வேறு சில காரணிகளும் செயல்பட்டுவந்தன. மதிப்பிறக்கம் அன்றி, விலையேற்றத்திற்குக் காரணமாயிருந்த மற்றொன்று யாதெனின்? அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டக் கொள்கையே. இதோடு இறக்குமதிக் குறைவும் உள்நாட்டில் உற்பத்திக் குறைவும் சேர்ந்து கொண்டன. அதிக முதலினச் செலவும், பற்றுக்குறை வரவு செலவுத் திட்டமும் 1948-49, 1949-50 ஆகிய இரண்டாண்டுகளில் ரூ. 176 கோடி மதிப்புள்ள பணவீக்க நிலையை ஏற்படுத்தி விட்டன. உண்மையில், 1950-ன் நடுவில், மதிப்பிறக்கத்தினுல் அன்றி, மத்திய, மாகாண அரசாங்கங்களின் திருப்தியில்லாத வரவு செலவுத் திட்டக் கொள்கைதான் நாட்டில் பணவீக்கத்திற்குக் காரணம் என்பது உணரப்பட்டது.[1]

மதிப்பிறக்கத்தின் விளைவுகள் குறுகிய காலத்திற்கு மட்டும் ஓரளவு பயன் தந்தன. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டபோது அதைப்பற்றி எத்தகைய கருத்துகள் இருந்திருப்பினும், நம் நாட்டின் வெளி நாட்டு வியாபார நிலையைப் பாதுகாப்பதற்காகவே அது மேற் கொள்ளப்பட்டது என்பதை இப்பொழுது யாவரும் ஒத்துக் கொள்கிறார்கள். அப்பொழுதிருந்த சூழ்நிலை நெருக்கடி காரணமாக, அப்படிச் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மதிப்பிறக்கத்தினுல் விலைகள் அதிகம் ஏறவில்லை. ஏனென்றால், வெளியில் இருந்த விலைகளைவிட இந்தியாவில் இருந்த விலைகள் அதிகமாயிருந்தன. எனவே, மதிப்பிறக்கத்தினுல் இருந்த நிலை அப்படியே ஒப்புக்கொள்ளப்பட்டது எனலாம். பன்னாடுகளுக்கிடையே விற்கப்பட்ட பொருள்களின் விலைகளைக் குறியீட்டெண்களில் இருந்த வித்தியாசங்களைக்கொண்டு அறியலாம். 1937-ஐ அடிப்படையாகக் கொண்டு, 1949-ன் இறுதிக் கால் பகுதியில் அமெரிக்காவில் இத்தகைய பொருள்களின் குறியீட்டெண் 175 ஆக இருந்தது; முக்கிய ஐரோப்பிய நாடுகளில் அது 210 ஆக இருந்தது. பன்னாட்டு வியாபாரப் பொருள்களாகிய சணல் நாருக்கும், சணல் செய்பொருள்களுக்கும் இவ் வெண்கள் முறையே இந்தியாவில் 428-ம் 549-ம் ஆக இருந்தன. அமெரிக்க டாலர்களில் இந்திய ரூபாயின் மதிப்பு 30·225 சென்டுகளில் இருந்து 21சென்டுகளாகக் குறைக்கப்பட்ட போது இந்தியாவில் விலைகள் ஏறுவதற்கு இது ஒரு காரணமாகும். இரண்டாவதாக, மதிப்பிறக்கத்தின் பணவீக்கச் சக்தியைக் கட்டுப்படுத்துவதில், அரசாங்கம் மேற்கொண்ட

[1] 'Eastern Economist' 21st July, 1950, p. 84.

கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் காரணமாகும் என்பதை மறுக்க முடியாது. மதிப்பிறக்கத்திற்குச் சில மாதங்கள் முன்பு, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக் கொள்கையால் விலைகள் நிலையாக வைக்கப்பட்டிருந்தன என்று முன்பே கூறப்பட்டது. மதிப்பை இறக்க முடிவுசெய்வதற்கு முன்பே, அரசாங்கம் விலையேற்றம் உண்டாகும் என்று எதிர்பார்த்து, கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை உறுதிப்படுத்தியது.

(இ) கொரியப் பொருளாதார வீக்கம்

பணவீக்க விளைவைப் பொறுத்தவரையில் 1950-ன் முதல் கால் பகுதியிலேயே மதிப்பிறக்கம் தன் ஆற்றலை இழந்து விட்டதென்று கூறலாம். அவ்வாண்டின் இரண்டாம் கால் பகுதியிலிருந்து பொது விலைகளில் அதிகரிப்பு உண்டான விகித வேக வளர்ச்சிக்குக் காரணம் வெளிநாட்டு அரசியல் நிலைதான். 1950 ஜூன் 25ஆம் தேதியன்று கொரியாவில் போர் தொடங்கியதால், அமெரிக்கா வழிகாட்ட, மற்ற முக்கியமான நாடுகள் எல்லாம் தீவிரமான இருப்புகளைச் சேமிக்க முனைந்தன. ஏற்கெனவே அருகி இருந்த கச்சாப் பொருள்களுக்கு உண்டான தீவிரப் போட்டியினால் உலக மார்க்கெட்டுகளில் விலைகள் ஏறிவிட்டன. குறிப்பாக அமெரிக்காவில், விலையேற்றத்தினால் நன்மையடையும் பொருட்டு ஏற்பட்ட ஊக வாணிகத்தினாலும், அரசாங்கத்தின் பெரிய படைப் பெருக்கத் திட்டத்தினாலும், எந்திர உற்பத்திப் பொருள்கள், விவசாயப் பொருள்கள், உணவுப் பொருள்கள் ஆகிய மூன்று முக்கிய வகைப் பொருள்களின் விலைகள் அதிகம் உயர்ந்துவிட்டன. பொதுக் குறியீட்டெண், 1950 ஜூனில் 182 ஆக இருந்து, டிசம்பரில் உச்சநிலையாகிய 203 ஆயிற்று. 1950-ன் முதல் கால் பகுதியில் தோன்றிய பொது விலையுயர்வுப் போக்கு, 1950-ன் கடைசிக் கால் பகுதியிலும் 1951-ன் முதல் கால் பகுதியிலும் மேலும் அதிக வேகம் பெற்றது. 1950 மார்ச்சுக்கும் 1951 மார்ச்சுக்கும் இடையில் விலைகள் அமெரிக்காவில் 20·3 சதவீதமும், இங்கிலாந்தில் 27·4 சதவீதமும், ஆஸ்திரேலியாவில் 29·5 சதவீதமும் உயர்ந்தன.

குறைவான வளர்ச்சியுடைய நாடுகளில் நிலைமை மிகவும் கடுமையாக இருந்தது. மற்றப் பொருள்களைவிடக் கச்சாப் பொருள்களின் விலைகள் மிக வேகமாக உயர்ந்துபோய்க்கொண்டிருந்ததன் இயல்பான விளைவுதான் இது. 1950 ஏப்ரலுக்கும் 1951 மார்ச்சுக்கும் இடையில், ரப்பர் விலை 288 சதவீதமும், வெள்ளீயத்தின் விலை 211·9 சதவீதமும், சிசால் 186·9 சதவீதமும்,

கோக்கோ 154·3 சதவீதமும், தாமிரம் 124·7 சதவீதமும் உயர்ந்து விட்டன. முதன்மைப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகள் பெற்ற அதிக விலைகள், அவற்றின் பண அளவையும் வருமான அளவையும் பாதித்துக் கடுமையான பணவீக்க நிலைமையை உண்டாக்கின. 1951 மேயில் ஐரோப்பியப் பொருளாதாரக் குழு கூறியதாவது, 1951 முழுவதும் 1950 டிசம்பரில் இருந்த விலைகளைச் சராசரியாக நிலவச்செய்தால் (குறிப்பிட்ட இருபது முதன்மைப் பொருள்களைப் பொறுத்த வரையிலாவது) அவ்வாண்டில் முதன்மைப்பொருள் உற்பத்தியாளருக்குக் கிடைக்கும் வருமானம் 3 பில்லியன் (Billion) டாலர் முதல் 4 பில்லியன் டாலர் வரையிலும் அதற்கு மேலும்கூட இருக்கும் என்பது. இப்படிப் பார்த்தால், அமெரிக்கா இந்த வகையைச் சேர்ந்த நாடுகளுக்குப் பணவீக்கத்தை ஏற்றுமதி செய்தது என்று கூறலாம்.

1950 ஜூனிலிருந்து 1951 ஏப்ரல் வரையில், இந்தியாவில் சணல், பருத்தி போன்ற தொழில் கச்சாப் பொருள்களிலும், முதற்கருவிப் பொருள்கள், துய்ப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், துணிகள் ஆகியவற்றிலும் கடுமையான பற்றுக் குறை உண்டாயிற்று. தொழில் கச்சாப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு வெளிநாடுகள் தடை விதித்ததாலும், கப்பல் வசதி போதாமையாலும், அமெரிக்காவில் பருத்தி உற்பத்தி குறைந்ததாலும், இந்தியாவில் இந்த வகையைச் சேர்ந்த பொருள்களின் விலைகள் 40 சதவீதம் உயர்ந்தன. அட்டவணை 9-ல் உள்ள எண்கள், கொரியப் போரின் விளைவும், மேல்நாடுகளின் படைப் பெருக்கத் திட்டமும் இந்தியாவில் விலை அமைப்பை எப்படிப் பாதித்தன என்பதைக் காட்டுகின்றன.

தொழில் கச்சாப் பொருள்களுக்கு அமெரிக்காவில் உண்டான அதிகத் தேவையினால், இந்தியாவில் பொது விலையமைப்பு எப்படி பாதிக்கப்பட்டது என்பது பின்வரும் செய்தியிலிருந்து விளங்கும். 1950 ஜூனுக்கும் 1951 ஏப்ரலுக்கும் இடையில், எப்பொழுதுமே இல்லாத அளவுக்குப் பொதுக் குறியீட்டெண் உயர்ந்திருந்த போது, கச்சாப் பொருள்களின் விலைகள் 39·2 சதவீதமும், ஆனால் உணவுப் பொருள்கள் 2·4 சதவீதமும், செய்பொருள்கள் 18·4 சதவீதமும் உயர்ந்தன. தனிப்பட்ட பொருள்களில், பருத்தியும் சணலும் மிக அதிகமான விலையேற்றத்தைக் கண்டன (60·8 சதவீதம்); பதனிடப்பட்ட தோல் அடுத்து வந்தது (58·9 சதவீதம்); வெளிநாட்டுத் தேவையினால் உண்டான பணவீக்க நெருக்கடி மிகவும் அதிகமாயிருந்ததால், இந்திய அரசாங்கம் மேற்கொண்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறுகிய காலத்திற்குச் சிறிதே

அட்டவணை 9

கொரியாவில் போர் தொடங்கியபிறகு விலைக் குறியீட்டெண்களின் இயக்கம்

(அடிப்படை : 1939 ஆகஸ்டு = 100)

பண்ட வகைகள்	1950 ஜூன் (1)	1951 ஏப்ரல் (2)	(1)ஐ விட (2) எவ்வளவு சதவீதம் அதிகம் அல்லது குறைவு
I. உணவுப் பொருள்கள் ...	402·8	412·5	+ 2·4
தானியங்கள்	456	490	+ 7·4
பருப்புகள்	409	501	+ 22·5
மற்றவை	321	289	— 10·0
II. தொழில் கச்சாப் பொருள்கள் ...	490·7	683·1	+ 39·2
நார்கள்	466	749	+ 60·8
எண்ணெய் விதைகள் ...	652	716	+ 9·9
தாதுப் பொருள்கள் ...	339	407	+ 20·1
மற்றவை	362	588	+ 62·4
III. இடைத்தரமான செய்பொருள்கள்.	335·5	387·8	+ 15·6
பதனிடப்பட்ட தோல் ..	334	531	+ 58·9
தாது எண்ணெய்கள் ...	190	195	+ 2·6
தாவர எண்ணெய்கள் ...	663	724	+ 9·2
பருத்தி நூல்	409	493	+ 20·5
உலோகங்கள்	175	191	+ 9·1
பிண்ணாக்குகள்	468	508	+ 8·5
மற்றவை	315	347	+ 10·1
IV. செய்பொருள்கள்	347·6	411·7	+ 18·4
துணிகள்	399	501	+ 25·6
உலோகப் பொருள்கள் ...	269	278	+ 3·3
மற்றவை	274	302	+ 10·2
V. பலதரப்பட்டவை	692·0	751·5	+ 8·6
VI. எல்லாப் பொருள்களும் ...	395·6	457·5	+ 15·6

பயனளித்தன. பொதுக் குறியீட்டெண் 1950 செப்டம்பரில் 412·5 ஆக இருந்து நவம்பரில் 410·9 ஆயிற்று. ஆனால், பிறகு அது மீண்டும் ஏறுமுகம் கண்டு 1951 மார்ச்சில் 438·6-ம், ஏப்ரலில் 457·5-ம் ஆயிற்று. இதற்குக் காரணங்கள் கொரியாப்போர் நீண்டுகொண்டே போனதும், இந்திய ஏற்றுமதிப் பொருள்களுக்கு அதிகத் தேவை உண்டானதும், உலக நாடுகளில் பல வற்றில் பொருள் பற்றாக்குறை ஏற்பட்டதும், இறக்குமதி விலைகள் அதிகமானதும், சர்க்கரை, கரும்பு, உணவு தானியங்கள்,

பருத்தித் துணிகள், ரப்பர் போன்ற பல பொருள்களுக்கு அர சாங்கம் அதிக விலை அளித்ததும் ஆகும். இந்தோ பாகிஸ்தான் வர்த்தக ஒப்பந்தத்தின் விளைவாக 1951 மார்ச் 9-ல் கச்சாச் சணல், சணல் பொருள்கள் ஆகியவற்றின் மீதிருந்த விலைக் கட்டுப் பாட்டு நீக்கத்தினால், இப் பொருள்களின் விலைகள் திடீரென்று உயர்ந்தன. 1951 மார்ச் முதல் வாரத்திற்கும் இறுதி வாரத் திற்கும் இடையில், கச்சாச் சணலின் குறியீட்டெண் 479-லிருந்து 1026-க்கும், சணல் பொருள்களின் குறியீட்டெண் 561-லிருந்து 1052-க்கும் ஏறின.

கொரியப் பொருளாதார வீக்கம் விலைகள் மேல்நோக்கி இயங்கியதின் கடைசிக்கட்டம் என்று கூறலாம். இது போர் முடிவிலிருந்து 1951-ன் இரண்டாம் கால்பகுதி வரை இருந்தது. அவ்வாண்டு ஏப்ரலில் பொதுக் குறியீட்டெண் உச்ச நிலையை யடைந்து (457·5), அதேநிலையில் ஏறக்குறைய 3 மாதங்கள் இருந்தது. கொரியப் போரின் முதல் கட்டத்தில் உண்டான ஏற்றவிகிதம்போலவே, 1947-ல் கட்டுப்பாட்டு நீக்கத்தின் பிறகும் இருந்தது. இந்த உயர்வு 1951 ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலும், 1947 நவம்பர் முதல் 1948 பிப்ரவரி வரையிலும் உள்ள நான்கு மாத காலங்களில் முறையே 10·8 பாயின்டுகளும் 10·1 பாயின்டுகளும் ஆகும். எனினும் இந்த இரண்டு காலப் பகுதிகளில் இவ்வாறு விரைவாக ஏற்றம் உண்டானதற்குக் காரணங்கள் வெவ்வேறாகும். 1947-48-ல் பெரும்பாலும் உள் நாட்டுச்சூழ்நிலைதான் விலையேற்றத்திற்குக் காரணமாயிருந்தது; மற்றப் பகுதியில், பெரும்பாலும் வெளிநாட்டு நிகழ்ச்சிகள்தான் காரணமாயிருந்தன. போர் முடிந்தபோது, உலக நாடுகள் பலவற்றில் உண்டான குறிப்பிடத்தக்க விலையேற்றம், கொரியப் போர் தொடங்கியவுடன் மிக அதிகமாகவும் கவலை தருவ தாகவும் இருந்தது. ஆகவே, 1950–51-ல் விலைகளில் உண்டான பணவீக்கப் போக்கு இந்தியாவிற்கு மட்டுமன்றி மற்ற நாடு களுக்கும் பொதுவாக இருந்தது.

பின்னிறக்கமும் மறுமலர்ச்சியும், 1951–53

இந்தியாவில் அண்மைக் காலத்தில் விலைகளின் வரலாற்றில் 1951ஆம் ஆண்டு முக்கியமானது. ஏனெனில் முதன் முதலாக, 1940-க்குப் பிறகு, பொதுவான விலையேற்றப் போக்கு அப்போது பெரும்பாலும் எதிர்த்திசையில் திரும்பியது. பத்து ஆண்டு களுக்கு மேலான இக் காலத்தில், பல கட்டங்களில் விலையேற்ற வீதம் குறைக்கப்பட்டோ, சில காலங்களில் விலையளவு ஒரே நிலையில் நிறுத்தப்பட்டோ இருப்பினும், பொதுக் குறியீட்டெண்

குறிப்பிடத்தக்க அளவுக்கு இறங்குமுகமடையவில்லை. 1951-ன் பிற்பாதியிலும் 1952-ன் முதல் கால்பகுதியிலும், அதற்கு முன்பு விலைகள் ஏறிய காலத்தைப் போலவே, வெளிநாட்டு நிகழ்ச்சிகள் தான் இந்த நிலைக்குக் காரணமாயிருந்தன. இவை சுருக்கமாகப் பின்வருமாறு: (1) அநுகூலமான பருவநிலையும், உலகத்தில் குறிப்பாகப் பஞ்சு போன்ற விவசாயப் பொருள்கள் அதிகமாகக் கிடைத்ததும்; (2) கொரியப் போரின்போது அளவு கடந்து சேமிக்கப்பட்ட இருப்புகள், தொழிற்சாலைகளால் பயன்படுத்தப் பட முடியாததால், தேவை குறைந்துவிட்டது; (3) 1951-ன் மத்தியில் கொரியச் சமாதான முயற்சி, அமெரிக்காவில் படைப் பெருக்கத்திட்டம் பரவியது, அங்கு இருப்புச் சேமிப்புப் பழக்கம் மாறியது ஆகியவை உலகப் பண்ட மார்க்கெட்டுகளில் பண வாட்ட நிலைமையை உண்டாக்கிவிட்டன.[1] (4) சர்வதேசப் பொருள் மாநாட்டின் வாயிலாகப் பற்றுக்குறையான பொருள் களை ஒழுங்காகப் பகிர்ந்துகொள்ளவேண்டுமென்று செய்யப் பட்ட ஏற்பாடு வாங்குவோர் போட்டியைத் தவிர்த்து, வாங்கு வோர் மனப்பான்மையை அதிக அளவுக்கு மாற்றியது. இந்தக் காரணங்கள் எல்லாம் சேர்ந்து, அமெரிக்காவில் படைப்பெருக்கத் திட்டத்திற்குத் தேவையான தொழில் கச்சாப் பொருள்களின் விலைகள் பெரும்பாலும் இறங்கி மற்ற நாடுகளில் இருந்த விலை களையும் பாதித்தன. 1951-ல் சர்வதேசப் பண்டங்களின் விலைகள் எந்த அளவுக்குக் குறைந்தன என்பதை அட்டவணை 10-ல் காணலாம்.

இந்த அட்டவணையில் உள்ள விவரங்கள் பல நாடுகளில் இருப்புச் சேமிக்கும் திட்டத்திற்குத் தேவைப்பட்ட பண்டங்கள், குறிப்பாக அமெரிக்காவில், மிக அதிகமான ஏற்ற இறக்கங்களைக் கண்டன என்பதைக் காட்டும். 1951-ன் ஆரம்பத்தில் உண்டான பின்னிறக்கம், வெள்ளீயம், ரப்பர், உரோமம் போன்ற முதன் மைப் பொருள்களை விளைவிக்கும் ஸ்டர்லிங் பகுதி நாடுகளைக் குறிப் பாகப் பாதித்தது. பல நாடுகளில் 1952 முழுவதிலும் இறங்குமுகம் தொடர்ந்து இருந்தது. 1952-ன் முதல் பாதியில், சில ஐரோப்பிய நாடுகளில்—நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், டென்மார்க்கு—தொழில் உற்பத்தி குறைந்ததனால், வேலையின்மை திடீரென்று அதிகமாயிற்று. அதனால் கடுமையான மந்தம் ஏற்படும் என்ற அபாயம் உண்டாயிற்று. இருப்பு சேமிப்புத் திட்டத்தில் மந்தம்

1 1951-ன் ஆரம்பத்தில், அமெரிக்காவில் வெடிமருந்துக் குழு, வாங்கும் வழக்கத் தில் ஒரு மாறுதலை உண்டாக்கியது. உடனடியாக வாங்குவதற்குப் பதில், அது ஒப்பந் தங்களை மாற்றி, ஒன்றிரண்டு ஆண்டுகளில் சரக்கை ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டது. இந்த ஏற்பாட்டினால், அதிகப் பொருள்கள் அப்போதைய உபயோகத்திற்குக் கிடைத்தன; மார்க்கெட்டுகளிலும் மந்தத்தை உண்டாக்கியது.

ஏற்பட்டதுடன், கடன் வசதியைக் கடுமையாகக் கட்டுப்படுத்தியது; அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையில் பற்றுக்குறையைச் சரிக்கட்டுவதற்கு ஏற்பாடு செய்தது, இங்கிலாந்திலும் ஆஸ்திரேலியாவிலும் இறக்குமதியைக் குறைத்தது, டென்மார்க்கிலும் ஹாலந்திலும் உறுதியான பணவாட்டக் கொள்கைகளை மேற்கொண்டது ஆகியவை பல நாடுகளில் விலையிறக்கம் ஏற்பட்டதற்குக் காரணங்களாயின.

அட்டவணை 10

1951-ல் பண்டங்களின் விலைகள்

பண்டங்கள்	கொரியப் போருக்கு முன்	1951 உச்ச அளவு	1951 ஜூலை முடிவு	உச்ச அளவில் இருந்து குறைவு சதவிதம்
	பவுண்டுக்கு இத்தனை பென்ஸ்	பவுண்டுக்கு இத்தனை பென்ஸ்	பவுண்டுக்கு இத்தனை பென்ஸ்	
பருத்தி அமெரிக்க U.K. ...	33 1/8	53	42	21
நியூயார்க் Spot ...	29 1/2	39 1/2	33	17
உரோமம் 66's ...	145	323	176	17
ரப்பர் spot ...	22 3/4	74	45	39
தோல்கள் .	22	51	29	42
கொக்கோ, நியூயார்க் spot accra,	27 5/8	33	29 1/2	10
	டன்னுக்கு இத்தனை பவுன்	டன்னுக்கு இத்தனை பவுன்	டன்னுக்கு இத்தனை பவுன்	
சணல் ...	118	250	185	26
சிசால் No. 1 (கற்றுழைநார்)	130	250	245	2
சிசால் No. 2 (,,)	85	174 1/2	148	15
வெள்ளீயம் ...	591 1/4	1615	895	45
பார்லி ...	21	38	32	16
ஆளி விதை எண்ணெய், இங்கிலாந்து விலை,	132	180	180	—
	அலகுக்கு இத்தனை ஷில்லிங்கு	அலகுக்கு இத்தனை ஷில்லிங்கு	அலகுக்கு இத்தனை ஷில்லிங்கு	
உல்ஃப்ராம் (டங்ஸ்டன் தாது) (wolfram),	126/3	672/6	530/0	21

(ஆதாரம் : Commerce, 1st September 1951, p. 387).

இந்தியாவில், மேலை நாடுகளைவிடச் சிறிது பின்னரே பின்னிறக்கம் தொடங்கியது. ஆனால், இந்தத் தாமதத்திற்கு ஈடுசெய்யும் முறையில் வீழ்ச்சி விகிதம் அதிகமாயிருந்தது. 1951 ஏப்ரலில் இருந்த உச்சநிலையாகிய 475·5-லிருந்து, 1952 ஜனவரியில்

பொதுக் குறியீட்டெண் 430·3-க்கு வந்தது; 1952 மார்ச்சில் 377·5-க்கு இறங்கியது. அதாவது, ஒரு மாதத்திற்கு 6·7 பாயின்டுகள் வீதம் இறக்கம் கண்டது. 1951–52-ல், பொது விலையளவு 15·9 சதவீதம் இறக்கம் கண்டது. ஆனால் 1950–51-ல் 15 சதவீதம் அதிகமாயிருந்தது. இப் பொதுக் குறியீட்டெண்கள் பொருளாதார ஆலோசகரால் தரப்பட்டவை. அட்டவணை 11-ல், வெவ் வேறு பொருள்களுக்கு வீழ்ச்சியளவு கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 11

வெவ்வேறு வகைப் பொருள்களின் விலைக் குறியீட்டெண்களின் இயக்கங்கள்

பொருள் வகை	மதிப்பிறக்கத்திற்கு முன்பு 1949 செப். 17	கொரியப் போருக்கு முன்பு 1950 ஜூன் 24	1952 ஜனவரி 26	1952 மார்ச்	(3)க்கு மேல் (4) மாறிய சதவீதம்
	(1)	(2)	(3)	(4)	
I. உணவுப் பொருள்கள் ...	392·6	407·1	392·3	335·2	– 14·6
தானியங்கள் ...	460	456	464	438	– 5·6
பருப்புகள் ...	409	429	506	391	– 22·7
மற்றவை ...	293	327	273	200	– 26·7
II. தொழில் கச்சாப் பொருள்கள்.	470·1	494·2	573·8	382·8	– 33·3
நார்கள் ...	437	468	609	379	– 37·8
எண்ணெய் விதைகள் ...	644	657	602	370	– 38·5
தாதுப் பொருள்கள் ...	331	342	449	466	+ 3·8
மற்றவை ...	347	371	422	360	– 14·7
III. இடைத்தரமான செய் பொருள்கள்.	334·4	335·5	370·1	339·0	– 8·4
பதனிடப்பட்ட தோல் ...	315	335	329	341	+ 3·6
தாது எண்ணெய்கள் ...	183	190	218	218	—
தாவர எண்ணெய்கள்	662	663	597	376	– 37·0
பருத்தி நூல் ...	435	409	495	498	+ 0·6
பிண்ணாக்கு ...	421	467	483	403	– 16·6
உலோகங்கள் ...	175	174	206	201	– 2·4
மற்றவை ...	256	315	320	286	– 10·6
IV. செய்பொருள்கள் ...	350·0	346·9	399·4	376·6	– 5·7
துணிகள் ...	405	398	468	424	– 9·4
உலோகப் பொருள்கள்.	272	269	298	311	+ 4·4
மற்றவை ...	268	273	304	301	– 1·0
V. பலதரப்பட்டவை ...	557·8	692·4	734·5	610·8	– 16·8
VI. எல்லாப் பொருள்களும் ...	386·7	397·1	428·8	364·9	– 14·9

(ஆதாரம்: 'Report on Currency and Finance', 1952–53).

1952 மார்ச்சின் மத்தியில் மொத்த விற்பனை விலைகளின் பொதுக் குறியீட்டெண், கொரியப்போர் தொடங்குவதற்குமுன் இருந்த அளவிற்கும் கீழே விழுந்ததுமட்டுமன்றி, மதிப்பிறக்கத் திற்குமுன் இருந்த அளவைவிடக் குறைந்துவிட்டது.

கொரியப் போர் தொடங்கியதைத் தொடர்ந்து, மற்ற நாடு களைவிட இந்தியாவில் விலையேற்றம் குறைவாயிருந்தது. ஆனால், 1951-ன் மத்திக்குப் பிறகு பின்னிறக்கம் அதிகமாயிருந்தது. 1950 ஜூனுக்கும் 1951 ஏப்ரலுக்கும் இடையில் இந்தியாவில் விலைகள் 15·7 சதவீதம் ஏறின; இங்கிலாந்தில் 23·9 சதவீதமும், ஆஸ்தி ரேலியாவில் 20·6 சதவீதமும், அமெரிக்காவில் 16·8 சதவீதமும் உயர்ந்தன. ஆனால், 1952 மார்ச்சுவரையில் உள்ள பல மாதங் களில் இந்தியாவில் விலைகள் 17·6 சதவீதம் இறங்கின; ஆனால், அமெரிக்காவில் 2·7 சதவீதம் இறங்கின; இங்கிலாந்திலும் ஆஸ்தி ரேலியாவிலும் முறையே 4·8 சதவீதமும் 12·7 சதவீதமும் உயர்ந் தன. இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா ஆகிய மூன்று நாடு களில் பொது விலையளவு ஏறி இறங்கியதில் உள்ள வித்தியாசம் அட்டவணை 12-ல் மேலும் விளக்கப்படுகிறது.

அட்டவணை 12

இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளில் மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண்கள்

(அடிப்படை : ஜனவரி–ஜூன் 1950 = 100)

	இந்தியா	அமெரிக்கா	இங்கிலாந்து
1950 ஜனவரி–ஜூன் ...	100	100	100
1950 மூன்றும் கால்பகுதி ...	104	107	106
1950 நான்காம் கால்பகுதி ...	105	111	116
1951 முதல் கால்பகுதி ...	109	117	129
1951 இரண்டாம் கால்பகுதி ...	116	117	129
1951 மூன்றும் கால்பகுதி ...	113	116	130
1951 நான்காம் கால்பகுதி ...	112	116	133
1952 முதல் கால்பகுதி ...	104	114	134
1952 இரண்டாம் கால்பகுதி ..	96	113	131
1952 மூன்றும் கால்பகுதி ...	99	113	130
1952 நான்காம் கால்பகுதி ...	98	112	131

(ஆதாரம் : Reserve Bank of India Monthly Bulletin, June 1953, p. 469)

1951 ஜனவரியின் மத்தியில் இந்தியாவில் தோன்றிய விலை களின் இறங்குமுகம் திடீரென்றும் கவர்ச்சிகரமாகவும் இருந்தது. அது உலோக (தங்கம், வெள்ளி) மார்க்கெட்டையும், பங்குமார்க் கெட்டையும் மிகக் கடுமையாகப் பாதித்தது ; குறிப்பாக எண்ணெய் விதைகள், மிளகு, சணல், துணி, உரோமம் போன்ற ஏற்றுமதிப் பொருள்களையும் பாதித்தது. பிப்ரவரி கடைசி வாரத்தில், தங்கம், வெள்ளி ஆகியவை இடைவிடாமல் வந்து கொண்டிருந்ததால் வீழ்ச்சியடையத் தொடங்கின. உண்மை யில் மிகவும் பாதிக்கப்பட்ட மார்க்கெட்டு உலோக மார்க்கெட்டு தான். ஏனெனில், இந்த மஞ்சள், வெள்ளி உலோகங்களின்மீது பாங்குகள் கொடுத்திருந்த முன் பணத்திற்கு, உலோகத்தை ஈடு வைத்தவர்கள் மேற்கொண்டு அதிகப் பணத்தை பாங்கியில் செலுத்தவேண்டியிருந்ததால், மிகவும் துன்பப்பட்டுத் தம் இருப்பையெல்லாம் கரைத்துவிட வேண்டியதாயிற்று. அதே சமயத்தில் வெளிநாட்டுத் தேவை குறைந்ததால், நம் நாட்டில் பண்ட மார்க்கெட்டுகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. 1951-ல் அமெரிக்கா 24,159,380 பவுண்டு மிளகு இறக்குமதி செய்தது. ஆறு வருடங்களில் இவ் வருடம்தான் இறக்குமதி மிகவும் குறைந்தது. 1950-ன் இறக்குமதியைவிட அது 9 மில்லியன் பவுண்டு குறைவாக இருந்தது. இத் தேவைக் குறைவினால் இப் பண்டம் 1952 மார்ச்சு முதல் தேதியில் ஒரு கண்டிக்கு ரூ. 2,900 ஆக இருந்து, ஒரு வாரத்தில் ரூ. 2,600-க்கு இறங்கி, மேலும் குறையத் தொடங்கியது. காமென்வெல்த் பொருளாதாரக் குழு வும் பன்னாட்டு உரோம ஆராய்ச்சிக் குழுவும் திரட்டியுள்ள மதிப் பீட்டின்படி, 1951-ல் உலகில் உரோமம் பயன்படுத்தப்பட்ட அளவு 2,150 மில்லியன் பவுண்டுகளாகக் குறைந்துவிட்டது. முந்திய ஆண்டில் அது 2,652 மில்லியன் பவுண்டுகளாக இருந்தது. இதற்குமாறாக, 1951-52-ல் உலகில் உரோம உற்பத்தி, முந்திய ஆண்டைவிடச் சிறிது அதிகமாக இருந்தது. 1951–52-ன் மொத்த உற்பத்தியும், முந்திய ஆண்டில் ஏற்றுமதி செய்யும் நாடுகளிடமிருந்த இருப்பும் சேர்ந்து, 1951-ல் உலகத் தேவைக்கு வேண்டியதைவிட 14·4 சதவீதம் அதிகமாக இருந்தது. வெளி மார்க்கெட்டுகளில் சணலுக்கு இருந்த தேவையில் அதிக வீழ்ச்சி ஏற்பட்டதால், 1951-ன் மத்தியில் இதற்கு இருந்த விலையில் மூன்றில் ஒரு பங்கு விலைதான் கிடைத்தது. இந்தியாவில் முரட்டுத்துணி (hessians) மீதிருந்த ஏற்றுமதி வரி டன்னுக்கு ரூ. 1,500-லிருந்து ரூ. 750-க்குக் குறைக்கப்பட்டும், ஏற்றுமதிகள் உயரவில்லை. இதேபோல, வெளிநாடுகளில் தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய்களுக்கும், அதிகத் தேவை யில்லாமல் இருந்தது. வெளிநாடுகளில் பருத்தி மிகக் குறைவாக

வாங்கப்பட்டதால், எல்லா முக்கியமான இடங்களிலும் பருத்தித் தொழில் வீழ்ச்சியடைந்தது. அலெக்ஸாண்ட்ரியாவிலும் கராச்சியிலும் போலவே இந்திய மார்க்கெட்டுகளும் மந்தமாகிப் பல நாட்கள்வரை மூடப்பட்டுவிட்டன.

ஊகவாணிகத்தால் இறங்குமுகம் வேகமடைந்தது. 1952-ன் முதல் சில மாதங்களில், எண்ணெய் விதைகள், கச்சாப் பருத்தி, மிளகு, நரந்தம்புல் (lemon grass) எண்ணெய், விவசாயப் பணப் பயிர்கள் முதலிய ஏற்றுமதிப் பொருள்களே அதிக அளவில், தமக்குக் கடன் கொடுத்த பாங்குகளின் கிடங்குகளில் ஊகவாணிகர்கள் பதுக்கி வைத்தார்கள். வெளிநாட்டு மார்க்கெட்டுகள் தளர்ந்ததால், ஊகவாணிகர்களிடையே அச்சம் ஏற்பட்டது. எனினும், அவர்கள் வரவு செலவுத் திட்டத்தில் ஏற்றுமதி வரி குறைக்கப்பட்டும் வருமானவரிமீதிருந்த உபரி வரி, மேல்வரி ஆகியவை நீக்கப்பட்டும் தமக்கு ஓரளவு சலுகை கிடைக்கும் என்று நம்பியிருந்தனர். இந்த நம்பிக்கை, முரட்டுத் துணி மீதிருந்த வரி குறைக்கப்பட்டதாலும், வரவு செலவுத் திட்டத்தில் அதிக உபரி உண்டாகும் என்று கூறப்பட்டதாலும் உறுதியடைந்தது. ஆகவே, சில ஊகவாணிகர்கள் எண்ணெய் விதைகள், பங்குகள் ஆகியவற்றில் ஆழ்ந்துவிட்டார்கள். எதிர்பார்த்த சலுகை கிடைக்காமலும், சிறிதுகாலம் வரையில் வரிக்குறைப்பு இராது என்று நிதிமந்திரி தெரிவித்ததாலும், மார்க்கெட்டுகளில் பீதி ஏற்பட்டு, விற்பதில் ஒழுங்கற்ற போட்டி உண்டாயிற்று. இதனால் விலைகளும் பங்குகளின் மதிப்புகளும் திடீரென்று வீழ்ச்சியடைந்தன. முன்பிருந்த அதிக விலைக்கு வாங்கித் தம் உண்மையான ஒப்பந்தங்களை நிறைவேற்றவும் சில ஊகவாணிகர்கள் மறுத்தார்கள். இதனால் பண்டங்களின் விலைகள் பொதுவாக வீழ்ச்சியடைந்தன.

1952-ன் முதல் காற்பகுதியில் விலைகள் வீழ்ச்சியடைந்ததை மிகவும் துன்புற்ற நடுத்தர வகுப்பார் மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள் என்றாலும், உண்மையில் பண்டங்களைப் பயன்படுத்துவோர் அதனால் நன்மையடையவில்லை. இப் பின்னிறக்கம் சிறிது காலத்திற்கே இருந்தது. ஏற்றுமதிப் பொருள்களையே பெரும்பாலும் பாதித்தது. மார்ச்சின் மத்தியில் மொத்த விற்பனை விலைகளின் குறியீட்டெண், கொரியப் போருக்கு முன்பிருந்ததைவிட 30 பாயின்டுகள் குறைந்து 364·9-க்கு வந்தது; ஆனால், மறுபடியும் அம் மாதக் கடைசியில் 376·5-க்கு உயர்ந்தது. இந்த விரைவான மறுமலர்ச்சிக்குக் காரணம், அரசாங்கம் நெருக்கடி உண்டாகாமல் தடுப்பதற்கு எடுத்துக்கொண்ட உடனடி நடவடிக்கைகளே.

மொத்த விலைகளும், பெரும்பாலும் ஏற்றுமதிப் பொருள்களின் விலைகளும் மிக விரைவாக வீழ்ந்தாலும், இம் மறுமலர்ச்சியின் கடைசிக் கட்டத்தில்தான் சில்லறை விலைகள் தளரத் தொடங்கின. மிகப் பெரும்பாலான துய்ப்புப் பொருள்களின் விலைகள் இறங்கவே இல்லை. ஆகையால் வாழ்க்கைச் செலவு உயர்ந்தும் மாறுமலும் இருந்தது. 1952 ஜனவரியில் பம்பாய் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் 315 பாயின்டுகளாக இருந்தது. 1952 மார்ச்சில்தான் அது மிகவும் கீழ்நிலையை (298 பாயின்டுகளை) அடைந்தது. ஆனால், அடுத்த மாதமே அது 329 பாயின்டுகளாக உயர்ந்துவிட்டது; 1951-52-க்குச் சராசரி 314 பாயின்டுகளாக இருந்தது. ஆனால், முன் வருடத்தில் 302 பாயின்டுகள்தான் இருந்தது.

துய்ப்போருக்கு இதனால் அதிக நன்மை ஏற்படவில்லை. அதே சமயத்தில் உற்பத்தியாளரும் மிகவும் பாதிக்கப்பட்டனர். இரண்டு மாதங்களில் சணல் தொழிலில் ரூ. 50 கோடியும், பருத்தியில் ரூ. 21 கோடியும், சர்க்கரையில் ரூ. $1\frac{1}{2}$ கோடியும் நஷ்டம் ஏற்பட்டது. இதுவன்றி உலோகங்களிலும், எண்ணெய் விதைகளிலும், வாசனைப்பொருள்களிலும், இரசாயனப்பொருள்களிலும் அதிக நஷ்டம் ஏற்பட்டது. அரசாங்கப் பத்திரங்கள் நீங்கலாக ஏனைய பத்திரங்களில் உண்டான நஷ்டம் ரூ. 100 கோடி என்று மதிப்பிடப்பட்டது. துணிகள், பருத்தி, உரோமம், சணல், தோல், பதனிடப்பட்ட தோல் போன்ற பொருள்களை ஏற்றுமதி செய்பவர்கள்தான் மிகவும் பாதிக்கப்பட்டனர். துணிகளின் தேவைக் குறைவினால், மிகுந்துகொண்டேவந்த பெரிய இருப்புகளும், கச்சாப் பருத்தியும் மார்க்கெட்டில் மந்தத்தை விளைவித்தன. பம்பாயில் சில பட்டு உற்பத்தியாளர்கள் தம் ஆலைகளை மூடிவிட்டனர். பம்பாயிலும், அகமதாபாத்திலும், மற்ற இடங்களிலும் துணி உற்பத்தியாளர்கள் ஷிஃப்டு (shifts) களையும் வேலை நேரத்தையும் குறைக்கத் தீர்மானித்தனர். தொழில் செய்யும் வகுப்பார் இவ்வாறு ஊக்கமிழந்திருந்ததால், மந்தநிலை தோன்றும் அபாயம் உண்டாயிற்று. அரசாங்கம் இந்த நிலைமையின் அபாயத்தை உணர்ந்தது. தொழில் செய்யும் வகுப்பார் கேட்டுக் கொண்டதற்கேற்ப அது உடனடியாக உதவியளித்தது. அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளாவன: ஏற்றுமதிச் சலுகைகள், உள்நாட்டில் பங்கீட்டின்மீதிருந்த தடைநீக்கம், எளிய கடன் வசதி. இந்த நடவடிக்கைகளின் பயனுகவும், அந்நிய நாடுகளில் விலை மறுமலர்ச்சி ஏற்பட்டதாலும், இந்தியாவில் வேகமாக விலைகள் குறைவது தடுக்கப்பட்டது. 1952-ல், சிறிதுகாலம் நீங்கலாக, இரண்டாம் கால்பகுதியில் பொதுக் குறியீட்டெண்

உயரத் தொடங்கியது. சணல் செய்பொருள்கள், தாவர எண் ணெய்கள், கச்சாப் பருத்தி ஆகியவற்றின் ஏற்றுமதி கணிசமாக அதிகரித்தது. அரசாங்கம் பத்திரங்களின்மீதும் மாமூல் தவணை உண்டியல்கள் (usance bills) மீதும் ரிசர்வ் பாங்க் அளித்த கடன் களால் பண மார்க்கெட்டின் கெடுபிடி குறைந்து, நிலைமையைச் சரிசெய்துகொள்ள முடிந்தது. 1952 ஜூன் முடிவதற்குள் விலை களின் பொதுக் குறியீட்டெண் 391-க்கு உயர்ந்துவிட்டது. இது 1952 மார்ச்சில் இருந்த மிகக் குறைந்த அளவைவிட 4 சதவீதம் அதிகமாகும்.

அட்டவணை 13-ல் உள்ள விவரங்கள் 1952 மார்ச் :மத்தியி லிருந்து இரண்டு வருடங்களில் விலைகள் எப்படி மறுமலர்ச்சி யடைந்தன என்பதைக் காட்டும். 1952 மார்ச்சுக்கும், 1954 மார்ச் சுக்கும் இடையில், பொதுவிலைக் குறியீட்டெண் 8 சதவீதம் உயர்ந்தது. இந்தியக் கச்சாப் பொருள்களும், பலதரப்பட்ட பொருள்களும், உணவுப் பொருள்களும் முறையே 20·3 சத வீதமும், 12·4 சதவீதமும், 10·8 சதவீதமும் உயர்ந்தன. இக் காலத்தில் பொது விலையளவு உயர்ந்ததற்கு இவையே பெரும் பாலும் காரணமாகும்.

இந்தப் பின்னிறக்க, மறுமலர்ச்சிக் காலத்திற்குரிய சில சிறப் பியல்புகளை நாம் காணக்கூடும். மொத்த விலைகள் வேகமாகக் கீழ்நோக்கி இறங்கிய சமயத்தில், சில்லறை விலைகள் ஓரளவு நிலை யாகவும், வாழ்க்கைச் செலவு அதிகமாகவும் இருந்தன. உற்பத்தி யில் குறைவும் உண்டாகவில்லை. உண்மையில், 1952-ன் இறுதியில் தொழில் உற்பத்தி மிக உயர்ந்த நிலையை யடைந்தது. பின்னிறக் கத்தினால், உற்பத்தி, வாழ்க்கைச் செலவு ஆகியவற்றைவிட, விற்பனையும் லாபமுமே அதிகம் பாதிக்கப்பட்டன. வாழ்க்கைச் செலவு குறிப்பிடத்தக்க அளவு குறையவில்லை. ஆகவே உற்பத்திச் செலவும் உயர்ந்திருந்தது. ஆகையால் விற்பனை விலைகள் குறைந்த தால், தொழில் நடத்துவோரின் லாப அளவு மிகவும் குறைந்தது

கச்சாப் பொருள்களையும் மற்ற முதன்மைப் பொருள்களையும் பின்னிறக்கம் எப்படிப் பாதித்ததோ அதுபோலவே, 1952-ன் இரண்டாம் கால்பகுதியில் தோன்றிய மறுமலர்ச்சியில் கச்சாப் பருத்தி, கச்சாச் சணல், கச்சா உரோமம், பருத்தி விதை, தாவர எண்ணெய்கள் முதலியவை உயர்ந்தன. இப்படி நிலைமை மாறிய தற்கு முக்கியக் காரணம், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நம் நாட்டுப் பொருள்களுக்குத் தேவை அதிகரித்ததுதான். இது ஏற்று மதிச் சலுகைகள், பண்டங்களின் மீதிருந்த உள்நாட்டுக் கட்டுப் பாடுகளின் நீக்கம் ஆகிய அரசாங்க நடவடிக்கைகளைத்

அட்டவணை 13

வெவ்வேறுவகைப் பொருள்களின் விலைக்குறியீட் டெண்களில் மாறுதல்

	பண்ட வகை	1921 மார்ச் மத்தி (1)	1954 மார்ச 20 (2)	(1)ஐவிட (2) எவ்வளவு சதவீதம் குறைவு/அதிகம்
I.	உணவுப் பொருள்கள் ...	335·2	371·3	+ 10·8
	தானியங்கள் ...	438	425	− 3·0
	பருப்புகள் ...	391	365	− 6·7
	மற்றவை ...	200	292	+ 46·0
II.	தொழில் கச்சாப் பொருள்கள் ...	382·8	459·8	+ 20·3
	நார்கள் ...	379	443	+ 16·9
	எண்ணெய் விதைகள் ...	370	514	+ 38·9
	தாதுப் பொருள்கள் ...	466	442	− 5·2
	மற்றவை ...	360	403	+ 11·9
III.	இடைத்தரமான செய்பொருள்கள் ...	339·0	355·6	+ 4·9
	பதனிடப்பட்ட தோல் ...	341	388	+ 13·8
	தாது எண்ணெய்கள் ...	376	477	+ 26·9
	பருத்தி நூல் ...	498	447	− 10·2
	பிண்ணாக்கு ...	403	417	+ 3·5
	உலோகங்கள் ...	201	238	+ 18·4
	மற்றவை ...	286	306	+ 7·0
IV.	செய்பொருள்கள் ...	376·6	375·7	− 0·2
	துணிகள் ...	424	419	− 1·2
	உலோகப் பொருள்கள் ...	311	337	+ 8·4
	மற்றவை ...	301	286	− 4·9
V.	பலதரப்பட்டவை ...	610·8	686·3	+ 12·4
VI.	எல்லாப் பொருள்களும் ...	364·9	394·0	+ 4·9

(ஆதாரம்: Report on Currency and Finance, 1952–53)

தொடர்ந்து ஏற்பட்டது. 1953-ன் தொடக்கத்தில் சில இரும்பு, எஃகு செய்பொருள்களின்மீது அரசாங்கக் கட்டுப்பாடுகள் நீக்கப் பட்டன. அந்த ஆண்டின் மத்தியில், பருத்தித்துணி, நூல் ஆகிய வற்றின் மீதிருந்த எஞ்சிய விலைக் கட்டுப்பாடுகளும் பங்கீட்டுக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன. மேலும், 1952-ன் மத்தியி லிருந்து கடுமையான இறக்குமதிக் குறைப்பினால், பாதகமாக இருந்த அயல்நாட்டுக் கொடுப்பல்நிலை சீர்செய்யப்பட்டது. இது பல ஆண்டுகளாகப் பணவாட்டத்திற்குக் காரணமாயிருந்தது. எப்படியும், மறுமலர்ச்சிக்கு உடனடியான காரணம் தொழில்

நுட்ப சம்பந்தமானது என்று கூறலாம். ஏனெனின், அது, அதற்கு முன் இருந்த மந்தத்தின் எதிர் விளைவாகும். 1952-ன் முதல் கால்பகுதியில் விலைகள் மிகவும் கீழே சென்றுவிட்டன என்ற கருத்து வர்த்தகர்களிடையே உண்டாயிருந்தது. ஆகவே, பிந்திய மாதங்களில், வியாபாரிகள் சுறுசுறுப்பாக இருப்புகளைச் சேமிக்கத் தொடங்கினர்.

1952–54-ல் உண்டான மறுமலர்ச்சிக்குக் காரணங்கள், வியாபாரத்தை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும், முன் இருந்த மந்தநிலையின் விபரீதங்களுக் கெதிராகத் தோன்றிய விளைவும் ஆகும். ஆனால், இவ்விரண்டு ஆண்டுகளில் விலையேற்றம் நிலையாக இல்லை. 1953 ஆகஸ்டில் உச்சநிலையாகிய 410·4 ஐத் தீண்டியபிறகு, பொதுவிலைக் குறியீட்டெண் சிறிது பின்னிட்டது. 1953-ன் முதல் எட்டுமாதங்கள் விரைவான விலையேற்றத்தைக் கண்டன. அவ்வாண்டின் இரண்டாம் கால்பகுதியில் அதிகரிப்பு விகிதம் வேகமாக வளர்ந்தது. இந்த ஏற்றத்திற்குக் காரணம், தொழில் நடத்துவோரிடையே இருந்த உற்சாகமான நிலையும் அதனால் மார்க்கெட்டுகளில் நம்பிக்கை புத்துயிர் பெற்றதும் ஆகும். ஐந்தாண்டுத் திட்டத்தில் நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தியதும், வரிவிதிப்பு விசாரணைக் குழுவின் தீர்ப்புகள்படி வரியளவு குறைக்கப்படும் என்ற நம்பிக்கையும், வெளிநாட்டு வாணிகத்தின்மீது அரசாங்கம் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதும், செய்பொருள் ஏற்றுமதியின் மீதும் முக்கியக் கச்சாப் பொருள் இறக்குமதியின்மீதும் வரிகளைக் குறைத்ததும் எல்லாம் சேர்ந்து தொழிலில் நம்பிக்கையையும், தொழில் நடத்துவதில் மறுமலர்ச்சியையும் உண்டாக்கின. தொழில் உறவுகள் சீர்திருந்தின. முன்னைவிட நாட்டில் உணவு நிலை மேலாக இருந்தது. தொழில் உற்பத்தி உயர்ந்தது. இந்தச் சாதகமான நிலைகள் ஒருபுறமிருக்க, குறிப்பிட்ட சில பொருள்களின் விலைகள் ஏறுவதற்குச் சில விசேஷ காரணங்கள் இருந்தன. பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் சணல் உற்பத்தி குறையும் என்று எதிர்பார்த்ததால், கச்சாச் சணலில் விலை உயர்ந்தது. இங்கிலாந்தில் தேயிலை மீதிருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டதும், இலங்கைத் தேயிலை ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தியதும் இந்தியாவில் தேயிலையின் விலை ஏறுவதற்குக் காரணமாயின. 1953 ஆகஸ்டு முதல், பொது விலையளவில் கொரியப்போரின் முடிவு உண்டாக்கிய மாறுதல், ஆகஸ்டில் 410·4 ஆக இருந்த பொது விலைக் குறியீட்டெண் செப்டெம்பரில் 403·8 ஆகவும், டிசம்பரில் 389·4 ஆகவும் குறைந்ததிலிருந்து தெரியும். எனினும், அமைதி திரும்பியதால் அதிகப் பின்னிறக்கம் ஒன்றும் உண்டாகவில்லை. ஏனெனின், சமாதானப் பேச்சுவார்த்தைகள் நீண்டுகொண்டே

போயின. ஆகையால் எதிர்காலத் தேவைக்கேற்பத் தொழில் நடத்துவோர் நிலைமையைச் சரிசெய்துகொள்ள அவகாசம் இருந்தது. உண்மையில் 1954-ன் முதல் கால்பகுதியில் விலைகள் மறுமலர்ச்சியடைந்து, ஏப்ரலில் பொதுக் குறியீட்டெண் 402·6-ல் நின்றது.

திட்டமிட்ட வளர்ச்சியும் விலை ஏற்ற இறக்கங்களும்

1953-க்குப் பத்தாண்டுகளுக்கு முன் தோன்றிய பணவீக்க நிகழ்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டமாகக் கொண்டு, 1953-க்குப் பிறகு இந்தியாவில் காணப்பட்ட விலைப்போக்குகளை ஆராய்வது நன்மை பயப்பதாகும். 1953-ன் இறுதிக்குள்ளும், 1954-ன் தொடக்கத்திற்குள்ளும் விலைகள் பின்னிறக்கத்திலிருந்து மறு மலர்ச்சியடைந்து, ஓரளவு 'இயல்பானது' என்று கருதத்தக்க நிலையை யடைந்தன. பொருளாதார அமைப்பில் திட்டமிட்ட வளர்ச்சிக் காலம் தொடங்கிவிட்டது. அதனால், பின் ஆண்டுகளில் பொதுவாக விலைகளில் நிலையான ஏறுமுகம் உண்டாயிற்று. இந்த ஏற்றக் காலத்தின் ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால், விலையேற்றமானது பெரும் உள்நாட்டு நிகழ்ச்சியால் ஏற்பட்டது. அதாவது, அரசாங்கம் அதிகமான வளர்ச்சிச் செலவை மேற்கொண்டதும், தனியார் துறையில் தொழில் வேகம் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்ததும்தான். விலைப் பிரச்சினையின்

அட்டவணை 14

1952–53 முதல் பொது விலையளவில் மாற்றம்

(அடிப்படை: 1952–53 = 100)

வருடம்	எல்லாப் பண்டங்களும்	உணவுப் பொருள்கள்	மதுபானமும் புகையிலையும்	எரி பொருள், சக்தி, ஒளி, உயவுப் பொருள்கள்	தொழில் கச்சாப் பொருள்கள்	மொத்தம்	செய்பொருள்கள் இடைத்தரமானவை	செய்பொருள்கள் முடிவடைந்தவை
1953–54	101·2	101·1	95·6	98·0	107·4	100·4	98·6	100·7
1954–55	89·6	82·1	85·0	95·6	94·6	99·7	97	100·1
1955–56	99·2	94·6	78·4	97·1	110·6	102·9	110·8	101·6
1956–57	105·1	101·7	87·8	106·5	116·8	105·8	108·7	105·4
1957–58	106·1	103·4	94·4	114·4	112·9	107·3	107·1	107·4
1958–59	112·1	112·7	98·9	115·9	115·9	109·5	109·0	109·5
1959–60	118·1	116·5	97·1	117·3	113·0	116·7	121·3	116·0

(ஆதாரம்: **Reports on Currency and Finance**)

இந்த அம்சத்தின்மீது நம் கவனத்தைத் திருப்புவதற்கும், பின்னிறக்கத்தைத் தொடர்ந்த சில ஆண்டுகளில் இருந்த நிலைமையோடு, திட்ட காலத்தில் உண்டான விலை மாற்றங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும், இந்திய அரசாங்கம் 1952–53ஐ அடிப்படையாகக் கொண்டு, மொத்த விற்பனை விலைகளுக்குப் புதிய குறியீட்டெண்களைப் பயன்படுத்தியது.

1952–53 முதலாக விலைகள் 20 சதவீதம் அதிகரித்துள்ளன (படம் 3). இந்த ஆண்டில் அடைந்த அளவிலிருந்து, அடுத்த இரண்டாண்டுகளில் திடீரென்று இறக்கம் ஏற்பட்டது. உணவுப் பொருள்கள் அப்பொழுது மிகவும் தாழ்ந்து 1955 ஏப்ரலில் 81ஐ அடைந்தன (1952–53 = 100). 1955-ன் மத்தியில், இந்தியாவில் பொது விலையளவு, 1952 மார்ச்சில் இருந்ததைவிட 35 பாயின்டுகள் குறைந்திருந்தது. இத் திடீர் இறக்கத்திற்குக் காரணம் பெரும்பாலும் பொருள் அளிப்பு நிலை சீர்திருந்தியதே. குறிப்பாக உணவுப் பொருள்கள் நிலை சீர்திருந்தி, அவற்றின் விலைகள் மற்ற வகைகளைவிட மிக அதிகமான அளவுக்குக் குறைந்தன. உணவுப் பொருள்களின் மொத்த விற்பனைக் குறியீட்டெண் 1953 ஆகஸ்டில் 117 ஆக இருந்து, 1955 ஏப்ரலில் 81-க்கு இறங்கியது. இக் குறைவு 30 சதவீதமாகும். இதே காலத்தில் பொதுக் குறியீட்டெண் 20 சதவீதம் குறைந்தது. முதல் திட்டத்தின் கடைசி ஆண்டாகிய 1955-ன் மத்தியிலிருந்து விலைகள் மீண்டும் மேல் நோக்கி இயங்கி, 1957–58 நீங்கலாக, இதுவரையில் நிலையாக ஏறிக்கொண்டே வந்திருக்கின்றன. 1955 ஏப்ரலில் பொதுக் குறியீட்டெண் 88 ஆக இருந்து, 1957 ஆகஸ்டுவரை பொதுவாக ஏறிக்கொண்டேபோய் 177ஐ அடைந்தது. முந்திய ஓராண்டில் இருந்த இறங்குமுகத்தைத் திருத்தும் வகையில் இந்த ஏறுமுகப் போக்கு ஓரளவு பயன்பட்டது. 1957–58-ல் உண்டான பின்னிறக்கம், அமெரிக்காவிலும் சில ஐரோப்பிய நாடுகளிலும் இருந்த நிலைமையைத்தான் காட்டியது. ஆனால், இந்தக் காலம் முழுவதிலும் காணப்பட்ட மறைவான பணவீக்க ஏறுமுகப் போக்குக்கு அடிப்படைக் காரணம் உள்நாட்டில் இருந்த தேவை, அளிப்பு நிலைகளே. 1954–55-ல் தானிய உற்பத்தி குறைந்ததாலும், 1955–56-ல் சில தொழில் கச்சாப் பொருள்களின் ஏற்றுமதி உயர்ந்ததாலும், அளிப்புக் குறைந்தபோது முதலீட்டுச் செலவு அதிகரிப்பினால் பணவருவாய் உயர்ந்ததற்கேற்பத் துய்ப்பும் கணிசமாக உயர்திருக்க வேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் இறுதியில் திடீரென்று ஏற்பட்ட அபிவிருத்திச் செலவுகளும், முதல் திட்டத்தின் இறுதியில் கணிசமாக உண்டான பற்றுக்குறை நிதியளிப்பும், இரண்டாவது திட்ட காலத்



படம் 3. 1953–60-ல் மொத்த விற்பனை விலையின் குறியீட்டெண்கள் (அடிப்படை 1952–53 = 100).

திலும் இதேபோன்ற நிதியாக்கத்தை அதிகம் நம்பியிருந்த தாலும், பொதுமக்களிடம் பணப்பெருக்கமும் வாங்குந் திறனும் அதிகரித்து, நாட்டில் பணவீக்க நிலை மீண்டும் உண்டாயிற்று.

போர் முடிவிலிருந்து, இந்தியாவில் காணப்பட்ட விலைப் போக்குகளை ஆராய்ந்தால், சில முக்கிய விஷயங்கள் புலப்படும். முதலாவதாக, 1952 வரையில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்கள் வெளிக் காரணங்களால் பெரும்பாலும் உண்டானவை. பின் வருடங்களில் இருந்த நிலையற்ற தன்மைக்குக் காரணம் உள் நாட்டுச் சூழ்நிலையே. மீண்டும் கட்டுப்பாடுகளை விதித்த பிறகு 1948 முதல் விலைகளில் காணப்பட்ட ஒரளவு நிலைப்புத் தன்மை கொரியப் பொருளாதார வீக்கத்தினாலும், 1951–52-ன் மந்தத்தி னாலும் கடுமையாகக் குலைக்கப்பட்டுவிட்டது. 1952-க்குப் பிறகு, வளர்ச்சித் திட்டங்களுக்காகச் செய்யப்பட்ட பெரிய செலவு களும், அரசாங்கத்தின் வரிக்கொள்கைகளும், பணக்கொள்கை களும், பல வேறுபட்ட உள்நாட்டு அளிப்பு நிலைகளும் விலைகள் நிலையற்றிருந்ததற்குக் காரணமாகும். இரண்டாவதாக, செய் பொருள்களின் குறியீட்டெண்கள், போர்க்காலத்தில் ஒரே மாதிரியாகப் பொதுக் குறியீட்டெண்ணுக்கு மேலும், போருக்குப் பின், 1955-ல் தவிர, மொத்தத்தில் பொதுக் குறியீட்டெண்ணுக் குக் கீழும் இருந்தன. போர்க்காலத்தில் செய்பொருள்கள்தாம் ஏறுமுகப் போக்கில் முதன்மையாக இருந்தன. போருக்குப் பிந்திய காலத்தில் தொழில் கச்சாப் பொருள்களும் பலதரப்பட்ட பொருள்களும் இவ்வாறிருந்தன. 1949 செப்டெம்பரில் ரூபாயின் மதிப்பிறக்கப்பட்டது முதல், 1951 ஏப்ரலில் கொரியப் போருக் குப் பிந்திய உச்சநிலை ஏற்பட்டது வரையில் சுமார் ஒன்றரை ஆண்டுகளில் தொழில் கச்சாப்பொருள்கள் 49 சதவீதம் முன்னேறின. ஆனால், இடைத்தரமான செய்பொருள்கள் 17 சதவீதமும், செய்பொருள்கள் 18 சதவீதமும்தாம் ஏறின. கொரியப் பொருளாதார வீக்கத்தையடுத்து வந்த பின்னிறக்கத் தில், தொழில் கச்சாப்பொருள்களின் விலைகள் 49 சதவீதம் இறங்கின. ஆனால், இடைத்தரமான செய்பொருள்கள் 13 சத வீதமும், செய்பொருள்கள் 9 சதவீதமும் இறங்கின. அதுமுதல், தொழில் கச்சாப்பொருள்களும் இடைத்தரமான செய்பொருள் களும் மறுமலர்ச்சியடைந்தன. பிந்தியவற்றைவிட முந்தியவை மிக வேகமாக முன்னேறின. ஆனால், செய்பொருள்கள் பின் னிறங்கின. ஒருபுறம் தொழில் கச்சாப்பொருள்களின் விலைகள் இறங்கியதையும், மற்றொரு புறம் செய்பொருள்களையும் பொதுக் குறியீட்டெண்களையும் காட்டும் வளைவுகளுக்கிடையே உள்ள பெரிய இடைவெளி (படம் 2 ஐயும், படம் 3 ஐயும் காண்க), சர்வதேசச் சூழ்நிலை இந்தியாவில் விலைகளை எப்படி ஒரளவு

பாதித்தது என்பதையும், குறிப்பாக 1955-56-க்குப் பிறகு, விரைவான தொழில் வளர்ச்சியால் உள்நாட்டில் உண்டான அதிகத் தேவையானது மேலும் அதிகமாக அவற்றைப் பாதித்தது என்பதையும் காட்டுகிறது. எனினும், 1954-55-ல் பொது விலை யளவு குறைந்ததற்கு முக்கியமான காரணம், உணவு விலைகளில் மந்தம் ஏற்பட்டதுதான்.

போர்க்காலத்திலும் அதன் பிந்திய ஆண்டுகளிலும் இந்தி யாவின் விலைக் குறியீட்டெண்களை மற்ற நாடுகளின் குறியீட் டெண்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், விலைகளின் இயக்க அமைப்பில் ஒரு வேற்றுமை இருப்பது தெரியும். போர் தொடங் கிய காலத்திலிருந்து 1942-ன் கடைசிக் கால்பகுதிவரையில் உள்ள விரைவான விலையேற்றக் காலத்தை விட்டுவிட்டால், இந்தியா வில் இருந்ததைப்போலன்றி, அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, சுவிட்சர்லாந்து போன்ற வெளிநாடுகளில் 1946-ன் மத்திவரையில் விலைகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு நிலையாக இருந்தன என்பது தெரியும். அந்த நாடுகளில் விலையேற்றத்தில் அதிக அளவு போர்முடிந்த பிறகுதான் உண்டாயிற்று. இங்கி லாந்தில், போர்க்காலத்தில் பொதுக் குறியீட்டெண் 106-க்கும் 171-க்கும் இடையில் இருந்தது; ஆனால், போர் முடிந்தபிறகு 1945 ஆகஸ்டில் 171 ஆக இருந்து, 1952 ஜனவரியில் 335 ஆயிற்று. அமெரிக்காவில், 1939 செப்டெம்பருக்கும் 1945 ஆகஸ்டுக்கும் இடையில் விலைகள் 34 சதவீதம் உயர்ந்தன; ஆனால், போருக்குப் பிந்திய காலத்தில், 1945 செப்டெம்பருக்கும் 1951 ஏப்ரலுக்கும் இடையில் 75 சதவீதம் அதிகரித்தன. இதற்கு மாறாக, இந்தி யாவில் 1945-க்குப் பிறகு பொது விலையளவில் உயர்வு, போர் தொடங்கியபோது இருந்த போக்கின் தொடர்ச்சியாகவே காணப்பட்டது. போர்க்காலத்தில் பொதுக் குறியீட்டெண் 144 சதவீதம் உயர்ந்தது. 1945 செப்டெம்பருக்கும் 1951 ஏப்ர லுக்கும் இடையில் 90 சதவீதம் உயர்ந்தது. இதுவன்றி, இந்தி யாவில் போர்க்காலத்திலும், போருக்குப் பிந்திய காலத்திலும் விலைகள் மற்ற நாடுகளைவிட அதிக வேகமான ஏற்ற இறக்கங் களைக் கண்டன.

4. பண அளிப்பில் வேறுபாடுகள்

விலைகளைப்பற்றிய இக்காலக் கருத்து என்னவென்றால், பணப் பெருக்கினால் அன்றி அதிகம் செலவழிப்பதனால்தான் விலையளவு பொதுவாக ஏறுகிறது என்பது. எனினும், இக்கொள்கை விவாதத்திற்குரியது. ஒரு குறிப்பிட்ட காலத்தில், அதிகம் செலவழிப்பதனால் விலைகள் ஏறுகின்றன என்பது உண்மை. அப்போது நாட்டில் பணமுள்ளவர்களிடமிருந்து அதிக வாங்குந்திறன் வெளிப்படுகிறது. இவ்வாறு வாங்குந்திறன் அதிகரிப்பதால் வட்டி வீதம் குறையலாம். ஆனால், இதில் பணத்திற்குரிய இடத்தை நாம் மறந்துவிடலாகாது. ஏனெனின், ராபர்ட்சன் கூறியுள்ளது போல, முதலில் பணத்தின் அளவு வேறுபடுவதால் வட்டிவீதம் வேறுபடுகிறது.[1] பணப்பெருக்கம்தான் வாங்குந்திறன் அதிகரிப்பதற்கு ஒரு முக்கியக் காரணம் என்பதையும் மறுக்கமுடியாது.[2] எந்த ஒரு குறிப்பிட்ட காலத்திலும், தேசிய உற்பத்தியின் பண மதிப்பு (உற்பத்திக்காகச் செலவழிக்கப்படும் தொகைக்கு இது சமம்) பணஅளிப்பை அதன் வேகத்தினால் பெருக்கிவந்த தொகைக்குச் சமம் என்பது வெளிப்படையான உண்மை. ஆதலால், பணத்தின் அளவு அதிகரிப்பதனாலோ, அதன் வேகம் அதிகரிப்பதனாலோ, அல்லது இவ்விரண்டினாலுமோ, அதிகம் செலவழிக்க முடிகிறது. எனினும், மிகவும் விபரீதமான காலங்கள் தவிர மற்றக் காலங்களில் பணம் வரும் வேகம் அதிகமாக மாறுவதில்லை. சில வருடங்களில் பணவருமானம் விடாமல் பெருகிக்கொண்டே வந்தால், அதற்குக் காரணம் பண அளிப்புப் பெருக்கமேயன்றி வேறன்று.[3] பொதுவாகத் தனிப்பட்டவர்கள், வியாபாரச் சங்கங்கள் (கார்பொரேஷன்கள்) ஆகியவர்களிடம் பண இருப்பு அதிகமானால், அவர்கள் துய்ப்புக்காகவோ முதலீட்

1 'The Economic Journal', Sep. 1931, p. 405.

2 Paul Einzig, 'Inflation' 1952, p. 63.

3 Lauchlin Currie, 'The Supply and Control of Money in the United States,' 1934, p. 6.

டுக்காகவோ அதிகமாகச் செலவழிப்பார்கள். துய்ப்புக்காக அதிகம் செலவழித்தால், செய்பொருள்களின் விலைகள் ஏறும். முதலீடு அதிகரிக்கும்போது தொழில் விரிவடைந்து, கச்சாப் பொருள்களும் உற்பத்திக் காரணிகளும் விலை ஏறும். எப்படி யாயினும், விலைகள் ஏறுவதுதான் நாம் காணும் விளைவு.

இவ் விஷயத்தில் பணத்தின் முக்கியத்துவம் குறைவாகக் கருதப்படுவதற்குக் காரணம், சில சமயங்களில் பணம் கிடைப்பது எளிதாகவும், கடன் கிடைப்பது எளிதாகவும் இருக்கும்போது, பணத்தினுல் விலையளவோ தொழில் நடவடிக்கையோ கணிசமாகப் பாதிக்கப்படுவதில்லை. எனினும் பேராசிரியர் மாக்ஸ் மில்லிகன் (Max Millikan) கூறியுள்ளபடி, 'பணம் குறைந்திருக்கும்போது, எத்தகைய செலவுகளைச் செய்யவேண்டும் அல்லது கூடாது எல்பதற்குப் பணம்தான் காரணம்.'[1] இந்த விவாதப் பிரச்சினை குறித்து இங்கு ஆராய வேண்டியதில்லை. ஆனல், பணப்பெருக்கம் விலைகளைப் பாதிக்கிறது என்பதை மறுப்பவர்கள் கூடப் பணத்தின் அளவு வேறுபடுவதற்கும் விலை இயக்கத்திற்கும் தொடர்பு உண்டு என்பதை ஒத்துக்கொள்கிறார்கள். 1939 முதல் இந்தியாவில் பண அளிப்பில் உண்டான மாறுதல்களைப்பற்றி ஆராய்வதும், அக் காலத்தில் இம் மாறுதல்களுக்கும் விலை இயக்கத்திற்கும் உள்ள தொடர்பு என்ன என்பதைக் காண்பதும் இந்த அத்தியாயத்தின் நோக்கமாகும்.

பண அளிப்பின் கூறுகள்

எந்த ஒரு காலத்திலும் ஒரு நாட்டின் மொத்தப் பண அளிப்பு, பணம் என்ற பெயருடைய எல்லாப் பரிவர்த்தனைச் சாதனங்களையும் உள்ளடக்கியதே. அமெரிக்காவின் ஐக்கிய ரிசர்வ் அமைப்பானது (Federal Reserve System) செலுத்தும் சாதனங்கள், வாங்குந்திறனின் அளவு, மதிப்பளவுகோல் என்ற மூன்று விதங்களில் பயன்படக்கூடிய பொருள்களால் பண அளிப்பு அமைகிறது என்று கருதுகிறது. இக் கணக்கீட்டு அடிப்படையில் பண அளிப்பு என்பது புழங்கும் காகிதச் செலாவணி, எல்லாவிதமான நாணயங்கள், பாங்குகளில் உள்ள நடப்பு வைப்புகள் (demand deposits) ஆகியவற்றுல் ஆனது.[2] காகிதப் பணமும் நாணயங்களும் பண அளிப்பின் இரண்டு முக்கிய அமிசங்கள் என்பதை விளக்கிக் கூறத் தேவையில்லை. எனினும், ஒரு

[1] Max Millikan (ed.), 'Income Stabilisation for a Developing Democracy', 1953, p. 162.

[2] The Federal Reserve System—Purposes and Functions, Third Edition. 1954. p. 5.

குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் கிடைக்கக்கூடிய மொத்த நாணயங்கள், காகிதப் பணம் ஆகியவற்றில் பொதுமக்கள் கையிலும், வியாபார நிலையங்களிடமும் உள்ள ரொக்கமும் செலாவணியும் மட்டும்தான் பண அளிப்பைக் கணக்கிடுவதற்குச் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்; பாங்குகளில் உள்ள ரொக்கக் காப்பு நிதிகளைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது. ஏனெனில், அவற்றைச் சேர்த்துக்கொண்டால் இருமுறை எண்ணியதுபோல ஆகிவிடும். காரணம், டெபாசிட்டுகளைத் திரும்பப் பெறுபவர்களுடைய தேவையைச் சமாளிக்கவே பாங்குகளில் ரொக்கக் காப்பு நிதிகள் வைக்கப்படுகின்றன. இதுபோலவே மத்திய பாங்குகளின் பயன்படுத்தப்படாத பணத்தாள் காப்புநிதிகளையும் கணக்கில் சேர்த்துக்கொள்ளக் கூடாது. ஏனெனின், அவை மத்திய பாங்குகளில் உள்ள காப்பிடங்களை விட்டுப் பணத்தைப் பயன்படுத்தும் பொதுமக்கள் கைக்கு வந்தால்தான் பணமாக மதிக்கப்படும். பண அளிப்பில் மற்றொரு முக்கியமான கூறு கடன் பணமாகும். ஆனால், இதில் செக்குகளால் எடுக்கப்படும் நடப்பு வைப்புகளை மட்டும்தான் கணக்கில் சேர்த்துக்கொள்ள வேண்டும். மத்திய பாங்குகளில் உறுப்பினர்களாகிய பாங்குகள் போட்டு வைத்துள்ள பணமும், பாங்குகளில் உள்ள பணத்தைப் போலவே கணக்கில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது. தவணை வைப்புகளைச் சேர்த்துக்கொள்ளாமலிருப்பதற்குக் காரணம், அவை இருப்பு மதிப்பீற்காக உதவுகின்றனவேயன்றிச் செலுத்து சாதனங்கள் அல்ல. ஆனால், அவற்றைச் செலுத்து சாதனங்களுக்குச் சமமாகக் கருதலாம். அவை ரொக்கமாகக் கூடிய சொத்துகள், ஆனால், பணமாகக் கருதக்கூடியவையல்ல.[1]

எனினும், தவணை வைப்புகளையும் மற்றக் கடன் பத்திரங்களையும் சேர்க்கக்கூடாது என்பதால், பணமாகக் கருதப்படும் பொருள்களுக்கும் அல்லாதவைகளுக்கும் தெளிவான வேற்றுமையுண்டு என்பது பொருளன்று. உண்மையில், தவணை வைப்புகளுக்கும் நடப்பு வைப்புகளுக்கும் பணம் என்ற தன்மையில் அதிக வேற்றுமை இல்லை. ஒருபுறம், நடப்பு வைப்புகளின் பணத் தன்மையில் குறைகள் உண்டு. விரைவான விற்பனைப் புரள்வு (turn over) உடைய நடப்பு வைப்புகள் அநேகமாகப் பணம்போலச் சுறுசுறுப்பான தன்மையுடையவை; ஆனால் நீண்ட காலம் சோம்பிக் கிடக்கும் நடப்பு வைப்புகள் பண அளிப்பில் முக்கிய அம்சம் பொருந்தியவையா என்பது ஐயமே. மேலும், நடப்பு வைப்புகள்மேல் அளிக்கப்படும் செக்குகள், காகிதப் பணம் போலவோ, நாணயங்கள் போலவோ எளிதில் ஒப்புக்

[1] Edward S. Shaw, 'Money, Income & Monetary Policy,' 1950, p. 37.

கொள்ளப்படுவதில்லை. ஆகவே, பணத்தாள்கள் போலவும், உலோக நாணயங்கள் போலவும் அவை அந்த அளவுக்கு அவ்வளவு எளிதாகச் செலாவணியாவதில்லை. மற்றொரு புறம், சில பொருளாதார வல்லுநர்கள் தவணை வைப்புகள் இருப்பு மதிப்பிற்காகப் பயன்படுவதாலும் சில சமயங்களில் செலுத்து சாதனங்களாகவும் பயன்படுவதாலும், அவை பணமாகக் கருதப்பட வேண்டும் என்பர். எப்படியாயினும், பொருளாதார நோக்கில் பொதுமக்கள் கையில் பயனற்றுக் கிடக்கும் பதுக்கல் பணமும், பயனற்றுக் கிடக்கும் அதிகப் பற்று வசதி, தவணை வைப்பு ஆகியவையும் ஒரே தன்மையுடையவை என்று அவர் கூறுவர். பின்னிரண்டும் முன்னதைப் போலவே பணத் தன்மையுடையவை. இவ்வாறு கூறுவதில் ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால், இவர்கள் 'பணம்' என்பதற்குக் கொள்ளும் பொருள், ஆராய்ச்சிக்குத் தேவையானதைவிட அதிக விரிவானது. பேராசிரியர் J. W. ஏன்ஜெல் என்பவர் பணம் என்பதற்குத் தனியான விளக்கம் எதுவும் கூற முடியாதென்பதைத் தெளிவாக்கியுள்ளார்.[1] அவர் இந்தச் சங்கடத்திலிருந்து தப்புவதற்கு மூன்று வகையான பணங்களை மூன்றுவிதமாக விளக்கியுள்ளார். அவர் கருத்துப்படி, 'மொத்தப் பணம்' என்பதில் தவணை வைப்புகள் அடங்கும். புழங்கும் பணம் என்பதில் தவணை வைப்புகளும் சேமிப்பு வைப்புகளும் சேரா. சுறுசுறுப்பான பணம் என்பது, பதுக்கி வைக்கப்பட்ட பணம் நீங்கலாகப் புழக்கத்தில் உள்ள பணமாகும். இந்த மூன்று வகைப் பணங்களில் பகுத்தாய்வுக்குரியது புழக்கத்தில் உள்ள பணமாகிய இரண்டாவது வகையே.[2] எனினும், பணத்தைப்பற்றிய கருத்துப் பயனுள்ளதாக இருக்கவேண்டுமானால், பணம், பணம் அல்லாதது என்றவற்றிற்கிடையே வேறுபாடு காணவேண்டும். பெரும்பாலான தற்காலப் பொருளாதார வல்லுநர்கள், பணம் என்ற வகையிலிருந்து தவணை வைப்புகளையும், வாணிப உண்டியல்கள், பாங்கு ஒப்புதல்கள், அரசாங்க (கசானை) உண்டியல்கள் முதலிய கடன் பத்திரங்களையும் விலக்கி விடுவர். பண அளிப்பின் ஒரு கூறுகத் தவணை வைப்புகளைச் சேர்த்துக்கொண்டால், மற்ற வகையான வட்டிபெறும் பத்திரங்களை நீக்குவதற்குக் காரணமில்லை. எனவே, தவணை வைப்புகளுக்

[1] அவர் கூறுவதாவது: 'ஒரு பக்கம் சுறுசுறுப்பாகப் புழங்கும் செலாவணிக்கும், மற்றொருபுறம் சேமித்து வைக்கப்படும் பணத்திற்கும், நமக்குக் கிடைக்கும் புள்ளி இயலிலிருந்தும் பணம் சம்பந்தமான நடவடிக்கைகளிலிருந்தும், தெளிவாகத் தெரிந்து கொள்ளக்கூடிய வேற்றுமை ஒன்றும் இல்லை. அநுபவமான பொருள்களில் அன்றி, அடிப்படைத் தருக்க முறைப்படி, தெளிவற்ற தரங்கள் பல உள்ளன." The Behaviour of Money, 1936, p. 8.

[2] W. R. Lane and G. Price 'Money & Supply in Australia', The Economic Record, November, 1952, p. 274.

கும் நடப்பு வைப்புகளுக்கும் வேறுபாடு காட்டுவது வழக்க மாகும். ஆகவே, பண அளிப்பில் கீழ்க்கண்ட கூறுகள் அடங்கும்:

(அ) செலாவணி, அதாவது, புழங்கும் நாணயங்களும் காகிதச் செலாவணியும்; அதாவது, பாங்குகள் வைத்திருக்கும் ரொக்கம் நீங்கலாக மொத்த நாணயங்களும் செலாவணித் தாள் களும்.

(ஆ) பாங்குச் செலாவணி, அதாவது, நடப்புக் கணக்கு இருப்புகள் அல்லது நடப்பு வைப்புகளிலிருந்து பாங்குகளுக் கிடையே உள்ள நடப்பு வைப்புகளையும், பாங்குகள் மத்திய பாங்கில் வைத்திருக்கும் டெபாசிட்டுகளையும் நீக்கிய தொகை.

ஒரு நாட்டில் பண அளிப்பின் வெவ்வேறு கூறுகளின் அளவு, சாதாரணமாகப் பணத்தின் அளவில் மாறுதல்கள் எப்படி உண்டாகும் என்பதையும், மாறுதல்களை உண்டாக்குவ தற்கு எத்தகைய வழிகளை மேற்கொள்ளவேண்டும் என்பதையும் காட்டும். மாற்றமுடியாத காகிதச் செலாவணியை மேற் கொண்டு, கடன் வசதியையும் பெருக்கிக்கொண்டுள்ள நாட்டில், கீழ்வரும் வழிகளில் பண அளிப்பில் மாறுதல்களை உண்டாக்கலாம்; (1) மத்திய பாங்கியோ, அல்லது வேறு செலாவணிக் குழுவோ, சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள அதிக அளவுக்குக் காகிதச் செலாவணியைப் பெருக்கலாம்; (2) பாங்குகளின் கடன் பெருக் கம் பணத்தின் அளவை அதிகரிக்கும். வாணிப பாங்குகள் மத்திய பாங்கியில் வைத்திருக்கவேண்டிய காப்பு நிதிகளைக் குறைப்பதால், பாங்குகள் கடனைப் பெருக்கும் அளவை அதி கரிக்கலாம். மேலும், மத்திய பாங்கானது அரசாங்கத்திற்கோ வாணிப பாங்குகளுக்கோ, கடன் வசதியை உண்டாக்குவதற்குத் தன்னிடமுள்ள அதிகாரத்தைக்கொண்டு பண அளிப்பைப் பெருக்கலாம்; (3) நடப்பு வைப்புகளுக்கும் ரொக்கத்திற்கும் இடையே சமூகம் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும்போது, பணத்தின் அளவு ஒருவாறு நிர்ணயிக்கப்படுகிறது. குறிப்பாகக் கடன் பணமே ஒரு நாட்டின் முக்கியப் பணக் கூறாக இருக்கும்போது இது உண்மையாகும். பாங்குகளில் டெபாசிட்டுகளாக அதிகப் பணம் இருக்கும்போது, கடன் பெருக்கத்திற்காக பாங்குகளில் உள்ள காப்புநிதிகள் அதிகரிக்கப்படுகின்றன. இப்படி அதிகரிக்கப்பட்ட காப்புநிதிகளின் அடிப்படையில் பாங்குகள் கடன் பணத்தின் அளவை அதிகரிக்கலாம்; (4) இதுபோலவே, ஒருபுறம் தவணை அல்லது சேமிப்பு வைப்புகளுக்கும், மற்றொருபுறம் நடப்பு வைப்புகளுக்கும் இடையே சமூகம் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் போது, பண அளிப்பு நேரடியாகப் பாதிக்கப்படுகிறது. நடப்பு வைப்புகள்தாம் பணமாகுமேயன்றித் தவணை வைப்புகள்

ஆகா என்ற காரணத்தினால், பிற் கூறியவைகளை முற்கூறிய வைகளாக மாற்றும்போது, பணத்தின் அளவு அதிகரிக்கிறது. இதற்கு மாறுகச் சமூகம் எப்போதாவது தவணை அல்லது சேமிப்பு வைப்புகளை அதிகம் விரும்பினால், அப்போது பண அளிப்பின் அளவு குறையும்; (5) அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில் மிகுதியான உபரிகள் இருந்தால், பணத்தின் அளவு பாதிக்கப் படும். சாதகமான அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையால் வெளி நாட்டுச் சொத்துகள், செலாவணி இருப்புகள், தனிப்பட்ட ஏற்றுமதியாளர்களின் பாங்கு டெபாசிட்டுகள் ஆகியவை அதிகரிக்கும்; (6) கடைசியாக, அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்ட உபரிகள் பண அளிப்பைக் குறைக்கும் தன்மையுடை யவை. ஆனால், கஜானாவில் உள்ள அரசாங்க இருப்புக் குறைந் தாலோ, பாங்குகளில் உள்ள டெபாசிட்டுகள் குறைந்தாலோ, எதிரிடையான விளைவு உண்டாகும். அடிக்கடி இந்த இரண்டு காரணிகளும் எதிரெதிர்த் திசைகளில் இயங்கிக்கொண்டிருக்கும். பண அளிப்பை அதிகரிக்கும் சக்திகளுக்குச் சமமாக எதிர் சக்திகள் இயங்கிப் பணத்தின் அளவை ஒரே நிலையில் வைத்திருக்கக் கூடும். ஆகவே, எந்த ஒரு குறிப்பிட்ட காலத்திலாவது, பண அளிப்புப் பெருகுவது அல்லது சுருங்குவது ஆக்கக் காரணிகள் மிகுந்திருப்பதையோ இல்லாமலிருப்பதையோ பொறுத்தது.

இந்தியாவில் பண அளிப்பின் முக்கிய வழி மத்திய பாங் காகிய, இந்திய ரிசர்வ் பாங்குதான். கட்டுக்கோப்பில்லாத பகுதியிலிருந்து அளிக்கப்படும் கடன், பணத்தின் முக்கியமான வேலைகளில் சிலவற்றைப் பெரும்பாலும் செய்கிறது என்பது உண்மையே. கட்டுக்கோப்புடைய பகுதியிலிருந்து வரும் பணத்தைவிடக் கட்டுக்கோப்பில்லாத பகுதியிலிருந்து சிறு விவ சாயத் தொழில்களுக்கும் சிறு வியாபாரப் பகுதிகளுக்கும் கிடைக்கும் இத்தகைய வசதிகள் மிக முக்கியமானவை. இருப் பினும், இவற்றைப்பற்றிய சரியான தகவல் கிடைக்காததால், நாட்டில் உள்ள பண அளிப்பை ஆய்வதற்கு இவை பயன்படா. வாணிப பாங்குகளைவிட, ரிசர்வ் பாங்குதான் நாட்டில் பண அளிப்புக்கு வழியாக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. ஏனென்றால், இந்தியாவில் பண அளிப்பின் மிக முக்கியமான கூறுக உள்ளது செலாவணிதான்; அதாவது, தாள் பணமும் உலோகப் பணமும்தான். 1960 மார்ச் முடிவில் இந்தியாவில் நோட்டுகளும் ரூபாய் நாணயங்களுமாகச் சேர்ந்து ரூ. 1932 கோடி மதிப்புடையவையாய் இருந்தன; ஆனால், ஷெடியூல் பாங்குகள், ஷெடியூல் அல்லாத பாங்குகள், கூட்டுறவு பாங்குகள் ஆகியவை தமக்குள் வைத்திருந்த டெபாசிட்டுகள் நீங்கலாக

நடப்புப் பொறுப்புகள் (demand liabilities) ரூ. 819 கோடிதான் இருந்தன. எனவே, மொத்தப் பண அளிப்பில் 30 சதவீதம்தான் நடப்பு வைப்புகள் இருந்தன.[1] இதற்கு மாறுக, அமெரிக்கா போன்ற பொருளாதார முன்னேற்றமடைந்த நாட்டில் மொத்தப் பணத்தில் 75 சதவீதம் நடப்பு வைப்புகள் உள்ளன.

முன்னே கூறப்பட்ட கொள்கையின் அடிப்படையில், இந்தியாவில் உள்ள மொத்தப் பணம் (அதாவது, சமூகத்தினிடம் உள்ள எல்லாவிதமான பரிவர்த்தனைச் சாதனங்களும்) கீழ்வரும் இரண்டு கூறுகளின் மொத்தமாகும் :

(1) கஜானாக்களில் மத்திய அரசாங்கமும் இராச்சிய அரசாங்கங்களும் வைத்துள்ள இருப்புகளையும், ஷெடியூல் பாங்குகள், ஷெடியூல் அல்லாத பாங்குகள், கூட்டுறவு பாங்குகள் ஆகியவை வைத்துள்ள ரொக்கமும் நீங்கலாகப் புழக்கத்தில் உள்ள நோட்டுகளும் நாணயங்களும்.

(2) ஷெடியூல் பாங்குகள், ஷெடியூல் அல்லாத பாங்குகள், கூட்டுறவு பாங்குகள் ஆகியவற்றின் நிகரப் பொறுப்புகளும்,[2] மத்திய அரசாங்கமும் பாங்குகளும் ரிசர்வ் பாங்கில் வைத்துள்ள டெபாசிட்டுகள் நீங்கலாக, ரிசர்வ் பாங்கில் உள்ள டெபாசிட்டுகளும்.

பண அளிப்பில் பருவகால மாறுதல்

ஒரு நாட்டில் புழக்கத்தில் உள்ள பணத்தின் அளவு இருவிதமான மாறுதல்களுக்குட்பட்டது. ஒன்று பருவகால மாறுதல், மற்றொன்று நீண்டகால வகையைச் சேர்ந்தது. சுறுசுறுப்பான பருவத்தில் சமூகத்திற்கு வியாபாரத்திற்காக அதிகப் பணம் தேவைப்படுகிறது என்பதையும், மந்தகாலத்தில் அத் தேவை சுருங்குகிறது என்பதையும் அடிப்படையாகக்கொண்டு பண அளிப்பில் பருவகால மாறுதல் உண்டாகிறது. இதன் விளைவாக வருடத்தில் சில மாதங்களில் அதிகப் பணம் வாங்கிக்கொள்ளப்

1 வளர்ச்சி குன்றிய நாடுகளின் இயல்பு இதுவாகும். இந்தியா, பர்மா, மலேயா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில், மொத்தப் பணத்தில் நடப்பு வைப்புகளின் சதவீதம் 30 முதல் 40 வரைதான் உள்ளன. ஆசியா நாடுகளிலும் தூரக்கிழக்கு நாடுகளிலும் இவ் விஷயத்தில் ஜப்பானும் இலங்கையும் விதிவிலக்காகும். அவற்றின் மொத்தப் பண அளிப்பில் 60 சதவீதத்திற்குமேல் நடப்பு வைப்புகள் உள்ளன. See 'Economic Survey of Asia and the Far East,' United Nations, 1950, p. 461.

2 அதாவது, பாங்குகள் தமக்குள் வைத்துக்கொள்ளும் டெபாசிட்டுகள் தவிர உள்ள நடப்பு வைப்புகள். 1948 ஜூலை முதல்தான், ஷெடியூல் பாங்குகளின் பரஸ்பர நடப்பு வைப்புகளைப்பற்றிய விவரங்கள் தெரிந்திருப்பதால், 1949–50 முதல் இது சம்பந்தமாகக் கழிவு செய்யப்பட்டுள்ளது. இதுபோல, 1951–52 முதல் ஷெடியூல் அல்லாத பாங்குகள் சம்பந்தமாகக் கழிவு செய்யப்பட்டிருக்கிறது.

பட்டு, மற்ற மாதங்களில் திருப்பியளிக்கப்படுகிறது. இந்தியாவில் பண அளிப்பில் பெரும்பகுதி நோட்டுகளாகவும் நாணயங்களாகவும் இருப்பதால், பண அளிப்பில் உண்டாகும் பருவகால மாறுதல்கள், புழக்கத்தில் உள்ள செலாவணியளவோடு அவை பெரும்பாலும் தொடர்புடையனவாய் உள்ளன. உண்மையில், பருவகாலத்தில் டெபாசிட் பணம் பெற்றுக்கொள்ளப்படுவதும், திருப்பியளிக்கப்படுவதும் செலாவணியளிப்பில் உண்டாகும் மாறுதல்களுக்கு எதிரிடையாக இயங்குகின்றன. இது பின்னர் விளக்கப்படும். நாட்டின் பெரும்பகுதிகளில், ஆண்டின் சுறு சுறுப்பான பகுதி கடைசிப் பகுதியும் முதல் பகுதியும் ஆகும். ஏப்ரல் முதல் செப்டெம்பர் வரையில் மந்த காலமாகும். வழக்க மாக மந்தகாலத்தில் ஆகஸ்டு, செப்டெம்பரில் மிகத் தாழ்ந்த நிலையும், வருடத்தில் முதல் அல்லது இரண்டாவது மாதத்தில் சுறுசுறுப்பான காலத்தின் உச்ச நிலையும் காணப்படுகின்றன. போருக்கு முந்திய சில ஆண்டுகளில் செலாவணி உபயோகத்தில் பருவகால மாறுதல்கள் இந்த முறையில்தான் அமைந்திருந்தன.

போருக்குப் பிறகு, செலாவணியை உபயோகிப்பதிலும் திருப்பிக் கொடுப்பதிலும் காணப்பட்ட பருவகால மாறுதலின் ஒழுங்கு மாறிவிட்டது. நாட்டில் உண்டான பொருளாதார நடவடிக்கையின் வேகமும் அரசாங்கச் செலவீட்டில் உண்டான அதிக உயர்வும் பருவகாலச் செலாவணி ஏற்றத் தாழ்வுகளைக் கணிசமாகக் குறைத்துவிட்டன. இவை முன் எப்பொழுதும் இல்லாத அளவுக்கு வேகமாகவும் படிப்படியாகவும் செலாவணித் தேவையை அதிகரித்தன. 1940–41, 1941–42 ஆண்டுகளின் மந்த காலங்களில், வழக்கமான வாபசுக்குப் பதிலாக நிகரச் செலாவணி உபயோகம் காணப்பட்டது. 1940–41, 1943–44, 1945–46 ஆண்டு களின் மந்தகாலங்களில் உண்டான செலாவணித் தேவை, அவ்வாண்டுகளின் சுறுசுறுப்பான காலத்தில் பயன்படுத்தப்பட்ட செலாவணியைவிட அதிகமாக இருந்தது. இந்தச் சுறுசுறுப்பான காலங்களில் செலாவணியைப் பயன்படுத்தும் விகிதம் அதிகரித்த தாலும், அதைப் பயன்படுத்தும் காலம் அளவுகடந்து நீடித்த தாலும், திருப்பித்தரும் காலம் சுருங்கிவிட்டதாலும் பணத்தின் அளவில் அதிக உயர்வு உண்டாயிற்று. 1939 செப்டெம்பரில் தொடங்கிய செலாவணி உபயோக காலம், 1940-ன் முதல் கால் பகுதியில் வழக்கப்படி முடியாமல், 1940 ஜூன் இறுதிவரை தொடர்ந்து சென்றது. அதுபோலவே, 1940 அக்டோபர் முதல் 1941 ஜூன் வரை, 9 மாதங்கள் அடுத்து அதன் உபயோக காலம் நீண்டு சென்றது. 1941 ஆகஸ்டு முதல் 1944 ஜூன்வரை உள்ள காலம் முழுவதிலும் (இக் காலத்தில் போர்க்காலப் பணப்

பெருக்கம் உச்சநிலையை அடைந்தது) இடைவிடாமல் பணம் பயன்படுத்தப்பட்டுவந்தது. 1944 ஆகஸ்டுக்கும் 1945-ன் இறுதிக்கும் இடையில், ஒரே ஒரு மாதத்தில்தான் (ஜூலை 1945) செலாவணி திருப்பித்தரப்பட்டது. பண அளிப்பில் உள்ள பருவகால மாறுதல்களைப் போர்க்கால நிலை தற்காலிகமாக அமுக்கி வைத்திருப்பினும், அந்த அமைப்பு அழிந்துவிடவில்லை. போர்க் காலத்தில்கூடச் செலாவணியைப் பயன்படுத்தும் விகிதத்தில் பருவகால மாறுதல்கள் காணப்பட்டன. ஜூலை மாதத்தில் இவ் விகிதம் மிகவும் குறைந்திருந்தது. செலாவணியைப் பயன் படுத்துவதிலும் திருப்பித்தருவதிலும் உள்ள பருவகால மாறு தல்கள் இதிலிருந்து விளங்கும்.

சாதாரண காலத்தில் செலாவணி ஏற்றத்தாழ்வுகள் (போர் தொடங்குவதற்குச் சில ஆண்டுகள் முன்னர் இருந்ததுபோல) தொழில் நடவடிக்கையைப் பொறுத்து ஒரு பொதுவான அமைப்புக்குட்பட்டிருப்பினும், டெபாசிட் பணத்தின் இயக்கம் எதிர்த்திசையில் இருந்தது, போருக்கு முன்பு, சுறுசுறுப்பான காலத்தில் நோட்டுப் புழக்கம் அதிகரித்து நடப்பு வைப்புகள் குறைந்தன. மந்தகாலத்தில் இதற்கு எதிரான மாறுதல் நிகழ்ந்தது. போர் நடந்த ஆண்டுகளில் செலாவணி, கடன் வசதி ஆகிய இரண்டும் பணவீக்க முறையில் பெருகிய காரணத் தினால், பண அளிப்பின் இவ்விரண்டு கூறுகளும் பருவகால இயக்கத்தில் காணப்பட்டன. இவ் வித்தியாசம் இல்லாது போயிற்று. எனினும், இக் காலத்தில் இந்த இரண்டுவிதமான பணங்களின் பெருக்கத்தில் உள்ள விகிதத்தின் வித்தியாசம் காணப்பட்டது. சுறுசுறுப்பான காலங்களில், நடப்பவைகளை விட, நோட்டுப் புழக்கத்தில் அதிக உயர்வு உண்டாயிற்று. போர் முடிந்த பிறகு, செலாவணி, டெபாசிட்டு ஆகிய இரண் டின் இயக்கத்திலும் காணப்படும் சாதாரண அமைப்பு மீண்டும் தோன்றியது. போருக்குப் பிந்திய முதல் நிறையாண்டாகிய 1946-47-ன் மந்த காலத்தில் நோட்டுப் புழக்கம் 3 சதவீதம் குறைந்தது; ஆனால், டெபாசிட்டுகள் 7 சதவீதம் அதிகரித்தன. அதே ஆண்டில் சுறுசுறுப்பான பருவத்தில், நோட்டுப் புழக்கத் தில் 5 சதவீதப் பெருக்கமும், நடப்பு வைப்புகளில் 9 சதவீதச் சுருக்கமும் காணப்பட்டன. இந்த மறுமலர்ச்சி அடுத்த ஆண்டில் பின்னடைந்தது. அப்போது பாங்குகள் கடன் வசதியைப் பெருக்கியதாலும், அரசாங்கம் அதிகமாகப் பணத்தை வழங்கிய தாலும், சுறுசுறுப்பான காலத்தில் டெபாசிட் பணம் 7 சதவீதம் அதிகரித்தது. 1948–49-ல் சாதாரண பருவகாலப் போக்குகள் மீண்டும் தென்பட்டன; அதுமுதலாக டெபாசிட் பணத்தைப்

அட்டவணை 15

பண அளிப்பில் பருவகால மாறுதல்கள்

(கோடி ரூபாய்களில்)

மாதங்கள் 1. மந்த பருவம் 2. சுறுசுறுப்பான பருவம்		பொதுமக்களிடம் உள்ள செலாவணி*	நடப்புப் பொறுப்புகள்†
1943–44	1	+ 113	+ 90
	2	+ 118	+ 64
1944–45	1	+ 59	+ 64
	2	+ 144	+ 9
1945–46	1	+ 57	+ 48
	2	+ 77	+ 56
1946–47	1	— 31	+ 47
	2	+ 54	— 67
1947–48	1	— 68	+ 18
	2	+ 130	+ 50
1948–49	1	— 55	+ 19
	2	+ 47	— 57
1949–50	1	— 125	+ 8
	2	+ 122	— 15
1950–51	1	— 110	+ 18
	2	+ 220	— 1
1951–52	1	— 193	— 9
	2	+ 53	— 29
1952–53	1	— 91	— 21
	2	+ 88	— 1
1953–54	1	— 100	— 10
	2	+ 133	+ 11
1954–55	1	— 67	+ 21
	2	+ 157	+ 35
1955–56	1	— 12	+ 22
	2	+ 207	+ 42
1956–57	1	— 96	— 8
	2	+ 144	+ 94
1957–58	1	— 90	+ 5
	2	+ 143	+ 24
1958–59	1	— 87	— 71
	2	+ 219	+ 68
1959–60	1	— 57	— 53
	2	+ 201	+ 73

* 1951–52 வரை நோட்டுகள்மட்டும்; 1952–53 முதல் ரூபாய் நாணயங்களும் அடங்கும்.

† 1948–49 வரை, பாங்கு பரஸ்பர டெபாசிட்டுகளும் சேர்ந்தது; 1949–50 முதல் நிகரம்.

(ஆதாரம்: 'Reports on Currency and Finance,' Reserve Bank of India).

பொறுத்தமட்டில் இல்லாவிடினும், செலாவணியைப் பொறுத்த மட்டிலாவது இடையீடின்றித் தொடர்ந்து வருகின்றன. கடந்த சில ஆண்டுகளில் நிகழ்ந்த ஒரு முக்கிய மாறுதலைக் குறிப்பிடவேண்டும். சுறுசுறுப்பான பருவத்தில் பணப்பெருக்கம் அதிகரித்துக்கொண்டே யிருக்கும். ஆனால், மந்த காலத்தில், அதனோடு ஒப்பிடும்போது பணச்சுருக்கம் அவ்வளவு அதிகமாக இல்லை. அதே சமயத்தில் மந்த காலத்திலும் சுறுசுறுப்பான காலத்திலும் நடப்பு வைப்புகள் அதிகரிக்கின்றன. முதன்மை யான பகுதியோடு ஒப்பிடும்போது, இரண்டாவது, மூன்றாவது பகுதிகளில் விரைவான முன்னேற்றம் உண்டாவதன் இயல்பான விளைவையும், பொருளாதார முன்னேற்றத்தின் அதிக வேகத்தை யும் இது காட்டுகிறது (அட்டவணை 15ஐக் காண்க).

பண அளிப்பில் நீண்ட கால மாறுதல்கள்

பண அளிப்பில் பருவகால மாறுதல்கள், ஆண்டுதோறும் மாறிமாறி வரும் சாதாரணத் தொழில் நடவடிக்கைகளில் உண் டாகும் மாறுதலால் சமூகத்திற்குத் தேவையான பணம் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறது என்பதைக் காட்டும். இதற்கு மாறாகப் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளில் பரவியுள்ள பண அளிப்பில் ஏற்படும் மாறுதல்கள், ஒரு நாட்டின் உள்ளையும் வெளியேயும் உண்டாகும் நிகழ்ச்சிகளால் அந்த நாட்டின் பொரு ளாதாரத்தில் எத்தகைய அடிப்படையான மாறுதல்கள் ஏற்படு கின்றன என்பதைக் காட்டும். இதுபோன்ற பணப்பெருக்கம் அல்லது சுருக்கம், ஒரு நாட்டின் அயல்நாட்டுக் கொடுப்பல் நிலை யாலும், அரசாங்கத்தின் நடவடிக்கையாலும், மத்திய பாங்கி னாலும், வாணிப பாங்குகளினாலும், பொதுமக்களாலும் பணத் துறையில் உண்டாக்கப்படுகிறது. சாதகமான கொடுப்பல்நிலை, வரவுசெலவுத் திட்டப் பற்றுக்குறை, முந்திய ஆண்டுகளில் வெளி யிடப்பட்ட அரசாங்கப் பத்திரங்களை மத்திய பாங்கு அதிகமாக வைத்துக்கொள்ளுதல், வாணிப பாங்குகள் கொடுக்கும் கடன் அதிகரித்தல், அவைகளால் கழிவுசெய்யப்படும் உண்டியல்களின் மதிப்பு, தவணை வைப்புகள், சேமிப்பு வைப்புகள் ஆகியவற்றிற் குப் பதிலாகப் பொதுமக்கள் நடப்பு வைப்புகளை விரும்புதல் இவையெல்லாம் பண அளிப்பில் பெருக்கத்தை விளைவிக்கும். இவற்றிற்கு மாறான போக்குகள் எதிரான பலன்களை விளை விக்கும். கடந்த இருபதாண்டுகளில் இந்தியாவில் இவையெல் லாம் நிகழ்ந்துகொண்டிருந்தன. சில சமயங்களில் இவற்றின் விளைவுகள் ஒன்றுகத் திரண்டுவிடும். அதனால், சில ஆண்டுகளில் பண அளிப்பின் அளவு திடீரென்று அதிகரித்துவிட்டது; மற்றச் சமயங்களில் அவை மாறான போக்கைக் கொண்டுவிட்டன.

அட்டவணை 16

(a) பிரிக்கப்படாத இந்தியாவில், 1938–39 முதல் 1947–48 வரையில் பண அளிப்பு (கோடி ரூபாய்களில்)

வருடம்	செலாவணி: நோட்டுகள்	செலாவணி: ரூபாய் நாணயங்கள் (e)	செலாவணி: கஜானாக்களில் இருப்புகள்	செலாவணி: பாங்குகளில் சொக்கம் (b)	செலாவணி: மக்களிடமுள்ள மொத்தச் செலாவணி (1+2−3−4)	மக்களிடமுள்ள செலாவணியில் மாறுதல்கள்	டெபாசிட் பணம்: பாங்குகளின் நடப்பு வைப்புகள் (c)	டெபாசிட் பணம்: ரிசர்வ் பாங்கில் மத்திய அரசாங்கத்தின் டெபாசிட்டு	டெபாசிட் பணம்: ரிசர்வ் பாங்கில் பாங்குகளின் டெபாசிட்டு	டெபாசிட் பணம்: மற்ற அரசாங்களின் டெபாசிட்டு	டெபாசிட் பணம்: மற்ற டெபாசிட்டுகள்	டெபாசிட் பணம்: மக்களிடம் உள்ள டெபாசிட் பணம் (7+10+11)	மக்களிடம் உள்ள டெபாசிட் பணத்தில் மாறுதல்கள்	மக்களிடம் உள்ள மொத்தப் பணம் (5+12)	மக்களிடம் உள்ள பணத்தில் மாறுதல்கள்
	1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15
1938–39	178	120	2	9	287	—	168	9	11	7	1	176	—	463	—
1939–40	225	120	2	10	333	+ 46	187	8	18	11	1	199	+ 23	532	+ 69
1940–41	241	120	2	13	346	+ 13	215	5	35	12	6	223	+ 34	579	+ 47
1941–42	382	122	2	16	486	+ 140	276	7	42	12	2	290	+ 57	776	+ 197
1942–43	644	124	1	25	742	+ 256	435	19	47	16	5	456	166	1198	+ 422
1943–44	882	137	2	34	983	+ 241	596	76	50	25	15	636	+ 180	1619	+ 421
1944–45	1085	147	3	41	1188	+ 205	682	254	85	29	23	734	+ 98	1922	+ 303
1945–46	1219	166	7	44	1334	+ 146	742	521	71	36	9	787	+ 53	2121	+ 199
1946–47	1242	168	2	45	1363	+ 29	719	432	71	30	16	765	— 22	2128	+ 7
1947–48	1304	155	1 (d)	44	1415	+ 52	777	320	79	24	21	822	+ 57	2237	+ 109

(a) சிறு நாணயங்கள் சேர்க்கப்படவில்லை ; ஆண்டு முடிவு விவரங்கள்.
(b) ஷெடியூல், ஷெடியூல் அல்லாத, கூட்டுறவு பாங்குகள்.
(c) ஷெடியூல் பாங்குகள் தமக்குள் வைத்துள்ள நடப்பு வைப்புகள் உட்பட.
(d) இந்திய யூனியனுக்குமட்டும்.
(e) 1940–41 வரை மதிப்பீட்டு விவரங்கள்.

(ஆதாரம் : 'Reports on Currency and Finance', Reserve Bank of India.)

அதனால் அவற்றின் விளைவுகள் இல்லாமற்போய், பண அளிப்பின் ஏற்றத்தாழ்வுகள் கணிசமாக மட்டுப்படுத்தப்பட்டன. போர் தொடங்கியபிறகு இந்த வெவ்வேறு பணப்பெருக்க சக்திகள் பண அளிப்பை எப்படிப் பாதித்தன என்பதை இப்பொழுது ஓரளவு விரிவாக ஆராய்வோம்.

(பிரிக்கப்படாத) இந்தியாவில் மொத்தப் பணஅளிப்பு (சிறு நாணயங்கள் தவிர) 1938-39-ல் ரூ. 463 கோடியாக இருந்து, 1947–48-ல் ரூ. 2,237 கோடியாக உயர்ந்தது. இதில் செலாவணி ரூ. 287 கோடியிலிருந்து ரூ. 1415 கோடியாகவும், டெபாசிட் பணம் ரூ. 176 கோடியிலிருந்து ரூ. 822 கோடியாகவும் உயர்ந்தன. ஆக, இந்த ஒன்பதாண்டுக் காலத்தில் செலாவணியும் நடப்பு வைப்புகளும் ஐந்து மடங்கு அதிகரித்தன. இத்திய யூனியனில் 1948-49-ல் புழக்கத்தில் இருந்த பணத்தின் அளவுபற்றிய விவரம் தெரியவில்லை. 1950–51 முதல் பணஅளிப்பின் போக்கில் இரண்டு கட்டங்கள் காணப்படுகின்றன. 1951–53 ஆகிய இரண்டாண்டுகளில் பணஅளிப்பில் ரூ. 215 கோடி குறைந்தது. இதில் பெரும் பகுதி 1951–52-ல் நிகழ்ந்தது. அடுத்த ஆறு ஆண்டுகளில் பண அளிப்பில் ரூ. 733 கோடி அதிகமாயிற்று. ஆண்டுதோறும் அதிகரிப்பு விகிதம் 1·7 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக உயர்ந்தது. முதல் திட்டகாலம் முழுவதிலும் பண அளிப்பில் நிகர அகரிப்பு, ரூ. 204 கோடி அல்லது 10·4 சதவீதமாயிற்று. 1948–49 வரை செலாவணிக்கும் மொத்தப் பண அளிப்பிற்கும் உள்ள விகிதம் அநேகமாக நிலையாயிருந்தது. அது 60 முதல் 63 சதவீதம்வரை இருந்தது. 1950–51 முதல் செலாவணி சிறிது அதிக விகிதத்தில் இருந்தது. 1950–51-ல் அது 68 சதவீதமாகவும், 1955–56-ல் 70 சதவீதமாகவும், 1958–59-ல் 69 சதவீதமாகவும் இருந்தது.

1947–48 வரையில் பணப்பெருக்கம்

1947–48 வரையில் இடைவிடாமல் பணஅளிப்புப் பெருக்கம் தொடர்ந்திருந்தது எனினும், ஆண்டுதோறும் அதிரிப்பு விகிதம் ஒரேமாதிரியாக இல்லை. போர் தொடங்கியபிறகு ஒன்பதாண்டுகளில், முதல் இரண்டாண்டுகளில் பண அளிப்புப் பெருக்கம் மட்டாக இருந்தது என்பதும், 1945-ல் போர் முடிந்தபிறகும் அவ்வாறே இருந்தது என்பதும் படம் · நான்கைப் பார்த்தால் தெளிவாகும். முதல் இரண்டு காலப்பகுதிகளில் ஆண்டு வளர்ச்சி விகிதம் முறையே 12 சதவீதம், 6 சதவீதமாக இருந்தது. 1940–41, 1944–45 ஆண்டுகளுக்கிடையில் மிகப் பெரிய பெருக்கம் உண்டாயிற்று. இந்தக் காலத்தில் வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு 59 சதவீதமாக இருந்தது.

அட்டவணை 17

1950–51 முதல் 1959–60 வரையில் இந்திய யூனியனில் பண அளிப்பு
(கோடி ரூபாய்களில்)

கடைசி வெள்ளிக் கிழமை	பொது மக்களிடம் இருந்த செலாவணி						டெபாசிட் பணம்				மக்களிடம் உள்ள மொத்த பண அளிப்பு (5+9)	மக்களிடம் உள்ள பணத்தில் மாறுதல்கள் (6+10)
	நோட்டுகள்	ரூபாய் நாணயங்கள்	கஜானாக்களில் இருப்பு	ரொக்கம் பாங்குகளில் கம்	மக்களிடம் உள்ள மொத்தச் செலாவணி (1+2−3−4)	மாறுதல்கள்	பாங்குகளின் நடப்புப் பொறுப்புகள்	ரிசர்வ் பாங்கியில் உள்ள மற்ற டெபாசிட்டுகள்	மக்களிடம் உள்ள டெபாசிட் (7+8)	மாறுதல்கள்		
	1	2	3	4	5	6	7	8	9	10	11	12
1950–51	1238·60	144·11	4·42	39·1	1339·19	+ 87·91	614·29	26·01	640·3	+ 30·93	1979·49	+ 118·84
1951–52	1128·29	181·11	3·70	39·13	1216·57	− 114·84	567·62	19·60	587·22	− 60·08	1803·79	− 174·92
1952–53	1119·06	125·22	7·34	37·69	1199·25	− 17·32	548·95	16·51	565·46	− 21·76	1764·71	− 39·08
1953–54	1150·17	120·71	4·26	37·19	1229·43	+ 30·18	549·83	14·71	564·54	— 0·92	1793·97	+ 29·26
1954–55	1236·44	115·01	2·83	36·85	1311·77	+ 82·34	599·16	9·71	608·86	+ 44.31	1920·63	+ 126·65
1955–56	1424·23	123·45	1·14	41·45	1505·09	+ 193·32	667·22	12·01	679·23	+ 70.37	2184·32	+ 263·69
1956–57	1483·20	118·30	5·31	39·70	1556·50	+ 51·41	744·74	11·65	756·39	+ 77·16	2312·89	+ 128·57
1957–58	1535·96	116·46	4·23	41·59	1606·60	+ 50·10	762·36	19·87	782·22	+ 25·83	2388·83	+ 75·94
1958–59	1658·36	120·59	7·42	47·77	1723·75	+ 117·15	754·87	19·25	774·12	− 8·10	2497·87	+ 109·04
1959–60	1801·73	130·28	2·95	67·04	1862·03	+ 137·50	817·19	21·75	838·98	+ 64·75	2701·01	+ 202·26

(ஆதாரம் : 'Reports on Currency and Finance,' Reserve Bank of India.)



படம் 4. பண அளிப்பு, 1938–39 முதல் 1959–60 வரை.

படம் 4, பண அளிப்பில் ஆண்டுக்கு நிகர உயர்வு அல்லது தாழ்வு எவ்வளவு என்பதைக் காட்டுகிறது. 1941–43-ல் உண்டான வேகமான பண அளிப்பு அதிகரிப்பில், செலாவணியைவிட டெபாசிட்டுகள் குறைவாகவே இருந்தன. 1942–43-ல் செலாவணிப் பெருக்கத்தின் வருடாந்தர விகிதம் உச்சநிலையை அடைந்தது. போர் முடிந்தபிறகு, இவ்வாண்டின் உபயோக விகிதம் திடீரென்று கீழே இறங்கியது. அப்போது முதல் தடவையாக 1946–47-ல் டெபாசிட் பணம் நிகரமாகக் குறைந்தது. இந்தியா பிரிக்கப்பட்டபிறகு, 1950–51-ல், செலாவணியிலும் டெபாசிட்டிலும் நிகர உயர்வு உண்டாயிற்று. அடுத்த இரண்டாண்டுகளில் இரண்டும் நிகரமாகத் திருப்பித்தரப்பட்டன. 1953–54-க்குப் பிறகு மேலும் அவை அதிகரித்தன.

போர்க்காலத்திலும் போருக்குப் பிற்காலத்திலும் பண அளிப்புப் பெருக்கத்தின் விகிதத்தில் உண்டான இந்த ஏற்ற இறக்கங்களுக்குக் காரணங்களை இப்பொழுது ஆராய்வோம். போர் தொடங்கியவுடன் உண்டான பண அளிப்புப் பெருக்கம் அதற்கு முன்பு நாட்டில் இருந்த பணப்போக்கிற்கு முற்றிலும் மாறுக இருந்தது. 1941 மார்ச்சுடன் முடிந்த இரண்டாண்டுகளில் ரூ. 118 கோடி பெறுமானமிகுந்த செலாவணி உபயோகிக்கப்பட்டது. 1938–39 உடன் முடிந்த 20 ஆண்டுகளில் ரூ. 68 கோடிதான் திருப்பியளிக்கப்பட்டது. 1919–20-ல் நோட்டுப் புழக்கம் ரூ. 37 கோடியாக இருந்தது. அதன்பிறகு 1939–40-ல்தான் மிக உயர்ந்த அளவையடைந்து சராசரி ரூ. 26 கோடியாயிற்று. பணத்திற்குத் தேவை மிகுதியாக இருந்தது என்பது, வாணிப பாங்குகள் ரிசர்வ் பாங்கில் டெபாசிட் செய்திருந்த அளவில் குறை ஏற்பட்டதிலிருந்தும், ரிசர்வ் பாங்கின் ரொக்க இருப்புக் குறைந்ததிலிருந்தும் தெரிகிறது. அதே சமயத்தில் பண்ட மார்க்கெட்டுகளிலும், பங்கு பரிவர்த்தனை மார்க்கெட்டுகளிலும், வெள்ளி மார்க்கெட்டிலும் அதிக நிதி தேவைப்பட்டதால், வியாபார பாங்குகளின் டெபாசிட்டுகள் கணிசமாக உயர்ந்தன. ஷெடியூல் பாங்குகளின் மொத்தப் பொறுப்பு 1939 மார்ச்சில் ரூ. 238 கோடியாயிருந்து, 1940 மார்ச்சில் ரூ. 259 கோடியாக உயர்ந்தது. இதற்கேற்பக் கடனுகக் கொடுத்த தொகையும் அதிகரித்தது. எனினும், இந்த அதிக வியாபார நடவடிக்கை சிறிது காலமே இருந்தது. மொத்தத்தில், போரின் இரண்டாவது ஆண்டில் பணம் எளிதாகக் கிடைத்தது. சுறுசுறுப்பான பருவத்தில்கூடப் பணத்திற்கு அதிகத் தேவை காணப்படவில்லை. பம்பாயிலும் கல்கத்தாவிலும் நாள் நிலுவைக் கடன் (call money) வட்டி வீதம் மிகவும் குறைந்தது. இம்பீரியல் பாங்கியின் உண்

டியல் வட்டி வீதம் 3½ சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைந்தது. எனினும், புழக்கத்தில் இருந்த நோட்டுகள், நாணயங்கள் ஆகியவற்றின் அளவு தொடர்ந்து பெருகிவந்தது. 1920–21 முதல் தொடர்ந்திருந்த ரூபாய் நாணயங்கள் திரும்பிவரும் போக்கு போர் தொடங்கியவுடன் மாறி, ரூபாய்கள் படிப்படியாக வெளியேறத் தொடங்கின. 1939 செப்டம்பர் முதல் தேதி ரிசர்வ் பாங்கின் வெளியீட்டுப் பிரிவில் ரூ. 75 கோடியாக இருந்த ரூபாய் நாணய இருப்பு, 1940-ன் மத்தியில் சட்டப்படி இருக்கவேண்டிய இருப்புக்கும்கீழ் ரூ. 50 கோடி குறைந்து ரூ. 35 கோடிக்கு இறங்கியது. எப்பொழுதும் இல்லாத அளவுக்கு ரூபாய் நாணயங்களின் உபயோகம் அதிகரித்தது, உண்மையான வியாபார நடவடிக்கையால் அன்றி, அதிகமாகப் பதுக்கும் நடவடிக்கையால் ஆகும். இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் இந்திய அரசாங்கம் ஒரு விதியைப் பிறப்பித்து, எவரும் தம் சொந்தத் தேவைக்கோ வியாபாரத் தேவைக்காகா வேண்டிய அளவுக்கு மேல் அதிகமாக நாணயங்களை வைத்துக்கொள்வது குற்றமாகும் என்று தெரிவித்ததிலிருந்து இப் போக்குத் தடைப்பட்டது. ஒரு ரூபாய் நோட்டுகள் வெளியிடப்பட்டுப் புழக்கத்தில் வந்தாலும், விக்டோரிய ரூபாய் நாணயங்களைத் திரும்பப்பெற்றதாலும் நிலைமை எளிதாயிற்று. ஆகவே, 1941–42-ல் ரூபாய் நாணயங்களின் உபயோகம் ரூ. 7 கோடியாயிற்று. அதற்கு முந்திய ஆண்டில் அது ரூ. 33 கோடியாகவும், 1939–40-ல் ரூ. 10 கோடியாகவும் இருந்தது. எனினும், போரைத் தொடர்ந்து தோன்றிய பதுக்கல் நடவடிக்கை குறைந்துவிட்டது என்பது இதற்குப் பொருளன்று. உண்மையில் மேலே குறிப்பிடப்பட்ட அவசரச் சட்டத்தினால் ரூபாய் நாணயங்களின் பதுக்கல் அதிக அளவில் குறைக்கப்பட்டது. ஆனால், சிறு நாணயங்களைப் பொறுத்து இந்தப் போக்குத் தோன்றியது. 1939 செப்டெம்பர் முதல் 1942 மார்ச்சுவரையில், எந்த மாதத்திலும் சிறு நாணயங்கள் நிகரமாகத் திரும்பிவரவில்லை. இந்தக் காலத்தில் சுமார் ரூ. 12 கோடி மதிப்புள்ள சிறு நாணயங்கள் உபயோகிக்கப்பட்டன. முதல் உலகப் போர்க்காலம் முழுவதிலும் இருந்ததைவிட இது அதிகமானது. இதிலிருந்து தெரிவது என்னவென்றால், போர் தொடங்கியதால் முதலில் சிறிது வியாபார நடவடிக்கை உயர்ந்து, அது சீக்கிரத்தில் அடங்கிவிட்டது. அளவுகடந்த செலாவணி உபயோகம், வியாபாரத்திற்காகச் சமூகத்திற்குத் தேவைப்பட்ட பணத்தின் அளவைக் குறிக்காது.

1941-க்கும் 1945-க்கும் இடையில் புழக்கத்தில் இருந்த பணத்தின் அளவு மிகவும் அதிகமாகிவிட்டது. 1939-க்கும்

1948-க்கும் இடையில் உண்டான ரூ. 1,774 கோடி அதிகரிப்பில், 1941–45-க்கு இடையில் உள்ள நான்கு ஆண்டுகளில்மட்டும் ரூ. 1,343 கோடி அதிகமாயிற்று. அதாவது,70 சதவீதத்திற்குமேல் அதிகமாயிற்று. போரின்போது புழக்கத்தில் உள்ள நோட்டுகள் 5½ மடங்கு அதிகமாயின; நடப்பு வைப்புகள் 4 மடங்கு அதிக மாயின. 1941–42-ன் சுறுசுறுப்பான பருவத்தில் நோட்டுப் புழக்கத்தில் பெருக்கம் மிக அதிக விகிதம் அடைந்தது. 1942–43-ன் மந்த பருவத்தில் நடப்பு வைப்புகளின் விகிதம் மிகவும் குறைந்தது. அட்டவணை 18-ல் போர்க்காலச் செலாவணி உபயோகத்தின் விவரம் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 18

போர்க்காலச் செலாவணி உபயோகம்

(இலட்ச ரூபாய்களில்)

காலம்	நோட்டுகள்*	ரூபாய் நாணயம்*	சிறு நாணயம் †	மொத்தம்
1939 செப்.—1940 ஆகஸ்டு	5260	5282	450	10992
1940 செப்.—1941 ஆகஸ்டு	4510	— 384	396	4522
1941 செப்.—1942 ஆகஸ்டு	22600	1174	712	24486
1942 செப்.—1943 ஆகஸ்டு	28038	5495	1458	34991
1943 செப்.—1944 ஆகஸ்டு	17237	1643	2081	20961
1944 செப்.—1945 ஆகஸ்டு	21244	1006	1662	23912
மொத்தம் ..	98889	14216	6759	119864

* 1942 ஏப்ரல்முதல் பர்மா நீங்கலாக.

† 1942 பிப்ரவரிமுதல் பர்மா நீங்கலாக.

(ஆதாரம்: 'Reports on Currency and Finance,' 1945-46, Reserve Bank of India.)

போர்க்காலத்தில் இவ்வாறு அளவு கடந்த பண அளிப்புப் பெருக்கம் செய்ய எப்படி முடிந்தது? 1939–40-ல் ஷெடியூல் பாங்குகளின் நடப்புப் பொறுப்புகள் ரூ. 140 கோடியாயிருந்து, 1945–46-ல் ரூ. 650 கோடியாக அதிக அளவு உயர்ந்ததும் (தவணைப் பொறுப்புகள்[1] அதிகரித்ததைவிட இது மிகவும் அதிக மாகும்), கழிவு செய்யப்பட்ட உண்டியல்களும் கடன்களும் அதிகரித்ததும், பணப்பெருக்கத்தின் இந்தப் பகுதி இரண்டாம் தரமானது என்ற கருத்தை உண்டாக்கக்கூடும். ஆனால், இது முற்றிலும் உண்மையன்று. உண்மையில், பண அளிப்பில் இரண்டாம் தரமான பகுதி மிகச் சிறியதே. போர்க்காலத்தில் கடன்

[1] இதே காலத்தில் தவணைப் பொறுப்புகள் ரூ. 106 கோடியிலிருந்து ரூ. 260 கோடியாக உயர்ந்தன.

களிலும் கழிவு செய்யப்பட்ட உண்டியல்களிலும் கணிசமான உயர்வு இருந்தாலும், அதே காலத்தில் இந்த உயர்வுக்கும் நடப்புப் பொறுப்புகள், தவணைப் பொறுப்புகள் ஆகியவற்றின் மொத்தத்திற்கும் உள்ள விகிதம், 1942-43-ல் 53 சதவீதத்திலிருந்து 24 சதவீதமாகக் குறைந்து, போர் முடிந்தபோதுதான் 30 சதவீதமாக உயர்ந்தது என்பதிலிருந்து இரண்டாம் தரமான பெருக்கம் அவ்வளவு முக்கியத்துவமுடையதன்று என்பது விளங்கும். உண்மையில், போர்க்காலத்தில் தனியார் பொருளாதார நடவடிக்கைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டதாலும், பாங்குகளிலிருந்து கிடைக்கக்கூடிய சாதனங்கள் அரசாங்கக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்வதற்குத் திருப்பப்பட்டதாலும், குறிப்பிடத்தக்க அளவு பாங்குச் செலாவணிப் பெருக்கத்தைக் காணமுடியாது.[1] இதற்கு மாறுகச் செலாவணிப் பெருக்கம் அளவு கடந்துவிட்டது. ஸ்டர்லிங்கு இருப்பு உயர்ந்ததும், வரவுசெலவுத் திட்டப் பற்றுக்குறை உயர்ந்ததும் (அரசாங்க ரொக்கத்தின் இருப்பு உயர்ந்ததாலும், ரூபாய்க் கடன் உயர்ந்ததாலும் இது ஓரளவு சரிக்கட்டப்பட்டது) ஆகிய இரண்டு பணப்பெருக்க சக்திகளின் விளைவுதான் இது. அட்டவணை 19 இந்த மாறுதலுக்குரிய விவரங்களைக் காட்டுகிறது.

ஸ்டர்லிங் திரள்வதற்கும் பணப்பெருக்கத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பு தெளிவானது. இந்திய ரிசர்வ் பாங்கு சட்டத்தின்படி, இந்த பாங்கு தன் வெளியீட்டுப் பிரிவில் ரூ. 40 கோடி மதிப்புள்ள தங்க நாணயங்களையும் கட்டிகளையும் வைத்திருக்கவேண்டும். வெளியீட்டுப் பிரிவு வைத்திருக்கவேண்டிய ஸ்டர்லிங் பத்திரங்களைப்பற்றி ஒரு கட்டுப்பாடும் கிடையாது. பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களின்படி, இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு வேண்டிய ரூபாய் நிதியை இந்திய அரசாங்கம் ஸ்டர்லிங்குகளைப் பெற்றுக்கொண்டு கொடுக்கவேண்டும். இப்படிப் பெற்ற ஸ்டர்லிங்கு இருப்புகளைப் பாங்கிங் பிரிவிலிருந்து வெளியீட்டுப் பிரிவுக்கு மாற்றிக்கொண்டு, ரிசர்வ் பாங்கு தேவையான ரூபாய் நிதியை அளித்தது. போர் தொடங்கியதும் இங்கிலாந்து அரசாங்கத்தின் சார்பில் இந்திய அரசாங்கம் நிதிகளைக் கொடுத்ததாலும், சாதகமான அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையாலும், விலையுயர்ந்த உலோகங்களின் விற்பனையாலும், ஏற்றுமதியாலும், அமெரிக்கத் துருப்புகளை இந்தியாவில் வைத்திருந்ததற்காக அமெரிக்க அரசாங்கம் சிறிது காலம் ஸ்டர்லிங்குகளாகப் பணம் கொடுத்துவந்ததாலும் ஸ்டர்லிங் இருப்புகள் விரைவாகத் திரண்டு அதிகரித்து அதற்

[1] 'Reserve Bank of India Monthly Bulletin,' Sep. 1950, p. 609.

கேற்ப இந்தியாவில் ரூபாய் நோட்டு அளிப்புப் பெருகியது. இவ்வாறுதான் ஸ்டர்லிங் மிகுந்த அளவில் நிகரமாகச் சேர்ந்தது. போர் முடியும் தறுவாயில் ஸ்டர்லிங் பத்திரங்கள் சேரும் வேகத்தின் விகிதம் ஓரளவு குறைந்தது. ஆனால், அது இந்தியாவில் பணப்பெருக்கத்திற்கு ஆதாரமாக இருப்பதால், 1942–43 முதல் விரைவாக வரவுசெலவுத் திட்டப் பற்றுக்குறைகள் அதிகரித்ததால், இக் குறைவு சரிக்கட்டப்பட்டது. அதே சமயத்தில் அரசாங்கத்தின் ரொக்க இருப்பும் ரூபாய்க் கடனும் அதிகரித்ததால், பணவாட்டத்தை விளைவித்து, ஸ்டர்லிங் பத்திரங்கள், வரவுசெலவுத் திட்டப் பற்றுக்குறைகள் ஆகியவற்றால் உண்டாகும் பெருக்கத்தை ஓரளவு மட்டுப்படுத்தியிருக்கவேண்டும்.

அட்டவணை 19

பண அளிப்பின் ஆதாரங்கள் (கோடி ரூபாய்களில்)

	1939–40	1940–41	1941–42	1942–43	1943–44	1944–45	1945–46
1. ஒவ்வொரு வருட முடிவிலும் (ஏப்ரல்–மார்ச்சு) ஸ்டர்லிங் சேர்க்கையின் நிகர மொத்தம்	100	191	441	828	1278	1710	2071
2. பாதுகாப்பு முதலீட்டுச் செலவு முன்னேற்றமானது — உட்பட பட்ஜெட் பற்றுக்குறை	—	7	19	184	411	626	835
3. 1, 2-களின் மொத்தம் ...	100	198	460	1012	1689	2336	2906
4. கோட்டுப் புழக்கம், ரூபாய் நாணய, சிறுநாணயப் புழக்கம், பாங்குகளின் மொத்த டெபாசிட்டுகள் ஆகியவற்றில் அதிகரிப்பு	83	167	373	868	1358	1733	2073
5. ரிசர்வ் பாங்கில் டெபாசிட்டுகளின் அதிகரிப்பு (இதில் மத்திய அரசாங்கத்தின் இருப்பில் சேர்வது—முன்னேற்றமானது)	9	46	34	58	112	346	599
	(4)	(11)	(19)	(13)	(50)	(255)	(538)
6. 4, 5-களின் மொத்தம் ...	92	213	407	926	1470	2079	2672
7. 1939 மார்ச்சு 31 முதல் மத்திய அரசாங்கத்தின், ரூபாய்க் கடனில் அதிகரிப்பு—முன்னேற்றமானது	18	152	231	497	623	851	1217

(ஆதாரம்: Reserve Bank of India Monthly Bulletin, Sep. 1950.)

போர் முடிந்ததும், பண அளிப்பு வீதம் குறிப்பிடத்தக்க அளவு குறையத் தொடங்கியது. 1950 வரை இப் போக்கு சிறு மாறுதல்களுடன் தொடர்ந்து காணப்பட்டது. 1945–46-ல் 12 சதவீதமாகவும், 1944–45-ல் 23 சதவீதமாகவும், 1943–44-ல் 37 சதவீதமாகவும், 1942–43-ல் 69 சதவீதமாகவும் இருந்த ஆண்டுச் செலாவணிப் பெருக்கவீதம் 1946–47-ல் 2 சதவீதமாகக் குறைந்தது. பாதுகாப்புச் செலவில் கணிசமான குறைவு, அதிக வியாபாரச் சரக்குகளை இறக்குமதி செய்ததால் உண்டான தொடர்ச்சியான பாதகக் கொடுப்பல்நிலை, அரசாங்கத்தின் கடன், வரிவிதிப்பு, உலோகக் கட்டி விற்பனை ஆகிய திட்டங்கள் அடங்கிய பணவீக்க எதிர்ப்புக் கொள்கை போன்ற பல காரணங்களால் இந் நிலை ஏற்பட்டது. 1947–48-ல் அகதிகள் நிவாரணத்திற்காக அரசாங்கம் அதிகத் தொகைகள் செலவிட்டதாலும், பாதுகாப்பு, உணவு ஆகியவற்றிற்கு உதவித் தொகை அளித்ததாலும், முதலினச் செலவு செய்ததாலும், செலாவணி உபயோகத்தில் காணப்பட்ட இறங்குமுகம் தடுத்து நிறுத்தப்பட்டது. அந்த ஆண்டில் மொத்தச் செலாவணி உபயோகம் ரூ. 53·97 கோடியாக உயர்ந்தது; அதற்கு முன் ஆண்டில் ரூ. 31·11 கோடிதான் இருந்தது. கட்டுப்பாட்டு நீக்கத்தைத் தொடர்ந்து, உள்நாட்டு வியாபாரத்தில் சுயேச்சைப் பகுதி படிப்படியாக விரிவடைந்துவந்ததால், பொது மக்களிடம் இருந்த ரொக்க இருப்புகளில் வருடாந்தர நிகர அதிகரிப்பு 1947–48-ல் ரூ. 108 கோடியாக உயர்ந்தது. அதற்கு முன் அது 1942–43-ல் ரூ. 470 கோடியாக இருந்து, 1945–46-ல் ரூ. 251 கோடியாகக் குறைந்து, 1946–47-ல் ரூ. 26 கோடிக்கு இறங்கியிருந்தது. ஆனால், அடுத்த வருடத்தில் செலாவணி உபயோகத்தின் இறங்குமுகப் போக்கு மீண்டும் தலையெடுத்தது. 1948–49-ல் இந்திய யூனியனின் செலாவணி விவரங்கள் கிடைக்கவில்லையென்றாலும், இந்த ஆண்டுகளில் பணவாட்ட சக்திகள் சுறுசுறுப்பாக வேலை செய்துவந்தன என்பதற்கு அறிகுறிகள் உண்டு. அவற்றின் விளைவாகப் பண அளிப்பின் அளவு குறைந்தது. இந்திய யூனியனிலும் பாகிஸ்தானிலும் சேர்ந்து நடப்பு வைப்புகள், 1947–48-ன் இரண்டாம் பகுதியில் ரூ. 749 கோடியாக இருந்து முதல் பகுதியில் ரூ. 688 கோடியாகவும், 1948–49-ன் இரண்டாம் பகுதியில் ரூ. 631 கோடியாகவும் குறைந்தது. உண்மையில் போருக்குப் பிறகு செலாவணி உபயோகம் மிகவும் குறைந்துவிட்டது என்றாலும், 1938–39-க்கும் பிறகு முதன் முதலாகச் செலாவணியில் நிகரச் சுருக்கம் ஏற்பட்டது 1948–49-ல்தான்.[1] 1948–49-ல் இந்திய யூனியனில்

[1] Reports on Currency and Finance, 1949–50, p. 128.

மட்டும் பண அளிப்பில் நிகரக் குறைவு ரூ. 43·26 கோடி என்று கணக்கிடப்பட்டிருகிறது.[1] அடுத்த ஆண்டிலும் இறங்குமுகப் போக்கு தொடர்ந்திருந்தது. அப்போது பண அளிப்பு ரூ. 1865·3 கோடிக்கு இறங்கியது. இது முன் ஆண்டில் இருந்ததைவிட ரூ. 18·67 கோடி குறைவாகும். 1949-50-ன் மந்த பருவத்தில் திரும்பப் பெறப்பட்ட பணம் ரூ. 113·30 கோடி, இதற்கு முன் இவ்வளவு பெரிய பருவகாலச் சுருக்கம் ஏற்பட்டதே இல்லை. இதற்கு ஒரு காரணம் 1948 ஜூலையில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதாகும். இதனால் அயல் நாட்டுக் கொடுப்பல் நிலையில் பற்றுக்குறை ஏற்பட்டு, இந்திய ரிசர்வ் பாங்கு கணிசமான அளவிற்கு ஸ்டர்லிங்குகளை நிகரமாக விற்க வேண்டியதாயிற்று. 1949-50-ன் சுறுசுறுப்பான பருவத்தில் செலாவணி கணிசமாகப் பயன்படுத்தப்பட்டாலும் (இது மதிப்பிறக்கத்தைத் தொடர்ந்து உண்டான ஏற்றுமதி உபரியாலும் ஸ்டர்லிங்குகளை வாங்கியதாலும் ஏற்பட்டது), முந்திய மந்த பருவத்தில் திருப்பித்தரப்பட்ட தொகையைவிட இது குறைவாகும். ஆகவே, அந்த ஆண்டில் மொத்தத்தில் பொதுமக்களிடமிருந்த பணத்தின் அளவு நிகரமாகக் குறைந்தது.

1950–51முதல் பண அளிப்பு

1950–51-லிருந்து பண அளிப்பில் ஏற்ற இறக்கங்கள் உண்டானதற்குக் காரணங்கள் கொரியப் போராகிய வெளிக் காரணமும், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடங்கியதால் ஏற்பட்ட அதிக அபிவிருத்திச் செலவும், அரசாங்கத்தின் பணக்கொள்கையும் ஆகிய உள்நாட்டுக் காரணமும்தாம். 1950-ன் இடையில் கொரியப் போர் தொடங்கியது. வியாபார நடவடிக்கைகளுக்கும்ஏற்றுமதிகளுக்கும்ஊக்கமளித்தது. இதனால் அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையில் உபரி ஏற்பட்டது. இந்திய ரிசர்வ் பாங்கின் வெளிநாட்டுச் சொத்துகளிலும், ஷெடியூல் பாங்குகள் கடன்களையளித்தும் உண்டியல்களைச் கழிவு செய்தும் உண்டாக்கிய பாங்குச் செலாவணியிலும் இதனால் உயர்வு காணப்பட்டது. கடனும் பணநிலையும் கட்டுமீறிப் போவதைத் தடுப்பதற்காக, ரிசர்வ் பாங்கு தன் கட்டுப்பாட்டுக் கருவிகளைப் பயன்படுத்தியது. 1951 நவம்பரில் பாங்கு வீதத்தை அது 3-லிருந்து 3½ சதவீதமாக உயர்த்தியதால், வாணிப பாங்குகளும் தம் கடன் வட்டி வீதங்களை அதே அளவுக்கு ½ சதவீதம் உயர்த்தின. அதே சமயத்தில் அது அரசாங்கப் பத்திரங்களுக்கு அளித்த ஆதரவைத் திரும்பப்பெற்றதால், பத்திரங்களிலிருந்து கிடைக்

[1] Reports on Currency and Finance, 1953-54, p. 115.

கும் வருவாய் அதிகரித்தது. இதனால் பணமார்க்கெட்டில் கடுமையான நிலை ஏற்பட்டது. அரசாங்கப் பத்திரங்களின் மார்க்கெட் விலைக்கு உத்தரவாதமளிக்கும் பழைய கொள்கையைக் கைவிட்ட இம் முக்கியமான நடவடிக்கையால், 1949 முதல் வியாபார பாங்குகள் இந்தப் பத்திரங்களில் முதலீடு செய்யாமலிருந்த போக்குத் தடுக்கப்பட்டது. பிறகு இக் கொள்கை மாற்றப்பட்டதால், வியாபார பாங்குகள் கடனைப் பெருக்கி அரசாங்கப் பத்திரங்களுக்குப் பணமளிப்பது நிறுத்தப்பட்டது. தேர்ந்தெடுத்த கடன் கட்டுப்பாடு, மனமாற்றம்போன்ற முறைகளையும் ரிசர்வ் பாங்கு கையாண்டது. 1849 செப்டம்பரில் ரூபாய் மதிப்பிறக்கப்பட்டபிறகு, பாங்குகள் ரூ. 10,000-க்குமேல் அளித்த புதிய கடன்களைப்பற்றிய அன்றாட விவரங்களை அனுப்ப வேண்டுமென்று ரிசர்வ் பாங்கு கட்டளையிட்டது. மேலும், உலோகக் கட்டிகள்மீது கடன் கொடுப்பதுபோன்ற ஊகக்கடன் விஷயங்களில் 'நிதானமாக' இருக்கவேண்டும் என்றும் வாணிப பாங்குகளுக்கு வேறு சில கட்டளைகளைப் பிறப்பித்தது (மே 1951). தக்க சமயத்தில் எடுத்துக்கொண்ட நடவடிக்கை பலனளித்தது. 1952-ல் பண அளிப்பிலும் விலைகளிலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு இறங்குமுகப் போக்கு காணப்பட்டதற்குப் பணக் கொள்கையே காரணம் என்று கூறமுடியாவிடினும், மத்திய பாங்கு மேற்கொண்ட கடுமையான பணம் சம்பந்தமான நடவடிக்கைகள், பணமார்க்கெட்டில் இறுக்கமான நிலையை உண்டாக்கி, ஊகவாணிக விலையேற்றம் உண்டாகாமல் தடுத்தன என்பதை மறுக்க முடியாது. எனினும், உள்நாட்டில் வேலை செய்துவந்த பொருளாதாரச் சக்திகள் மீண்டும் தலை தூக்கிப் பண அளிப்பை நிர்ணயிக்கும் பெரிய நிகழ்ச்சியாக விளங்கின. ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்ட அதிக அபிவிருத்திச் செலவுகள், பற்றுக்குறை பட்ஜெட்டுகள், அரசாங்கத்தின் ரொக்க இருப்புக் குறைவு ஆகியவையே 1953-54 முதல் அதிகப் பணம் உபயோகப்பட்டதற்குக் காரணமாகும். அட்டவணை 20-ல், 1949-50 முதல் 1959-60 வரையில் இருந்த இந்தப் பணப்பெருக்கக் காரணிகள், பணச்சுருக்கக் காரணிகள் ஆகியவற்றின் முக்கியத்துவம் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

இந்த அட்டவணையிலுள்ள விவரங்களிலிருந்து, 1950-51-ல் கண்டுள்ள சுமார் ரூ. 120 கோடி பண அளிப்பு உயர்வு பாங்கு செலாவணி வழக்கத்திற்கு மாறுக அதிகரித்தலால்தான் பெரும் பாலும் உண்டாயிற்று என்பது எளிதில் விளங்கும். ஷெடியூல் பாங்குகளின் செலாவணி ரூ. 85 அதிகரித்திருக்கிறது. முந்திய ஆண்டில் அதில் ரூ. 34 கோடி குறைந்துள்ளது. ரிசர்வ்

பாங்கினுடைய வெளிநாட்டுச் சொத்துகள் உயர்ந்ததால் குறிக்கப்படும் உபரி கொடுக்கல்நிலையும், ரூபாய்ப் பத்திரங்களின் அதிகரிப்பும் பண அளிப்பு உயர்வதற்கு உதவின. இது அந்த பாங்கியில் அரசாங்கம் வைத்திருந்த இருப்பினால் ஓரளவு மட்டுப் படுத்தப்பட்டது. 1951–52-ல் ரூ. 175 கோடி பண அளிப்பில் கணிசமாகக் குறைந்ததற்குக் காரணம், பெரும்பாலும் வெளி நாட்டுச் சொத்துகள் திடீரென்று குறைந்ததுதான். அமெரிக்கக் கோதுமைக் கடன் திட்டத்தின்கீழ் உணவுத் தானியங்கள் இறக்கு மதி செய்யப்பட்டதும், அமெரிக்காவிலிருந்து கச்சாப் பருத்தி அதிகமாக இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டதும், போர்க்கருவிகளைப் பெருக்கி அடுக்குவதற்கு வெளிநாடுகளி லிருந்து தேவை குறைந்ததும் அவ்வாண்டில் கொடுப்பல்நிலை பாதகமாக மாறியதற்குப் பெரும்பாலும் காரணங்களாகும். அரசாங்க இருப்புகள் அதிகரித்ததும், ரிசர்வ் பாங்கியின் ரூபாய்ப் பத்திர இருப்புக் குறைந்ததும் பண அளிப்பைப் பாதகமாக மாற்றின. 1951–52ல், முந்திய ஆண்டைவிட, ரிசர்வ் பாங்கு திறந்த மார்க்கெட்டில் வாங்கும் அளவையும் முறையையும் குறைத்துக்கொண்டது. அதுபோலவே, ஷெடியூல் பாங்குகள் செலாவணியைப் பெருக்கியிருப்பினும், 1950–51-ல் இருந்ததைப் போல் அது பாதியளவுதான் இருந்தது. மொத்தத்தில், மத்திய பாங்கின் பணக்கொள்கைக்கேற்ப ஷெடியூல் பாங்குகள் விழிப் பான கொள்கையை மேற்கொண்டன. 1951-52-ல் தொடங்கிய பண அளிப்புக் குறைவு அடுத்த ஆண்டிலும் தொடர்ந்திருந்தது. ஆனால், 1953–54-ல் மீண்டும் ரூ. 29 கோடிக்குப் பண அளிப்புப் பெருக்கம் ஏற்பட்டது. பணப்பெருக்கத்திற்குக் காரணமான வற்றுள் ஷெடியூல் பாங்குகளின் கடன் பெரும்பாலும் விளை வற்றதாயிருந்தது; ஆனால், யூனியன் அரசாங்கத்தின் உபரிக் கொடுப்பலும் பட்ஜெட் பற்றுக்குறையும் பெருக்கத்தை விளை வித்தன. ரிசர்வ் பாங்கு வைத்திருந்த ரூபாய்ப் பத்திரங்களில் ரூ. 58 கோடி குறைந்ததால், பண அளிப்புக் குறைவதற்கு உதவி யிருக்கவேண்டும்; ஆனால், இந்தக் குறைவினால் உண்டாகக்கூடிய பணச்சுருக்கம் ஓரளவு மட்டுப்படுத்தப்பட்டது. ஏனெனில், ரிசர்வ் பாங்கின் ரூபாய்ப் பத்திரக் குறைவின் ஒரு பகுதிதான் பாங்கு தொழில் அல்லாத பகுதிக்கு விற்கப்பட்டது.[1] முதல் திட்ட காலத்தின் முதல் இரண்டாண்டுகளில் உண்டான ரூ. 390 கோடி பண அளிப்புப் பெருக்கம் ரிசர்வ் பாங்கின் ரூபாய்ப் பத்திர இருப்பினாலும், ஷெடியூல் பாங்குகளின் செலா வணியினாலும் பெரும்பாலும் ஏற்பட்டது. அந்தப் பாங்கில் அரசாங்கம் வைத்திருந்த இருப்புகளில் சிறிது குறைந்ததாலும்

[1] 'Reports on Currency and Finance,' 1953-54, p. 28.

அட்டவணை 20

பணஅளிப்பில் மாறுதல் (கோடி ரூபாய்களில்)

	1949–50	1950–51	1951–52	1952–53	1953–54	1954–55	1955–56	1951–56 மொத்தம்	1956–57	1957–58	1958–59	1959–60	1956–60 மொத்தம்
1. மக்களிடமிருந்த மொத்தப் பணம்	−18·7	+118·84	−174·92	−39·08	+29·26	+126·65	+263·68	+205·6	+128·6	+ 75·9	+109·0	+202·3	+515·8
2. ரிசர்வ் பாங்கில் மத்திய அரசாங்கத்தின் டெபாசிட்டுகள்	−54·7	+ 32·8	+ 18·1	−44·4	−70·0	− 6·3	+ 7·9	− 94·7	− 2·8	− 16·2	+ 5·5	+ 9·3	− 4·2
3. ரிசர்வ் பாங்கின் வெளிச் சொத்துகள்*	−85·4	+ 25·4	−161·1	+ 0·6	+29·3	− 23·0	+ 16·1	− 138·1	−219·3 (−274·1)	−259·8 (−294·3)	− 53·9 (−53·9)	− 15·9 (−5·2)	−548·9
4. ரிசர்வ் பாங்கின் வசமுள்ள ரூபாய்ப் பத்திரங்கள்	+22·5	+ 69·9	− 19·1	−20·8	−58·5	+ 65·8	+172·7	+140·2	+280·2	+403·4	+133·4	+151·6	+968·6
5. ஷெடியூல் பாங்குகளின் செலாவணி	−34·1	+ 84·6	+ 45·7	−51·4	+ 6·4	+ 65·7	+148·0	+214·2	+152·0	+ 66·3	+ 64·3	+146·2	+428·8

* அடைப்புக் குறிகளுக்குள் இருப்பவை பன்னாட்டுச் செலாவணி நிதியிலிருந்து (I.M.F.,) வாங்கிய நிகரக் கடன்கள் அல்லது அதற்குத் திருப்பிக் கொடுக்கப்பட்ட நிகரத் தொகைகள்

(ஆதாரம்: Reports on Currency and Finance, Reserve Bank of India)

1954-55-ல் ரிசர்வ் பாங்கு வைத்திருந்த வெளிநாட்டுச் சொத்துகள் குறைந்ததாலும், ஏற்பட்ட விளைவு அடுத்த ஆண்டில் உண்டான எதிரிடையான போக்கினால் சரிக்கட்டப்பட்டது. இரண்டாம் திட்டகாலத்தின் முதல் நான்கு ஆண்டுகளில், மக்களிடமிருந்த பண அளிப்பு முறையே ரூ. 129 கோடி, ரூ. 76 கோடி, ரூ. 110 கோடி, ரூ. 202 கோடி ஆகும். அரசாங்கத் தொழில் பகுதியில் உண்டான அதிக பட்ஜெட் பற்றுக்குறையையும் மீறி ஏற்பட்ட இந்தச் சுமாரான உயர்வுக்குக் காரணம் பெரும்பாலும், தொடர்ச்சியான அயல்நாட்டுக் கொடுப்பல் நிலைப் பற்றுக்குறையும், பாங்குகளில் தவணை வைப்புகள் கணிசமாக அதிகரித்ததும்தான்.

மொத்தத்தில், இந்திய யூனியனில் முதல் திட்டகால ஆண்டுகளில் பணஅளிப்பு சராசரி ரூ. 2,000 கோடிக்குக் குறைவாக இருந்தது. ஆனால், இரண்டாம் திட்டகாலத்தில் ரூ. 2,400 கோடியாக உயர்ந்துவிட்டது. திட்டத்திற்கு முந்திய ஆண்டுகளில், 1948-ன் இரண்டாம் கால்பகுதியில் அது உச்சநிலையை எட்டியது. அப்போது, பிரிக்கப்படாத இந்தியாவில் மொத்தப் பணஅளிப்பு ரூ. 2,364 கோடியாயிற்று (1948 மே). ஆக, 1939-க்கும் 1947-க்கும் இடையில் 9 ஆண்டுகளில் பணஅளிப்பு ஐந்து மடங்குக்குமேல் போய்விட்டது.[1] 1952-53 முதல் இந்திய யூனியனில் புழக்கத்தில் இருந்த பணத்தின் அளவு படிப்படியாக உயர்ந்து, 1960 மார்ச்சில் ரூ. 2,701 கோடியை எட்டியது. போரினால் உண்டான அசாதாரணமான நிலைமையை நீக்கிவிட்டால், மக்கள்தொகை உயர்வு, வியாபார நடிவடிக்கை அதிகரிப்பு, அதிக உற்பத்தி, அதிகத் தேசிய வருமானம் போன்ற மற்றக் காரணங்களால் சாதாரணமாகத் தக்க அளவு பணஅளிப்புப் பெருக்கம் ஏற்படவேண்டியது அவசியம்தான். அது நியாயமும்கூட. ஆனால், போரின் தேவையோடு இந்தக் காரணங்களும் கடந்த இருபதாண்டுகளில் உண்டான அளவு பணஅளிப்புப் பெருக்கத்திற்குத் தக்க முகாந்திரம் ஆகுமா என்ற கேள்வி எழுகிறது.

நாட்டில் உள்ள பொருளாதார நடவடிக்கைக்கேற்ற விகிதத்தில் பணஅளிப்பு அதிகரித்தால் அது நியாயமும் அவசியமும் ஆகும். தேசிய வருமானத்தில் காணப்படும் மாறுதல், பொருளாதார நடவடிக்கையின் அளவைப் பரவலாகக் காட்டும். ஆகவே, வருடாந்தர தேசிய வருமானத்தோடு ஒப்பிட்டுப் பார்த்துப் பணஅளிப்புப் பெருக்கத்தின் அளவு அதிகமா குறைவா

[1] 1939-ல் புழக்கத்தில் இருந்த ரூபாய் நாணயங்கள் ரூ. 120 கோடி என்று கொண்டால்.

என்பதைச் சுமாராக மதிப்பிடலாம். இத்தகைய ஆராய்ச்சிக்குத் திறவுகோல்போல் இருப்பது, பண வருமான வேகத்தில் உண்டாகும் மாறுதலகள் ஆகும். தேசிய வருமானத்தைப் பண அளிப்பினுல் வகுத்தால் பணவருமான வேகம் கிடைக்கும்.[1] போர் நடந்த ஆண்டுகளுக்கும், போர்முடிந்த பின் சில ஆண்டுகளுக்கும் 'Eastern Economist' என்ற பத்திரிகை கண்டுபிடித்த தேசிய வருமானத்தின் மதிப்பீடுகள் கிடைத்துள்ளன. இந்த மதிப்பீடுகள், குறிப்பாகப் போர்க்காலத்திற்கு, சுமாரான கணக்கீடுகளாயினும், தேசிய வருமானக் குழு (National Income Committee) பிறகு செய்த மதிப்பீடுகளினின்று இவை அதிகம் வேறுபட்டாலும், இவற்றை இங்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஏனெனின், எந்த ஒரு குறிப்பிட்ட ஆண்டிலும் காணப்பட்ட போக்குகளையும் மாறுதல்களின் அளவையும்தாம் நாம் கவனிக்கவேண்டுமே தவிர, மதிப்பீடுகள் சரியானவையா என்பதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. இந்த அடிப்படையில், இந்தியாவில் 1939–40 முதல் 1946–47 வரை இருந்த வருமான வேகத்தின் மாறுதல்கள் அட்டவணை 21-ல் கொடுக்கப்பட்டுள்ளன.[2]

அட்டவணை 21

பணவருமான வேகத்தில் மாறுதல்கள்
1939–40 முதல் 1946–47 வரை

வருடம்	மொத்தத் தேசிய வருமானம் (கோடி ரூபாய்களில்) A	பண அளிப்பு (கோடி ரூபாய்களில்) B	பண வருமான வேகம் A/B
1939–40	2321	532	4·4
1940–41	2470	579	4·3
1941–42	2791	776	3·6
1942–43	4048	1198	3·4
1943–44	5080	1619	3·1
1944–45	5125	1922	2·6
1945–46	5086	2179	2·3
1946–47	5385	2197	2·5

(ஆதாரம் : Eastern Economist Annual Number, 31 Dec. 1948, p. 1140)

1 பேராசிரியர் எஞ்ஜெல் (Angell) இதைப் 'பணத்தின் சுழற்சி வேகம்' (Circular Velocity of Money) என்கிறார். 'Behaviour of Money', 1936-ஐக் காண்க.

2 இவ் விவரங்கள் பிரிக்கப்படாத இந்தியாவிற்குரியவை; இந்திய சமஸ்தானங்களையும் உள்ளடக்கியவை.

பண வருமான வேகம்பற்றிய எண்களை, நடப்பு வைப்புகள் புழங்கும் வேகம்பற்றிய எண்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த இரண்டு வேகங்களிலும் வேறுபாடு இருந்தாலும், இவற்றின் போக்குகளில் ஒரு சீரான தன்மை காணப்படுகிறது; இவ் விரண்டும் இந்தக் காலத்தில் குறைந்து வந்ததைக் காணலாம்.

அட்டவணை 22

நடப்பு வைப்புகள் புழங்கும் வேகம்

வருடம்	ஷெடியூல் பாங்குகளின் சராசரி நடப்புப் பொறுப்புகள் (கோடி ரூபாய்களில்) A	தீர்வகத்தின் மொத்தத் திருப்பங்கள் (கோடி ரூபாய்களில்) B	புழக்கத்தில் வேகம் B/A
1939–40	132·64	2252·91	16·9
1940–41	155·79	2071·60	13·3
1941–42	200·13	2666·34	13·3
1942–43	306·28	2979·09	9·7
1943–44	456·63	4579·22	10·3
1944–45	584·80	5626·80	9·6
1945–46	654·53	6572·37	10·4
1946–47	725·54	7221·38	9·9

அட்டவணை 21-லிருந்து, போர்க்காலத்தில் பணவருமானத்தின் வேகம் 1939–40-ல் 4·4 ஆக இருந்து, படிப்படியாக 1945–46-ல் 2·3 ஆக இறங்கியது. அதாவது, 50 சதவீதத்திற்குமேல் குறைந்தது என்று தெரியும். 1939–40-ல் இருந்த பண வருமான வேகம் 4·4 என்பது மக்களும் வியாபார நிலையங்களும் உற்பத்திக்காகத் தம் வருடாந்தரச் செலவில் 23 சதவீதத்தைச் சரிக்கட்டக்கூடிய அளவிற்குப் போதுமான பணத்தைத் தம்மிடம் எப்பொழுதும் வைத்துக்கொண்டிருந்தார்கள் என்பதைக் காட்டும். போர்க் காலத்தில் தேசிய வருமானம் 120 சதவீதம் அதிகரித்ததும், அதே காலத்தில் பணவருமான வேகத்தில் குறைவு ஏற்பட்டதும் அதிகச் செலவுகளுக்கு அதிக அளவு பணத்திலிருந்துதான் நிதி கிடைத்தது என்பதைக் காட்டும். வருமான வேகம் குறைந்திருந்தது என்றால், அதன் பொருள், மக்களும் தொழில் நிலையங்களும் தம் செலவுகளுக்கு வேண்டியது போக, மிக அதிகமான பணத்தைத் தம்மிடம் வைத்திருந்தார்கள் என்பதாகும். போர்க் காலத்தில் பொருளாதாரக் கட்டுப்பாடுகளும் மற்றச் சட்டங்களும் சேர்ந்து, மக்களிடையே ஓர் அச்ச உணர்ச்சியை உண்டாக்

கியதால் அவர்கள் தம் விருப்பம்போல் செலவு செய்வதற்குத் தடை ஏற்பட்டது. இது போர்க்கால நிலையின் ஓர் இயற்கையான விளைவேயாகும். 1939–40-ல் இருந்த அளவில் வேகம் இருந்திருந்தால், தேசிய வருமானத்திற்கு நிதியளிப்பதற்கு ஒவ்வோராண்டும் எவ்வளவு பணம் தேவைப்படும் என்பதைக் கணக்கிட்டால், சோம்பிக்கிடந்த இருப்புகளின் அளவைச் சுமாராக மதிப்பிடலாம்.

அட்டவணை 23

சோம்பிக்கிடந்த இருப்புகளின் மதிப்பீடு

(கோடி ரூபாய்களில்)

வருடம்	உண்மையான பண அளிப்பு	1939–40 அளவில் வேகம் இருந்திருந்தால் தேசிய வருமானத்திற்கு நிதியளிப்பதற்குத் தேவைப்படும் பணத்தின் அளவு	சோம்பிக்கிடக்கும் இருப்பின் அளவு
	A	B	A—B
1939—40	532	532	—
1940—41	579	561	18
1941—42	776	634	142
1942—43	1198	920	278
1943—44	1619	1155	464
1944—45	1922	1165	757
1945—46	2179	1156	1023
1946—47	2197	1224	973

அக் காலத்தில் இருந்த தேசிய வருமானத்தை 1939-40-ல் இருந்த வருமான வேகத்தால் வகுத்தால் B பத்தியில் உள்ள எண்கள் கிடைக்கும். அடுத்த பத்தியில் உள்ள எண்கள், 1942–43-க்கும், 1945–46-க்கும் இடையில் உள்ள ஆண்டுகளில் அதிகப் பணஅளிப்பின் அளவு படிப்படியாக உயர்ந்துகொண்டே வந்தது என்பதைக் காட்டும். இந்தக் காலத்தில் சோம்பிக் கிடந்த இருப்புகளின் மதிப்பீடுகள் ஆண்டொன்றுக்குச் சராசரி ரூ. 700 கோடியாகும். பணத்தின் வருமான வேகத்தில் உள்ள மாறுதல்களைக் குறிக்கும் சித்திரத்தின் மறுதலையே இது. ஏனெனில், பணஅளிப்பின் அளவு மாறுதிருந்தால், புழக்கத்தின் வேகம் குறையும்போது சோம்பிக் கிடக்கும் இருப்புகள் அதிகரிக்கின்றன என்பதும், புழக்கத்தின் வேகம் அதிகரிக்கும்போது சோம்பிக்கிடக்கும் இருப்புகள் குறைகின்றன என்பதும் இதன் பொருளாகும்.

அட்டவணை 24-ல், 1949–50-க்குப் பிந்திய ஆண்டுகளுக்குரிய தேசிய வருமான விவரங்களும் பணத்தின் வருமான வேகமும் கொடுக்கப்பட்டுள்ளன. 'Eastern Economist' பத்திரிகை கணக்கிட்டுள்ள தேசிய வருமான விவரங்கள் அரசாங்கம் அளித்துள்ள விவரங்களிலிருந்து வேறுபடுவதால் (பிந்தியவை மிக அதிகமாக உள்ளன) அட்டவணை 21, அட்டவணை 24 இரண்டிலும் கொடுக்கப்பட்டுள்ள வருமான வேகம்பற்றிய இரண்டு இன எண்களும் சம்பந்தமில்லாமல் இருக்கின்றன.

அட்டவணை 24

தேசிய வருமானமும் பணவருமான வேகமும் (1950–60)

வருடம்	மொத்தத் தேசிய வருமானம் (கோடி ரூபாய்களில்) A	பண அளிப்பு (கோடி ரூபாய்களில்) B	பண வருமான வேகம் A/B	கடப்பு வைப்புகளின் புழக்க வேகம்
1949–50	9010	1861	4·8	10·4
1950–51	9530	1979	4·8	11·1
1951–52	9970	1804	5·5	13·3
1952–53	9820	1765	5·6	12·0
1953–54	10480	1794	5·8	12·8
1954–55	9610	1921	5·2	12·1
1955–56	9980	2184	4·6	11·9
1956–57	11310	2313	4·9	11·7
1957–58	11400	2389	4·9	11·8
1958–59	12470*	2498	5·0	12·9
1959–60	—	2701	—	13·4

* முதற்படியானது

1950–51-க்கும் 1953–54-க்கும் இடையில் தேசிய வருமானம் 10 சதவீதம் உயர்ந்தது. ஆனால், பண அளிப்பு 10 சதவீதம் குறைந்தது. இது பண வருமான வேகத்தைப் பாதித்து, அதை 21 சதவீதம் உயர்த்திவிட்டது. அதே காலத்தில் நடப்பு வைப்புகளின் புழக்கத்திலிருந்த வேகம் 11-லிருந்து 13-க்கு உயர்ந்தது. போர்க்காலத்தைப் போலவே அதிகச் செலவுகளுக்கு அதிகப் பண அளிப்பிலிருந்து நிதியளிக்கப்பட்டது என்பது இதனால் புலப்படும். முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதிகச் செலவுகளுக்கு அதிகப் பண வருமான வேகத்திலிருந்து நிதியளிக்கப்பட்டது. முதல் திட்டத்திற்கு முந்திய இரண்டாண்டுகளில் பண அளிப்பும் பண வருமான வேகமும் இயல்பாக இருந்தன என்று கொண்டால், முதல் திட்டத்தின் முதல் மூன்றாண்டுகளில், அதிக முதலீட்டினால் உண்டான அதிகப்

பொருளாதார நடவடிக்கைக்குப் பண அளிப்புப் போதாது என்பதுதான் பொருளாகும். இப்படிப் பார்த்தால், திட்டத்தின் இறுதி இரண்டாண்டுகளில் உண்டான குறிப்பிடத் தகுந்த பண அளிப்பு அதிகரிப்பு, பொருளாதாரத்தின் தேவைக்கு ஏற்றதாகவே தோன்றுகிறது. இதற்கு மாறுக, இரண்டாவது திட்ட காலம் தோன்றியது முதலாக உண்டான தேசிய வருமான அதிகரிப்பும், பண அளிப்பு அதிகரிப்பும், இவற்றைத் தொடர்ந்து உண்டான பண வருமான வேகத்தின் படிப்படியான உயர்வும், நடப்பு வைப்புப் புழக்க வேகத்தின் உயர்வும் காட்டுவது என்ன வென்றால், இவ் வருடங்களில் உண்டான விலையுயர்வு, பண அளிப்புப் பெருக்கத்தினால் அன்றி விரைவாக அதிகரித்து வந்த செலவீட்டு அளவினால் ஏற்பட்டது என்பதே. எனவே, பண அளிப்பில் உண்டான வேறுபாடுகள் விலைப் போக்கைப் பாதிக்க வில்லை என்று கொள்ளலாம்.

ஆனால், நம் ஆராய்ச்சியில் முந்திய ஆண்டுகளைப்பற்றி இப்படிக் கூறமுடியாது. போர்க்காலத்திலும், போருக்குப்பின் சில ஆண்டுகளிலும் விலையேற்றத்திற்குத் தகுந்தவாறன்றி அளவு கடந்து பண அளிப்பு அதிகரித்ததால், பொதுமக்களின் வாங்குந்திறன் அதிகரித்துப் பொருளாதார அமைப்பில் அது பணவீக்க நெருக்கடியை உண்டாக்கிற்று (படம் 5). 1940-41-க்கும் 1945–46-க்கும் இடையில், விலைக் குறியீட்டெண்ணைக் குறிக்கும் வளைகோட்டுடன் பண அளிப்பு வளைகோட்டை ஒப்பிட்டுப் பார்த்தால், பிந்தியது அதிகச் செங்குத்தாகக் காணப் படுகிறது. இது இந்த நெருக்கடியின் அளவைக் காட்டுகிறது. இவ்விரண்டு வளைகோடுகளுக்கும் இடையில் உள்ள வெளியானது போர் முடிவு வரையில் படிப்படியாக அதிகரித்துக்கொண்டே போய், 1943-44 முதல் 1945-46 வரை மூன்றாண்டுகளில் மிகப் பெரிதாகிவிடுகிறது. பொதுமக்களின் அதிகப் பதுக்கல் நடவடிக்கையும் அதிக ரொக்க விருப்பமும், இந்தக் காலத்தில் அதிகப் பணம் உபயோகிக்கப்பட்டதற்குக் காரணம் என்றும், அதனால் பண அளிப்புப் பெருக்கம் விலைகளை அதிகமாகப் பாதிக்கவில்லை என்றும் அரசாங்கம் கருதியது. இதற்கு மாறுக, விலையேற்றமும் அதிகப் பதுக்கல் தேவையும் சேர்ந்து மேலும் மேலும் அதிகப் பணத்தைப் புழக்கத்தில் விடவேண்டிய அவசியத்தை உண்டாக்கிவிட்டது என்றும் கூறப்பட்டது. எனினும், பணப்பெருக்கம் அளவுடன் இருந்திருந்தால், பணம் வேகமாகப் புரண்டு அதற்குள்ள தேவையை ஈடு செய்திருக்கும். பணப் புழக்கத்தின் வேகம் அப்பொழுதிருந்த அளவுக்குக் குறைந்திருக்காது. போரின் முதல் இரண்டு மூன்று ஆண்டுகளில் அதிகப் பதுக்கல் நடவடிக்கை இருந்தது என்பதை மறுக்கமுடியாது.



படம் 5. 1938-39 முதல் 1946-47 வரையிலும், 1952–53 முதல் 1959–60 வரையிலும்
பண அளிப்புக் குறியீட்டெண்களும் விலைக் குறியீட்டெண்களும்

நடப்பு வைப்புகள்[1] செலாவணி ஆகியவற்றின் புழக்கவேகம் குறைந்தது. ரூபாய் நாணயங்களும் சிறு நாணயங்களும் அதிக மாகப் பயன்படுத்தப்பட்டது, உயர்ந்த மதிப்புள்ள நோட்டு களுக்கு அதிகத் தேவை ஏற்பட்டது, பருவகாலத்தில் செலா வணி[2] உபயோகிக்கப்பட்ட விகிதத்தில் இயல்பற்ற விதமான மாறுதல் உண்டானது முதலிய பல தொடர்ச்சியான அம்சங் களால் இது விளங்கும். ஆனால், அதிகப் பண அளிப்பு விலைகளைப் பாதிக்காதவாறு பணப் பதுக்கல் தடுத்துவிட்டது என்று கூறுவது, இந்த அம்சத்தின் முக்கியத்துவத்தை அளவு கடந்து மிகைப்படுத்துவதாகும். 1940-ல் ஒரு குடும்பத்திற்குச் சராசரி யாக இருந்த தொகை ரூ. 68-லிருந்து 1945-ல் ரூ. 266 ஆக உயர்ந்தது. ஆனால், வியாபார நடவடிக்கையும் உற்பத்தியளவும் அதே அளவுக்குப் பெருகவில்லை[3] என்பது, போர் முடிவில் ஒரு குடும்பம் தன் சராசரி நடப்புத் தேவைக்கு வேண்டிய அளவை விட அதிகப் பணத்தை வைத்திருந்தது என்பதைத்தான் காட்டு கிறது. பண அளிப்பில் அளவு கடந்த அதிகரிப்பும், விலையேற்ற மும் மட்டுமே மக்களின் ரொக்க இருப்பை அதிகப்படுத்தி, பணப் புழக்கத்தின் வேகத்தைக் குறைக்கும். எவ்வாறுயினும், இந்தக் காலத்தில் மார்க்கெட்டில் பணவீதங்கள் குறையத் தொடங்கின என்பதும், நாட்டில் மொத்தத்தில் பண மார்க்

[1] அதாவது, மொத்த செக் தீர்வுக்கும் பாங்கு டெபாசிட்டுகளுக்கும் உள்ள விகிதத்தில் குறைவு.

[2] செலாவணி திரும்பிவராமல் இருப்பது அல்லது மந்த பருவத்தில் உபயோகிக்கப் பட்ட நிகரச் செலாவணியின் அளவு, பதுக்கல் நடவடிக்கையின் அறிகுறியாகக் கருதப்படும். அதுபோலவே, கீழின நோட்டுகளைவிட மேலின நோட்டுகளுக்கு அதிகத் தேவை ஏற்படுவதும், பதுக்கல் அல்லது கள்ளச் சந்தை காரணமாக உண் டாகும் தேவைபைக் காட்டும். எடுத்துக்காட்டாக, G. L பிளாக் (Black) எழுதிய 'புழக்கத்தில் உள்ள செலாவணி' (Currency in Circulation) (Federal Reserve Bulletin, April 1944, pp. 318-328) காண்க. போர்க்காலத்தில் இந்தியாவில் செலாவணி உபயோகிக்கப்பட்டதும் திருப்பித்தரப்பட்டது, வழக்கமான பருவகால மாதிரிப்படி அமையவில்லை என்பது முன்பே கூறப்பட்டது (பக்கம் 97 காண்க). போர்க் காலத்தில் மேலின நோட்டுகளுக்குண்டான அதிகத் தேவை கீழே காட்டப்பட்டுள்ளது.

வெவ்வேறு இன நோட்டுகளின் மொத்தப் புழக்கச் சதவீதம்

வருடம்	ரூ. 5	ரூ. 10	ரூ. 100	ரூ. 1,000
1939	19·4	41·9	32·1	5·9
1940	18·3	40·6	33·4	7·3
1941	18·3	39·7	33·3	8·3
1942	18·3	37·4	34·8	9·3
1943	17·1	36·3	34·9	10·9
1944	14·8	36·1	38·0	10.1
1945	12·8	35·3	41·2	9·4

(ஆதாரம்: Reports on Currency and Finance, Reserve Bank of India)

[3] அத்தியாயம் VIII காண்க.

கெட்டுகளில் எளிய நிலை உண்டாயிற்று என்பதும், எல்லா அதிகப் பணத்தையும் ஈர்த்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு ரொக்க இருப்பு அதிகமாக இல்லை என்பதும் விளங்கும்.[1] உண்மையில், அப்போதிருந்த பதுக்கல் தேவைக்கும், செலாவணி நடவடிக்கைத் தேவைக்கும் ஏற்ற அளவிலன்றி அதிக அளவில் பண அளிப்பு இருந்தது. ஆகவே, 1941-க்கும் 1943-க்கும் இடையில் உண்டான அதிக விலையேற்றம், பெரும்பாலும் பணப் பெருக்கத்தினால்தான் ஏற்பட்டது என்று கூறவேண்டும். 1943 முதல் போர் முடியும் வரையில், பண அளிப்பு அதிக வீதத்தில் உயர்ந்தாலும், விலைகள் மொத்தத்தில் நிலையாக இருந்தன. இதற்குக் காரணம் பெரும்பாலும் அரசாங்கத்தின் திறமையான கட்டுப்பாட்டுக் கொள்கைதான். ஆனால், அதிகப் பணத்தின் நெருக்கடி மறைந்திருந்து, 1945–46-க்குப் பிறகு வெளிப்பட்டது. போர் முடிந்த சில ஆண்டுகளில், பண அளிப்பு தடுத்து நிறுத்தப் பட்டாலும், கட்டுப்பாட்டைத் தளர்த்தியதும், தனியார் தொழில் துறையின் மீதிருந்த தடைகளை நீக்கியதும், முந்திய ஆண்டுகளில் திரண்டுகொண்டே வந்து அடங்கியிருந்த அதிகப் பண அளிப்பு நெருக்கடி தலைதூக்கியது.

1949–50 முதல், பண அளிப்பும் விலைகளும் அதிக ஏற்ற இறக்கங்களைக் கண்டுள்ளன. சில சமயங்களில் பண அளிப்பே அதிகமாக இருந்தது. 1951–52-ல் மக்களிடமிருந்த பணத்தின் அளவு திடீரென்று குறைந்தது. அடுத்த ஆண்டிலும் சிறிது குறைந்தது; 1951–52 வரையில் விலையளவு உயர்ந்துகொண்டே வந்தது. ஆனால், அடுத்த ஆண்டில் பண அளிப்பைவிட அதிக வேகத்துடன் பின்னிட்டது. 1952–53 முதல், அதிகரிப்பு வீதம் வேகமாக உயர்ந்து, பண அளிப்புப் படிப்படியாக அதிகரித்தது. 1953–54-க்கும், 1955–56-க்கும் இடையில் பண அளிப்பின் அளவு உயர்ந்திருந்தும் விலைகள் இறங்குமுகம் கண்டதற்குக் காரணம் பெரும்பாலும் உள்நாட்டில் பொருள் அளிப்பு நிலை சாதகமாக இருந்ததுதான். 1955–56-க்கும் 1960 ஏப்ரலுக்கும் இடையில், மக்களிடம் இருந்த பணத்தின் அளவு ரூ. 2,184 கோடியிலிருந்து ரூ. 2,744 கோடிக்கு, அதாவது, 25 சதவீதம் உயர்ந்தது. ஆனால், விலையளவு 22 சதவீதம்தான் உயர்ந்தது. முன்பே கூறிய காரணங்களால் பண அளவின் இயக்கத்திற்கும் விலையளவிற்கும் காணப்படும் இவ் ஒற்றுமையால் இந்தச் காலத்தில் பண அளிப்புக்கும் விலைகளுக்கும் காரணகாரியத் தொடர்பு இருப்பதாக முடிவு செய்வது கூடாது.

[1] D. R. காட்கிலும் N. V. சொவானியும் எழுதிய, 'போரும் இந்தியப் பொருளாதாரக் கொள்கையும்' (War and Economic Policy, 1943), பக். 40, 41.

5. போர்க்கால நிதியும் பணவீக்கமும்

முதலீட்டுக்காகவும் துய்ப்புக்காகவும் செலவழிக்கும்போது பணம் சுறுசுறுப்படைகிறது. செலவழிக்கும் அளவு, பண வருவாயின் அளவையும், மக்களிடமுள்ள வாங்குந்திறனின் அளவையும் நிர்ணயிக்கிறது. சமூகத்தின் வாங்குந் திறனைச் சுறுசுறுப்பாகப் பயன்படுத்துவதாலோ சோம்பிக்கிடக்கச் செய்வதாலோ, ஒரு நாட்டில் விலைகளின் அளவை உயர்த்தவோ தாழ்த்தவோ முடியும் என்பது வெளிப்படை. விலையளவை நிர்ணயிப்பதில் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டக் கொள்கை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இதனால் அறியலாம். அரசாங்க நடவடிக்கைகளை விரைவாக விரிப்பதைப் பொதுவாக ஒப்புக்கொள்ளாத நாடுகளில்கூட, அரசாங்கச் செலவு விரைவாக அதிகரித்து வருகிறது. வருவாயை வசூலிப்பது, அதைச் செலவு செய்வதும் ஒரு நாட்டின் பொருளாதாரத்தையும் பொது விலையளவையும் எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பதை நம் நாட்டில் கடந்த சில ஆண்டுகளில், மத்திய, இராச்சிய அரசாங்கங்களின் செலவீடு மொத்தத் தேசிய வருமானத்தில் பத்தில் ஒரு பங்குக்குமேல் இருந்தது என்பதிலிருந்து அறியலாம். எனவே, ஒரு நாட்டில் விலையளவை நிர்ணயிப்பதில், இவ்வளவு பெரிய நிதியைப் பெறுவதிலும் வெளியிடுவதிலும் பொறுப்புள்ள ஸ்தாபனத்தின் செல்வாக்கு நன்கு விளங்கும்.

எனினும், அரசாங்கம் செலவிடும் அளவு, நாட்டின் விலையமைப்பை நிர்ணயிப்பதில் அதற்குள்ள ஆற்றலைத்தான் காட்டுகிறது. சாதாரணமாக, வரிவிதிப்பு மூலமாகவும் கடன் வாங்குவதன் மூலமாகவும் அரசாங்கம் பெறும் நிதி, அது தன் பல செலவுத் திட்டங்களால் வெளியிடும் அளவுக்குச் சமமாக இருந்தால், அதன் வரவு செலவுத் திட்டக் கொள்கை நாட்டில் உள்ள விலையளவை நிகரமாகப் பாதிக்காது. ஆகவே, அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் சரிக்கட்டப்படாவிட்டால், அதாவது,

அரசாங்கம் தான் பெறும் நிதியைவிட அதிகம் வெளியிட்டால், அல்லது வெளியிடும் பணத்தைவிட அதிகம் பெற்றுல் விலையளவு பாதிக்கப்படும் என்பது தருக்க முறைப்படி தெளிவாகிறது. உறுதியாகக் கூறப்போனுல், தேசிய வரவு செலவுத் திட்டத்தில் உண்டாகும் உபரி அல்லது பற்றுக்குறையின் அளவுதான், பணவீக்கம் அல்லது பணவாட்ட மாறுதல்களை ஆராய்வதில் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனுல், இதனுல் தேசப் பொருளாதார அமைப்பில் அரசாங்கத்தின் செலவீடு விளைவிக்கும் மாறுதலைக் குறைத்து மதிப்பிட நாம் முனையக் கூடாது. உபரி அல்லது பற்றுக்குறை பட்ஜெட்டுகள் விலைகளைப் பாதிப்பதுபோலச் சமன்செய்யப்பட்ட பட்ஜெட்டுகள் பாதிக்கமாட்டா என்பது தான் இதன் பொருள்.

விலைகளில் பணவீக்கப் போக்கு, பற்றுக்குறை பட்ஜெட்டுகளால் உண்டாகிறதென்று பெரும்பாலும் கூறப்படும். வழக்கமாகப் போர்க்காலத்தில் அரசாங்கத்தின் வரவைவிடச் செலவு அதிகமாகும்; அல்லது நாட்டின் திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றத்திற்காக அரசாங்கம் பெரிய அளவில் முதலீட்டுத் திட்டத்தை மேற்கொண்டால் இவ்வாறுகும். அண்மைக்காலம் வரையில் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பற்றுக்குறை நிதியாக்கத்தை முறையான பொது நிதியியலில் ஒப்புக்கொள்ளவில்லை. இதற்கு மாறுகப் போர்ச் சூழ்நிலையானது அரசாங்கம் தன் வருவாயைவிட மிக அதிகம் செலவிடுவதை நியாயமென்றும் அவசியம் என்றும் கருதும்படி செய்துவிட்டது. ஆகவே, பற்றுக்குறை நிதியாக்கமானது போர்க்கால நிதி, பணவீக்கம் ஆகியவற்றோடு அநேகமாக ஒரே பொருளில் வழங்கப்படுகிறது.

போர்க்காலத்தில் அரசாங்கத்தின் கடினமான பிரச்சினை என்னவென்றுல், போர் நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்துவதற்குப் போதிய சாதனங்களைத் தேடுவதுதான். அதாவது, அரசாங்கம் எப்படியாவது தேவையான நிதியைப் பெற்று, அதன்மூலம் போர் நடத்துவதற்குப் போதிய மக்கள், பொருள்கள் ஆகிய சாதனங்களை அடையவேண்டும். சாதனங்களைக் கட்டாயமாகப் பெறுவது நீங்கலாக (இது சாதாரண ஜனநாயக அமைப்பில் முடியாது), அரசாங்கம் மார்க்கெட்டில் நுழைந்து, மக்கள் தேவைக்கெதிராகத் தனக்கு வேண்டிய சாதனங்களைப் பெறவேண்டும். இதற்கு அரசாங்கத்திடம் மார்க்கெட்டிலுள்ள பொருள்களைப் பெறுவதற்குப் போதிய பணம் இருக்கவேண்டும். அப்போது அது அதிக நிதியைப் பெறும் முயற்சியில் செலாவணித் தாள்களை வெளியிடுவதற்கு அச்சுக்கூடத்தைப் பயன்படுத்தும் முரட்டு வழியைப் பின்

பற்றினால், அதன் விளைவு உடனடியான பணவீக்க நெருக்கடியை அவிழ்த்து விடுவதாகும். இது இரண்டு காரணங்களால் மேலும் அதிகமாகும். முதலாவதாக, அரசாங்கம் சாதனங்களைப் பெற்றுக்கொள்ளும்போதெல்லாம், மக்களுக்கு வேண்டிய துப்புப் பொருள்களும் உற்பத்திப் பொருள்களும் அளவில் குறையும். இரண்டாவதாக, இதுவே விலையேற்றத்திற்குக் காரணமாகும். விலை ஏறும்போது, அரசாங்கம் மேலும் அதிகப் பணத்தை வெளியிடவேண்டிவரும். இவ்வாறு ஒவ்வொரு தடவையும் வளர்ந்துகொண்டே வரும் பணவீக்க உயர்வாகிய விஷச் சக்கரம் உண்டாகிச் சுழலத் தொடங்கும்.

இக்காலப் போர்களின் அழிவுத் தன்மைக்கு நிகராக அவற்றினால் ஏற்படும் பிரமாண்டமான செலவைத்தான் கூறலாம்; 1942–45-ல் அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் மொத்தச் செலவாகிய $ 310 பில்லியனில் $ 280 பில்லியன் போருக்காக ஏற்பட்டது. முதல் உலகப் போரினால் அமெரிக்காவுக்கு $ 30 பில்லியன்தான் செலவாயிற்று. இரண்டாவது போரினால் அதைப்போலப் பத்துமடங்காயிற்று. அமெரிக்காவின் தேசிய உற்பத்தியில் 40 சதவீதமும், இங்கிலாந்தின் தேசிய உற்பத்தியில் 50 சதவீதமும் இரண்டாவது உலகப் போருக்கு ஆண்டுதோறும் செலவாயிற்று. 1939–45 ஆண்டுகளில் இங்கிலாந்துக்கு ஏற்பட்ட மொத்தச் செலவு £ 25,000 மில்லியனுக்கும் அதிகம்.[1] அரசாங்கத்தின் சாதாரண வருவாய்ச் சாதனங்களிலிருந்து இவ்வளவு பெரிய நிதிச் செலவுகளைச் செய்ய முடியாது. வரிவிதிப்பினால் கிடைக்கும் பொது வருவாய் போரினால் ஏற்படும் மொத்தச் செலவில் மிகச் சிறிய பகுதிதான். புதிய வரிகளைப் புகுத்துவதும், ஏற்கெனவே உள்ள வரிகளை உயர்த்துவதும், போர்க்காரணமாக உண்டாக்கப்பட்ட அதிகப் பண வருமானத்தில் ஒரு சிறிய பகுதியையே பெற உதவும். விலையேற்றத்திற்கு ஏற்றவாறு வரிகளால் கிடைக்கும் பணம் அதிகரிப்பதில்லை. இந்தியாவில் 1938–39-க்கும் 1945–46-க்கும் இடையில், மத்திய அரசாங்கத்தின் மொத்தச் செலவு பத்து மடங்குக்குமேல் பெருகியது; ஆனால், வரி வருவாய் நான்கு மடங்குதான் அதிகரித்தது.[2] இவ்வாறு, போர்க் காலத்தில் அரசாங்கத்தின் சாதாரண வருமானத்திற்கும் செலவுக்கும் உள்ள வித்தியாசம் படிப்படியாகவும் வேகமாகவும் பெரிதாகிறது. எனினும், இந்த வித்தியாசம்,

[1] British White Paper on War Finance, 'Federal Reserve Bulletin' July 1946.

[2] மத்திய அரசாங்கத்தின் செலவு ரூ. 85 கோடியிலிருந்து ரூ. 894 கோடிக்கு உயர்ந்தது; ஆனால், வரி வருவாய் ரூ. 76 கோடியிலிருந்து ரூ. 311 கோடிக்குத்தான் உயர்ந்தது.

போர்க்காரணிகளால் உண்டாக்கப்படும் பணவீக்க ஆற்றலுக்குச் சரியான அளவுகோலாகாது. ஏனெனின், பற்றுக்குறை முழுவதும் எப்படியாவது சரிக்கட்டப்பட வேண்டும். அதில் ஒரு பகுதியாவது, பணவீக்க நெருக்கடியை அதிகப்படுத்தாத முறையில் ஈடு செய்யப்படுகிறது.

அரசாங்கம் பட்ஜெட் பற்றுக்குறையைச் சரிக்கட்டுவதற்கு, செலாவணித் தாள்களை நேரடியாக வெளியிடுவது தவிர, மத்திய பாங்கு, வாணிப பாங்குகள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து கடனும் வாங்கலாம். கஜானா உண்டியல் போன்ற கடன் பத்திரங்களை அரசாங்கமானது மத்திய பாங்குக்கு மாற்றிக் கொடுத்தும், அரசாங்கத்தின் சார்பில் ஒரு டெபாசிட்டை ஏற்படுத்தியும், மத்திய பாங்கிலிருந்து கடன் பெறுகிறது. வரி விதிப்பினால் சரிக்கட்ட முடியாத செலவுப் பகுதியைச் சமாளிக்க, அரசாங்கம் இந்த டெபாசிட்டுக் கணக்குகள்மீது செக் எழுதுகிறது. பிறகு அரசாங்கம் ஒப்பந்தக்காரர்களுக்கும், பொருள்களை அளித்தவர்களுக்கும், மற்றவர்களுக்கும் இந்த டெபாசிட்மீது செக் எழுதிக் கொடுக்கிறது; இதனால், வாணிப பாங்குகளில் தனிப்பட்டோர் செய்யும் டெபாசிட்டுகள் அதிகரிக்கின்றன. அதே சமயத்தில், தீர்வுக்குப் பிறகு வாணிப பாங்குகள் மத்திய பாங்கில் வைத்துள்ள காப்புநிதிகள், மத்திய பாங்கிலுள்ள அரசாங்க டெபாசிட்டுகள் குறையும் அளவுக்கு அதிகரிக்கின்றன. பாங்குகளின் இந்தக் காப்பு நிதியினால், பாங்குக் கடன்களும் டெபாசிட்டுகளும் பன்மடங்கு பெருகுகின்றன. இந்த முறையில் பட்ஜெட் பற்றுக்குறை ஈடு செய்யப்படும்போது, இரண்டு வழிகளில் பணவீக்க விளைவுகள் உண்டாகின்றன. முதலாவது, அதிக அரசாங்கச் செலவினால் உண்டாகும் பெருக்கியின் வழியாக; இரண்டாவது, பாங்குக் காப்பு நிதிகள் அதிகரிப்பதன்மூலம் பாங்குச் செலாவணி எளிதாக்கப்படுதலினால். அரசாங்கம் வாணிப பாங்குகளிடம் கடன் வாங்கினால், அதன் விளைவும் இதேபோலத்தான் இருக்கும். எனினும், மத்திய பாங்கிலிருந்து கடன் வாங்குவதால் உண்டாகும் அளவு பண அளிப்புப் பெருக்கம் இதனால் உண்டாகாது. ஏனெனில், வாணிப பாங்குகள் தாம் பெறும் அதிக டெபாசிட்டுகளிலிருந்து அரசாங்கத்திற்குக் கடன் கொடுக்கின்றன. ஆனால், முதலில் கூறிய முறையில், அதிகப் பரவலான பலன் காணப்படுகிறது. ஏனெனின், அரசாங்கத்தினால் மத்திய பாங்கிலிருந்து கடன் வாங்கப்பட்டுச் செலவழிக்கப்பட்ட பணம், வாணிப பாங்குகளின் ரொக்க அடிப்படையை விரிவுபடுத்த உதவுகிறது. அவை தம் அதிக டெபாசிட்டுகளிலிருந்து அரசாங்கக் கடன்களுக்கு நேரடியாகப் பணம் கொடுக்கும்போது

உண்டாவதைவிட, அவை மத்திய பாங்கில் போடும் டெபாசிட்டுகளை அதிகரிப்பதனால் அதிகப் பணப் பெருக்க விளைவு உண்டாகும். எனினும், முக்கியமாக, இந்த இரண்டு வழிகளில் பற்றுக்குறைக்கு நிதியளிப்பது, அதிகச் செலாவணித் தாள்களை வெளியிடுவது போன்றதேயாகும். ஆனால், ஒரு வித்தியாசம் உண்டு. அது என்னவென்றால், மத்திய பாங்கிலும் வாணிப பாங்குகளிலும் அரசாங்கம் கடன் வாங்கும்போது அதன் வட்டியோடுகூடிய கடன் அதிகமாகிறது. ஆனால், செலாவணியை நேரடியாக உற்பத்தி செய்தால், அரசாங்கத்திற்கு வட்டியோடு கூடிய கடன் பொறுப்பு ஒன்றுமில்லை.[1] பற்றுக்குறைக்கு நிதியளிக்கும் மூன்றாவது வழி, பொதுமக்களிடமிருந்து கடன் வாங்குவதாகும். இதன் விளைவு என்னவென்றால், சமூகத்தில் உள்ள செலவு செய்யக்கூடிய வருமானம் ஈர்க்கப்படுகிறது. இது, தன்மையிலும் விளைவிலும் வரி விதிப்புப் போன்றது. ஆனால், இதில் கட்டாயம் ஒன்றுமில்லை. அரசாங்கப் பத்திரங்களை வாங்குவதற்குத் தனிப்பட்டவர்கள் பயன்படுத்திய பணமானது பொருள்களையும் பணிகளையும் வாங்குவதற்கு அவர்களால் செலவழிக்கப்பட்டிருக்கக்கூடும். இந்தப் பற்றுக்குறை நிதியாக்க முறை, சமூகத்தின் வாங்குந்திறனை எந்த அளவுக்கு இல்லாமல் செய்துவிடுகிறதோ, அல்லது தனிப்பட்டோர் செலவீட்டிற்குப் பதில் அரசாங்கச் செலவீட்டை ஏற்படுத்த உதவுகிறதோ, அந்த அளவுக்கு, அது மொத்தத்தில் பணவீக்க விளைவற்றதாகிறது என்று கருதலாம்.

மேலே கூறிய மூன்று வழிகளில், முதலாவது இரண்டாவதை விட அதிகப் பணவீக்கத் தன்மையுடையது; இரண்டாவது மூன்றாவதைவிட அதிகப் பணவீக்கத் தன்மையுடையது; பொதுவாக, அதிகப் பணவீக்க ஆற்றலை உண்டாக்காமல், பட்ஜெட் பற்றுக்குறைக்கு நிதியளிக்கும் மிகச் சிறந்த முறை, தனிப்பட்டவர்களிடமிருந்து கடன் வாங்குவதே. எனினும், இந்த வழியினாலும் பணவீக்கம் உண்டாகும் சாத்தியக்கூறு அறவே இல்லை என்று கருதமுடியாது. நடப்பு வருமானச் சேமிப்பிலிருந்து பொதுமக்கள் கடனுக்கு நிதியளித்தால்தான் அதன் பணவீக்க விளைவு ஒன்றுமிராது. இதற்கு மாறாக, அரசாங்கக் கடனுக்கு நிதியளிக்கத் தனிப்பட்டவர்களும், நிதியளிப்புத் தொழில் செய்யாத நிலையங்களும் தாங்கள் சேர்த்துவைத்த சேமிப்பிலிருந்து எடுத்தோ, தங்களுடைய தவணை வைப்புகள் அல்லது மற்ற ஈடுகள்மீது பாங்குகளிலிருந்து

[1] Allen, Buchanan and Colberg, 'Prices, Income and Public Policy' McGraw Hill, 1954, p. 266.

கடன் வாங்கிக் கொடுத்தோ உதவினால், சமூகத்தினிடமுள்ள வாங்குந்திறனில் சிறிதும் குறைவு உண்டாகாது; பணவீக்க நெருக்கடி மேலும் அதிகரிக்கும். ஏனெனில், இந்த முறையினால் சோம்பிக் கிடந்த பணம் சுறுசுறுப்படைகிறது.

போர்க்கால நிதியின் இயல்பு

இந்திய அரசாங்கத்திற்கும் இங்கிலாந்து அரசாங்கத்திற்கும் இடையே ஏற்பட்ட நிதி ஒப்பந்தத்தினால் உண்டான விசேட நிலைமையினால், இந்தியாவில் போர்க்கால நிதியின் பணவீக்க விளைவு தோன்றியது. இந்த ஒப்பந்தத்தின் விளைவாக, இந்திய அரசாங்கம் தன் கணக்கில் மட்டுமின்றி, நேச நாடுகளின் அரசாங்கக் கணக்கிலும் அதிக அளவு பணத்தைச் செலவழித்து வந்தது. உண்மையில், இங்கிலாந்து அரசாங்கத்தின் சார்பாகச் செய்யப்பட்ட செலவீட்டின் அளவு, இந்திய அரசாங்கத்தின் சொந்தச் செலவீட்டளவைவிட மிக அதிகமாக இருந்தது. 1939 நவம்பரில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி, இந்திய அரசாங்கத்தினால் செய்யப்பட்ட பாதுகாப்புச் செலவு முழுவதும் இந்த இரண்டு அரசாங்கங்களுக்கும் இடையே கீழ்வருமாறு பாகம் பிரிக்கப்படவேண்டும் :

இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டியது.

(1) போரில்லாத நிலைமையில், இந்தியாவில் உள்ள இராணுவத்திற்காகச் செய்யப்படும் சாதாரண நிகரப்பயனுள்ள செலவுத்தொகைக்கீடான ஒரு குறிப்பிட்ட வருடாந்தரத் தொகையும், அதனுடன்,

(2) விலையேற்றத்திற்கு ஈடு செய்யும் முறையில் ஒரு கூடுதலான தொகையும், அதனுடன்,

(3) இந்தியா தன் நலத்திற்காக மேற்கொண்டு, இந்தியாவின் தனிப் பொறுப்பு என்று கருதத்தக்க போர் நடவடிக்கைச் செலவுகளும், அவற்றோடு,

(4) கடல்கடந்த நாடுகளில், இந்தியாவின் வெளிப் பாதுகாப்புத் துருப்புகளை வைத்திருப்பதற்காக உண்டாகும் அதிகச் செலவிற்கு ஒரு கோடி ரூபாய் மொத்தமாகக் கொடுக்கவேண்டும்,

போர் நடக்கும் வருடங்களில், இந்தியாவில் ஆண்டுதோறும் உண்டாகும் நிகரப் பாதுகாப்புச் செலவு, முதல் மூன்று இனங்களின் மொத்தத்தைவிட

எவ்வளவு அதிகமோ, அந்த மொத்த அளவையும் இங்கிலாந்து அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.[1] இது இந்திய அரசாங்கத்தின் திருப்பிப் பெறக்கூடிய போர்ச்செலவு என்று கூறப்பட்டது.

மேற்கூறிய நான்கு இனங்களில், இனம் (1)-க்கு, போர் நடக்கும் வரையில் ரூ. 36·77 கோடி என்று உறுதி செய்யப் பட்டது. 1939–40-ல் பாதுகாப்புப் பணிக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 45·18 கோடி பட்ஜெட் மதிப்பீட்டிலிருந்து, பயனற்ற செல வாகிய ரூ. 8·41 கோடியைக் கழித்து, இத் தொகை கணக்கிடப் பட்டது. இனம் (2) மாறுதலுக்குட்பட்டது. இந்திய அரசாங் கத்தின் பொருளாதார ஆலோசகருடன் கலந்து, அப்போதைக் கப்போது உண்டாகும் விலை மாறுதல்களுக்கேற்ப ஒவ்வொரு வருடத்திற்கும் இது கணக்கிடப்பட்டது. இனம் (3) போரின் நிதிச்சுமையில் இந்தியாவின் பங்கைக் குறிக்கும். இனம் (4) சாட் ஃபீல்டு ஒப்பந்தத்தின்படி (Chatfield Settlement), இந்தியா தன் வெளிப் பாதுகாப்பிற்குக் கூட்டுப்பொறுப்பு ஏற்கவேண்டும் என்ற கொள்கையினால் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டது. இக் கொள்கையின்படி, அட்டவணை 25-ல் இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவீடு (வருவாயும் முதலினமும்) போர்க் காலத்தில் எவ்வளவு என்பது காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 25

போர்க்காலத்தில் இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவு

(கோடி ரூபாய்களில்)

	1939–40	1940–41	1941–42	1942–43	1943–44	1944–45	1945–46
வருவாய்க் கணக்கில்							
1. சாதாரண அடிப் படை பட்ஜெட்	36·77	36·77	36·77	36·77	36·77	36·77	
2. விலையேற்றம் ...	1·19	2·57	4·39	7·97	14·44	18·73	
3. போர் நடவடிக்கை கள் (நிகரம்)	3·52	25·90	54·44	161·63	298·75	330·61	360·23
4. பயனற்ற செலவு கள் (நிகரம்)	8·07	8·38	8·33	8·26	8·44	9·38	
முதலினக் கணக்கில்	—	—	—	52·51	37·46	62·83	35·09
மொத்தம்...	49·54	73·61	103·93	267·13	395·86	458·32	395·32

(ஆதாரம்: Report on Currency and Finance, 1946–47, Reserve Bank of India.)

1 மிடி அங்கத்தினரின் வரவுசெலவுத் திட்ட விளக்கவுரை, 1940–41.

போர் நடந்த ஆண்டுகளில் இந்திய அரசாங்கத்தின் திருப்பிப் பெறக்கூடிய செலவினம், தன் சொந்தக் கணக்கில் செலவழிக்கப் பட்டதைப்போன்ற அளவு பெரியது. இது அட்டவணை 26-ல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 26

போர்க்காலத்தில் இந்திய அரசாங்கத்தின் மொத்த இராணுவச் செலவு

(கோடி ரூபாய்களில்)

வருடம்	இந்தியாவின் கணக்கில் பாதுகாப்புச் செலவு (1)	திரும்பப் பெறக்கூடிய போர்ச் செலவு (2)	(1) (2) களின் மொத்தம் (3)
1939-40	49·54	4·00	53·54
1940–41	73·61	53·00	126·61
1941–42	103·93	194·00	297·93
1942–43	267·13	325·48	592·61
1943–44	395·86	377·87	773·73
1944–45	458·32	410·84	869·16
1945–46	395·32	374·54	769·86
மொத்தம் 1939–40 முதல் 1945–46 வரை	1743·71	1739·73	3483·44

(ஆதாரம்: 'Report on Currency and Finance,' 1946–47, Reserve Bank of India.)

இந்திய அரசாங்கத்தின் கணக்கில் செய்யப்பட்ட அதிகப் பாதுகாப்புச் செலவினால் உண்டான பட்ஜெட் பற்றுக்குறை களின் பணவீக்க விளைவு சுமாராக இருந்தது. ஏனெனில், அதிக வரிவிதிப்பினாலும் கடன்களாலும் இப் பற்றுக்குறைகள் சரிக் கட்டப்பட்டன. இதற்கு மாறாக இங்கிலாந்து அரசாங்கத்தின் சார்பில் செய்யப்பட்ட பிரமாண்டமான இராணுவச் செலவுக்கு நிதியளிப்பதற்கு, முன் இல்லாத அளவிற்கு அதிகச் செலாவணிப் பெருக்கம் செய்யவேண்டியதாயிற்று. இது விலைகள் ஏறுவதற்குக் காரணமாயிற்று. நேச நாடுகளின் இராணுவச் செலவுக்கு உதவுவதற்காக இந்திய அரசாங்கம் செய்துகொண்ட ஏற்பாட்டின் நேரடி விளைவே இது. இந்தச் செலவைப் பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து ஸ்டர்லிங்குகளாக இறுதியாகத் திரும்பப் பெறலாம் எனினும், முதலில் இந்திய அரசாங்கம் ரூபாய்களாகச் செலவு செய்யவேண்டுமென்பதை நாம் அறியவேண்டும். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில்

செய்யப்பட்ட செலவு இந்தியாவிற்கு ஸ்டர்லிங்குகளில் கொடுக்கப்பட்டது. இந்திய அரசாங்கம் அத் தொகையைக் கஜானா உண்டியல்களாக வைத்திருந்தது. இந்தியாவில் அமெரிக்கா வாங்கிய பொருள்களுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு டாலர்களாகக் கொடுக்கப்பட்டன. பிரிட்டிஷ் அரசாங்கம் அதற்குச் சமமான ஸ்டர்லிங்குகளை இந்திய அரசாங்கத்திற்கு அளித்தது. இவ்வாறு, நேசநாடுகள் சார்பாக இந்தியாவில் செய்யப்பட்ட செலவுகள் அதிகரித்துக்கொண்டேபோக, அந்த அளவுக்கு இந்தியாவின் ஸ்டர்லிங்கு இருப்புகள் அதிகரித்தன. ஸ்டர்லிங்கானது இந்திய ரிசர்வ் பாங்கின் சொத்துகளில் ஒன்றுகையால், அது அதற்கீடாக ரூபாய் நோட்டுகளை வெளியிடலாம். இந்திய அரசாங்கம் இந்த ஏற்பாட்டைப் பயன்படுத்தித் தன் ஸ்டர்லிங்கு சொத்துகளை ரிசர்வ் பாங்கிற்கு மாற்றிக் கொடுத்து, அதற்கீடாக ரூபாய்களை பெற்றுத் தான் கொடுக்கவேண்டியவைகளை ரூபாயாகக் கொடுத்தது. இந்திய அரசாங்கத்திடமிருந்து ரிசர்வ் பாங்கு பெற்ற ஸ்டர்லிங்குகள், முதலில் பாங்கிங் பிரிவில் 'வெளிநாடுகளில் உள்ள இருப்புகள்' என்ற தலைப்பில் சொத்துகள் இனத்தில் சேர்க்கப்படும். பொறுப்புகள் இனத்தில் இதற்கு நிகராக அரசாங்க டெபாசிட்டுகள் அதிகரிக்கும். பிறகு அரசாங்கம்தான் இந்தியாவில் பணம் கொடுக்க வேண்டியவர்களுக்கு இந்த டெபாசிட்டுகளின் பேரில் செக்குகளை எழுதிக் கொடுக்கும். இச் செக்குகளைப் பெற்றவர்கள் அவற்றை ரிசர்வ் பாங்கில் தம் இருப்பில் வரவு வைப்பதற்காக அனுப்புவார்கள். இந்த நடவடிக்கைகளின் தொகுபலன் என்னவென்றால், ரிசர்வ் பாங்கில் அரசாங்கத்தின் டெபாசிட்டுகள் குறைந்து அதில் வாணிப பாங்குகளின் டெபாசிட்டுகள் அதிகரிக்கும். அடுத்த படியாக, அரசாங்கமும், அரசாங்கத்திடமிருந்து செக்குகளைப் பெற்று அவற்றைத் தம் பாங்குகளில் போட்டவர்களும் பணமாகப் பெற்றுக்கொள்ளும்போது, வாணிப பாங்குகளின் ரொக்க இருப்புகள் குறையும். அதைத் தொடர்ந்து ரிசர்வ் பாங்கின் பாங்கிங் பிரிவிலும் ரொக்கம் குறையும். பாங்கிங் பிரிவில் வழக்கமான அளவுக்குக்கீழ் ரொக்கம், அதாவது, நோட்டுகளும் ரூபாய்களும் குறையுமானால், ரிசர்வ் பாங்கு தன் ஸ்டர்லிங்கு பத்திரங்களில் அல்லது 'வெளிநாடுகளில் உள்ள இருப்புகளில்' ஒரு பகுதியை பாங்கிங் பிரிவிலிருந்து வெளியீட்டுப் பிரிவுக்கு மாற்றும். இந்தச் சொத்தின் அடிப்படையில் அது பிறகு புதிய நோட்டுகளை வெளியிட்டு ரொக்கப் பெட்டியை நிரப்பும். பிறகு இதன் விளைவாக வெளியீட்டுப் பிரிவில் 'பாங்கிங் பிரிவில் உள்ள நோட்டுகள்' அல்லது அதனுடன் வெளிச் செலுத்தியிருந்தால், 'புழக்கத்தில் உள்ள நோட்டுகள்' என்ற தலைப்பில் பொறுப்

பினம் அதிகரிக்கும். இதற்கேற்பச் சொத்து இனத்தில் ஸ்டர்லிங் பத்திரங்களும் அதிகரிக்கும். இவ்வாறு, நேச நாடுகளின் சார்பில் செய்யப்பட்ட செலவுகளின் விளைவாக இந்திய அரசாங்கம் பெற்ற ஸ்டர்லிங்கு பத்திரங்களால் நம் நாட்டில் செலாவணியளவில் பெருக்கம் உண்டாயிற்று. அட்டவணை 27-ல் உள்ள விவரங்கள், ஒருபுறம் திரும்பப் பெறக்கூடிய போர்ச் செலவு அதிகரிப்புக்கும் ஸ்டர்லிங்கு இருப்புகளுக்கும் உள்ள தொடர்பும், மற்றொருபுறம் ஸ்டர்லிங்கு இருப்புகளுக்கும் புழக்கத்தில் உள்ள நோட்டுகளுக்கும் உள்ள தொடர்பும் காட்டப் பட்டுள்ளன.

அட்டவணை 27

போர்ச் செலவும் நோட்டுப் புழக்கத்தில் அதிகரிப்பும்

(கோடி ரூபாய்களில்)

வருடம்	திரும்பப் பெறக் கூடிய போர்ச் செலவு	ஸ்டர்லிங்கு பத்திரங்களில் அதிகரிப்பு	புழக்கத்தில் உள்ள நோட்டுகளில் அதிகரிப்பு
1941–42	194·00	35·08	73·09
1942–43	325·48	154·11	185·56
1943–44	377·87	324·41	263·73
1944–45	410·84	220·21	191·52
1945–46	374·54	197·53	193·95

(ஆதாரம்: 'Report on Currency and Finance,' Reserve Bank of India, 1946-47.)

இந்த ஆண்டுகளில் வெளியீட்டுப் பிரிவின் மற்ற சொத்துகள்—தங்க நாணயம், உலோகக் கட்டி, ரூபாய் நாணயம், ரூபாய்ப் பத்திரங்கள்—அதிக மாறுதல் அடையவில்லை என்பதைக் கவனிக்கவேண்டும். ஸ்டர்லிங் பத்திர அதிகரிப்புக்கும் புழக்கத்தில் உள்ள நோட்டுகளின் அளவுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு இதனால் நன்கு விளங்கும்.

ஒருபுறம், திரும்பப் பெறக்கூடிய போர்ச் செலவுகள் உட்பட இந்திய அரசாங்கத்தின் மொத்தக் கொடுப்பல்களுக்கும், மற்றொரு புறம் அரசாங்கத்தின் வரவுகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம்தான் பட்ஜெட் பற்றுக்குறையின் அளவாகும். இது போர்க்காலப் பணவீக்கத்தை ஆராய்வதில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மேற்கண்ட ஆராய்ச்சியிலிருந்து விளங்குவது என்னவென்றால், வரி விதிப்பினாலும் கடன் வாங்குதலினாலும் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் வரவு, எல்லா இனங்களிலும்

அரசாங்கக் கொடுப்பல்களுக்கேற்ப அதிகரிக்கப்பட்டிருந்தால், போர்க்காலத்தில் உண்டான செலாவணிப் பெருக்கம் தடுக்கப் பட்டிருக்கவோ, அதன் வேகம் குறைக்கப்பட்டிருக்கவோ கூடும். கூடுதலான வரி விதிப்பினாலும் கடன் வாங்குதலினாலும் பற்றாக் குறை சரிக்கட்டப்படும் அளவுக்குப் பணவீக்க அளவு குறையும். அப்போதிருந்த நிலைமையில், அரசாங்கச் செலவைக் குறைப்பது என்பது முடியாத செயல். விரைவில் அரசாங்கம் மேற்கொண்ட போர்க்கால நிதிமுறையின் பணவீக்க விளைவு வெட்ட வெளிச்ச மாகிவிட்டது. அரசாங்கத்தின் கொள்கை கடுமையாகத் தாக்கப்பட்டது. எனினும், குறிப்பாக நம் நாட்டின் அரசியல், பொருளாதார நிலைகளை மனத்தில் கொண்டு அப்போதிருந்த போர்க்கால ஏற்பாடுகளைக் காணும்போது, நம் நாட்டில் பண வீக்கப் போக்குகளைக் கட்டுப்படுத்துவதற்குக் கூறப்பட்ட சில யோசனைகள் முற்றிலும் செயலுக்கு உதவாதவையாய்த் தோன் றும். அப்போது கூறப்பட்ட யோசனைகளில் ஒன்று, பிரிட்டன் இந்தியாவில் ரூபாய்க் கடனை எழுப்பவேண்டுமென்பது. பற்றாக் குறையில் ஒரு பகுதியையேனும் அடைக்கவேண்டுமென்று அரசாங்கம் அதிக அளவில் கடன் வாங்கத் தொடங்கியது. இது பற்றிப் பின்னர்க் கூறப்படும். இறுதியாகப் பார்க்கப்போனால், செலாவணிப் பெருக்கம் அல்லது அதிக வரிவிதிப்பு, கடன் எழுப்புதல் ஆகியவற்றின் விளைவு, நடப்பு உற்பத்தியில் பெரும் பகுதியை மக்கள் துய்ப்புக்கன்றிப் போருக்காக எடுத்துக்கொள் வதேயாகும். மக்கள்தொகையில் பெரும்பகுதி பிழைப்புக்கே போதாமல் வாழும்போது, மேலும் கடன் வாங்குதல் என்பது முடியாது. மற்றொரு யோசனையும் கூறப்பட்டது. அது என்ன வென்றால், அரசாங்கக் கடன்களுக்குக் கொடுக்கப்படும் வட்டி வீதத்தை உயர்த்தினால் அதிக நிதி கிடைக்கும் என்பது. இதுவும் மேற்கூறிய காரணத்தினாலும், அரசாங்கத்தின் வட்டிச் சுமை அதிகரிப்பதுடன் போருக்குப் பிற்காலத்தில் தொழில் பெருக்கத் தைத் தடுக்கும் என்ற காரணத்தினாலும், அரசாங்கத்தால் நிரா கரிக்கப்பட்டது. ஆகவே, மேலும் அதிக வரிவிதிப்பும் கடன் வாங்குதலும் முடியாதாகையாலும் அரசாங்கச் செலவீட்டள வைக் குறைப்பதும் முடியாதாகையாலும், செலாவணிப் பெருக்கத்தைத் தவிர வேறு வழி இல்லை என்று அரசாங்கத்தின் சார்பாளர்கள் வாதித்தார்கள். பொதுமக்கள் துய்ப்பிலிருந்து போருக்காக எடுத்துக்கொள்ள வேண்டிய பொருள்களின் மொத்த அளவு மாறுதிருக்கும் வரையில், ஸ்டர்லிங்கு ஈட்டின் பேரில் செலாவணியைப் பெருக்காவிட்டால், மாற்றுவழி, ரிசர்வ் பாங்கிலிருந்து கடன் வாங்கி அதைப் பெருக்குவதேயாகும். பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்கு அரசாங்கம் இந்த வழியைப்

பின்பற்றவேண்டிய கட்டாயம் ஏற்படவில்லை என்பதே அதற்கு ஆறுதலாக இருந்தது.

போர்க்காலத்தில் வரிக்கொள்கை

எல்லா இனங்களிலும் இந்திய அரசாங்கம் கொடுத்த மொத்தத் தொகையில், திரும்பப் பெறக்கூடிய போர்ச் செலவுகளுக்கீடாக முழுவதும் ஸ்டர்லிங் பத்திரங்களின்பேரில் செலாவணியை வெளியிட்டே சரிக்கட்டப்பட்டது என்று முன்பு பார்த்தோம். இந்த இனச் செலவு போக, போர்க்காலத்தில் இந்திய அரசாங்கத்தின் சொந்தப் பாதுகாப்புச் செலவும் நிருவாகச் செலவும் போர்க்காலத்தில் விரைவாக அதிகரித்தது. இந்திய அரசாங்கத்தின் மொத்தச் செலவு, 1938–39-ல் ரூ.85·15 கோடியாக இருந்து, 1945–46-ல் ரூ. 559·54 கோடியாக உயர்ந்தது, அதாவது, ஆறு மடங்குக்குமேல் அதிகரித்தது. பட்ஜெட்டில் செலவினத்தில் உண்டான இவ்வதிகரிப்பு ஓரளவு வரிவிதிப்பினாலும், ஓரளவு கடன் வாங்குதலினாலும் ஈடுசெய்யப்பட்டது. புதிய வரிகளாலும் ஏற்கெனவே இருந்த வரிவீதங்களை உயர்த்தியதாலும் அரசாங்கத்தின் வருவாய் அதிகரித்தது. ஆனால், இவ் வழியில் பெற்ற அதிக வருவாய் அரசாங்கத்தின் விரைவாக வளர்ந்துகொண்டே வந்த செலவுக்குப் போதாமல் இருந்தது. ஆகவே, அரசாங்கம் பற்றுக்குறை பட்ஜெட்டுகளைக் காணவேண்டிவந்தது. எனினும், கணிசமான அளவிலிருந்த இப் பற்றுக்குறை பணவீக்க நிலையை உண்டாக்கவில்லை. ஏனெனின், அரசாங்கம் தன் கடன் கொள்கையால் மக்களிடமிருந்து அதிகத் தொகைகளைப் பெற முடிந்தது. ஆகவே, கடன் வாங்குதலினாலும் வரி விதிப்பினாலும் கிடைத்த வரவு, பட்ஜெட் பற்றுக்குறையை அடைப்பதற்கு வேண்டியதைவிட அதிகமாக இருந்தது.

இந்தியாவில் நேசநாடுகளின் செலவினால் பணவீக்கம் உண்டாயிற்றென்று அரசாங்கம் உடனே ஒத்துக்கொள்ளாவிட்டாலும், போரின் முதல் ஆண்டிலேயே வரிவிதிப்பினாலும் கடன் வாங்குதலினாலும் பட்ஜெட் பற்றுக்குறையை அடைக்கவேண்டியதன் அவசியத்தை அது வற்புறுத்தியது. போர் முடியும்வரையிலாவது அதிகரித்துவரும் செலவைச் சரிக்கட்டுவதற்குமட்டும் வரிவிதிப்புப் பயன்படுத்தப்பட்டது என்பதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும். இதனால் ஓரளவு பணவீக்கத் தடை உண்டாகுமெனினும், அரசாங்கச் செலவுக்கு நிதியளிப்பதற்கு இப் பணவீக்கத் தடை முறையின் முக்கியத்துவம் போரின் பிந்திய கட்டங்களில்தான் உணரப்பட்டது.[1] போர் நடந்த ஆண்டுகளுக்கான

[1] நிதி அங்கத்தினரின் வரவுசெலவுத் திட்ட விளக்கவுரை, 1944–45.

பட்ஜெட் உத்தேசங்களைப் பார்த்தால், பொதுவாகப் பட்ஜெட் பற்றுக்குறையில் மூன்றில் ஒரு பங்கிலிருந்து பாதிவரையில் வரிவிதிப்பினாலும், மீதியைக் கடன் வாங்குவதனாலும் அரசாங்கம் ஈடுசெய்ய எண்ணியிருந்தது விளங்கும். ஆனால் உண்மையில், புதிய வரிகளும் ஏற்கெனவே இருந்த வரிவிகிதங்களைக் கணிசமாக அதிகரித்ததும் எதிர்பார்த்த அளவுக்கு அதிக வருவாயை அளிக்க வில்லை. ஆகையால் பட்ஜெட் மதிப்பீடுகளில் காட்டியிருந்ததை விட உண்மையான பற்றுக்குறைகள் ஒரே சீராக அதிகமாக இருந்தன. எனவே, பட்ஜெட் பற்றுக்குறைகளுக்கு நிதியளிப்பதற்கு மேலும் மேலும் கடன் வாங்குவதையே நம்பியிருக்க வேண்டியதாயிற்று.

அதிகரித்துவரும் பொதுச்செலவைச் சரிக்கட்டுவதற்கு மத்திய அரசாங்கம் எந்த அளவுக்கு வரிவிதிப்பைப் பயன் படுத்தியது என்பதும், வரிகளின் தன்மையும் கீழ்வரும் அறிக்கையில் கூறப்படுகின்றன.

போர்க் காலத்தில் வரியமைப்பில் மாறுதல்

1940–41

1. அமித லாபவரி—'திட்ட லாபங்களுக்கு' மேல் உள்ள அதிக லாபத்தில் 50 சதவீதம் வரிவிகிதம்.
2. சர்க்கரைமீது ஓர் அந்தருக்குக் கலால் வரி ரூ. 2-லிருந்து ரூ. 3-க்கு உயர்த்தப்பட்டது.
3. மோட்டார் எண்ணெய்மீது வரி காலனுக்கு 10 அணாவிலிருந்து 12 அணாவாக உயர்த்தப்பட்டது.

1941–42

1. அமிதலாப வரி விகிதம் 66⅔ சதவீதமாக உயர்த்தப்பட்டது.
2. வருமான வரிமீதும் உபரி வரிமீதும் இருந்த மத்திய சர்சார்ஜு 25 சதவீதத்திலிருந்து 33⅓ சதவீதமாக உயர்த்தப்பட்டது.
3. தீப்பெட்டிகள்மீது கலால்வரி இரட்டிக்கப்பட்டது.
4. செயற்கைப்பட்டு, நூல் ஆகியவற்றின்மீது குறிப்பிட்ட இறக்குமதிவரி பவுண்டுக்கு 3 அணாவிலிருந்து 5 அணா ஆக்கப்பட்டது.
5. காற்றடைக்கும் டயர்கள், டியூப்புகள்மீது மதிப்பில் 10 சதவீதம் புதிய வரி விதிக்கப்பட்டது.

1942–43
1. சில வருமான இனங்கள் மீது வருமானவரி சர்சார்ஜைச் சிறிது உயர்த்தியது.
2. இறக்குமதிகள் எல்லாவற்றின்மீதும் உள்ள வரியில் 20 சதவீதத்திற்குச் சமமான அவசரநிலை சர்சார்ஜ்.
3. மோட்டார் எண்ணெய்மீது கலால்வரி 3 அணா உயர்த்தப்பட்டதுடன், அதே அளவுக்கு இறக்குமதி மீதும் தாங்கு வரி உயருதல்.
4. மண்ணெண்ணெய், வெள்ளிமீது இருந்த இறக்குமதி வரியளவுக்குக் கலால்வரி உயர்வு.
5. தபால், தந்தி கட்டணங்களில் உயர்வு.

1943–44
1. வருமான வரிமீது சர்சார்ஜ் உயர்த்தப்பட்டது. உபரி வரி வீதமும் கார்ப்பரேஷன் வரிவீதமும் அதிகரிக்கப்பட்டன.
2. புகையிலைமீது புதிய மத்திய கலால்வரி விதிக்கப்பட்டது.
3. தாவர உற்பத்திப் பொருள்கள் (வனஸ்பதி) மீது ஓர் அந்தருக்கு ரூ. 7 கலால்வரி.
4. தபால், தந்தி கட்டணங்களில் மேலும் உயர்வு.

1944–45
1. வருமான வரிமீது மத்திய சர்சார்ஜ் மேலும் உயர்த்தப்பட்டது. உபரி வரி, கார்ப்பரேஷன் வரி விகிதங்களிலும் உயர்வு.
2. அடிப்படைச் சுங்கத் தீர்வையில் 20 சதவீதமாயிருந்த அவசரநிலை சர்சார்ஜ், புகையிலைக்கும் எண்ணெய்களுக்கும் 50 சதவீதமாக உயர்த்தப்பட்டது.
3. புகையிலைமீது கலால்வரி அதிகரிக்கப்பட்டது.
4. பாக்கு, காப்பி, தேயிலைமீது பவுண்டுக்கு 2 அணா வீதம் கலால்வரி.

1938–39-க்கும், 1945-46-க்கும் இடையில் இந்தியாவிற்காக மத்திய அரசாங்கத்தின் செலவு ஆறு மடங்குக்குமேல் உயர்ந்தது. ஆனால், மொத்த வரிவருமானம் நான்குமடங்குதான் அதிகரித்தது. வரியினால் கிடைக்கக்கூடிய அதிக வருமான வீதத்திற்கும் அதிகச் செலவுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தினால், போர் முன்னேறும்போது அரசாங்கச் செலவினால் வெளியிடப்பட்ட அதிக வாங்குந்திறனில் மேலும் மேலும் குறைந்த அளவையே வரி

வீதிப்பீஞல் ஈர்க்கமுடிந்தது என்பது தெரியும். ஆஞல், பொது மக்களிடமிருந்து மேலும் அதிக அளவு வாங்குந்திறனே வரிகள் ஈர்க்கமுடியவில்லே என்பது ஒருபுறமிருக்க, அரசாங்கத்தினுல் தேர்ந்தெடுக்கப்பட்ட வரிகள், அரசாங்கச் செலவின் பணவீக்க விளேவுகளே இல்லாமல் செய்யும் ஆற்றலுடையவையே என்பது ஐயமே. அரசாங்கச் செலவைவிட வரிகள் அதிகமாக இருந்தாலொழிய, அவை பணவீக்கத்தை முற்றிலும் தடுக்கமுடியாது என்று கூறப்படுகிறது. இது ஏனென்ருல், வரி அதிகரிக்கும்போது அது செலவீட்டைப் பாதித்துச் சேமிப்பைக் குறைக்கும்.[1] இந்த உபரி வரி வருமானக் கொள்கை செயலுக்குதவாது என்பது தெளிவு. ஆஞல், இதைத் தவிர, ஒரு பொதுவான கொள்கையாக நாம் கூறவேண்டியது என்னவென்ருல், வரிவிதிப்பு எந்த அளவுக்கு வாங்குந்திறனைத் துய்ப்புச் செலவிலிருந்து திருப்புகிறதோ, அந்த அளவுக்கு அது பணவீக்கத்தைத் தடுக்கும் முறையாக வெற்றியளிக்கும் என்பதே. உண்மையில், போரினுல் ஏற்பட்ட நிலேமையில் அதிக அளவுப் பணம் பதுக்கப்பட்டு, அதிகப் பணவீக்க ஆற்றலுடையதாக மாறியது. போர்க்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வரிக்கொள்கை இந்தப் பணவீக்க அம்சத்தை விரட்ட முடியவில்லே. இதற்கு மாருக, வருமானவரி, உபரிவரி வீத உயர்வும் அமிதலாப வரி விதிப்பும் போன்ற சில வழிகள் கையாளப்பட்டதால், சேமிப்பு, முதலீடு, அவற்றின்மூலம் உற்பத்தி ஆகிய நடவடிக்கைகள் நிச்சயமாகத் தடுக்கப்பட்டிருக்கும். வாணிப வகுப்புப் பிரதிநிதிகள் கூறுவதுபோலத் தொழில் துணிவுக்கு இது அவ்வளவு அபாயமான தடையாய் இராவிடினும், இதனுல் பணவீக்கத்திற்குத் தடையும் அதிகமாக இராது என்பது தெளிவு. மேலும், மக்களில் பெரும்பகுதியினர் பிழைப்புக்கே போதாத நிலேயில் வாழும் நாட்டில் துய்ப்பு வரிகள் அவசியமான பண்டங்கள்மீது விதிக்கப்பட்ட வரிகளாகவே இருக்கும்; பணம் புழங்கும் வேகம் குறைவாகவும், பெரும் பகுதிகளில் மார்க்கெட் பொருளாதாரம் நன்கு வளர்ச்சியடையாமலும் இருக்கும் நாட்டில், வரிவிதிப்பு பணவீக்கத்திற்குத் தடையான நடவடிக்கையாய் இருப்பதற்கு அதிக இடமில்லே.

வருமான வரிக்கும் அமிதலாப வரிக்கும் பொருந்துவதாய் 1942-43-ல் கடைப்பிடிக்கப்பட்ட டெபாசிட் திட்டம், பணவீக்கத் தடைமுறையாக அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. 1942-ன் நிதிச் சட்டத்தின்படி, ரூ. 1,500-க்கும், ரூ. 2,000-க்கும் இடையில் உள்ள வருமானங்களும் ரூபாய்க்கு ஆறு பை வீதம் வரிவிதிப்புக்குட்பட்டன. மொத்த வருமானத்தில் முதல்

1 W. Manning Dacey, 'The British Banking Mechanism' 1957, p, 157.

ரூ. 750-க்கு மேல் உள்ளதற்கும் வரி விதிக்கப்பட்டது. ஆனால் வரி விதிக்கப்பட்டவர், வரியைப்போல் $1\frac{1}{4}$ மடங்கு பணத்தைத் தபால் நிலையச் சேமிப்பு பாங்கில் டெபாசிட் செய்தால், அவருக்கு வரி இடையாது. போர் முடிந்தபிறகு ஓராண்டுக்குப் பிறகுதான் இந்தப் பணத்தைத் திரும்பப் பெறமுடியும். நிதி அங்கத்தினர் கூறியதுபோல, இது முக்கியமாக, வரி விதிப்பன்றிச் சேமிப்புத் திட்டமேயாகும். இதேபோல அமிதலாப வரி விஷயத்திலும் அரசாங்கமானது, வரி விதிக்கப்பட்டவர் நிகர அதிக லாபத்தில் $66\frac{2}{3}$ சதவீதம் இறுதியாகச் செலுத்தி, நிகர அதிக லாபத்தில் $\frac{1}{5}$ பங்கை டெபாசிட் செய்தால், தானும் அதில் $\frac{1}{10}$ பங்குக்கு மேற்படாமல் உதவித் தொகையளிப்பதாக 1943-ல் ஒப்புக்கொண்டது. இந்த டெபாசிட்டுகளுக்கு 2 சதவீதம் வட்டி அளிக்கப்படும். போர் முடிந்த 12 மாதங்களுக்குள் அவை திருப்பியளிக்கப்படும். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையின் நோக்கம் என்னவென்றால், போர்க்காலத்தில் சம்பாதித்த அதிக இலாபத்தை முடிந்தவரையில் முடக்கிவிட வேண்டும் என்பதும், ஒத்திப்போடக்கூடிய தனியார் செலவுகளால் விலையளவுபாதிக்கப்படாமல் இருக்கவேண்டும் என்பதும்தான்.[1] அடுத்த ஆண்டில் அமிதலாப வரியில் கட்டாயமாக டெபாசிட் செய்யவேண்டிய $\frac{1}{5}$ பாகம், $\frac{19}{64}$ பாகமாக உயர்த்தப்பட்டது. ஆனால், அதே சமயத்தில் அரசாங்கம் வரிவிதிக்கப்பட்டவருக்கு அளிக்கும் $\frac{1}{10}$ பங்கில் ஒரு மாறுதலும் செய்யப்படவில்லை. இப்படிச் செய்வதால், அமிதலாப வரியையும், வருமான வரியையும், உபரி வரியையும் செலுத்திய பிறகு எஞ்சியுள்ள அதிக இலாபம் முழுவதையும் இது டெபாசிட்டுகளாக முடக்கிவிடும் என்று கருதப்பட்டது. இவ்வாறு போர்க்காலத்தில் தொழிலில் சம்பாதித்த இலாபத்தில் பெரும் பங்கைப் பெற்றுவிட்டால், அது பணவீக்கத் தடை முறையாகச் செயல்படுவதுடன், போர் முடிந்தபிறகு புது முதலீட்டுக்கும் உதவும் என்று நம்பப்பட்டது. 1944-45-ல் கொண்டுவரப்பட்ட மற்றொரு திட்டமும் பணவீக்கத் தடை வகையைச் சேர்ந்த உபாயமாகும். அது என்னவென்றால், தோற்றுவாயிலேயே கழிக்கப்பட முடியாத வருமான வரியை முன்னதாகவே செலுத்திவிட வேண்டுமென்பதாகும்.

போர்க்காலத்தில் கடன் வாங்கும் கொள்கை

போரின் தொடக்க நிலையிலேயே அதிக வாங்குந்திறனை இல்லாமல் செய்வதற்குக் கடன் வாங்குவது ஒரு வழி என்று உணரப்பட்டது. போரின் முதல் ஆண்டில் பட்ஜெட்டில் விழுந்த

[1] நிதி அங்கத்தினரின் பட்ஜெட் விளக்கவுரை, 1942–43

துண்டு, அதிக வரிவிதிப்பினாலும், ஓரளவு வருவாய்க் காப்பு நிதியிலிருந்து ரூ.91 இலட்சம் உபரியை எடுத்துப் பயன்படுத்தியதாலும் அடைக்கப்பட்டது. பின் ஆண்டுகளில் எல்லாம், அரசாங்கம் மேலும் மேலும் பொதுமக்களிடமிருந்து கடன் பெறுவதையே நம்பியிருந்தது. 1941-42 பட்ஜெட்டை அளிக்கும்போது, நிதி அங்கத்தினர், இந்தியாவின் போர் முயற்சிக்குத் திருப்திகரமான முறையில் நிதியைப் பெறவேண்டுமானால், நாட்டின் சேமிப்புகளைத் தீவிரமாகத் திரட்டவேண்டுமென்று வற்புறுத்தினர். இப்படிச் செய்யவேண்டுமென்று மீண்டும் மீண்டும் வற்புறுத்தப்பட்டது. போர்நிலையில் அதிக வாங்குந்திறனை (இது போர்க்கால நிதியின் தவிர்க்க முடியாத விளைவு) கடன் வாங்குவதன்மூலம் ஈர்த்துக்கொண்டுவிட்டால், அரசாங்கத்திற்கு வேண்டிய சாதனங்கள் கிடைப்பதோடு, விலைகளைத் தாழ்த்துவதற்கும், போர் முடிந்தபிறகு பொருளாதாரப் புனரமைப்புக்கும் வளர்ச்சிக்கும் உதவும் வழியாக அது பயன்படும் என்று திரும்பத்திரும்பக் கூறப்பட்டது. சர் A. J. ரெய்ஸ்மன் கூறியதுபோல, போர்ப் பொருளாதாரத்தில் பொதுமக்கள் தரும் கடன், 'இரு விதங்களில் நன்மை பயக்கும், அதாவது, அதனால் கொடுப்பவருக்கும் நன்மை, பெறுபவருக்கும் நன்மை. அரசாங்கத்திற்கு அது வெற்றிக்கு இன்றியமையாத துணையாகும். முதலீடு செய்பவருக்கு, வெற்றிபெற்றபிறகு போரிலிருந்து அமைதிக்குத் திரும்பும் நிலையில் உண்டாகக்கூடிய அபாயங்களுக்கும், நிச்சயமற்ற நிலைமைகளுக்கும் எதிரான ஒரு நடவடிக்கையாக அது இருக்கும். அன்றியும், துய்ப்புப் பொருள்களின் இருப்பு ஓரளவுக்குட்பட்டு அல்லது குறைந்துகொண்டு இருக்கும் நிலையில் வாங்குந்திறனைக் கட்டுமீறிப் பயன்படுத்தினால் உண்டாகக்கூடிய பொருளாதார சமூகச் சீர்குலைவுக்கெதிரான நடவடிக்கையாகவும் அது இருக்கும்'.[1]

இந்த நோக்கத்துடன்தான் பல்வேறு கடன்கள் எழுப்பப்பட்டன. மக்கள் சேமிப்புக்கும், சமூகத்தில் நடுத்தர, கீழ்த்தர வகுப்பினரிடமிருந்து பெருந்தொகைகளை ஈர்ப்பதற்கும் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. போர் தொடங்கிய ஒரு வருடத்திற்கெல்லாம், 1940 ஜூனில் அரசாங்கம் 3 சதவீத வட்டியுள்ள ஆறு வருடப் பாதுகாப்புப் பத்திரங்களை வெளியிட்டுப் பாதுகாப்புச் சேமிப்பு இயக்கத்தைத் தொடங்கியது. இதைத் தொடர்ந்து 1941 முதல் 1943 வரை இரண்டாவது, மூன்றாவது, நான்காவது பாதுகாப்புக் கடன்களும், 1944, 1945-ல் 3 சதவீத வட்டியுள்ள இரண்டு வெற்றிக் கடன்களும், பிந்திய ஆண்டுகளில்

1 நிதி அங்கத்தினரின் பட்ஜெட் விளக்கவுரை, 1944–45.

எழுப்பப்பட்டன. இக் கடன்களில் பெரும்பாலானவை, 3 சத வீத வட்டியுள்ள குறுகியகால, அல்லது இடைத்தரமான காலக் கடன்கள். பிந்தி வெளியிடப்பட்டவற்றின் தவணை முடிந்தவுடன், நிகரவட்டி வீதம் குறையும். அரசாங்கத்தின் எளிய பணக்கோளுக்கு எடுத்துக்காட்டாகக் கஜானா உண்டியல்கள் வெளியிடப்பட்டதையும் கூறலாம். அவற்றின் அளவு 1943 வரை அதிகரித்துக்கொண்டேபோய், கூடவே சராசரி வீதமும் குறைந்தது. 1938–39-ல் 1·63 ஆக இருந்த வீதம் 1944–45-ல் 0·49 ஆகவும், 1945–46-ல் 0·38 ஆகவும் குறைந்தது. பாதுகாப்புக் கடன்கள், வெற்றிக் கடன்கள், குறுகிய காலக் கஜானா உண்டியல் கடன்கள் போக, அரசாங்கம் குறைந்த வருவாயுடைய மக்கள் முதலீடு செய்வதற்குக் கவர்ச்சியான சிறு சேமிப்புத் திட்டங்களையும் அதிக அளவில் வெற்றியுடன் நடத்தியது. 1917–18-ல் தொடங்கப்பட்ட அஞ்சலக ஐந்தாண்டு ரொக்கப் பத்திரங்களோடு, 1940-ல் பத்தாண்டுப் பாதுகாப்புச் சேமிப்புப் பத்திரங்களும் தொடங்கப்பட்டன. 1941 ஏப்ரலில் அஞ்சலகப் பாதுகாப்புச் சேமிப்பு பாங்கு திறக்கப்பட்டது. அதில், வருமான வரி விலக்குள்ளவையும், போர் முடிந்த ஓராண்டுக்குப் பிறகு திருப்பித் தரக்கூடியவையுமான 2½ சதவீத வட்டியுள்ள சிறு டெபாசிட்டுகள் வாங்கப்பட்டன. 1943 அக்டோபரில் பன்னிரண்டாண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்கள், அதிக வட்டிவீதத்துடன் வெளியிடப்பட்டன. அதே சமயத்தில் அஞ்சலகச் சேமிப்பு பாங்கு டெபாசிட்டுகளுக்கு, ரூ. 200-க்குக் குறையாத நிலுவையிருந்தால் அளிக்கப்படும் வட்டி 1½ சத வீதத்திலிருந்து 2 சதவீதமாக உயர்த்தப்பட்டது. மொத்தத்தில் 1945–46-ல் சிறு சேமிப்புகள் ரூ. 220 கோடியாயின; அரசாங்கத்தின் மொத்தக் கடனில் அது 10·1 சதவீதமாகும்.[1]

முதலில் இந்தக் கடன்களுக்குப் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பிருந்தது. ஆனால், 1943-க்குள் முதலில் இருந்த வேகம் குறைந்துவிட்டது. இதற்கு ஒரு முக்கிய காரணம், அரசாங்கத்தினுல் கட்டவிழ்த்துவிடப்பட்ட வாங்குந்திறனில் பெரும்பகுதி முதலீடு செய்யும் பழக்கம் இல்லாத சில மக்களிடையே சிக்கிக் கொண்டுவிட்டதுதான். இங்கிலாந்தும் அமெரிக்காவும் இந்தியாவில் தங்கள் போர்ச் செலவுக்கீடாக ரிசர்வ் பாங்கிற்குக் கொடுத்த தங்கத்தை அது விற்றதால், இவர்களிடமிருந்த வாங்குந்திறன் திரும்பப் பெறப்பட்டது. ஆனால், அந்த விற்பனை 1943–44-ல்தான் ஆரம்பித்தது; 1943–44 முதல் 1945–46 வரை மூன்றாண்டுகளில் மொத்தம் 7·5 மில்லியன் அவுன்சுகள்தான்

[1] 'R. N. Poduval, Finance of the India Government', 1951, p. 110.

விற்கப்பட்டன.[1] ஒரு தோலாவுக்கு[2] ரூ. 62 முதல் ரூ. 75-6-0 வரை மாறிவந்த விகிதத்தில், இதன் மொத்த ரூபாய் மதிப்பு சுமார் ரூ. 125 கோடியாகும். இதோடு, 1937-38-ல் தொடங்கி இந்தியாவில் ஸ்டர்லிங்குகளுக்கு ஈடாக வெளியிடப்பட்ட ரூபாய்கள்மூலம் நடந்த ஸ்டர்லிங்கு கடன் மீட்பும், பொதுமக்களிடமிருந்த உபரிப் பணத்தை ஈர்க்க உதவியது. 1937-38-க்கும், 1945-46-க்கும் இடையில் மீட்கப்பட்ட ஸ்டர்லிங்கு கடனுக்கு ஈடாக உண்டாக்கப்பட்ட ரூபாய்களின் மதிப்பு ரூ. 274 கோடியாகும். இதில் ரூ. 219 கோடி அல்லது முக்கால் பங்குக்குமேல், பொதுமக்களிடமும் பாங்குகளிடமும் இருந்தன. போர்க்காலத்தில் அரசாங்கத்தின் கடன் வாங்கும் கொள்கையால் உண்டான நிகர விளைவு அட்டவணை 28-ல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 28

இந்திய அரசாங்கத்திற்கு (இந்தியாவில்) இருந்த வட்டியுடன் கூடிய பொறுப்புகள்

(கோடி ரூபாய்களில்)

வருடம்	கடன்கள்	கஜானா உண்டியல்களும், வழி வகைக் கடன்களும்	நிலையாக்கப் படாத கடன்*	டெபாசிட்டுகள்†	மொத்தம்
1938–39	437·87	46·30	225·13	27·34	736·64
1939–40	450·23	54·70	222·24	33·47	760·64
1940–41	574·55	84·90	198·91	44·38	902·74
1941–42	611·85	136·98	189·14	60·54	998·51
1942–43	748·74	264·70	189·49	95·94	1298·87
1944–45	1212·14	86·70	265·63	258·18	1822·65
1945–46‡	1489·39	86·70	330·90	285·64	2192·63

* அஞ்சலகச் சேமிப்பு பாங்கு டெபாசிட்டுகளும், ரொக்க, பாதுகாப்புச் சேமிப்புப் பத்திரங்களும், தேசியச் சேமிப்புப் பத்திரங்களும், அரசாங்கச் சேமநிதிகளும், மற்ற இனங்களும் அடங்கியது.

† தேய்மானநிதி, காப்புநிதி, மற்ற டெபாசிட்டுகள் அடங்கியது.

‡ மாற்றப்பட்ட மதிப்பீட்டெண்கள்.

(ஆதாரம்: 1939-40-லிருந்து பொது பட்ஜெட்டிற்கு விளக்கக் குறிப்பு.)

[1] Reserve Bank of India, 'Report on Currency and Finance', 1945-46, p. 35.

[2] 1 அவுன்சு = 2½ தோலா.

அரசாங்கத்திற்கு (இந்தியாவில்) வட்டியுடன் கூடிய மொத்தக் கடன் 1938-39-ல் ரூ. 736·64 ஆக இருந்து 1945-46-ல் ரூ. 2,196·63 கோடியாக, அதாவது, ரூ. 1,455·99 கோடி அதிகரித்தது. போர்க்காலத்தில் தன்னுடைய கடன்களாலும் மற்ற நடவடிக்கைகளாலும் அரசாங்கம் ஈர்த்துக்கொண்ட வாங்குந்திறனின் அளவு இதுதான்.

போர்க்காலத்தில் அரசாங்கம் மேற்கொண்ட கடன் நடவடிக்கைகளால் உண்டான பணவீக்கத்தடை விளைவு வருமாறு: 1939-40-க்கும் 1945-46-க்கும் இடையில் எல்லா இனங்களிலும் அரசாங்கத்தின் செலவு, அதாவது, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாகவும், நேசநாடுகளின் சார்பாகவும் செய்யப்பட்ட செலவு, அதாவது, (திரும்பப் பெறக்கூடிய போர்ச் செலவு) இந்திய அரசாங்கத்தின் சார்பில் செய்யப்பட்ட வருவாய் முதலினச் செலவுகளும் சேர்ந்து மொத்த ரூ. 3,995·80 கோடியாயிற்று. இது அரசாங்கச் செலவீட்டினுல் பொதுமக்களிடையே வெளியிடப்பட்ட வாங்குந்திறனின் அளவைக் குறிக்கும். இதில் ரூ. 1,461·97 கோடி வரி வருவாயாகவும், வரியல்லாத வருவாயாகவும் அரசாங்கத்திற்குத் திரும்பிவந்து, மீதி ரூ. 2,533·83 கோடி துண்டு விழுந்தது. இந்தத் துண்டில் ரூ. 1,455·99 கோடியளவு பொதுமக்களிடம் வாங்கிய கடனுகப் பணவீக்கமல்லாத முறையில் அடைக்கப்பட்டது. எஞ்சிய பணவீக்கத் துண்டு அல்லது ரூ. 1,077.84 கோடி, நோட்டு வெளியீட்டு அதிகரிப்பினுல் அடைக்கப்பட்டது. அட்டவணை 29-ல் உள்ள விவரங்கள் இதை விளக்கும்.

மூன்றுவது, ஆறுவது வரிசைகளில் உள்ள எண்கள், இந்திய அரசாங்கத்தின் கணக்கில் செய்யப்பட்ட செலவினுல் உண்டான பற்றுக்குறை கடன் வாங்குதலினுல் அடைக்கப்பட்டது என்பதைக் காட்டும். அரசாங்கத்தின் வட்டியுடன் கூடிய பொறுப்புகளில் ரூ. 1,455·99 கோடி நிகர அதிகரிப்பு, இந்திய அரசாங்கத்தின் கணக்கில் உண்டான பற்றுக்குறையைப் பொதுமக்களிடமிருந்து வாங்கிய கடன், முற்றிலும் அடைத்ததுமன்றித் திரும்பப் பெறக்கூடிய செலவீட்டினுல் உண்டான பற்றுக்குறையின் பெரும் பகுதியையும் அடைத்தது. எல்லா இனங்களிலும் உண்டான மொத்தச் செலவுக்கும், வருவாய், கடன் வாங்குதல் ஆகிய வற்றின்மூலம் கிடைத்த மொத்த வரவுகளுக்கும் உள்ள வித்தியாசம் நிகரமான பணவீக்கத் துண்டைக் காட்டுகிறது. இது ரூ. 1,077·84 கோடியாகும். இத் துண்டு நோட்டு வெளியீட்டினுல் சரிக்கட்டப்பட்டது. இந்த நோட்டு வெளியீடு 1938-39-ன் இறுதியில் ரூ. 178·96 கோடியிலிருந்து, 1945-46-ன் இறுதியில்

அட்டவணை 29

அரசாங்க வருவாயும், செலவும், பணவீக்கத் துண்டும்

(கோடி ரூபாய்களில்)

	1939–40	1940–41	1941–42	1942–43	1943–44	1944–45	1945–46	1939–40 முதல் 1945–46 வரை
1. வருவாய்	94·57	107·65	134·57	176·88	252·06	335·57	360·67	1461·97
2. செலவு	94·57	114·18	147·26	289·05	441·84	496·71	484·57	2068·18
3. பற்றுக்குறை	—	6·53	12·69	112·17	189·78	161·14	123·90	606·21
4. திரும்பப் பெறக்கூடிய போர்ச் செலவு உட்பட மொத்தச் செலவு	98·57	167·18	341·26	667·04	857·17	970·38	894·20	3995·80
5. மொத்தப் பற்றுக்குறை (4 — 1)...	4·00	59·53	206·69	490·16	605·11	634·81	533·53	2533·83
6. வட்டியுடன் கூடிய கடன் பொறுப்பில் மொத்த அதிகரிப்பு	24·00	142·10	95·77	300·36	198·90	324·88	369·98	1455·99
7. பணவீக்கத் துண்டு (5 — 6) ...	— 20·00	— 82·57	110·92	189·80	406·21	309·93	163·55	1077·84
8. நோட்டுப் புழக்கத்தில் நிகர அதிகரிப்பு*	46·14	15·45	141·18	261·85	258·91	202·39	133·89	1039·81

* ஆண்டு முடிவு விவரங்களின் அடிப்படையில்

(ஆதாரம்; 'Reports on Currency and Finance,' Reserve Bank of India.)

ரூ. 1,218·77 கோடியாக, அதாவது, ரூ. 1,0398·1 கோடி உயர்ந்தது. 1939–40 முதல் 1945–46வரை ஏழாண்டுகளில் ஏற்பட்ட எல்லா இனச் செலவுகளிலும் 37 சதவீதம் வரிவிதிப்பினாலும், 36 சதவீதம் கடன் வாங்குதலினாலும், 27 சதவீதம் செலாவணிப் பெருக்கத்தினாலும் ஈடு செய்யப்பட்டன. மொத்தச் செலவாகிய ரூ. 3,995·80 கோடிக்கும் வரி வருமானம், வரியல்லாத வருமானம், கடன் வாங்குதல் ஆகியவற்றின்மூலம் கிடைத்த மொத்த வரவாகிய ரூ. 2,917·96 கோடிக்கும் உள்ள வித்தியாசமாகிய ரூ. 1,077·84 கோடிதான் இந்தியாவில் போர்க்கால நிதியின் பணவீக்க ஆற்றலைக் குறிக்கும் தொகையாகும்.

6. அபிவிருத்தி நிதியும் பணவீக்கமும்

போருக்குப் பிறகு வரவு செலவுத் திட்டக் கொள்கை, 1946–51

அரசாங்கம் போர்க்காலத்தில் முன் இல்லாத அளவுக்குத் தொடர்ச்சியாக வரவு செலவுத் திட்டத்தில் பற்றுக்குறை காண வேண்டியிருந்தது. இதற்குக் காரணம் கூறுமலே தெரியும். போர் சம்பந்தமாக ஏற்பட்ட அதிகச் செலவினால் அரசாங்கம் ஆண்டுதோறும் பெரிய தொகை வெளியிட்டதனால்தான், செலாவணிப் பெருக்கமும், அதன் விளைவாகப் பணவீக்க விலையேற்றமும் உண்டாயின. போர் முடிந்த சில ஆண்டுகளில், போர்க்காலத்தில் ஏற்பட்ட போக்கை மாற்றுவதற்கு அரசாங்கம் ஒரே தன்மையுள்ள வரவுசெலவுத் திட்டக் கொள்கையை மேற்கொள்ளவில்லை. அதன் விளைவாக, 1951–52 வரை பட்ஜெட் பற்றுக்குறைகள் தொடர்ந்து இருந்தன. அந்த ஆண்டில் சிறிது உபரி உண்டாயிற்று. ஆனால், திட்டமிட்ட பொருளாதார முன்னேற்ற நிகழ்ச்சியை மேற்கொண்டதால், அதிக அளவுக்குப் பட்ஜெட் பற்றுக்குறைகள் மீண்டும் தோன்றின. எனினும், அரசாங்கம் செய்த அதிகச் செலவினால், சில ஆண்டுகளாகத் தேசப் பொருளாதார அமைப்பிலும் விலையமைப்பிலும் உண்டான விளைவுகள் போர்க்காலத்தில் இருந்தவாறன்றி, வேறுவிதமாக இருந்தன. கடந்த சில ஆண்டுகளில் பட்ஜெட் பற்றுக்குறைகள், பொருளாதார வளர்ச்சி, அதிகத் தேசிய முதலீடு, வேலையளிப்பு ஆகிய காரியங்களுக்காக உண்டாயின. ஆனால், அதற்கு முந்திய காலத்தில் அவை அழிவு வேலைகளுக்காகவே உண்டாயின.

போர் முடிவில், ஆண்டுதோறும் செலவழிக்கப்பட்ட அபரிமிதமான பாதுகாப்புச் செலவாகிய ரூ. 600 கோடி நிறுத்தப்படுமாகையால், விலைகளில் பணவீக்கப் போக்கு தடுக்கப்பட்டுப் பின்னிறக்கம் உண்டாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் உண்மையில், அத்தியாயம் 3-ல் கூறியபடி விலைகளில் ஏறுமுகம் தொடர்ந்து காணப்பட்டது. போர் முடிவிற்கும், ஐந்தாண்டுத்

திட்டத்தின் முதலாண்டுக்கும் இடையில் மொத்த விற்பனை விலையின் பொதுக்குறியீட்டெண் 244·1-லிருந்து 457·5-க்கு உயர்ந்தது. அதே சமயத்தில் பண அளிப்பு 1945-46-ல் ரூ. 2,179 கோடியாக இருந்து, 1947-48-ல் இந்தியா பிரிக்கப்பட்டபோது ரூ. 2,303 கோடியாக அதிகரித்தது; 1951-56-க்கிடையில் உள்ள ஐந்தாண்டுகளில் அது ரூ. 1,800 கோடிக்கும் ரூ. 2,200 கோடிக்கும் இடையில் வேறுபட்டது.

விலைகளை இறக்கிவைப்பதற்குப் போருக்குப் பிந்திய பட்ஜெட் கொள்கையில் வரி வாங்குதல், கடன் வாங்குதல், அரசாங்கச் செலவு ஆகியவற்றைப் பணவீக்கத் தடைமுறையாகப் பயன்படுத்துவதில் தெளிவாகவும் ஒரே தன்மையாகவும் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்பது ஒரு முக்கிய காரணமாகும். இதுவன்றி, அரசாங்கத்தினால் கட்டுப்படுத்த முடியாத நாட்டுப் பிரிவினையும், அதனால் உண்டான அரசியல் தொல்லைகளும், ஹைதராபாத்தில் போலீஸ் நடவடிக்கையும், காஷ்மீரில் இராணுவ நடவடிக்கையும், தொழிலாளர் பிரச்சினைகளும், விவசாயத்திலும் தொழிலிலும் உற்பத்திக் குறைவும் போன்ற சில காரணங்கள் அரசாங்கச் செலவுகளைச் சாதாரண அளவுக்குக் குறைக்க முடியாமலும், துய்ப்புப் பொருள்களின் விலைகள் மேலும் ஏறுமாறும் செய்துவிட்டன. பட்ஜெட் கொள்கைகளில் ஒரே விதமான போக்கு இல்லாததற்கு நேரடியான காரணம், போர் முடிவில் பணவீக்கச் சக்திகளும் பணவாட்டச் சக்திகளும் சம பலத்துடன் இருந்ததுதான். ஆகையால் நிதியமைச்சர்கள் இந்தச் சமநிலையைக் குலைக்காத முறையில் தம் பட்ஜெட்டுகளைத் தயார் செய்தனர்; பணவீக்கம், பணவாட்டம் ஆகிய இரண்டிலிருந்தும் விலகிச் செல்வதற்கு, அதிக வரிவிதிப்பு, குறைந்த செலவு ஆகிய முறைகளை அவர்கள் மாறிமாறிக் கடைப்பிடித்தனர். ஆகவே, பட்ஜெட்டுகளைச் சமனுக்குவதற்குத் திருத்த நடவடிக்கை ஒன்றும் மேற்கொள்ளப்படவில்லை. 1946-47-க்குப் பட்ஜெட்டை அளிக்கும்போது சர் ஆர்ச்சுபால்டு ரௌலண்ட்ஸ் அரசாங்கத்தின் நிதிக்கொள்கையின் நோக்கம் அதிகப் பணவீக்கமாகிய அபாயத்தையும் திடீர்ப் பணவாட்டமாகிய அபாயத்தையும் தவிர்ப்பதே என்று அறிவித்தார்.[1] குறிப்பாகக் கிராமப் பகுதிகளில் அதிகம் கடன் வாங்குவதைப் பணவீக்கப் போக்கைக் குறைக்கும் வழியாக அவர் வற்புறுத்தினர். அன்றியும், 15,000 ரூபாய்க்கு மேற்பட்ட வருமானங்களுக்கு வரியை ரூபாய்க்கு 4 அணு

[1] நிதி அங்கத்தினரின் பட்ஜெட் உரை, 1946-47

9 பைசாவிலிருந்து 5 அணாவாக உயர்த்தினர். இதற்குமாறாக, முதலீட்டையும் உற்பத்தியையும் ஊக்குவதற்கு அவர் அமிதலாப வரியை ஒழித்து, மாகாண அரசாங்கங்கள் அபிவிருத்தித் திட்டங் களுக்காக அதிகம் செலவு செய்யவேண்டுமென்று ஆதரவுகூறி, கச்சாப் பொருள்களுக்குக் குறைந்த இறக்குமதி வரி, புதிய கட்டடங்களுக்கும் எந்திரங்களுக்கும் 10 சதவீதத் தேய்மானக் கழிவு, ஆராய்ச்சிச் செலவு போன்ற சலுகைகளைத் தொழில்களுக்கு அளித்தார். அவருக்குப் பின் வந்த திரு. லியாகத் அலிகான் போருக்குப் பிறகும் பணவீக்கப் போக்கு இருப்பதைக் குறிப்பிட்டு சொத்துகளிலும் வருமானங்களிலும் உள்ள பெரிய ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பது, விலைப்போக்கைத் தடுப்பதைவிட ஏழைகள்மீதுள்ள வரிக்சுமையைக் குறைப்பதுபோன்ற சில சமூக நோக்கங்களையடைவதற்கே தம் பட்ஜெட்டில் அவர் முக்கியத்தும் அளித்தார். முற்கூறிய நோக்கத்தை மனத்தில்கொண்டு அவர் உபரி வரியையும் கார்ப்பொரேஷன் வரியையும் உயர்த்தி, தொழில் லாபவரி, மூலதன லாபவரி ஆகியவைகளை விதித்தார். உப்புவரி ஒழிப்பு, வருமானவரி விலக்கிற்குக் கீழ் எல்லையை ரூ. 2,000-லிருந்து ரூ. 2,500ஆக உயர்த்தல் ஆகியவையும் இக் கொள்கையோடு ஒத்துவந்தன. ஆனால், நிதியமைச்சரின் சமூகக் குறிக்கோள்கள்பற்றிய நல்ல எண்ணம், உண்மை நிலையோடு ஒத்துவரவில்லை. உண்மையில், வரிகள் முதலீட்டையும் உற்பத்தி யையும் பாதித்தன ; சமூகக் குறிக்கோள்கள் கானல் நீராகவே காணப்பட்டன.

திரு. லியாகத் அலிகானின்கொள்கை அடுத்த நிதியமைச்சரால் மாற்றப்பட்டது. சர் ஆர். கே. ஷண்முகம் செட்டி பணவீக்கத் தைக் கட்டுப்படுத்தவும், அதிக உற்பத்திக்குள்ள தடைகளை நீக்க வும் வேண்டுமென்று வற்புறுத்தினர்; பணவீக்கத் தடைமுறை யாக உபரி பட்ஜெட்டை உண்டாக்க வேண்டுமென்றார். ஆனால், இதைச் செலவைக் குறைத்தும், உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தக்க தூண்டுதல்களை அளித்தும் உண்டாக்கவேண்டும். அதாவது, துய்ப்புச் செலவைக் குறைக்கும்படி வரிகளை விதித்தும், சேமிப்பு களைப் பாதிக்காமலும் இதைச் செய்யவேண்டும். அவர்தான், உற்பத்திக்குத் தூண்டுதலை அளிக்கவேண்டிய அவசியத்தை வற் புறுத்தி வரிக் கொள்கையை உருப்படியான முறையில் மாற்றினர் 'தொழில் செய்வோர் பொதுக் கசானுவுக்கு நியாயமான தொகையையளிப்பதோடு, அவர்களுடைய தொழில் பெருகு வதற்கான முறையில் நாம் அவர்கள்மேல் வரியைச் சுமத்தவேண் டும். அதே சமயத்தில், அரசாங்கத்தின் பொதுத் தேவைகளுக் குப் பணக்காரர்கள் நியாயமான தொகையை யளிக்கும்படி வரி யளவு அதிகமாக இருப்பதோடு, சேமிப்புக்கும் நியாயமான

அளவை விட்டுவைக்க வேண்டும். அச் சேமிப்பு முதலீடாக மாறிச் சமூகத்தின் உற்பத்திச் செல்வத்தைப் பெருக்கும். அரசாங்கமே அதைப் பிறகு பயன்படுத்திக்கொள்ளலாம்' என்று அவர் கூறினார்.[1] வியாபாரத்திற்கும் தொழிலுக்கும் அளிக்கப்பட்ட சலுகைகளாவன: தொழில் லாப வரியை 16½ சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகக் குறைத்தது; பயன்படுத்தப் பட்ட மூலதனத்தில் ஒரு லட்சம் ரூபாய் அல்லது 6 சதவீதமாக இருந்த தள்ளுபடியை இரண்டு லட்சம் ரூபாய் அல்லது 6 சதவீத மாக உயர்த்தியது; அதிகபட்ச விகிதத்தில் உபரிவரி விதிப்பதற் குரிய வருமான அளவை ரூ. 3½ லட்சமாக உயர்த்தியது; கம்பெனி களின் பங்கிடப்படாத லாபத்தில் ரூபாய்க்கு ஓரணாவர்க வரி யைக் குறைத்தது; ரூ. 25,000-க்கும் குறைந்த வருமானமுள்ள கம்பெனிகளின் வருமான வரியை 50 சதவீதம் குறைத்தது. ஆனால், கார்ப்பொரேஷன் வரி 2 அணாவிலிருந்து 3 அணாவாக உயர்த்தப்பட்டது. ஆனால், இந்தியாவில் தம் இலாப ஈவுகளை அறிவித்துப் பங்கிட்ட கம்பெனிகளுக்கு ஓரணா கழிவு தரப் பட்டது. அதே சமயத்தில், சில ஏற்றுமதி வரிகள் நீக்கப்பட்டு, எந்திரங்கள், கச்சாப்பொருள்கள்மீதுள்ள இறக்குமதி வரி குறைக்கப்பட்டது. இந்த வரிச் சலுகைகளால் உண்டாகும் வருவாய்க் குறைவை மறைமுக வரிவிதிப்பை, (குறிப்பாகக் கலால் வரிகளை) உயர்த்துவதனால் ஈடுசெய்யமுடியும். இது துய்ப்புச் செலவைக் குறைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. மத்திய, மாகாண அரசாங்கங்களின் செலவுகளை மேலும் குறைக்கவேண்டுமென்றும், சிறு சேமிப்பு இயக்கத்தைத் தீவிரப் படுத்தி உபரியாக உள்ள வாங்குந்திறனைக் குறைக்கவேண்டு மென்றும் வற்புறுத்தப்பட்டது.

இந்த நிலையில், பணவீக்கத்தை எதிர்ப்பதில் நிதி அமைச்சர்களிடம் காணப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க மாறுதல் என்னவென்றால், உற்பத்தியைப் பெருக்கி, அரசாங்கச் செலவைக் குறைக்கவேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தியதுதான். தூண்டுதல் அளிக்கும் வரி விதிப்பு முறையினால் முதலீட்டையும் உற்பத்தியையும் பெருக்க முயற்சி செய்யப்பட்டது. ஆகவே 1949-50 பட்ஜெட்டு, பணவீக்கத்தைத் தடுப்பதையும், மூலதன மார்க்கெட்டில் உண்டான தேக்கத்தினால் வியாபாரிகளிடம் உண்டான கவலையைப் போக்குவதையும் குறிக்கோள்களாகக் கொண்டிருந்தது. இந்தக் குறிக்கோள்களையடைவதற்கு, மூலதன லாபவரி ஒழிப்பு, வருமானவரி விகிதங்களில் குறைப்பு, அரசாங்கத்தின் நிருவாகத்திலுள்ள சிறிய கம்பெனிகளுக்குக்

[1] பட்ஜெட் உரை, 1948-49

கார்ப்பொரேஷன் வரியில் தாராளமான ரிபேட்டுகள், எண்ணெய் விதைகள், தாவர எண்ணெய்கள் ஆகியவற்றின்மீது ஏற்றுமதி வரி நீக்கம், விமானப் போக்குவரத்துக்குதவும் எண்ணெய்மீதுள்ள வரியில் பாதி கழிவு, தொழில்களுக்காக இறக்குமதி செய்யப்படும் கச்சாப் பொருள்கள்மீதான சுங்கத் தீர்வையில் குறைவு, புதிய தொழிற்சாலைகள், எந்திரங்கள் மீது தாராளமான தேய்மானத் தள்ளுபடிகள், சில புதிய தொழில்களுக்கு வருமான வரிவிலக்கு போன்ற நிவாரணங்கள் அளிக்கப்பட்டன. மீண்டும் இந்த வரிச்சலுகைகளால் உண்டான வருவாய் நஷ்டத்தை ஈடுசெய்வதற்கு மேலும் மறைமுக வரிகள் போடப்பட்டன. இவை தபால் கட்டண அதிகரிப்பு, பட்டுத் துணிகள், செயற்கைப் பட்டு, ரோம ஆடைகள், மட்பாண்டம், பீங்கான், காகிதம், பேனா, பென்சில் போன்ற பொருள்கள், கண்ணாடியும், கண்ணாடிச் சாமான்களும், இரும்புக் கருவிகள், உலோக மேஜை, நாற்காலி, கட்டில்கள், டார்ச் விளக்குகள் போன்ற அரைகுறை ஆடம்பரப் பொருள்கள்மீது உபரிவரி உயர்வு, மோட்டார் எண்ணெய். பாக்கு ஆகியவற்றின்மீது இறக்குமதி வரி உயர்வு, சிகரெட்டு, சுருட்டு முதலியவற்றின்மீது அவற்றின் மதிப்பில் 15 சதவீதம் புதிய ஏற்றுமதி வரிவிதிப்பு, சர்க்கரைமீது கலால்வரி உயர்வு, மோட்டார் வண்டிகளுக்குப் பயன்படுத்தும் டயர்கள்மீது வரி உயர்வு, கைத்தறித்துணி நீங்கலாக உயர்ந்த, நடுத்தர, மட்டரகத் துணிகள்மீது கலால்வரி போன்றவையாகும். மேலும், பணவீக்க எதிர்ப்பு நடவடிக்கையாக செலவைக் குறைப்பதற்காகச் செலவுத்திட்டம் முழுவதும் ஆராயப்பட்டது. மாகாணங்கள் தம் அபிவிருத்திச் செலவுகளைத் தற்காலிகமாக மட்டுப்படுத்தும்படி கேட்டுக் கொள்ளப்பட்டன.

அடுத்த பட்ஜெட்டில் தூண்டுதல் அளிக்கும் வரி விதிப்பு, செலவுக் குறைப்பு ஆகிய கொள்கைகள் மேலும் அதிகமாகக் கடைப்பிடிக்கப்பட்டன. வரி விதிப்பினால் வாங்குந் திறனைக் குறைப்பதைவிடத் தூண்டுதல் அளிக்கும் வரிகளால் உற்பத்தியைப் பெருக்கினால் பணவீக்கத்தை வெற்றியுடன் அழுத்திவைக்க முடியும் என்று இப்போது அரசாங்கம் ஒப்புக்கொண்டது. 1950–51 பட்ஜெட் உரையில் நிதியமைச்சர், 'இப்போதுள்ள வரி விதிப்பளவு பணவீக்கத்தை அதிகரிக்குமேயன்றி, அதைக் குறைக்காது என்பது எனக்கு நன்முகத் தெரியும். பணவீக்கப் பிரச்சினைக்கு உற்பத்திதான் தீர்வு என்பதை நீங்கள் ஒப்புக்கொண்டால், சேமிப்பைக் குறைத்து, முதலீட்டுக்குக் கிடைக்கும் பணத்தின் அளவையும் குறைக்கக்கூடிய அதிக அளவு வரி விதிப்பு, பண

வீக்க ஆற்றலை விளைவிக்கும்' என்று கூறினர். இந்தக் கொள்கையின்படி, தொழில்களுக்குத் தொழில் லாபவரி ஒழிப்பு, வருமான வரி விகிதங்களில் மேலும் குறைப்பு போன்ற கூடுதலான வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டன. அதேசமயத்தில் அபிவிருத்திச் செலவு குறைக்கப்பட்டது. இராச்சியங்களுக்கு அபிவிருத்தி மானியங்களும் கடன்களும் மிகவும் குறைக்கப்பட்டன. மூலதன பட்ஜெட் பற்றுக்குறை கணிசமாகக் குறைக்கப்பட்டது.

மேலே சுருக்கமாகக் கூறப்பட்டதிலிருந்து மூன்று செய்திகள் தெளிவாகத் தெரியும். முதலாவதாக, இக் காலத்தின் முதல் சில ஆண்டுகளில், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் பட்ஜெட் கொள்கை சம்பந்தமாக ஒரே தன்மையான போக்கு காணப்படவில்லை. இதற்குக் காரணம், ஓரளவு பொருளாதாரத் துறையில் இருந்த குறிப்பற்ற போக்குகளும், ஓரளவு அக் காலத்தில் அரசியல் நிகழ்ச்சிகளும், சிறிதளவு அரசாங்க நிதிப்பொறுப்பை ஏற்றிருந்தவர்களின் சொந்த விருப்பு வெறுப்புகளும் ஆகும். இரண்டாவதாக, 1948–49-க்குப் பிறகு அதிக முதலீடு, உற்பத்தி ஆகியவற்றின் வழியாகப் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குத் தூண்டுதல் அளிக்கும் வரிவிதிப்பு முறை மேலும்மேலும் அதிகமாக வற்புறுத்தப்பட்டது; ஆனால் இத்தகைய முறை, தன்னாலேயே உடனடியாகப் பலனையளிக்காது. அது நீண்ட காலத்தில் பலனளிப்பதும், அரசாங்கத்தின் வரிக்கொள்கை, வெளிநாட்டு வாணிபம், உள்நாட்டு மார்க்கெட்டின் நிலை, பொதுப் பொருளாதார நிலைமைகள் ஆகிய பல அம்சங்களைப் பொறுத்தது. இறுதியாக இப்போது நாம் ஆராயும் காலத்தின் கடைசி இரண்டாண்டுகளின் முக்கிய அம்சமாக இருந்த அபிவிருத்திச் செலவுக் குறைப்பு, தூண்டுதல் அளிக்கும் வரி விதிப்புக் கொள்கையோடு பொருந்துவதாக இல்லை. அபிவிருத்திச் செலவின் பணவீக்க விளைவு அடுத்த பகுதியில் ஆராயப்படும்.

போருக்குப் பிந்திய காலத்தில் பணவீக்கம், பணவாட்டம் ஆகியவைபற்றி இருந்த முரணான நிலையில் ஒரு முடிவான கொள்கையைக் கையாள முடியவில்லை. ஆனால், பட்ஜெட் பற்றுக் குறைகள் தொடர்ந்து இருந்தன. பாதுகாப்புச் செலவு திடீரென்று குறைந்தாலும், பிரிவினையைத் தொடர்ந்து உண்டான அரசியல் தொல்லைகளால், சாதாரண நிலையில் இருப்பதைவிடப் பாதுகாப்புக்கும் உள்நாட்டு அமைதிக்கும் அதிகம் செலவு செய்யவேண்டியதாயிற்று. அமைதி திரும்பிய பிறகு ஐந்தாண்டுகளில் இருந்த பட்ஜெட்டுகளின் அளவு அட்டவணை 30-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அட்டவணை 30

1946–47 முதல் 1950–51 வரை இந்திய அரசாங்கத்தின் பொது பட்ஜெட் நிலை

(கோடி ரூபாய்களில்)

வருடம்	வருவாய் இனம் உபரி (+) பற்றாக் குறை (−)	முதலினம் உபரி (+) பற்றாக்குறை (−)	பலவகை (நிகரம்)* உபரி (+) பற்றாக் குறை (−)	மொத்தம் உபரி (+) பற்றாக்குறை (−)
1946–47†	− 0·60	− 56·99	−	− 57·59
1947–48 †	− 6·52	− 133·41	+ 29·25	− 110·68
1948–49	+ 50·84	− 167·48	+ 34·97	− 81·67
1949–50	+ 33·27	− 80·05	+ 2·98	− 43·80
1950–51	+ 59·22	− 62·04	+ 15·26	+ 12·44

* பலவகை டெபாசிட்டுகள், கடன்கள், செலுத்தினங்கள் முதலியவை அடங்கியது.

† 1947 ஆகஸ்டு 15 முதல் 1948 மார்ச் 31 வரை,

(ஆதாரம் : Reports on Currency and Finance, Reserve Bank of India.)

திரும்பப் பெறக்கூடிய போர்ச் செலவுகள் முந்திய ஆண்டில் ரூ. 374·54 கோடியாயிருந்து 1946–47-ல் ரூ. 51·62 கோடியாகக் குறைந்தன. 1945–46-ல் திரும்பப் பெறக்கூடிய போர்ச் செலவும் பாதுகாப்புச் செலவும் உட்பட இந்தியாவின் கணக்கில் மொத்தப் பாதுகாப்புச் செலவு ரூ. 734·77 கோடியாயிருந்து, 1948–49-ல் அது ரூ. 146 கோடிக்கு இறங்கியது. நாட்டில் அரசியல் கலவரங்கள் இல்லாமலிருந்தால், இக் குறைவு மேலும் அதிகமாக இருந்திருக்கும். இதற்குமாறாக, 1945–46-ல் நிருவாகச் செலவு ரூ. 124·38 கோடியாக இருந்து 1949–50-ல் ரூ. 168·26 கோடியாகவும், 1950–59-ல் ரூ. 187·31 கோடியாகவும் உயர்ந்தது. இந்த அதிகச் செலவுடன், வருவாய் இனத்திலும் அதற்கேற்ப உயர்வு இருந்தது. ஆதலால் 1947–48 முதல் 1950–51 வரை ஐந்தாண்டுகளுக்கான பட்ஜெட்டில் வருவாய் இனத்தில் ரூ. 136·21 கோடி நிகர உபரி இருந்தது. இதற்கெதிராக, இந்தக் காலத்தில் பட்ஜெட்டின் மூலதனக் கணக்கில் ஒரே மாதிரியாகப் பற்றாக்குறை காணப்பட்டது. அது இந்த ஐந்தாண்டுக் காலத்தில் மொத்தம் ரூ. 499·97 கோடியாயிற்று. வருவாய் இனத்தில் இருந்த மொத்த உபரியாகிய ரூ. 136·21 கோடியைக் கழித்து, பலவகை டெபாசிட்டுகளுக்கும் கடன்களுக்கும் ஈடுசெய்தால், நிகரப் பற்றாக்குறை ரூ. 306·18 கோடியாகிறது. மத்திய அரசாங்கத்தின் பட்ஜெட்டில் இருந்த இந்தப் பற்றாக்குறை தவிர, போர்க் காலத்தில்

மாகாண பட்ஜெட்டுகள் எப்போதும் உபரியைக் காட்டப் போருக்குப் பிறகு மாகாணங்களின் செலவு, வரவுகளைவிட அதி கரித்தது. அவை ஆரம்பித்த புதிய அபிவிருத்தித் திட்டங்களின் விளைவே இது.

மத்திய அரசாங்கத்தின் பட்ஜெட்டிலிருந்த பற்றுக்குறை யைக் கடன் வாங்குதல்மூலம் அடைத்திருந்தால், அது பணவீக்க நெருக்கடியை அதிகரித்திருக்காது. உண்மையில் போர்க்காலத் தில் பட்ஜெட்டின் மொத்தப் பற்றுக்குறையில் ஒரு கணிசமான பகுதியை அடைப்பதற்கு வெற்றியுடன் பயன்படுத்தப்பட்ட இந்த முறை, போருக்குப் பிற்காலத்தில் பயனளிக்கவில்லை. பெரும்பாலும் இதற்குக் காரணம் நாட்டில் இருந்த அரசியல் கலவரங்களும், மக்களிடமிருந்த அச்ச நிலைமையும் ஆகும். போர் முடிந்து கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதால், சேமிப்பதைவிடச் செலவு செய்யும் போக்கு உண்டானதும் இதற்கு ஓரளவு காரண மாகும். இந்த ஆண்டுகள் முழுவதிலும், கடன் வசூல்கள் எதிர்ப் பார்த்ததைவிட மிகவும் குறைந்தன (அட்டவணை 31ஐப் பார்க்க).

அட்டவணை 31

புதிய கடன்கள் மூலம் வசூல்

(கோடி ரூபாய்களில்)

வருடம்	பட்ஜெட்	உண்மையாகக் கிடைத்தது
1946–47	250	112
1947–48	150	41
1948–49	150	55
1949–50	85	40
1950–51	85	38

சிறு சேமிப்பில் முன்னேற்றம் காணப்படவில்லை. இந்திய அரசாங்கத்தின் மொத்த வட்டியுடன்கூடிய பொறுப்புகள் 1948-49-ல் ரூ. 2,413 கோடியாக இருந்து 1950-51-ல் ரூ. 2,500 கோடியாக உயர்ந்து, மிகக் குறைந்த அதிகரிப்பையே காட்டின.

பட்ஜெட் பற்றுக்குறையை அடைக்க அரசாங்கம் தேவை யான நிதியை வசூலிக்க முடியவில்லையாகையால், அரசாங்கத்தின் ரொக்க இருப்புகளைப் பயன்படுத்தவேண்டியதாயிற்று. அட்டவணை 32-ல் படிப்படியாக ரொக்க இருப்பு குறைந்து கொண்டுவந்தது காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 32

அரசாங்கத்தின் ரொக்க இருப்புகள், 1946–51

(கோடி ரூபாய்களில்)

வருடம்	தொடக்க இருப்பு	இறுதி இருப்பு
1946–47	529·53	417·95
1948–49	273·90	192·23
1949–50	193·28	149·48
1950–51	149·50	161·94

அரசாங்கத்தின் ரொக்க இருப்புகள் குறைந்துவந்தது, நடப்புச் சேமிப்புகளேயன்றி, முந்திய சேமிப்புகளேப் பயன்படுத்திய செயலேயே காட்டும். ஆதலால் இந்த முறையில் பட்ஜெட் பற்றுக்குறைக்கு நிதியளித்ததால், சோம்பிக்கிடந்த பணம் சுறுசுறுப்படைந்து மக்களுடைய வாங்குந்திறன் அதிகரித்தது. 1948–49-க்கும் 1950–51-க்கும் இடையில், புழக்கத்தில் இருந்த நோட்டுகள் 75 கோடி ரூபாயாக அதிகரித்தன. 1950–51-ல் மக்களிடமிருந்த மொத்தப் பணம் முந்திய ஆண்டைவிட ரூ. 100 கோடி உயர்ந்தது. ஆகவே இதன் நிகர விளேவு, பணவீக்கப் போக்கை மேலும் அதிகரித்ததாகவே கருதப்படும்.

அபிவிருத்தி நிதியும் பணவீக்கமும்

அரசாங்கத்தின் பட்ஜெட் கொள்கையையும் அதன்மூலம் விலேயமைப்பையும் அண்மையில் சில ஆண்டுகளாக நம் நாட்டில் பாதித்துவரும் முக்கியமான அம்சம் என்னவென்றால், மத்திய அரசாங்கமும் இராச்சிய அரசாங்கங்களும் ஆண்டுதோறும் அபிவிருத்தித் திட்டங்களுக்காகச் செலவழித்துவரும் பெரிய தொகைகள்தான். பிரிவினேயானவுடன் புனரமைப்புத் திட்டங்களும் அபிவிருத்தித் திட்டங்களும் தொடங்கின. மாகாண அரசாங்கம் ஒன்றேடொன்று போட்டியிட்டுக்கொண்டு பெரிய திட்டங்களேத் தீட்டின. யூனியன் அரசாங்கத்தினிடமிருந்து பெற்ற கடன்களோடு, இராச்சிய அரசாங்கங்கள் போர்க்காலத்தில் சேமித்திருந்த காப்பு நிதிகளேப் பயன்படுத்துதல், மக்களிடமிருந்து கடன் வாங்குதல் போன்ற முறைகளே மேற்கொண்டன. எனினும் முதல் ஐந்தாண்டுத் திட்டம் இறுதி வடிவம் பெற்று 1951–52-ல் அது தொடங்கப்பட்டபோதுதான், இராச்சியங்களும் மத்திய அரசாங்கமும், நாடு முழுவதும் தழுவிய விரிவான திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றச் சகாப்தத்தைத்

தொடங்கின. 1951–52 முதல் 1955–56 வரை ஐந்தாண்டு களில் யூனியன் அரசாங்கமும், A பகுதி B பகுதி இராச்சியங் களும் சேர்ந்து செலவழித்த மொத்தத் தொகையில், திட்டத்தின் படி அபிவிருத்திக்காகச் செலவழிக்கப்பட்டது 30 சதவீதம் என்பதிலிருந்து, ஐந்தாண்டுத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட வருடாந்தர அபிவிருத்திச் செலவு நாட்டின் பொருளாதாரத்தை யும் பட்ஜெட் கொள்கையையும் எவ்வளவு தூரம் பாதிக்கக் கூடியது என்பது தெரியும். 1955–56-ல் மத்திய அரசாங்கமும் இராச்சிய அரசாங்கங்களும் அபிவிருத்தித் திட்டங்களுக்காகச் செலவழித்த மொத்தத் தொகையாகிய ரூ. 700 கோடி 1938–39-ல் மத்திய அரசாங்கமும் மாகாணங்களும் சேர்ந்து செலவழித்த மொத்தத் தொகையைப்போலச் சுமார் மூன்று மடங்காகும். 1951–52-க்கும் 1955–56-க்கும் இடையில், வருவாய்க் கணக்கில் இந்திய அரசாங்கத்தின் செலவு 26 சதவீதம் உயர்ந்தது. ஆனால், மூலதனக் கணக்கில் மொத்த அபிவிருத்திச் செலவு சுமார் மூன்று மடங்காகிவிட்டது. இவ்வளவு பெரிய வாங்குந்திறனை ஆண்டு தோறும் அவிழ்த்துவிடுவது நாட்டுப் பொருளாதாரத்தை அதிக மாகப் பாதிக்கும் என்று கூறத் தேவையில்லை.

1956 மார்ச்சுடன் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலம் முடிவுற்றது. இந்தக் காலத்தில் மத்திய அரசாங்கமும் இராச் சிய அரசாங்கங்களும் ரூ. 2,000 கோடியை, அட்டவணை 33-ல் காட்டியபடி செலவு செய்தன.

அட்டவணை 33

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்படி செலவு, 1951–56

(கோடி ரூபாய்களில்)

	கணக்குகள்				1955–56 மாற்றப்பட்ட மதிப்பீடு	1951–56க்கு மொத்தம்
	1951–52	1952–53	1953–54	1954–55		
மத்திய அரசாங்கம்	132·1	125·4	181·3	283·6	392·5	1114·9
இராச்சிய அரசாங்கங்கள்	127·3	142·2	161·7	192·3	274·0	897·5
மொத்தம் ...	259·4	267·6	343·0	475·9	666·5	2012·4

(ஆதாரம் : 'Review of the First Five Year Plan,' Government of India.)

முதலில் திட்டமிட்டபடி, மத்திய அரசாங்கமும் இராச்சிய அரசாங்கங்களும் சேர்ந்து மொத்தம் ரூ. 2,069 கோடி செலவிட

உத்தேசிக்கப்பட்டது. பின்னர் செய்த மாறுதல்களால், திட்டத்தின் அளவு ரூ. 2,378 கோடியாக உயர்த்தப்பட்டது. இதில் மத்திய அரசாங்கம் செய்யவேண்டிய செலவு ரூ. 1,390 கோடி; இராச்சிய அரசாங்கங்களின் பங்கு 968 கோடி. திட்டத்தின் கடைசி ஆண்டில் செய்யப்பட்ட உண்மையான செலவு ரூ. 625 கோடிதான். ஆனால், மாற்றப்பட்ட மதிப்பீடு ரூ 666·5 கோடி. ஆகவே, ஐந்தாண்டுகளில் மொத்தச் செலவு ரூ. 1,971 கோடியாயிற்று. இது ரூ. 407 கோடி, அல்லது மாற்றப்பட்ட செலவுக் குறிக்கோளில் 17 சதவீதம் குறைவைக் காட்டுகிறது. முதல் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் திட்டம் மெதுவாக முன்னேறினாலும் கடைசி இரண்டாண்டுகளில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. அப்போது மொத்தச் செலவில் 57 சதவீதம் ஆயிற்று. அட்டவணை 34-ல் உள்ள விவரங்கள் முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கிடைத்த நிதியையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் காட்டுகின்றன.

மத்திய அரசாங்கத்தாலும் இராச்சிய அரசாங்கத்தாலும் செலவு செய்யப்பட்ட ரூ. 2,000 கோடியில், அரசாங்கத் தொழில் பகுதியில் முதலீட்டுச் செலவு ரூ. 1,500 கோடியாகும். இதுவன்றி தனியார் தொழில் பகுதியில் இந்தக் காலத்தில் ரூ. 1,600 கோடி முதலீடு செய்யப்பட்டதென்று மதிப்பிடப்படுகிறது. ஆக நம் பொருளாதார அமைப்பில் 1951–52 முதல் 1955–56 வரை ஐந்தாண்டுகளில் மொத்த முதலீடு ரூ. 3,100 கோடியாகும்.

யூனியன் அரசாங்கமும் இராச்சிய அரசாங்கங்களும் செய்த முதலீட்டினால், நம் பொருளாதாரத்தில் கிடைக்கக்கூடிய சாதனங்களில் ஏற்பட்ட அதிகத் தேவையின் அளவு நிதி கிடைத்த பல்வேறு தோற்றுவாய்களின் முக்கியத்துவத்தினால் பொதுவாக அறியப்படும். முதலில் கருதியபடி, உள்நாட்டில் வரிகள், கடன்கள், சிறு சேமிப்புகள் முதலியவை வாயிலாக எழுப்பப்படும் தொகை ரூ. 1,258 கோடி என்று மதிப்பிடப்பட்டது. எஞ்சிய ரூ. 811 கோடி, அதிக வரிகளாலும் பற்றுக்குறை நிதியாக்கத்தினாலும் ஈடுசெய்யப்படவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டது. கடைசியாகக் கூறப்பட்ட வழியில் ரூ. 290 கோடிக்குள் நிதியாக்கம் செய்யவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டது. இத் தொகை ஸ்டர்லிங் இருப்பிற்குச் சமமானது. உண்மையில் பட்ஜெட் தொகை, இலக்குத் தொகையைவிடச் சிறிது கூடுதலாக இருந்தது. ஆனால், வெளியிலிருந்து பயன்படுத்தப்பட்ட நிதி ரூ. 200 கோடிதான். ஆகவே, பற்றுக்குறை நிதியாக்கம் ரூ. 290 கோடி வரம்புக்குமேல் போய்விட்டது.

அட்டவணை 34

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதியளிப்பு, 1951–52 முதல் 1955–56 வரை மத்திய அரசாங்கமும் இராச்சியங்களும்

(கோடி ரூபாய்களில்)

	1951–52 (1)	1952–53 (2)	1953–54 (3)	1954–55 (4)	1955–56* (5)	1951–56 (6)
பட்ஜெட் தொகை ...	204·8	141·3	246·1	368·6	316·5	1277·3
1. அரசாங்க ஸ்தாபனச் சேமிப்பு						
(a) நடப்பு வருவாயிலிருந்து	183·0	98·8	86·7	123·7	82·1	574·3
(b) ரயில்வேக்களிலிருந்து	37·7	23·5	12·8	19·5	21·9	115·4
2. தனியார் சேமிப்பு—பெறப்பட்ட வழி						
(a) மக்களிடமிருந்து கடன்	— 22·8	15·7	2·4	119·7	89·4	204·4
(b) சிறு சேமிப்பும் நிலையாக்கப்படாத கடனும்	48·6	48·7	53·0	70·5	82·8	303·6
(c) டெபாசிட்டுகள், நிதிகள், பலவகை வழிகள்	— 41·7	— 45·4	91·2	35·2	40·3	79·6
3. தொகையில் துண்டு ...	54·6	126·3	96·9	107·3	350·0	735·1
4. வெளி உதவி, மானியங்கள், கடன்கள்	64·9	45·6	18·5	16·0	58·2	203·2
5. பற்றுக்குறை ...	— 10·3	80·7	78·4	91·3	291·8	531·9

* மாற்றப்பட்ட மதிப்பீடு

(ஆதாரம் ; 'Review of the First Five Year Plan, Government of India.)

ஐந்தாண்டுகளில் மத்திய அரசாங்கத்தின் செலவு ரூ. 1,115 கோடியாயிற்று. இதில், மத்திய அரசாங்கத்திற்குக் கிடைக்கக் கூடிய நடப்பு வருவாய், ரயில்வேக்களின் பங்குஅளிப்பு. தனியார் சேமிப்புகளைக் கடனுகப் பெறுதல், சிறு சேமிப்புகள், டெபாசிட்டுகள், நிதிகள் முதலியவை ரூ. 778 கோடியாகும். இந்த மொத்தத்தில் மத்திய அரசாங்கம் இராச்சியங்களுக்கு ரூ. 350 கோடியை, இராச்சியத் திட்டங்களுக்குத் தன் உதவியாக அளித்தது. இதை நீக்கி, யூனியன் அரசாங்கத்திற்கு ரூ. 428 கோடிதான் கிடைத்தது. வெளி உதவியாக ரூ. 203 கோடி கிடைத்ததால், மத்திய அரசாங்கத்தின் பட்ஜெட்டில் ஐந்தாண்டுகளுக்கு நிகரப் பற்றுக்குறை ரூ. 484 கோடியாயிற்று. இராச்சியங்கள் தம் பங்காக ரூ. 898 கோடியைச் செலவு செய்தன. அவை திட்டச்

செலவுகளுக்காகப் பட்ஜெட் மூலம் பெற்றது, வருவாய்க் கணக்கில் இருப்பு, மக்களிடமிருந்து கடன், டெபாசிட்டுகள், மற்றப் பலவகை வரவுகள் உட்பட ரூ. 500 கோடி மத்திய அரசாங்கத்தின் உதவியாகிய ரூ. 350 கோடியைச் சேர்த்தால், அவற்றின் பற்றுக்குறை ரூ. 48 கோடியாகும். ஆக முதல் ஐந்தாண்டுத் திட்டச் செலவுக்காக மத்திய அரசாங்கம். இராச்சிய அரசாங்கங்கள் ஆகியவற்றின் மொத்தப் பற்றுக்குறை ரூ. 532 கோடி அல்லது ரூ. 2,012 கோடி மொத்தச் செலவில் 26 சதவீதம் ஆகும். திட்ட அதிகாரிகள் எதிர்பார்த்ததைவிட இது மிக அதிகம். இப்படி ஏற்பட்டதற்குக் காரணம், பட்ஜெட் தொகையில் நெகிழ்ச்சியின்மையும், வெளி உதவி கிடைப்பதுபற்றி அளவு கடந்து மதிப்பிட்டதும், இந்தத் தொகைகளை ஈர்த்துக்கொள்வதற்கு நம் பொருளாதாரத்தினிடத்துள்ள சக்தியை அளவு கடந்து மதிப்பிட்டதும் ஆகும். அரசாங்கத் தொழில்துறைக்கு இந்த ஐந்தாண்டுகளில் கடன்கள் மானியங்கள்மூலம் கிடைத்த வெளி உதவி மொத்தம் ரூ. 296 கோடி. இதில் ரூ. 200 கோடிதான் முதல் திட்டக் காலத்தில் பயன்படுத்தப்பட்டது. எஞ்சிய ரூ 100 கோடி அடுத்த திட்டக் காலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

மத்திய, இராச்சிய அரசாங்கங்களின் பட்ஜெட் வரவு, மதிப்பீட்டின்படி ரூ. 1,257 கோடி. ஆனால் கிடைத்தது ரூ. 1,277 கோடி எனினும் திட்டத்தில் வரவுக்கும் செலவுக்கும் இடையே ரூ. 811 கோடி துண்டு விழுமென்று கருதப்பட்டது. எனினும், இதில் சுமார் பாதியை அதிக வரி, கூடுதலான வெளி உதவி, அதிகப் பற்றுக்குறை நிதியாக்கம் (அதாவது, தற்காலிக உச்சவரம்பாகக் கொள்ளப்பட்ட ரூ. 290 கோடிக்குமேல்) ஆகியவற்றின்மூலம் அடைக்கலாம் என்று நம்பப்பட்டது. மேலும் அதிக முயற்சி செய்திருந்தால், வரி வருவாய் இன்னும் அதிகம் கிடைத்திருக்கும். அப்போது பணவீக்க முறையாகிய பற்றுக்குறை நிதியாக்க அளவு மிகவும் குறைந்திருக்கும். முதல் திட்டத்தின் ஐந்தாண்டுகளில் மத்திய, இராச்சிய அரசாங்கங்களின் பட்ஜெட் வருவாய் இனங்களை ஆராய்ந்தால், ஆண்டுக்கு ஆண்டு பட்ஜெட் வரவுகள் அதிக ஏற்ற இறக்கங்களைக் கண்டன என்பதும், 1951–52-ல் ரூ. 205 கோடியிலிருந்து அடுத்த ஆண்டில் ரூ. 141 கோடிக்கும், 1954–55-ல் ரூ. 369 கோடியிலிருந்து 1955–56-ல் ரூ. 317 கோடிக்கும் இறங்கின என்பதும் தெரியும்.

திட்டத்தின் இறுதியாண்டில் வருவாயிலிருந்து சேமிப்புகள் மிக அதிகமாக இருந்தன. இதற்குக் காரணம் கொரியப் போரினால் ஏற்பட்ட பொருளாதார வீக்கத்தின் உற்சாகமான

அட்டவணை 35

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதியளிப்பதற்குப் பட்ஜெட் வாவினங்கள்

(கோடி ரூபாய்களில்)

	1951–52	1952–53	1953–54	1954–55	1955–56	மொத்தம் 1951–56
நடப்பு வருவாய் ...	183·0	98·8	86·7	123·7	82·1	574·3
ரயில்வேக்களிலிருந்து ...	37·7	23·5	12·8	19·5	21·9	115·4
மக்களிடமிருந்து கடன் ...	— 22·8	15·7	2·4	119·7	89·4	204·4
சிறு சேமிப்புகளும் நிலையாக்கப் படாத கடன்களும்	48·6	48·7	53·0	70·5	82·8	303·6
டெபாசிட்டுகள், நிதிகள் முதலியவை	— 41·7	— 45·4	91·2	35·2	40·3	79·6
மொத்தம் ...	204·8	141·3	246·1	368·6	316·5	1277·3

(ஆதாரம் : Review of the First Five Year Plan, Government of India.

வருவாய் நிலைதான். அடுத்த இரண்டாண்டுகளில் பணவீக்கக் குறைப்புப் போக்கு உண்டானதால் வருவாய் குறைந்தது. முதல் திட்டக் காலத்தில், தேசிய வருமானம் 18 சதவீதம் உயர்ந்தாலும், மொத்தத் துய்ப்பும் 16 சதவீதம் உயர்ந்தது. வரிவிதிப்பு மூலம் சேமிப்புகள் அநேகமாக ஒரே அளவாக 7 சதவீதம் இருந்தன. மத்திய, இராச்சிய அரசாங்கச் சேமிப்புகளில், இராச்சிய அரசாங்கங்கள் பின்னிட்டன. திட்ட இலக்குகளின் படி பெறவேண்டிய தொகையைவிட அதிகமாக ரூ. 145 கோடியை மத்திய அரசாங்கம் நடப்பு வருவாயிலிருந்து பெற்றது. ஆனால், வருவாயிலிருந்து இராச்சிய அரசாங்க நிதிகளுக்குக் கொடுக்கவேண்டிய தொகை, திட்ட மதிப்பீட்டின் படி ரூ. 410 கோடி; இதில் ரூ. 269 கோடிதான் கொடுக்கப்பட்டது. அதாவது 34 சதவீதம் குறைவாகக் கொடுக்கப்பட்டது. நிதிக் குழுவின் பரிவுரைப்படி மத்திய அரசாங்கம் இராச்சிய அரசாங்கங்களுக்குக் கொடுத்த ரூ. 80 கோடி போக, இத் துண்டு ஏற்பட்டது. இராச்சிய வருவாய்களில் துண்டு விழுந்ததற்குக் காரணம், அதிக வரி விதிப்பினால் பெறவேண்டிய வருவாய் இலக்குகளை உணரத் தவறியதும், திட்டத்திற்குப் புறம்பான அபிவிருத்திச் செலவுகள் அதிகரித்ததும்தான். ஐந்தாண்டுகளில் இராச்சியங்கள் அதிக வரிவிதிப்பு மூலம் ரூ. 230 கோடி பெற வேண்டுமென்று கருதப்பட்டதற்கு மாறாக, அவை ரூ. 80 கோடிதான் பெறமுடிந்தது. மோட்டார் வண்டிகள்மீது வரி, மோட்டார் எண்ணெய்மீது விற்பனைவரி, மற்ற வரிகள், தீர்வைகள்

அதிகரித்தும், இராச்சியக் கலால் வரி, இராச்சியங்களுக்கிடையே போக்குவரத்து வரி ஆகியவை குறைந்ததால், கூடுதலும் குறைவுமின்றிச் சமநிலை ஏற்பட்டது. மத்திய அரசாங்கத்திற்கும் இராச்சிய அரசாங்கங்களுக்கும் சேர்ந்து மொத்தமாக, ஐந்தாண்டுகளில் வரிவருமானம் சிறிதளவே உயர்ந்தது. 1950-51-ல் தேசிய வருமானத்தில் 6·6 சதவீதமாக இருந்த மொத்த வரி வரவு (மத்திய அரசாங்கத்திற்கும் இராச்சிய அரசாங்கங்களுக்கும்), அடுத்த ஆண்டில் 7·5 சதவீதமாக உயர்ந்தது. ஆனால், 1953-54-ல் 6·4 சதவீதமாகக் குறைந்து, முதல் திட்டத்தின் இறுதியாண்டில் 7·9 சதவீதமாக மீண்டும் உயர்ந்தது. சராசரியாகத் திட்ட காலத்தில் அது தேசிய வருமானத்தில் 7 சதவீதமாக இருந்தது.

அரசாங்கச் சேமிப்புடன் ஒப்பிடும்போது, தனியார் சேமிப்பிலிருந்து கிடைத்த வரவு அதிகமாக இருந்தது. ஐந்தாண்டுகளில் மத்திய அரசாங்கமும் இராச்சிய அரசாங்கங்களும் மார்க்கெட்டுகளில் வாங்கிய கடன் ரூ. 204·4 கோடி. ஆனால், இலக்கு ரூ. 115 கோடிதான். திட்டத்தின் முதல் மூன்றுண்டுகளில் யூனியன் அரசாங்கம் திருப்பிக்கொடுத்த கடன் தொகை ரூ. 72·3 கோடி, ஆனால், அடுத்த இரண்டாண்டுகளில் ரூ. 121·3 கோடி வசூலித்தது. திட்ட காலத்தில் இந்த வழியில் வசூலித்த நிகரத் தொகை ரூ. 49 கோடியாகும். திட்டத்தின் முதலாண்டிலிருந்து மக்களிடமிருந்து இராச்சிய அரசாங்கங்கள் கடனுகப் பெற்ற தொகை படிப்படியாக அதிகரித்து, ஐந்தாண்டுகளில் மொத்தம் ரூ. 155·4 கோடியாயிற்று. அன்றியும், மத்திய, இராச்சிய அரசாங்கங்கள், ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சிறு சேமிப்பிலிருந்தும் நிலையாக்கப்படாத கடனிலிருந்தும் பெற்ற வரவு ரூ. 303·6 கோடியாகும். திட்ட இலக்காகிய ரூ. 270 கோடியைவிட இது ரூ. 33·6 கோடி அதிகம். திட்டத்தின் முடிவில் சிறு சேமிப்பு மூலம் வசூல், முதல் ஆண்டில் இருந்ததைப்போல் இருமடங்காயிற்று. திட்டத்தின் மொத்தச் செலவில் இது 12 சதவீதமாகும்.

அரசாங்க நிறுவனங்களின் சேமிப்புகள், நடப்பு வருவாய், ரயில்வேக்கள் மூலமாகவும், மக்களிடமிருந்து கடனுகப் பெற்ற சேமிப்புகள், சிறுசேமிப்புகள் முதலியவை மூலமாகவும் மொத்தம் ரூ. 1,277·3 கோடியாயின. ஆக, மொத்தச் செலவில் துண்டு விழுந்த தொகை ரூ. 735·1 கோடியாகும். ஐந்தாண்டுகளில் பயன்படுத்தப்பட்ட வெளி உதவி ரூ. 203·2 கோடி. ஆகவே, நிகரப் பற்றுக்குறை ரூ. 531·9 கோடி. திட்டச் செலவில் இந்தப்

பகுதிக்கு நிதியளித்ததுதான், அபிவிருத்திச் செலவில் பணவீக்க ஆற்றலை உண்டாக்கியது.

மொத்தச் செலவுக்கும் வரவுக்கும் இடையே விழுந்த துண்டு, மக்களிடையே பண அளிப்புப் பெருக்கத்தை எந்த அளவுக்கு விளைவித்தது என்பதையறிய, மத்திய அரசாங்கத்தின் பட்ஜெட் பற்றுக்குறையை, ரிசர்வ் பாங்கிடம் உள்ள அதனுடைய குறுங் காலக் கடனில் அதிகரிப்பு, ரிசர்வ் பாங்கில் உள்ள அதனுடைய ரொக்க இருப்பில் குறைவு ஆகிய இரண்டின் மொத்தத்தோடு ஒப்பிடவேண்டும். இதேபோல, இராச்சிய அரசாங்கங்களுக்கு ரிசர்வ் பாங்கு கொடுத்த கடனுக்கும், அவற்றின் ரொக்க இருப்பில் ஏற்பட்ட குறைவுக்கும் உள்ள வித்தியாசம், இராச்சியங்களின் பற்றுக்குறை நிதியாக்கத்தின் அளவைக் குறிக்கும். மொத்தப் பற்றுக்குறையாகிய ரூ 531·39 கோடியில், மத்திய அரசாங்கத்தின் பங்கு ரூ. 483·8 கோடி; இராச்சிய அரசாங்கங்களின் பற்றுக்குறை நிதியாக்கம் ரூ. 48·1 கோடி. முதல் மூன்றாண்டுகளில், மத்திய அரசாங்கத்தின் பற்றுக்குறை பெரும் பாலும் அதன் ரொக்க இருப்பிலிருந்து எடுத்து ஈடு செய்யப் பட்டது. திட்டத்தின் கடைசி இரண்டாண்டுகளில், முக்கிய மாக ரிசர்வ் பாங்கிலிருந்து கடன் வாங்கி ஈடு செய்யப்பட்டது. திட்டக் காலத்தின் இறுதியில், மத்திய அரசாங்கத்தின் குறுங் காலக் கடனில் அதிகரிப்பு ரூ. 346·9 கோடியாயிற்று; பத்திரங்களின் விற்பனை ரூ. 25·2 கோடியளித்தது; ரொக்க இருப்பிலிருந்து எடுத்தது ரூ. 111·7 கோடி. ஆக இந்த மூன்று இனங்களின் மொத்தம் ரூ. 483·8 கோடி. இராச்சிய அரசாங்கங்களின் பற்றுக்குறையாகிய ரூ. 48·1 கோடியில், குறுங்காலக் கடன் அதிகரிப்பு மூலம் ரூ. 21·1 கோடியும், பத்திர விற்பனை மூலம் ரூ. 10·2 கோடியும், ரொக்க இருப்பிலிருந்து எடுத்தது ரூ. 16·8 கோடியும் ஆகும். மேற்கூறிய வழியில், இந்த அளவு பற்றுக் குறை நிதியாக்கம் அளித்தது, நாட்டிலுள்ள பண அளிப்பையும் விலைகளையும் எப்படிப் பாதித்தது என்பது ஆராயத்தக்கது.

1951–56-க்கு இடைப்பட்ட ஐந்தாண்டுகளில் பணஅளிப்பில் உயர்வு ரூ. 264 கோடி அல்லது 14 சதவீதம். ஐந்தாண்டுத் திட்டம் தொடங்குவதற்கு முந்திய 1950–51 ஆண்டில், அதிக வருவாயின் காரணமாக அரசாங்கப் பற்றுக்குறை மிகக்குறைவாயிருந்தது. ஆனால், ஊகவாணிக இருப்புச் சேமிப்பினால் செலாவணிப் பெருக்கமும் பொதுமக்களிடம் உள்ள செலாவணியின் அளவும் அதிகமாயின. 1951–52-ல் மத்திய அரசாங்கத்தின் பட்ஜெட்டில் சிறிது உபரி இருந்தது. ஆனால், அடுத்த ஆண்டில்

(1952–53), வருவாய் இனத்திலும் முதலினத்திலும் வரவைவிடச் செலவு அதிகமாயிற்று. இந்த பட்ஜெட்டில் பற்றுக்குறை இருந்தும், அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில் அதிகப் பற்றுக்குறை இல்லாமலிருந்தும், பண அளிப்பு ரூ. 39 கோடி சுருங்கிற்று. இதற்குக் காரணங்கள் பலவாகும். அவை, வெளிநாட்டு நிதியளிப்பின் முக்கியத்துவம்,[1] தனிப்பட்டவர்களுடைய சேமிப்பினால் அரசாங்கக் கடன் அதிகமாகக் கவரப்பட்டது, வியாபாரக் கடன் சுருங்கியது போன்றவை. ஆக, பொதுமக்களிடமிருந்த மொத்த டெபாசிட்டுகளும் செலாவணியும் மாறுதிருந்தன; ஆனால், ஷெடியூல் பாங்குச் செலாவணி அதிகம் குறைந்தது. மேலும், அரசாங்கம் அதிகமாக முதலீடு செய்ததால் பணவீக்க விளைவு உண்டாகவில்லை. ஏனெனின், தனியார் முதலீடு குறைந்துவிட்டது. இதற்குக் காரணம் ஓரளவு ரிசர்வ் பாங்கின் கண்டிப்பான கடன் கொள்கையும், தனியார் முதலீட்டின்மேல் இருந்த கடுமையான கட்டுப்பாடுகளும், பெருமளவு தொழிலில் சம்பாதிக்கும் நம்பிக்கை வியாபாரிகளிடையே இன்மையும் ஆகும். பட்ஜெட் பற்றுக்குறை, அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில் உபரி ஆகிய இரண்டின் தொகுபலன், 1953–54-ல் பண அளிப்பு அதிகரித்ததால் தெரியும். திட்டத்தின் இறுதி இரண்டாண்டுகளில் செலவு விகிதம் கணிசமாக உயர்ந்ததும், கசாஞ உண்டியல்கள்மூலம் பெருமளவு பற்றுக்குறை நிதியாக்கம் செய்ததும் பண அளிப்பில் அதிக அளவு பெருக்கம் உண்டாகும்படி செய்தன. திட்டத்தின் முதல் மூன்றாண்டுகளில் பண அளிப்பில் ரூ. 185 கோடி நிகரக் குறைவு ஏற்பட்டது. ஆனால், கடைசி இரண்டாண்டுகளில் ரூ. 390 கோடி அதிகரித்தது. எனினும், திட்டம் முடியும்வரையிலாவது, இந்தப் பணம் சம்பந்தமான மாறுதல்களால், நாட்டின் பொருளாதாரத்தில் எந்தவிதமான நெருக்கடியும் ஏற்படவில்லை. இந்த அளவு பற்றுக்குறை நிதியாக்கம் செய்தது, கொரியப் போருக்குப் பின்னர் உண்டான பணச் சுருக்கத்தை இல்லாமல் ஆக்கி விட்டது என்று கூறலாம். இதற்கு மாறுக, 1953–54-லும் 1954–55-லும் உண்டான கணிசமான விவசாய உற்பத்தி, விவசாய விலைகளில் மந்தத்தை ஏற்படுத்திவிட்டது. 1954–55-ல் பண அளிப்பு சுமார் 7 சதவீதம் அதிகரித்தது. ஆனால், மொத்த விற்பனை விலைகள் 5 சதவீதம் குறைந்தன. இதிலிருந்து, முதல் திட்டக் காலத்தின் நான்காவது ஆண்டு முடியும் வரையிலாவது, பற்றுக்குறை நிதியாக்கம் இருந்தும்கூட, வளரும்

1 வெளிநாட்டுக் கடன்கள், மானியங்கள் ஆகியவற்றிலிருந்து கிடைத்த ரூபாய்கள், பன்னாட்டு பாங்குக் கடன்களிலிருந்து எடுக்கப்பட்ட தொகை—இரண்டும் சேர்ந்து அரசாங்கத்திற்கு ரூ. 44 கோடி கிடைத்தது. ஐ.நா, 'Economic Survey of Asia and the Far East,' 1953. p. 68.

பொருளாதாரத்திற்கேற்பப் பணப்பெருக்கம் அமைந்திருந்தது என்று தெரிகிறது.

திட்டத்தின் இறுதியாண்டில், இன்னும் அதிகம் செலவு செய்து, அதிக பட்ஜெட் பற்றுக்குறைகள் தோன்றினும், பண அளிப்பு ரூ. 260 கோடிக்குமேல் போயிற்று. அதே சமயத்தில், 1955-ன் நடுவிலிருந்து, குறிப்பாக விவசாயப் பண்டங்களின் விலைகள் ஏறுமுகம் கண்டன. விலையளவு உயர்வினால் பொருளாதாரம் இவ்வாறு பாதிக்கப்பட்டதற்குக் காரணம், ஓரளவு விவசாய உற்பத்திக் குறைவேயாகும். எனினும், இது முக்கியமாக, நம் பொருளாதாரம் இதற்குள் பற்றுக்குறை நிதியாக்கத்தை ஜீரணிக்கக்கூடிய சக்தியின் இறுதி எல்லையை விரைவாக அடைந்துவிட்டது என்பதையே காட்டும்.

7. அபிவிருத்தி நிதியும் பணவீக்கமும் (தொடர்ச்சி)

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கிய சூழ்நிலை, பணவீக்கத்திற்குச் சாதகமானதென்று கூறமுடியாது. முதல் திட்டத்தின் முடிவில், அரசாங்க அபிவிருத்திச் செலவில் கணிசமான உயர்வு காணப்பட்டது. அத் திட்டத்தின் இறுதி இரண்டாண்டுகளில், முதல் இரண்டாண்டுகளில் இருந்ததைப்போல அபிவிருத்திச் செலவு சுமார் இரண்டு மடங்காயிற்று. இந்த ஆண்டுகளில்தான் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் பற்றுக்குறை நிதியாக்கத்தின் பெரும்பகுதி ஏற்பட்டது. 1954–55-ல் மக்களிடமுள்ள பண அளிப்பு ரூ. 127 கோடியும், 1955–56-ல் மேலும் ரூ. 264 கோடியும் அதிகமாயிற்று. திட்டத்தின் கடைசி ஆண்டில், ஷெடியூல் பாங்குகளின் கடன் செலாவணி 22 சதவீதம் உயர்ந்தது. இதற்கு மாறுக உணவு உற்பத்தி 1953–54-ல் இருந்த உயர்ந்த எல்லையைவிட்டுக் கீழே இறங்கியது. 1953–54, 1955–56 ஆண்டுகளுக்கிடையே விலைகள் மாறுமலிருந்த நிலையில், தேசிய வருமானம் 4 சதவீதத்திற்கும் குறைவாக உயர்ந்தது. ஆகவே, நாட்டில் விலை உயர்வு ஏறிற்று. இரண்டாவது திட்டத்தின் ஆரம்ப நிலையிலேயே சில திட்டப் பகுதிகளின் செலவு மதிப்பீடுகள் உயர்த்தப்பட வேண்டியதாயிற்று. பெரிய தொழில் முதலீட்டுத் திட்டங்களை வற்புறுத்தியதும், பெரிய அளவில் பற்றுக்குறை நிதியாக்கம் செய்ய உத்தேசித்ததும், பொருளாதாரத்தின் முதலீட்டின் வேகத்தை மேலும் வளர்ப்பதற்குச் சாதகமான மனோபாவ சூழ்நிலையை ஏற்படுத்தின. செலவு அதிகரிப்புக்கும் விலையேற்றத்திற்கும் ஏற்ப, பொருளாதார அமைப்பிலிருந்து கிடைக்கக்கூடிய சாதன வருவாய்கள் போதாமலிருந்தன. கிடைக்கக்கூடிய சாதனங்களுக்கும், அவற்றிற்குள்ள தேவைகளுக்கும் இடையே இருந்த சமநிலை, நாட்டின் கொடுப்பல் நிலையைப் பாதகமாக மாற்றியது. இவற்றிற்கு மேலாக, சூயஸ் நெருக்கடி தோன்றி, இந்தப் பாதகநிலையை மேலும் சீர்கேடடையச் செய்தது.

எத்தகைய திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின் பணவீக்க விளைவும் அதற்கு நிதியளிக்கும் முறையையும், அதில் அடங்கிய செலவின் தன்மையையும் பொறுத்தது. திட்டமிட்ட வளர்ச்சியில் அரசாங்கம் முக்கியப் பங்கு கொண்டால், வரி விதிப்பு, கடன் வாங்குதல் ஆகியவைமூலமாக அது தேவையான சாதனங்களைத் திரட்டவேண்டும். வரிவிதிப்புமூலம் வசூலித்த வருவாயும், அரசாங்கம் உள்நாட்டில் கடன் வாங்குதலினாலும் சிறு சேமிப்பினாலும் பெறக்கூடிய வரவும் சேர்ந்து சொத்துச் சாதனங்களின் பணப்பகுதியாக அமையும். இதைச் சமூகம் கட்டாயமாகவோ தன் விருப்பத்தாலோ அளிக்கவேண்டும். இப்படிக் கிடைக்கும் சாதனங்கள் போதாமலிருந்தால், அரசாங்கம் பற்றுக்குறை நிதியாக்கம் செய்யலாம். இதனால் அது, நேரடித் துய்ப்பிலிருந்து சாதனங்களைக் கவரும் அல்லது இரண்டாந்தர முக்கியத்துவம் உள்ள முதலீட்டிலிருந்து கவரும். இந்த அதிகத் தேவையினால் உண்டாகும் விலை உயர்வு, துய்ப்பைக் குறைத்தும் கட்டாயமாக அதிகச் சேமிப்புச் செய்தும் சாதனங்களை மாற்றிக்கொடுக்க உதவும். இப்படிப் பார்க்கும்போது, பற்றுக்குறை நிதியாக்கம் அதிகத் தேவையின் அளவைப் பொதுவாகக் காட்டுவதோடு, பணவீக்கத்திற்கும் காரணமாகிறது.

நிதியளிப்பு முறையோடு, திட்டத்தில் செலவீட்டின் தன்மையும் விலைகளைப் பாதிக்கின்றன. திட்டச் செலவில் பெரும்பகுதி முதலீட்டுக்காகத்தான் செய்யப்படுகிறது. ஆனால், முதலீடு விரைவில் பயன்தரலாம், அல்லது நிதானமாகப் பயன்தரலாம். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களிலும், சிறிய கைத்தொழில்கள் அல்லது குடிசைக் கைத்தொழில்களிலும் செய்யப்படும் செலவு விரைவில் அதிக உற்பத்தியை அளிக்கும். ஆனால், நீர்மின் திட்டங்கள், எஃகு தொழிற்சாலைகள், அல்லது தொடர்பு வசதிகள்போன்ற பெரிய முதலீட்டுத் திட்டங்கள், நீண்டகாலத்தில் பயனைத் தரும் வகையைச் சேர்ந்தவை. இவை பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான சமூகப் பொதுச் செலவுகள். இத்தகைய முதலீடுகள் அதிக அளவில் வேலையளிக்கும்; சமூகத்தில் அதிக அளவு வாங்குந் திறனை உண்டாக்கும்; ஆனால், ஆரம்பநிலையில் மட்டுமாவது, அவை உண்டாக்கும் தேவைக்குச் சமமான அதிக உற்பத்தியை அளிக்கமாட்டா. இத்தகைய முதலீட்டின் பணவீக்க ஆற்றல் நன்கு விளங்கும். ஆகவே, திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின் பணவீக்க விளைவுகளை மதிப்பிடும்போது, நிதியளிக்கும் முறை முதலீட்டின் தன்மை ஆகிய இந்த இரண்டு அம்சங்கள் கவனிக்கத் தக்கவை.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பொதுவான அம்சங்களை இந்தப் பின்னணியில் ஆராயவேண்டும். முதலில் வரையறுத்தபடி, இத் திட்டத்தில் 1956–57 முதல் 1960–61 வரையில் மொத்தம் ரூ. 4,800 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டது. இதில் ரூ. 38,00 கோடி முதலீட்டுச் செலவும், ரூ. 1,000 கோடி நடப்பு அபிவிருத்திச் செலவும் ஆகும். அட்டவணை 36-ல் பெரிய முதலீட்டுச் செலவுகள் பங்கிடப்பட்ட முறை காட்டப்பட்டிருக்கிறது.

அட்டவணை 36

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கியமான தலைப்புகளில் முதலீட்டுச் செலவு பங்கிடப்பட்ட முறை

(கோடி ரூபாய்களில்)

1. விவசாயமும் சமுதாய அபிவிருத்தியும் ...			338
(i) விவசாயம்		181	
(ii) தேசிய விஸ்தரிப்பும் சமுதாய அபிவிருத்தியும்.		157	
2. நீர்ப்பாசனமும் சக்தியும்			863
(i) நீர்ப்பாசனமும் வெள்ளக் கட்டுப்பாடும் ...		456	
(ii) சக்தி		407	
3. தொழில்களும் சுரங்கங்களும்			790
(i) பெரிய, நடுத்தரத் தொழில்களும் சுரங்கங்களும்		670	
(ii) கிராமக் கைத்தொழில்களும் சிறு கைத் தொழில்களும்		120	
4. கடத்து சாதனங்களும் தொடர்பு வசதிகளும் ...			1335
5. சமூகப் பணிகள்			455
6. பலவகை			19
மொத்தம்			3800

இந்தச் செலவினங்களில், பெரிய, நடுத்தரத் தொழில்களும் சுரங்கங்களும், கடத்து சாதனங்களும், தொடர்பு வசதிகளும், மின்சார சக்தித் திட்டங்களும் பொருளாதாரம் வளர்வதற்குத் தேவையான அடிப்படையை அமைப்பதற்கு வேண்டியவை; நீண்ட காலத்தில் பயனளிக்கக் கூடியவை. நீர்ப்பாசனமும் வெள்ளக் கட்டுப்பாடும்கூட ஓரளவு இத் தன்மையானவை. இந்தக் கடைசி இனத்தில் செய்யப்பட்ட செலவில் பாதியாவது பெரிய முதலீட்டு வகையைச் சேர்ந்ததாகக்கொண்டால், இந்த வகைச் செலவு ரூ. 2,640 கோடி, அல்லது மொத்த முதலீட்டுச் செலவில் 70 சதவீதமாகும். இதற்கு மாறாக, மூலதன ஆக்கத்திற்கும் அதிக வருவாய் உண்டாவதற்கும் இடைவெளி மிகக் குறைவாய் உள்ள விவசாயம், தேசிய விஸ்தரிப்பு, சமுதாய அபிவிருத்தி, சமூகப் பணிகள், பலவகைச் செலவுகள், நீர்ப்பாசனத்திற்கும்

வெள்ளக் கட்டுப்பாட்டிற்கும் செலவழிக்கப்படும் தொகையில் ஒரு பகுதி ஆகியவற்றிற்குச் செலவு செய்யும் தொகை ரூ. 1,160 கோடி அல்லது 30 சதவீதமாகும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் வகையைச் சேர்ந்த செலவுகள் மொத்தச் செலவில் 44 சதவீதமாயிருந்தன. இரண்டாவது வகையைச் சேர்ந்த செலவுகள் மொத்தம் ரூ. 1,133 கோடி அல்லது 56 சதவீதமாயிருந்தன; முதல் வகையில் தனிப்பட்ட இனங்களில் விவசாயத்திற்கு மொத்தத்தில் 10·2 சதவீதமும், சுரங்கங்களுக்கு 7·6 சதவீதமும் ஆயின. ஆனால், இரண்டாம் திட்டத்தில் மொத்த திட்டச் செலவில் விவசாயத்திற்கு 7·1 சதவீதமும், தொழில்களுக்கும் சுரங்கங்களுக்கும் 18·5 சதவீதமும் ஆயின.

ஐந்தாண்டுகளில் ரூ. 4,800 கோடி மொத்த அபிவிருத்திச் செலவு செய்வதால் தேசிய வருமானம் 25 சதவீதம் அல்லது ஆண்டுக்கு 5 சதவீதம் உயரும் என்றும், முதலீட்டின் விகிதம் தேசிய வருமானத்தில் 7 சதவீதத்திலிருந்து 11 சதவீதம் உயரும் என்றும் உத்தேசிக்கப்பட்டது. இந்தச் செலவுக்கு நிதியளிப்பு, வரிவிதிப்பினால் ரூ. 800 கோடியும், மக்களிடமிருந்து கடன் வாங்குவதனால் ரூ. 1,200 கோடியும், ரயில்வேக்களிலிருந்தும், சேம நிதியிலிருந்தும், மற்ற டெபாசிட்டுகளிலிருந்தும் ரூ. 400 கோடியும், வெளியிலிருந்து ரூ. 800 கோடியும் கிடைக்குமென்று எதிர்பார்க்கப் பட்டது. எஞ்சிய ரூ. 1,600 கோடியை உள்நாட்டுச் சாதனங்கள் ரூ. 400 கோடி, பற்றுக்குறை நிதியாக்கம் ரூ. 1,200 கோடி ஆகிய வழிகளில் ஈடுசெய்ய உத்தேசிக்கப்பட்டது (அட்டவணை 37). வரிவிதிப்புமூலம் பெறக்கூடிய ரூ. 800 கோடி, முதல் திட்டத்தின் இலக்கைவிட ரூ. 200 கோடி அதிகமாகும். வரவுகள் ரூ. 300 கோடி அதிகம். வரிவிதிப்பு, கடன் வாங்குதல், வெளிநாட்டு நிதி, பட்ஜெட் வரவுகள் ஆகியவை முழுவதும் கிடைத்தாலும்கூட, பற்றுக்குறை நிதியும் ரூ. 1,200 கோடி ஆக்கப்பட்டாலும்கூட, இன்னும் எஞ்சிய தொகை ரூ. 400 கோடி இருக்கும். இத் துண்டை அடைப்பதற்கு வரிவிதிப்பும் அரசாங்கத் தொழில் இலாபங்களும் தவிர வேறு வழியில்லை.[1] உத்தேசத் தொகைகளுக்கும்கீழே வரவுகள் குறையாமலும், பற்றுக்குறை நிதியாக்கம் மேற்கூறிய வரம்புக்குமேல் போகாமலும் இருந்தால், வரிவிதிப்பின்மூலம் ரூ. 1,200 கோடி கிடைக்கவேண்டும். இந்த அளவுக்கு வரி கிடைக்காவிட்டால், மதிப்பீட்டுக்குக்கீழே திட்டச் செலவுகளும் போகாமலிருக்கவேண்டுமானால், பற்றுக்குறை நிதியாக்கத்தை அந்த அளவுக்கு உயர்த்தவேண்டியிருக்கும்.

[1] இந்திய அரசாங்கம், திட்டக் குழு, 'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்' பக்கம். 78.

அட்டவணை 37

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதியளிப்பு (முதலில் உத்தேசித்தபடி)

(கோடி ரூபாய்களில்)

1.	நடப்பு வருவாயிலிருந்து உபரி		800
	(a) அப்போதிருந்த (1955–56) வரிவிகிதப்படி	350	
	(b) கூடுதல் வரி விதிப்பு	450	
2.	பொதுமக்களிடமிருந்து கடன் வாங்குதல் ...		1200
	(a) மார்க்கெட் கடன்கள்	700	
	(b) சிறு சேமிப்புகள்	500	
3.	மற்ற பட்ஜெட் சாதனங்கள்		400
	(a) ரயில்வேக்களின் பங்கு அளிப்பு ...	150	
	(b) சேம நிதிகளும் மற்ற டெபாசிட்டுகளும் ...	250	
4.	வெளியிலிருந்து பெறப்படும் சாதனங்கள் ...		800
5.	பற்றுக்குறை நிதியாக்கம்		1200
6.	உள்நாட்டுச் சாதனங்களைக்கொண்டு அடைக்க வேண்டிய துண்டு		400
	மொத்தம்		4800

திட்டச் செலவு மதிப்பீடு, மே, 1958

திட்டத்தின் முதல் இரண்டாண்டுகளில், வெளியிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் கிடைக்கக்கூடிய சாதனங்களின் அருமையால், 1958 மேயில் நிலைமையை மீண்டும் ஆராயவேண்டியதாயிற்று. அப்போது ஐந்தாண்டுக் காலத்தில் கிடைக்கக்கூடிய சாதனங்கள் ரூ. 4,260 கோடிக்குமேல் இரா என்று உணரப்பட்டது. ஆகவே, முதல் மதிப்பீட்டிலிருந்து ரூ. 540 கோடி அல்லது 11 சதவீதம் குறைவு காணப்பட்டது. விலையேற்றத்தினால் சில திட்டங்களின் பழைய மதிப்பீடுகள் உயர்த்தப்படவேண்டியிருந்ததால், உத்தேச இலக்குகளைக் குறைக்கும் அவசியம் ஏற்பட்டது. எனினும், இந்தச் சமயத்தில் தேசிய அபிவிருத்திக் குழு மொத்தச் செலவை ரூ. 4,800 கோடியாகவே வைத்துக்கொள்ளவேண்டுமென்றும், இந்தச் செலவை இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளவேண்டுமென்றும் கூறியது. இவை (அ) முன்னரே நன்முக வளர்ச்சியடைந்து, உற்பத்தி இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முடிக்கவேண்டிய முதன்மையான முக்கியத்துவம் உள்ள திட்டங்கள், (ஆ) அவ்வளவு முக்கியமில்லாத மற்றத் திட்டங்கள். முதலில் கூறப்பட்ட 'நடுமைய'த் திட்டங்களுக்கு ரூ. 4500 கோடி ஆகுமென்றும், மற்றத் திட்டங்களுக்கு ரூ. 300 கோடி

ஆகுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. பிற்கூறப்பட்ட திட்டங்களைக் கூடுதலான சாதனங்கள் கிடைக்குமளவுக்கு நிறைவேற்ற வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும், 'நடுமைய'த் திட்டங்களில்கூட, செலவில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. இந்த மாறுதலின்படி, விவசாயம், சமுதாய வளர்ச்சி, கிராமக் கைத்தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றிற்குரிய செலவு முன்பு உத்தேசித்தபடி மாறுமல் இருந்தது. ஆனால், நீர்ப்பாசனம், சக்தி ஆகியவற்றிற்கான செலவு பழைய மதிப்பீடாகிய ரூ. 913 கோடியிலிருந்து ரூ. 860 கோடியாகக் குறைக்கப்பட்டது. கடத்து சாதனங்களும் தொடர்பு வசதிகளும், சமூகப் பணிகள், பலவகை ஆகியவற்றிற்கான செலவும் முறையே ரூ. 1,385 கோடியிலிருந்து ரூ. 1,345 கோடிக்கும், ரூ. 945 கோடியிலிருந்து ரூ. 863 கோடிக்கும், ரூ. 99 கோடியிலிருந்து ரூ. 84 கோடிக்கும் குறைக்கப்பட்டன. இதற்கு மாறுக, தொழில்கள் சுரங்கங்களுக்கான செலவு ரூ. 690 கோடியிலிருந்து ரூ. 880 கோடியாக உயர்த்தப்பட்டது. ஆக, மொத்தச் செலவு மாறுமல், தொழில்கள், சுரங்கங்களுக்கான தொகை மொத்தச் செலவில் 14·4 சதவீதத்திலிருந்து 18·4 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. மற்ற இனச் செலவுகளைச் சிறிது குறைத்ததால் இந்த அதிகரிப்பை ஈடுசெய்ய முடிந்தது.

இரண்டாம் திட்டத்தின் முன்னேற்றம்

1956–57-லிருந்து 1958–59 வரையில் இரண்டாவது திட்டத்தின் முதல் மூன்றாண்டுகளில் மத்திய, இராச்சிய அரசாங்கங்களின் செலவு மதிப்பீடு ரூ. 2,500 கோடியாகும். இது முதலில் செய்த ஏற்பாட்டின்படி, ரூ. 4,800 கோடியில் 52 சதவீதமாகும். எஞ்சிய 48 சதவீதச் செலவைத்தான் இறுதி இரண்டாண்டுகளில் செய்யவேண்டும். அட்டவணை 38-ல், முக்கிய அபிவிருத்தி இனங்களில் இச் செலவீடு எவ்வாறு பங்கிடப்பட்டது என்பதும், மூன்றாண்டுகளில் அதன் முன்னேற்றம் எவ்வாறிருந்தது என்பதும் காட்டப்பட்டுள்ளது.

இந்த வெவ்வேறு செலவினங்களுக்குள், தொழில்கள், சுரங்கங்கள் ஆகியவற்றில் கணிசமான முன்னேற்றம் உண்டாகியுள்ளது. இந்த இனத்தில் மூன்றாண்டுகளில் ஆன மொத்தச் செலவு ரூ. 588 கோடி. முதலில் உத்தேசித்ததில் 72 சதவீதமும், 1958-ல் மாற்றியமைத்த தொகையில் 66 சதவீதமும் ஆகும். கடத்து சாதனங்கள், தொடர்பு வழிகள், நீர்ப்பாசனம், சக்தி ஆகியவற்றில் செலவு செய்ததும் அதிகமாகும். ஆனால், விவசாயம், சமுதாய வளர்ச்சி, சமூகப் பணி ஆகியவற்றிற்கான செல

அட்டவணை 38

இரண்டாம் திட்டத்தின் முதல் மூன்றாண்டுகளில் செலவு முன்னேற்றம்

(கோடி ரூபாய்களில்)

செலவினம்	1956–57	1957–58	1958–59	மூன்றாண்டுகளின் மொத்தம் 1956–59	செலவிலக்கை அடைவதில் எஞ்சிய தொகை
1. விவசாயமும் சமுதாய வளர்ச்சியும்	69 (12)	85·8 (15)	109·2 (19)	264·0 (46)	304·0 (54)
2. நீர்ப்பாசனமும் சக்தியும்	162·5 (18)	161·0 (18)	164·7 (18)	488·2 (54)	424·8 (46)
3. தொழிலும் சுரங்கமும்...	81·5 (9)	227·3 (26)	279·3 (31)	588·1 (66)	301·9 (34)
4. கடத்து சாதனங்களும் தொடர்பு வசதிகளும்	217·5 (16)	286·7 (21)	283·9 (20)	778·1 (57)	606·9 (43)
5. சமூகப் பணிகள் ...	88·0 (9)	106·7 (11)	143·6 (15)	338·3 (35)	606·7 (65)
6. பலவகை	14·9 (15)	16·7 (17)	20·7 (21)	52·3 (53)	46·7 (4)
மொத்தம் ...	633·4 (13)	884·2 (18)	1001·4 (21)	2519·0 (52)	2281·0 (48)

வில் அதிகம் குறைந்துவிட்டது. இவை விரைவில் பலனளிக்கக் கூடிய முதலீட்டினங்கள். இவற்றை நிறைவேற்றினால் மக்களின் கூட்டுறவு கிடைக்கும். ஏனெனின், இத்தகைய முதலீட்டின் நன்மைகள் கிராமத்திலுள்ள சாதாரண மக்களுக்கு நன்கு தெரியும்.

சாதன வருவாயைப் பொறுத்தவரையில், முதல் மூன்றாண்டுகளில் திட்டத்திற்கு நிதியளிப்பில் முக்கிய அம்சம், உள்நாட்டுச் சாதனங்களில் மதிப்பீட்டுத் தொகைக்கும் உண்மையாகக் கிடைத்த தொகைக்கும் உள்ள வித்தியாசம்தான் (அட்டவணை 39). ஐந்தாண்டுகளில் நடப்பு வருவாயிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட ரூ. 1,200 கோடியில், முதல் மூன்றாண்டுகளில் உண்மையாகக் கிடைத்த தொகையின் மொத்த ரூ. 427·5 கோடி அல்லது 36 சதவீதத்திற்கும் குறைவு. மத்திய, இராச்சிய அரசாங்கங்கள் அதிக வரிவிதிப்புமூலம் கூடுமான அளவு மிகுதியான தொகையை வசூலிக்கவேண்டுமென்று செய்த பெரிய முயற்சியின் பயனே இதுவும். இரண்டாம் திட்டத் தொடக்கம்முதல், அரசாங்கத்

அட்டவணை 39

இரண்டாம் திட்டச் செலவும் முதல் மூன்றுண்டுகளில் நிதியளிப்பும்*

(கோடி ரூபாய்களில்)

இனங்கள்	1956–57	1957–58	1958–59	1956–59 மூன்றுண்டுகளுக்கு மொத்தம்	(பழைய) திட்ட மதிப்பீடுகள்	6—5
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1. திட்டச் செலவு	638·8	845·9	981·4	2466·1	4800	2333·9
2. உள்நாட்டுச் சாதனங்கள்—						
(a) கடப்பு வருவாயிலிருந்து எஞ்சியது	145·4	155·7	126·4	427·5	1200	722·5
(b) இரயில்வேக்களின் பங்கு அளிப்பு	34·1	40·0	52·0	126·1	150	23·9
(c) பொது மக்களிடமிருந்து கடன்கள்	145·9	78·1	238·1	462·1	700	237·9
(d) சிறு சேமிப்புகள் ...	58·7	69·6	82·6	210·9	500	289·1
(e) நிலையாக்கப்படாத கடனும் பலவகை முதலின வரவுகளும்	— 22·2	— 87·3	9·4	— 100·1	250	350·1
(a)-லிருந்து (e)-ன் மொத்தம் ..	361·9	256·1	508·5	1126·5	2800	1673·5
3. வெளியுதவி	37·8	95·0	325·0	457·8	800	342·2
4. மொத்தச் சாதனங்கள், 1 முதல் 3 வரை	399·7	351·1	833·5	1584·3	3600	2015·7
5. பட்ஜெட் பற்றுக்குறை 1—4 ...	239·1	494·8	147·9	881·8	1200	318·2

* 1960–61 பட்ஜெட்டில் உள்ள 1958–59-ன் உண்மையான தொகைகளே இந்த அறிக்கையில் சேர்க்கவில்லை. எனவேதான், இந்த அட்டவணையிலும், அட்டவணை 38-லும் கொடுக்கப்பட்டுள்ள மொத்தங்களில் வித்தியாசம் உளது.

(ஆதாரம் : 'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம், முன்னேற்ற அறிக்கை 1958–59, திட்டக் குழு', இந்திய அரசாங்கம்).

தின் வரிக்கொள்கை அபிவிருத்தித் திட்டத்தின் தேவைக்கேற்ப வரியமைப்பை மாற்றியமைக்கவேண்டுமென்பதே. வரி விதிப்பு விசாரணைக் குழு யோசனை கூறியிருந்தபடி, வரியில் பல மாறுதல்கள் செய்யப்பட்டன. வரியின் அடிப்படை விரித்தும் ஆழமாக்கியும்கூட, மத்திய அரசாங்கத்தின் கூடுதல் வரி வரவு எதிர்பார்த்ததைவிட மிகவும் குறைந்துவிட்டது. இராச்சியங்களில், 1956–57-ல் ரூ. 11·6 கோடியும், 1957–58-ல் ரூ. 30·6 கோடியும், அடுத்த வருடத்தில் ரூ. 50·6 கோடியும் அதிக வரிவிதிப்பினால் கிடைத்தன. மத்தியிலும், இராச்சியங்களிலும் அரசாங்கக் கடன்களிலிருந்தும் சிறுசேமிப்புகளிலிருந்தும் கிடைத்த தொகையும் திருப்திகரமாக இல்லை. இந்த இனத்திலிருந்து எதிர் பார்த்த ரூ. 1,200 கோடிக்குப் பதிலாக மூன்றாவது ஆண்டின் இறுதியில் உண்மையாகக் கிடைத்த தொகை ரூ. 673 கோடிதான். இந்தக் கடன்கள் மார்க்கெட்டை மிகவும் துன்பத்திற்குள்ளாக்கின என்பது 1958–59-ல் பல இராச்சிய அரசாங்கங்களின் பத்திரங்கள் கணிசமான அளவுக்கு விலை குறைத்துக் கூறப்பட்டதிலிருந்து விளங்கும். அன்றியும், ரிசர்வ் பாங்கு மூலதன மார்க்கெட்டுக்கு அதிக ஆதரவு கொடுக்கவேண்டியதாயிற்று. சில இராச்சிய அரசாங்கங்கள் தங்கள் பத்திரங்களைத் தாங்களே மறுபடியும் விலைக்கு வாங்கவேண்டியதாயிற்று. அண்மைக் காலத்தில், இந்த இனங்களில் சிறிது முன்னேற்றம் காணப்படுகிறது. குறிப்பாகச் சிறு சேமிப்பில் இது உண்மை. ஆனால், அண்மைக் கால மத்திய அரசாங்கக் கடன்கள், பொதுமக்களிடமிருந்து அதிக ஆதரவு பெறவில்லை.

உள்நாட்டுச் சாதனங்களை மதிப்பிடுவதில் திட்டம் குறிதவறிவிட்டது என்பது இதனால் தெளிவாகிறது. வரிகள், உள்நாட்டுக் கடன், சிறு சேமிப்புகள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் தொகைகளின் மதிப்பீடு அளவுகடந்த நம்பிக்கையினால் ஏற்பட்டதென்று தெரிகிறது. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியாயினும் அல்லாததாயினும், அது அரசாங்கத்தின் வசமுள்ள உள்நாட்டுச் சாதனங்களைத் தானாக அதிகரிக்கச்செய்யும் என்று கொள்வது தவறு. இங்கு மனத்தில் கொள்ளவேண்டிய அடிப்படைக் கருத்து என்னவென்றால், சமூகம் உற்பத்தி செய்வதற்கும் உபயோகிப்பதற்கும் இடையில் உள்ள வித்தியாசம்தான் வரிகள், கடன்கள்மூலமாகப் பெறக்கூடிய தொகையாகும். வருமானம் உயர்ந்தால் இந்த வித்தியாசமும் உயரும் என்பதில்லை. பொருளாதார வளர்ச்சியில் வருமானம் உண்டாக்கப்படும். ஆனால், அதே சமயத்தில் அவ் வளர்ச்சியால், சேமிப்பு குறைந்து போகும்படியாகப் பங்கீட்டு முறை மாற்றப்படலாம். வரி

விதிப்பின் இறுதிநிலை விகிதம், அதை அதிகரிப்பதன் அவசியம், மக்களின் துய்ப்பு மனப்பான்மையைக் குறைத்து வைத்தல் ஆகியவற்றைப்பற்றிப் பலரும் நிறைய கூறியிருக்கிறார்கள். இப் படிக் கூறுவதன் நோக்கம் என்னவென்றால், வளர்ச்சியினால் வரு மானம் உயர்வதால், முதலீட்டுக்காக இந்த உயர்வின் பெரும் பகுதியை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் பொரு ளாதார வளர்ச்சியின் வேகம் அதிகமாகும் என்பது, இந்த ஐந்தாண்டுகளில் வருமானம் 25 சதவீதம் அதிகரிக்கும் என்றும், துய்ப்பு 21 சதவீதம் அதிகரிக்கும் என்றும், ஆகவே திட்ட ஆரம் பத்தில் தேசிய வருமானத்தில் 7 சதவீதமாக இருந்த சேமிப்பு அதன் முடிவில் 10 சதவீதமாக உயர்த்தப்படக்கூடும் என்றும் கணக்கிடப்பட்டது. உண்மையில், திட்டத்தின் முதல் மூன்றாண்டு களில் உண்மையான வருமானம் 10 சதவீதம்தான் உயர்ந்தது. தேசிய வருமானத்தில் ஒரு பகுதியாகிய வரிவசூல், 1955–56–ல் 7·6 சதவீதமாக இருந்து 1957–58–ல் 9·2 சதவீதமாக உயர்ந்தது.

இத் திட்டத்தின் வெற்றிக் கூறு, உண்மை வருமானத்தின் உயர்வு விகிதத்தைமட்டுமன்றி, முதலீட்டின் தன்மையையும் பங்கீட்டு விளைவுகளையும் பொறுத்திருக்கிறது. இரண்டாம் திட்டத்தில் அரசாங்கத் தொழில்துறை மிகவும் பெருகியுள்ளது. தனியார் துறையில் செய்யப்படும் முதலீடு, அரசாங்கத துறை முதலீட்டைவிட மிகக் குறுகிய காலத்தில் அதிக வருமானத்தைத் தரக்கூடியது. இந்த இரண்டு துறைகளில் செய்யப்படும் முதலீட் டின் தன்மையைப் பொறுத்து இவ் வித்தியாசம் உண்டாகிறது. தனியார் துறையைவிட அரசாங்கத் துறையில் ஒவ்வோர் உற்பத்தி அலகுக்கும் நிருவாகச் செலவு அதிகமாகிறது என்பது தவிரத் தனியார்துறை முதலீட்டின் பெரும் பகுதி துய்ப்புப் பொருள்களின் அபிவிருத்திக்கும் பெருக்கத்திற்குமே பயன்படு கிறது. ஆகவே, இறுதி உற்பத்திப் பொருள்கள் அதிகரித்து, அவை வாங்குந்திறன் வெளியிடப்பட்டதற்கு ஈடுகொடுக்கின் றன. அரசாங்கத்துறை அடிப்படைத் தொழில்களையும் சமூகப் பொதுச் செலவுகளையுமே தழுவியிருந்தால், தனியார்துறையின் பெருக்கமும் அதனால் உண்டாகும் அதிக உற்பத்தியும் மேலும் அதிகமாக இருந்திருக்கும் என்றும் கூறலாம். இதனாலேயே வரி அடிப்படை விரிந்திருக்கும். இதற்கு மாறாக, அரசாங்க முதலீட் டுக்கு அதிகப் பணவீக்க ஆற்றல் இருப்பதாலும், தனியார் துறையின் வளர்ச்சி ஓரளவேனும் தடுக்கப்பட்டிருப்பதாலும், வளர்ச்சியின் ஆரம்ப நிலைகளில் தேவைக்கேற்ற அளவு வரி அடிப்படை உதவாமல்தான் இருக்கமுடியும்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கையால் ஏற்பட்ட கொள்கைகளும் இதேமாதிரிதான் முடிந்திருக்கின்றன. அயல் நாட்டுக் கொடுப்பல் நிலை காரணமாக விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் சுங்கத் தீர்வையைப் பாதித்தன. கலால் வரி விதிப்பினால் இந்தக் குறைவு நீக்கப்படவில்லை. பற்றுக்குறை நிதியாக்கத்தினால் உண்டாகும் பணவீக்கம் கட்டாயச் சேமிப்பை உண்டாக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. இம்மாதிரி சேமிப்பு உண்டாகாவிட்டால், மக்களிடமுள்ள பணத்தைக் கடன் வாங்குவதனாலும் சிறு சேமிப்பினாலும் திரட்டமுடியும் என்று கருதப் பட்டது. ஆனால், இந்த இனங்களிலும் இப்பொழுது இலக்கை அடையமுடியவில்லை என்பது இப்போது தெளிவாகிவிட்டது. இதற்குக் காரணம், இத்தகைய தனியார் சேமிப்புகளில் ஒரு பகுதி பாங்குகளிலும் தொழில்களிலும் தஞ்சம் புகுகிறது மற்றொரு பகுதி நிலத்திலும் வீடு கட்டுவதிலும் முதலீடு செய்யப் படுகிறது. நாட்டில் நகரப் பகுதிகளில் எங்கும் நிலத்தை ஊக வாணிகமுறையில் கேட்டு வாங்குதலும், கட்டடம் கட்டுவதில் தனியார் அதிகமாகச் செலவிடுவதும், நாட்டுப் பொருளாதாரக் கண்கொண்டு பார்க்கும்போது, உள்நாட்டுச் சாதனங்கள் எந்த அளவுக்கு உற்பத்தியல்லாத வழிகளில் முதலீடு செய்யப்படு கின்றன என்பதைக் காட்டுகின்றன.

உள்நாட்டில் சாதனங்கள் அளவாக இருக்கும்போது, வெளி நாட்டு நிதியும் பற்றுக்குறை நிதியளிப்புந்தாம் வேறு வழிக ளாகும். திட்டத்தில் ஐந்தாண்டுகளுக்கு ரூ. 1,375 கோடி அயல் நாட்டு வாணிபப் பற்றுக்குறை உண்டாகுமென்று மதிப்பிடப் பட்டது. ஆனால், படிப்படியாக ஏற்றுமதி குறைந்துகொண்டும், இறக்குமதிகள் அதேபோல அதிகரித்துக்கொண்டும் வந்ததால், வாணிபப் பற்றுக்குறை, 1955-56-ல் ரூ. 109·5 கோடியாயிருந்து, 1956-57-ல் ரூ. 464·3 கோடியாகவும், 1957-58-ல் ரூ. 609·5 கோடி யாகவும் பெருகியது. 1958-59-ல் அது ரூ. 470·4 கோடியாகச் சிறிது சுருங்கியது. அதுமுதலாக, வெளிக்கடன்களும் உதவி களும் கிடைத்து, நெருக்கடி தளர்ந்திருக்கிறது. ஆனால், திட்டத் தின் முதல் மூன்றாண்டுகளில் நிலைமை மிகவும் கடுமையாக இருந் தது. 1956-59ஆம் ஆண்டுகளில் அந்நியச் செலாவணிக் காப்பு நிதியிலிருந்து ரூ. 522·9 கோடி எடுக்கவேண்டியதாயிற்று. உள் நாட்டில் பற்றுக்குறை நிதியாக்கத்தினால் உண்டான அதிகத் தேவையினால்தான் வெளிநாட்டுக் காப்புநிதி நெருக்கடி பெரும் பாலும் ஏற்பட்டது. திட்டக் குழுவின், 'திட்டத்திற்கான சாதனங்களும் செலவீட்டு மதிப்பும்—பரிசீலனை' என்ற அறிக் கைப்படி, முதல் மூன்றாண்டுகளில் மொத்தச் செலவாகிய ரூ. 2,466

கோடியில் 46 சதவீதம் உள்நாட்டுச் சாதனங்களும், 19 சதவீதம் வெளி உதவியும், 35 சதவீதம் பற்றுக்குறை நிதியாக்கமும் ஆகும். மத்திய, இராச்சிய அரசாங்கங்களின் மொத்தப் பற்றுக்குறையாகிய ரூ. 900 கோடியில், பெரும்பகுதி (ரூ. 830 கோடி) அரசாங்கம் ரிசர்வ் பாங்கியிலிருந்து பெற்ற குறுங்காலக் கடனாலும், ஒரு சிறிய பகுதியாகிய ரூ. 70 கோடி ரொக்க இருப்பிலிருந்து எடுத்தும் சரிசெய்யப்பட்டன. ஆக, முதல் திட்டத்தில் மொத்தச் செலவில் ஐந்தில் ஒரு பங்கு பற்றுக்குறை நிதியளிப்பாக இருக்க, இரண்டாம் திட்டத்தின் முதல் மூன்றாண்டுகளிலேயே, மொத்தத்தில் மூன்றில் ஒரு பங்கு இந்த முறையில் ஆக்கப்பட்ட நிதியாகும்.

முதலீட்டுக்காக மூன்றாண்டுகளில் இந்த அளவு பற்றுக்குறை நிதியாக்கம் செய்தது, பொருளாதார அமைப்பில் பணவீக்கத்தைக் கட்டாயம் உண்டுபண்ணும். முதல் திட்ட முடிவிலிருந்தே மக்களிடமுள்ள பணத்தின் அளவில் உயர்வும், அதையொட்டி விலையளவில் உயர்வும் இருந்துவருகின்றன. ஆகவே, கடைசி இரண்டு அல்லது மூன்றாண்டுகளில் பொருளாதார அமைப்பில் உண்டான பணவீக்க நெருக்கடியின் அளவையும், அபிவிருத்திக்காக நிதி எழுப்பும் முறைகளால் இந்த நிலைமை எவ்வாறு உண்டாயிற்று என்பதையும் ஆராய்வது பொருத்தமானது.

இந்தியப் பொருளாதாரத்தில் பணவீக்க நெருக்கடி

1956 ஏப்ரலுக்கும் 1960 ஜூனுக்கும் இடையில் மொத்த விற்பனை விலையின் பொதுக் குறியீட்டெண் (1952–53 = 100), 100·0 -லிருந்து 122·9-க்கு 23 பாயின்டுகள் உயர்ந்தது. விலையளவில் ஏற்றம் உண்டாவதற்கு அடிப்படைக் காரணம், பொருள் அளிப்புக்கும் தேவை அதிகரிப்புக்கும் உள்ள தொடர்பே என்று கூற வேண்டும். ஆகவே, பொருளாதார அமைப்பில் உள்ள பணவீக்க நெருக்கடியை மதிப்பிடுவதற்குப் பொதுவான நம்பத்தக்க வழி, அதிகத் தேவையின் அளவையும் தன்மையையும் கண்டுபிடிப்பதே. ஒரு குறிப்பிட்ட காலத்தில் பொருளாதாரத்தில் உண்டாகும் மொத்தத் தேவையானது, அரசாங்கச் செலவுகள், தனியார் முதலீடு, துய்ப்புச் செலவு, நடப்புக் கணக்கில் அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில் உள்ள உபரி ஆகியவற்றின் மொத்தமாகும். அரசாங்கச் செலவானது அரசாங்கத்தின் வரி, வரியல்லாத வருவாய்கள், பட்ஜெட் பற்றுக்குறைவு ஆகியவற்றின் மொத்தத்திற்குச் சமம். சாதாரணமாகக் குறுகிய காலத்தில், அரசாங்கத்தின் வரி, வரியல்லாத வருமானங்கள், தனியார் துய்ப்புச் செலவுகள் ஆகியவை அதிகம் மாறுவதில்லை. அவை நாட்டின் மொத்த ஆக்கத்தில் ஏறக்குறைய மாறுத ஓர் அளவைக் குறிக்கும். ஆனால்,

மற்ற அம்சங்களாகிய அரசாங்க பட்ஜெட் பற்றுக்குறை, தனியார்துறையில் முதலீட்டுச் செலவு, நடப்புக் கணக்கில் நாட்டின் உபரி ஆகியவை ஆண்டுதோறும் மாறும். ஆகையால், எப்பொழுதும் பொருளாதார அமைப்பில் அதிகத் தேவையைப் பொதுவாக அரசாங்கத்தின் பற்றுக்குறை, தனியார் முதலீட்டளவில் மாறுதல், நடப்புக் கணக்கில் நாட்டின் உபரி ஆகிய வற்றிற்குச் சமமாகக் கொள்ளலாம். இந்த மூன்று இனங்களில் உண்டாகும் மாறுதல், முறையே அரசாங்கக் கடனில் மாறுதல்கள், பாங்குச் செலாவணியில் மாறுதல்கள், வெளிநாட்டுச் செலாவணிக் காப்புநிதியில் உண்டாகும் மாறுதல்கள் ஆகிய வற்றில் அநேகமாகச் சரியாகக் குறிக்கப்படும். ஆகவே, இந்த இனங்களில் கிடைக்கும் விவரங்களைக்கொண்டு, பொருளாதாரத்தில் உண்டாகும் அதிகத் தேவையின் அளவை ஒருவாறு மதிப்பிடலாம். அட்டவணை 40-ல் உள்ள 1955–56 முதல் இந்தியாவிற்கான விவரங்கள், நாட்டின் நிலையை ஒருவாறு காட்டுகின்றன.

அட்டவணை 40

1955–56 முதல் 1959–60 வரை அரசாங்கப் பற்றுக்குறை, பாங்குச் செலாவணி, வெளிநாட்டுச் செலாவணிக் காப்புநிதி

(கோடி ரூபாய்களில்)

வருடம்	அரசாங்கப் பற்றுக்குறை	பாங்குச் செலாவணி	வெளி நாட்டுச் செலாவணிக் காப்புநிதி
1955–56	184	761	825
1956–57	306	900	681
1957–58	496	963	421
1958–59	331	1014	379
1959–60	268	1128	363

(ஆதாரம்: 'Reports on Currency and Finance,' Reserve Bank of India.

அரசாங்கப் பற்றுக்குறையானது, அரசாங்கத்திற்கு ரிசர்வு பாங்கு அளிக்கும் கடனையும், பாங்குகள் அரசாங்கப் பத்திரங்களில் செய்யும் முதலீட்டையும் குறிக்கும்.[1] பாங்குச் செலாவணியில்,

[1] மக்களோடு அரசாங்கம் நடத்தும் கொடுப்பல்வாங்கல்களில் அரசாங்கப் பற்றுக்குறை, பாங்குச் செலாவணியினுல் ஈடுசெய்யப்படுகிறது. இது பண அளிப்பின்மீது உண்டாக்கும் விளைவைப் பொறுத்து, இதில் ரிசர்வ் பாங்கு அரசாங்கத்திற்கு அளிக்கும் கடன்மட்டுமன்றி (இது பெரும்பாலும் இப் பாங்கு அரசாங்கப் பத்திரங்களை வாங்குதல், தற்கால கஜானா உண்டியல்களை வாங்குதல், அரசாங்கத்திற்குக் கடனையும் முன்பணத்தையும் வழங்குதல்போன்றவையாகும்), பாங்குகள் அரசாங்கப் பத்திரங்களில் செய்யும் முதலீடும் அரசாங்க இருப்புகளில் மாறுதலும் அடங்கும். Reserve Bank of India, 'Reports on Currency and Finance', 1958–59, p. 26.

வாங்கப்பட்ட உண்டியல்கள், கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் ஷெட்யூல் பாங்குகள் கொடுத்த கடன்கள் ஆகியவை அடங்கும். இந்த விவரங்கள், 1955–56, 1957–58 ஆண்டுகளில் அரசாங்கத்தின் பற்றுக்குறைச் செலவு வேகமாக அதிகரித்துப் பிந்திய ஆண்டுகளில் குறைந்தது என்பதைக் காட்டுகின்றன. பாங்குச் செலாவணியில் படிப்படியான பெருக்கம், ஐந்தாண்டுகள் முழுவதிலும் தனியார்துறையில் மூதலீடு அதிகரித்திருப்பதைக் காட்டுகிறது. இவை இரண்டும் சேர்ந்து, தேவையைக் கணிசமாக அதிகரித்திருக்கின்றன. எனினும், வெளிநாட்டுச் செலாவணிக் காப்பு நிதியில் தொடர்ச்சியான குறைவு, பொருளாதாரத்தில் இருந்த பணவீக்க நெருக்கடியைக் குறைக்க உதவியிருக்கவேண்டும்.

பணம் புழங்கும் வேகம் அதிகரிப்பதாலும், பணத்தின் அளவு அதிகரிப்பதாலும், அல்லது இவ்விரண்டினாலும் அதிகத் தேவை ஆற்றல் பெறுகிறது. அரசாங்கத்துறையில் தனியார் வியாபாரத்துடன் போட்டியிட்டால், அரசாங்கம் முதலீட்டிற்காக அதிகச் சொத்து சாதனங்களைப் பெறமுடியும். அரசாங்கத்தின் நடப்பு வருமானத்தைவிட அதன் தேவை அதிகமாகவிருந்தால், அது நாட்டிலுள்ள சொத்து சாதனங்களை வெற்றிகரமாகக் கேட்டுப் பெறுவதற்குப் பணத்தை உண்டாக்கவேண்டியிருக்கும். அரசாங்கம் மத்திய பாங்கிடம் கடன் கேட்கும்போது இதுதான் நிகழ்கிறது. ஏனெனின், மத்திய பாங்கு அரசாங்கப் பத்திரங்களின்மீது செலாவணித் தாள்களை வெளியிட உரிமை பெற்றிருக்கிறது. ஆக,அரசாங்கத்தின் ரொக்க இருப்பில் உள்ள மாறுதலும், மத்திய பாங்கில் அதன் நிகரமான கடன் வாங்கும் அல்லது கடன் அளிக்கும் நிலையும், வாணிப பாங்குகள் அரசாங்கப் பத்திரங்களை வைத்திருப்பதும் இந்த விதத்தில் நிதியளிக்கும் அளவைப் பொதுவாகக் காட்டுவதோடன்றி, பண அளிப்பு எந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறது என்பதையும் காட்டும். தனியார் துறைக்கு பாங்குகள் கடன் கொடுப்பது, ஒருவிதத்தில் தனியார் துறை பற்றுக்குறை நிதியாக்கம் செய்வதுபோலவேயாகும். அது மேலும் பண அளிப்பு பெருகுவதற்கு உதவுகிறது. இக் காரணத்திற்காக, அரசாங்கமும் தனியார்துறையும் சேர்ந்து வாணிப பாங்குகளிலிருந்து கடன் வாங்குவதை நாம் கணக்கில் கொள்ள வேண்டும். வாணிப பாங்குகளில் அரசாங்கப் பத்திரங்கள் அதிகரித்துத் தனியார்துறைக்கு அளிக்கப்படும் பாங்குக்கடன்கள் குறைந்தால், அந்த அளவுக்குப் பண அளிப்பின்மீது அவற்றின் விளைவு ஒன்றுமில்லாமல் இருக்கும். பணப் பெருக்கத்திற்கு மற்றொரு காரணம் அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையின் உபரி

யாகும். பண அளிப்பின் அதிகத் தேவையின் விளைவை மதிப்பிடுவதற்கு இந்த மூன்று அம்சங்களையும் கவனிக்கவேண்டும். ஆகையால், 1955–56-ல் மக்களிடமிருந்த பணத்தின் அளவு ரூ. 2,200 கோடியிலிருந்து 1960–ன் மத்தியில் ரூ. 2,700 கோடியாக, அதாவது, 23 சதவீதம் உயர்ந்தது. அரசாங்கத்தின் பட்ஜெட் பற்றுக்குறையின் பணப்பெருக்க ஆற்றல், தனியார் துறைக்கு பாங்குகள் அளிக்கும் செலாவணிப் பெருக்கம், வெளி நாட்டுக் காப்புநிதிக் குறைவின் சுருக்க ஆற்றல் ஆகிய இம் மூன்றின் நிகரமான விளைவேயாகும்.

எனினும், பொருளாதார அமைப்பில் மொத்தப் பண அளிப்பு, பணவருவாய் கிடைப்பதைப் பொறுத்து இருக்க வேண்டுமென்பதில்லை. பண அளிப்புப் பெருகினாலும், மக்கள் பணப் பதுக்கலை அதிகரித்தால், விலைகள் சிறிதும் பாதிக்கப்படமாட்டா. இதற்கு மாறாக, பணத்தின் அளவில் பெருக்கமில்லாவிட்டாலும், பணப் புழக்கத்தின் வேகம் அதிகரிப்பதனாலோ, மக்களின் ரொக்க விருப்பத்தினாலோ, அதிகத் தேவை ஆற்றல் பெறமுடியும். தன்னுடைய பெரிய முதலீட்டுச் செலவுகளுக்குப் பணமளிக்கும்போது, அரசாங்கம் அதிகப் பணத்தைப் புழக்கத்திற்கு விட்டால், ஆரம்ப நிலையில் விலைகள் அதே அளவுக்கு உயரமாட்டா. விலையேற்றம் தற்காலிகமானதே என்று மக்கள் நினைத்தால், அவர்கள் தம்மிடமுள்ள அதிகப் பணத்தைச் சேமித்து வைப்பார்களேயன்றிச் செலவிடமாட்டார்கள். ஆனால், பிறகு அவர்கள் மனநிலை மாறி, எதிர்காலத்தில் பணத்தின் மதிப்பு இன்னும் குறைந்துவிடும் என்று அஞ்சிச் செலவிடத் தொடங்கினால், பண அளிப்புப் பெருக்கத்தினாலும், ரொக்க விருப்பம் குறைவதாலும், விலைகளின் ஏறுமுகம் மேலோங்கும், ஆகவே, பணத்தின் அளவு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அதிகரித்திருக்கிறதென்றால், அதன் பணவீக்க ஆற்றலை மதிப்பிடும்போது, ரொக்க விருப்ப அம்சத்தையும் நாம் மனத்தில் கொள்ள வேண்டும்.

புழக்கத்தில் உள்ள பணத்தின் அளவுக்கும் பண வருமானத்திற்கும் உள்ள விகிதமே ரொக்க விருப்பம் என்று குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாகத் தேசிய வருமானம் ரூ. 10,000 கோடி என்றும், பணஅளிப்பு ரூ. 2,000 கோடி என்றும் கொண்டால், பணப் புழக்கத்தின் வேகம் 5, ரொக்க விருப்பம் $\frac{1}{5}$. நம் நாட்டில் பணம்பற்றிய புள்ளிவிவரங்கள் விரிவாகவும் இன்றளவும் கிடைத்துள்ளன. ஆனால், தேசிய வருமானப் புள்ளிவிவரங்கள் நீண்டகாலம் கழித்துத் தொகுக்கப்படுவதால், மேற்கூறிய முறையில் மக்களின் ரொக்க விருப்பத்தைக் கணக்கிடுவது சரியா

காது. எனினும், பண அளிப்பு அதிகரிப்பின் ஆண்டு விகிதத்தை, விலையேற்றத்தின் ஆண்டு விகிதத்தோடு ஒப்பிட்டு, ஒரு குறிப்பிட்ட காலத்தில் ரொக்க விருப்பத்தில் ஏதேனும் மாற்றம் உண்டா என்பதையறியலாம். பண அளிப்பைவிட விலையதிகரிப்பு விகிதம் உயர்ந்திருந்தால், ரொக்க விருப்பம் குறைந்திருக்கிறது என்றும், முன்னையதைவிடப் பின்னது குறைந்திருந்தால் ரொக்க விருப்பம் அதிகரிக்கிறது என்றும் பொருள். அட்டவணை 41-ல் உள்ள விவரங்கள் இவ் விஷயத்தை விளக்கும்.

அட்டவணை 41

விலையளவிலும் பண அளிப்பிலும் வேறுபாடுகள்

	1952–53	1953–54	1954–55	1955–56	1956–57	1957–58	1958–59	1959–60
சில்லரை விலைக் குறியீட்டெண்	100	101·2	89·6	99·2	105·1	106·1	112·1	118·6
பண அளிப்புக் குறியீட்டெண்	100	101·7	108·3	123·8	131·1	135·4	141.6	153.1

அண்மை ஆண்டுகளில் விலைக்குறியீட்டெண்ணும் பண அளிப்புக் குறியீட்டெண்ணும் 1955–56 முதல் பண அளிப்பிலும் விலையளவு அதிகரிப்பு விகிதம் அதிக வேக வளர்ச்சியடைந்திருப்பதைக் காட்டும். 1957–58, 1958–59 ஆண்டுகளுக்கிடையில், பண அளிப்பைவிட விலைகள் அதிக விகிதத்தில் உயர்ந்தன. டெபாசிட் பணத்திற்கும் மாதாந்தரச் செக் தீர்வுக்கும் உள்ள விகிதம் 1957 அக்டோபரில் 1·3-லிருந்து 1958 மார்ச்சில் 0·9-க்கும் 1960 மார்ச்சில் 0·7-க்கும் கீழே இறங்கியது நாட்டில் பணப்புழக்கத்தின் வேகம் அதிகரித்து வருவதற்கு மற்றொரு சான்றாகும்.

காரணி விலைகளின் இயக்கம்

அதிகத் தேவை இருப்பதும், பணப்புழக்கத்தின் வேகம் அதிகரித்திருப்பதும், மக்களின் ரொக்க விருப்பம் குறைந்திருப்பதும், இந்தியப் பொருளாதாரத்தில் பணவீக்க நெருக்கடி இருப்பதற்கு ஒருவாறான அடையாளங்களாகும். இக்கருத்தை வலியுறுத்தும் வேறு சில அடையாளங்களையும் கூடக் காணலாம். அவற்றுள் ஒன்று, குறிப்பிட்ட பொருள்களின் விலைகளின் போக்கு. பணவீக்கம் சுறுசுறுப்பான தன்மையுடையது. ஒரு குறிப்பிட்ட

காலத்தில் ஏதாவது ஒருபொருள் அல்லது தொகுதியானபொருள் களின் விலை, அப் பொருள்களின் அளவு தற்காலிகமாகக் குறைவ தாலோ, அவற்றிற்கு எதிர்பாராத கிராக்கி ஏற்படுவதாலோ உயரலாம். சில பொருள்களின் விலையுயர்வு அவை தொடர்ந்து குறைவாயிருப்பதனாலும், உற்பத்திச் செலவைஅதிகரிப்பதனாலும் உண்டாகுமாயின் அவ் விலையுயர்வு நிலைத்துவிடக்கூடும். அன்றி யும் நாளாவட்டத்தில் வேக வளர்ச்சியையும் அடையக்கூடும். இம்மாதிரி விலையுயர்வுதான் பணவீக்க வகையைச் சேர்ந்தது. இக் காரணத்திற்காகப் பணவீக்கத்தை ஆராய்வதில் காரணி விலைகள் குறிப்பாக முக்கியமானவை:

ஊழியத்திற்காகக் கொடுக்கப்படும் விலைதான் கூலி. பண வருவாய் அதிகரித்துத் துய்ப்புப் பொருள்களின் விலையும் வாழ்க் கைச் செலவும் உயரும்போது பொதுக் கூலியளவும் உயருகிறது. கொள்கையளவில் கூலிக்கும் விலைகளுக்கும் இடையில் அதிக வித்தியாசம் இருப்பதாகக் கூறுவார்கள். விலைகளுக்கேற்பக் கூலி எந்த அளவுக்கு உயரவில்லையோ, அந்த அளவுக்குப் பணவீக்கம் உயர்ந்திருக்கிறது என்று பொருள். விலையுயர்வையும் வாழ்க்கைச் செலவு உயர்வையும்விடக் கூலி உயர்வு குறைந்திருந்தால், உண்மையான கூலி குறைந்திருக்கிறது என்று கூறவேண்டும். இது பணவீக்கத்தினால் உண்டான கட்டாயச் சேமிப்பாகும். ஆனால், பணக்கூலியும் விலைகளும் வித்தியாசமின்றிச் சென்றாலும், கூலி அதிகமாக இருந்தாலும், அப்போது பணவீக்கம் வளர்ச்சி யடைந்துவிட்டது என்பது உறுதி. அண்மைக் காலத்தில் இந்தி யாவில் தொழிலாளர் அதிகக் கூலி (பண வருமானம்) வேண்டுமென்று இடைவிடாமல் கேட்டு வருகிறார்கள். ஆனால், வியாபாரிகள், அதிகக் கூலியும் அதிக உற்பத்திச் செலவும் செய் பொருள்களின் அதிக விலைக்குக் காரணமாகின்றன என்கிறார்கள். பம்பாயில் பிற தொழிலாளர்களின் துய்ப்புப் பொருள் விலைக் குறியீட்டெண்ணைப் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய பண வருமானத்துடன் ஒப்பிட்டால்,[1] அண்மைக் காலத்தில் வாழ்க் கைச் செலவைப் பண வருமானம் விரைவாக எட்டிப்பிடித்து வருகிறது என்பது தெரியும். ஆனால், பண வருமானம் வாழ்க்கைச் செலவை அதிகரித்து வருகிறது என்பதற்குப் போதிய சான் றில்லை. எனவே, இந்தியாவில் கூலி செல்லும் விகிதத்தைப் பார்த்தால் அது பணவீக்கத்தின் விளைவா, அல்லது பணவீக்கத் திற்குக் காரணமா என்று விளங்காத நிலை ஏற்பட்டிருப்பது தெரியும்.

'Indian Finance', 18th Octobe. 1958.

ஊகவாணிகத்திற்காகச் சரக்கைச் சேமிப்பதும் அதிகரித்து வருகிறது. அரசாங்க இறக்குமதி ஏற்றுமதிக் கொள்கையில் மாறுதல்களும், துய்ப்புப் பொருள்களின் அளவில் குறைவு உண்டாகுமென்ற அச்சமும், வியாபாரிகளின் பொதுவான போக்கும் ஊகவாணிகப் பதுக்கலுக்கு உதவியாக இருக்கின்றன. ஆனல், உண்மையான காரணம், போதிய அளவு பொருள் அளிப்பு இன்மையாலும், பொருளாதார அமைப்பில் அதிகம் செலவு செய்யப்படுவதாலும், மேலும் விலைகள் ஏறும் என்று எதிர்பார்ப்பதும்தான். எனினும், பதுக்கலில் சரக்குகளே இருப்பு வைப்பதற்கு முதலீடு செய்யப்படும் பணத்திற்கு வட்டி கணக்கிட்டு அதைச் செலவாகக் கருதவேண்டியிருக்கிறது. ஆகவே, வட்டி விகிதத்தைவிட எதிர்பார்க்கப்படும் விலை அதிகமாக இருந்தால் ஒழியப் பொருள்களைச் சேமித்துவைக்கும் போக்கு உண்டாகாது. வியாபாரிகள் கொடுக்கவேண்டிய வட்டி விகிதம் 6 சதவீதமாயும், அவர்கள் பதுக்கும் பொருள்களின் விலையேற்றம் 4 சதவீதமாயும் ஓராண்டில் இருந்தால் உண்மையான வட்டி வீதம் 2 சதவீதம் தான். இந்த வட்டிவீதம் குறையக் குறைய, ஊகவாணிபப் பதுக்கல் அதிகமாகும். நம் நாட்டில் அண்மைக் காலத்தில் விலையளவுகளும் வட்டி விகிதங்களும் உள்ள நிலையைப் பார்த்தால், இந்தவிதமான நடவடிக்கைக்குச் சாதகமான நிலை இருப்பதாகக் கூறவேண்டும்.

நம் பொருளாதாரத்தில் முக்கியமாகப் பணவீக்க வளர்ச்சியை உண்டாக்குவதற்குரிய வேறு விலைகளும் உள்ளன. சாதாரண உழைப்பாளியின் வருமானத்தில் 70 சதவீதம் செலவழிக்கப்படும் உணவுப் பொருள்களின் விலைகள் அவற்றில் ஒன்றாகும். இவற்றில் ஏற்றம் உண்டானல், கூலியளவு உயரவேண்டும். இது உற்பத்திச் செலவைப் பாதித்துச் செலவு ஏற்ற வகைப் பணவீக்கத்தை உண்டாக்குகிறது. கடந்த சில ஆண்டுகளில் உணவுப் பொருள்களின் விலைகள் படிப்படியாக உயர்ந்து வருகின்றன. உணவுப் பொருள்களின் விலைக் குறியீட்டெண் (1952–53 = 100), 1955–56-ல் 94·6ஆயிருந்து, 1959–60-ல் 116·5-க்கும், 1960 ஜூன் இறுதியில் 120·3-க்கும் உயர்ந்தது. நான்காண்டுகளில் இது 23 சதவீத உயர்வாகும். இதோடு 1957–58 முதல் தொழில் கச்சாப்பொருள்களின் விலையிலும் அதிக உயர்வு காணப்படுகிறது. 1957-58-ல் இது 112·9ஆக இருந்து, 1960 மேயில் 142·0ஆக உயர்ந்தது. இது கூலி உயர்வுடன் சேர்ந்து உற்பத்திச் செலவைக் கணிசமாக அதிகரித்துள்ளது.

அரசாங்கச் செலவில் உயர்வு நிகரத் தேவையை அதிகரித்திருக்கிறது. அதற்கேற்ப உற்பத்தி உயரவில்லை. இந்த நிலையில்

உணவுப் பொருள் அளிப்பும் தொழில் கச்சாப்பொருள் அளிப்பும் மிக முக்கியமானவை. நம் நாட்டில் 1957-58-ல் விவசாய உற்பத்தி குறைந்தது. 1958-59-ல் சிறிது உயர்ந்தது. அது இரண்டாம் திட்டத்தின் முதல் ஆண்டில் இருந்ததைவிடச் சிறிதளவே முன்னேற்றமாகும். இதுபோலவே மற்ற விவசாயப் பொருள்களும் தொழில் கச்சாப்பொருள்களும். தொழில் உற்பத்திக் குறியீட்டெண், 1956-க்கும் 1958-க்கும் இடையில் 132·6-லிருந்து 139·7-க்கு 7 பாயின்டுகள் மட்டும் உயர்ந்தது (1951 = 100). ஆனால், 1959 ஜனவரியில் 149·4-க்கு உயர்ந்தது மொத்தத்தில் அளிப்பில் பற்றுக்குறைதான் நாட்டில் பொது வான, விலையளவு ஏறுவதற்குக் காரணம் என்று கூறவேண்டும்.

ஆகவே, நம் பொருளாதாரத்தில் பணவீக்கத்திற்கான நிச்சயமான அறிகுறிகள் உள்ளன. இந்தச் சமனறு நிலைக்கு முக்கியக் காரணம், அபிவிருத்திக்காக நிதியளிக்கும் முறைதான். இந்தியாவில் இப்போதுள்ள விலையேற்றம் கொரியப் பொருளாதார வீக்கத்தின்போது இருந்ததிலிருந்து மாறுனது என்பது ஒரு முக்கியமான விஷயம். 1950-51-ல் திடீர் விலையேற்றம் வெளிக் காரணத்தினால் உண்டானது. ஆனால், இப்போதுள்ள விலையேற்றத்திற்குக் காரணம் உள்நாட்டு நிகழ்ச்சிகளே. மேலும், பத்து வருடங்களுக்கு முன் உண்டான பொது விலையேற்றத்தில் செய் பொருள்களே முக்கியத்துவம் பெற்றன. ஆனால், இப்போதோ உணவு விலையேற்றமும், தொழில் பொருள்களின் விலையேற்றமும் முன்னணியில் நிற்கின்றன.[1] இந்தவகையான விலையேற்றத்தில் உள்ள அபாயத்தைக் குறைத்து மதிப்பிடக்கூடாது.

பற்றுக்குறை நிதியாக்கம் ஒரு வரம்புக்குட்பட்டு இராவிட்டால் அபாயமான பணவீக்க நிலையை உண்டாக்கிவிடும் என்ற காரணத்தினால்தான் அது எதிர்க்கப்படுகிறது. நடப்புச் சேமிப்பிலிருந்து வரிகள், கடன்கள் மூலமாக வரும் வரவைவிட அரசாங்கம் அதிகமாக முதலீட்டுச் செலவு செய்வதால் பற்றுக்குறை நிதியாக்கத்தினால் பண வருமானம் பெருகுகிறது. இந்த நிதியாக்க முறையில் பண வருமானத்தைவிட உண்மையான வருமானம் குறைவதால் பணவீக்க விளைவு உண்டாகிறது. முதலீட்டுச் செலவு பொருள்களாகவும் பணிகளாகவும் மாறித் துய்ப்போருக்குக் கிடைக்க அதிக காலமாகும். மேலும், அதிகம் செலவழிப்பதால் உண்டாகும் தேவைப் பெருக்கம் சில பண்டங்களையும் மார்க்கெட்டுகளையும் மற்றவற்றைவிட அதிகமாகப்

[1] படம் III, பக். 86 காண்க.

பாதிக்கிறது; உற்பத்திக் காரணிகள் சரியாக இயங்குவதில்லை; பொருளாதாரத்தின் சில பகுதிகளில் கூலிவீக்க அபாயம் உண்டாகிறது; இந்தக் காரணங்களால் பற்றுக்குறை நிதியாக்கத்தினால் உண்டாகக்கூடிய பணவீக்க நெருக்கடி மேலும் அதிகமாகிறது. இதனால்தான், பற்றுக்குறை நிதியாக்கத்தின் விளைவாகிய பணப் பெருக்கம், முழு அளவு வேலை கிடைப்பதற்கு முன்பே விலை யுயர்வை உண்டாக்கிவிடுகிறது.[1] இந்த அபாயம் வளர்ச்சி யடைந்த நாட்டைவிட வளர்ச்சி குன்றிய நாட்டில் அதிகம்.[2] எனினும், அந்த அபாயம் வராமலிருப்பதற்கு இப் பிரச்சினை சம்பந்தமான இரண்டு முக்கிய விஷயங்களை மனத்தில் கொள்ள வேண்டும். முதலாவது, பொருளாதார வளர்ச்சிக்காகச் செய் யப்படும் பற்றுக்குறை நிதியாக்கம், போருக்காகச் செய்யப்படுவ தைப்போல அவ்வளவு அபாயகரமானதன்று. ஏனெனின், பிற்கூறியதில் அழித்தல் வேலைக்கே அவ்வாறு செய்யப்படுகிறது. முற்கூறியதில் அது அதிகப் பொருள்களையும் பணிகளையும் உற்பத்தி செய்ய உதவுகிறது. ஆகவே, பண அளிப்புப் பெருக்கத்தின் விளைவுகள் அதிக அளவில் குறைக்கப்படுகின்றன. இரண்டா வதாக, அபிவிருத்திக்காகப் பற்றுக்குறை நிதியாக்கம் செய் வதிலும் விலையேற்றம் உண்டாகக் கூடுமாயினும், பொருளா தாரத் தேக்கம், பின்தங்கிய நிலை ஆகியவற்றைவிட அதுவே மேலானது என்று கருதவேண்டும். இக் குறைகளை நீக்குவதற்கே பற்றுக்குறை நிதியாக்கம் செய்யப்படுகிறது.

பொருளாதார அமைப்பில் சோம்பிக் கிடக்கும் சாதனங்கள் இருக்கும் வரையில், பற்றுக்குறை நிதியாக்கம், பண அளிப்பைப் பெருக்குவதோடு, அதே சமயத்தில் பயனற்றுக் கிடக்கும் சாதனங்களை வெளியே இழுத்துப் பயன்படுத்த உதவுகிறது. அதனால் பொருளாதார நடவடிக்கையின் அளவு உயர்ந்து, உண்மையான வருமானமும் அதிகரிக்கிறது. தொழில்மயமாக் கப்பட்ட முன்னேற்றமான நாடுகளில், மந்த காலத்தில் நிகரத் தேவையை உண்டாக்குவதற்குப் பற்றுக்குறை நிதியாக்கத்தைக் கையாளவேண்டுமென்று கூறப்பட்டு அவ்வாறே செய்யப்பட்டது. அதனால் நாடு நெருக்கடியைத் தவிர்த்தது. அந்த நாடுகளில் உற்பத்திக்கு உதவும் காரணிகள் நன்கு அமைந்திருப்பதால், அதிக முதலீட்டிற்கேற்ப உற்பத்தி எளிதில் பெருகுகிறது. ஆகவே செலாவணி உற்பத்தியோ பற்றுக்குறை நிதியாக்கமோ அபாய

[1] Seymour E. Harris, 'National Debt and the New Economics, 1947, p. 122.

[2] அத்தியாயம் I, பக். p. 37 காண்க.

மான பணவீக்கத்தை உண்டாக்குவதில்லை. வளர்ச்சியடையாத நாட்டில், பற்றுக்குறை நிதியாக்கத்தினால் பணவீக்கம் உண்டாகாமல் செய்யும் சில அம்சங்கள் உள்ளன. ஆனால், சில எதிரான அம்சங்கள், பற்றுக்குறை நிதியாக்கத்தைப் பொருளாதார ஏற்பாட்டு ரணிக்க முடியாமல் செய்துவிடவும்கூடும் அத்தகைய பொருளாதாரத்தில் திறமையுள்ள தொழிலாளரும் மூலதனமும் இன்மையும், நிலையான வருமானமுள்ளவர்களின் எண்ணிக்கை குறைந்திருப்பதும் (இவர்கள் மூலமாகத்தான் அரசாங்கத்திற்கு அபிவிருத்திக்காக உண்மையான சாதனங்கள் மாற்றிக் கொடுக்கப்படவேண்டும்), துய்க்கும் மனப்பான்மை அதிகமாக இருப்பதும் பற்றுக்குறை நிதியளிப்பில் விலைகள் உயர்வதற்கு உதவியாயிருக்கும். இதற்கு மாறாக, பதுக்கல் பழக்கமும், செலாவணிப் பெருக்கத்திற்கு அதிக வழியின்மையும், விலைகள் தொடர்பு வசதிகள் இன்மையால் எங்கும் ஒரே மாதிரியாக ஏறுமல் இருப்பதும், எதிர்த்திசையில் வேலை செய்யும் அம்சங்களாகும்.[1] பொதுவாகக் கூறினால், பற்றுக்குறை நிதியாக்கத்திலிருந்து அபிவிருத்திக்காகச் செய்யப்படும் செலவின் பணவீக்க விளைவுகள், முதலீட்டுச் செலவுக்கும் அதனால் உண்டாகும் உற்பத்தியதிகரிப்புக்கும் இடையில் உள்ள கால அளவைப் பொறுத்தவை. இந்தக் கால அளவு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு பணவீக்க விலையேற்றம் அதிகமாக இடமுண்டு.

ஆனால், வளர்ச்சி குறைந்த நாட்டில் தேசிய வருமானம் அதிகரிப்பதற்காக ஆண்டுதோறும் அதிக முதலீடுகள் செய்யப்படும்போது, ஓரளவு விலை உயர்வது தவிர்க்க முடியாதது; அது நல்லதும் கூட. அதிக ஏற்ற இறக்கங்கள் இல்லாத ஓரளவு விலையேற்றம், பொருளாதார நடவடிக்கைக்கு ஒரு தூண்டுதல்போல அமையும். மேலும், பொருளாதார அமைப்பில் முதலீட்டளவு அதிகரிக்கும்போது, வரிவிதிப்புமூலம் பெறப்படும் கட்டாயச் சேமிப்போ, சுயேச்சையான சேமிப்போ, அதேயளவுக்கு அதிகரிக்காமல், பற்றுக்குறை நிதியாக்கம் விலைகளை உயருமாறு செய்து, சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கட்டாயச்சேமிப்பு மூலம் அகற்றுவதற்கு உதவுகிறது. ஆனால், ஓர் எல்லைக்குமேல் விலை ஏறுவதைக் கருத்துடன் கண்காணித்துத் தடுக்க வேண்டும். ஏனெனின், அது மாறுத வருமானமுள்ளவர்களுக்கு அதிக துன்பத்தையளித்து, சமூகத்தில் அதிருப்தியை உண்டாக்கி, அபிவிருத்தி முயற்சியையே தடுக்கும்.

[1] F. Benham, 'Deficit Finance in Asia', Lloyds Bank Review, Jan. 1955.

பற்றுக்குறை நிதியாக்கத்தினால் உண்டாகும் பணப் பெருக்கம், அதிக உற்பத்திக்கும், துய்ப்புக்கும், முதலீட்டுக்கும் வேண்டிய அளவைவிட மிகுதியாக இருந்தால்தான் (விலைகள் நிலையாக இருக்கும்போது), விலைகளில் பணவீக்கப் போக்கை உண்டாக்கும். உற்பத்தி அதிகரித்துக்கொண்டிருக்கும்வரையிலும், முதலீட்டளவும் துய்ப்பளவும் அயர்ந்துகொண்டிருக்கும் வரையிலும், பொருளாதாரம் சரியாக வேலை செய்வதற்குத் தக்க அளவு விலைகள் ஏறவேண்டியதும் அவசியமாகும். ஆகவே, பற்றுக்குறை நிதியாக்கத்தின் பணவீக்க விளைவு, அதில் உண்டாகும் பணப்பெருக்கம் எந்த அளவுக்குத் தேவையைவிட அதிகம், அல்லது அவசியம் என்ற பிரச்சினையைப் பொறுத்து இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்டபோது, இந்தியப் பொருளாதாரம் ரூ. 1,200 கோடி பற்றுக்குறை நிதியாக்கத்தைத் தாங்கமுடியாது என்று அறிஞர்கள் கருத்துத் தெரிவித்தனர். முதல் திட்டத்தில் தேசிய வருமானத்தில் ஒரு சதவீதம்தான் பற்றுக்குறை நிதியாக அளிக்கப்பட்டது. இரண்டாம் திட்டத்தில் இது 2 சதவீதமாகும். ஆசிய தூரக் கிழக்கு நாடுகளுக்கான பொருளாதாரக் குழு, இரண்டாம் திட்ட காலத்தில் ரூ. 1,200 கோடிதான் பற்றுக்குறை நிதியாக்கத்திற்கு உயர்ந்த எல்லையென்று கருதியது. இதை அதிகமாக்கினால், ஈடு செய்யமுடியாத அதிக வாங்குந்திறன் உண்டாகும்.[1] இந்தியாவில் வரிச் சீர்திருத்தத்தைப்பற்றிய தன் அறிக்கையில் பேராசிரியர் கல்டோர், 'நம் பொருளாதாரம் ஜீரணிக்கக்கூடிய பற்றுக்குறை நிதியாக்கம் ஆண்டுக்கு ரூ. 150 கோடிக்குமேல், அல்லது ஐந்தாண்டுகளில் சுமார் ரூ. 800 கோடிக்குமேல் இராது' என்று கூறினார்.[2]

இக் காரணத்திற்காகப் பற்றுக்குறை நிதியாக்கத்தைப் பற்றித் திட்டக் குழுவின் மனமாற்றம் வரவேற்கத்தக்கது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் இரண்டாண்டுகளில் ரூ. 700 கோடிக்கு உண்டான பட்ஜெட் பற்றுக்குறையின் பணவீக்க விளைவு, வெளிநாட்டுச் செலாவணிக் காப்பு நிதியிலிருந்து நிதியைப் பெற்று அயல்நாட்டுக் கொடுப்பல்நிலைப் பற்றுக்குறையால் பெரும்பாலும் சரிசெய்யப்பட்டது. இந்தக் காப்பு நிதி இருக்கவேண்டிய குறைந்த அளவு எல்லையையடைந்து

[1] United Nations, 'Economic Survey of Asia and the Far East,' 1955, p. 112.

[2] Nicholas Kaldor, 'Indian Tax Reform'—Report of a Survey,' Ministry of Finance, Government of India, 1956, p. 1.

விட்டதால், பற்றுக்குறை நிதியாக்கத்தை அதிக அளவு குறைக்க வேண்டிய அவசியம் உணரப்பட்டது.[1] ஆகவே, திட்டத்தின் கடைசி இரண்டாண்டுகளுக்கு (1959-61), பட்ஜெட் பற்றுக் குறைகள் மிகவும் குறைத்து ரூ. 210 கோடியாக்கப்பட்டன. இதனால் திட்ட முடிவில் மொத்தப் பற்றுக்குறை ரூ. 1,092 கோடியாகும்.[2] இக் காரணத்தினால் மூன்றும் திட்டத்தில் இம் மாதிரி நிதியாக்கம் குறைக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் சுருக்கத்தின்படி, மொத்த முதலீட்டுச் செலவு ரூ. 10,200 கோடியும் இதில் அரசாங்கத்துறையில் முதலீடு ரூ. 7,250 கோடியும் ஆகும். பண அளிப்பின்மீது பற்றுக்குறை நிதியாக்கத்தின் விளைவுகளைப் பொறுத்து, அதற்கு எல்லைகள் குறிக்கப்பட்டுள்ளன. 'மூன்றாவது திட்டத்தில் விலைகளை அதிகம் பாதிக்காதமுறையில் பண அளிப்பு 33 சதவீதம் உயரலாம்' என்று கருதப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் மூன்றும் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கூடுதலான பண உற்பத்தி ரூ. 950 கோடி. பண அளிப்புப் பெருக்கத்தில் ஒரு பகுதி பாங்குகளிலிருந்து கிடைக்கிறதென்று கொண்டு, மூன்றும் திட்டத்தில் அனுமதிக்கக்கூடிய பட்ஜெட் பற்றுக்குறைகள் ரூ. 550 கோடி என்று கருதப்படுகிறது.[3] ஆகவே, மூன்றும் திட்டத்தில் பற்றுக்குறை நிதியாக்கம் மொத்தச் செலவில் 7·6 சதவீதம் ஆகும். இரண்டாம் திட்டத்திலோ, இது 24·4 சதவீதமாயிருந்தது.

இது மிகவும் குறைந்த அளவேயாகும். மற்றச் சாதனங்கள் எதிர்பார்த்த அளவுக்கு அதிகமாக இருந்தால்தான், பற்றுக்குறை நிதியாக்கத்தை இந்த எல்லைக்குள் வைக்கமுடியும். அரசாங்கத் தொழில்களின் உபரியைப் பெருக்கும் நடவடிக்கைகள் நீங்கலாக, கூடுதலான வரிவிதிப்பினால் ரூ. 1,650 கோடியும் வெளி உதவி ரூ. 2,200 கோடியும் கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவை முறையே மொத்தச் செலவில் 22 சதவீதமும் 30·3 சதவீதமும் ஆகும். இச் சாதன இலக்குகள் அளவு கடந்த நம்பிக்கையைக் காட்டுகின்றன. இவற்றில் குறைவு, ஏற்படும் அளவுக்குத் திட்டத்தைக் குறைக்கவேண்டியோ

[1] Planning Commission, Government of India, 'Appraisal and Prospects of the Second Five Year Plan,' May 1958.

[2] Reserve Bank of India, 'Report on Currency and Finance', 1959-60, p. 58.

[3] Planning Commission, Government of India, 'Third Five Year Plan—A Draft Outline,' June 1960, p. 49.

பற்றுக்குறை நிதியை உயர்த்தவேண்டியோ வரும். அன்றியும், இந்த முறையினால் அபிவிருத்திக்கு நிதியளிப்பதற்கு வரம்புகள் வகுப்பதற்குக் கூறப்படும் காரணமும் நியாயமாகத் தெரிய வில்லை. அது என்னவென்றால், பற்றுக்குறை நிதியாக்கத்தினால் உண்டாக்கப்படும் அதிகத் தேவைக்கேற்ப அதிக உற்பத்தி செய்வதைவிட்டு, பொருளாதாரமானது பற்றுக்குறை நிதியாக்கத்தை ஜீரணிக்கக்கூடிய சக்தி, பணப் பெருக்கத்தை அது எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் பொறுத்தே உள்ளது என்று கூறுவதாகும்.

8. அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையும் விலைகளும்

அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையின் பொருளும் முக்கியத்துவமும்

அரசாங்கச் செலவுகள் நாட்டில் விலையளவைப் பாதிப்பதைப்போலவே அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையும் விலைகளைப் பாதிப்பதில் முக்கியத்துவம் வாய்ந்தது. சாதாரணமாக, சாதகமான கொடுப்பல்நிலை நாட்டின் பொருளாதாரத்தில் பணவீக்க விளைவை உண்டாக்கும். ஆனால், அதில் பற்றுக்குறை பணவாட்டத்தை உண்டாக்கும்.

பொதுவாகக் கூறினால், அயல்நாட்டுக் கொடுப்பல்நிலை என்பது, ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு நாட்டு மக்கள் மற்ற நாடுகளின் மக்களுக்குக் கொடுத்த தொகையையும், அந்நாட்டு மக்கள் மற்ற நாடுகளின் மக்களிடமிருந்து பெற்ற தொகையையும் குறிக்கும் ஒரு கணக்காகும். ஒரு நாடு எந்த இடங்களிலிருந்து எவ்வளவு வருமானம் பெறுகிறது என்பதையும், அது வெளி நாடுகளில் எவ்வளவு செலவு செய்கிறது என்பதையும் குறிக்கும் ஒரு தேசிய வருமான அறிக்கையாக அதைக் கொள்ளலாம். அயல்நாட்டுக் கொடுப்பல்நிலை அறிக்கையில், நிதிக் கொடுப்பல் வாங்கல்கள் கீழ்க்கண்டவைகளாகப் பிரிக்கப்படும் :

(அ) வியாபாரச் சரக்குகள், விலைமிக்க உலோகங்கள் போன்ற பொருள்களின் ஏற்றுமதி இறக்குமதிகளால் கொடுபட வேண்டிய தொகைகள். இவை வியாபாரத்தின் கண்கூடான இனங்கள் எனப்படும். இவையே பலவிதமான கொடுப்பல் வாங்கல்களில் மிகப் பெரிய இனமாகும்.

(ஆ) அயல்நாட்டு மக்களுக்குச் செய்த பணிகளுக்காகவும், அயல் நாடுகளில் உள்ள மக்கள் செய்த பணிகளுக்காக

வும் கொடுபட வேண்டிய தொகைகள். இவை வியாபாரத்தின் கண்கூடல்லாத இனங்கள் ஆகும். இவற்றில் உல்லாசப் பயணிகள், வெளியேறுபவர்கள்பொருட்டுச் செய்யப்படும் செலவுகள், கப்பல் ஏற்றுக் கட்டணம், வட்டி, இலாப ஈவுத் தொகைகள், பாங்கர், தரகர் கமிஷன்கள், திரைப்படங்களுக்கு ராயல்டி, பேடன்டுகள், காப்பிரைட்டுகள் முதலியவை அடங்கும்.

(இ) கைம்மாறு கருதாமல் கொடுக்கப்பட்ட தொகைகள் அதாவது, பொருளோ பணியோ பெறுமல் ஒருதலையாக அளிக்கப்படும் உத்தியோகபூர்வமான அல்லது தனிப்பட்ட நன்கொடைகள், அறங்கள், கொடைகள், பரிகரிப்புத் தொகை, நஷ்டஈடு போன்றவை.

அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையில் இந்த மூன்று இனங்கள் சேர்ந்து நடப்புக் கணக்கு அல்லது வருமானக் கணக்கு ஆகும். எந்த நாட்டிலும், எந்த ஒரு குறிப்பிட்ட காலத்திலும் (உதாரணமாக, ஓராண்டுக் காலத்தில்), கண்கூடான வாணிபம், கண்கூடற்ற வாணிபம், கைம்மாறு கருதாத தொகை அளிப்பு, ஆகிய மூன்று இனங்களில் வரவுகள், அந்த நாடு மற்ற நாடுகளுக்குக் கொடுக்கவேண்டிய தொகைகளுக்குச் சமமாக இராது என்று எளிதில் புலப்படும். ஆகவே, அந்த நாடு தன் அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில் உபரியையோ பற்றுக்குறையையோ உடையதாயிருக்கும். இந்த உபரி அல்லது பற்றுக்குறை, குறுங்கால மூலதனம் நீண்டகால மூலதனம் ஆகியவற்றின் இயக்கத்தினாலும், அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையின் மூலதனக் கணக்கில் காட்டப்பட்ட நாணயத் தங்கத்தினாலும் சரிசெய்யப்படும். ஒரு நாட்டிற்கு அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில் பற்றுக்குறை இருந்தால், அந்த நாட்டின் அயல்நாட்டுச் செலாவணிக் காப்பு நிதியிலிருந்து பணம் எடுத்தோ, இந்தக் குறிப்பிட்ட நோக்கத்திற்காக அயல்நாடுகளிலிருந்து கடன் வாங்கியோ, தங்கத்தை ஏற்றுமதி செய்தோ ஈடுசெய்யப்படும். இந்தவிதமான கொடுப்பல் வாங்கல்கள், அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையில் பற்றுக் குறையுடைய நாட்டின் நிகர அயல்நாட்டு முதலீட்டு நஷ்டம் என்று கூறப்படும். பன்னாட்டுச் செலாவணி நிதி இத்தகைய கொடுப்பல் வாங்கல்களை 'ஈடுசெய்யும் நிதியாக்கம்' என்ற தொடரால் குறிக்கிறது. நடப்புக் கணக்கில் உள்ள பற்றுக் குறையை அடைப்பதற்கு வேண்டிய அளவே முதலீட்டு நஷ்டம் இருக்குமாகையால் நடப்புக் கணக்கையும் மூலதனக் கணக்கையும் சேர்த்துப் பார்த்தால் அவற்றில் இரண்டு பக்கமும் சரியாகச்

சமநிலையடைந்திருக்கும். இந்த அறிக்கையில் ஒரு பக்கத்தில் அயல்நாடுகளிலிருந்து பெற்ற வாங்குந்திறனெல்லாம் குறிக்கப் பட்டும், மற்றொரு பக்கத்தில் அவ் வாங்குந்திறன் உபயோகிக்கப் பட்ட வழிகள் எல்லாம் குறிக்கப்பட்டும் இருப்பதால், இந்தச் சமநிலை காணப்படும். ஆனால், உண்மையில் நடப்புக் கணக்கு அல்லது வருவாய்க் கணக்கில் உள்ள பற்றுக்குறை அல்லது உபரியைத்தான், 'அயல்நாட்டுக் கொடுப்பல் நிலை' என்ற தொடர் குறிக்கும்.[1]

ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்கும், அதன் அயல்நாட்டுக் கொடுப்பல் நிலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அது பொருளாதார நடவடிக்கையின் அளவையும், உற்பத்தியளவையும், தேசிய வருமானத்தின் அளவையும், விலையளவையும் பாதிக்கிறது. ஆனால், அயல்நாட்டுக் கொடுப்பல்நிலைக்கும், பொருளாதார நடவடிக்கையின் ஒரு முக்கியமான அம்சமாகிய விலையளவுக்கும் உள்ள தொடர்பைப்பற்றிய கருத்து அண்மைக் காலத்தில் பொருளாதாரத் துறையினரிடையே பெரிய மாறுதலைக் கண்டுள்ளது. தொன்மைப் பொருளாதார நூலாசிரியர்கள், அயல் நாட்டுக் கொடுப்பல்நிலை பண அளிப்பைப் பாதிப்பதால் விலையளவோடு நேரடியாகத் தொடர்புடையது என்பார்கள். அயல் நாட்டுக் கொடுப்பல்நிலையில் மாறுதல் உண்டாகிக் கவலை ஏற்பட்டால் சர்வதேச அடிப்படையில் விலைகளை மாற்றியமைத்துச் சமநிலையை உண்டாக்கலாம். பொன் (நாணயத்) திட்டத்தின் படி (Gold Standard), நாணயங்களை அனுப்பிப் பண்ணுடுகளுக் கிடையே கொடுப்பல்களைச் சரிசெய்துகொள்வார்கள். அப் போது தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் விலைகள் ஏறும்; தங்கத்தை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் விலைகள் இறங்கும். மாற்றமுடியாத தாள் (நாணயத்) திட்டத்தைக் கொண்ட அமைப்பிலும், இதே கொள்கை கடைப்பிடிக்கப் படும். 'வாங்குந்திறன் சமத்துவக் கோள்' கூறுவதாவது, சரக்கு வாணிபத்தினால் பண்ணுட்டுக் கொடுப்பல்நிலை சமநிலையில் வைக்கப்படும் என்பது. இந் நோக்கத்தையடையும் பொருட்டுச் சரக்கு வாணிபம் போதிய அளவு நெகிழ்ந்து கொடுக்கக்கூடிய தாகக் கருதப்படும்.[2] அதாவது, பொன் நாணயத் திட்டத்தின்

1 பேராசிரியர் J. E. மீட் (Meade) என்பவர், நடப்புக் கணக்கில் செலவுகளைக் குறிப்பதற்கு 'சுயேச்சையான கொடுப்பல்கள்' என்ற தொடரையும், நடப்புக் கணக்கில் பற்றுக்குறையை ஈடு செய்வதற்குக் கொடுக்கப்பட்ட தொகைகளை 'கடன்முறைக் கொடுப்பல்கள்' என்ற தொடரையும் உபயோகிக்கிறார். **The Balance of Payments, 1951, p. 15.**

2 **H. B. Killough, 'International Trade,' 1938, p. 328.**

கீழாயினும், மாற்றமுடியாத தாள் நாணயத் திட்டத்தின் கீழாயினும் பல நாடுகளின் அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில் உண்டாகும் மாறுதல், ஒரு நாட்டின் பண அளிப்பை நேரடியாகப் பாதித்து, அதனால் அந்நாட்டில் விலையளவையும் பாதிக்கும். ஆனால், அண்மைக்கால மாறுதல்களினால், 'வாங்குந்திறன் சமத்துவக் கோள்' பெரும்பாலும் மதிப்பிழந்துவிட்டது. விலைகளைச் செயற்கையாக இறக்கிவைக்கும் பொருளாதாரக் கட்டுப்பாடுகளையும், தாராளமாகச் சரக்குகள் இயங்காமல் தடுக்கும் கட்டுப்பாடுகளையும் அக் கோள் அறியாது. இதுமட்டுமன்றி, வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறளவு இறக்குமதித் தேவையில் காணப்படும் நெகிழ்ச்சியையும், மூலதன இயக்கத்தின் முக்கியப் பங்கையும் அக் கோள் அறியாமலிருப்பதும் ஒரு பெருங்குறையாகும்.

இதற்கு மாறாக கெய்ன்ஸ் பிரபுவினால் (Lord Keynes) பெரும்பாலும் உருவாக்கப்பட்ட இக் காலக் கொள்கைப்படி, அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையில் உண்டாகும் மாறுதல்கள் நாட்டு வருமானத்தை நேரடியாகப் பாதித்து, அதன்மூலம் விலைகளையும் பாதிக்கின்றன. சாதாரணமாக ஒரு நாட்டின் ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் சமமாக இருக்கும். இறக்குமதிக்குப் பணம் கொடுக்கவேண்டி இருப்பதால், அயல்நாட்டு வாணிபத்தின்மூலம் பெறப்பட்ட நிகரக் கூடுதல் வருமானம் ஏற்றுமதியின் மதிப்பிற்கும் இறக்குமதியின் மதிப்பிற்கும் இடையில் உள்ள வித்தியாசம்தான். ஒரு நாட்டின் ஏற்றுமதிகள் இறக்குமதிகளைவிட அதிகமாக இருந்தால், அந்த நாட்டின் அயல் நாட்டுக் கொடுப்பல் நிலையில் உபரி இருக்கும். நாட்டின் கணக்கில் இந்த உபரி முதலீடாகக் கொள்ளப்படும். ஆக, ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டின் மொத்த முதலீடு, உள்நாட்டு முதலீடும், பன்னாட்டு வாணிபத்தில் பெற்ற உபரியாகிய வெளிநாட்டு முதலீடும் சேர்ந்து மொத்தமாகும். கிடைத்த சேமிப்புகள், கிடைத்த முதலீட்டுக்குச் சமமாகும். ஆகவே, வருமானத்திலிருந்து துய்ப்பைக் கழித்தால், உள்நாட்டு முதலீடும் வெளிநாட்டு முதலீடும் சேர்ந்ததற்குச் சமமாகும். ஆகவே, அயல்நாட்டுக் கொடுப்பல்நிலை சமமாக இருக்கும்போது, வெளிநாட்டு வியாபாரத்தில் அதிக முதலீடோ சேமிப்போ இல்லை என்று பொருளாகும். ஆனால், கொடுப்பல்நிலையில் உபரி இருந்தால், அதிக முதலீடு இருக்கும். அது பணவீக்கத்தை அல்லது பணப்பெருக்கத்தை உண்டாக்கும். கொடுப்பல்நிலையில் பற்றுக்குறை இருந்தால், அதிகச் சேமிப்பு உண்டானதாகக் கொள்ளவேண்டும். அது, மேற்கூறியதற்கு மாறுகப் பணச்

சுருக்கத்தை விளைவிக்கும். கொடுப்பல் நிலையானது பொருளாதார நடவடிக்கையையும் வருமானத்தையும் பாதிப்பதால், பன்னாடுகளுக்கிடையே கொடுப்பல்நிலையில் உள்ள சமநிலை கெடும்போது இவ்வாறு தீமைகள் அகற்றப்பட்டு சமநிலை மீண்டும் உண்டாக்கப்படுகிறது. 'அயல்நாட்டுக் கொடுப்பல் நிலை' என்ற தமது நூலில் பேராசிரியர் மீட் (Meade), இறக்குமதித் தேவையின் நெகிழ்ச்சி, பொருள் அளிப்பின் நெகிழ்ச்சி, உற்பத்தித் திறனில் உயர்வு, வெளிநாட்டுத் தொகை மாற்றங்கள், பரிகரிப்புத் தொகைகள், சுங்க வரிகள், கூலியில் மாறுதல், வட்டி நாணய மாற்று விகிதங்கள், ஊகவாணிபம் முதலிய பல காரணங்களால் ஒரு நாட்டின் கொடுப்பல்நிலை பாதிக்கப்படுகிறது என்கிறார். இக் காரணங்கள் மாறுமலிருக்கும்படியான நடுநிலையான பொருளாதார அமைப்பில், உள்நாட்டில் செலவு அதிகரித்தால் தேசிய வருமானம், வேலையளவு, உற்பத்தி ஆகியவை அதிகரிக்கும். நம் நாட்டில் சில துய்க்கப்படும் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதால், இங்கு வருமானம் உயர்ந்தால் இறக்குமதிக்கு அதிகத் தேவை உண்டாகும். இதனால் வருமானம் உண்டாக்கப்பட்டு, அதிலிருந்து இறக்குமதிகள் பெறப்படும். A, B என்ற இரண்டு நாடுகளுக்கிடையே, A-ல் அதிக உள்நாட்டுச் செலவினால் அங்கு தேசிய வருமானமும் விலைகளும் உயரும். A-ல் அதிக வருமானம் உண்டாவதற்கேற்ப B-யிலிருந்து இறக்குமதிகள் உண்டாகி, B-க்குப் பணவீக்கம் ஏற்றுமதியாகும். இது B-யில் பெருக்க விளைவை உண்டாக்கி, அதனால் A-யிலிருந்து B-க்கு இறக்குமதிகள் அதிகமாகின்றன. இதனால் A-யில் கொடுப்பல்நிலை ஓரளவு சாதகமாக மாறுகிறது. இல்லாவிட்டால் அது பாதகமாகவே இருக்கும். இப்படிப் பல விளைவுகளுக்குப் பிறகு புதிய சமநிலை உண்டாகும். செலவில் குறைவு உண்டானால் எதிரான விளைவுகள் உண்டாகும்.

இப் பிரச்சினையை இந்த முறையில் அணுகுவதில் ஒரு முக்கியமான சிறப்பு என்னவென்றால், கொடுப்பல்நிலையில் ஒரு நாடு மற்ற நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலையையும், தேசிய வருமானம், விலையளவு ஆகியவற்றையும் கொடுப்பல்நிலை சார்ந்திருக்கிறது என்பதையும் நாம் ஒப்புக்கொண்டவர்களாகிறோம் என்பதுதான். ஒரு நாட்டில் அதிக முதலீடு நடைபெற்றால், வருமானத்தின் அளவு உயர்கிறது. அது சில சந்தர்ப்பங்களில் விலைகள் ஏறுவதற்கும் காரணமாகிறது. ஆனால், வருமான அளவு, விலையளவு ஆகிய இரண்டிலும் உண்டாகும் உயர்வு, ஓரளவு அதிக இறக்குமதித் தேவையால் குறைக்கப்படுகின்றன. இறக்குமதிகள் அதிக

மானால், அயல் நாடுகள் வருமானம் பெருகும். ஆகவே, உள் நாட்டில் முதலீடு அதிகரிக்கும்போது, கொடுப்பல்நிலையில் பற்றுக்குறை ஏற்பட்டால், அது அந்த முதலீட்டினால் உண்டாகும் பணவீக்க விளைவைச் சிறிது மட்டுப்படுத்தும். அதிக முதலீடு வெளி நாடுகளில் ஏற்பட்டால், அதாவது, நாட்டில் ஏற்றுமதித் தேவை அதிகரிப்பதனால் ஏற்றுமதி உபரி உண்டாகி அதன்மூலம் வெளியே முதலீடு அதிகரித்தால் (போர்ப் பொருளாதார வீக்கத்தில் ஏற்படுவதுபோல), உள்நாட்டில் முதலீடு அதிகரிக்கும்போது நிகழ்வது போன்ற விளைவுதான் உண்டாகும்.

அதிகச் செலவோ அதிகத் தேவையோ பாதகமான கொடுப்பல்நிலையை உண்டாக்கும் என்பது உண்மையே. ஆனால், அதிகத் தேவை பயனுள்ளதாக இருக்கவேண்டுமானால், அதிகப் பண அளிப்பு அதாவது, பணத்தின் அளவில் அதிகரிப்போ, உள்ள பணத்தின் புழக்க வேகத்தில் அதிகரிப்போ உண்டாகவேண்டும். இங்கிலாந்தில் போருக்குப் பிந்தியகாலத்தில், 'கட்டுக்கடங்காத பணம் தேவைக்குமேல் அதிகமாகத் தொடர்ந்து இருந்துவருவதால், கொடுப்பல்நிலைக்கும் பணத்தின் நிலையான மதிப்பிற்கும் விடாமல் தொல்லை கொடுத்துவருகிறது' என்று விளக்கப்பட்டிருக்கிறது.[1] ஆகவே, ஒரு நாட்டின் கொடுப்பல்நிலைக்கும் பண அளிப்பிற்கும் உள்ள தொடர்பை ஆராய்வது தகும்.

பாங்குகள் மூலமாக வெளி நாடுகளுக்குப் பணம் கொடுக்கப்படுகிறது. ஏதாவதொரு வருடத்தில் A என்ற ஒரு நாடு B என்ற ஒரு நாட்டிலிருந்து கொடுப்பல்நிலை உபரியாக $ 10 மில்லியன் பெறவேண்டியிருந்தால், A-ல் உள்ள ஏற்றுமதியாளர்கள் B-ல் உள்ள இறக்குமதியாளர்களிடமிருந்து $ 10 மில்லியன் பெற வேண்டும் என்று பொருளாகும். ஆகவே A-ன் ஏற்றுமதியாளர்கள் கடன் கொடுத்தவர்கள் B-ன் இறக்குமதியாளர்கள் கடனாளிகள்; A-ல் உள்ள கடன்காரர்கள் தம் நாட்டில் உள்ள பாங்குகளுக்கு வெளிநாட்டுச் செலாவணிமீது தமக்குள்ள உரிமையை விற்றுவிட்டுத் தம் நாட்டுச் செலாவணியைப் பெறுவார்கள். A-ல் உள்ள பாங்குகள் தம் வாடிக்கைக்காரர்களாகிய அக் கடன் காரர்களுக்குக் கொடுக்கவேண்டிய கடன் ஆகும். மற்றொரு புறம் B-ல் உள்ள இறக்குமதியாளர்கள், தம் வெளிநாட்டுக் கடன் காரர்களுக்குப் பணம் செலுத்துவதற்குத் தம் பாங்குகளில் உள்ள தம் இருப்புகளிலிருந்து பணம் எடுப்பார்கள். இதன் விளைவாக,

[1] 'R. G. Hawtrey, 'The Balance of Payments and the Standard of Living' 1950, p. 38.

B என்னும் நாட்டில் உள்ள $ 10 மில்லியன் பெறுமான டெபாசிட் தொகை, A என்னும் நாட்டில் உள்ள பாங்குகளுக்கு உரியதே யன்றி, B-ல் உள்ள இறக்குமதியாளர்களுக்கு உரியதன்று. இவ் வாறு, B-ல் உள்ள பாங்குகளின் கடன்கள் மாறுமலிருக்கும்போது B-ல் உள்ள கடனாளிகளின் பாங்கு டெபாசிட் தொகை $ 10 மில்லியன் குறைந்து, அவர்களுடைய வாங்குந்திறன் குறையும்.

ஆயினும், இது முதல் நிலைதான். B-ல் உள்ள வாணிப பாங்குகள் A-ல் உள்ள பாங்குகளின் கடன்களைத் தீர்ப்பதற்கு மத்திய பாங்கில் உள்ள தம் இருப்புகளிலிருந்து பணம் எடுக் கின்றன. இதன் விளைவாக B-ல் உள்ள வாணிப பாங்குகள் மத்திய பாங்கில் வைத்துள்ள டெபாசிட்டுகளில் 10 மில்லியன் குறையும். அதே சமயத்தில் A-ல் உள்ள வாணிப பாங்குகள் B-யில் உள்ள மத்திய பாங்கில் வைத்திருக்கும் கணக்கில் $ 10 மில்லியன் உயரும். இதன் நிகர விளைவு வருமாறு :

(1) A என்னும் நாட்டில் உள்ள கடன்காரர்கள் தம் வாணிப பாங்குகளில் வைத்துள்ள டெபாசிட்டு களில் $ 10 மில்லியன் அதிகரிக்கிறது. அதாவது, A-ல் உள்ள வாணிப பாங்குகளின் பொறுப்புகள் $ 10 மில்லியன் கூடுதலாகின்றன. இந்த அளவுக்கு A-ல உள்ள மக்களின் வாங்குந்திறன் உயருகிறது.

(2) B-ல் உள்ள மத்திய பாங்கில், A-ல் உள்ள வாணிப பாங்குகள் வைத்திருக்கும் நிதி $ 10 மில்லியன் கூடுத லாகிறது. இது அவற்றின் புதிய பொறுப்புகளுக்கு நிகரான சொத்தாகும்.

(3) B-ல் உள்ள மத்திய பாங்கில், B-ல் உள்ள வாணிப பாங்குகளின் டெபாசிட்டுகளில் $ 10 மில்லியன் குறைந்திருக்கிறது. அதே சமயத்தில் B-ல் உள்ள வாணிப பாங்குகள் தம் வாடிக்கைக்காரர்களுக்குக் கொடுக்கவேண்டிய டெபாசிட் கடன்களில் $ 10 மில்லியன் குறைகிறது. இந்த அளவுக்கு B-ல் வாங் குந்திறன் குறைந்துவிடுகிறது.

B-யில் உள்ள வாணிப பாங்குகள் மத்திய பாங்கில் வைத் துள்ள டெபாசிட்டுகள், அவற்றின் 'ரொக்கம்' ஆகையால், இந்தக் கொடுப்பல் வாங்கலின் விளைவு, ரொக்கத்திலும் டெபா சிட்டுகளிலும் (அதாவது B-ல் உள்ள பாங்குகளின் வாடிக்கைக்

காரர்களின் டெபாசிட்டுகளில்), ஒரே அளவு குறைகிறது. இதனால் B-யில் உள்ள பாங்குகளின் ரொக்க விகிதம் குறைகிறது. தங்களுடைய ரொக்கத்தை ஈடு செய்யவும் இயல்பான விகிதத்தைத் திரும்ப ஏற்படுத்தவும் அவை தம் குறுங்காலப் பத்திரங்களை விற்கவேண்டும். அவை மத்திய பாங்கில் வைத்துள்ள இருப்பில் தொடர்ந்து குறைந்துகொண்டே வந்தால், தம் நீண்டகால அரசாங்கப் பத்திரங்களையும் அவை விற்கவேண்டி வரும். அப்போது அப் பத்திரங்களில் விலை குறைந்து வட்டி விகிதங்கள் உயர்த்தப்படும். இவ்வாறு A-ல் B-யினுடைய பாதகக் கொடுப்பல் நிலையின் இறுதி விளைவு என்னவென்றால், B-ல் பணத்தின் நிலை கடுமையாவதும், வாங்குந்திறன் குறைவதும், அதே சமயத்தில் A-ல் வாங்குந்திறன் அதிகமாவதும் என்பவையே.

எனினும், கொடுப்பல் நிலையில் உண்டாகும் மாறுதல் மற்றக் காரணிகளால் சமனுக்கப்படாமல் இருந்தால்தான் மேற்கூறிய விளைவு உண்டாகும். ஒரு முக்கியமான சமனுக்கும் காரணி, அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டத்தின் நிலையாகும். B-ன் கொடுப்பல்நிலைப் பற்றுக்குறையால், B-ல் உள்ள வாணிப பாங்குகளின் டெபாசிட் பொறுப்புகளில் குறைவு உண்டாகிறதென்று பார்த்தோம். அதே சமயத்தில், அரசாங்கமும் அதே அளவு பற்றுக்குறையுடனிருந்தால், அது மத்திய பாங்கிலிருந்து வாங்கி அப் பற்றுக்குறையை ஈடு செய்யவேண்டும். அதனால், B-ல் உள்ள வாணிப பாங்குகளின் டெபாசிட் பொறுப்புகளும், அவை மத்திய பாங்கில் வைத்துள்ள டெபாசிட்டுகளும் அதிகரிக்கும். ஆனால், இதற்கெதிரான பட்ஜெட் மாறுதல்களும், பற்றுக்குறை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளும் இல்லாமலிருந்தால் (எடுத்துக்காட்டாக, பரிவர்த்தனைச் சமன் கணக்கு வைத்தல்), கொடுப்பல் நிலையில் உள்ள உபரி, வாங்குந்திறனைப் பெருக்கும்; அதில் பற்றுக்குறை உண்டாயின் வாங்குந்திறன் சுருங்கும்.

சரியான கொடுப்பல்நிலைக் கணக்கில், ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாடு அயல்நாடுகளிலிருந்து பெறும் வருமானம் காட்டப்படும். தேசிய வருமானக் கணக்கீடுபோலவே, கொள்கை வகுப்பதற்கு அடிப்படையாக இதுவும் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது. செலவுகள், வரவுகள்பற்றிய கணக்காயிருப்பதால், தேசிய வருமான விவரங்கள்போலவே இதுவும் எத்தகைய பொருளாதாரத்தைச் சேர்ந்தது, அதன் தரம் என்ன என்பவற்றைக் காட்டும். உதாரணமாக, வளர்ச்சி

குறைந்த நாட்டின் கொடுப்பல் நிலையில் சில சிறப்பான அம்சங்கள் உண்டு. வளர்ச்சியடைந்த பொருளாதார அமைப்பினின்றும் அவை வேறுனவை. குறைவான வளர்ச்சியுடைய நாடுகளின் கொடுப்பல்நிலைச் சங்கடங்கள், சில உள்நாட்டுக் காரணங்களாலும் சில வெளிநாட்டுக் காரணங்களாலும் உண்டாகுபவை. உள்நாட்டுக் காரணங்களுள் முக்கியமானவை விலையளவில் மாறுதல், மக்கள்தொகை அதிகரிப்பு, தொழிலிலும், விவசாயத்திலும் அரசாங்கத் துறையிலும், தனியார், துறையிலும், பல தொழில்களுக்கிடையிலும் சமமான பெருக்கமின்மை காரணமாக உண்டாகும் உடலோடு ஒட்டிய சமனறு நிலைகள் முதலியன.

இந்த நாடுகளின் அரசாங்கங்கள் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதில் அக்கறை கொண்டுள்ளதால், அவை பணவீக்க முறையில் நிதியளித்துள்ளன. அதனுல் உண்மையான வருமானம் அதிகரித்துள்ளதோடு அதிகப் பண வருமானமும் உண்டாகியிருக்கிறது. உண்மையான வருமான உயர்வால் மக்களின் வாழ்க்கைத்தரம் உயருகிறது ; துய்ப்புச் சக்தி அதிகரிக்கிறது ; அதிக முதலீடு செய்ய முடிகிறது ; இவற்றுல் துய்ப்புப் பொருள்களுக்கும் முதலீட்டுப் பொருள்களுக்கும் மேலும் அதிகத் தேவை ஏற்படுகிறது. ஆனுல், உண்மை வருமானத்தைவிடப் பண வருமானம் வேகமாக அதிகரித்தால் (இதுதான் பணவீக்கத்தின் தன்மை), அதிகத் தேவை உண்டாகி, அதனுல் உள்நாட்டுச் சாதனங்கள்மீதும் வெளிநாட்டு இருப்புகள்மீதும் சுமை ஏற்படுகிறது. பணவீக்கத்தினுல் பணக்காரர்களுக்கு மேலும் அதிகப் பணம் கிடைப்பதால், இறக்குமதி செய்யப்படும் ஆடம்பரப் பொருள்களுக்கு அதிகத் தேவை ஏற்படுகிறது. அத்தகைய பொருள்களின் இறக்குமதி தடுக்கப்பட்டால் அல்லது கட்டுப்படுத்தப்பட்டால், அவற்றை உற்பத்தி செய்வதற்கு உள்நாட்டுச் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதனுல் ஏற்றுமதியாகக்கூடிய பொருள்களின் உற்பத்தி தடைப்படுகிறது. தேவையான துய்ப்புப் பொருள்களோ உற்பத்தி செய்வதற்குரிய சாதனங்கள் இதன் விளைவாகக் குறைந்தால், இவற்றில் உண்டாகும் பற்றுக்குறையானது, வழக்கமான கூலிச் செலவு முறையில் பணவீக்க நெருக்கடி மேலும் அதிகரிக்கும். இந்த மாறுதல்களின் இறுதி விளைவு என்னவென்றுல், வெளிநாட்டுக் கொடுப்பலில் துன்பம் ஏற்படுவதும், அயல் நாட்டுக் கொடுப்பல் நிலையில் குறைவு உண்டாவதும்தான்.

பொருளாதார வளர்ச்சிக்குப் பணவீக்க முறையில் நிதியளிப்பது தவிர, ஜனத்தொகை அதிகரிப்பினுல் தேவை உயர்ந்து

கொடுப்பல் நிலையில் நெருக்கடி ஏற்படுகிறது. வளர்ச்சி குறைந்த நாடுகளில் பெரும்பாலும் மக்கள் வளர்ச்சி விகிதம் அதிகமாக இருக்கிறது. மூலதனம் அரிதாயிருப்பதால், மக்கள்தொகை வளர்ச்சி, வேலையின்மையை அதிகரித்து, உற்பத்தித் திறனைக் குறைத்து, தலா வருமானத்தைக் குறைத்து, வருமான அளவை உயர்த்துவதற்குத் தேவையான சேமிப்பையும் தடுக்கிறது. மற்றொரு புறம், அதிக உணவுத் தேவை ஏற்படுகிறது. உள் நாட்டு நிலை நெகிழ்ச்சியற்றிருந்தால், உணவு இறக்குமதி அவசிய மாகிறது. இது வெளிநாட்டு இருப்பைப் பாதிக்கிறது. இந்தி யாவில் அண்மைக்காலப் போக்குகளிலிருந்து இது நன்கு விளங்கும்.

வளர்ச்சி குறைந்த நாடுகளில் அரசாங்க ஆதரவு பெற்ற பொருளாதார வளர்ச்சி, வளர்ச்சி ஆற்றல் மிக்க சில தொழில் கள் வளர்வதற்கு உதவியாயிருக்கிறது. அவற்றின் வளர்ச்சி மற்றத் தொழில்களுக்கு மறைமுகமாக நன்மையளித்து, அதனால் முன்னேற்றச் சக்திகளை வெளியிடுகிறது. ஆனால், இவ்வாறு செயற்கையாகச் சில தொழில்களுக்குத் தூண்டுதல் அளிப்பதால் வெளிநாட்டு இருப்புகள் நேரடியாகப் பாதிக்கப்படுகின்றன. ஆதரவு பெறும் தொழில் திறமையாக இல்லாவிட்டால், அதற்கு அளிக்கப்படும் பாதுகாப்பினால், செலவுகளும் விலைகளும் உயர்ந்து, கச்சாப் பொருள்களுக்குப் பாதுகாக்கப்பட்ட தொழில்களை நம்பியுள்ள சில ஏற்றுமதித் தொழில்கள் பெருகு வது தடுக்கப்படும். கச்சாப் பொருள்களின் உற்பத்திச் செலவு அதிகரிப்பதால், ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்திச் செலவு களும் விலைகளும் உயர்ந்து, ஏற்றுமதி பாதிக்கப்படும்.

வளர்ச்சி குறைந்த நாடுகளின் அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையைப் பாதிக்கக்கூடிய வெளிக் காரணங்களில், தொழில் மயமான நாடுகளில் இந்த நாடுகளின் ஏற்றுமதிப் பொருள் களுக்குள்ள தேவையின் தன்மையும், தொழில்மயமான நாடுகளில் உண்டாகும் பொருளாதார ஏற்ற இறக்கங்கள் இப் பின்தங்கிய நாடுகளைப் பாதிக்கும் தன்மையும், இவை மூலதனத்திற்காக அயல்நாடுகளை நம்பி இருப்பதும் சிலவாகும். முதலாவதாக, ஏழை நாடுகளில், முன்னேறிய நாடுகளின் ஏற்றுமதிப் பொருள் களுக்கு இருக்கும் தேவையின் நெகிழ்ச்சியைவிட, தொழில் துறையில் முன்னேறிய நாடுகளில், வளர்ச்சி குன்றிய நாடு களின் ஏற்றுமதிப் பொருள்களுக்குள்ள தேவையின் நெகிழ்ச்சி அதிகமாகும். இந்த நாடுகளைத் தொழில்மயமாக்குவதற்கு, முதற்கருவிப் பொருள்களை இறக்குமதி செய்வது அவசியம்.

பொருளாதாரம் வளரவளர, இத் தேவை அதிகரிக்கிறது. இதற்கு மாறுக, தொழில்மயமான நாடுகளில் விவசாயப் பொருள்களின் இறக்குமதி, அவற்றின் வருமானம் பெருகப் பெருகப் படிப்படியாகக் குறைகிறது. இந்தப் போக்கிற்கு ஒரு காரணம், இந்த நாடுகள் கச்சாப் பொருள்களுக்கு மற்ற நாடுகளை நம்பியிராமல், அப் பொருள்களின் உபயோகத்தில் சிக்கனம் செய்தும், அவற்றிற்குப் பதிலாகச் செயற்கைப் பொருள்களை உண்டாக்கியும் வருவதுதான். முதன்மைப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகளைவிடத் தொழில்மயமான நாடுகளில் வருமானம் மிக வேகமாக உயர்வது ஒரு நீண்டகாலப் போக்காகக் காணப்படுகிறது. இக் காரணங்களினால், தொழில்பொருள்களைவிட விவசாயப் பொருள்கள் விலை குறைந்து வருகின்றன. வாணிப நிலையில் இந்தப் பாதகப் போக்கும், ஏழை நாடுகளின் வெளிநாட்டுக் கொடுப்பல் நிலையை மிகவும் பாதித்திருக்கிறது.

இரண்டாவதாகத் தொழில்மயமான நாடுகளில் உண்டாகும் வருமான மாற்றங்களினால், வளர்ச்சி குறைந்த நாடுகளின் வெளிநாட்டு வாணிபம் மிகவும் பாதிக்கப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம், பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகளைவிடப் பின்தங்கிய நாடுகளில் ஏற்றுமதிக் குவிவு அதிகமாக இருப்பதுதான். இந்த நாடுகளின் அயல்நாட்டுச் செலாவணி வருமானத்தில் 90 சதவீதம், முதன்மைப் பொருள் ஏற்றுமதியால் கிடைக்கிறது. இவைகளின் ஏற்றுமதி வருமானத்திற்கும் தேசிய வருமானத்திற்கும் உள்ள விகிதம் அதிகமாக இருப்பதால் இவற்றின் ஏற்றுமதித் தேவையில் மாறுதல் ஏற்பட்டால், அது வற்றின் வருமானத்தை மிகவும் பாதிக்கும். இதனால்தான் பெரிய தொழில் நாடாகிய அமெரிக்காவில் உண்டாகும் ஏற்ற இறக்க சூழ்ச்சிகளால், அந்நாட்டிற்கு முதன்மைப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் வருமானத்தில் அதேமாதிரி மாறுதல்கள் உண்டாகின்றன. இறுதியாக, பொதுவாகப் பின்தங்கிய நாடுகள், இங்கிலாந்து, அமெரிக்காபோல மூலதனத்தை ஏற்றுமதி செய்யாமல், இறக்குமதி செய்யும் நாடுகளாக உள்ளன. கிழக்கு ஆசிய நாடுகளில் போருக்குமுன் செய்யப்பட்ட பெரிய வெளிநாட்டு முதலீடுகள் அவற்றிற்கு ஆண்டுதோறும் பெரிய பொறுப்புகளாகி, ஏற்றுமதி உபரியை ஏற்படுத்தவேண்டிய அவசியத்தை உண்டாக்கின. இதனால் அவை கண்கூடல்லாத இனங்களுக்குப் பணம் கொடுக்க முடிந்தது. போர் முடிந்தது முதல், அவற்றின் அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில் உண்டான பற்றாக்குறைகள் வெளிநாட்டு இருப்புகளிலிருந்து பணம் பெற்றும், வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்கி

யும் ஈடுசெய்யப்பட்டன.[1] வளர்ச்சி குன்றிய நாடுகளுக்குக் கடன் கொடுப்பதாலும், வெளிநாட்டு மூலதனத்தை முதலீடு செய்வதாலும், இந்த நாடுகளின் செலாவணிக்குத் தேவை மிகுதியாகி, அதன் மதிப்பு உயருகிறது. ஆனால், வளர்ச்சிக்காக வெளிநாட்டு மூலதனத்தை உபயோகிப்பதால், வளர்ச்சி குறைந்த நாடுகளில் வருமானம் உற்பத்தியாக்கப்பட்டு, விலையளவு உயர்ந்து, அதிக இறக்குமதித் தேவையை உண்டாக்குகிறது. இது, முதலில் உண்டான செலாவணி மதிப்புயர்வை ஓரளவு தடுக்கிறது. எனினும், இந்த நாடுகளில் உலகச் செழிப்பின்போது நீண்ட காலத்திற்கு அதிகமாக மூலதன இறக்குமதி நிகழ்வதாலும், உலக மந்தநிலையின்போது சில சமயங்களில் உரிய நாடுகளுக்கு மூலதனத்தைத் திருப்பியளிக்கவேண்டிய எதிரான போக்கு உண்டாவதாலும், இவற்றின் பொருளாதாரத்தின் நிலையற்றதன்மை மேலும் சீர்கேடடைகிறது.[2]

இந்தியாவில் அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையின் போக்குகள்

இரண்டாவது உலகப் போர் முடிந்த சிறிது காலத்திற்குப் பிறகு இந்திய ரிசர்வ் பாங்கு அயல்நாட்டுக் கொடுப்பல்நிலை பற்றிய விவரங்கள் திரட்டி 1946, 1947 ஆண்டுகளுக்குரிய கொடுப்பல்நிலைபற்றிய தகவலை 1949 ஜூலையில் வெளியிட்டது.[3] இந்தியாவில் முதல்முறையாக இவ்வாறு செய்யப்பட்டது. ஆனால், புள்ளிவிவரங்கள் சரியாக இல்லையென்றும், நம் நாட்டின் கொடுப்பல் நிலையின் போக்கை ஒருவாறு காட்டவே அது உதவும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. நடப்புக் கணக்கில் ஒரு பெருங்குறை காணப்பட்டது. அது, பாங்குகளின் வெளிநாட்டுப் பொறுப்புகளைப்பற்றிய சரியான தகவல் கிடைக்காததுதான். மேலும் 1946, 1947 ஆண்டுகளுக்குக் கிடைத்த விவரங்கள், அடுத்த ஆண்டுகளின் விவரங்களோடு ஒத்துவரவில்லை. ஏனெனின், தகவலுக்குட்பட்ட செய்திகள், அவற்றின் காலம், மதிப்பு ஆகியவை வித்தியாசமாக இருந்தன. 1946, 1947 ஆண்டுகளுக்கான விவரங்கள், பிரிவினைக்கு முந்திய முழு இந்தியாவிற்கு உரியவை. பிந்திய ஆண்டுகளில் இந்திய யூனியன் எல்லைக்குட்பட்ட பகுதியின் கொடுப்பல் நிலையைப்பற்றியும்,

[1] United Nations, 'Economic Survey of Asia and the Far East,' 1947 pp. 220–22.

[2] T. C. Chang, 'Cyclical Movements in the Balance of Payments, 1951, p. 20.

[3] 'Reserve Bank of India Monthly Bulletin,' July 1949.

1951 வரை இந்தியா பாகிஸ்தானுடன் செய்த பரிவர்த்தனை நடவடிக்கைகளை நீக்கியும் விவரங்கள் தரப்பட்டுள்ளன. முதலில் சில ஆண்டுகளில் விவரங்களைச் சேகரிப்பதற்கு வேறு ஆதாரங்களைப் பயன்படுத்தியதால், மேலும் சில குறைகள் காணப்படுகின்றன. 1946-க்குரிய விவரங்கள், சுங்க அறிக்கை, ரிசர்வ் பாங்கு அரசாங்கக் கணக்குகள், செலாவணிக் கட்டுப்பாட்டுப் பிரிவு ஆகியவற்றிலிருந்து திரட்டப்பட்டன. 1947-ல் செலாவணிக் கட்டுப்பாட்டுப் பிரிவிலிருந்து கிடைக்கும் தகவல்களையே பெரிதும் நம்பியிருந்தனர். பிந்திய ஆண்டுகளில், செலாவணிக் கட்டுப்பாட்டுப் பிரிவின் தஸ்தாவேஜுகளையே முற்றிலும் நம்பியிருந்தனர். சுங்க அறிக்கையிலிருந்து தொகுக்கப்பட்ட விவரங்களுக்கும் செலாவணிக் கட்டுப்பாட்டுப் பிரிவிலிருந்து தொகுக்கப்பட்ட விவரங்களுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது. இதற்குக் காரணம் கொடுப்பல் வாங்கல்களைப் பதிவு செய்வதில் உள்ள கால வேறுபாடும் வியாபாரச் சரக்குகளை மதிப்பிடுவதில் உள்ள வித்தியாசமும் ஆகும். பிந்திய ஆண்டுகளில் இக்குறை சிறிது சிறிதாக நீக்கப்பட்டு, 1948 முதல் தயாரிக்கப்பட்ட கொடுப்பல்நிலை அறிக்கைகள் மிகவும் துல்லியமாக இருக்கின்றன.[1]

1939-க்கும் 1945-க்கும் இடையில், தனியார் கணக்கிலும் அரசாங்கக் கணக்கிலும் இந்தியாவுக்கு அதிகச் சாதக வாணிபநிலை இருந்தது. இதற்கு ஒரு காரணம் கண்கூடான இனத்தில் சாதகமான நிலை இருந்தும், மற்றொரு காரணம் இந்தியாவில் நேச நாடுகளின் படைகளுக்கு அதிகப் பணம் செலவிடப்பட்டதும், இங்கிலாந்தின் கணக்கில் இந்திய அரசாங்கம் செலவு செய்த தொகை திரும்பப் பெறக்கூடியதாயிருந்ததும் ஆகும். போர்க் காலத்தில் இந்தியாவின் கண்கூடான வாணிப இருப்பு நிலையை அட்டவணை 42 காட்டும்.

போர் தொடங்கியது முதலாக, 1945-46 நிதியாண்டு இறுதி வரையில் திரும்பப் பெறக்கூடிய போர்ச் செலவு ரூ. 1,740 கோடியாகும். நம் நாடு போர்க்காலத்தில் பெற்ற இந்தக் கண்கூடான வாணிப இருப்புநிலை, £ 320 மில்லியன் பெறுமான இந்தியாவின் வெளிநாட்டுக் கடனை ரூ. 425 கோடி செலவில் அடைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது.

[1] 1952 முதல் பாகிஸ்தானுடன் செய்யப்பட்ட பரிவர்த்தனை நடவடிக்கைகள் இந்தியாவில் அயல்நாட்டுக் கொடுப்பல்நிலைக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளன.

அட்டவணை 42

இந்தியாவின் கண்கூடான வாணிப இருப்புநிலை, 1939–45
(லட்ச ரூபாய்களில்)

வருடம்	வியாபாரச் சரக்கு			செல்வம்			மொத்தக் கண்கூடான வாணிப இருப்பு
	ஏற்றுமதி	இறக்கு மதி	வாணிப இருப்பு	ஏற்று மதி	இறக்கு மதி	வாணிப இருப்பு	
1939–40	21595	16897	4698	4079	664	3415	8113
1940–41	20044	16129	3915	1855	324	1531	5446
1941–42	25446	17475	7971	1221	434	787	8758.
1942–43	19517	11671	7846	1080	63	1017	8863
1943–44	21109	13273	7836	572	367	205	8041
1944–45	22898	23194	–296	518	2446*	–1928	–2224

* அரசாங்கக் கணக்கில் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு கடன்-குத்தகை அடிப்படையில் கிடைத்த ரூ. 1,825 லட்சம் மதிப்புள்ள வெள்ளியிரும்பு இத்தொகை பெரும்பாலும் ஆகியுள்ளது.

(ஆதாரம்: வரிக் குழுவின் அறிக்கை, 1949-50, தொகுதி, I. பாரா 134)

போருக்குப் பிறகு இந்தியாவின் கொடுப்பல்நிலையில் ஐந்து தெளிவான கட்டங்கள் காணப்படுகின்றன.

(அ) 1949-ன் மூன்றும் கால்பகுதி வரையில் பற்றுக் குறைகள்.

(ஆ) 1949-ன் நான்காம் கால்பகுதியிலிருந்து 1951-ன் மத்திவரையில், மதிப்பிறக்கத்தினாலும் கொரியாவில் இராணுவ நடவடிக்கை தோன்றியதாலும் உபரிகள்.

(இ) 1951 மத்தியிலிருந்து 1952 மத்திவரை, போர்த்தேவை குறைந்ததால் பற்றுக்குறைகள்.

(ஈ) 1952 மத்தியிலிருந்து 1955–56 வரையில், சாதகமான கொடுப்பல்நிலை.

(உ) இரண்டாம் திட்டக் காலத்தில் பாதகமான போக்குகள்.

அட்டவணை 43-ல் உள்ள காலாண்டு முடிவு விவரங்கள் இந்த முக்கியமான போக்குகளைக் காட்டுகின்றன.

அட்டவணை 43

இந்தியாவின் கொடுப்பல்நிலை—நடப்பு நடவடிக்கைகள்

(கோடி ரூபாய்களில்)

வருடம்		நிகர உபரி (+) அல்லது பற்றுக்குறை (−)	வருடம்		நிகர உபரி (+) அல்லது பற்றுக்குறை (−)
1946		− 36·4	1954	முதல் காலாண்டு	+ 18·9
1947		− 154·0		2ஆம் காலாண்டு	− 14·6
1948	முதல் காலாண்டு	+ 16·1		3ஆம் காலாண்டு	− 14·8
	2ஆம் காலாண்டு	+ 16·7		4ஆம் காலாண்டு	+ 10·5
	3ஆம் காலாண்டு	− 82·7		மொத்தம் ...	0·0
	4ஆம் காலாண்டு	− 45·9	1955	முதல் காலாண்டு	+ 27·2
	மொத்தம் ...	− 96·0		2ஆம் காலாண்டு	0·0
1949	முதல் காலாண்டு	− 102·1		3ஆம் காலாண்டு	− 0·5
	2ஆம் காலாண்டு	− 78·6		4ஆம் காலாண்டு	+ 16·6
	3ஆம் காலாண்டு	− 29·5		மொத்தம் ...	+ 43·3
	4ஆம் காலாண்டு	+ 42·6	1956	முதல் காலாண்டு	+ 4·6
	மொத்தம் ...	− 167·4		2ஆம் காலாண்டு	− 44·5
1950	முதல் காலாண்டு	+ 30·5		3ஆம் காலாண்டு	− 81·4
	2ஆம் காலாண்டு	− 19·2		4ஆம் காலாண்டு	− 84·8
	3ஆம் காலாண்டு	+ 10·5		மொத்தம் ...	− 206·1
	4ஆம் காலாண்டு	+ 48·2	1957	முதல் காலாண்டு	− 81·8
	மொத்தம் ...	+ 70·1		2ஆம் காலாண்டு	− 84·7
1951	முதல் காலாண்டு	+ 22·0		3ஆம் காலாண்டு	− 138·5
	2ஆம் காலாண்டு	+ 11·7		4ஆம் காலாண்டு	− 72·4
	3ஆம் காலாண்டு	− 14·2		மொத்தம் ...	− 377·4
	4ஆம் காலாண்டு	− 50·8	1958	முதல் காலாண்டு	− 81·0
	மொத்தம் ...	− 31·3		2ஆம் காலாண்டு	− 120·2
1952	முதல் காலாண்டு	− 75·4		3ஆம் காலாண்டு	− 90·6
	2ஆம் காலாண்டு	− 5·4		4ஆம் காலாண்டு	− 63·0
	3ஆம் காலாண்டு	+ 11·4		மொத்தம் ...	− 354·8
	4ஆம் காலாண்டு	+ 32·0	1959	முதல் காலாண்டு	− 65·0
	மொத்தம் ...	− 37·3		2ஆம் காலாண்டு	− 76·4
1953	முதல் காலாண்டு	+ 14·1		3ஆம் காலாண்டு	− 52·0
	2ஆம் காலாண்டு	− 10·4		4ஆம் காலாண்டு	+ 21·7
	3ஆம் காலாண்டு	+ 0·8		மொத்தம் ...	− 171·7
	4ஆம் காலாண்டு	+ 52·4	1960	முதல் காலாண்டு	− 74·1
	மொத்தம் ...	+ 56·9			

[ஆதாரம்: 'Post-War Balance of Payments in India,' Reserve Bank of India Bulletin, July 1949 and June 1956. "India's Balance of Payments," 1948-51, Reserve Bank of India (Reports on Currency and Finance). 1946-47-க்குரிய விவரங்கள் பிரிக்கப்படாத இந்தியாவினுடையவை. 1948-51-க்குரிய விவரங்கள், பாகிஸ்தான் நீங்கலாக; 1952-56-க்குரியவை, பாகிஸ்தான் உள்பட.]

(a) பற்றுக்குறை, 1946–49

போரின் முடிவில் இந்தியாவின் அயல்நாட்டு வாணிபத்திற்கு நிலைமை சாதகமாக இருந்தது. இந்தியாவின் ஏற்றுமதிகளில் பெரும்பகுதியாகிய முதன்மைப் பொருள்களின் விலை, முன்பு பத்தாண்டுகளில் இருந்த வீழ்ச்சியிலிருந்து முழுவதும் மீண்டும் மறுமலர்ச்சியடைந்தது. மேலும், உத்தியோகபூர்வமான கணக்கில் இருந்த பெரிய ஸ்டர்லிங் கடனைத் தீர்த்ததும், ஸ்டர்லிங் சொத்துகள் மிகுதியாகத் திரண்டதும், பணிகளுக்காகக் கொடுபடுவதற்கு இந்தியாவிலிருந்து நிகரமாக மாற்றப்பட வேண்டிய தொகைகள் கணிசமாகக் குறைவதற்கு உதவியாயிருந்தன. இந்தச் சாதகமான நிலை இருந்தும், போர் முடிந்தது முதல் 1949-ன் இறுதிக் காலாண்டு வரையில் நம் நாடு தொடர்ச்சியாகக் கொடுப்பல்நிலை பற்றுக்குறைகளால் துன்புற்றது. இதற்குக் காரணம் இக்காலத்தில் உண்டான சில புதிய அம்சங்களே. போர்க் காலத்தில் கண்டிப்பான கட்டுப்பாடுகளால் இறக்கிவைக்கப்பட்டிருந்த மக்களிடமிருந்த அதிக அளவு வாங்குந்திறன், போர் முடிந்ததும் இறக்குமதித் தேவையை விரைவாக உண்டாக்கியது. 1947-ல் அரசாங்கம் இறக்குமதிக் கொள்கையைத் தாராளமாக்கிய செய்தி சரக்குகளை இறக்குமதி செய்ததற்கு அது அளித்த தொகைகளிலிருந்து தெரியவருகிறது. இத் தொகை 1946-ல் ரூ. 388·7 கோடியாயிருந்து 1947-ல் ரூ. 534·7 கோடியாயிற்று. 1948-ன் முதல் பாதியில் நடப்புக் கணக்கில் நிகர உபரி இருந்தது. ஆனால், 1948 ஜூலையில் இந்தியாவுக்கும் இங்கிலாந்திற்கும் இடையே செய்யப்பட்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இறக்குமதிக் கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்தியதால், 1948-ன் இரண்டாம் பாதியில் நடப்புக் கணக்கில் ரூ.128·6 கோடி துண்டு விழுந்தது. 1949-ன் முதல் பாதியிலும் இப் பற்றுக்குறை தொடர்ந்து இருந்தது. 1949 ஜனவரிக்கும் 1949 மே-க்கும் இடையில், இறக்குமதிகள் மாதம் ஒன்றுக்கு ரூ. 60 கோடி வீதம் படிப்படியாக உயர்ந்தன. ஆனால், 1948-ல் மாதச் சராசரி ஏற்றுமதி ரூ. 46 கோடியாக இருந்து 1949 மே-யில் ரூ. 26 கோடியாக இறங்கியது.

ஏற்றுமதித் தேவையில் இருந்த நெகிழ்ச்சியற்ற தன்மை அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையை நிர்ணயிப்பதில் முக்கியப் பங்கு பெற்றது. நாடு பிரிக்கப்பட்டுப் பாதகமான அரசியல் மாறுதல்கள் உண்டானதால், இந்தியாவில் உணவு இறக்குமதி மிகவும் அதிகரிக்கப்படவேண்டியதாயிற்று. ஆண்டுக்கு 0·5 மில்லியன் டன்னுக்கு மேற்படாமல் இருந்த உணவு இறக்குமதி,

போர் முடிந்தவுடன் இதைப் போல ஐந்து மடங்கு உயர்ந்தது. போருக்குப் பிந்திய வெளிநாட்டு வாணிபத்தில் உணவு இறக்கு மதி ஒரு நிலையான அம்சமாக மாறிவிட்டது. சிலவகையான எந்திரங்களை மாற்றியமைப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் உள்ள தேவையும் அதேபோல நெகிழ்ச்சியற்றதாய் இருந்தது. பெரும்பாலும் அண்மைச் செலாவணி நாடுகளிலிருந்தே உணவை இறக்குமதி செய்யவேண்டியிருந்ததால், அந்த நாடுகளுடன் இந்தியாவின் கொடுப்பல்நிலை மிகவும் மோசமாகி, டாலர் பற்றுக் குறைப் பிரச்சினையைப் பெரிதாக்கியது. 1948-ல் ஏப்ரல் முதல் செப்டெம்பர் வரை ஆறு மாதங்களில், மொத்த டாலர் பற்றுக் குறையாகிய 45 மில்லியன் டாலரில், உணவு தானியம் வாங்கியதே 35 மில்லியன் டாலர் ஆகும். உண்மையில், போர் முடிவிற்கும் 1949-ன் கடைசிக் கால் பகுதிக்கும் இடையில் உள்ள காலத்தில், இந்தியாவின் அருமைச் செலாவணிப் பற்றுக்குறையே, மொத்தக் கொடுப்பல்நிலைப் பற்றுக்குறையாக இருந்தது.

இறக்குமதி உயர்வுடன் ஒப்பிடும்போது சணல், தேயிலை, மங்கனீசு ஆகியவை அருமைச் செலாவணி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதில் திடீரென்று குறைவு ஏற்பட்டது. எளிய செலாவணி நாடுகளுக்கு இவை ஏற்றுமதி செய்யப்பட்டதால் இக் குறைவு ஈடுசெய்யப்பட்டது. எனினும், ஏற்றுமதி இவ்வாறு திருப்பப்பட்டதால், அருமைச் செலாவணி நாடுகளில் நம் துன்பம் அதிகமாயிற்று. 1948-49-ல் அமெரிக்காவில் சிறிது பின்னிறக்கம் தொடங்கியதாலும், கட்டுப்பாடு நீக்கத்திலுல் இந்தியப் பொருள்களின் விலைகள் உயர்ந்ததாலும், அமெரிக்காவில் இப் பொருள்களுக்குள்ள தேவை மிகவும் குறைந்தது. இந்தியாவின் ஏற்றுமதிகள் இறக்குமதிகளுக்குச் சமமாக இல்லாமல் இருந்ததற்குக் காரணம், உற்பத்தியளவில் குறைவு, ஏற்றுமதிப் பொருள்களுக்குப் பதில் உள்நாட்டுக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்தல், கடத்து வசதிகளில் சங்கடம், அதிகச் செலவுகள், ஏற்றுமதிப் பொருள்களை உள்நாட்டில் அதிகம் உபயோகித்தல், ஏற்றுமதி வரிகள் ஆகியவை என்று கூறலாம்.

அயல்நாட்டுக் கொடுப்பல்நிலை பாதகமாக மாறியதற்கு மற்றொரு காரணம், இங்கிலாந்தின் சார்பில் செய்யப்பட்ட செலவுகளுக்கு வரவுகள் இல்லாமையாகும்; 1946-ல் இந்த இனத்தில் இந்தியா கணிசமான தொகையைப் பெற்று பணிகள் சம்பந்தமாகச் சாதகமான இருப்பை உண்டாக்கியது. ஆனால், அடுத்த ஆண்டில் நிலைமை திடீரென்று மாறியது. பணி இனங்களில் போருக்கு முன்னர் இருந்ததுபோன்ற பற்றுக்குறை,

மீண்டும் தோன்றியது. ஆனால், அது அவ்வளவு கடுமையாக இல்லை.

1946-1949-ல் உண்டான இந்தப் பெரிய பற்றுக்குறைக்கு எப்படி நிதியளிக்கப்பட்டது? ஒரு நாட்டில் நடப்புக் கணக்கில் உள்ள கொடுப்பல்நிலை பற்றுக்குறை இவ் வழிகளில் ஈடுசெய்யப் படும்: (1) அயல்நாட்டு மானியங்கள், நன்கொடைகள், மற்ற வரவுகள்; (2) அயல்நாடுகளில் உள்ள இருப்புகளை அரசாங்கம் பயன்படுத்துதல். பிற்கூறிய முறையில் பற்றுக்குறைக்கு நிதி யளிப்பதை 'ஈடுசெய்யும் அரசாங்க நிதியளிப்பு' என்பார்கள். இது, முதலில் கூறப்பட்ட முறையிலிருந்து வேறுனது. அதில் 'விசேஷ அரசாங்க நிதியளிப்பு செய்யப்படுகிறது. ஈடுசெய்யும் அரசாங்க நிதியளிப்பில் இரண்டு தெளிவான அம்சங்கள் உண்டு. முதலாவதாக, நிதியளிப்பு உத்தியோகபூர்வமாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, அயல்நாட்டுக் கொடுப்பல்நிலை யில் உள்ள பற்றுக்குறையை ஈடுசெய்வதற்காகவே நிதியளிப்பு செய்யப்படவேண்டும். இந்தியாவில் ஈடுசெய்யும் நிதியளிப்பில் அடங்கிய இரண்டு முக்கியமான இனங்கள் (1) நாட்டில் கிடைக்கக்கூடிய பெரும் பகுதியான செலாவணிக் காப்பு நிதியி லிருந்து ஸ்டர்லிங் இருப்புகளை மாற்றுவது; (2) வெளி நாடுகளில் உள்ள வங்கும் சூழுக்கள், தூதராலயங்கள் ஆகியவற்றிடமுள்ள இருப்புகளை மாற்றுவது—இவை அமெரிக்காவில் உள்ள இந்திய அளிப்புக் குழு, லண்டனில் உள்ள ஹைகமிஷனர் ஆகியோரிட முள்ள இருப்புகள்; (3) இந்திய வாணிப பாங்குகளிடமுள்ள வெளிநாட்டு இருப்புகளை மாற்றுவது. ஏனெனில், அந்த வெளி நாட்டு இருப்புகளில் கொடுப்பல் வாங்கல்கள், இந்தியாவிலுள்ள செலாவணி அதிகாரிகளின் முழுக் கட்டுப்பாட்டுக்குட்பட்டவை; (4) பன்னாட்டுச் செலாவணி நிதியிலிருந்து, 1948, 1949-ல் செய் யப்பட்டதுபோலக் கொடுப்பல்நிலைப் பற்றுக்குறையை ஈடு செய்வதற்குச் சாதனங்களைப் பயன்படுத்துதலும், அமெரிக்க உணவுக் கடனிலிருந்து பணம் பெறுதலும். ஆக உள்நாட்டில் நன்கு வளர்ச்சியடைந்த குறும் பணச்சந்தை இல்லாததால், ஈடு செய்வதற்குப் பன்னாட்டு ரொக்கக் காப்பு நிதிகளையே இந்தியா நம்பியிருக்க வேண்டியுளது.

மேலே கூறியபடி, 1946-49-ல் இந்தியாவின் அயல்நாட்டுக் கொடுப்பல்நிலைப் பற்றுக்குறை அநேகமாக அருமைச் செலாவணி நாடுகளிடம் ஏற்பட்ட பற்றுக்குறையே. போருக்குப் பிந்திய காலத்தில் முதல் இரண்டாண்டுகளில், செலுத்தினம் பொறுத்த வரையில் இப் பற்றுக்குறை பெரிய பிரச்சினையாக இல்லை.

ஏனெனின், அப்போது ஸ்டர்லிங்கு இருப்பு மாற்றம் கண்டிப்பாக வரையறுக்கப்படவில்லை. ஆனால், 1947-ல் ஸ்டர்லிங் பகுதியில் இருந்த மத்தியக் காப்பு நிதிகளில் உண்டான திடீர்க் குறைவு, 1948-ன் ஆரம்பத்திலேயே அதை மாற்றுதற்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கவேண்டிய அவசியத்தை உண்டாக்கிவிட்டது. 1948-ன் முதல் பாதியில் இந்திய யூனியன் ஸ்டர்லிங்கு இருப்பிலிருந்து £ 10 மில்லியன்தான் எடுக்கலாம் என்றும், 1948 ஜூலை முதல் 1949 ஜூன் வரையில் £ 15 மில்லியன்தான் எடுக்கலாம் என்றும் கட்டுப்படுத்தப்பட்டது. எனினும், உள்நாட்டில் இருந்த உணவு நிலையையும் கடத்துவசதிக் குறையையும் சமாளிப்பதற்கு அமெரிக்காவிலிருந்தும் கனடாவிலிருந்தும் உணவையும் எஞ்சின்களையும் இறக்குமதி செய்யவேண்டிய அவசியத்தால், அருமைச் செலாவணி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்காக அரசாங்கம் செய்த செலவீட்டின் அளவு அதிகமாகவே இருந்தது. இதனால், அரசாங்கக் கணக்கில் வாணிபப் பொருள்களை இறக்குமதி செய்ததில் 1948-ன் மூன்றும் கால் பகுதியில்[1] ரூ. 89·5 கோடியும், நான்காம் கால் பகுதியில் ரூ. 36·3 கோடியும் பற்றுக்குறை உண்டாயிற்று. 1949-ன் முதல் பாதியிலும் இக் கணக்கில் அதே அளவு பற்றுக்குறை காணப்பட்டது. இந்தப் பற்றுக்குறையை, ஸ்டர்லிங்கு பகுதியிலிருந்த மத்தியக் காப்பு நிதியிலிருந்து விடுவித்த பணம் நிரப்ப முடியவில்லையாகையால், 1949 மார்ச் முடிய இந்தியா பன்னாட்டுச் செலாவணி நிதியிலிருந்து $ 100 மில்லியன் கடன்வாங்க வேண்டியதாயிற்று. ஆக, இந்தக் காலத்தில் ஈடு செய்யும் நிதியளிப்புக்குக் கிடைத்துப் பயன்படுத்தப்பட்ட தொகைகள் நம் ஸ்டர்லிங்கு இருப்புகளிலிருந்தும், பன்னாட்டுச் செலாவணி நிதியிலிருந்தும் கிடைத்தவையேயாகும். அட்டவணை 44-ல் இது காட்டப்பட்டுள்ளது.

(b) உபரிகள், 1949-51—மதிப்பிறக்கமும் கொரியப் பொருளாதார விக்கமும்

போருக்குப் பிறகு இந்தியாவின் ஏற்றுமதிகள் குறைந்ததற்கு ஒரு முக்கிய காரணம், இந்திய ஏற்றுமதிக்குப் பெரிய சந்தையாயிருந்த சில நாடுகளைவிட இந்தியாவில் விலைகள் மிக அதிகமாக உயர்ந்துவிட்டதுதான். மதிப்பிறக்கத்திற்கு முன்பு எட்டு மாதங்களில், அமெரிக்காவைவிட இந்தியாவில் பொது விலையளவு 75 சதவீதம் அதிகமாக இருந்தது. உணவுப் பொருள்

[1] பண்டமாற்றுப் பேரங்களும், அயல்நாடுகளுக்கு அளிக்கப்பட்ட கடன்களும் ரூபாய்ப் பத்திரங்களும் (அயல்நாட்டு அரசாங்க நிறுவனங்கள் வைத்திருந்தவை) உள்பட.

களை அதிகம் இறக்குமதி செய்ததும், பணவீக்கத்தினாலும் செலாவணியை அதிகம் மதிப்பிட்டதாலும் ஏற்றுமதிகள் தடைப்பட்டதும், அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையை மேலும் மோசமாக்கின. ஆகவே, இந்தியா போன்ற நாடுகளுக்கு, மதிப்பிறக்கம் ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாகத் தேவைப்பட்டது. செலாவணியை மதிப்பிறக்கம் செய்வதால், அமெரிக்காவுடன் விலையைச் சரிக்கட்டிக்கொள்ளமுடியும். மேலும், ஏற்கெனவே மதிப்பிறக்கம் செய்திருந்த நாடுகளுடன் சமனற்ற நிலையை அதிகமாக்காமல் தடுப்பதற்கும் அது தேவையாயிருந்தது.[1]

அட்டவணை 44

அயல்நாட்டுக் கொடுப்பல்நிலைப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பு, 1946–49

(கோடி ரூபாய்களில்)

	1946	1947	1948	1949
1. நிதியளிப்பு தேவைப்பட்ட மொத்தப் பற்றாக்குறைகள்	— 66·0	— 208·9	— 335·4*	— 185·0
2. தவறுகளும் விடுதல்களும் ...	+ 7·3	+ 97·5	— 56·7	+ 16·2
3. 1-ம் 2-ம் சேர்ந்து ...	— 58·7	— 111·4	— 392·1	— 168·8
4. ஈடுசெய்யும் அரசாங்க நிதியளிப்பு :				
(a) பன்னாட்டுச் செலாவணி நிதி உதவி	—	—	+ 22·7	+ 10·5
(b) வெளிநாட்டுச் செலாவணிச் சொத்து (ஸ்டர்லிங்கு இருப்புக் குறைவு உட்பட)	+ 56·9	+ 107·5	+ 354·0	+ 158·2
(c) மற்ற இனங்கள் ...	+ 1·8	+ 3·9	+ 15·4	+ 0·1
5. (a) + (b) + (c) ...	+ 58·7	+ 111·4	+ 392·1	+ 168·8

* பென்ஷன் ஆண்டுத்தொகை வாங்கியதும் (ரூ. 224 கோடி), பாதுகாப்புப் பொருள்கள் வாங்கியதும் (ரூ. 60 கோடி).

(ஆதாரம் : 'Post-War Balance of Payments of India', Reserve Bank of India Bulletin, July 1949; India's Balance of Payments, 1948–51, Reserve Bank of India.)

மதிப்பிறக்கத்தின் விளைவு நம் நாட்டின் வெளிநாட்டு வாணிபத்திலிருந்து தெரிகிறது. 1949-ல் இருந்த ரூ. 167·4

[1] United Nations, 'Economic Survey of Asia and the Far East,' 1950, p. 323.

கோடி பற்றுக்குறைக்குப் பதில் 1950-ல் நடப்புக் கணக்கில் ரூ. 170·1 கோடி உபரி உண்டாயிற்று. 1949 அக்டோபர் முதல் செப்டம்பர் வரை, முதல் மதிப்பிறக்க ஆண்டில், மதிப்பிறக்கத்திற்கு முன்பு அதே காலத்தில் அருமைச் செலாவணி நாடுகளுக்குச் செய்யப்பெற்ற ஏற்றுமதியளவைவிட 33·4 சதவீதம் அதிகமாயிருந்தது. இந்திய ஏற்றுமதிப் பொருள்களின் விலைகளும் உயர்ந்ததால், அருமைச் செலாவணி நாடுகளிலிருந்து கிடைத்த வரவு 55·6 சதவீதம் அதிகமாயிற்று.[1] அட்டவணை 45-ல் வெளி நாட்டுச் செலுத்தினங்களை மதிப்பிறக்கம் எப்படிப் பாதித்தது என்பது காட்டப்படுகிறது.

அட்டவணை 45

வெளிநாட்டு வாணிபத்தை மதிப்பிறக்கம் பாதித்த தன்மை (கோடி ரூபாய்களில்)

	1949 அக்டோபர் முதல் 1950 செப்டம்பர் வரை	1948 அக்டோபர் முதல் 1949 செப்டம்பர் வரை
A. நடப்புக் கணக்கு :		
1. அருமைச் செலாவணி நாடுகளிலிருந்து மொத்த வரவு	177·1	123·6
2. அருமைச் செலாவணி நாடுகளுக்கு மொத்தச் செலுத்தினம்	151·8	195·7
3. இருப்பு	+25·2	−72·1
4. எளிமைச் செலாவணி நாடுகளிலிருந்து மொத்த வரவு	461·3	393·6
5. எளிமைச் செலாவணி நாடுகளுக்கு மொத்தச் செலுத்தினம்	420·6	570·3
6. இருப்பு	+40·7	−176·7
B. முதலினக் கணக்கு :		
7. அரசாங்கம், பாங்குகள், தனியார் ஆகியவர்களின் நிகரச் சொத்துகள்	+34·7	−245·0

(ஆதாரம் : Reserve Bank of India Bulletin, Nov. 1950, p. 780.)

மதிப்பிறக்கத்தின் விளைவு கண்கவரும்படி இருந்தாலும், சிறிது காலத்திற்கே இருந்தது. மதிப்பிறக்கத்திற்குப் பிறகு

1 Reserve Bank of India Bulletin, November 1950, p. 783.

1949-ன் கடைசிக் கால் பகுதியில் தொடங்கிய சாதகக் கொடுப்பல்நிலைப் போக்கு 1950-ன் முதல் கால் பகுதி வரை தொடர்ந்து சென்றது. அப்போது நடப்புக் கணக்கில் ரூ. 30·5 கோடி உபரி உண்டாயிற்று. ஆனால், 1950-ன் இரண்டாம் கால் பகுதியில் மீண்டும் ரூ 19·2 கோடி பற்றுக்குறை ஏற்பட்டது. மதிப்பிறக்கத்தின் சக்தி பெரும்பாலும் விரைவாகச் செலவழிந்து விட்டது. ஏனெனில், ஏற்றுமதி செய்வதற்கு இந்தியாவில் அதிக உபரிப் பொருள்கள் இல்லை. இதற்குக் காரணம் முதற் கருவிப் பொருள்களைப் பெறுவதில் இருந்த துன்பங்களும், பாகிஸ்தான் மதிப்பிறக்கம் செய்ய மறுத்தமையும்தான்.

உண்மையில், மதிப்பிறக்கத்தின் விளைவுகளைச் சரியாக மதிப்பிடுவது கடினம். ஏனெனின், அதே சமயத்தில் இருந்த வேறு சில காரணங்களும் அதேபோன்ற விளைவைத் தந்திருக்கக் கூடும். 1949-ன் முதல் பாதியில் டாலர் பகுதிக்கு நம் செலுத்தினங்களில் கடுமையான நிலை ஏற்பட்டதால், காமன்வெல்த் அமைச்சர்கள் மாநாட்டில், 1948-ல் இருந்த அளவில் ஆண்டு தோறும் 75 சதவீதம்தான் டாலர் இறக்குமதி செய்ய வேண்டுமென்றும், அவசர நடவடிக்கையாக 1949 ஜூனுக்கும் செப்டம்பருக்கும் இடையில் டாலர் இறக்குமதியை நிறுத்தி வைக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. 1949-ன் முதல் மூன்று கால் பகுதிகளில் நடப்புக் கணக்கில் படிப்படியாக பற்றுக்குறைகள் குறைந்துவந்தன என்பதிலிருந்து, 1949 செப்டம்பருக்கு முன், அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில் சம நிலை ஏற்படுத்துவதற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பயன் தந்தன என்பது விளங்கும்.[1] மதிப்பிறக்கத்திற்கு முன் சில மாதங்களில் இருந்த பற்றுக்குறைகள், மதிப்பிறக்கத்தைப் பற்றிய வதந்திகளால் உண்டாகிய ஊக வாணிகச் சக்திகளால் ஓரளவு ஏற்பட்டன என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. 1950-ன் கடைசி கால்பகுதியில் உண்டான சாதகமான மாற்றம், பெரும்பாலும் கொரியப் போரினால் ஏற்பட்டதே. 1950-ல் கொடுப்பல் நிலையில் ஏற்பட்ட உபரியில் பெரும்பகுதி, பின் இரண்டு கால் பகுதிகளில் உண்டானது. முதல் இரண்டு கால் பகுதிகளில் உண்டான நிகர உபரி ரூ. 11·3 கோடியாகும். அந்த வருடத்தில் இரண்டாம் பாதியில் ரூ. 58·7 கோடி உபரி கிடைத்தது. ஆக, அந்த ஆண்டின் மொத்த உபரியாகிய ரூ. 70 கோடியில் இரண்டாம் பாதியில் கிடைத்தது மட்டும் 84 சதவீதத்

[1] 1949-ன் முதல் கால்பகுதியில் இருந்த பற்றுக்குறை ரூ. 102·1 கோடியிலிருந்து இரண்டாம் கால்பகுதியில் ரூ. 78·6 கோடிக்கும், மூன்றும் கால்பகுதியில் ரூ. 29·5 கோடிக்கும் இறங்கியது.

திற்கு மேலாகும். இந்திய ஏற்றுமதிப் பொருள்களுக்கு மேலுடு களில் இருப்புச் சேர்க்கும் தேவை ஏற்பட்டதாலும், மத்தியக் கிழக்கிலும் தூரக்கிழக்கிலும் உள்ள நாடுகளில் தேசிய வருமானம் பெருகியதால் நம் பொருள்களுக்குத் தேவை மிகுதியானதாலும் இந்தப் போக்குக் காணப்பட்டது. இதற்கு மாறுக, 1950-ன் கடைசிக் கால்பகுதியில், வெளிநாட்டுச் செலாவணியைத் தாராளமாகப் பெற்றும், திறந்த பொது அனுமதி (O.G.L.) விரிவாக்கப்பட்டும்கூட, வெளிநாடுகளில் பொருள் குறைவு காரணமாக இறக்குமதியில் அதிக மாறுதல் ஏற்படவில்லை. 1951-ன் முதல் இரண்டு கால்பகுதிகள்வரை தொடர்ந்திருந்த அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையில் கணிசமான உபரிக்குக் காரணம் இதுதான்.

(c) பற்றுக்குறைகள் 1951-52 போர்த்தேவை குறைதல்

1951 மத்திக்கும் 1952 மத்திக்கும் இடையில், 1951-ன் மூன்றும் கால்பகுதியில் ரூ. 14·2 கோடியிலிருந்து 1951-ன் இறுதிக் கால்பகுதியில் ரூ. 50·8 கோடியாகவும், 1952-ன் முதல் கால்பகுதியில் ரூ. 75·4 கோடியாகவும் பற்றுக்குறை படிப்படியாக உயர்ந்தது. 1952-ன் இரண்டாம் கால்பகுதியில் ரூ. 5·4 கோடிக்கு மட்டான பற்றுக்குறை காணப்பட்டது. இந்தியப் பொருள்களை இருப்புச் சேர்ப்பதற்கும் ஆயுதப் பெருக்கம் செய்வதற்கும் ஆன வெளிநாட்டுத் தேவையில் குறைவு ஏற்பட்டதே இந்தப் பாதகப் போக்குக்குக் காரணமாகும். 1951-ன் இரண்டாம் பாதியிலிருந்து ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களின் விலைகள் தொடர்ந்து குறைந்துகொண்டே வந்தன. இவற்றுள் ஏற்றுமதி விலைகள் மிகவும் குறைந்தன. ஆகவே, ஏற்றுமதி வருமானம் படிப்படியாகக் குறைந்தது.[1] அதே சமயத்தில் அத்தியாவசியமான பொருள்களின் இறக்குமதி கணிசமாகக் குறைந்தது. 1951-ன் மத்தியிலிருந்து அமெரிக்கக் கோதுமைக் கடன் திட்டத்தின்கீழ் அதிக உணவு இறக்குமதி செய்யப்பட்டதும், அதிக எல்லையையும் அதிகப் பொருள்களையும் தழுவி 1951 ஜூன் மாதத்தில் திறந்த பொது அனுமதி XXIII-ஐ வெளியிட்டு இறக்குமதிகளைத் தாராளமாக்கியதும், அமெரிக்காவிலிருந்து அதிகக் கச்சாப் பருத்தி இறக்குமதிக்கு அனுமதியளித்ததும் இறக்குமதிகளின் மதிப்பு உயர்வதற்கு முக்கியக்காரணங்களாகும். பொருளாதாரவளர்ச்சிக்கும் இன்றியமையாத துய்ப்புக்கும் வேண்டிய பொருள்களின் அளிப்பைப்

1 ஏற்றுமதிப் பொருள்களின் அளிப்பில் நெகிழ்ச்சி குறைந்துள்ள அதிக முன்னேற்றமில்லாத நாடுகளில் இது ஒரு சிறப்பான அம்சமாகும்.

பெருக்குவதற்கு இறக்குமதிகளைத் தாராளமாக்கியும் ஏற்றுமதிகளைக் குறைத்தும் அரசாங்கம் மேற்கொண்ட இறக்குமதிக் கொள்கையின் விளைவே இது.

d) 1952-ன் மத்தியிலிருந்து 1955-56 வரையில் உயர்வுகள்

அட்டவணை 43-ல் உள்ள விவரங்களிலிருந்து, 1953-ன் இரண்டாம் காலாண்டும், 1954-ன் இரண்டாவது, மூன்றாவது காலாண்டுகளும் நீங்கலாக, 1952 முதல் தொடர்ச்சியான உயர்வுகள் இருந்துவந்துள்ளன. இரண்டாம் காலாண்டுகளில் உண்டான பற்றாக்குறைக்குக் காரணம் பருவகால நிலையே. சாதாரணமாக இரண்டாம் காலாண்டில் ஏற்றுமதிகள் மிகவும் குறைந்து விடுகின்றன. அரசாங்கம் வாங்கிய உணவுக்குப் பணம் கொடுப்பது ஆண்டின் முதல் பாதியிலேயே நிகழும். இதற்கு மாறாக, ஆண்டின் முதல் காலாண்டிலும் கடைசிக் காலாண்டிலும் விவசாயப் பொருள்கள் விற்கப்படும். 1952-54 ஆகிய இரண்டாண்டுகளில் சாதகக் கொடுப்பல்நிலை இருந்ததற்குக் காரணம், இறக்குமதிக் குறைவு (இறக்குமதிகள் தாராளமாக்கப் பட்டும்கூட), குறிப்பாக உணவுப் பொருள்கள், தொழில்களுக்கு வேண்டியகச்சாப் பொருள்கள் ஆகியவற்றின் இறக்குமதிக்குறைவு தான். 1952-ல் உணவு இறக்குமதி வழக்கமான அளவுக்குமேல் மிக அதிகமாக இருந்தது. ஆனால், 1953, 1954-ல் நாட்டில் உண்டான உற்பத்திப் பெருக்கம் நிலைமையை மாற்றிவிட்டது. அதுபோலவே, தொழில் கச்சாப் பொருள்களின் இறக்குமதி, குறிப்பாகக் கச்சாப் பருத்தி, சணல் இறக்குமதியும் குறைந்து விட்டது. காரணம், நாட்டில் உண்டாகும் தொழில் பெருக்கத்திற்குத் தேவையான கச்சாப் பொருள்களை உள்நாட்டிலிருந்தே பெறவேண்டுமென்ற கொள்கையை மேற்கொண்டதுதான். அடுத்த ஆண்டில், அபிவிருத்திச் செலவு வேகமாக அதிகரித்ததன் காரணமாக, எந்திரங்களும் மற்ற முதற்கருவிப் பொருள்களும் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டதன் விளைவு, உள்நாட்டில் நிகழ்ந்த அதிகத் தொழில் உற்பத்தி, உணவு, விவசாய உற்பத்தியில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம், அதிக ஏற்றுமதிகள், வியாபார நிபந்தனைகளில் சாதகமான திருப்பம் ஆகியவற்றில் ஈடுசெய்யப்பட்டது. இதன் விளைவாக வெளிநாட்டுக் கணக்குகள் அநேகமாகச் சமநிலையில் இருந்தன; 1954-55 நிதியாண்டில் சிறிது உபரி ரூ. 8·3 கோடியும் காணப்பட்டது. 1955-56-ல், வியாபார நிபந்தனைநிலை 10 சதவீதம் பாதகமாகி, இறக்குமதிகள் ஏற்றுமதிகளைவிட அதிகரித்திருப்பினும், நடப்புக் கொடுப்பல் நிலையில் கண்ட உபரி ரூ. 16·9 கோடி முந்திய ஆண்டைவிட

அதிகமாக இருந்தது. இதற்கு முக்கியக் காரணம் அரசாங்க நன்கொடைகள் கணிசமாக உயர்ந்ததுதான். அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில் கண்ட இப் போக்கினால், வெளிநாட்டுக் காப்பு நிதிகள் உயர்ந்தன. அதே காலத்தில் நம் நாட்டின் அயல் நாட்டுச் செலாவணிப் பொறுப்புகள் சிறிதளவு உயராமலிருந்திருந்தால் இது மேலும் அதிகரித்திருக்கும்.

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1951–56), 1951–52-ல் மட்டும்தான் நடப்பு இருப்பில் பற்றுக்குறை உண்டாயிற்று. இப் பற்றுக்குறை மிகப் பெரியது (162·6 கோடி). அடுத்த நான்கு ஆண்டுகளில் கிடைத்த குறைவான உபரிகளின் மொத்தத்தைவிட இது ரூ. 29·8 கோடி அதிகம். திட்டத்தின்படி உள்நாட்டில் முதலீட்டின் வேகம் குறிப்பிடத்தகுந்த அளவு உயர்ந்தாலும், உள்நாட்டில் உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டதாலும் முதல் ஆண்டில் பற்றுக்குறை உண்டாயிற்று. அட்டவணை 46-ல் ஐந்தாண்டுகளின் போக்கு காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 46

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்த அயல்நாட்டுக் கொடுப்பல்நிலை
(கோடி ரூபாய்களில்)

	1951–52	1952–53	1953–54	1954–55	1955–56	திட்ட காலத்தில் மொத்தம்
இறக்குமதிகள்	962·9	633·0	591·8	681·6	750·6	3619·9
ஏற்றுமதிகள்	730·1	601·9	539·7	56·6	641·1	3109·4
வாணிப இருப்பு	−232·8	−31·1	−52·1	−85·0	−109·5	−510·5
கண்கூடல்லாதவை	+64·9	+80·5	+80·5	+77·5	+84·4	+387·8
அரசாங்க நன்கொடைகள்	+5·3	+10·8	+19·0	+15·8	+42·0	+92·9
கடப்பு இருப்பு	−162·6	+60·2	+47·4	+ 8·3	+16·9	−29·8
தவறுகளும் விடுதல்களும்	−45·0	−25·7	+2·3	−12·9	−5·3	−86·6
அரசாங்கக் கடன்கள்	+59·6	+35·1	+1·6	+0·6	+6·5	+103·4
மற்ற முதலினப் பேரங்கள்	−20·6	−51·1	−20·3	−13·2	−3·1	−108·3
காப்பு நிதிகளில் மாறுதல் : அதிகம் (+1) குறைவு (−)	−168·6	+18·5	+31·0	−17·2	+15·0	−121·3

(ஆதாரம்: 'Reports on Currency and Finance, 1955–56 and 1956–57', Reserve Bank of India.)

அரசாங்க நன்கொடைகள் நீங்கலாக, முதல்திட்ட காலத்தில் நடப்புப் பற்றுக்குறை ரூ. 123 கோடி—திட்டக் குழு எதிர்பார்த்ததைவிட (ரூ. 667 கோடி முதல் ரூ. 727 கோடிவரை) இது மிகவும் குறைவு; இதற்கெதிராக அரசாங்க நன்கொடைகள் (ரூ. 93 கோடி), அரசாங்கக் கடன்கள் (ரூ. 103 கோடி) ஆகிய இரண்டையும் வைத்துப் பார்த்தால், ரூ. 123 கோடி பற்றுக்குறையும், 'தவறுகளும் விடுதல்களும்' என்ற தலைப்பில் ரூ. 866 கோடி அளவுள்ள இனம் தெரியாத கொடுப்பல்களும் சரிக்கட்டப்பட்டு விடும். ஐந்தாண்டுகளில் நிகரக் காப்பு நிதிகளில் ரூ. 121 கோடி குறைவு ஏற்பட்டது. ஐந்தாண்டுத் திட்டத்தின் தேவைக்குப் புறம்பான மற்ற முதலின நடவடிக்கைகளால் ஆகும். இதனால் ரூ. 108 கோடி மூலதனம் வெளியேறியது.

இந்த ஆண்டுகளில் இந்தியாவில் அயல்நாட்டுக் கொடுப்பல் நிலைப் போக்குகளின் நிதியம்சத்தைப்பற்றிய முழுக் கருத்தை இந்திய ரிசர்வ் பாங்கின் சொத்துகள், அரசாங்க இருப்புகள், அதிகாரம் பெற்ற வணிகர்களின் இருப்புகள் ஆகியவை அடங்கிய அயல்நாட்டுச் செலாவணிக் காப்பு நிதியில் உண்டான மாறுதல்களிலிருந்து அறியலாம். அட்டவணை 47-ல் இது காட்டப் பட்டுள்ளது.

அட்டவணை 47

அயல்நாட்டுச் செலாவணிக் காப்பு நிதியில் மாறுதல், 1951-56
(கோடி ரூபாய்களில்)

மார்ச்சு முடிவில் இருந்தபடி	காப்பு நிதி	அயல்நாட்டுச் செலாவணிப் பொறுப்புகள்	நிகரக் காப்பு நிதி
1951	963·9	129·0	834·9
1952	795·3	140·7	654·6
1953	815·8	102·8	711·0
1954	844·8	87·1	757·7
1955	827·6	75·8	751·8
1956	842·6	80·9	761·7

(ஆதாரம் : Reserve Bank of India Bulletin, June 1956, p.617.)

ஓராண்டில் (1952) இந்தியாவில் உள்ள செலாவணி அதிகாரிகளிடமிருந்து வெளிநாட்டுச் சொத்துகள் ரூ. 180 கோடி குறைந்தன. மற்றும் ஆண்டுகளில், 1955-ல் ரூ. 6 கோடியாகிய சிறிய தொகைக் குறைவு நீங்கலாக, நிகரக் காப்பு நிதிகளில் உயர்வு

காணப்பட்டது. இதற்குக் காரணம் நாட்டின் கொடுப்பல்நிலை சீர்திருந்தியதுதான். மொத்த நிகரக் குறைவு (ரூ. 121 கோடி), திட்டக்குழு எதிர்பார்த்ததில் பாதிக்கும் குறைவுதான். அந்நிய நாட்டுக் காப்பு நிதியிலிருந்து எடுக்கப்படும் என்று மதிப்பிடப் பட்ட தொகைக்கும் உண்மையாக எடுக்கப்பட்ட தொகைக்கும் வித்தியாசம் ஏற்பட்டதற்குக் காரணம், உள்நாட்டில் கணிசமாக உணவு உற்பத்தி அதிகரித்ததும், திட்ட காலத்தில் உத்தேசிக்கப் பட்ட சில கட்டட வேலைகளை ஆரம்பிக்காமலிருந்ததும், முதல் திட்டத்தில் திட்டக்குழு உத்தேசித்திருந்ததைவிடக் குறைவாக முதலீடு செய்யப்பட்டதும்தாம்.

(e) இரண்டாவது திட்ட காலத்தில் பாதகமான போக்குகள்

இரண்டாம் திட்டம் தொடங்கியதுமுதலாக, இந்தியாவின் வெளிநாட்டுக் கொடுப்பல்களில் பாதகமான போக்கு உண்டாயிற்று. திட்டத்தின் மூன்றும் ஆண்டு முடியும்வரையில், நம் வெளிநாட்டு இருப்புகளில் தொடர்ந்து நெருக்கடி அதிகமாக இருந்துவந்தது. அதன்பிறகு நெருக்கடி சிறிது தளர்ந்தது. முதல் மூன்றுண்டுகளில் இறக்குமதிகள், எதிர்பார்த்த வருடாந்தரச் சராசரித் தொகையாகிய ரூ. 868 கோடிக்கும் மேலாக, ரூ. 1,000 கோடியையும் தாண்டிச்சென்று 1957–58-ல் உச்ச அளவாகிய ரூ. 1,234 கோடியை எட்டின. இறக்குமதி அதிகரிப்பு முழுவதும் அரசாங்கக் கணக்கிலேயே இருந்தது. இந்த வருடங்களில் தனியார் இறக்குமதி படிப்படியாகக் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துவிட்டது. அரசாங்கக் கணக்கில் இறக்குமதிகள் 1956–57-ல் ரூ. 287·6 கோடியாயிருந்து, அடுத்த ஆண்டில் ரூ. 574·4 கோடியாகவும், 1958–59-ல் ரூ. 524·8 கோடியாகவும் மாறின. ஆனால், தனியார் இறக்குமதிகள் 1956–57-ல் ரூ. 811·9 கோடியாயிருந்து, 1957–58-ல் ரூ. 696·2 கோடியாகவும், 1958–59-ல் மேலும் இறங்கி ரூ. 504·8 கோடியாகவும் மாறின. இறக்குமதிகள் படிப்படியாக ஏறியதற்கு மாறுக, 1956–57-ல் ரூ. 635·2 கோடியாக இருந்த ஏற்றுமதிகள், அடுத்த ஆண்டில் ரூ 594·1 கோடியாகவும், 1958–59-ல் ரூ. 575·9 கோடியாகவும் பின்னடைந்தன. திட்டத்தின் முதல் ஆண்டிலும் மூன்றும் ஆண்டிலும் வாணிப இருப்பில் பற்றுக்குறை ரூ. 450 கோடிக்குமேல் இருந்தது; ஆனால், இரண்டாம் ஆண்டில் சுமார் ரூ. 640 கோடியை எட்டியது. 'அரசாங்க நன்கொடைகள்,' 'கண்கூடல்லாதவை' என்ற இனங்கள் நீங்கலாக, நடப்புக் கணக்கில் பற்றுக்குறை 1956–57-ல் ரூ. 312·3 கோடியும், 1957–58-ல் ரூ. 501·4 கோடியும், 1958–59-ல் ரூ. 327·6 கோடியும் இருந்தது. வெளிநாட்டு வாணிபத்தில் எதிர்பாராமல்

ஏற்பட்ட இந்த மாறுதலுக்கு முக்கியக் காரணங்கள், திட்டத்தில் உள்ள சில இனங்களுக்கு வேண்டிய அயல்நாட்டுச் செலாவணிச் செலவு திடீரென்று அதிகரித்ததும், உணவுப் பாதுகாப்புப் பொருள்கள், கச்சாப் பொருள்கள், முந்திய ஆண்டுகளில் தொடங்கப்பெற்ற தொழில்களுக்கு வேண்டிய எந்திரப் பகுதிகள் ஆகியவற்றை அதிக அளவில் இறக்குமதி செய்ததும் ஆகும். நடப்புக் கணக்கில் அதிகப் பற்றுக்குறை ஏற்பட்டதால், திட்டத்தின் முதல் மூன்றாண்டுகளில், முறையே ரூ. 221·3 கோடி, ரூ. 259·9 கோடி, ரூ. 42·3 கோடி வெளிநாட்டுக் காப்பு நிதிகளிலிருந்து எடுக்க வேண்டியதாயிற்று. 1958–59-ல் வெளிநாட்டுக் கடன்கள் (பன்னாட்டுச் செலாவணி நிதியிலிருந்து எடுத்தது உட்பட) அதிக அளவில் கிடைத்ததால்,[1] அந்த ஆண்டில் வெளிநாட்டுக் காப்பு நிதிகளிலிருந்து எடுக்கப்பட்ட தொகை குறைந்துள்ளது. மூன்றாண்டுகளில் வெளிநாட்டுக் காப்பு நிதி ரூ. 296 கோடி குறைந்தது. (1956 இறுதியில் ரூ. 683·5 கோடியாக இருந்து, 1959 இறுதியில் ரூ. 387·5 கோடியாயிற்று.) 1958-ன் இறுதியில் அது கீழ் எல்லையாகிய ரூ. 343·9 கோடியை எட்டியது.

1957–லேயே கடுமையான இறக்குமதிக் கொள்கை கையாளப்பட்டதும், ஏற்றுமதிகளை அதிகரிக்க உண்மையாக முயற்சி செய்ததும் நிலைமையை அதிக அளவு சீராக்கின. 1958–59-ல் அரசாங்க இறக்குமதிகள் ரூ. 525 கோடியாயிருந்து, 1959–60-ல் ரூ. 416 கோடியாகக் குறைந்தன.[2] ஆனால், தனியார் இறக்குமதிகள் ரூ. 500 கோடிக்குமேல் சிறிது அதிகம் இருந்தன. இதற்கு மாறாக, இந்த இரண்டாண்டுகளில் ஏற்றுமதிகள் ரூ. 575·9 கோடியிலிருந்து ரூ. 623·3 கோடிக்கு உயர்ந்தன. இதன் விளைவாக, நடப்புக் கணக்குப் பற்றுக்குறை ரூ. 328 கோடியிலிருந்து ரூ. 181 கோடியாக இறங்கியது. ஆகவே, 1959–60-ல் வெளிநாட்டுக் காப்பு நிதியிலிருந்து ரூ. 16·1 கோடிமட்டும் எடுக்கப்பட்டது. ஆனால், 1957–58-ல் ரூ. 260 கோடி எடுக்கப்பட்டிருந்தது. 1958 இறுதியில் ரூ. 344 கோடியாக இருந்த நமது அயல்நாட்டுச் செலாவணிக் காப்பு நிதி, 1959-ன் இறுதியில் ரூ. 388 கோடியாக முன்னேறியது. எனினும், அதுமுதலாக அது இறங்குமுகம் கண்டு கவலைக்கிடமாயிற்று. 1960 ஜூன் இறுதியில் வெளிநாட்டுக் காப்பு நிதி ரூ. 323 கோடியாகிய கீழ் எல்லைக்கு இறங்கியது.

[1] முதல் இரண்டாண்டுகளில் ரூ. 85·4 கோடியும் ரூ. 134·6 கோடியும், 1958–59-ல் ரூ. 218·6 கோடியுமாகும்.

[2] Figures for 1959–60 'preliminary'—Reserve Bank of India Bulletin, July 1960, p. 926.

இவ்வாறு 1956–57 முதல் 1959–60 வரை நான்காண்டுகளில் இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும் முறையே மொத்தம் ரூ. 4,286 கோடியும் ரூ. 2,428 கோடியும் ஆயின. இதனால் வாணிப இருப்பில் ரூ. 1,858 கோடி துண்டு விழுந்தது. நடப்புக் கணக்குப் பற்றுக்குறையின் மொத்தம் ரூ. 1322 கோடியாயிற்று. இந்தப் பற்றுக்குறையில் ரூ. 600 கோடி அல்லது 45 சதவீதம் வெளி நாட்டுக் கடன்களாலும், ரூ. 540 கோடி அல்லது 40 சதவீதம் வெளிநாட்டுக் காப்பு நிதியிலிருந்து எடுத்தும் ஈடுசெய்யப் பட்டன. எஞ்சிய 15 சதவீதம், முதலினைக் கணக்கில் இடைத்த நிகர வரவுகளால் ஈடுசெய்யப்பட்டது.

அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையும் விலைகளும்

வெளிநாட்டு நடப்புக் கணக்கில் உபரி இருப்பது வெளி நாட்டுத் தேவை மிகுதியைக் காட்டுவதால், உள்நாட்டு விலைகளை அது சாதாரணமாக உயர்த்துவதற்கு உதவவேண்டும். இதற்கு மறுதலையாக, வெளிநாட்டுப் பற்றுக்குறை உள்நாட்டுப் பொருளாதாரத்தில் பணவாட்டத்தை உண்டாக்கவேண்டும். இருப்பினும், உண்மையில் அயல்நாட்டுக் கொடுப்பல்நிலைப் போக்கும் உள்நாட்டு விலையளவும் அவ்வளவு நேரடியான நெருங்கிய தொடர்புடையவையாய் இல்லை. அதாவது, நடப்புக் கணக்கில் உபரி இருந்தால் விலையளவு உயரவேண்டுமென்ப தில்லை; பற்றுக்குறை இருந்தால் விலையளவு இறங்கவேண்டு மென்பதும் இல்லை. இதற்குக் காரணம் பொருளாதார அமைப் பில் உள்ள ஈடுசெய்யும் அம்சங்கள்தாம். உள்நாட்டுச் செலவு அதிகரிப்பதற்குச் சமமாக உற்பத்தியும் வருமானமும் அதிகரித் தால், அதே நேரத்தில் நாட்டின் ஏற்றுமதிக்கும் தேவை அதிகரித் தால், அவற்றின் விளைவு நடப்புக் கணக்கில் உபரி உண்டாவதும் விலைகளில் ஏறுமுகம் தோன்றுவதும் ஆகும். வெளிநாட்டுக் காப்புநிதி அதிகரித்து அதன்விளைவாகப் பண அளிப்புப் பெருகு வதால், விலையேற்றம் உண்டாவது எளிதாகிறது. ஆகையால், ஒரு நாட்டில் அரசாங்க பட்ஜெட்டுகள் சமனுக்கப்பட்டு பாங்கு செலாவணி மாறுமல் இருந்தால், அதே சமயத்தில் வெளிநாட்டு நடப்புக் கணக்கிலும் உபரி இருந்தால், பண அளிப்புப் பெருக்க மும் விலையேற்றமும் அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையால் உண்டாயின என்று கூறலாம். ஆகவே, வெளிநாட்டுத் தேவை அதிகரிப்பு உள்நாட்டு பட்ஜெட் பற்றுக்குறைகளாலும் பாங்கு செலாவணிச் சுருக்கத்தினாலும் ஈடுசெய்யப்படக்கூடும். மறுதலை யாக, முதலீட்டு அளவில் உயர்வு, வரவெஞ்சிய செலவு (deficit spending), பாங்கு செலாவணிப் பெருக்கம் ஆகிய உள்நாட்டுக்

காரணங்களால் உண்டாகும் பணவீக்க நெருக்கடியை, வெளி நாட்டுப் பற்றுக்குறையால் கட்டுப்படுத்தியோ சமனுக்கியோ வைக்கலாம். எந்த ஒரு குறிப்பிட்ட காலத்திலும், வெளி நாட்டுக் கொடுப்பல்நிலையில் உண்டாகும் மாறுதல்களுக்கும் உள் நாட்டில் விலையளவு மாறுவதற்கும் நேரடியான காரணகாரியத் தொடர்பை ஏற்படுத்தமுடியாது என்பதை இவை காட்டும். எதிரெதிரான சக்திகளின் பலத்தை அளவிடவும்,ஒரு குறிப்பிட்ட விலைப்போக்கிற்கு முக்கியமான காரணம் அல்லது காரணங்கள் என்ன என்பதைப் பொதுவாகக் காட்டவும்தாம் முடியும்.

போருக்குப் பிந்திய அடுத்து வந்த சில ஆண்டுகளில், குறிப் பாக 1947 தொடக்கம்முதல் 1949 வரை, அயல்நாட்டுக் கொடுப் பல்நிலையில் ஒரே மாதிரியாகப் பற்றுக்குறைகள் காணப்பட்டன. அதே சமயத்தில் பண அளிப்பு பெருகிப் பொது விலையளவு படிப் படியாக ஏறியது. உள்நாட்டில் பொருள் அளிப்புக்குமேல் தேவை மிகுந்தால் வெளிநாட்டுத் தேவைக்குறைவு ஈடுசெய்யப் பட்டது என்பதுதான் இதற்குப் பொருள். நம் நாட்டில் பலம் வாய்ந்த சக்திகள் இயங்கி விலையளவை உயர்த்தி, அதனால் அயல் நாட்டு வாணிபத்தையும் பாதித்தன. உற்பத்திக் குறைவு, கட்டுப்பாட்டு நீக்கம், அடங்கிக் கிடந்த துய்ப்போர் தேவை வெளிப்பட்டது ஆகிய இவை எல்லாம் விலைகளை வானளாவ உயர்த்தின. இந்தக் காலம் முழுவதிலும் இந்தியாவில் விலை யளவு மிக வேகமாக உயர்ந்து, அது நெருங்கிய வாணிபத் தொடர்பு கொண்டிருந்த மற்ற நாடுகளில் இருந்ததைவிட அதிக

வருடம்	அமெரிக்கா	இங்கிலாந்து	ஆஸ்திரேலியா	இந்தியா *
1945	123	155	140	245
1946	140	161	141	275
1947	176	176	150	308
1948	191	202	170	376
1949	180	212	189	385

* 1945-46 தொடங்கிய நிதியாண்டுகளுக்கு இவ் விவரங்கள் உரியவை. அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலிய அடிப்படை 1937 = 100; இந்தியாவிற்கு அடிப்படை 1939 ஆகஸ்டு 19 = 100; 1946-47வரை துல்லியமான தொடர்; இறுதி மூன்றுண்டு களுக்குப் பொதுக் காரியத் தொடர்.

உயர்ந்த எல்லையில் ஒரே மாதிரியாக இருந்தது. மேலேயுள்ள விலைக்குறியீட்டெண்களால் இது அறியப்படும். மொத்தத்தில் இக் காலத்தில் அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையில் பற்றுக்குறை ஏற்பட்டது உள்நாட்டு விலையமைப்பினால்தான். இருப்பினும்,

ஒரே மாதிரியாகப் பற்றுக்குறைகள் இருந்ததால், போர்க் காலம் முழுவதிலும் அதற்குப் பிறகும் தொடர்ச்சியாக நம் நாட்டுப் பொருளாதாரத்தில் பற்றுக்குறை நிதியாக்கம் செய்யப் பட்டதால் உண்டான பணவீக்க நெருக்கடியைப் பாதகமான கொடுப்பல்நிலை ஓரளவு மட்டுப்படுத்தியது என்று கொள்வது பொருந்தும்.

1949-ல் செய்யப்பட்ட மதிப்பிறக்கம் நம் நாட்டில் இருந்த பணவீக்க சக்திகளை மிகுதிப்படுத்தியிருக்க வேண்டும். ஏனெனின், அது டாலர் பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட பொருள்களின் விலையை நேரடியாக உயர்த்தியது; நம் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கு ஊக்கமளித்தது; இதனால் உள்நாட்டுத் துய்ப்புக்கு வேண்டிய பொருள்கள் குறைந்தன. 1949 அக்டோபர்முதல் 1950 செப்டெம்பர்வரை 12 மாதங் களில் இந்திய ரிசர்வ் பாங்கின் வெளிநாட்டுச் சொத்துகள் சுமார் ரூ. 30 கோடி உயர்ந்தன; நாட்டில் பண அளிப்பு ரூ. 23 கோடி அதிகமாயிற்று; ஆனால், இதற்கு முந்திய 12 மாதங்களில் வெளி நாட்டுச் சொத்துகளில் ரூ. 242 கோடி குறைந்தது; பண அளிப்பில் ரூ. 120·5 கோடி சுருங்கியது. இக் காலத்தில் ரிசர்வ் பாங்கில் அரசாங்கத்தின் இருப்புகள் உண்மையில் ஓரளவு உயர்ந் ததனாலும் (ரூ. 18 கோடி), அரசாங்கத்திற்கு ரிசர்வ் பாங்கும் ஷெடியூல் பாங்குகளும் அளித்த செலாவணி சுருங்கியதாலும்,[1] அயல்நாட்டுக் கொடுப்பல்நிலையின் உபரியாலும், பண அளிப்புப் பெருக்கத்தினாலும் உண்டான பணவீக்க விளைவு மாற்றப்பட்டது. அன்றியும், மேலும் அதிகப் பணவீக்கம் ஏற்படுவதைத் தடுக்க அரசாங்கம் உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்துக்கொண் டதும், மதிப்பிறக்கத்தைத் தொடர்ந்து விலைகள் ஏற்கெனவே ஏறியிருந்த அளவுக்கு மேலும் ஏறுமல் தடுத்தது. அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையை மதிப்பிறக்கம் சாதகமாக மாற்றினாலும், நாட்டில் இருந்த விலையளவை ஓரளவு எதிர்பார்த்ததைவிட அது குறைவாகவே பாதித்தது.

1950 வரையில் விலையேற்றம் உள்நாட்டுக் காரணங்களால் ஏற்பட்டது என்றும், உள்நாட்டில் அதிகத் தேவை ஏற்பட்ட தால் வெளிநாட்டில் பற்றுக்குறைகள் உண்டாயின என்றும் இருந்த நிலை 1950–51-ல் முற்றிலும் மாறிவிட்டது. கொரியாவில் போர் தொடங்கியதாலும், சில தலைமை வாய்ந்த தொழில்மய மான நாடுகளில் இராணுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டதாலும்,

[1] 'மதிப்பிறக்கமும் அதற்குப் பிறகும்'—P. S. நாராயண பிரசாத் எழுதியது; Reserve Bank of India Bulletin, November 1950, p. 786.

நம் ஏற்றுமதிப் பொருள்களுக்கு அதிகத் தேவை உண்டாயிற்று. 1950–51-ல் முந்திய ஆண்டில் இருந்த ரூ. 514 கோடியிலிருந்து ரூ. 647 கோடிக்கு ஏற்றுமதிகள் உயர்ந்தன. இறக்குமதிகள் ரூ. 604 கோடியிலிருந்து ரூ. 650 கோடிக்கு உயர்ந்தன. விலை ஏற்றமானது வியாபாரத்தின் அளவை மறைத்துவிட்டது. வியாபார அளவைப் பொறுத்தவரையில் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை மிகுதியாக்கியதால், இறக்குமதிகள் குறைந்தன. இறக்குமதியளவின் குறியீட்டெண் 1948–49-ல் 135 ஆக இருந்து அடுத்த இரண்டாண்டுகளில் முறையே 127-க்கும் 112-க்கும் இறங்கியது. இதற்கு மாறாக, ஏற்றுமதிகளின் மதிப்புக் குறியீட்டெண்ணும் அளவுக் குறியீட்டெண்ணும் அதிகமாக உயர்ந்தன. முந்தியது 91-லிருந்து 1950–51-ல் 111-க்கும், 1951–52-ல் 153-க்கும் உயர்ந்தது; பிந்தியது 1949–50-ல் 112 ஆக இருந்து, அடுத்த ஆண்டில் 117 ஆக உயர்ந்தது (அடிப்படை 1952–53 = 100). இதன் விளைவாக, நிகர வாணிப அளவு[1] 118-லிருந்து 134-க்கு முன்னேறியது. வாணிபக் கொடுப்பல்நிலையில் உண்டான முன்னேற்றம், 1949–50-ல் ரூ. 894 கோடியாயிருந்த வெளி நாட்டுச் செலாவணிக் காப்பு நிதி 1950–51-ல் ரூ. 913 கோடியாக உயர்ந்ததிலிருந்து தெரிகிறது. இந்த வெளித்தூண்டுதலோடு ஒப்பிடும்போது, உள்நாட்டு நிலைமை விலையேற்றத்திற்குச் சாதகமாக இல்லை. விவசாய உற்பத்தியும் தொழில் உற்பத்தியும் முன்னேறின. தொழில் உற்பத்தியின் பொதுக் குறியீட்டெண் 1950-ல் 105 ஆக இருந்து, 1951-ல் 117 ஆயிற்று (அடிப்படை 1946 = 100). உணவு உற்பத்தியில் குறைவு இருப்பினும், தொழில் கச்சாப் பொருள்களிலும், மற்ற விவசாயப் பொருள்களிலும் குறிப்பிடத்தகுந்த அளவு உற்பத்தி உயர்வு உண்டாகி, அக் குறைவை ஈடுசெய்தது. இந்த இரண்டாண்டுகளில் ஷெடியூல் பாங்கு செலாவணி ரூ. 442 கோடியிலிருந்து ரூ. 459 கோடிக்கு உயர்ந்தது. இது 4 சதவீத உயர்வுதான். ஆனால், யூனியன் அரசாங்கத்தின் மொத்த பட்ஜெட் பற்றுக்குறை 1949–50-ல் ரூ. 44 கோடியாயிருந்து, அடுத்த ஆண்டில் ரூ. 12 கோடி உபரியாக மாற்றப்பட்டது. ஆகவே, இந்த இரண்டாண்டுகளில் ரூ. 1,865 கோடியிலிருந்து ரூ. 1,966 கோடிக்கு உயர்ந்த பணஅளிப்புப் பெருக்கமும், விலையளவு 6 சதவீதம் ஏறியதும்—385·4 பாயின்டுகளிலிருந்து 409·7 பாயின்டுகளுக்கு—(அடிப்படை 1939 ஆகஸ்டோடு முடிந்த ஆண்டு = 100) வெளிநாட்டுத் தேவை அதிகரிப்பினால்தான் பெரும்பாலும் நிகழ்ந்தன. இதுபோலவே, மேனாடுகளில் இருப்புச் சேமிப்புத் தேவை குறைந்ததால் உண்

[1] ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்ணுக்கும் இறக்குமதி விலைக் குறியீட்டெண்ணுக்கும் உள்ள விகிதம்.

டான பின்னிறக்கம், வெளிநாட்டு வாணிபத்தைப் பாதகமாக மாற்றி, அதன்மூலம் நாட்டில் உள்ள விலையமைப்பைப் பாதித்தது.

பின்னிறக்கநிலை வெளிநாட்டு வாணிபத்தைப் பாதித்து ரூ. 160 கோடி பற்றுக்குறையை நடப்புக் கணக்கில் உண்டாக்கிய முதல் திட்டத்தின் முதல் ஆண்டு தவிர, மற்ற ஆண்டுகளில் வெளிநாட்டுத் தேவை அதிகமாகவே இருந்தது. 1952-53 முதல் 1955-56 வரை உள்ள காலத்தில் நடப்புக் கணக்கில் மொத்த உபரி ரூ. 133·5 கோடி ஆயிற்று; வெளிநாட்டுச் செலாவணிக் காப்பு நிதி ரூ. 100 கோடி அதிகமாயிற்று. 1952 முதல் இந்தியாவின் வாணிபக் கொடுப்பல்நிலையில் உண்டான சாதகமான போக்கு, டாலர் பகுதியல்லாத உலகத்தின், அயல்நாட்டுக் கொடுப்பல்நிலை மொத்தத்தில் முன்னேறியதன் காரணமாகக் காணப்பட்டதுதான். கொரியப் பொருளாதார வீக்கம் உண்டாக்கிய சாதகமான உற்பத்திநிலையின் விளைவுதான் இது. இதன் விளைவாக உலக வாணிபத்தின் அளவில் குறிப்பிடத்தக்க மறுமலர்ச்சியும், உலகத்தின் டாலர் பிரச்சினையில் அதிக சௌகரியமும் ஏற்பட்டன. இந்தியாவைப் பொறுத்தவரையில், 1951 முதல் விரைவில் சீர்கேடடைந்துவந்த வாணிபத்தின் அளவு 1954-ன் முதற் பாதியில் சாதகமான நிலைக்குத் திரும்பியது. வியாபார அளவின் குறியீட்டெண் (அடிப்படை 1948 = 100) 1952-ல் 92 ஆக இருந்து, 1953-ல் 97 ஆகவும், 1954-ல் 101 ஆகவும் உயர்ந்து, 1955-ல் 99-க்கு இறங்கியது[1]. வெளிநாட்டு வாணிபநிலையில் உண்டான முன்னேற்றத்திற்கு முக்கியக் காரணம் வியாபார அளவில் ஏற்பட்ட இந்தச் சாதகமான திருப்பம்தான். 1953-55-ல் முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்த மற்றொரு காரணம், உணவுப் பொருள், கச்சாப் பொருள் இறக்குமதி குறைந்ததுதான். 1952-லும் 1953-லும் 1954-ன் முதற் பாதியிலும் இறக்குமதிகளின் விலைக்குறியீட்டெண் படிப்படியாக முறையே 136-லிருந்து 118-க்கும் 111-க்கும் இறங்கியதற்கேற்ப, அளவுக் குறியீட்டெண்களும் 88-லிருந்து 64-க்கும் 60-க்கும் இறங்கின. விலை மாறுதலுக்கேற்ப இறக்குமதிகள் மாறுமலிருந்ததற்குக் காரணம், 1954-55-ல் உணவு, கச்சாப் பொருள் உற்பத்தியில் முன்னேற்றம் கண்டதுதான். இதனால் இந்தப் பொருள்களின் இறக்குமதி அதிகம் குறைந்தது. போர் முடிந்ததுமுதல் மொத்தக் கண்கூடான இறக்குமதிகளில் பெரும் பகுதியாக இருந்த இந்த இனத்தின் இறக்குமதியை நாட்டில்

[1] U.N. Year Book of International Trade.

உண்டான உணவு உற்பத்திப் பெருக்கம் எப்படிப் பாதித்தது என்பதை, 1952-ல் 106 ஆக இருந்த உணவு இறக்குமதிக் குறியீட்டெண் (1948–49 = 100) 1953-ல் 56-க்கும், 1954-ன் முதற் பாதியில் 15-க்கும் இறங்கியதிலிருந்து அறியலாம். 1952-க்கும் 1954-க்கும் இடையில் உணவு இறக்குமதி 85 சதவீதத்திற்குமேல் குறைந்தது. முதல் திட்ட காலத்தில் முதலீட்டுச் செலவும் அபிவிருத்திச் செலவும் உயர்ந்து, வெளிநாட்டுத் தேவையும் தொடர்ந்து அதிகமாக இருந்தும், ஓரளவு விலைகள் நிலையாக இருந்ததற்குக் காரணம் இதுதான்.

இரண்டாம் திட்ட காலத்தில் நடப்புக் கணக்கில் தொடர்ந்திருந்த பற்றுக்குறைக்கு முக்கியக் காரணம், அதிக முதலீட்டுச் செலவினால் உள்நாட்டில் தேவை மிகுந்ததுதான். நம் பொருளாதாரத்தில் அதிகத் தேவை எந்த அளவுக்கு இருந்தது என்பதை பட்ஜெட் பற்றுக்குறைகளாலும், பாங்கு செலாவணி மிகவும் பெருகியதாலும் ஒருவாறு அறியலாம். அதிகத் தேவைக்கு ஏற்ப உள்நாட்டில் உற்பத்தி பெருகவில்லை. இந்த ஆண்டுகளில் உணவு தானியம், தொழில் கச்சாப் பொருள்கள், செய்பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தி மிகுந்த ஏற்ற இறக்கங்களைக் கண்டது. ஆனால், 1956-க்கும் 1959-க்கும் இடையில் உணவுப் பொருள்களில் நிகர லாபம் 11 சதவீதமும், தொழில் கச்சாப் பொருள்களிலும் செய்பொருள்களிலும் லாபம் முறையே 13 சதவீதமும் 12 சதவீதமும் இருந்தன. அதிகப் பற்றுக்குறை நிதியாக்கத்தினாலும், நம் பொருளாதாரத்தில் தனியார்துறையிலும் அரசாங்கத்துறையிலும் பொருளாதார நடவடிக்கைகளின் வேகம் உயர்ந்ததனாலும் உண்டான பணவருமான அதிகரிப்பினால் எதிர்பார்த்ததைவிட மிக அதிகமான இறக்குமதிகள் செய்யப்பட்டன. உணவு, இரும்பு, எஃகு, முதற் கருவிப் பொருள்கள் ஆகியவற்றில் இறக்குமதி அதிகரிப்புக் குறிப்பிடத்தக்க அளவாக உள்ளது. ஆண்டுதோறும் சராசரி இறக்குமதி ரூ. 1,000 கோடிக்குமேல் இருந்தது. முதல் திட்ட கால ஆண்டுகளில் இறக்குமதி சராசரி ரூ. 725 கோடியாகும். ஆகவே, வெளிநாட்டுப் பொருள்களுக்கும் பண்டங்களுக்கும் உள்ள அதிகத் தேவையானது, நம் நாட்டில் உண்டான அதிகச் செலவு எஞ்சி இறக்குமதிக்குப் பயன்படுத்தப்பட்டதையே காட்டுகிறது.

நாட்டில் கிடைக்கும் பொருள்களின் அளவோடு, இறக்குமதியும் சேர்ந்து அதிகரித்தால், பொருளாதாரத்தில் உண்டாகும் பணவீக்க நெருக்கடியைக் கட்டுப்படுத்தலாம். இந்த முறையில் பொருள் அளிப்பு எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதற்கு

வாணிபப் பற்றுக்குறை ஓர் அறிகுறியாகும். வெளிநாட்டுக் கடன்களால் வெளியிலிருந்து கிடைக்கும் சாதன உதவி அதிகரிக்கும். பிறகு இவை உண்மையான சாதனங்களாக மாற்றப்படும். வெளிநாட்டுக் காப்பு நிதியிலிருந்து நம் பழைய சேமிப்புகளை எடுத்தும் பயன்படுத்தலாம். ஆகவே, வெளிநாட்டுக் காப்பு நிதி போதிய அளவு அதிகமாக இருக்கும்வரையில், வரவெஞ்சிய செலவினால் உண்டாகும் பணவீக்க நெருக்கடியை மட்டுப்படுத்த முடியும். வெளிநாட்டு இருப்புகள் குறைந்தால் இப்படிச் செய்ய முடியும் என்று நம்ப முடியாது. அண்மை ஆண்டுகளில் நம் அயல்நாட்டுச் செலாவணிக் காப்பு நிதி விரைவாகக் குறைந்ததனால்தான், இரண்டாம் திட்டத்தின் இறுதி இரண்டாண்டுகளில் பற்றுக்குறை நிதியாக்கத்தை முடிந்த அளவுக்குக் குறைக்கவேண்டிய அவசியத்தை உடனடியாக நாம் உணரலானோம். மூன்றும் திட்டத்திலும் திட்ட அதிகாரிகள் இதே காரணத்தினால் இவ்வாறு நிதியாக்கம் செய்வதை வரையறுத்திருக்கிறார்கள்.

9. விலைகளும் உற்பத்தியும்

எந்த ஒரு காலத்திலும் ஒரு நாட்டில் பொதுவான விலை யளவு, பொருள்களுக்கும் பணிகளுக்கும் உள்ள தேவையைப் பொறுத்தது என்பது தெளிவு. இது, அளிக்கப்படும் பணத்தின் அளவிலிருந்தும், பண்டங்கள், பொருள்களின் அளவிலிருந்தும் தெரியும். முந்திய அத்தியாயங்களில், இந்தியாவில் அண்மை யாண்டுகளில் பணத்தின் அளிப்பைப் பாதித்துள்ள அரசாங்கச் செலவுகள், நாட்டில் கொடுப்பல்நிலையில் மாறுதல்கள்போன்ற முக்கியமான காரணங்களை ஆராய்ந்தோம். அதிகச் செலவு செய்வதற்குக் காரணமான அதிகப் பண அளிப்புக்கு ஈடாக அதே அளவு பொருள்களும் பணிகளும் அதிகரித்தால் விலைகள் ஏறு என்பது சாதாரணமாகத் தெளிந்த உண்மையாகும். போர்க்காலத்திலும் போருக்குப் பிறகும் இந்தியாவில் பண வீக்க விலைப்போக்கைப்பற்றிய ஆராய்ச்சி, அளிப்பு இனத்தை யும் கணக்கில் எடுத்துக்கொள்ளாவிட்டால் அரைகுறையாகத் தான் இருக்கும். இந்த அத்தியாயத்தில் இந்தியாவில் போர்க் காலத்திலும் அதற்குப் பிறகும் இருந்த உற்பத்திப் போக்குகளைப் பகுத்தாய்ந்து, விலையளவை நிர்ணயிப்பதில் பொருள் அளிப்பின் பங்கு என்ன என்பதை ஆராய்வோம்.

தேவை மாறுவதால் உற்பத்தியளவில் மாறுதல் ஏற்படு கிறது. உதாரணமாக, ஒரு நாடு போரில் ஈடுபட்டிருக்கும் போதோ, திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்திக்காகத் தேசியத் திட்டம் தொடங்கப்பட்டிருக்கும்போதோ உற்பத்திக் காரணிகளுக்கும் உற்பத்திச் சாதனங்களுக்கும் அதிகத் தேவை ஏற்படுகிறது. போர்க்காலத்தில், தனியார் துய்ப்புக்கு உபயோகமற்ற, வேண்டாத பொருள்களும் பணிகளும் உற்பத்தி செய்யப்படுவதற்குச் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே, அரசாங்கத்தின் அதிகச் செலவீட்டினால் வருமானம்

உண்டாகி, அதன் விளைவாகத் தனியார் துய்ப்புக்கு வேண்டிய வாங்குந்திறன் அதிகரிக்கும்போது, துய்ப்புப் பொருள்களின் உற்பத்தியில் உயர்வு இருக்காது ; அதில் குறைவுகூட உண்டாகும். ஆகையால், அத்தகைய பொருள்களின் விலைகள் ஏறத் தொடங்கும்; இதனால் உற்பத்திக் காரணிகளின் விலைகள் உயரும்; கூலிகளும் உயரும் ; பணவீக்க விலைப்போக்கு உண்டாகும். அபிவிருத்திக்காக அரசாங்கம் அதிகச் செலவு செய்யும்போதும் விலையேற்றம் உண்டாகக்கூடும். ஏனெனின், அதிக உற்பத்தியையும், பிற்காலத்திற்கு வேண்டிய அதிகத் துய்ப்புப் பொருள்களையும் பெறுவதற்கு அவசியமான முதலின அமைப்பிற்காகச் செய்யப்படும் அதிக முதலீடு, குறுகிய காலத்தில் துய்ப்புப் பொருள்களின் உற்பத்தியளவைக் கணிசமாகப் பாதிக்காது.

கொள்கையளவில், நாட்டில் சாதனங்களில் ஒரு பகுதியேனும் சோம்பியோ பயன்படாமலோ இருந்தால், அபிவிருத்திக்காக அதிகம் செலவு செய்யும்போது, பயன்படுத்தப்படாமல் இருக்கும் சாதனங்கள் வெளிக்கொணரப்பட்டுத் தேசிய உற்பத்தி பெருகும் ; விலையளவு அவ்வளவாகப் பாதிக்கப்படாது. இதற்கு மாறாக, வேலையளவு முழுவதுமாக இருக்கும்போது தேவை அதிகரித்தால், அது அநேகமாக விலையுயர்வில்தான் முடியும். ஏனெனின், உற்பத்திப் பெருக்கம் உண்டாகவேண்டுமானால், உற்பத்திச் சாதனங்கள் உள்ள இடங்களிலிருந்து அவற்றை வேறு இடங்களுக்குத் திருப்புவதற்கு அதிக விலைகள் கொடுக்கவேண்டும். ஆக, அதிக உற்பத்திச் செலவினால் விலைகள் உயரத் தொடங்கும். ஆனால், உற்பத்திக் காரணிகளின் அளிப்பைவிடத் தேவை அதிகமானால், வேலையளவு அளவு கடந்து சென்று, உற்பத்திச் செலவும் விலைகளும் பல காரணங்களால் உயரும். இந்த நிலையில், வேலையாட்கள் அக்கறை குன்றி, அற்பக் காரணங்களுக்கெல்லாம் வேலைநிறுத்தம் செய்வர் ; உற்பத்தி அளவுத் தரமும் குறையும் ; ஆனால், தொழில் நடத்துவோர், மார்க்கெட்டில் தேவைப் பெருக்கம் ஏற்படும் என்று நம்பித் தைரியமாகச் 'செலவுக்குமேல் இலாபம்' என்னும் மனப்பான்மை பெறுவர். அவர்கள் அதிகக் கூலி கொடுத்து அதைச் செய்பொருள்களின் விலைகளோடு சேர்த்துவிடத் தயாராக இருப்பர். சாதாரண அளவு வேலையுள்ள நிலைமையில் தேவை அதிகரிப்பானது உற்பத்தியைப் பெருக்கி, விலைகளையும் ஓரளவு உயர்த்தக்கூடிய ஓர் இடைத்தரமான நிலைமையும் உண்டாகலாம்.[1]

[1] Theodere Morgan, 'Income and Employment' (1947), pp. 104–5.

எனினும், அதிகச் செலவோ தேவையோ உள்ள நிலையில் சோம்பிக் கிடக்கும் சாதனங்கள் இருப்பதால், விலைகள் ஏறு என்று சொல்வதற்கில்லை. விலைகளே நிர்ணயிப்பது, தேவைக்கேற்பச் சமூகத்தின் துய்ப்பிற்கு வேண்டிய பொருள்கள் உண்மையில் கிடைக்கும் அளவே அன்றி, அதிக உற்பத்தியன்று. போர்க் காலத்தில் சோம்பிக் கிடக்கும் சாதனங்கள் வெளியே இழுக்கப் பட்டு உற்பத்தி பெருகினாலும், பொதுமக்கள் துய்ப்புக்கு வேண்டிய பொருள்களும் பணிகளும் அளவில் கட்டுப்படுத்தப் படுவதால் விலைகள் ஏறுகின்றன. இதற்கு மாறாக, அமைதிக் காலத்தில் பொருளாதார வளர்ச்சியும், உற்பத்திப் பெருக்கமும், அதனோடு வாங்குந் திறனில் உயர்வும் உண்டானாலும், விலைகள் அதிகம் உயர்வதில்லை. இந்தியாவின் அண்மையில் காணப்பட்ட உற்பத்தியையும் விலைப்போக்கையும் கொண்டு இதை விளக்கலாம்.

1939 முதல் உற்பத்திப் போக்கின் பொதுத் தன்மை

1939 முதல் இந்தியாவில் உற்பத்திப் போக்கில் மூன்று முக்கியமான கட்டங்களைக் காணமுடிகிறது. போர் தொடங்கிய வுடன் போருக்காக நாட்டின் சாதனங்களைப் பயன்படுத்தவும், உற்பத்தியைப் பெருக்கவும் தீவிரமான முயற்சி செய்யப்பட்டது. போரின் முதல் இரண்டாண்டுகளில் தேசிய உற்பத்தியளவில் குறிப்பிடத்தக்க மாறுதல் உண்டானதுமட்டுமன்றி, உற்பத்தி முறை வேகமான வளர்ச்சியைக் கண்டது. 1943-44-ல் விவசாயத்திலும் தொழிலிலும் உற்பத்தி உயர்ந்த அளவையடைந்தது. 1940 முதல் 1944 வரையுள்ள வருடங்கள் முதல் கட்டத்தைச் சாரும். 1944 முதல் தொடர்ச்சியான பல அரசியல், சமூகக் காரணங்களால் உற்பத்தியில் படிப்படியான குறைவு உண்டாயிற்று. 1947 முதல் 1951 வரையில் நம் பொருளாதாரம் சிறிது ஏற்ற இறக்கத்துடன் தாழ்ந்த நிலையில் இருந்தது. 1951-ல் நாட்டில் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக் காலத்தோடு இணைந்த அதிகத் தொழில் நடவடிக்கையும், அதிக உற்பத்தியும், அதிக வேலையளிப்பும் கொண்ட மூன்றுவது கட்டம் தொடங்கியது. அட்டவணை 48, 49-ல் தொழில் நடவடிக்கை, தொழில் உற்பத்தி, விவசாய உற்பத்தி ஆகியவற்றின் குறியீட்டெண்களும், இந்த விவரங்களையொட்டிய படம் 6-ம் இந்த மூன்று கட்டங்களையும் நன்கு காட்டும்.

அட்டவணை 48-ல் போர்க்காலத்தில் 1944 வரை தொழில் உற்பத்தி படிப்படியாக உயர்ந்து, 115·7 பாயின்டுகளாகிய

உச்ச அளவையடைந்தது. இதற்கு மாறுகப் போரின் முதல் இரண்டாண்டுகளில் விவசாய உற்பத்தி இறங்குமுகம் கண்டது; ஆனல், பிறகு மறுமலர்ச்சி பெற்று, 1943-44-ல் மிக உயர்ந்த அளவாகிய 106 பாயின்டுகளையடைந்தது. அவ்வாண்டு முதலாக, விவசாய உற்பத்தியும் தொழில் உற்பத்தியும் விரைவாகக் குறைந்தன. விவசாய உற்பத்திக்கும் தொழில் உற்பத்திக்கும் பிறகு இரண்டாண்டுகள் கழித்து, 1945-46-ல், தொழில் நடவடிக்கை மிக உயர்ந்த அளவாகிய 119·7 பாயின்டுகளை எட்டியது. ஆனல், அந்த வருடம் முதல், அது பொது உற்பத்தி போலவே கீழ்நோக்கி இறங்கியது.

அட்டவணை 48

இந்தியாவில் உற்பத்திப் போக்கு, 1939-50

வருடம்	விவசாய உற்பத்திக் குறியீட்டெண்கள்*	தொழில் உற்பத்திக் குறியீட்டெண்கள் †	தொழில் நடவடிக்கையின் குறியீட்டெண்கள் ‡
1939-40	99	—	105·2
1940-41	98	108·1	105·7
1941-42	95	114·3	113·5
1942-43	102	106·9	108·0
1943-44	106	112·2	111·5
1944-45	101	115·7	117·0
1945-46	94	112·5	119·7
1946-47	96	102·9	111·9
1947-48	100	99·1	104·0
1948-49	95	112·3	107·3
1949-50	100	108·4	104·3

(ஆதாரங்கள்: * 'Eastern Economist,' Annual Numbers and Quarterly Records and Statistics. Base: average 1936-37 to 1938—39=100.

† 'Indian Labour Gazette,' November 1955. Base: 1939=100. Figures relate to Calendar years beginning 1940—108·1.

‡ Eastern Economist. Base: Year ended August 1939=100·)

இந்தப் பொதுத் தன்மை தேசிய உற்பத்தி விவரங்களில் கூடக் காணப்படுகிறது. நம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட வெவ்வேறு ஆண்டுகளில் உற்பத்தியைக் குறிக்கும் எண்கள், உண்மையான உற்பத்தியளவில் உண்டான அதிகரிப்பைப்பற்றிச் சரியான கருத்தை நமக்கு அளிக்கமாட்டா என்பது கவனிக்கத் தக்கது; மொத்த உற்பத்தியில் துய்ப்புக்கு வேண்டிய அளவையும் அவை சரியாகக் காட்டா. இதற்குக் காரணம் விலைமாற்றத்

திணல் உண்டான விபரீதமே. அமைதிக் காலத்திலும் போர்க் காலத்திலும் உண்டாகும் உண்மையான உற்பத்தியை அளந்தறிவது கடினமாகும். ஏனெனில், ஒரே வகையைச் சேர்ந்த உற்பத்திப் பொருள்களிலும், அப் பொருள்களின் தரத்திலும் வித்தியாசங்கள் உள்ளன. உண்மையான உற்பத்தி உயர்வை மதிப்பிடுவதற்கு, தகுந்த விலைக் குறியீட்டெண்ணினல் நடப்பு உற்பத்தியின் மதிப்பைக் குறைக்கவேண்டியுள்ளது. நாட்டின் மொத்த ஆக்கத்தை வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்ணல் மதிப்புக் குறைவு செய்வது ஒரு வழக்கமான முறையாகும். விலையுயர்வை வாழ்க்கைச் செலவு எண்கள் எந்த அளவுக்குக் குறைத்து மதிப்பிடுகின்றனவோ, அந்த அளவுக்கு நாட்டின் மொத்த ஆக்கத்தை நாம் அதிகம் மதிப்பிடுவதுபோல ஆகும். இருப்பினும், உண்மையான உற்பத்தியில் உண்டாகும் மாறுதல்களை அளந்தறிவதற்கு இது ஒரு திருப்தியான முறையாகக் கருதப்படும். அட்டவணை 50-ல் 3 ஆம் பத்தியில் உள்ள எண்கள் இந்தக் கொள்கைப்படி கணக்கிடப்பட்டவை. 1948–49 முதல்

அட்டவணை 49

இந்தியாவில் உற்பத்திப் போக்குகள், 1950–51 முதல் 1960–61 வரை

வருடம்	விவசாய உற்பத்தியின் குறியீட்டெண்கள் *	தொழில் உற்பத்தியின் குறியீட்டெண்கள் †
1950–51	95·6	—
1951–52	97·5	100
1952–53	102·0	103·6
1953–54	113·4	105·6
1954–55	117·0	112·9
1955–56	116·9	122·4
1956–57	123·6	132·6
1957–58	114·6	137·3
1958–59	131·0	139·7
1959–60	N.A.	151·1
1960–61	135·0 ‡	169·6 §

* Base : 1950 ஜூலையுடன் முடியும் விளைச்சல் ஆண்டு = 100.

† Base : 1951 = 100. விவரங்கள் காலண்டர் ஆண்டுக்குரியவை. உதாரணம், 1952–103·6.

‡ எதிர்பார்த்தது. 'Third Five Year Plan—a Draft Outline' (Government of India Planning Commission), p, 17.

§ 1960 ஜனவரி.

(ஆதாரம்: 'Economic Survey,' Government of India, 1958–59 and 1959–60. 'Reserve Bank of India Bulletin, July 1960.)



படம் 6. 1939 முதல் உற்பத்திப் போக்குகள்

1958–59 வரையுள்ள வருடங்களுக்கு உத்தியோகபூர்வமான தேசிய வருமான விவரங்கள் கிடைத்துள்ளன. அட்டவணை 51-ல் இவை கொடுக்கப்பட்டுள்ளன. முந்திய ஆண்டுகளுக்கு 'ஈஸ்டர்ன் எகானமிஸ்ட்' என்ற பத்திரிகை செய்த மதிப்பீடுகள் பயன் படுத்தப்பட்டுள்ளன. ஆகவே, இந்த இரண்டு அட்டவணைகளில் உள்ள விவரங்களும் ஒப்புநோக்கத் தக்கவையல்ல.

1939–40-க்கும், 1942–43-க்கும் இடையில் நாட்டின் மொத்த ஆக்கம் நடப்பு ரூபாய்களில் 80 சதவீதமும், உண்மையான அளவில் 14 சதவீதமும் பெருகியது. 1947–48-ல் உண்மையான உற்பத்தி 1942–43-ல் இருந்ததைவிட 27 சதவீதம் குறைவு. 1948–49-க்கும், 1958–59-க்கும் இடையில் உண்மையான வருமானம் 34 சதவீதம் பெருகியது. அட்டவணை 50, 51-ல் கடைசிப் பத்தியில் உள்ள எண்கள், போர்க்காலத்திலும், பிந்திய ஆண்டுகளிலும் இருந்த உற்பத்திப் போக்குகளில் உள்ள மாறுதல்களைப் பொதுவாக விளக்குகின்றன.

அட்டவணை 50

இந்திய யூனியனில் நாட்டின் மொத்த ஆக்கம், நடப்பு ரூபாய்களிலும், 1939ஆம் ஆண்டின் ரூபாய்களிலும், 1939–48

(கோடி ரூபாய்களில்)

வருடம்	நடப்பு ரூபாய்களில் நாட்டின் மொத்த ஆக்கம்	1939ஆம் ஆண்டின் ரூபாய்களில் நாட்டின் மொத்த ஆக்கம்
1939–40	2723	2593
1940–41	2885	2646
1941–42	2959	2425
1942–43	4887	2949
1943–44	6294	2785
1944–45	6317	2807
1945–46	6308	2767
1946–47	6518	2587
1947–48	5762	2150

['ஈஸ்டர்ன் எகானமிஸ்டு', தயாரித்த பழைய இந்திய சமஸ்தானங்கள் நீங்கலாக இந்தியாவின் தேசிய வருமான மதிப்பீடுகளுடன், 30 சதவீதம் சேர்த்துத் தொகுக்கப் பட்டது. தேசிய வருமானத்தின் மதிப்பைக் குறைக்க, பம்பாய் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்கள் [அடிப்படை: 1939 ஆகஸ்டு 12 உடன் முடிவடைந்த வாரம்=100) பயன்படுத்தப்பட்டுள்ளன.]

அட்டவணை 51

1948–49 முதல் தேசிய வருமானத்தின் போக்குகள்

(கோடி ரூபாய்களில்)

வருடம்	நடப்பு விலைகளின்படி நிகர உற்பத்தி	1948–49 விலைகளின்படி நிகர உற்பத்தி
1948–49	8650	8650
1949–50	9010	8820
1950–51	9530	8850
1951–52	9970	9100
1952–53	9820	9460
1953–54	10480	10030
1954–55	9610	10280
1955–56	9980	10480
1956–57	11310	11000
1957–58	11360	10830
1958–59	—	11570*
1959–60	—	11628*

* மத்தியப் புள்ளி இயல் குழுவினால் தயாரிக்கப்பட்ட 'விரைவான மதிப்பீடுகளின்' அடிப்படையாகக் கொண்டது.

(ஆதாரம்: 'Reports on Currency and Finance', Reserve Bank of India.)

1940 முதல் 1943 வரை உற்பத்தி அதிகரிப்பு விகிதமும் உச்சநிலையடைந்திருந்தபோதுதான், பொது விலையளவிலும் மிக அதிகமான உயர்வு விகிதம் காணப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. 1943-க்கும் 1951-க்கும் இடையில் உற்பத்தி குறைந்து கீழ்நிலையில் இருந்தபோது பொது விலையளவு உயர்ந்து கொண்டே சென்று பிந்திய ஆண்டில் மிக உயர்ந்த நிலையை யடைந்தது. 1952-ன் பின்னிறக்கத்திற்குப் பிறகு, சிறிது காலத்திற்குப் பொது விலையளவு ஓரளவு நிலையாக இருந்தது; பிறகு இறங்கியது; 1955-க்குப் பிறகு படிப்படியாக ஏறிக் கொண்டே சென்றது. ஆனால், விவசாய உற்பத்தியும் தொழில் உற்பத்தியும் மொத்தத்தில் நிதானமான முன்னேற்றத்தைக் கண்டன. போர்க்காலத்தில் உற்பத்தியில் அதிக உயர்வு விகிதமும் விரைவான விலையுயர்வும் சேர்ந்திருந்தது, போரின் விசேஷ நிலைமைகளினால் ஆகும். அவை இப்போது விளக்கப் படும். போர் முடிந்தது முதல் 1951 வரை விலையுயர்வும், பிறகு உண்டான ஏற்ற இறக்கங்களும், அதே காலங்களில் உற்பத்திப் போக்கினாலும், உள்நாட்டில் பொருள் அளிப்பு நிலையினாலும்

கணிசமான அளவுக்குப் பாதிக்கப்பட்டன. போர்க்காலத்திலும் அதற்குப் பிறகும் உற்பத்தியில் காணப்பட்ட மூன்று கட்டங்கள் நாட்டில் இருந்த பொது விலையளவை எந்த அளவுக்குப் பாதித்தன என்பது இப்பொழுது சுருக்கமாக ஆராயப்படும்.

போர்க்காலத்தில் விலைகளும் உற்பத்தியும்

போரின் முதல் ஐந்தாண்டுகளில் இந்தியாவில் விவசாய உற்பத்தி 6 சதவீதமும் தொழில் உற்பத்தி 27 சதவீதமும் உயர்ந்தன. அட்டவணைகள் 52, 53-ல் இந்த உயர்வு விகிதங்கள் காட்டப்பட்டுள்ளன. அதே காலத்தில் முன்னேற்றமான நாடுகளில் உண்டான சாதனைகளுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் தேசிய உற்பத்தி உயர்வு மிகக் குறைவுதான். 1939-க்கும் 1944-க்கும் இடையில் கனடாவில் உற்பத்தி 80 சதவீதமும், அமெரிக்காவில் இரு மடங்குக்கு மேலும் அதிகரித்தது. எனினும், இந்தியாவில் போருக்கு முன்னும், போருக்குப் பின்னும் உண்டான உற்பத்தியைப் போர்க்கால உற்பத்தியோடு ஒப்பிடும்போது, போர்க்காலப் பெருக்கம் மிக அதிகம்தான்.

போருக்குச் சாதனங்கள் சாதாரணமாக அதிக உற்பத்தியிலிருந்தும், துய்ப்பைக் குறைத்தும், மூலதனத்திலிருந்தும், அதாவது, தேய்ந்துபோன எந்திரங்களுக்குப் புதிய எந்திரங்களை வாங்காமல், நடப்பு மூலதனத்தை எடுத்துப் பயன்படுத்துவதனாலும் கிடைக்கின்றன. பயன்படுத்தப்படாத நிலம், வேலையில்லாத் தொழிலாளர், சோம்பிக் கிடக்கும் மூலதனச் சாதனம் போன்ற எந்த உருவத்திலேனும் நாட்டுப் பொருளாதாரத்தில் அதிக ஆற்றல் இருந்தால், அது உற்பத்திக்கு எடுத்து நன்கு பயன்படுத்தப்படும். மேலும், போர்க்காலத்தில் புதிய தொழில்கள் தொடங்கப்பட்டு உற்பத்திக்குத் திறமையும் முன்னேற்றமுமான முறைகள் கையாளப்படுகின்றன. சர்வாதினப் போட்டியுள்ள பொருளாதார அமைப்பில், பொருள்களுக்கும் பணிகளுக்கும் எப்பொழுதுமில்லாத அளவு தேவை அதிகரிப்பு ஏற்பட்டு, அவற்றிற்கு மார்க்கெட்டும் நிச்சயமாக இருக்கும்போது, மார்க்கெட்டிங் செலவுகளைக் கணிசமாகக் குறைத்து, விளம்பரம் போன்ற சாதாரண முறைகளால் விற்பனையைப் பெருக்குவதற்கு வேண்டிய சாதனங்களை, அதிக உற்பத்திச் செயல்களுக்குப் பயன்படுத்தலாம். ஆனால், இதற்கு மாறுகப் போர்க்காலத்தில் அதிக உற்பத்தியைத் தடுக்கும் அம்சங்கள் சில உள. அதிக நேரம் வேலை செய்வதால் தொழிலாளர்களுக்குக் களைப்பு உண்டாகி வேலைத் திறமை குறைகிறது. அதிக விரைவாக விலைகள் உயரும்

போது அதிகக் கூலி கொடுப்பது பயனற்றதாகிவிடுகிறது; பல எந்திரங்களும் கருவிகளும் உயர்ந்த அளவுக்குமேல் அதிக வேலை செய்து மிகவும் தேய்ந்துபோகின்றன. போருக்குப்

அட்டவணை 52

இந்தியாவில் விவசாய உற்பத்தி, 1939–44

பயிர்	1936-37 முதல் 1938-39 வரை சராசரி	1939–40 முதல் 1942–43 வரை சராசரி	1943–44
முக்கிய உணவு தானியங்கள் (ஆயிரம் டன்கள்)	55268	54399	60455
உணவு தானியப் பரப்பு (ஆயிரம் ஏக்கர்கள்)	193252	193978	206690
பருத்தி (ஒன்றுக்கு 400 பவு. கொண்ட ஆயிரம் பேல்கள்)	5653	5478	5259
பருத்திப் பரப்பு (ஆயிரம் ஏக்கர்)	24665	22061	21086
கரும்பு (ஆயிரம் டன்கள்)	5089	4975	5848
கரும்புப் பரப்பு (ஆயிரம் ஏக்கர்கள்)	3813	3838	4234
தேயிலை (ஆயிரம் பவுண்டுகள்)	425798	492858	573774
தேயிலைப் பரப்பு (ஆயிரம் ஏக்கர்கள்)	834	835	838
சணல் (ஒன்றுக்கு 400 பவு. கொண்ட ஆயிரம் பேல்கள்)	8362	9354	6990
சணல் பரப்பு (ஆயிரம் ஏக்கர்கள்)	2980	3580	2640
புகையிலை (ஆயிரம் டன்கள்)	489	466	376
புகையிலைப் பரப்பு (ஆயிரம் ஏக்கர்கள்)	1254	1270	1019

(ஆதாரம்: 'Estimates of Area and Yield of Principal Crops', 1936–46. Directorate of Economics and Statistics. Ministry of Agriculture Government of India).

அட்டவணை 53

இந்தியாவில் தொழில் உற்பத்தி, 1939–44

வருடம்	சணல் செய் பொருள்கள் (1000 டன்கள்)	பருத்தித் துணிகள் (மில்லியன் கஜங்கள்)	சர்க்கரை (1000 அங்.)	காகிதம் (1000 டன்கள்)	வார்ப்பு இரும்பு (1000 டன்கள்)	உருவாக்கப் பட்ட எ.°.கு (1000 டன்கள்)
1939	1179	4114	13910	1312	1757	1026
1940	1234	4812	23649	1677	1994	1187
1941	1194	4530	24201	1854	2010	1360
1942	1082	4025	17703	1809	1830	1272
1943	966	4751	21540	1791	1748	1315
1944	995	4857	21065	1524	1419	1299

(ஆதாரம்: Survey of Business Conditions in India.)

பிறகு பரவலாக எங்கும் எந்திரங்கள் உடைந்துபோய், அவற்றிற்குப் பதில் வேறு எந்திரங்கள் வைக்கமுடியாத நிலை ஏற்படுவதிலிருந்து இதன் விளைவு தெரிகிறது. இது உற்பத்திச் சாதனம் வேலை செய்யாமல் அநேகமாக நின்றுவிடும்படி செய்கிறது.

அன்றியும், விலைகள், லாபங்கள், வரிகள் எல்லாம் உயர்ந்திருக்கும்போதும், மேலும் மேலும் அவை உயர்ந்துகொண்டே போகும்போதும், தொழில் நடத்துவோர் நிருவாகத்தில் அக்கறை இழந்து அஜாக்கிரதையாகவும் திறமை இன்றியும் இருப்பர். இறுதியாகப் பணவீக்கம் உண்டானால் அதிகத் தேவையினாலும் அதிக அளவுப் பொருளாதார நடவடிக்கைகளாலும் இது இயல்பாக உண்டாகும்—எதிர்காலத்தில் விலை நிச்சயமின்மையால் தொழில் துணிவுக்கு ஊக்கம் குறைந்து விடுகிறது ; ஆனால், ஊகவாணிகத்திற்காக இருப்புகள் சேர்ப்பது அதிகமாகிவிடுகிறது. எனினும், உற்பத்திக்குத் தடையான இவற்றுள் பெரும்பாலானவை செயல்படுவதற்கு அதிக நேரம் ஆகும். ஆகவே, போரின் முதல் சில ஆண்டுகளில், அதிக அளவு செயல்படுவதற்காக உற்பத்திச் சாதனங்கள் எல்லாம் முடுக்கப்படும்போது, நாட்டின் உற்பத்தியில் விடாமல் உயர்வு காணப்படுகிறது.

போர்க் காலத்தில் இந்தியாவில் புதிய தொழில்களைத் தொடங்கியும், ஏற்கெனவே இருந்த தொழில்களில் புதிய இயந்திரங்களை நிறுவியும் உற்பத்திப் பெருக்கம் செய்யப்பட்டது. இக் காலத்தில் தொடங்கப்பட்ட புதிய தொழில்கள் அலுமினியம், இயந்திரக் கருவிகள், பைக்குரோமேட்டுகள், இரும்புக் கலப்பு உலோகங்கள், விமானத் தொழில் ஆகியவையும், இரசாயனத் தொழில்கள், கண்ணாடி உற்பத்தி, மரவேலை (குறிப்பாக ஒட்டுப் பலகை—பிளைவுட்), தோல் பதனிடல், ரோமம், பட்டு உற்பத்தி, சைக்கிள்கள் முதலியவையும். ஏற்கெனவே இருந்த தொழிற்சாலைகளைப்போல வேறு சிலவும் தொடங்கப்பட்டன. பட்டு, இரும்பு எஃகு, தோல் தொழில்களில் அதிக இயந்திரங்களை வைத்து உற்பத்தி பெருக்கப்பட்டது. எனினும், இந்த நடவடிக்கைகள், மொத்த உற்பத்தியில் சிறிதளவையே பெருக்க உதவின. ஏனெனில், போர்க் காலத்தில் வெளிநாடுகளிலிருந்து இயந்திரங்களும் மற்ற முதலினச் சாதனங்களும் கிடைக்காததால் புதிய தொழில்களையும் தொழிற்சாலைகளையும் நிறுவுவதும் தொடங்குவதும் மிகவும் கடினமாயிருந்தன. போருக்கு முந்திய 1938-39 ஆண்டில் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட எல்லாவித இயந்திரங்களின் மதிப்பாகிய ரூ. 19·7 கோடியானது 1942-43-ல்

மிகவும் தாழ்ந்து ரூ. 10·5 கோடியாயிற்று. 1944–45 முதல் 1946–47 வரை மூன்றாண்டுகளில் ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகள் 1943–44-ல் இருந்த 13·689 எண்ணிக்கையிலிருந்து 21,853 ஆக, அல்லது 60 சதவீதம் பெருகின. இவற்றின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 353·74 கோடியிலிருந்து ரூ. 479·47 கோடியாக, அல்லது 36 சதவீதம் உயர்ந்தது. ஆனால், 1939–40 முதல் 1943–44 ஆகிய ஐந்தாண்டுகளில் இதனுடன் ஒப்பிடும்போது கம்பெனிகளின் எண்ணிக்கையில் மிகச் சிறிய அளவே, அதாவது 20 சதவீதமும், அவற்றின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 16 சதவீதமும்தான் உயர்ந்தன.[1]

அட்டவணை 54

பிரிட்டிஷ் இந்தியாவில் தொழிற்சாலைகளில் 1939, 1944 ஆண்டுகளில் வேலைசெய்து வந்த சராசரி வேலையாட்களின் எண்ணிக்கை

தொழில்கள்	வேலையாட்களின் எண்ணிக்கை	
	1939	1944
நெசவாலைகள்	819404	996296
உணவு, பானம், புகையிலை	247630	294809
பருத்திக்கொட்டை நீக்குதலும் அழுத்துதலும்	163226	143417
பொறியியல்	159761	300295
காகிதமும், அச்சுத் தொழிலும்	56932	67502
இரசாயனச் சாயங்கள் முதலியன	57966	90749
இரயில்வே பட்டறைகள்	55784	121684
தாதுக்களும் உலோகங்களும்	55123	91126
மரம், கல், கண்ணாடி	53084	100409
துப்பாக்கித் தொழிற்சாலைகள்	30709	158327
பச்சைத் தோல்களும் பதனிடப்பட்ட தோல்களும்	12906	34624
ஆடைகள்	2157	24938
பலவகை	36455	98377
மொத்தம்	1751137	2522753

ஆதாரம்: Indian Labour Gazette.)

உள்ள தொழில்களை விஸ்தரிப்பதிலும் புதிய தொழில்களைத் தொடங்குவதிலும் உள்ள கடுமையான துன்பங்களால்,

[1] பிரிட்டிஷ் இந்தியாவிலும், ஹைதராபாத், மைசூர், பரோடா, குவாலியர், இந்தூர், திருவாங்கூர், கொச்சி ஆகிய இந்திய சமஸ்தானங்களிலும் இருந்த ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகள் (Departments of Commercial Intelligence Statistics, Government of India).

ஏற்கெனவே உள்ள மூலதனச் சாதனங்களை முழுவதும் நன்முகப் பயன்படுத்தியோ அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தியோதான் தொழில் உற்பத்தியைப் பெருக்க வேண்டியது தவிர்க்கமுடியாத தாயிற்று. சராசரியில் தொழிற்சாலைகளில் வேலை செய்வோரின் எண்ணிக்கை விரைவாகப் பெருகியது. இந்த முறை கையாளப் பட்டதற்கு ஒரு பொதுவான அறிகுறியாகும். சோம்பியிருந்த தொழிலாளர்களை அதிகமாக வேலைக்கு எடுத்துக்கொண்டதால் ஓரளவு முழு வேலையளிக்கப்பட்டது. அதாவது, மூலதன சாதனத்தின் அளவிற்கேற்ப அதிகபட்ச வேலைகளை எடுத்துக் கொள்ள முடிந்தது.

1939-க்கும் 1944-க்கும் இடையில், பொறியியல், இரசாயனத் தொழில்களிலும், ரயில்வே, துப்பாக்கித் தொழிற்சாலைகளிலும் வேலையளிப்பு மிக அதிகமாயிற்று. எல்லாத் தொழிற்சாலைகளிலுமாகச் சேர்ந்து மொத்த வேலையளிப்பு 44 சதவீதம் உயர்ந்தது. நம் நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 40 சதவீதமே வேலை செய்யக்கூடியவர்கள் என்று கொண்டால்,[1] ஆலைத் தொழிலாளிகளுக்கும் வேலைசெய்யக்கூடியவர்களுக்கும் உள்ள விகிதம், 1939-ல் 1·75 சதவீதமாயிருந்து 1945-ல் 2·4 சதவீதமாக உயர்ந்தது. குடிசைத் தொழில்கள், சுரங்கத் தொழில், எழுத்தர் தொழில்களிலும் தக்க விதத்தில் வேலையுயர்வு உண்டாகியிருக்க வேண்டும். பல தொழில்களில் அதிக ஷிஃப்டுகளும் (shifts), அதிக வேலை நேரமும் புகுத்தப்பட்டதிலிருந்து, ஏற்கெனவே இருந்த மூலதனத்தை மேலும் நிறையப் பயன்படுத்திக் கொண்டது விளங்கும். 1944-ல், பம்பாயில் பருத்தி நெசவாலைத் தொழிலில் 66 ஆலைகளில் 85,016 வேலையாட்களும், ஆமதாபாத்தில் 65 ஆலைகளில் 47,629 வேலையாட்களும் இரவு ஷிஃப்டுகளில் வேலை செய்தனர்.[2] சணல் தொழிலில், வேலை நேரம் ஒரு வாரத்திற்கு 45-லிருந்து 54 மணியாகவும், பிறகு 60 மணியாகவும் உயர்த்தப்பட்டது. போருக்கு முன்பு தறிகளில் 25 சதவீதம் மூடப்பட்டிருந்தது. ஆனால், 1942-ன் கடைசிக் கால் பகுதியில், எல்லாத் தறிகளும் திறக்கப்பட்டன. மேலும், இந்தக் காலத்தில், தொழிற்சாலைகளில் வேலையாட்களின் எண்ணிக்கை 50 சதவீதம் உயர்ந்தது. வேலை நிறுத்தத்தில் முடிந்த தகராறுகளும் அதிகரித்தாலும், போருக்கு முன்போ பின்போ இழந்த வேலை

[1] 1941 ஜனத்தொகைக் கணக்குப்படி இது 38·6 சதவீதம்; 1951-ல் இது 39·6 சதவீதம். See 'Final Report of the National Income Committee' (1954), Ministry of Finance, Government of India, p. 10.

[2] Indian Labour Gazette, January 1944.

நாட்களைவிட, இக் காலத்தில் இழந்த வேலை நாட்கள் மிகக் குறைவாகவே இருந்தன.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதிகத் தேவை இருந்தும், விலைகள் உயர்ந்தும், உற்பத்தி செய்வோருக்கு அதிக லாபம் இருந்தும், விவசாயத்தில் அதிக முன்னேற்றம் காணப்படவில்லை. போர் தொடங்கியவுடன், விவசாய விலைகள் ஊக வாணிகத்தினால் உயர்ந்தன. குறிப்பாக விவசாய ஏற்றுமதிப் பொருள்களாகிய சணல், பருத்தி, கொப்பரை போன்றவை விலை ஏறின. இதனால் கடலை, சணல், ஆமணக்கு, கரும்பு, எள், பருத்தி, இலுப்பை, கடுகு போன்றவை பயிர் செய்யப்படும் ஏக்கர் அளவு தற்காலிகமாக அதிகரித்தது. ஆனால், நேசநாடுகள் ஐரோப்பிய அரங்குகளில் தோல்வி கண்டு, போர் கிழக்கு நாடுகளுக்குப் பரவி, பல பெரிய மார்க்கெட்டுகள் போய்விட்டதால், காலச் சக்கரம் திரும்பியது. ஜப்பான் போரில் இறங்கியதால், நம் குறும் இழைப் பருத்திக்கு ஒன்றரை மில்லியன் பேல்கள் அளவுக்கு மார்க்கெட் போய்விட்டது. அதே சமயத்தில், கப்பல் ஏற்று வசதிகளில் அதிகத் துன்பம் உண்டானதால், நம்முடைய சணல் பொருள்களுக்கும் எண்ணெய் விதைகளுக்கும் அமெரிக்காவில் தேவை மிகவும் குறைந்தது. இதன் விளைவாக வாணிபப் பயிர்களின் விலைகளில் அதிக விலையிறக்கம் உண்டாயிற்று. அதே சமயத்தில், பர்மா இந்தியாவை விட்டுப் போய்விட்டதால் ஆண்டொன்றுக்குச் சாதாரணமாகக் கிடைத்து வந்த 14 லட்சம் டன் அரிசி இல்லாமல் போய்விட்டது. இதோடு பருவக் கோளாறுகளும் உண்டாகி (குறிப்பாக வங்காளத்தில்), உணவு தானியங்களில் பஞ்சநிலை ஏற்பட்டது. அவற்றின் விலையும் விரைவாக ஏறியது. அரசாங்கம் சுறுசுறுப்பாக, வாணிபப் பொருள்களைவிட்டு உணவுப் பொருள்களைப் பயிர் செய்யவேண்டுமென்ற இயக்கத்தை ஆரம்பித்தது. இந்தக் காலத்தில் இதன் விளைவாக, வாணிபப் பொருள்களின் ஏக்கர் அளவிலும் உணவுப் பயிர்களின் ஏக்கர் அளவிலும் உண்டான வித்தியாசத்தை அட்டவணை 52-ல் காணலாம். இது மட்டுமன்றி, மொத்த உற்பத்தியும் பலன் மிகக் குறைவாகவே இருந்தது. உற்பத்தி பெருகுவதற்காக நீர்ப்பாசனம், நிலச் சீர்திருத்தம் ஆகியவைகளுக்கு நீண்ட கால முதலீடு செய்தாலொழிய, விவசாய உற்பத்தியில் நிலையான உயர்வைக் காண முடியாதென்பது தெளிவு. போர்க்காலத்தில் இவ்வாறு செய்ய முடியவில்லை.

1941-க்கும் 1944-க்கும் இடையில், விவசாய உற்பத்தி, தொழில் உற்பத்திப் பெருக்கங்களுடன், விலையளவிலும் பொது

வாக ஏற்றம் இருந்தது. இதற்குக் காரணம், வேலையளிப்பிலும் பணக் கூலியிலும் உயர்வு உண்டானதால், மக்களின் வாங்குந் திறன் பெருகியது; ஆனால், மக்கள் துய்ப்புக்கு வேண்டிய பொருள்கள் மிகவும் குறைக்கப்பட்டன என்பதுதான். கூலிப் பட்டியலுக்கும் தேசிய வருமானத்திற்கும் உள்ள விகிதம் 1939–40-ல் 2 6 சதவீதமாயிருந்து 1944–45-ல் 3·5 சதவீதமாயிற்று. இந்த இரண்டு காலங்களுக்கிடையில், தேசிய வருமானம் 120 சதவீதம் பெருகிற்று; ஆனால், நன்கு அமைக்கப்பட்ட தொழில் களில் கூலிப்பட்டியல் 200 சதவீதம் உயர்ந்தது. அரசாங்கத்தின் தேவைப் பெருக்கம் பண வருமானத்தையும் நாட்டிலுள்ள வாங்குந் திறனையும் கணிசமாக அதிகரித்தது. ஆனால், உற்பத்தி யில் பெரும் பகுதியைப் போருக்காக எடுத்துக்கொண்டதால், வாங்குந் திறனின் அளவுக்கும், சமூகத்தின் துய்ப்புக்கு வேண்டிய பண்டங்கள் பணிகளின் அளவுக்கும் இடையே பெரிய வித்தி யாசம் உண்டாயிற்று போரின் முடிவுரையில் சரியான கட்டுப் பாட்டு முறை இல்லாததால், பெருகிவரும் தேவையினால் குறுகியிருந்த பொருள்கள்மீது அதிக நெருக்கடி வளர்ந்தது. போர் முடிவில் ஓரளவு நிலையாக்கப்பட்டதற்குக் காரணம் பெரும்பாலும் கட்டுப்பாடுகளேயாகும்.

விலைகளும் உற்பத்தியும், 1945–51

1943–44-ல் உண்டான உச்சநிலையிலிருந்து, அடுத்த மூன் றாண்டுகளில் திடீரென்று அதிகப் பின்னடைவு ஏற்பட்டது. 1945–46-ல் விவசாய உற்பத்தியின் குறியீட்டெண் மிகவும் கீழ் நிலையாகிய 94-ஐ அடைந்தது; தொழில் உற்பத்திக் குறியீட் டெண் 1944-ல் 115·7 ஆக இருந்து 1947-ல் 99·1 ஆக இறங்கியது. பிந்திய ஆண்டுகளில் சிறிது மறுமலர்ச்சி உண்டாயிற்று. ஆனால், மொத்தத்தில், போர் முடிந்து 1951 வரையில் தொழில் உற்பத்தி மிகவும் கீழ்நிலையில்தான் இருந்தது. 1952–53-ல்தான் முதன் மைப் பொருள்கள் உற்பத்தியில் சிறிது முன்னேற்றம் காணப் பட்டது. அட்டவணைகள் 55, 56-லிருந்து சில விவசாயப் பொருள்களின் உற்பத்தியிலும் தொழிற் பண்டங்களின் உற் பத்தியிலும் இருந்த பொதுவான போக்குகளை அறியலாம்.

போரின் முடிவில் உற்பத்தியில் பாதகப் போக்கு உண்டான தற்குப் பல காரணங்கள் உண்டு. முதலில், போர்க் காலத்தில் மொத்த உற்பத்தியில் பெரும் பகுதியாக இருந்த அரசாங்கத்தின் தேவை திடீரென்று நின்றுவிட்டது. 1945-ல் சண்டை முடிந்த பிறகு துப்பாக்கித் தொழிற்சாலைகள், இராணுவ உடைத் தொழிற்சாலைகள் முதலியவற்றில் ஆட்குறைப்பு செய்யப்பட்ட

தாலும், போருக்கு வேண்டிய சிலவகைப் பொருள்களுக்கான ஒப்பந்தம் கைவிடப்பட்டதாலும் 1946-க்குரிய வேலையளிப்பு எண், 1945-ல் இருந்த உச்சி நிலையிலிருந்து 7 சதவீதம் கீழே இறங்கியது. போருக்குப் பிறகு தொழிற்சாலைகளில் வேலைநேரக் குறைவு. அடிக்கடி உண்டான தொழில் தகராறுகள்,[1] தொழிலாளர்கள் தலத்திலில்லாதிருத்தல் ஆகியவையும் உற்பத்தி வேலைக்கு வேண்டிய தொழிலாளரின் எண்ணிக்கையைக் குறையச் செய்தன. இரண்டாவதாக, பெரும்பாலான தொழில்களில் இயந்திரங்களும் கருவிகளும் போர்க்காலத்தில் அதிகமாக வேலை செய்து தேய்ந்துவிட்டதால், அவற்றிற்குப் பதில் புதிய இயந்திரங்களையும் கருவிகளையும் வைக்கவேண்டிய நிலை இருந்தது. போருக்கு முந்தி இயந்திரங்களைப் புதுப்பிக்கச் சராசரி ரூ. 8 கோடி தேவை என்று செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி, 1948-ல் புதுப்பிக்கவும் சீர்திருத்தவும் வேண்டியிருந்த எல்லா பாக்கிகளுக்காகவும் ஒரு வருடம் அல்லது ஒன்றரை வருடத்தில் சுமார் ரூ. 200 கோடி மதிப்புள்ள முதற்கருவிப் பொருள்களை இந்தியா இறக்குமதி செய்யவேண்டியிருக்கும் என்று கணக்கிடப்பட்டது.

அட்டவணை 55

இந்திய யூனியனில் விவசாய உற்பத்தி, 1945–51

பண்டம்	1936–37 முதல் 1938–39 வரை சராசரி	1945–46	1946–47	1947–48	1948–49	1949–50	1950–51	1951–52
உணவு தானியம் (a) (000 டன்கள்)	50019	45736	46143	48244	47849	49685	45337	45733
எண்ணெய் வித்து (b) (000 டன்கள்)	4812	5013	5148	5117	4502	5142	5078	4820
பருத்தி (லின்ட்) (000 பேல்கள்)	4146	2167	2168	2188	1767	2628	2910	3133
சணல் (000 பேல்கள்)	1904	1459	1320	1658	2073	3089	3283	4678

(a) அரிசி, கோதுமை, தினை, வரகு, சோளம், கேழ்வரகு, பார்லி, பயறு ஆகியவை இதில் அடங்கும்.

(b) எள், நிலக்கடலை, இலுப்பை, கடுகு, ஆளி விதை, ஆமணக்கு முதலிய விதைகள் இதில் அடங்கும்.

(ஆதாரம்: 'Report on Currency and Finance', Reserve Bank of India, 1953-54).

1946-50-க்குட்பட்ட ஐந்தாண்டுகளில் மொத்த ஆள் நாட்கள் 56,524,900. அதற்கு முந்திய போர்க்கால ஐந்தாண்டுகளில் இது 18,954,560 ஆக இருந்தது. 'Indian Labour Gazette', Government of India, March 1954, p. 918.

நெசவாலைத் தொழிலில் 40 சதவீதம் இயந்திரங்களைப் புதுப்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. எஃகு தொழிலில் பழையவற்றைப் புதுப்பிப்பதற்காக ரூ. 30 கோடி வேண்டுமென்று மதிப்பிடப்பட்டது.[1] மற்றத் தொழில்கள் இவ்வளவு பாதிக்கப்படாமலிருந்திருக்கும். ஆனால், போர் முடிவில், அதிக அளவில் முதற் கருவிப் பொருள்களைப் புதுப்பிக்கவேண்டிய அவசியம் இருந்தது என்பது தெளிவு.

அட்டவணை 56

இந்தியாவில் தொழில் உற்பத்தி, 1944–51

தொழில்	1944	1945	1946	1947	1948	1949	1950	1951
உருவாக்கப்பட்ட எஃகு (a) (000 டன்களில்)	934	954	890	893	857	930	1004	1076
பருத்தித் துணிகள் (மில்லியன் கஜம்)	4852	4711	3908	3762	4319	3905	3665	4076
சணல் செய்பொருள்கள் (a) (000 டன்களில்)	1115	1086	1088	1051	1088	946	835	875
காகிதம் (000 அங்.)	1927	1964	2120	1862	1958	2064	2178	2638
சர்க்கரை (000 டன்கள்)	1091	967	923	901	1075	1001	2612	1115
சிமென்ட் (000 டன்கள்)	2048	2209	1542	1447	1553	2102	2612	3196
நிலக்கரி எடுப்பு (000 டன்கள்)	26040	28716	28884	30000	29820	31452	31992	34308
மின்சாரம் விற்றது (மில்லியன் K.W.P.)	3212	3439	3348	3415	3721	3984	4103	4762

1947 முதல் இந்திய யூனியனுக்குரிய விவரங்கள்.

(a) எல்லா விவரங்களும் இந்திய யூனியனுக்குரியவை.

(ஆதாரம்: 'Monthly Abstract Statistics', Ministry of Commerce and Industry, Government of India.)

இது எவ்வளவு அவசரமாயிருந்திருப்பினும், போர் முடிந்தவுடன் நிறைவேற்றப்பட முடியவில்லை. ஏனெனின், முதற்கருவிப் பொருள்களும், அவற்றை அமைப்பதற்குரிய கட்டடச் சாமான்களும் கிடைப்பது அரிதாயிருந்தது. மூன்றாவதாக, நாட்டுப் பிரிவினையாலும், அதையடுத்து வந்த அரசியல் கலவரங்களாலும்

[1] Records and Statistics, 'Eastern Economist', Vol. I, No. 1, March, 1949, p. 20.

கடத்து வசதிகள் கிடைக்காததாலும், கச்சாப் பொருள்களில் கடுமையான பற்முக்குறை உண்டாயிற்று. பிரிவினையால், இந்திய யூனியன் சணல் பயிராகும் ஏக்கர் பரப்பில் 76 சதவீதத்தையும், பருத்தி பயிராகும் ஏக்கர் பரப்பில் 23 சதவீதத்தையும் இழந்தது. பிரிக்கப்படாத இந்தியாவில் இவை முறையே மொத்த உற்பத்தியில் 80 சதவீதத்தையும் 40 சதவீதத்தையும் அளித்து வந்தன. இந்திய யூனியனில், அரிசி உற்பத்தியும் கோதுமை உற்பத்தியும், பிரிக்கப்படாத இந்தியாவில் இருந்த மொத்தத்தில் முறையே, 69 சதவீதமும் 65 சதவீதமும் ஆகும்.[1] ஆனால், இந்திய யூனியன் இதைக்கொண்டு 78 சதவீதம் மக்கள் தொகையைக் காப்பாற்றவேண்டியிருந்தது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே உறவும் ஒப்பந்தமும் இல்லாததால், சணலும் பருத்தியுமாகிய இரண்டு முக்கிய கச்சாப் பொருள்கள் இந்தியாவுக்கு வருவது கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டு, இந்தியாவில் இந்த இரண்டு பெரிய தொழில்களும் மிகவும் பாதிக்கப்பட்டன. 1949-ல் பாகிஸ்தான் மதிப்பிறக்கம் செய்ய மறுத்ததால், கச்சாப் பொருள் பஞ்சம் மிகவும் கடுமையாயிற்று. அண்மைக்காலம் வரையில், இந்த இரண்டு பொருள்களிலும் இந்தியா தன்னிறைவு பெறுவதற்குச் செய்யப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

மற்றொரு முக்கிய காரணம் தொழிலாளரின் உற்பத்தித் திறன் குறைந்ததாகும். போர் முடிந்தவுடன் உத்தரப் பிரதேசத் தொழிலாளர் விசாரணைக் குழுவின் முன்பு, வேலையளிப்போர் தரப்புக் குழு அளித்த சாட்சியத்தில், பஞ்சாலைகளில் தொழிலாளரின் திறமை 30 சதவீதம் குறைந்துவிட்டதென்று வற்புறுத்திக் கூறப்பட்டது.[2] டாட்டா இரும்பு எஃகு தொழிற்சாலையில் வேலை செய்வோர் தலா உற்பத்தி செய்த உருவாக்கப்பட்ட எஃகின் அளவு 1939–40-ல் இருந்த 24·36 டன்னிலிருந்து 1948–49-ல் 16·3 டன்னுகக் குறைந்தது.[3] மற்றத் தொழில்களில் நிலைமை இவ்வளவு மோசமாக இருந்திராது. எனினும், இந்தக் காலத்தில் பொதுவாகத் தொழிலாளர் உற்பத்தித் திறனில் குறைவு இருந்தது என்பதை மறுக்க முடியாது. நம் நாட்டில் சில முக்கியமான தொழில்களில் உற்பத்தித் திறன்பற்றிய விவரங்களின் அடிப்படையில் அண்மையில் செய்யப்பட்ட கணக்

[1] Reserve Bank of India, 'Reports on Currency and Finance', 1948–49, p. 68.

[2] 'Indian Finance Annual Number', 1947, p. 68.

[3] 'Eastern Economists', 29th December, 1950, p. 975.

கீட்டின்படி, 1938-க்கும் 1948-க்கும் இடையில் உற்பத்தித் திறம் 10 சதவீதத்திற்கு மேல் குறைந்தது.[1] எனினும், இந்தக் குறைவு தொழிலாளர் திறமை குறைந்ததால்மட்டும் உண்டானதென்று கூறமுடியாது. தேய்ந்துபோன இயந்திரங்கள், கச்சாப் பொருள்கள் ஒழுங்காகக் கிடைக்காமை, நிருவாகத் திறன், அமைப்பு முறை ஆகியவற்றின் தரம் முதலியவையும் கருத்தில் கொள்ளவேண்டிய முக்கியமான அம்சங்களாகும். கட்டுப்பாடுகள், பொருள் பஞ்சம், கறுப்பு மார்க்கெட், விலைகள் ஏற்றம் ஆகியவற்றால் தொழிலாளர்கள் அதிகக் கஷ்டப்பட்டு சம்பாதிக்க வேண்டுமென்ற ஊக்கத்தை இழந்திருப்பர் என்றும் விநோதமாகச் சிலர் கூறலாம். அதிகக் கூலி விகிதத்தினால் அதிக ஓய்வு விருப்பம் ஏற்படுவதும், அதோடு பண வருமானத்தின் இறுதி நிலைப் பயன்பாடு மிகவும் குறைந்திருப்பதும், உற்பத்தித் துறையில் பயன்தரமாட்டா.[2]

மேலும், தொழில் நடத்துவோரின் போக்கும் உற்பத்திக்கு உதவுவதாயில்லை. தொழிலாளர் பொருட்டுச் செலவில் உயர்வு, பொருள்களின் விலையேற்றம், முதற்கருவிப் பொருள்களைப் பெறுவதில் உள்ள அருமை, தொழிலாளர் சிக்கல்கள், அரசாங்கத்தின் வரிக் கொள்கையும் விலைக் கொள்கையும், தொழில்கள் தேசியமயமாக்கப்படும் என்ற அச்சம், இலாப அளவில் குறைவு ஆகிய இவையெல்லாம் தொழில் நடத்துவோரின் நம்பிக்கையைக் குறைத்துவிட்டன. மூலதன வெளியீட்டிலும் அவற்றின் மதிப்பிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி உண்டானது, இந்தக் காலத்தில் தொழில் முனைப்பு எவ்வாறிருந்தது என்பதை ஒருவாறு காட்டும். இவை முறையே, 1947–48-ல் 426-ம், ரூ. 163 கோடியும், 1948–49-ல் 348-ம் ரூ. 112 கோடியும், 1950 காலண்டர் ஆண்டில் 263-ம் ரூ. 75 கோடியும் ஆக இருந்தன.

விவசாய உற்பத்தியில், போர்க்காலத்திலும் பிறகும் கையாளப்பட்ட முன்னேற்றத்திற்கான குறுகிய கால நடவடிக்கைகள் அதிகப் பலனளிக்கவில்லை. 1948–49-க்கும் 1951–52-க்கும் இடையில் அரிசியும் கோதுமையும் பயிர் செய்யப்பட்ட ஏக்கர் பரப்பு 94·8 மில்லியனிலிருந்து 98·8 மில்லியனுக்கு உயர்ந்தது. ஆனால், உற்பத்தி சிறிது குறைந்தது. எனினும், புகையிலை, எண்ணெய் விதைகள், சணல், பருத்தி முதலிய வாணிபப்

[1] 'R. Balakrishna, 'The Measurements of Productivity in Indian Industry' (1953), p. 35.

[2] A. J. Brown, 'The Great Inflation', (1955), p. 244.

பயிர்களின் ஏக்கர் பரப்பு அதிகரித்தற்கேற்ப, உற்பத்தியிலும் கணிசமான அதிகரிப்பு காணப்பட்டது. போருக்குப் பிறகு ஐந்தாண்டுகளில் விவசாய உற்பத்தி குறைந்ததற்கு முக்கிய காரணம், நாட்டின் பல பகுதிகளையும் பாதித்த தொடர்ச்சியான பாதகமான பருவங்களும் இயற்கை விபத்துகளும் ஆகும். 1946-ல் புயல்கள், வெள்ளங்கள், மழையின்மை ஆகியவை நாட்டின் பல்வேறு பகுதிகளில் உணவுப் பெருக்கத்தைக் கடுமையாகப் பாதித்தன. குறிப்பாக, பம்பாய், சென்னை, மைசூர் இராச்சியங்களில் இவ்வாறு நிகழ்ந்தது. மேற்கு இந்தியாவில் அடுத்த ஆண்டில் பருவம் தவறிப் பெய்த மழையும், உத்தரப் பிரதேசத்தில் கோதுமைப் பயிருக்கு வந்த நோயும் உணவு உற்பத்திக்குப் பெருந்தீங்கு விளைவித்தன. 1948-ல் கிழக்குப் பஞ்சாபிலும், மேற்கு வங்காளத்திலும் குழப்பநிலை இருந்ததாலும், கிழக்குப் பஞ்சாபில் வெள்ளத்தினாலும், சென்னையிலும், பம்பாயின் சில பகுதிகளிலும் அடிக்கடி பருவமழை தவறியதாலும் விவசாய உற்பத்தி குறைந்தது. 1949-லும் பருவக் கோளாறுகள் தொடர்ந்திருந்தன. 1950-ல் பீகார், உத்தரப்பிரதேசம், பஞ்சாப் ஆகிய ராஜ்யங்களில் பெரிய வெள்ளங்களும், அஸ்ஸாமில் பூகம்பமும், சென்னையில் நான்காம் ஆண்டும் தொடர்ச்சியாக ஓரளவு மழைக்குறைவும் உண்டாயின. உணவுப் பயிர்கள் விளையும் பரப்பில் சிறிது அதிகரிப்பு உண்டாயினும், உணவு உற்பத்திக் குறைவிற்குக் காரணங்கள் இவையே.

நாட்டில் உள்ள வாங்குந்திறனின் அளவுக்கும், செலவழிக்கும் மனப்பான்மைக்கும் ஏற்ப உற்பத்தி குறைந்ததால் விலையேற்றம் உண்டாகியிருந்திருக்கவேண்டும். உண்மையில் இந்த இயல்பான போக்குக்கு உறுதுணையாக உற்பத்திச் செலவு அதிகரிப்பும் தேவை அதிகரிப்பும் இருந்தன. கடத்துவசதிக் குறைவும் பொருள் குறைவும் ஒருபுறமிருக்க, கூலி உயர்வினால் உற்பத்திச் செலவு ஏறியது. தொழிலாளர் உற்பத்தித்திறன் குறைந்திருந்தும்கூடக் கூலி உயர்வு அளிக்கப்பட்டது. 'ஈஸ்டர்ன் எகானமிஸ்டு' பத்திரிகையின் மதிப்பீட்டின்படி, நன்கு அமைக்கப்பட்ட தொழிலகங்களில் மொத்தக் கூலிப் பட்டியலுக்கும் மொத்தத் தொழில் வருமானத்திற்கும் இந்த விகிதம் 1943-44-ல் 21 சதவீதமாயிருந்து 1946-47-ல் 39 சதவீதமும், 1949-50-ல் 44 சதவீதமும் ஆயிற்று.[1] இந்திய அரசாங்கத்தின் தொழிலாளர் தகவல் நிலையம் அண்மையில் தயாரித்துள்ள உண்மையான வருமானக் குறியீட்டெண்களும், தொழிற்சாலைகளில் வேலை செய்வோரின் உற்பத்தித் திறன் குறியீட்டெண்களும் இவ் உண்மையை மேலும் விளக்கும் (அட்டவணை 57).

[1] 'Eastern Economist', 31st December, 1948, p. 1124.

அட்டவணை 57

தொழிலாளர் உற்பத்தித் திறனும் உண்மையான சம்பாத்தியமும்

வருடம்	தொழில் உற்பத்திக் குறியீட்டெண் (a)	வேலையளிப்புக் குறியீட்டெண் (b)	உண்மைச் சம்பாத்தியக் குறியீட்டெண் (c)	உற்பத்தித் திறன் குறியீட்டெண் (d)	c/d×100
1939	100·0	100·0	100·0	100·0	100·0
1940	108·1	103·1	108·6	104·2	104·2
1941	114·3	120·6	103·7	94·8	109·4
1942	106·9	125·3	89·0	85·3	104·3
1943	112·2	132·8	67·0	84·5	79·2
1944	115·7	134·1	75·1	86·3	87·0
1945	112·5	141·5	74·9	79·5	94·2
1946	102·9	137·8	73·2	74·7	97·9
1947	99·1	136·6	78·4	72·5	108·1
1948	112·3	141·4	84·4	79·4	106·3

(ஆதாரம்: Indian Labour Gazetter, November 1955.)

அட்டவணை 57-ல் கடைசிப் பத்தியில் தொழிலாளர் உற்பத்தித் திறனுக்கும் உண்மைச் சம்பாத்தியத்திற்கும் உள்ள விகிதம் காட்டப்பட்டுள்ளது. அது, 1946 முதல் உற்பத்தித் திறன் குறைந்தும், கூலிகள் எந்த அளவுக்கு உயர்ந்துமுள்ளன என்பதைக் காட்டுகிறது. கூலிகளினால் செலவு பாதிக்கப்படுவதால் விலைகள் உயர்கின்றன; வருமானம் பாதிக்கப்படுகிறது; மேலும், அதிகமாகக் கூலியை எதிர்பார்ப்பதாலும், செலவழிக்கத் தயாராயிருப்பதாலும் விலைகள் பாதிக்கப்படுகின்றன. இப்போது நாம் ஆராயும் காலப்பகுதியில், கூலி உயர்வு உற்பத்திச் செலவை அதிகரித்து அதனால் விலைகளையும் பாதித்தது என்பதை மறுக்க முடியாது. ஆனால், அதிகப் பணக் கூலியானது உற்பத்திச் செலவைப் பாதிக்கும் அம்சத்தை நாம் மிகைப்படுத்தக்கூடாது. இதைவிட முக்கியமானது, அதிகரித்துவந்த தேவைதான். அது போர்க் காலத்தில் உண்டான அதிகப் பண வருமானத்தினால் ஆற்றல் பெற்றது. மக்கள் பெருக்கம், கட்டுப்பாடு நீக்கம், அடங்கிக் கிடந்த துய்ப்போர் தேவை வெளிப்படுதல், கட்டட அமைப்பு, தொழில் பெருக்கம், கச்சாப் பொருள்களுக்கும் முதலினப் பொருள்களுக்கும் உண்டான தேவை ஆகியவையெல்லாம் சேர்ந்து போருக்குப் பிந்திய ஆண்டுகளில் இடைத்தரமான பொருள்களுக்கும் இறுதிப் பொருள்களுக்கும் தேவையை மேலோங்கச் செய்தன. அதிக வாங்குந்திறனை வரிகள் ஈர்த்துக் கொள்ள முடியாததாலும், சேமிப்பு விகிதத்தில் குறை உண்டான

தாலும் செலவழிக்கக்கூடிய தனியார் வருமானம் பெருகியது. இந்த அதிக வருமானத்தின் வற்புறுத்தல்தான், உற்பத்தியின் அதிகப் பணச் செலவைவிட, விலைகள் ஏறுவதற்கு அதிக உதவியாயிருந்தது. இந்தக் காலத்திய கூலிக் குறியீட்டெண்களை இலாபக் குறியீட்டெண்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், ஒரு புறம் உற்பத்திச் செலவும் மற்றொருபுறம் தேவையும் விலையளவை எப்படிப் பாதித்தன என்பது தெரியும்.

அட்டவணை 58

கூலிக் குறியீட்டெண்ணும் இலாபக் குறியீட்டெண்ணும், 1946–47 முதல் 1954–55 வரை

வருடம்	கூலி*	தொழில் இலாபம்†	செய்பொருள்களின் விலைகள்
1946–47	208·6	229·2	271·9
1947–48	253·2	191·6	286·4
1948–49	304·0	259·9	346·1
1949–50	340·3	181·5	347·2
1950–51	334·2	246·6	354·2
1951–52	356·8	310·5	401·5
1952–53	385·7	190·6	371·2
1953–54	384·6	261·2	367·4
1954–55	381·2	292·0	377·4
1955–56	—	319·6	372·9

(ஆதாரம் : * 'Indian Labour Gazette', November, 1955.) Figures relate to calendar years beginning 1946–208·6. Base: 1939=100.

† 'Eastern Economist', Records and Statistics, April 1956.

Figures relate to calender years beginning 1946–229·2).

அட்டவணை 58-ல் உள்ள விவரங்களை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்ட படம் 7, 1946-48-ல், கூலிகள், இலாபங்களுடன் செய்பொருள்களின் விலைகளும் உயர்ந்தன என்பதைக் காட்டுகிறது. இந்தக் காலத்தில், கூலி வீதங்களோடு, இலாப வீதங்களோடு ஆகியவற்றின் சாய்மானங்கள், விலையேற்றத்தில் தேவைதான் அதிக முக்கியமாக இருந்தது என்பதைக் காட்டும். இதற்கு மாறாக, 1948–50-ல் அதிகக் கூலியினால் உண்டான அதிக உற்பத்திச் செலவின் காரணமாக விலைகள் உயர்ந்தே இருந்தன என்று தெரிகிறது. 1948–49-ல் உண்டான இலாபக் குறைவு, நாட்டில் இருந்த பொதுவான பின்னிறக்க நிலையாலும், தொழில் உற்பத்திப் பொருள்கள் பயன்படுத்தப்படுவது குறைந்ததாலும் ஏற்பட்டிருக்கவேண்டும்.



படம் 7. 1946–47 முதல் 1955–56 வரை கூலி, இலாபம், செய்பொருள்களின் விலை ஆகியவற்றின் குறியீட்டெண்கள்

1951 முதல் விலைகளும் உற்பத்தியும்

1951 முதல் நம் நாட்டில் தொழில் உற்பத்தியிலும் விவசாய உற்பத்தியிலும் கவர்ச்சியான முன்னேற்றம் காணப்படுகிறது. 'ஈஸ்டர்ன் எகானமிஸ்டு' தந்துள்ள தொழில் நடவடிக்கையின் குறியீட்டெண், (1939 ஆகஸ்டுடன் முடிவடையும் ஆண்டை அடிப்படையாகக் கொண்டது) 1950–51-ல் 105 ஆக இருந்து 1952–53-ல் 116 ஆகவும், 1954–55-ல் 138 ஆகவும் உயர்ந்தது. தொழில் உற்பத்தியின் அரசாங்கக் குறியீட்டெண் (அடிப் படை 1951 = 100), 1959-ல் படிப்படியாக 151·1-க்கு உயர்ந்தது. விவசாய உற்பத்திக் குறியீட்டெண் (விவசாய ஆண்டு 1949–50 = 100), 1956–57-ல் உச்ச எல்லையாகிய 123·6ஐ எட்டிற்று; ஆனால், 1957–58-ல் 114·6-க்கு இறங்கி, மீண்டும் அடுத்த ஆண்டில் 132·0-க்கு ஏறியது. 1960–61-க்கு அது 135 ஆக உயரும் என்று எதிர் பார்க்கப்பட்டது. அட்டவணைகள் 59, 60-ல் இந்த அதிகரிப்பு சுருக்கிக் கூறப்பட்டுள்ளது.

பெரும்பாலான விவசாயப் பொருள்கள், தொழிற்பொருள் கள் உற்பத்தியில் விரைவான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. 1950–51-க்கும் 1958–59-க்கும் இடையில் உணவு உற்பத்தி 50 மில்லியன் டன்னிலிருந்து 73·5 மில்லியன் டன்னுக்கு, அதா வது, 47 சதவீதம் பெருகிற்று. அரிசி உற்பத்தி 20-லிருந்து 30 மில்லியன் டன் அல்லது 50 சதவீதம் உயர்ந்தது. கோதுமை 6·4 மில்லியன் டன்னிலிருந்து 9·7 டன்னுக, அதாவது, 52 சத வீதம் உயர்ந்தது. 1957–'58-ல் பெரும்பாலான உணவு தானி யங்களின் உற்பத்தி குறைந்தது. ஆனால், மீண்டும் முன்னேறி யது. தொழில் கச்சாப் பொருள்கள், செய்பொருள்கள் ஆகிய வற்றின் உற்பத்தியிலும் இதேபோல முக்கியமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. தொழில் கச்சாப் பொருள்களில், எண் ணெய் விதைகளிலும் பருத்தி லின்டிலும் குறிப்பிடத்தக்க உயர்வு கண்டுள்ளது. இரும்பு, மாங்கனீசு தாதுக்களும், காப்பி, ரப்பர் ஆகியவையும் கணிசமாக உயர்ந்தன. செய்பொருள் களில் 1950-க்கும் 1958-க்கும் இடையில் சணல் செய்பொருள்கள் 27 சதவீதமும், பருத்தித் துணி 34 சதவீதமும், உருவாக்கப்பட்ட எஃகும் சிமெண்டும் முறையே 30 சதவீதமும் 132 சதவீதமும் முன்னேறின.

உற்பத்தியில் இந்தச் சாதகமான நிலை ஏற்பட்டதற்கு ஒரு முக்கிய காரணம், உற்பத்திப் பெருக்கத்தில் அரசாங்கம் அக் கறை கொண்டதும், விவசாய உற்பத்தி, தொழில் உற்பத்தி ஆகியவைகளுக்கு ஆதரவு கொடுத்ததும் ஆகும். தேசிய அபி

அட்டவணை 59

இந்தியாவில் உணவுப் பொருள்களும் தொழில் கச்சாப் பொருள்களும் உற்பத்தி, 1951–58

பொருள்கள்	அலகுகள்	1951–52	1952–53	1953–54	1954–55	1955–56	1956–57	1957–58	1958–59	1959–60	1960–61*
உணவு தானியங்கள் (அரிசி, பருப்பு வகைகள்).	000 டன்கள்	51175	58266	68718	65801	65794	68748	62026	73500	—	75000
எண்ணெய் வித்துகள்	000 டன்கள்	4949	4659	5285	5877	5643	6176	5907	6920	—	7200
பருத்தி (லின்ட்)	000 பேல்கள்	3133	3194	3944	4227	3998	4735	4753	4710	—	5400
சணல்	000 பேல்கள்	4678	4592	3091	2928	4198	4288	4088	5200	—	5500
புகையிலை	000 டன்கள்	206	241	268	248	298	294	252	N.A.	—	—

* பெறக்கூடிய அளவு (Third Five Year Plan, Draft Outline, Government of India).

(ஆதாரம் ; 'Reports on Currency and Finance,' Reserve Bank of India.)

அட்டவணை 60

இந்தியாவில் தொழில் உற்பத்தி, 1951-59

பொருள்கள்	அலகுகள்	1952	1953	1954	1955	1956	1957	1958	1959
பருத்தித் துணி	மில்லியன் கெஜங்கள்	4598	4878	4998	5093	5204	5317	4927	4926
சணல் செய் பொருள்கள்	000 டன்கள்	952	869	928	1027	1093	1030	1062	960
நிலக்கரி எடுப்பு	லட்சம் டன்கள்	362	358	368	382	394	435	453	470
உருவச்சுப்பட்ட எஃகு	000 டன்கள்	1103	1024	1243	1260	1338	1344	1296	1740
சிமெண்ட்	000 டன்கள்	3538	3780	4293	4416	4928	4602	6068	6828
சர்க்கரை	000 டன்கள்	1494	1291	1003	1595	1856	2008	2006	1920

(ஆதாரம் : 'Reports on Currency and Finance', Reserve Bank of India.)

விருத்தித் திட்டத்தோடு நம் நாட்டில் அதிக உற்பத்தி நடவடிக்கைகளும் ஒருங்கே தோன்றியது குறிப்பிடத்தக்கது. 1950 முதல் அரசாங்கமானது, உணவுப் பயிர் உற்பத்தியை அதிகரிக்கவும், அதனோடு நம் நாட்டின் இரண்டு முக்கிய வாணிபப் பயிர்களாகிய சணலையும் பருத்தியையும் மிகுதியாக உற்பத்தி செய்யவும் உறுதியான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதற்காகத் தான் 1950 ஆகஸ்டில் 'அதிக உணவைப் பயிரிடும் இயக்கம்' (Grow More Food Campaign), 'இணைப்பான உற்பத்தித் திட்டத்'தோடு (Integrated Production Programme) சேர்க்கப்பட்டது. இரண்டாண்டுகளுக்குப் பிறகு இந்தக் குறுகிய காலத் திட்டம், ஒரு நீண்டகாலப் 'பத்தாண்டு நிலத் திருத்தத் திட்டத்தின் (Ten year Land Transformation Programme) ஒரு பகுதியாகச் செய்யப்பட்டது. இத் திட்டம், கிடைக்கக்கூடிய நிலம், நீர், கால்நடை ஆகியவைகளை அதிக அளவுக்கு அபிவிருத்தி செய்து நிலத்தைத் தொழிற் சீரமைப்பு அடிப்படையில் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.[1] 1951 ஜனவரியில் இந்தோ-அமெரிக்கத் தொழில்நுட்பக் கூட்டுறவு ஒப்பந்தத்தின்படி (Indo-U.S. Technical Co-operation Agreement) தொடங்கப்பட்ட சமுதாய அபிவிருத்தித் திட்டமும் தேசிய விஸ்தரிப்புத் திட்டமும் (Community Development Project), தேசிய விஸ்தரிப்புப் பணித் திட்டங்களும்கூட (National Extension Service Scheme) விவசாய உற்பத்தியைப் பெருக்குவதைத் தம்

[1] Reserve Bank of India, 'Report on Currency and Finance', 1951-52, p. 34.

முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகக் கொண்டுள்ளன. 1958-ல் கோதுமை, பார்லி, பயறு, கம்பு ஆகியவற்றிற்காகச் சோதனை யாகத் தொடங்கப்பட்ட தீவிர ராபி உற்பத்தி இயக்கமும் (Rabi Production Campaign) அதிக உற்பத்தியையளித்திருக் கிறது. இந்த இயக்கத்தின் முக்கியமான அம்சம் உத்தியோகப் பற்றற்றோர் இதில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தியதும், உழவர்களிடையே உற்சாகத்தை உண்டாக்க வேண்டுமென்று கூறியதும் ஆகும். மேலும், பெரிய, சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களை அமைப்பதும், சீர்திருத்திய விவசாய முறை களை மக்களிடையே பரப்புவதும், ஜப்பானிய முறையில் அரிசி பயிர் செய்வதும், மத்திய டிராக்டர் நிறுவனத்தின்கீழ் (Central Tractor Organisation) நிலமீட்புத் திட்டத்தைத் தீவிரப் படுத்துவதும் போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப் பட்டது. பருத்தி உற்பத்தியை ஊக்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், பருத்தி பயிர் செய்வதற்காகப் புதிதாக நிலத் தைப் பயன்படுத்தினால் அந்த நிலத்திற்கு வரிவிலக்கு அளித்தல், இராச்சிய அரசாங்கங்கள் பருத்தி நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியை விஸ்தரித்தல், அரசாங்க உதவித் தொகை பெற்ற உரங்களை வாங்குவதற்குக் கடன் அளித்தல் முதலியன. இந்த நடவடிக்கைகளின் விளைவாக, 1950–51 முதல் எட்டாண்டுகளில் கோதுமையும் அரிசியும் பயிர் செய்யப்படும் நிலங்களின் பரப்பு 13 மில்லியன் ஏக்கர், அதாவது, சுமார் 13 சதவீதமும், பருத்தி பயிர் செய்யப்படும் நிலம் 5 மில்லியன் ஏக்கர் அல்லது 36 சதவீத மும் அதிகரித்தன. ஆனால், கரும்பு, சணல் பயிர் செய்யப்பட்ட நிலங்கள் அவ்வளவாக அதிகரிக்கவில்லை. இதற்கு ஒரு காரணம் வாணிபப் பயிர்களின் விலைகள் குறைந்ததால் சில ஆண்டுகளில் அவை பயிர் செய்யப்பட்ட நிலத்தின் அளவு மீண்டும் மற்றப் பயிர்களுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டதாகும்.

அரசாங்கம் தொழில் துறையில் நுழைந்ததாலும், புதிய தொழில்களைத் தொடங்குவதற்கும், ஏற்கெனவே இருந்தவற்றை விஸ்தரிப்பதற்கும் அரசாங்கம் ஆதரவளித்ததாலும், தொழில் உற்பத்திப் பெருக்கமும் சாத்தியமாயிற்று. அடிப்படைத் தொழிற் பொருள்களைப் பெறுவதற்கு, சிந்திரி உரத் தொழிற் சாலை, சித்தரஞ்சன் எஞ்சின் தொழிற்சாலைகளை அதிகச் செலவில் நிறுவியதுடன், கச்சாப் பொருள்களை ஒழுங்காக அளித்தும், முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தியும், வரிச் சலுகைகள் அளித்தும், செய்பொருள்களை ஏற்றுமதி செய்தும் தனியார் தொழிலை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மற்கொண்டது. 1950-ன் இறுதி யில், தொழில் அபிவிருத்திக் குழு (Development Committee on

Industries) ஒன்று நிறுவப்பட்டது. அதன் வேலை, தொழில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழிவகைகளைக் காண்பதும், தொழில்களின் எதிர்கால வளர்ச்சிக்குத் திட்டமிடுவதும் ஆகும். 1952-ல் தனியாக ஓர் உற்பத்தி அமைச்சர் நியமிக்கப்பட்டார். இவர் பொறுப்பு, அரசாங்கத் தொழில் துறையில் கொள்கைகளை வகுப்பதும் இணைப்பதும், தொழில்களைக் கட்டுப்படுத்துவதும் நிருவகிப்பதும் ஆகும். 1948-ல் தொழில் நிதிக் கார்பொரேஷன் (Industrial Finance Corporation) ஒன்று நிறுவப்பட்டும், பின்னர் அதன் நடவடிக்கைகளை விரிவாக்கியும், தனியார் துறையில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு மேலும் மேலும் அதிக நிதி உதவியளிக்கப்பட்டது. கச்சாப் பருத்தி இறக்குமதியைத் தாராளமாக்கியும், பாகிஸ்தானுடன் வாணிப ஒப்பந்தங்கள் செய்துகொண்டும், நம் நாட்டிலுள்ள நெசவாலைகளுக்கும் சணல் தொழிற்சாலைகளுக்கும் போதுமான அளவு கச்சாப் பொருள் களைப் பெற அரசாங்கம் வழி செய்தது. ஏற்றுமதி வரிகளைக் குறைத்தோ, நீக்கியோ, குறிப்பாகப் பருத்தி, சணல் பொருள் களின் ஏற்றுமதிக்கு உதவியளிக்கப்பட்டது. அண்மைக்காலத் தில் பருத்தித் துணியையும் நூலையும் அதிகமாக ஏற்றுமதி செய் வதற்கும், அதை நிலைநிறுத்தி அதற்கு உதவுவதற்கும் ஏற்றுமதி முன்னேற்றக் குழு (Export Promotion Council) ஒன்று நிறுவப் பட்டது. சில தொழில்களில் உற்பத்திச்செலவு உயர்ந்திருப்பதை ஈடு செய்வதற்கு வார்ப்பிரும்பு, எஃகு, ரப்பர்போன்ற சில பொள்ருகளின் கட்டுப்பாட்டு விலைகள் ஏற்றப்பட்டன. அண்மைக் காலத்தில் தொழில் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க ஓர் அம்சம் என்னவென்றால், கனரகத் தொழில் இயந்திரங்கள், எளிய இயந்திரங்கள், இயந்திரக் கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தி யில் பெருக்கமும், தொழில் வகையிலும் இரசாயன வகையிலும் மேலும் மேலும் புதிய இனங்களின் உற்பத்தியும் ஆகும்.

1951 முதல் பொதுவாகத் தொழில் உற்பத்திப் பெருக்கம், ஏற்கெனவே உள்ள இயந்திரங்களின் ஆற்றலை முழுவதும் பயன் படுத்தியும், புதிய தொழில்களைத் தொடங்கியும், பழையவற்றை விருத்தி செய்தும், மேலான உற்பத்தி நுட்ப விதிகளைக் கையாண்டும், இன்றியமையாத கச்சாப் பொருள்களை அதிகமாக அளித்தும், சில இனங்களில் அதிக ஏற்றுமதி செய்தும் பெறப்பட் டுள்ளது. நம் நாட்டில் மூலதன வெளியீடு சம்பந்தமான விவரங்கள், தொழில் பெருக்கத்தைப்பற்றி நாம் ஓரளவு அறிய உதவும். மூலதனம் வெளியிடுவதற்கு அனுமதி பெற்ற தொகை படிப்படியாக அதிகரித்தது. 1950-ல் ரூ. 74·75 கோடியாக இருந்த தொகை, 1955-ல் ரூ. 125·39 கோடியாகவும், 1958-ல்

ரூ. 422·97 கோடியாகவும் உயர்ந்தது.[1] மூலதன வெளியீட்டுக்கு அனுமதிக்கப்பட்ட தொகையை வசூலிக்கப்பட்ட தொகையாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லையாகையால், இந்த எண்களை ஒரு பொதுவான அறிகுறியாகவே கொள்ளவேண்டும். நம் நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகள் 1950-ல் 27,558 ஆக இருந்து, 1955-ல் 29,779 ஆக உயர்ந்ததிலிருந்தும், அவற்றின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 723·9 கோடியிலிருந்து ரூ. 983·1 கோடியாக உயர்ந்ததிலிருந்தும்கூடத் தொழிற் பெருக்கத்தின் அளவை அறியலாம்.[2] ஆனால், நம் பொருளாதாரத்தின் தொழில் அடிப்படை இவ்வாறு விரிவாக்கப்பட்டுத் தொழில் உற்பத்தி கணிசமாக உயர்ந்திருப்பினும், தொழிற்சாலைகளில் வேலையளிப்பு இதற்குத் தக்கவாறு உயரவில்லை. ஆனால், இது தொழிலாளர் திறமை திடீரென்று உயர்ந்துவிட்டதென்று கொள்வதற்கு இடமளிக்காது. இதற்குக் காரணம் அதிக மூலதன முதலீடும், மேலான நிருவாகமும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் உற்பத்திப் பொருள்களை அதிகமாக வாங்கியதும், கச்சாப் பொருள்களை அதிகமாக அளித்ததும், கடத்துவசதிகள் முன்னேறியதும் போன்றவையாகும்.

முதல் திட்டக் காலத்தில் பொதுவாக அதிக உற்பத்தியானது பொதுவிலையளவை ஓரளவு மட்டுப்படுத்தியது; தொழில் நடவடிக்கையில் உயர்வு, அபிவிருத்தி வேலைகளுக்காக அரசாங்கத்தின் அதிகச் செலவீடு, வரம்புக்குட்பட்ட பற்றுக்குறை நிதியாக்கம், அதிக வேலையளிப்பு, அதிக வருடாந்தர முதலீடு இவை எல்லாம் சேர்ந்து பலனைப் பன்மடங்காக்கி அதிக வருமானத்தையும் அதிக விலையளவையும் ஏற்படுத்தியிருக்கவேண்டும். உண்மையில், 1954 வரையில் துய்ப்புக்காக அதிகம் செலவழித்ததற்கேற்ப அதிகத் துய்ப்புப் பொருள் உற்பத்தியும் உண்டாயிற்று. 1954–55-ல் உணவு உற்பத்தியில் கணிசமான உயர்வு ஏற்பட்டதால் உணவுப் பொருள்களின் விலை இறங்கிப் பொது விலையளவும் கீழே கொண்டுவரப்பட்டது. முதல் திட்டத்தின் கடைசிச் சில மாதங்களில் செய்யப்பட்ட அதிக முதலீட்டுச் செலவுகள், விவசாய உற்பத்தி, உணவு விலைகள் ஆகியவை பொது விலையளவை நிர்ணயிப்பதில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை எடுத்துக்காட்டி, உணவுப் பொருள்

[1] 1958-ல் அரசாங்கத்துறையில் ரூ. 300 கோடிக்கு ஒரே பங்கு வெளியீடு அனுமதிக்கப்பட்டதால் இந்தப் பெரிய தொகை உண்டாயிற்று.

[2] Government of India, Ministry of Finance, Department of Company Law, Administration, Progress of Joint Stock Company in India, 1955.

பெருக்கம், விலைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதை, பண வீக்க விலைப்போக்கைத் தடுப்பதற்கு எடுக்கவேண்டிய முதல் நடவடிக்கை என்றும் உணர்த்தின.

பண வருமான உயர்வினுல் உண்டாகும் பணவீக்க ஆற்றலைத் தடுக்கவேண்டுமானுல், மொத்த உற்பத்தி அதிகரிக்கவேண்டியது மட்டுமன்றி, செலவீட்டின் அளவிற்கேற்ப அது உயரவேண்டியதும் அவசியமாகும். இந்த இரண்டு உயர்வு விகிதங்களில் வித்தியாசம் இருந்தால் அதன் விளைவு என்னவாகும் என்பது அண்மை ஆண்டுகளில் தெளிவாகக் கண்டோம். 1957–59 ஆண்டுக்களில் விவசாயத்திலும் தொழிலிலும் சராசரி உற்பத்தியளவு 1956-ல் இருந்ததைவிட முறையே, 5 சதவீதமும் 7 சதவீதமும்தான். அதேசமயத்தில் இந்த மூன்றாண்டுகளில் பண வருமானம் 14 சதவீதமும் விலைகள் 10 சதவீதமும் உயர்ந்தன.[1] உணவுப் பொருள்கள், தொழில் கச்சாப் பொருள்கள் ஆகியவற்றின் விலைகளில் உயர்வு, வாழ்க்கைச் செலவை உயர்த்தியும் பணக் கூலியிலும் உற்பத்திச் செலவிலும் உயர்வை உண்டாக்கிவிட்டது. தொழில் உற்பத்தி, இந்த அதிகச் செலவினுல் முடிந்த அளவுக்குப் பெருகாமல் தடுக்கப்பட்டது என்பதை மறுக்கமுடியாது. ஆகவே, உற்பத்தியில் மந்தமும் அதிகச் செலவும் தடுக்கப்பட்டு, திட்டத்தின் உற்பத்தி இலக்குகள் நிறைவேற்றப்படவேண்டுமானுல், விலையளவைக் கட்டுப்படுத்தவேண்டியது மிக முக்கியமான அவசர நடவடிக்கையாகும்.

கடந்த இருபதாண்டுகளில், இந்தியாவில் உற்பத்திப் போக்கில் இரண்டு முன்னேற்றக் கட்டங்கள் காணப்பட்டன, அவைகளுக்கிடையே இறக்கமும் தேக்கமும் உள்ள ஒரு காலமும் இருந்தது. பெரும்பான்மையான போர்க் காலமாகிய முதல் கட்டத்தில், அதிக உறபத்தி இருந்தும், விரைவான விலையேற்றம் உண்டாயிற்று. இதற்குக் காரணம், உற்பத்தி அதிகரித்தாலும், போருக்காக நாட்டின் உற்பத்தி மேலும் மேலும் எடுத்துக் கொள்ளப்பட்டு வந்ததுதான். அதிக உற்பத்தி நடவடிக்கைகளால் உண்டான அதிகப் பண வருமானம் இருந்தும், மொத்த உற்பத்தியில் மக்கள் துய்ப்புக்காகக் கிடைக்கக்கூடிய அளவு விரைவாகக் குறைந்ததால், கணிசமான விலையேற்றம் உண்டாயிற்று. போருக்குப் பிந்திய ஆண்டுகளில், உற்பத்தியில் நெகிழ்ச்சியின்மையும், உற்பத்திச் செலவு அதிகரிப்பும், செலவு செய்யத்தக்க வருமானத்தை அதிகமாக வெளியிட்டதும் மேலும் விலை

[1] 1956-ல் இருந்த அளவோடு 1957–59-ன் சராசரி விலையளவு ஒப்பிடப்பட்டுள்ளது.

களை உயரச் செய்தன. இறுதிக் கட்டத்தின் முற்பகுதியில் (இது பெரும்பாலும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் அடங்கியது), சாதகமான தொழில் உற்பத்தியும் விவசாய உற்பத்தியும் விலைகளைப் பெரிதும் பாதித்தன. பண வருமானத்தில் உயர்வுக்கு இணையாக விவசாயப் பொருள்களும் உணவுப் பொருள்களும் அதிகரித்ததால் இந்தக் காலத்தில் விலைகள் ஓரளவு நிலையாக இருந்தன. முதல் திட்டக் காலம் முடிந்தது முதலாக, உற்பத்தியில் ஏறுமுகம் தொடர்ந்து நிலைநிறுத்தப்பட்டிருப்பினும், தக்க அளவு உற்பத்திப் பெருக்கம் இன்றி அரசாங்கச் செலவுகள் மிகுதியும் உயர்ந்ததால், மேலும் விலைகள் உயர்ந்தன.

10. விலைகளும் வாழ்க்கைச் செலவும்

துய்ப்புப் பொருள்களின் விலைகள் விடாமல் ஏறிக்கொண்டே போவதால், துய்ப்போர் துய்ப்பின் அளவைக் குறித்தோ, சில பொருள்களைத் துய்ப்பதைவிட்டோ, தம் துய்ப்பு முறையைக் கட்டாயமாக மாற்றிக்கொள்ளவேண்டிய ஒரு நிலை ஏற்பட்டால், அதையே அவர்கள் பணவீக்க நிலையென்று உணர்வார்கள். இவ்வாறு துய்ப்பைக் குறைத்துக்கொள்ளவேண்டிய அவசியம் உண்டாவதற்குக் காரணம், துய்ப்போரின் பண வருமானத்திற்கும் துய்ப்புப் பொருள்களின் விலைகளுக்கும் உள்ள வித்தியாசம்தான். துய்ப்போர் எல்லோருடைய பண வருமானம் உயர்ந்தவரையில், அல்லது விலையளவுக்கேற்ப உயராமல் அதிகம் பின்னிடும் வரையில், துய்ப்போர் தமக்குப் பழக்கமான பொருள்களையோ, அல்லது அவற்றை அதே அளவிலோ வாங்க முடியாது. ஆகவே, துய்ப்போர் கருத்துப்படி, பணவீக்கம் என்பது எதிர்பார்க்கப்படும் பண வருமானத்தின் வாங்குந் திறனுக்கும் உண்மையாகக் கிடைக்கும் பண வருமானத்திற்கும் இடையில் உள்ள விரிந்து செல்லும் இடைவெளியே.

பொதுவாக, வாழ்க்கைச் செலவு என்பது குறிப்பிட்ட ஒரு வகையைச் சேர்ந்தவர்களே அனுபவிக்கும் துய்ப்புப் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் பண விலையை மட்டுமன்றி, சில பொருள்களைத் துய்ப்பதை விட்டுவிடுவதாலும், தாழ்ந்த வகையான பொருள்களை உபயோகிப்பதாலும், அப் பொருள்களைக் குறைவாகத் துய்ப்பதாலும், அல்லது திருப்தியளிக்காத மற்றொரு பொருளை வாங்குவதாலும், ஓய்வையும் பொழுதுபோக்கையும் துறப்பதாலும், இவைபோன்ற மற்றவற்றாலும் உண்டாகக் கூடிய துய்ப்புமுறை மாற்றத்தினால் ஏற்படும் உண்மையான செலவையும் காட்டவேண்டும். இவ்வாறு பார்க்கும்போது, வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண், ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைத்தரத்தைக் கடைப்பிடிப்பதற்கு உண்டாகும் பணச் செல

வையும் அளந்து காட்டவேண்டும். உண்மையில் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்கள் எவ்வளவு கருத்துடன் தயாரிக்கப் பட்டாலும், உண்மையான செலவுகளை அளக்க முற்படுவதில்லை. வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்களால் குறிக்கப்படும் வாழ்க்கைச் செலவு, சில துய்ப்புப் பொருள்களின் விலைகளில் உண்டாகும் சதவீத மாறுதல் அன்றி வேறன்று.

வாழ்க்கைச் செலவில் உண்டாகும் மாறுதல்களின் பொருளாதார முக்கியத்துவம் இரண்டு விஷயங்களில் அடங்கியுள்ளது. முதலாவதாக, சமூகத்தின் வாழ்க்கைச் செலவை உயர்த்துவதால் பொது விலையளவு உயர்வானது, மக்களின் துய்ப்புப் பழக்கத்தை மாற்றி அவர்களின் பொருளாதாரத் திறமையையும் பாதிக்கிறது. இரண்டாவதாக, வேலை செய்வோரின் வாழ்க்கைச் செலவு உயரும் அளவுக்கு அடிக்கடி அவர்களின் கூலியமைப்பை உயர்த்திச் சரிசெய்யவேண்டியிருப்பதால் (இது தொழிலாளரின் உண்மை வருமானம் அதிகம் குறைந்துவிடாமல் தடுப்பதற்கு அவசியமாகிறது), உற்பத்திச் செலவு உயர்கிறது. இது விலைகளை மேலும் உயர்த்தி, கூலிவேலை ஏற்றச் சுழற்சியைத் தொடங்கிவிடுகிறது. சாதாரணமாக, விலைகள் மேலேறும் போது, விலையேற்றத்திற்குச் சமமாகக் கூலி உயராது. ஆகவே விலைகள் உயர்ந்து, வாழ்க்கைச் செலவும் அதனுடன் உயரும், போது கூலி பெறும் வகுப்பார் நசுக்கப்படுகின்றனர்.

ஆகவே, பணவீக்க விலைப்போக்குத் துய்ப்போரைப் பாதிக்கும் அளவு அவர்களுடைய வருமானத்தைப்பொறுத்திருக்கிறது. பொதுவாகக் கூறினால், கடன் வாங்குபவர்களும், கடனாளிகளும், மாறும் வருமானமுள்ளவர்களும் நன்மையடைவார்கள். ஆனால், கடன் ஈவோரும் மாறுத வருமானம் உள்ளவர்களும் நஷ்டப் படுவார்கள். முற்கூறிய வகையைச் சேர்ந்த வருமானம் பெறுவோரின் நன்மைக்காக வருமானம் மாற்றியமைக்கப்படுகிறது. ஆகவே, சமுதாயத்தைப் பொது விலையளவு எப்படிப் பாதிக்கிறது என்பதைச் சரியாக மதிப்பிடவேண்டுமானால், ஒவ்வொரு வகையைச் சேர்ந்த வருமானம் பெறுவோரின் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்களையும் தனித்தனியாகக் கணக்கிட வேண்டுவதோடு, ஒவ்வொரு வகையிலும் உள்ள மக்களின் சராசரி வருமானத்தையும் மதிப்பிடவேண்டும். இந்தியா போன்ற ஒரு நாட்டில், நாட்டின் பெரிய பரப்பினாலும் பல பகுதிகளுக்கிடையே உள்ள பழக்க வழக்க வேறுபாடுகளாலும், உணவுப் பழக்கம், துய்ப்புப் பழக்கம், சம்பாதிக்கும் சக்தி முதலியவற்றினாலும் உண்டாகும் பிரச்சினை ஒன்று கூடுதலாகத் தோன்று

கிறது. ஒரே வகையான துய்ப்புப் பொருள்களின் சில்லறை விலைகள் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு அளவாகவும் இருக்கின்றன. ஆகையால், ஒரே வகையைச் சேர்ந்த வருமானம் பெறுவோருக்கு இந்தியா முழுவதற்கும் ஒரே விலைக்குறியீட் டெண்ணைக் கண்டுபிடித்தால் (இதை விஞ்ஞான முறையில் கண்டுபிடிக்க முடியும் என்று கொண்டாலும்) காரியத்தில் அது அதிகப் பயனும் முக்கியத்துவமும் உடையதாய் இராது. எனினும், விஞ்ஞான முறையிலும் வெவ்வேறு இடங்களில் ஒரே மாதிரியான துய்ப்புப் பொருள்கள் வேறுபடுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அதன் அடிப்படையிலும் தயாரிக்கப்பட்ட பகுதிவாரியான குறியீட்டெண்கள், பகுதிகளுக்கிடையில் விலை மாற்றத்தினால் வாழ்க்கைச் செலவு பாதிக்கப்படுவதும், ஒரே பகுதியில் குறிப்பிட்ட காலத்தில் அவ்வாறு பாதிக்கப்படுவதும் எப்படி என்று ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு அடிப்படையாக உதவும்.

இந்தியாவில் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்கள்

சமுதாயம் முழுவதன்மீதும் விழும் அதிக விலைச்சமையைச் சரியாக மதிப்பிடுவதற்கு, முடிந்த அளவு அதிகமாக வருமானப் பிரிவுகளின் வாழ்க்கைச் செலவுகளே ஆராயவேண்டும். எனினும், செயல்முறையில் எல்லா நாடுகளிலும் பெரும்பாலும் கூலி வருமானம் பெரும் பிரிவினராகிய தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளரின் வாழ்க்கைச் செலவுகளே மதிப்பிடப்பட்டுள்ளன. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது, இந்த வருமானமுடையவர்களின் வரவு செலவுத் திட்டத்தில், வரவுக்கும் செலவுக்கும் இடையே மிச்சம் மிகக் குறைவாகவோ, இல்லாமலோகூட இருப்பதனால், விலையேற்றம் அவர்களுடைய துய்ப்பையும் வாழ்க்கைத் தரத்தையும் மிகவும் பாதித்து, அவர்களுக்கு அதிகத் துன்பத்தை உண்டாக்குகிறது.[1] இரண்டாவதாக, பணக்காரக் குடும்பங்களைவிடத் தொழிற்சாலைக் கூலி பெறுவோரின் துய்ப்பு முறை மிக எளியதாகவும், எளிதில் அளக்கக் கூடியதாகவும் இருக்கிறது. அன்றியும், இந்த வருமானப் பிரிவினரின் வருமானத்தில் பெரும்பகுதி அல்லது முழுவதுமே துய்ப்பதற்கே செலவழிக்கப்படுவதால், இவர்களுடைய வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண், சமுதாயத்தின் பொதுவான துய்ப்பு முறையை விலையுயர்வு எப்படிப் பாதிக்கிறது என்று காட்டுவதில் சிறப்பான மதிப்பும் முக்கியத்துவமும் வாய்ந்தது. இந்தியாவில்

[1] Beney, M. Ada, Cost of Living in the United States, 1914-36 (1936) p. 4.

கூலிவேலை செய்வோரின் வாழ்க்கைச் செலவுக்கு மற்றொரு முக்கியத்துவமும் உண்டு. மக்கள் தொகையில் 70 சதவீதத்தினருக்குமேல் கிராமங்களில் வாழ்கிறார்கள். நாட்டுப் பொருளாதாரத்தில் கிராமங்கள் பண மதிப்பற்ற பெரிய பகுதியாகும். பெரும்பாலான கிராமங்களில் மார்க்கெட்டுகளும் செலாவணியும் நன்கு வளர்ச்சியடையாததாலும், விவசாய உற்பத்தியில் பெரும்பகுதி மார்க்கெட்டிற்கு வராமல் அங்கேயே பயன்படுத்தப் படுவதாலும், மக்கள் தொகையில் அவ்வளவு பெரும்பகுதியினரின் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்ணைக் கண்டுபிடிப்பது கடினமாக இருப்பதுடன், அதனால் பயனும் இராது. நகரப் பகுதிகளில் வாழும் மக்கள் மொத்த ஜனத்தொகையில் 17 சதவீதமாவர். இவர்களில், தொழிற்சாலைகளில் கூலி சம்பாதிப்பவர்களும், அவர்களுடைய குடும்பங்களும் ஐந்தில் ஒரு பங்குக்குமேல் உள்ளனர். நாட்டின் ஜனத்தொகையில் ஒரு முக்கியமான பகுதியினராகிய தொழிற்சாலைக் கூலியாட்களின் வாழ்க்கைச் செலவு விவரம் ஒரு மாதிரி போன்றது.

நீண்டகாலமாக நம் நாட்டில் சில முக்கியமான நகரங்களில் வாழ்க்கைச் செலவுபற்றிய விவரம் கிடைத்துள்ளது. நம் நாட்டில் இந்திய அரசாங்கத்தின் தொழில் தகவல் நிலையம் நகரப் பகுதிகளின் வாழ்க்கைச் செலவு விவரங்களை வெளியிடத் தொடங்கியதற்கு முன்பே, மாகாண அரசாங்கங்கள் தங்கள் எல்லையில் பன்னிரண்டு இடங்களுக்குமேல், இதுபோன்ற விவரங்களைத் திரட்டி வெளியிட்டன. இவற்றுள் பம்பாய் அரசாங்கத்தின் தொழிலாளரின் அலுவலகம் வெளியிட்டுள்ள பம்பாயில் உள்ள தொழிலாளரின் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்ணும், மத்திய மாகாணத்தின் தொழில் இலாகா நாகப்பூருக்கு வெளியிட்டுள்ளதும், சென்னை அரசாங்கம் சென்னைக்கு வெளியிட்டுள்ளதும் முக்கியமானவை. எனினும், அடிப்படைக் காலப் பகுதிகளும், விலையைச் சேகரித்த தேதிகளும், இவ் விவரங்களைக் கணக்கிடும் முறையும் போன்றவை வித்தியாசப்படுவதால், இக் குறியீட்டெண்களை ஒப்பிட்டுப் பார்ப்பது முடியாது. 1921-ல் முதலில் வெளியிடப்பட்ட பம்பாய்த் தொழிலாளரின் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண், மொத்தத் துய்ப்பு முறையை அடிப்படையாகக் கொண்டது. ஏனெனின், துய்ப்பு முறைகளைப்பற்றிய நம்பத்தக்க விவரங்கள் கிடைக்காததால், நிறையிடும் முறை எதையும் கடைப்பிடிக்க முடியவில்லை. இக் குறையை நீக்குவதற்கு, 1921 மே-க்கும், 1922 ஏப்ரலுக்கும் இடையிலும், பிறகு 1932 மே-க்கும் 1933 ஜூனுக்கும் இடையிலும், பம்பாய் நகரத்தில் தொழிலாளர் குடும்ப வரவு செலவுத்

திட்டங்கள்பற்றி விசாரணை நடத்தப்பட்டது. இந்த விசாரணைகளின் அடிப்படையில், 1933 ஜூலை முதல் 1934 ஜூன் வரையில் உள்ள காலத்தை அடிப்படைக் காலமாகக் கொண்டு, 1937–ல் இந்த எண்கள் திருத்தப்பட்டன. சென்னையில், சென்னை நகரத் தொழிலாளர் குடும்ப வரவு செலவுத் திட்டங்களை 1935-36-ல் ஆராய்ந்து சேகரிக்கப்பட்ட விவரங்கள், வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்ணைக் கணக்கிடுவதற்கு அடிப்படையாயின.

மேலும், திருப்தியான வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்களைத் தயாரிப்பதற்கு, இந்திய அரசாங்கப் போரின் இறுதியில் 28 இடங்களில் குடும்பப் பட்ஜெட்டுகளைப் பற்றிய ஆராய்ச்சியை நடத்தியது. மொத்தத்தில் 27,000 பட்ஜெட்டுகள் சேகரிக்கப் பட்டு, அவற்றில் 25,000 அட்டவணையில் பதிவு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த விவரங்களின் அடிப்படையில், நம் நாட்டில் முக்கியமான தொழில் பகுதிகளுக்காக 24 தொழிலாளர் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்கள் தயாரிக்கப்பட்டன. தொழிலாளர் தகவல் நிலையத்தினரால் தயாரிக்கப்பட்ட பெரும்பாலான இவற்றிற்கு 1944 தான் அடிப் படை ஆண்டாகும். இராச்சிய அரசாங்கங்கள் திரட்டிய மற்ற வற்றிற்கு வெவ்வேறு அடிப்படை ஆண்டுகள் இருந்தன. 1944–ஐச் சாதாரண ஆண்டாகக் கருதமுடியாதாயினும், அரசாங்கம் அதையே அடிப்படை ஆண்டாகக் கொள்வது நியாயம் என்று கூறியது. ஏனெனின், குடும்ப பட்ஜெட்டுகள் போர்க்காலத்தின் அசாதாரண ஆண்டுகளுக்கும் உரியவையா யிருந்தன. பிறகு, இந்திய அரசாங்கம் அகில இந்தியாவிற்கும் தொழிலாளர் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்ணைத் தயாரித்தபோது, இராச்சிய அரசாங்கங்கள் வெவ்வேறு அடிப் படைக் காலத்திற்குத் தயாரித்திருந்த ஒன்பது பகுதியான வரிசை எண்கள், சுலபமான எண் கணித முறைப்படி சரியாக்கப் பட்டு 1944–க்கு மாற்றப்பட்டன. அகில இந்தியக் குறியீட் டெண், உண்மையில், முன்பே பலவிடங்களுக்குக் கண்டுபிடிக்கப் பட்ட குறியீட்டெண்களின் சராசரியின் சராசரியாகும். முதல் கட்டத்தில் ஒவ்வோர் இராச்சியத்திலும் அடங்கிய இடங்களின் குறியீட்டெண்களின் நிறையிட்ட சராசரியை எடுத்து இராச்சி யங்களின் சராசரிக் குறியீட்டெண்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த நிறைகள் இந்த இடங்களில் 1944–ல் இருந்த தொழிற் சாலை வேலையளவுதான் இரண்டாவது கட்டத்தில் இராச்சியக் குறியீட்டெண்களின் நிறையிட்டசராசரி கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நிறைகள் 1944–ல் பல்வேறு இராச்சியங்களில் இருந்த மொத்தத் தொழிற்சாலை வேலையளவு ஆகும். இவை பாகிஸ்தான்

பிரிந்ததால் உண்டான விளைவுகளுக்குத் தகத் திருத்தப்பட்டன. இராச்சியக் குறியீட்டெண்களின் இந்த நிறையிட்ட சராசரியே அகில இந்தியச் சராசரித் தொழிலாளர் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்ணும்.

அண்மையில், அடிப்படையை 1949ஆம் ஆண்டிற்கு மாற்றி ஒரு 'முன்னேற்றம்' செய்யப்பட்டுள்ளது. புதிதாகக் குடும்பப் பட்ஜெட்டுகள் ஆராயப்படவில்லை. 1949-ல் தொழிற்சாலை வேலையளிப்பு எண்களை அடிப்படையாகக் கொண்டு, பல்வேறு இடங்களின் நிறைகள் மாற்றப்பட்டும், திருவாங்கூர், கொச்சி, ஹைதராபாத் ஆகிய B பகுதி இராச்சியங்கள் இரண்டைச் சேர்த்தும், செய்யப்பட்ட மாறுதல்களைத் தவிர வேறொன்றும் செய்யாமல் குறியீட்டெண் பழைய முறையிலேயே கண்டுபிடிக்கப்பட்டது. அன்றியும் அண்மையில், 'வாழ்க்கைச் செலவு' என்பதுபற்றி அரசாங்கத்திற்கு மனவுறுத்தல் ஏதோ இருந்தது. ஆகவே, 'கூலிவேலை செய்வோரின் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்' என்பதைக் 'கூலிவேலை செய்வோரின் துய்ப்புச் செலவுக் குறியீட்டெண்' என்று மாற்றியது. ஏனெனின், வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் என்பது சாதாரணக் கூலிவேலை செய்வோர் குடும்பத்தினால் துய்க்கப்படும் பொருள்களின் சில்லறை விலைகள் மாறியுள்ள அளவைக் காட்டுகிறதேயன்றி விலைகளைத் தவிர வேறு செலவுகளை அளக்க உதவுவதில்லை. இந்தக் குறியீட்டெண்கள் உண்மையாக எதை அளக்கின்றதோ அதையே இத் தொடர் சரியாகக் காட்டுகிறது என்றும், இது தொழிலாளர்பற்றிய புள்ளிவிவரங்களைப் பல நாடுகளும் நடைமுறையில் பின்பற்றும் வழியோடும், பன்னாட்டுக் குழுக்களின் பரிவுரைகளோடும் ஒத்திருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

மூன்று முறை சீர்திருத்தமும் முன்னேற்றமும் செய்ய ஓரளவு முயன்றும்கூட, இந்தியாவில் வாழ்க்கைச் செலவு விவரங்களில் அடிப்படைக் குறைகள் அப்படியே உள்ளன. இக் குறைகள் மிகப் பெரியவை. இந்த எண் வரிசையின் மதிப்பைக் கெடுக்கக்கூடிய பொதுவான குறைகள் ஒருபுறம் இருக்க, போர்க்காலத்திற்குரிய விவரங்கள் சில குறிப்பிட்ட குறைகளை உடையவையாயும் உள்ளன. முதலில் இந்த வரிசையில் சேர்க்கப்பட்ட சில தரமிக்க பொருள்கள் போர்க்காலத்தில் கிடைக்காமல் போய்விட்டன. சில பொருள்களின் தரம் மிகவும் குறைந்துவிட்டது. மற்றும் சில பொருள்கள் மிகவும் விலையுயர்ந்துவிட்டதால் துய்க்கப்படாமலே போயின. கடுமையாக விலைக் கட்டுப்பாடு செய்யப்பட்டதால் பல பொருள்கள் திறந்த மார்க்கெட்டில் கிடைக்காமல் மறைந்துவிட்டன. அந்தப் பொருள்களின் கிராக்கி விலைகள் போர்க்காலத்தில் இந்தக் குறியீட்டெண்களுக்குள்

சேர்க்கப்பட முடியவில்லை. அன்றியும் பங்கீட்டு முறையும் துய்ப்புக்கு வேண்டிய பொருள்களின் அளவைக் குறைத்து, குறியீட்டெண் வரிசைக்குரிய அடிப்படைக் காலத்தில் சராசரித் துய்ப்பு முறையை மாற்றிவிட்டது. இந்த எண்களைத் திருத்துவதற்குச் செய்யப்பட்ட தற்காலிக உபாயங்கள், இவற்றின் தரத்தை உயர்த்தாமல், இவற்றை ஒப்புநோக்குவதற்கும் பயன்படுத்துவதற்கும் தகுதியற்றவையாக்கிவிட்டன.

போருக்குப் பிறகும் குறியீட்டெண்களில் உள்ள அடிப்படைக் குறைகள் நீக்கப்படவில்லை. முதலாவதாக, வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்களின் அடிப்படையாகிய குடும்ப பட்ஜெட்டுகள் மிகவும் பழையவை. கடந்த சுமார் 15 ஆண்டுகளில் விலைமாற்றங்கள் மிகவும் அதிகமாக இருப்பதால், துய்ப்பினங்களில் ஒவ்வொன்றுக்கும் கொடுக்கப்பட்ட நிறையளவை மாற்றவேண்டியுளது. பொது விலையளவைவிட இன்றியமையாத துய்ப்புப் பொருள்களின் விலை அதிகமாக ஏறும்போது, உணவு, உடை ஆகியவற்றிற்குச் செலவிடப்படும் தொகை அதிகமாகக் கூடும். ஆகவே, அவற்றிற்கு அடிப்படைக் காலத்தில் கொடுக்கப்பட்ட நிறையளவு, பிற்காலத்தில் கொடுக்கப்படவேண்டியதைவிடக் குறைவாயிருக்கும். மேலும், கட்டுப்பாட்டு விலைகளின் அடிப்படையில் குறியீட்டெண்கள் தயாரிக்கப்படுவதால், கட்டுப்பாட்டு விலையைவிடத் திறந்த மார்க்கெட்டு விலைகளும் கறுப்பு மார்க்கெட் மிக அதிகமாக இருக்கும்போது, அவை பயனையும் மதிப்பையும் அதிக அளவு இழந்துவிடுகின்றன. வீட்டு வாடகை இதற்கு ஒரு தெளிவான உதாரணமாகும். அது பல இடங்களிலும் மாறுமல் இருப்பதாகவே கொள்ளப்படுகிறது. உண்மையில் பலவிடங்களில், விலைகளில் 50 சதவீதத்திற்குமேல் மாறவே இல்லை; அவை மாறவும் முடியாது. எனவே, பொதுவாக வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்கள் மிகவும் குறைத்து மதிப்பிடப்பட்டவையாகும். மேலும், இந்தியா முழுவதற்கும் ஒன்றுபட்ட குறியீட்டெண்ணைத் தயாரிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட எளிய சராசரி முறை, கொள்கையளவில் நியாயமற்றதாயினும், துய்ப்புப் பழக்கத்திலும் விலைகளிலும் பகுதிகளுக்கிடையே காணப்படும் பெரிய வேறுபாடுகளால் உண்மையில் மதிப்பற்றவையாகவே கருதப்படும். நன்கு திட்டமிடப்பட்ட அடிப்படையில். புதிய குடும்ப பட்ஜெட்டுகளை ஆராய்ந்து, நாடு முழுவதற்கும் பொருத்தமான வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் வரிசையைத் தயாரிக்கவேண்டுமென்று அரசாங்கம் உணர்ந்துள்ளது.[1] எனினும், மிகவும் அண்மையில்தான் இத்

1 'Indian Labour Gazette', December 1952, p. 449.

தகைய ஆராய்ச்சியை நடத்துவதற்கு முதல்நிலை நடவடிக்கைகள் சில எடுக்கப்பட்டுள்ளன. அகில இந்தியக் குறியீட்டெண் தொடர் சில இராச்சியங்களைத் தழுவவில்லை; தழுவிய இராச்சியங்களிலும்கூட (அஸ்ஸாம், சென்னை, ஒரிஸ்ஸா, பஞ்சாப், மேற்கு வங்காளம்) தொழிற்சாலைகளில் வேலை செய்வோரையெல்லாம் சேர்த்துக்கொள்ளவில்லை. இது மேலும் ஒரு குறையாகும். சில மிக முக்கியமான நகரப் பகுதிகளுக்கு நடுத்தர வகுப்பாரின் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் கிடைக்காததும் ஒரு பெருங்குறையாகும்.[1]

வெவ்வேறிடங்களில் வாழ்க்கைச் செலவுப் போக்குகள்

இந்தியாவில் கிடைத்துள்ள வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் வரிசையில் உள்ள குறைகளை எடுத்துக்காட்டியதன் நோக்கம் என்னவென்றால், பகுத்தாய்வதற்கு அவற்றை எவ்வளவு தூரம் நம்பலாம் என்பதை எடுத்துக்காட்டுவதுதான். இந்த எண்களின் அடிப்படையில் செய்யப்படும் முடிவுகள் இக் குறைகளுடன்தான் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். கிடைத்துள்ள பல்வேறு குறியீட்டெண்களில், பம்பாய், நாகபுரி, சென்னை ஆகியவற்றிற்குரியவை அதிகம் நம்பத்தக்கவை. இவை தொடர்ச்சி வரிசையாகவும் உள்ளன. இந்த விவரங்களின் அடிப்படையில், நாட்டில் பல்வேறிடங்களில், துய்ப்பிலும் வாழ்க்கைச் செலவிலும் விலைமாற்றங்களால் உண்டாகிய விளைவுகளை ஒப்புநோக்கி ஆராயமுடியும்.

வாழ்க்கைச் செலவிலும் மொத்த விற்பனை விலையிலும் உள்ள பொதுவான போக்கில் ஓரளவு ஒரு சீரான தன்மை காணப்படுகிறது என்பதை படம் 8-லிருந்து தெரிந்துகொள்ளலாம். 1940-க்கும் 1943-க்கும் இடையில் பொது விலையளவு அதிகமாக ஏறியவுடன் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்ணில் சிறிது பின்னீடு காணப்பட்டது. எனினும், வெவ்வேறு இடங்களில் வாழ்க்கைச் செலவு உயர்வின் விகிதம் மாறியிருக்கிறது. 1941-க்கும் 1943-க்கும் இடையில், பொதுவான மொத்த விலைக் குறியீட்டெண் 121·7 பாயின்டுகள் ஏறிற்று. ஆனால், நாகபுரிக்கு வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் 185 பாயின்டுகளும், பம்பாய்க்கு 112 பாயின்டுகளும், சென்னைக்கு 79 பாயின்டுகளும் ஏறிற்று. போரின் கடைசி இரண்டாண்டுகளில், விலையளவு பொதுவாக மாறுமலிருந்ததால், பம்பாயில் அதேபோல் வாழ்க்கைச் செலவும் மாறவில்லை; ஆனால், நாகபுரியில் போர்க்

[1] இப்பொழுது தொழிலாளர் தகவல் நிலையம், கல்கத்தா, அசன்சால் ஆகிய இடங்களுக்கு நடுத்தர வகுப்பினரின் துய்ப்புப்பொருள் குறியீட்டெண்களை வெளியிட்டுள்ளது.

அட்டவணை 61

இந்தியாவில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவும் பொதுவிலைக் குறியீட்டெண்களும், 1939–51

(1939 ஆகஸ்டுக்கு அடிப்படை மாற்றப்பட்டது = 100)

வருடம்	பம்பாய்	நாகபுரி	சென்னை	பொது மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண்*
1939 (ஆக.–டிச.)	120	104	106	125·6 †
1940	107	110	109	114·8
1941	118	119	114	137·0
1942	150	165	136	171·0
1943	219	299	180	236·5
1944	226	267	207	244·2
1945	224	259	228	244·9
1946	246	285	240	275·4
1947	265	320	277	308·2
1948	288	372	315	376·2
1949	292	377	330	385·4
1950	298	372	332	409·7
1951	314	391	341	434·6

* 1939–40-ல் தொடங்கும் நிதியாண்டிற்குரியது; 1946 வரை துல்லியமான வரிசை, அதன்பிறகு பொதுவான வரிசை.

† 1940 மார்ச்சுடன் முடியும் ஏழு மாதங்கள்.

(ஆதாரம்: Indian Labour Gazette, March 1954, p. 927).

அட்டவணை 62

இந்தியாவில் தொழிலாளரின் துய்ப்பு விலைக் குறியீட்டெண்ணும் பொது விலைக் குறியீட்டெண்ணும், 1951–60*

வருடம்	பம்பாய்	நாகபுரி	சென்னை	பொது மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண் †
1951–52	104	104	104	—
1952–53	107	101	103	—
1953–54	111	102	109	101·2
1954–55	93	98	104	89·6
1955–56	89	98	100	99·2
1956–57	101	107	118	105·1
1957–58	104	113	117	106·1
1958–59	115	122	126	112·1
1959–60	124	134	135	118·6
1960–‡	120	136	139	120·7

* அடிப்படை: 1949 = 100.

† அடிப்படை: 1952 – 53 = 100

‡ முதல் ஆறு மாதச் சராசரி.

(ஆதாரம்: Indian Labour Journal).



படம் 8. 1939–60-க்கு பம்பாய், நாகபுரி, சென்னை ஆகிய நகரங்களின் பொது விலையளவும் வாழ்க்கைச் செலவும்.

காலத்தில் 1943-ல் இருந்த உச்ச அளவிலிருந்து 40 பாயின்டுகள் திடீரென்று இறங்கியது. இதற்கு மாறுக, சென்னையில் சிறிது வேகக்குறைவுடன் ஏறுமுகம் தொடர்ந்து காணப்பட்டது. போருக்குப் பிறகு ஆரம்பத்தில் பொது விலையளவு உயர்ந்ததற் கேற்ப, எல்லா இடங்களிலும் ஒரே விகிதத்தில் வாழ்க்கைச் செலவு உயர்ந்தது. 1948 முதல் பொது விலையளவிலும் வாழ்க் கைச் செலவுக் குறியீட்டெண்களிலும் சிறிது வேறுபாடு காணப் படுகிறது. எல்லா இடங்களிலும் வாழ்க்கைச் செலவு ஏறக் குறைய நிதானமாகவும், சிறிது ஏறுமுகத்துடனும் இருந்தது. 1948-க்கும் 1951-க்கும் இடையில் பொதுவிலைக் குறியீட்டெண் ணில் அதிக ஏற்றமும், 1951-52-ல் இறக்கமும் உண்டானதால், வாழ்க்கைச் செலவு அதிகம் மாறியதாகத் தெரியவில்லை. உதாரணமாக, 1951-52-ல் நாகபுரியின் வாழ்க்கைச் செலவு 11 பாயின்டுகள் குறைந்தது. சென்னையில் 4 பாயின்டுகள் குறைந்தது. ஆனால், பம்பாயில் வாழ்க்கைச் செலவு சிறிது ஏறியது. 1955-56 முதல் விலையளவு படிப்படியாக ஏறியதால் (பொதுக் குறியீட்டெண்ணில் உணவு விலைகளை மற்ற விலைக ளோடு ஒப்பிடும்போது), அந்த ஆண்டுகளில் துய்ப்புப் பொருள் களின் விலைகள் அதிகமாக ஏறின.

சில்லறை விலை மாறுதலும் வாழ்க்கைச் செலவும்

சில்லறை விலைகள், குறிப்பாக உணவுப் பொருள்களின் சில்லறை விலைகள் வாழ்க்கைச் செலவுப் போக்கை நேரடியாக நிர்ணயிக்கின்றன. ஆகையால், எந்தக் குறிப்பிட்ட நகரப் பகுதி யிலும், சில்லறை விலைகளுக்கும் வாழ்க்கைச் செலவுக்கும் உள்ள தொடர்பை ஆராய்வது பயனுடையதாகும். இந்தக் காரியத் திற்கு பம்பாய் அரசாங்கம் தொழிலாளர் ஏட்டில் (Labour Gazette) வெளியிட்டுள்ள விவரங்களைப் பயன்படுத்தலாம்.

பம்பாய் இராச்சியத்தின் தொழிலாளர் தகவல் இலாகா இயக்குநர் குழு (Directorate of Labour Information) தயாரித் துள்ள பம்பாய்த் தொழிலாளர் வாழ்க்கைச் செலவுக் குறியீட் டெண், 1933 ஜூலைமுதல் 1934 ஜூன்வரையிலுள்ள காலத்தை அடிப்படையாகக்கொண்டது. மொத்தச் செலவில் அடங்கிய ஐந்து பிரிவுகளுக்கு அளிக்கப்பட்ட நிறைகள் பின்வருமாறு: உணவு 47; எரிபொருளும் விளக்கும் 7; ஆடை 8; வீட்டு வாடகை 13; பலவகை 14. படம் 9, 1939 முதல் இந்தப் பிரிவுகளில் உள்ள போக்குகளைக் காட்டுகிறது. இந்தப் படத்திலிருந்து உண்மைகள் அறிவதற்குச் சில முக்கியமான விஷயங்களை மனத்தில் கொள்ள வேண்டும். முதலாவதாக, வாழ்க்கைச் செலவு கட்டுப்பாட்டு



படம் 9. 1939 முதல் பம்பாய்த் தொழிலாளர் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்
(1933 ஜூலைமுதல் 1934 ஜூன்வரை சராசரி விலைகள் = 100)

விலைகளை அடிப்படையாகக் கொண்டதால், குறைத்து மதிப்பிடப்பட்டதாகும். 1954-ல் சிறிது ஏறிய வீட்டு வாடகை, பொதுவாக மாறுதலாகவே கொள்ளப்பட்டுள்ளது. வீட்டு வாடகைக்கு நிறை 13 என்று கொடுக்கப்பட்டிருப்பதால், இவ்வாறு இதைக் கொண்டதன் விளைவு அதிகமாக இருக்க வேண்டும். சில பண்டங்களைத் துய்க்காமல் விட்டுவிட்டதாலும், அதிகக் கறுப்பு மார்க்கெட் விலைகளைக் கொடுத்ததாலும் உண்டான உண்மைச் செலவை இந்த எண்கள் குறிப்பிடவில்லை என்பதை மீண்டும் கூறவேண்டியுள்ளது. இரண்டாவதாக, பம்பாய்த் தொழிலாளர் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண், மற்ற நகரங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கப்படும்போது, உணவுப் பொருள்களின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுவதாகத் தெரிகிறது. ஏனெனின், மற்ற இடங்களைவிட அங்குத் துணி, வாடகை, மற்ற இனங்களுக்கு ஆகும் செலவு அதிகம். இவற்றுடன் ஒப்பிடும்போது உணவுக்கு அளிக்கப்பட்ட நிறை மிகக் குறைவு என்றே கூறவேண்டும்.

வாழ்க்கைச் செலவு வளைகோட்டின் தன்மையை நிர்ணயிப்பதில் உணவுப் பொருள்கள் பெற்றுள்ள முக்கியப் பங்கு இந்தப் படத்தைக் கூர்ந்து பார்த்தால் நன்கு விளங்கும். உணவு விலைகளின் இயக்கத்தைப் பொறுத்துதான் வாழ்க்கைச் செலவு முறை அமைகிறது. குடும்பச் செலவில் 70 முதல் 80 சதவீதம் வரையில் உணவுக்காகச் செலவிடப்படுவதால் இது தெளிவாகத் தெரியும். எனினும், சில சமயங்களில், உணவு விலையின் விளைவை மற்றப் பிரிவுப் பொருள்களின் விலைகள் ஓரளவு மாற்றியிருக்கின்றன என்று கூறலாம். உதாரணமாக, 1942-43-ல் மற்றப் பிரிவுப் பொருள்கள் அதிகமாயிருந்ததால், உணவு விலையைவிட வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு விகிதம் உயர்வாயிருந்தது. 1942 செப்டம்பருக்கும் 1943 ஏப்ரலுக்கும் இடையில், உணவுக் குறியீட்டெண் 36 பாயின்டுகள் உயர்ந்தது; ஆனால், வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் 55 பாயின்டுகள் உயர்ந்தது. ஏனெனின், மற்றப் பிரிவுப்பொருள்களின் விலைகள் மிகவும் உயர்ந்தன. ஆடைகள் 228 பாயின்டுகளும், எரிபொருளும் விளக்கும் 61 பாயின்டுகளும், பலவகைப் பொருள்கள் 64 பாயின்டுகளும் ஏறின. 1945 மார்ச்சுக்கும் 1947 செப்டம்பருக்கும் இடையில், விளைவு வளைகோட்டுக்கும் வாழ்க்கைச் செலவு வளைகோட்டுக்கும் மத்தியில் காணப்படும் இடைவெளிக்குக் காரணம், மற்றப் பிரிவுப் பொருள்கள் (கட்டுப்பாட்டினால்) ஓரளவு நிலையாக இருந்ததே. ஆனால், அப்போது உணவுப் பிரிவின் விலைக் குறியீட்டெண் உயர்ந்து சென்றது. இந்த இரண்டு காலங்களுக்கும் இடையில் உணவுப்

பொருள்களின் குறியீட்டெண் 50 சதவீதம் உயர்ந்தது; ஆனால், ஆடைகள், எரிபொருள்கள், விளக்கு ஆகியவை ஏறக்குறைய நிலையாக இருந்தன. 1944 மேக்கும் 1945 அக்டோபருக்கும் இடையில் பலவகைப் பிரிவு 10 சதவீதம் இறங்கியது; 1944 மேக்கும் 1947 டிசம்பருக்கும் இடையில் 20 சதவீதம்தான் உயர்ந்தது. 1948-ல் ஆடை, எரிபொருள், விளக்கு ஆகியவற்றின் குறியீட்டெண் அதிகம் ஏறியது. ஆனால், வாழ்க்கைச் செலவு உயர்வு உணவின் விலை உயர்வுக்கு ஏற்பதான் இருந்தது. இதற்குப் பெரும்பாலும் காரணம், பலவகைப் பொருள்களின் விலைகள் தாழ்ந்தே இருந்தன; உயரவில்லை. 1949-ன் மத்திக்கும் 1950-ன் இறுதிக்கும் இடையில், உணவு விலை உயர்ந்திருந்தாலும், வாழ்க்கைச் செலவு அதிகம் மாறவில்லை. ஏனெனில், மற்றப் பொருள்கள்—ஆடை, எரிபொருள், பலவகைகள்—தாழ்ந்து ஒரே நிலையில் இருந்தன. பலவகைப் பொருள்கள் என்பவை மிக முக்கியமான ஒரு பிரிவாகும். இதில் சோப்பு, மருந்து, வெற்றிலை பீடி, செய்தித் தாள்கள், பயணம் முதலியவை அடங்கும். இதற்கு நிறை 14 என்று அளிக்கப்பட்டுள்ளது. 1953-ன் தொடக்கம் முதல் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்ணின் மாறுதல் உணவுக் குறியீட்டெண்ணுல்தான் பெரும்பாலும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. 1952 ஏப்ரலுக்கும் 1953 ஆகஸ்டுக்கும் இடையில், உணவுக் குறியீட்டெண் 49 பாயின்டுகள் உயர்ந்தது; வாழ்க்கைச் செலவில் 31 பாயின்டுகள் கூடியது. பிறகு, உணவுக் குறியீட்டெண்ணிலும் வாழ்க்கைச் செலவிலும் தாழ்வு விகிதம் ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருந்திருக்கிறது. இது இந்தக் காலத்தின் ஆரம்பத்தில் பருவங்கள் தவறியதால் உணவுப் பஞ்சநிலை உண்டானதையும், பிற்பகுதியில் அதிக உணவு உற்பத்தியையும் உணவுப் பொருள்களில் விலைகள் இறங்கியதையும் பொதுவாகக் காட்டுகிறது.

வெவ்வேறிடங்களில் வாழ்க்கைச் செலவின் போக்கில் வித்தியாசம் உண்டானதும் பெரும்பாலும் உணவு விலைகள் வேறுபட்டதனுல்தான். படம் 8-லிருந்து, பம்பாயிலும் சென்னையிலும்விட நாகபுரியில் வாழ்க்கைச் செலவு அதிகரித்திருக்கிறது என்பது தெரியும். 1942 ஜூனுக்கும் 1943 செப்டம்பருக்கும் இடையில், சென்னையில் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் 41 சதவீதமும், பம்பாயில் 61 சதவீதமும், நாகபுரியில் 123 சதவீதமும் உயர்ந்தது. இந்தக் காலத்தில் சென்னையிலும் பம்பாயிலும் உணவு விலைகள் முறையே 57 சதவீதமும் 60 சதவீதமும் உயர்ந்தன; ஆனால், நாகபுரியில் 149 சதவீதம் உயர்ந்தன. வாழ்க்கைச் செலவு உயர்வு வித்தியாசப்படுவதற்குக் காரணம் முக்கியமாக உணவுச் செலவு

தான் என்பதை இதிலிருந்து அறியலாம். பம்பாயில் 1943-க்கு வாழ்க்கைச் செலவில் உயர்ந்தபட்ச எல்லை (248) அக்டோபரில் காணப்பட்டது. அப்போது உணவுக் குறியீட்டெண் 282. 1945-ன் முதல் கால்பகுதியில் இரண்டு குறியீட்டெண்களும்—பொது வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் 225-க்கும் உணவுக் குறியீட்டெண் 253-க்கும்—இறங்கின. நாகபுரியில் உண்டான மாறுதலைவிட இது மிகக் குறைவு. அங்கு 1943 ஜூனில் 361 ஆக இருந்த வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண், 1945 மார்ச்சில் 387-க்கு. அதாவது, 114 பாயின்டுகள் பின்னிட்டது. இது 38 சதவீதக் குறைவாகும். 1946-48-க்குட்பட்ட மூன்றாண்டுகளில் பம்பாய்க்கும் சென்னைக்கும் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்ணின் அதிகரிப்பு விகிதத்தில் காணப்பட்ட வித்தியாசத்திற்கும் காரணம் இதுவே. 1946 ஜனவரிக்கும் 1948 டிசம்பருக்கும் இடையில், பம்பாயில் வாழ்க்கைச் செலவு 242-லிருந்து 326-க்கு அல்லது 35 சதவீதம் உயர்ந்தது; ஆனால், சென்னையில் அது 225-லிருந்து 322-க்கு அதாவது, 41 சதவீதம் உயர்ந்தது. இதே காலத்தில், உணவுக் குறியீட்டெண் பம்பாயில் 34 சதவீதமும், சென்னையில் 39 சதவீதமும் உயர்ந்தது. பிந்திய ஆண்டுகளில் பம்பாய், நாகபுரி, சென்னை ஆகிய மூன்றிடங்களிலும் வாழ்க்கைச் செலவில் மாறுதல் ஏறக்குறைய ஒரே மாதிரி இருந்தது. ஆனால், நாகபுரி குறியீட்டெண் சிறிது அதிக ஏற்ற இறக்கங்களுடன் ஒரேமாதிரி உயர்வாகவே இருந்தது.

வாழ்க்கைச் செலவும் தொழிலாளர் சம்பாத்தியமும்

தொழிலாளர் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்கள், இந்த வகுப்பார் துய்க்கும் பொருள்களின் விலைப்போக்கைத் தான் குறிக்கின்றன. உண்மையான துய்ப்பை விலை மாறுதல் எப்படிப் பாதிக்கின்றன என்பதை அவை காட்டுவதில்லை. ஆகவே, விலையேற்றத்தினால் உண்டாகும் சுமை இவற்றிலிருந்து தெரியாது. இதைத் தெரிந்துகொள்வதற்கு, துய்ப்புப் பொருள்களின் விலையேற்றத்தினால் மக்களுடைய துய்ப்புப் பழக்கம் எப்படி மாறுகிறது என்பதை நாம் கண்டுபிடிக்கவேண்டும். துய்ப்புப் பொருள்களின் விலைகள் ஓரளவு மாறும்போது, துய்ப்போர் அதேமாதிரிப்பொருள்களை அதே அளவுக்கு வாங்கவேண்டுமானால், அவர்களுடைய பண வருமானமும் தகுந்தபடி அதிகரிக்க வேண்டும். விலையேற்றத்திற்கேற்ப அன்றிப் பண வருமானம் எவ்வளவு குறைகிறதோ, அவ்வளவுக்கு விலையேற்றத்தினால் மக்களின் உண்மையான சுமை எவ்வளவு என்பது தெரியும். 1939 முதல் விலைகள் படிப்படியாக உயர்ந்ததால், எல்லா வகையான தொழிலாளரின் கூலியும் உயர்ந்துவிட்டது. அன்றியும், அவர்

களுக்குப் பஞ்சப்படிகளும் போனசும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பண வருமான அதிகரிப்பினுல், வாழ்க்கைச் செலவு உயர்வுக்கீடாக அவர்களுக்கு எவ்வளவு உதவி கிடைத்துள்ளது என்பதை நாம் காணவேண்டும்.

இந்திய அரசாங்கத்தின் தொழிலாளர் தகவல் நிலையத்தினுல் தொழிற்சாலைகளில் வேலைசெய்வோரின் வருமானப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. 1936 ஆம் ஆண்டின் கூலியளிப்புச் சட்டப்படி, அதற்குட்பட்ட தொழிற் சாலை சம்பந்தமானவை இந்த விவரங்கள். நம் நாட்டில் தொழிற்சாலைகளில் வேலை செய்வோரின் மொத்தத்தில் ஆறில் ஐந்து பங்காக உள்ள ஆண்டுதோறும் நடைபெறும் தொழில் களில் பெரும்பாலானவை இதில் அடங்கும். இந்தச் சட்டத்தின் கீழ் வராதவை, ரயில்வே தொழிற்சாலைகளும், உணவு, பானம், புகையிலை என்பவையும், கொட்டை நீக்கும் பருத்தித் தொழிற்சாலைகள், அழுத்தும் தொழிற்சாலைகள், பருவகாலத் தொழில்கள் என்பவையும் ஆகும். வருமானத்தைக் கணக்கிடுவ தில் இவைபற்றிய விவரங்கள் சேர்க்கப்படவில்லை. ரூ. 200-க்கும் குறைந்த வருமானமுடைய எழுத்தர் பணி செய்பவர்கள் உட் பட்ட எல்லாவிதமான வேலைகளைச் செய்பவர்களும் இதன்கீழ் வருவர். வருமானத்தில் கூலி, போனஸ், படிகள், பணத்தின் அளவில் கூறத்தக்க மற்ற ஊதியங்கள் அடங்கும். ஆனுல், வேலையளிப்போர் கொடுக்கும் சில சௌகரியங்கள் இதில் அடங்கா. அவை வீட்டு வசதி, விளக்கு, தண்ணீர், மருத்துவ உதவி, உபகாரச் சம்பளம் (பென்ஷன்) அல்லது சேமநிதிக்கு அளிக்கப்படும் உதவித் தொகை முதலியவையாகும்.

அட்டவணை 63-ல் உள்ள விவரங்கள் 1939முதல் சராசரி வரு மானத்தின் போக்கைக் காட்டுகின்றன. இக் குறியீட்டெண்கள் 1939ஆம் ஆண்டை அடிப்படையாகக்கொண்டு கணக்கிடப் பட்டவை.

1939-க்கும் 1953-க்கும் இடையில், தொழிற்சாலைத் தொழி லாளர்களின் சராசரி வருமானம் நான்கு மடங்கு அதிகரித்தது என்பதை அட்டவணை 63 காட்டுகிறது. இந்த அதிகரிப்பில் பெரும் பகுதி இரண்டு முக்கியக் கட்டங்களில் உண்டாயிற்று. முதலாவது, 1941-க்கும் 1944-க்கும் இடையில்; அப்போது சராசரி வருமானம் ரூ. 324·5-லிருந்து ரூ. 586·5-க்கு ஏறியது.[1] இரண்டா வது உயர்வு, 1946முதல் 1949வரையுள்ள காலத்தில்உண்டாயிற்று.

[1] இந்தியாவில் தொழிற்சாலைகளில் வேலை செய்வோர் வருமானம் 1939-ல் இருந்ததைவிட 1944-ல் இரண்டுமடங்காயிற்று.

இந்தக் காலத்தில் ஒவ்வோராண்டிலும் குறியீட்டெண்கள் சராசரி 42·5 பாயின்டுகள் உயர்ந்தன. போரின் பிற்பகுதியில் தொழிலாளர்களுக்கு அதிக கிராக்கியும், பஞ்சம்போன்ற நிலையும் விலையுயர்வுடன் சேர்ந்து தொழிலாளர்களுக்கு அதிகக் கூலி கிடைக்கும்படி செய்தன.

அட்டவணை 63

ஆண்டு முழுவதும் நடைபெறும் தொழில்களில் தொழிற்சாலைத் தொழிலாளிகளின் சராசரி வருட வருமானம், 1939–54

வருடம்	வருமானம் (ரூபாய்கள்)	குறியீட்டெண் (1939 = 100)
1939	287·5	100·0
1940	307·7	107·0
1941	324·5	112·9
1943	525·0	182·6
1944	586·5	204·0
1945	595·8	207·2
1946	619·4	215·4
1947	738·3	256·8
1948	889·7	309·5
1949	985·9	342·9
1950	966·8	336·2
1951	1035·6	360·2
1952	1112·2	386·8
1953	1110·9	386·4
1954	1111·8	386·5

(ஆதாரம்: 'Indian Labour Gazette'. Figures up to 1947 from 'Indian Labour Gazette', March 1949. Figures for 1948–53 from 'Indian Labour Gazette', August 1955.)

1945-ல் போர் முடிந்ததும், தொழிற்சாலைத் தொழிலாளர்கள் அதிகக் கூலி கோரி எங்கும் கிளர்ச்சி செய்தார்கள். வேலை நிறுத்தத்தில் முடிந்த தொழில் தகராறுகள் 1945-ல் 820 ஆக இருந்து 1946-ல் 1629 ஆகவும், 1947-ல் 1811 ஆகவும் உயர்ந்தன. 1948, 1949ஆம் ஆண்டுகளில் தொழில் தகராறுகள் முறையே 1259-ம் 920-ம்ஆகும். பெரும்பாலான தகராறுகள் அதிகக் கூலியும் படிகளும் கோரி நடந்தன. 1946-லும் 1947-லும், நிகழ்ந்த மொத்தம் 3440 தகராறுகளில் 1452 கூலி, படி, போனஸ் பிரச்சினைகளைப்பற்றியவை. 1947முதல் இராச்சியங்களிலும் மத்தியிலும் மக்கள் ஆட்சி நிறுவப்பட்டதால், அரசாங்கம் தொழிலாளர்

களிடம் அதிக அனுதாபம் காட்டியது. மத்திய சம்பளக் குழுவின் பரிவுரைகளும், அவற்றை நிறைவேற்றியதும் அரசாங்க அலுவலர்களுக்கு அதிகக் கூலியுயர்வை அளித்தன. தனிப்பட்ட வேலையளிக்கும் நிறுவனங்களும் இந்தப் போக்கைக் கடைப்பிடித்து, வேலையளிப்போருக்கும் வேலைசெய்வோருக்கும் இடையே நேரடியான பேச்சுவார்த்தைகளாலும், அரசாங்க மத்தியஸ்தர்கள், தீர்ப்புக் கூறுவோர், விசாரணைக் குழுக்கள் ஆகியவற்றின் தலையீட்டினாலும் கூலியில் மாறுதல்கள் செய்யப்பட்டன. நம் நாட்டில் இப்பொழுது ஆண்டுதோறும் பெரிய தொழில்களின் சம்பளப்பட்டியலில் போனஸ் அளிப்பு ஒரு நிலையான அம்சமாகக் காணப்படுகிறது. இது தொழிற்சாலைகளில் வேலை செய்வோரின் வருமானத்தைக் கணிசமாக அதிகரித்திருக்கிறது.

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு தொழில்களில் வருமான அதிகரிப்பு ஒரே மாதிரியாக இல்லை. 1939-ல் எளிய அளவில் தொடங்கப்பட்ட தொழில்களிலும், எளிய அளவில் தொழில்களைத் தொடங்கிய இராச்சியங்களிலும் மற்றவற்றை விட அதிக வருமான உயர்வு காணப்படுவது ஒரு வரவேற்கத் தக்க அம்சமாகும். 1939-ல் கூலி அளவு அதிகமாக இருந்த இராச்சியங்களில், பிறகு உண்டான உயர்வு குறைவாகக் காணப்பட்டது. உதாரணமாக, 1939-க்கும் 1949-க்கும் இடையில், பீகாரில் 1949-ல் சராசரி வருட வருமானக் குறியீட்டெண் மிகக் குறைவாக இருந்தது; ஆனால், 1939-ல் மிக அதிகமாக இருந்தது. இதற்கு மாறாக, சென்னையில் 1949-ல் வருமானக் குறியீட்டெண் மிக அதிகமாகவும், 1939-ல் மிகக் குறைவாகவும் இருந்தது. இதுபோலவே தொழில்வாரியாக, 1939-ல் எல்லாத் தொழில்களின் சராசரி வருமான அளவைவிடச் சராசரி வருமானம் மிகக் குறைவாய் இருந்த நெசவாலைகள், ரசாயனத் தொழில்கள், சாயத் தொழில்கள் துப்பாக்கித் தொழிற்சாலைகள், நாணயச் சாலைகள், மற்றப் பலவகைத் தொழில்கள் முதலியவற்றில் 1949-ல் வருமானக் குறியீட்டெண் அதிகமாக இருந்தது. ஆனால், 1939-ல் வருமானம் அதிகமாக இருந்த தொழில்களில்—உதாரணமாக, பொறியியல், தாதுக்கள், உலோகங்கள், காகிதம், அச்சுத் தொழில், மரம், கல், கண்ணாடி, தோல் தொழில்கள்—பிந்திய ஆண்டுகளில் வருமான உயர்வு சுமாராகத்தான் இருந்தது. இவ்வாறு மொத்தத்தில், தொழில்களிலும், வெவ்வேறு பகுதிகளிலும் நாட்டின் சராசரி வருமானம், பகுதிகளுக்கிடையேயும் தொழில்களுக்கிடையேயும் இருந்த வேற்றுமைகளைக் குறைக்கும் முறையில் அமைந்திருந்தது.[1]

[1] Indian Labour Gazette, February 1943, pp. 639-40.

உண்மையான வருமானம்

தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை விலையேற்றம் எப்படிப் பாதிக்கிறது என்பதை அறியப் பண வருமான மாற்றத்தை வாழ்க்கைச் செலவு மாற்றத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்கவேண்டும். அதாவது, உண்மையான வருமானத்தின் போக்கும், அதில் மாறுதல்களும் நம் நாட்டின் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் நல்வாழ்வைப்பற்றிப் பொதுவாகத் தெரிவிக்கும். இது போன்ற ஆராய்ச்சிக்கு ஒரே அடிப்படை ஆண்டைக் கொண்ட வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்களையும் சராசரி வருமானக் குறியீட்டெண்களையும் கண்டுபிடிப்பது அவசியம். இந்திய அரசாங்கத்தின் தொழில் தகவல் நிலையம் இதுபோன்ற ஆராய்ச்சியை அண்மையில்தான் தொடங்க முயன்றுள்ளது. அகில இந்திய வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் 1944ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டது. ஆகவே, 1945-க்குப் பிறகு கிடைத்த துய்ப்புப் பொருள் விலைக் குறியீட்டெண்களை 1944 அடிப்படையிலிருந்து 1939 அடிப்படைக்கு மாற்றவேண்டியதாயிற்று. அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்த எட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களுக்குக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு வரிசையை அடிப்படையாகக் கொண்டு, 1939-ஐ அடிப்படை ஆண்டாக வைத்து இது செய்யப்பட்டது. 1939-ஐ அடிப்படையாகக்கொண்ட இந்த வரிசைகளில் இரண்டு தனிப்பட்ட மதிப்புகளுக்கு அதிக வித்தியாசமில்லாதவாறு இவை பிறகு திருத்தப்பட்டன. தொழிற்சாலைத் தொழிலாளர்களின் சராசரி வருமானக் குறியீட்டெண்ணும், 1939-ஐ அடிப்படையாகக்கொண்டு மாற்றப்பட்டது. இந்த இரண்டு வரிசை எண்களின் அடிப்படையில், வருமானக் குடுயீட்டெண்ணை அகில இந்தியத் துய்ப்புப் பொருள் விலைக் குறியீட்டெண்ணால் வகுத்து, உண்மை வருமானக் குறியீட்டெண் கண்டுபிடிக்கப் பட்டது. அட்டவணை 64-ல் இந்த முடிவுகள் காட்டப் பட்டுள்ளன.

இந்த வரிசை எண்களின் போக்கு படம் 10-ல் காட்டப் பட்டுள்ளது. இதிலிருந்து, போரின் பிந்திய ஆண்டுகளில் வருமான அதிகாரிப்பு விகிதம் கணிசமாக இருப்பினும், துய்ப்புப் பொருள்களின் விலையுயர்வுக்கு ஈடாக இல்லை. ஆகவே, உண்மை வருமானம் 1939 அளவுக்குக் கீழே போய்விட்டது. 1943-ல் மிகக் கீழ்நிலை காணப்பட்டது. 1946-49-ல் உண்மை வருமான வளர்ச்சிக் கோட்டின் சாய்மானம், அந்தக் காலத்தில் அதிக முன்னேற்றம் இருப்பதைக் காட்டுகிறது. இந்த மறுமலர்ச்சி இருந்தும், 1951-ல் உண்மை வருமானக் குறியீட்டெண் 1939 அளவைவிட 8

பாயின்டுகள் குறைவாக இருந்தது. அதுமுதலாக மேலும் உயர்வு காணப்பட்டது. அதன் விளைவாகப் போர் முடிந்து பத்து வருடங்களுக்குப் பிறகு, தொழிற்சாலைத் தொழிலாளர்களின் உண்மை வருமானம் போருக்கு முந்தியிருந்த அளவை அடைந்தது.

அட்டவணை 64

இந்தியாவில் தொழிற்சாலைகளில் வேலைசெய்வோரின் பண வருமானமும் உண்மை வருமானமும், 1939–1954

வருடம்	வருமானக் குறியீட்டெண் (1939 = 100)	அகில இந்தியத் துய்ப்புப் பொருள் விலைக்குறியீட்டெண் (1939 = 100)	உண்மை வருமானக் குறியீட்டெண் (1939 = 100)
1939	100	100	100
1940	105·3	97	108·6
1941	111·0	107	103·7
1942	129·1	145	89·0
1943	179·6	268	67·0
1944	202·1	269	75·1
1945	201·5	269	74·9
1946	208·6	285	73·2
1947	253·2	323	78·4
1948	304·0	360	84·4
1949	340·3	371	91·7
1950	334·2	371	90·1
1951	356·8	387	92·2
1952	385·7	379	101·8
1953	384·6	385	99·9
1954	381·2	371	102·7

(ஆதாரம்: 'Indian Labour Gazette', October 1955, p. 249.)

மேற்கூறிய வழியைக் கையாண்டு சில முக்கியமான இடங்களில் உண்மை வருமானத்தின் போக்கை ஒப்பிட்டு ஆராய முடியும். எனினும், கிடைக்கக்கூடிய புள்ளிவிவரங்களையும் அவற்றின் குறைகளையும் கொண்டு, நாம் மிகவும் பொதுவான, தற்காலிகமான முடிவுகளைத்தான் செய்ய முடியும் என்பதை மனத்தில் கொள்ளவேண்டும். அட்டவணை 65-ல் பம்பாய், சென்னை, மத்தியப் பிரதேசம், உத்தரப்பிரதேசம், ஆகியவற்றில் தொழிற்சாலைகளில் வேலை செய்வோரின் வாழ்க்கைச் செலவு, பண வருமானம், உண்மை வருமானம் ஆகியவைபற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இராச்சியம் முழுவதற்கு



படம் 10. இந்தியாவில் தொழிற்சாலை வேலையாட்களின் பணவருமானம், வாழ்க்கைச் செலவு, உண்மை வருமானம், 1939-54.

அட்டவணை 65

இலை முக்கியமான இடங்களில் பண வருமானம், உண்மை வருமானம் ஆகியவற்றின் குறியீட்டெண்கள்

வருடம்	பம்பாய்			சென்னை			மத்தியப் பிரதேசம்			உத்தரப் பிரதேசம்		
	மாத வருமானம்	வாழ்க்கைச் செலவு	உண்மை வருமானம்	மாத வருமானம்	வாழ்க்கைச் செலவு	உண்மை வருமானம்	மாத வருமானம்	வாழ்க்கைச் செலவு	உண்மை வருமானம்	மாத வருமானம்	வாழ்க்கைச் செலவு	உண்மை வருமானம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
1939	100	100	100	100	100	100	100	100	100	100	100	100
1944	235	226	104	192	207	93	231	267	87	217	314	69
1945	224	224	100	204	228	89	256	259	99	224	308	73
1946	221	246	90	243	240	101	221	285	78	242	328	74
1947	267	265	101	338	277	122	276	320	86	284	378	75
1948	315	288	109	372	315	118	324	372	88	381	471	81
1949	337	292	115	439	330	133	386	377	102	427	478	89
1950	319	298	107	342	332	103	483	372	130	402	434	93
1951	349	314	111	378	341	111	406	391	101	419	451	93
1952	366	321	114	499	337	142	386	380	101	433	441	98
1953	364	346	105	451	358	126	453	387	117	432	453	95
1954	348	346	101	496	360	138	466	377	124	421	442	95

* கான்புரி

† கான்பூர்

(ஆதாரம்: 'Indian Labour Gazette,' வாழ்க்கைச் செலவுக்கு அடிப்படை, 1939 ஆகஸ்டு = 100; பண வருமானம், உண்மை வருமானம் அடிப்படை 1939 = 100.)

மான சராசரியின் அடிப்படையில் வருமானக் குறியீட்டெண்கள் அமைந்துள்ளன. ஆனால், வாழ்க்கைக் செலவு, பம்பாய், சென்னை, நாகபுரி, கான்பூர் ஆகிய நகரங்களின் தொழிற்சாலைத் தொழிலாளிகளுக்குரியது.

அட்டவணை 65-ல் உள்ள எண்கள் பம்பாய், சென்னை, மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் ஆகிய இடங்களில் உண்மை வருமானத்தின் இயக்கத்தில் உள்ள வித்தியாசங்களைக் காட்டுகின்றன. பண வருமானம் இராச்சியம் முழுவதற்குமுள்ள சராசரியையும், வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் நகரங்களையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதால், பண வருமானத்தை வாழ்க்கைச் செலவினால் பணச் சுருக்கம் செய்து கண்டுபிடிக்கப்படும் உண்மை வருமானம் குறைத்து மதிப்பிடப் பட்டதேயாகும். அன்றியும், இந்த எண்கள் வெவ்வேறிடங்களில் உள்ள பொதுவான போக்கைக் காட்டி, வாழ்க்கைச் செலவிலும் பண வருமானத்திலும் உண்டாகும் மாறுதல்களின் முக்கியத்துவத்தைத் தெளிவாக்குகின்றன. 1944 முதல் பம்பாயில் உண்மை வருமானம் 1939 அளவுக்குக்கீழ் 1947 வரை இருந்தது. (1944 சிறிதளவு விதிவிலக்காக உயர்ந்தது); சென்னையில் 1946 வரையிலும், நாகபுரியில் 1949 வரையிலும் இவ்வாறிருந்தது. கான்பூரில் உண்மை வருமானம் நெடுக 1939 அளவுக்குக் கீழேயே இருந்தது. 1946 முதல் ஒரு பொதுவான மேல்நோக்கு உள்ளது. இந்த மேல்நோக்கு சென்னையிலும் பம்பாயிலும் 1949 வரையிலும், நாகபுரியில் 1950 வரையிலும், கான்பூரில் 1951 வரையிலும் காணப்பட்டது. உண்மை வருமானம் 1950-ல் சென்னையிலும், 1951-ல் நாகபுரியிலும் அதிகம் குறைந்தது. 1950-ல் பம்பாயிலும், 1951-ல் கான்பூரிலும் சிறிதளவு குறைந்தது.

உண்மை வருமான எண்களுக்கு விளக்கம் கூறும்போது மிகுந்த ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். உண்மை வருமானம் இரண்டு மாறிகளைப் பொறுத்தது—அவை வாழ்க்கைச் செலவும் பண வருமானமும். இந்த இரண்டின் எடுகோள்களில் உள்ள குறைகள் முன்னரே வற்புறுத்திக் கூறப்பட்டன. அட்டவணை 65-ஐப் பார்த்தால், வெவ்வேறிடங்களில் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்கள் மொத்தத்தில் ஏறுமுகத்தில் நிலையாக இருந்தன என்பது தெரியும். இதற்கு மாறாக, பண வருமானத்தில் அதிக நிச்சயமற்ற மாறுதல்கள் இருந்தன. இது உண்மை வருமானத்தில் அதிக மாறுதல்கள், பண வருமான அளவுகள் மாறுவதால்தான் ஏற்படுகின்றன என்பதைக் காட்டும். 1947-க்கும் 1953-க்கும் இடையில் எல்லா இராச்சியங்

களிலும் தொழிலாளிகளின் சராசரி வருட வருமானம் 51 சதவீதம் உயர்ந்தது. ஆனால், இராச்சியங்களுக்கிடையே அதிக வேறுபாடு இருந்தது. மொத்தத்தில், சென்னையும் மத்தியப் பிரதேசமும் அதிக உயர்வைக் காட்டின; ஆனால், கான்பூரிலும் பம்பாயிலும் உயர்வு சுமாராக இருந்தது. வருமானம் உயர்வுள்ள வருடங்கள், பொதுவாகக் கூலி அளவிலும், படிகளிலும், போனஸ்களிலும் பெருந்தொகையான தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியிருந்த பல தொழில்களில் உயர்வு அளிக்கப்பட்ட வருடங்களே ஆகும். உதாரணமாக, சென்னையில் 1947-ல் வெங்கட்ராமையா தீர்ப்புப்படி அதிகக் கூலி விகிதங்களும் கிராக்கிப் படிகளும் கொடுக்கப்பட்டபோது, அதிக வருமானம் காணப்பட்டது; மீண்டும் 1949-ல், கோயம்புத்தூர், மதுரை, சென்னை ஆகிய இடங்களில் அதிக போனஸ் கொடுக்கப்பட்டபோது வருமானம் அதிகரித்தது. மத்தியப் பிரதேசத்தில் 1947-48-ல் நெசவாலைத் தொழிலில் அதிகக் குறைந்தபட்ச கூலி விகிதங்களும் கிராக்கிப் படிகளும் தீர்ப்புகளின்படி கொடுக்கப்பட்டன. இதன் விளைவு, இந்த ஆண்டுகளில் வருமானம் உயர்ந்ததிலிருந்து தெரிகிறது. 1950-ல் அதிக உயர்வுக்குக் காரணம், 1947-48-க்காக அந்த வருடத்தில் மூன்று மாத போனஸ் அளிக்கப்பட்டதுதான். பம்பாயில் 1952-ல் அதிக வருமானம் இருந்தபோது, முந்தி ஆண்டைவிட பம்பாய், ஆமதாபாத் நகரங்களில் இருந்த 3 இலட்சம் தொழிலாளர்கள் லாபத்தில் பங்குபெறும் போனஸ்களை 50 முதல் 75 சதவீதம்வரையில் பெற்றனர். எனினும், மத்தியப் பிரதேசத்துடனும் சென்னையுடனும் ஒப்பிடும்போது, 1939 முதல் பம்பாயில் வருமான உயர்வு குறைவாகத்தான் இருந்தது. இதற்குப் பெரும்பாலும் காரணம், பம்பாயிலும் ஆமதாபாத்திலும் முன்னரே 1947ஆம் ஆண்டின் தொழில் கோர்ட்டின் தீர்ப்புப்படி பருத்தித் தொழிற்சாலைகளில் குறைந்தபட்ச கூலியும் கிராக்கிப்படியும் உயர்த்தப்பட்டிருந்தது. இது சராசரி கூலியளவை ஏற்கெனவே உயர்த்திவிட்டிருந்தது.

இதற்கு மாறுக, சில ஆண்டுகளில் சராசரி வருமானத்தில் அதிக உயர்வு காணப்பட்டிருப்பதற்குக் காரணம், பெரும்பாலும் 1948ஆம் ஆண்டின் தொழிற்சாலைச் சட்டத்தை மாற்றியதால் கூலியளிப்புச் சட்டத்தின் (Payment of Wages Act) எல்லைக்குட்பட்ட தொழிற்சாலைகளின் பட்டியல் பெருகியதுதான் என்று கூறலாம். இந்தச் சட்டத்தின் எல்லைக்குள் கொண்டுவரப்பட்ட புதிய நிறுவனங்கள் சிறியவையாயும் குறைந்த கூலியளவு உடையவையாயும் இருந்ததால், இதன் விளைவு சராசரி வருமானத்தைக் குறைப்பதுதான். 1950-ல் சென்னையில் நெசவாலைத்

தொழிலில்தான் சராசரி வருமானக் குறைவு அதிகமாகக் காணப்பட்டது. இதற்குக் காரணம், தொழிற்சாலைச் சட்டத்தின்கீழ்ப் பல சிறிய கைத்தறித் தொழில்கள் கொண்டுவரப்பட்டதுதான். இதே காரணத்தினால் 1951-ல் மத்தியப் பிரதேசத்தில் தொழிற்சாலை வேலையாட்களின் சராசரி பண வருமானத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டது. பம்பாயில், 1950-ல், குறியீட்டெண்ணில் குறைவு உண்டானதற்குக் காரணம், அந்த வருடத்தில் இரண்டு மாதங்கள் நெசவாலைகளின் வேலைநிறுத்தம் நடந்ததுதான். இது நெசவாலைத் தொழில் முழுவதற்குமே குறியீட்டெண்ணைக் குறைத்துச் சராசரியையும் பாதித்தது. இந்த அம்சங்களைக் கருத்தில் கொண்டால், 1950-ல் மதராசிலும் 1951-ல் நாகபுரியிலும் உண்டான குறைவும், அதற்குமுன் வருடங்களில் உண்டான உயர்வும் குறைந்திருக்கக்கூடும் என்று பொருள் கொள்ளலாம்.

சில இராச்சியங்களில் நடத்தப்பட்ட இந்த வருமானப் போக்கு, வாழ்க்கைச் செலவு ஆராய்ச்சியிலிருந்து கீழ்க்கண்ட முடிவுகளைப் பெறலாம்: (1) எல்லா இராச்சியங்களிலும் போர்க் காலத்திலும், போர் முடிந்து அடுத்த சில ஆண்டுகளிலும் 1939 அளவுக்கும்கீழ் உண்மை வருமானம் குறைந்துவிட்டது. இதற்குக் காரணம் அதிக வாழ்க்கைச் செலவும், விலையேற்றத்திற்குத் தக்கவாறு கூலி உயர்வு இல்லாமலிருந்ததும்தாம். (2) 1947 முதல் சில இராச்சியங்களில் தவிர-மற்ற எல்லா இராச்சியங்களிலும் உண்மை வருமானம் உயரத் தொடங்கியது. சிலவற்றில் இந்த விகிதம் அதிகமாகவும், சிலவற்றில் குறைவாகவும் இருந்தது. (3) நாடு முழுவதற்கும், போர் முடிந்த 8 அல்லது 9 ஆண்டுகளுக்குப் பிறகு, உண்மை வருமானம் போருக்கு முந்தி இருந்த அளவையடைந்தது (படம் 10-ஐக் காண்க).

பிந்திய வருடங்களில், உண்மை வருமானம் கணக்கிடுவதற்கு அடிப்படையாகிய விவரங்கள் கிடைக்கவில்லை. ஆனால், 1954 முதல் நம் நாட்டில் பல இடங்களில் பருத்தி நெசவாலைகளில் வேலைசெய்வோரின் அடிப்படைக் கூலி, கிராக்கிப்படி ஆகியவை பற்றி விவரங்கள் கிடைத்துள்ளன. ஆகவே, இந்த வகையான தொழிற்சாலைத் தொழிலாளிகளின் பண வருமான அதிகரிப்பைத் துய்ப்புப் பொருள்களின் விலை அதிகரிக்கும்போது ஒப்பிட்டு, அதிக விலைகளால் இவர்கள் எப்படிப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை ஆராயலாம். இதை அட்டவணை 66-ல் காணலாம். இந்த இடங்களில் 1955-க்கும் 1959-க்கும் இடையில் பஞ்சாலைகளில் வேலைசெய்வோரின் தலா சராசரி மாத வருமானம் 24 சதவீதம் உயர்ந்திருந்தாலும், இந்த உயர்வு வாழ்க்கைச் செலவு

உயர்வினால் அநேகமாக ஈடுசெய்யப்பட்டுவிட்டது. அதன் விளைவாக, 1956-லும் 1957-லும் உண்மை வருமானம்உண்மையாகவே குறைந்துவிட்டது. அதன் பிறகு சிறிதுதான் உயர்ந்துள்ளது.

நாட்டின் மொத்த வேலைசெய்வோர் ஜனத்தொகையில் ஒரு சதவீதத்திற்கும் குறைவான நகரத் தொழிலாளர்களின் விவரங்களே அட்டவணை 66-ல் கொடுக்கப்பட்டுள்ளன. புள்ளி விவரங்கள் இல்லாததால், கிராம மக்களை விலை உயர்வு எப்படிப் பாதித்திருக்கிறது என்பதை மதிப்பிட முடியாது. எனினும், விவசாயத் தொழிலாளர்களின் நிலை இதைவிட மோசமாகஇருந்திருக்கமுடியாதென்றும், ஒருகால் நகரத் தொழிலாளர்களைவிட அவர்கள் நிலை சிறிது மேலாக இருந்திருக்கலாம் என்றும் கொள்ளலாம்[1]. இவ்வாறு கொள்வதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக, கிராமங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் பெரும்பகுதி அங்கேயே துய்க்கப்படுகிறது.

அட்டவணை 66

பஞ்சாலைத் தொழிலாளர்களின் பண வருமானமும் உண்மை வருமானமும், 1954-59

வருடம்	மாதப் பண வருமானம்*	பண வருமானக் குறியீட்டெண்†	அகில இந்தியத் துய்ப்போர் விலைக் குறியீட்டெண்‡	உண்மை வருமானக் குறியீட்டெண்
(1)	(2)	(3)	(4)	(3) (4)
1954	71·07	100	100	100
1955	69·65	98	97	101
1956	73·88	104	108	97
1957	77·22	109	113	92
1958	81·45	115	120	96
1959	86·41	122	124	98

* மாதக் குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளமும் கிராக்கிப்படியும்—பம்பாய், நாகபுரி, சென்னை, மேற்கு வங்காளம் ஆகியவைகளின் சராசரி.

† பண வருமானக் குறியீட்டெண்கள் (1954 = 100).

‡ இந்தக் குறியீட்டெண்களுக்கு அடிப்படை 1949 = 100. ஆனால், ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு 1954–55-க்குக் குறியீட்டெண் 100 என்று கொள்ளப்பட்டது.

(Compiled from 'Indian Labour Journal', January and March, 1960.)

[1] ஆந்திரப் பிரதேசம், சென்னை, கேரளம் ஆகிய இராச்சியங்களில் கிராம மக்களின் துய்ப்பு விலைக் குறியீட்டெண்கள் 1954, 1955-ல் பொதுத் தொழிலாளர் துய்ப்பு விலைக் குறியீட்டெண்ணைவிட அதிகமாகக் குறைந்தன; அதன்பிறகு மிந்தியதை விட அவ்வளவு அதிகமாக ஏறவில்லை. 'Indian Labour Journal', Jan. 1960, Table 30.

நாட்டின் பல பகுதிகளில் விவசாய வேலைகளுக்குப் பொருள்களேயே ஊதியமாகக் கொடுப்பது இன்னும் வழக்கமாக இருக்கிறது. ஆகையால், விவசாயத் தொழிலாளர்களின் உண்மை வருமானம் அதிகம் குறைந்திருக்காது. மேலும், போர்க் காலத்திலும் போருக்குப் பிறகும் விவசாய உழைப்பாளர்களின் வருமானத்தைப்பற்றி மதிப்பீடு செய்யப்படாவிடினும், பம்பாய் இராச்சியத்தில் கிராமப் பகுதிகளில் பணக்கூலிபற்றிக் கிடைத்த சில விவரங்களால், கிராமங்களிலும் நகரங்களில் கூலி உயர்வதற்கேற்பக் கூலி படிப்படியாகவும் அதிக விகிதத்திலும் உயர்ந்துள்ளது என்று தெரிகிறது. பம்பாய் இராச்சியத்தில் நிலத்தில் உழைப்போர், திறமையுள்ள தொழிலாளர் ஆகியோரைப்பற்றி மாதந்தோறும் ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தாலுகாக்களிலிருந்து கிராமப் பகுதிகள், நகரப் பகுதிகள் ஆகியவற்றிற்குச் சராசரி நாட்கூலி விகிதம்பற்றிய விவரங்கள் தொழிலாளர் துணை ஆணையாளர் (நிருவாகம்) அலுவலகத்திலிருந்து வெளியிடப்படுகின்றன. இவ்விவரங்களிலிருந்து அட்டவணை 67, 68-ல் எடுத்தெழுதப்பட்ட எண்கள் இந்த விஷயத்தை விளக்குகின்றன.

அட்டவணை 67

பம்பாய் கிராமப் பகுதிகளில் சராசரி நாட்கூலி விகிதம், 1949–53

வருடம்	1938–39	1949–50	1950–51	1951–52	1952–53	1953–54
விவசாயத் தொழிலாளர் கூலி ரூ.	0·28	1·32	1·35	1·36	1·31	1·34
1938–39-ல் இருந்த கூலி விகிதத்தை விடச் சதவீத உயர்வு	—	370	382	385	369	378
திறமை வேண்டாத தொழிலாளர் கூலி ரூ.	0·31	1·46	1·44	1·38	1·38	1·34
1938–39-ல் இருந்த கூலி விகிதத்தை விடச் சதவீத உயர்வு	—	372	363	345	345	330
திறமையுள்ள தொழிலாளர் கூலி ரூ.	0·94	2·85	3·03	3·26	3·12	3·03
1938–39-ல் இருந்த கூலி விகிதத்தை விடச் சதவீத உயர்வு	—	203	222	246	232	222

இந்த அட்டவணைகளிலுள்ள விவரங்களிலிருந்து, 1950-51-க்கும் 1953-54-க்கும் இடையில், முன் ஆண்டில் இருந்ததைவிட நிலத்தில் உழைப்போர், திறமை வேண்டாத தொழிலாளர் ஆகியோரின் கூலியளவு 3½ மடங்கும், திறமையுள்ள தொழிலாள

ரின் கூலியளவு 2½ மடங்கும் உயர்ந்துள்ளது என்பது தெரியும். இந்த உயர்வு, தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குக் கிடைத்த உயர்வுபோலவே உள்ளது. இந்த மூன்றுவகைத் தொழிலாளர்களுள், விவசாயத் தொழிலாளர்களின் கூலி உயர்வு விகிதமே அதிகமாக உள்ளது.

அட்டவணை 68-ல் உள்ள எண்கள் பெரும்பாலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆண்டுகளுக்குரியவை. முதல் திட்டத்தில், இந்த மூன்றுவகைத் தொழிலாளர்களிடையே வருமானமும் சிறிது பின்னிடத் தொடங்கியது. 1955, 1956-ல் 1950-51-ல் இருந்ததைவிட அது மிகவும் குறைவாக இருந்தது. ஓரளவுக்கு விலைகளின் வீழ்ச்சியால் இந்த நிலை ஏற்பட்டிருக்க வேண்டும். 1956 முதல் இந்த மூன்று இனங்களிலும் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்பட்டுள்ளது. 1956-க்கும் 1959-க்கும் இடையில் விவசாயத் தொழிலாளர் கூலி 49 சதவீதம் உயர்ந்தது. திறமை வேண்டாத தொழிலாளர் கூலி 68 சதவீதம் உயர்ந்தது. இதற்கு மாறுக, திறமையுள்ள தொழிலாளர் கூலி 1956-ல் இருந்ததைவிட 1958-ல் 24 சதவீதம் உயர்ந்தது. ஆனால், 1959-ல் சிறிது பின்னிட்டது.

அட்டவணை 68

பம்பாயில் கிராமப் பகுதிகளில் சராசரி நாட்கூலி விகிதம், 1955-59*

வருடம்†	1955	1956	1957	1958	1959
விவசாயத் தொழிலாளர் கூலி ரூ.	1·27	1·27	1·52	1·69	1·89
1955-ல் இருந்ததைவிடச் சதவீத உயர்வு	—	—	20	33	49
மற்ற விவசாயத் தொழில் கூலி ரூ.	0·94	0·94	1·19	1·35	1·58
1955-ல் இருந்ததைவிடச் சதவீத உயர்வு	—	—	27	44	683
திறமையுள்ள தொழிலாளர் கூலி ரூ.	2·87	2·87	3·27	3·57	3·3
1955-ல் இருந்ததைவிடச் சதவீத உயர்வு	—	—	14	24	16

* ஜுனாகாட், பஜ்வா, ராஷின் கிராமங்களுக்குச் சராசரி.

† ஒவ்வோராண்டும் மார்ச்சு மாதத்திற்குரிய விவரங்கள்.

(ஆதாரம்: 'Labour Gazette,' Government of Bombay.)

உண்மைச் செலவு

1939 முதல் போர் முடிவில் ரூபாயின் வாங்கும் மதிப்பு 60 சதவீதமும், போருக்குப் பிறகு 1951-1952-ல் 75 சதவீதமும் குறைந்தது. பண வருமானம் விலைகளைவிடக் குறைவாயிருந்த

தால், போர்க்காலத்தில் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் வருமானத்தில் வாங்கும் திறன் (ஆரோக்கியம், திறமை ஆகிய வற்றிற்காக வாழ்க்கைத் தேவைகளை வாங்குவதற்கு) 25 சத வீதத்திற்குமேல் குறைந்துவிட்டது; 1952 வரையில் 10 முதல் 20 சதவீதம்வரையில் குறைவாகவே இருந்தது. விலையுயர் வினால் தொழிலாளர் வகுப்பார் தமக்குத் தேவையான பொருள் களைத் துய்ப்பதில் எவ்வளவு குறைத்துக்கொண்டார்கள் என்று மதிப்பிடுவது கடினம். எனினும், இந்த வகுப்பார் எவ்வளவு துன்பமடைந்தார்கள் என்பதைப் போர்க் காலத்திலும் போருக் குப் பிறகும் உணவு, உடைபோன்ற இன்றியமையாத பொருள் களைச், சராசரியாகத் துய்த்த அளவுபற்றிச் சில புள்ளிவிவரங் களிலிருந்து ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். 1939-40-ல் நாட்டில் தலா உபயோகிக்கக்கூடிய துணியின் அளவு 16·67 கஜமாயிருந்து 1942-43-ல் 12 கஜமாகக் குறைந்தது. உற்பத்தி யில் ஆறில் ஒரு பங்கு இராணுவத் தேவைக்கு முதலிடம் கொடுத்து ஒதுக்கப்பட்டதால், மக்கள் துய்ப்புக்குக் கிடைத்தது மேலும் குறைவாகத்தான் இருந்திருக்கவேண்டும். அண்மைக் காலத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுப் போருக்கு முன்பிருந்த துய்ப்பளவை எட்டியுள்ளதாகத் தெரிகிறது உணவுப் பொருள் களைப் பொறுத்தவரையில், ஐக்கிய நாடுகளின் சமூகக் குழு

அட்டவணை 69

போருக்குமுன்பும் அண்மைக் காலத்திலும் இந்தியாவில் தலா உணவு அளிப்பு

(தலா ஆண்டுக்குக் கிலோ கிராம்களில்)

	1934–38	1949–50
அரிசி, கோதுமை போன்றவை	143	119
மாவுள்ள கிழங்குகள்	8	7
பருப்புகள்	22	20
சர்க்கரை	14	13
கொழுப்புகள்	3	3
பழங்கள்	26	25
காய்கறிகள்	25	16
இறைச்சி	3	2
முட்டைகள்	0·4	0·1
மீன்	1	2
பால்	65	45

(ஆதாரம்: 'Preliminary Report on the World Social Situation, Food and Nutrition,' United Nations Social Commission).

ஆராய்ந்து, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக்கு அளித்த அறிக்கை ஒன்றில், 1949–50-ல் இந்தியாவில் தலா உணவு அளிப்பு 1934–38-ல் இருந்ததைவிட மிகக் குறைவு என்று தெரிகிறது. இது அட்டவணை 69-ல் காட்டப்பட்டுள்ளது.

இதுபோலவே, இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் 1950–51-ல் தலா உணவு அளிப்பின் கலோரி போருக்குமுன் இருந்த 1970-லிருந்து 1570–க்குக் குறைந்துவிட்டது என்று உணவு, விவசாயக் குழு (F.A.O.) மதிப்பிட்டுள்ளது.[1]

நடுத்தர வகுப்பினருடைய வாழ்க்கைச் செலவும் தொழிலாளருடைய வாழ்க்கைச் செலவும் ஒப்புநோக்குதல்

பொது விலையளவில் உண்டாகும் உயர்வு வெவ்வேறு வருமானமுடையவர்களை வெவ்வேறு விதமாகப் பாதிக்கிறது. பண வருமானங்கள் எந்த அளவுக்கு உயர்ந்துள்ளன அல்லது உயரவில்லையென்பதைப் பொறுத்தும், சமூகத்தில் ஒவ்வொரு நிலையில் உள்ளவர்களும் துய்க்கும் பொருள்களின் விலைகளைப் பொறுத்தும் இதனால் உண்டாகும் துன்பத்தின் அளவு இருக்கும். இந்தியாவில் நடுத்தர வகுப்பார் துய்க்கும் பொருள்கள் தொழிலாளர் துய்க்கும் பொருள்களினின்று அதிகம் வேறுபடுவதில்லை; ஆனால், இவர்களின் வருமானம் தொழிலாளரின் வருமானத்தைப்போல் அவ்வளவு நெகிழ்ச்சியுடையதும் அன்று. அரசாங்கத்திலும் மற்றப் பணித்துறைகளிலும் வேலைபார்க்கும் பெரும்பாலான மக்கள் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களின் சம்பளம் போர் தொடங்கியதுமுதல் சிறிதளவே உயர்ந்திருக்கிறது. அன்றியும், அவர்கள் கிராக்கிப்படி, போனஸ் என்று வாங்கும் தொகைகள் வாழ்க்கைச் செலவு உயர்ந்திருப்பதற்குச் சிறிதும் பொருத்தமற்றவையாய் உள்ளன.

கல்கத்தா, அசன்ஸால் ஆகிய இரண்டிடங்களுக்கு நடுத்தர வகுப்பாரின் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்களை, 1949ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு இந்திய அரசாங்கத்தின் தொழிலாளர் தகவல் நிலையம் அளித்திருக்கிறது. 1949-ல் இங்கிலாந்திற்குப் பேராசிரியர் டட்லி சியர்ஸ் (Dudley Seers) என்பவர் கையாண்ட முறையைப் பயன்படுத்தி, இந்த வருமான முள்ள வகுப்பாரைத் தொழிலாளருடன் ஒப்பிட்டுப் பார்த்து,

[1] Records and Statistics, 'Eastern Economist', October 1953, p. 14.

விலைமாறுதல்களால் இவர்கள் எப்படிப் பாதிக்கப்படுகிறார்கள் என்று அறியலாம். அவர் கூறும் முறைப்படி, ஆண்டுதோறும் விலைகள் மாறுவதால் உண்டாகும் 'முன்னேற்ற விளைவைக்' (progressive effect) கீழ்வரும் விகிதத்தின்படி அளக்கலாம் :

$$\frac{\text{T வருடத்தில் நடுத்தர வகுப்பாரின் வாழ்க்கைச் செலவு}}{\text{T-1 வருடத்தில் நடுத்தர வகுப்பாரின் வாழ்க்கைச் செலவு}} \div \frac{\text{T வருடத்தில் தொழிலாளரின் வாழ்க்கைச் செலவு}}{\text{T-1 வருடத்தில் தொழிலாளரின் வாழ்க்கைச் செலவு}}$$

ஒரு குறிப்பிட்ட விலை மாறுதலால் நடுத்தர வகுப்பாரைவிடத் தொழிலாளர் எவ்வளவு அதிகமான நன்மை பெறுவார்களோ, அதுவே 'முன்னேற்ற விளைவு' எனப்படும். விகிதம் அதிகமானால் முன்னேற்ற விளைவு அதிகம் என்று பொருள்.[1] 1951–59 ஆம் ஆண்டுகளுக்குக் கல்கத்தாவிற்கு இந்தச் சூத்திரத்தின்படி கீழ்க்கண்ட முடிவுகள் கிடைத்துள்ளன :

வருடம்	1950	1951	1952	1953	1954	1955	1956	1957	1958	1959
கல்கத்தாவிற்கு நடுத்தர வகுப்பாரின் சுயப்புப் பொருள் விலைக குறியீட்டெண்	100	102	97	96	94	92	99	105	108	107*

வருடம்	1951–52	1952–53	1953–54	1954–55	1955–56	1956–57	1957–58	1958–59	1959–60
கல்கத்தாவிற்குத் தொழிலாளரின் சுயப்புப்பொருள் விலைக் குறியீட்டெண்†	106	100	99	94	93	102	105	109	112

வருடம்	1951–52	1952–53	1953–54	1954–55	1955–56	1956–57	1957–58	1958–59
முன்னேற்ற விளைவு	1·01	0·99	1·03	0·99	0·98	1·03	0·99	0·96

* ஜூன்று மாதங்களுக்குச் சராசரி.

† விவரங்கள் நிதியாண்டுகளுக்குரியவை.

[1] Dudley Seers, 'The Cost of Living, 1938-48', Bulletin of the Ins titute of Statistics, Oxford, May 1949.

மேலே உள்ள எண்களிலிருந்து, 1953–54 வரையில் விலைகளின் போக்கு, நடுத்தர வகுப்பாரைவிடத் தொழிலாளர்களுக்கு மொத்தத்தில் ஓரளவு அநுகூலமாக இருந்தது. 1951–52-ல் உண்டான பின்னிறக்கமும், 1953–54-ல் உணவு விலைகளில் உண்டான வீழ்ச்சியும் நடுத்தர வகுப்பாரைவிடத் தொழிலாளர்களுக்கு அதிக நன்மையளித்தன. 1954–55 முதல் விலையளவில், குறிப்பாக உணவு விலைகளில் உண்டான படிப்படியான உயர்வு தொழிலாளர்களைப் பிரதிகூலமாகப் பாதித்துள்ளது. எனினும், கடைசி நான்கு அல்லது ஐந்தாண்டுகளில் முன்னேற்ற விளைவு காட்டுவதுபோல நடுத்தர வகுப்பார் தம் வாழ்க்கைத் தரத்தில் அதிகம் உயர்ந்தார்களா என்பது ஐயமே. ஏனெனின், தொழிலாளர்களைவிட நடுத்தர வகுப்பாரின் வருமானம் அவ்வளவு நெகிழ்ந்துகொடுக்கவில்லை. ஆகவே, கீழ்நடுத்தர வகுப்பார் தாம் துய்க்கும் பொருள்களின் அளவைக் குறைத்தோ, அவற்றிற்குப் பதில் வேறு பொருள்களைத் துய்த்தோ தம் வாழ்க்கைத் தரத்தை மிகவும் குறைத்துக்கொண்டிருப்பர். மேலே அட்டவணையில் உள்ள எண்கள் 1949-க்குப் பிந்திய காலத்திற்குரியவை. முந்திய வருடங்களில், நடுத்தர வகுப்பாரின் நிலை மேலும் மோசமாக இருந்திருக்கும். 'ஈஸ்டர்ன் எக்கானமிஸ்ட்' கணித்துள்ளபடி, இந்தியாவில் நடுத்தர வகுப்பாரின் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் (1939 ஆகஸ்டு = 100) 1947-க்கும் 1949-க்கும் இடையில் 304·5 பாயின்டுகளிலிருந்து 369·8 பாயின்டுகளுக்கு உயர்ந்தது. ஆனால், அதே காலத்தில் பம்பாய்த் தொழிலாளரின் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் 265·7-லிருந்து 292·4 பாயின்டுகளுக்கு உயர்ந்தது. அதாவது, தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவு இந்த மூன்று வருடங்களில் 10 சதவீதம் உயர்ந்தது; ஆனால், நடுத்தர வகுப்பாரின் வாழ்க்கைச் செலவு 21 சதவீதம் உயர்ந்தது. இந்த விவரங்களின் அடிப்படையில், 1940–50-க்கிடையில் உள்ள 10 ஆண்டுகளில் நடுத்தரக் குடும்பத்தின் வருமானம் 3 மடங்குக்குக் குறைவாக உயர்ந்திருந்தால், அதனால் செலவு கால்பங்கு குறைந்திருக்கும் என்று கூறப்படுகிறது. சேமிப்பில் மிகவும் குறைவு, துணிகளுக்கான செலவில் குறைவு, பலவகைச் செலவுகளில் குறைவு ஆகிய விதங்களில் செலவு வேண்டிய அளவு குறைக்கப்பட்டது. இவற்றால் எல்லாம், நடுத்தர வகுப்பில் கீழே உள்ளவர்கள், தொழிலாளர் வகுப்பிற்கு மாறும்படியாகச் சமூகத்தில் ஒரு புதிய வகையீடு உண்டாயிருக்க வேண்டும்.[1]

1 'Eastern Economist', 16th March 1951, pp. 443, 444.

இந்திய வாழ்க்கைச் செலவின் அண்மைக் காலப் போக்குகளை மற்ற நாடுகளுடன் ஒப்புநோக்குதல்

மற்ற நாடுகளுடன் ஒப்புநோக்கும்போது, இந்தியாவின் போர்க்காலத்து வாழ்க்கைச் செலவில் அதிக உயர்வு உண்டாயிற்று. துய்ப்புப் பொருள்களின் அளிப்பில் கட்டுப்பாடும், விலையுயர்வு கட்டுப்படுத்தாமல் இருந்ததும் இதற்குக் காரணங்களாகும். அட்டவணை 70-ல், இவ் விஷயத்தில் இந்தியாவின் நிலை மற்ற நாடுகளின் நிலையுடன் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 70

போர்க்காலத்தில் இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் வாழ்க்கைச் செலவுப் போக்குகள்

(அடிப்படை: 1937 = 100)

வருடம்	ஆஸ்திரேலியா	கனடா	இங்கிலாந்து	அமெரிக்கா	இந்தியா*
1939	105	100	104	97	—
1940	110	104	121	98	105
1941	115	110	133	103	109
1942	125	116	143	115	122
1943	129	117	147	120	166
1944	129	117	151	122	226
1945	129	118	152	128	225

* பம்பாய்த் தொழிலாளர் அடிப்படை: 1939 ஆகஸ்டு = 100. எண்கள் 1939–40-ல் தொடங்கிய நிதியாண்டுக்குரியவை—105.

(ஆதாரம்: 'International Financial Statistics,' issued by the I.M.F.)

போரின் இறுதியில், இந்தியாவில் வாழ்க்கைச் செலவு 125 சதவீதம் உயர்ந்துவிட்டது; ஆனால், இங்கிலாந்தில் 52 சதவீதமும், ஆஸ்திரேலியாவில் 29 சதவீதமும், அமெரிக்காவில் 28 சதவீதமும், கனடாவில் 18 சதவீதமும்தான் உயர்ந்தது. மேலும், மற்ற நாடுகளில் படிப்படியாக உயர்வு காணப்பட்டது. ஆனால், இந்தியாவில் 1943, 1944-ல் திடீரென்று உயர்வு ஏற்பட்டது. இந்த இரண்டு ஆண்டுகளில், போர்க்காலத்தில் உண்டான மொத்த உயர்வில் ஐந்தில் நான்கு பங்கு உண்டாயிற்று.

1951–55 ஆண்டுகளில் இந்தியாவில் வாழ்க்கைச் செலவு ஏறக் குறைய நிலையாக இருந்தது. ஏனெனில், தொழிலாளரின்

உண்மை வருமானத்தில் உயர்வு இருந்தது. இதற்குக் காரணம் உணவு நிலை சீர்திருந்தியதும், அதிகத் தொழில் உற்பத்தியும், அதிகத் துய்ப்புப் பொருள்கள் அளிக்கப்பட்டதும், பண வருமானத்தில் ஒரு நிலையான அளவும் ஆகும். மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டால், இக் காலத்தில் இந்தியாவின் நிலை அநுகூலமாக

அட்டவணை 71

இந்தியாவிற்கும் மற்ற நாடுகளுக்கும் துய்ப்போர் விலைக் குறியீட்டெண், 1950–59

(அடிப்படை : 1949 = 100)

வருடம்	இந்தியா	இங்கிலாந்து	அமெரிக்கா	கனடா	ஆஸ்திரேலியா
1950	101	103	101	103	110
1951	105	112	109	114	133
1952	103	123	111	117	155
1953	106	127	112	116	162
1954	101	129	113	116	164
1955	96	135	112	116	169
1956	105	141	114	118	179
1957	111	147	118	122	183
1958	116	151	121	125	187
1959	121	152	123	127	191

* முதல் மூன்று காலபகுதிகளின் சராசரி.

(ஆதாரம் : Indian Labour Journal.)

இருந்தது. 1955-க்குமுன் 1953-ல் உச்ச அளவு இருந்தது. ஆனால், அடுத்த இரண்டாண்டுகளில் குறைவு காணப்பட்டது. இதற்கு மாறுக இங்கிலாந்தில் இது உயர்ந்தது; ஆனால், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா ஆகியவற்றில் இந்தியாவைவிட இதன் அளவு உயர்வாக இருந்தது. எல்லா நாடுகளிலும் 1953 வரை பொதுவான உயர்வுக்குக் காரணம் கொரியப் போரும், அதன் பின்விளைவுகளும், மேல்நாடுகளில் இருப்புச் சேர்க்கும் திட்டமும்தாம். ஆனால், 1953-க்குப்பின் இரண்டாண்டுகளில் இந்தியாவில் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் பின்னிட்டது. ஆனால், மற்ற நாடுகளில் மேலும் உயர்ந்தது. இதற்கு ஓரளவு காரணம், கொரியப்போர் ஊகவாணிகச் சக்திகளைக் கட்டவிழ்த்து விட்டு, உலகத்தின் பல பகுதிகளில் இருப்புச் சேர்க்கும் போக்குகளைத் தூண்டியபோது இந்திய அரசாங்கம் விலையளவைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டது தான். ஆனால், நம் நாட்டில் பொருள் அளிப்புநிலை சீர்திருந்தியது

தான் இந்த இறக்கத்திற்கு முக்கியக் காரணம் என்று கூறவேண்டும். இதற்கு மாறுக, இங்கிலாந்தில் மேலும் விலை ஏறியதும், அமெரிக்காவிலும் கனடாவிலும் இன்னும் அதிக அளவாக இருந்ததும் இந்த நாடுகளில் படைப் பெருக்கத் திட்டங்களால் உண்டான பணவீக்க நிலை குறையவில்லை என்பதைக் காட்டு காட்டுகிறது.

ஆனால், 1955-க்குப்பிறகு உள்ள போக்குகளைப்பற்றி இவ்வாறு கூறமுடியாது. நாம் ஒப்பிடும் மற்ற நாடுகளில் வாழ்க்கைச் செலவு தொடர்ந்து மேல்நோக்கியே சென்றாலும், இந்தியாவில் உயர்வு விகிதத்தில் மிகுந்த வேகவளர்ச்சி காணப்பட்டது. 1955 முதல் 1959 வரையில் இங்கிலாந்திலும் ஆஸ்திரேலியாவிலும் வாழ்க்கைச் செலவு 13 சதவீதம் அதிகமாயிற்று. ஆனால், இந்தியாவில் அதே ஆண்டுகளில் 26 சதவீதம் உயர்வு காணப்பட்டது.

11. விலைக் கட்டுப்பாடு

இந்தியாவில் 1939 முதல் விலைப்போக்குகளின் பொதுவான தன்மையையும், விலைகளைப் பாதித்த அம்சங்களையும், துய்ப்பையும் வாழ்க்கைச் செலவையும் விலை மாற்றங்கள் எப்படிப் பாதித்தன என்பதையும் முந்திய அத்தியாயங்களில் ஆராய்ந்தோம். நம் ஆராய்ச்சிக்குட்பட்ட காலத்தின் பெரும் பகுதியில், விலை இயக்கத்தின் ஒரு சிறப்பும் வெளிப்படையுமான அம்சம் என்ன வென்றால், அதன் மேல்நோக்கம்தான். 1951-ன் பிற்பகுதியில் உண்டான பெரிய சரிவு, முக்கியமாக வெளிக்காரணங்களால் தொடங்கப்பட்டுப் பிறகு உள்நாட்டில் உற்பத்தியும் அளிப்பும் முன்னேறியதால வலுப்பெற்றது. அண்மையில், பொது விலை யளவில் மீண்டும் உயர்வு காணப்பட்டுள்ளது.

தேவையும் அளிப்பும் ஆகிய அடிப்படைக் காரணிகளைக் கொண்டுதான் விலையளவில் மாற்றங்களை விளக்கவேண்டும். 1951 வரையில் பொதுவான உயர்வுக்குக் காரணம், நிகரத் தேவையில் உயர்வும் அளிப்பில் குறைவும் ஆகியவையே. போர்க்காலத்தில் போர் செய்வதற்காக அரசாங்கத்தின் தேவை அளவுகடந்து பெருகிற்று. அரசாங்கம் அதிகமாகச் செலவழித்ததால் பணத்தின் அளவில் பெருக்கம் உண்டாயிற்று. இதனால் சமூகத்திலிருந்து நிகரத் தேவை அதிகமாயிற்று. போருக்குப் பிந்திய ஆண்டுகளின் அரசியல் நிலையால், அரசாங்கத்தின் செலவீட்டளவை அதிகமாகக் குறைக்க முடியவில்லை. அண்மைக் காலத்தில் பொருளாதார வளர்ச்சி கருதி, அரசாங்கம் மேலும் அதிகம் செலவு செய்யவேண்டியதாயிற்று. அளிப்பைப் பொறுத்து அதில் குறைவு உண்டானதற்குக் காரணம், போரின் தேவையும், போர்க் காரணமாக மக்கள் துய்ப்புக்கு வேண்டிய பொருள்களின் அளவு கட்டுப்படுத்தப்பட்டதும், போர்க்காலத்தில் கப்பல் போக்குவரத்துத் துண்டித்திருந்ததால் இறக்குமதி குறைந்ததும், விவசாய உற்பத்தி குறையும்படியாகக் காலநிலை பாதகமாக மாறியதும், பிரிவினையால் நாட்டின்

பரப்பு குறைந்ததும், அரசாங்கத்தின் வரிக்கொள்கையும் ஆகும். தொழில் உற்பத்தி, கச்சாப் பொருள் பற்றாக்குறையாலும், முதலினச் சாதனங்கள் இன்மையாலும், தொழில்நுட்பம் அறிந்தவர்கள் போதிய அளவு இன்மையாலும், அரசாங்கத்தின் வரிக் கொள்கையாலும், தொழிலாளர் பிரச்சினைகள் பொதுவாகத் தீராமல் இருந்ததாலும் பாதிக்கப்பட்டது. கடந்து வசதிச் சங்கடங்களால் ஏற்பட்ட ஒழுங்கற்ற பங்கீட்டு முறையும், இராச்சியங்களுக்கிடையே பொறுமையும், துய்ப்புப் பொருள்களையும் தொழில் கச்சாப் பொருள்களையும் ஊகவாணிபத்திற்காகப் பதுக்கிவைத்ததும் அளிப்புப் பிரச்சினையை மேலும் கடுமையாக்கின.

எனினும், பண அளிப்பில் மாறுதல்களும், நிகரத் தேவையும், அளிப்புநிலையில் மாற்றங்களும், இக் காலத்தில் விலை ஏற்ற இறக்கங்களை விளக்குவதற்குப் போதிய காரணங்களாகா. ஏனெனின், இந்தக் காலத்தில் தேவை, அளிப்பு ஆகிய சக்திகள் தாராளமாக இயங்க இடமளிக்கப்படவில்லை. போர் தொடங்கியவுடன் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் தேவையை ஒழுங்குபடுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரையில் ஓரளவு வலிமை குன்றிய நிலையிலேனும் தொடர்ந்து இருந்துவருகின்றன. விலைகளின் பொதுவான போக்கும், குறிப்பிட்ட பொருள்களின் விலைகளில் உண்டாகும் மாறுதல்களும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பயனுடையவையா இல்லையா என்பதைக் காட்டும். எப்படியெனின், அளிப்புநிலை, பணத்தின் நிலை, தேவையின் நிலை ஆகியவற்றுல் விலைகள் எப்படி இறங்கவேண்டுமோ அப்படியின்றி வேறுவிதமாக இயங்கத் தொடங்கும். போர் தொடங்கியதுமுதல் 1951 வரையில் இந்தக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் விலைகளை இறக்கிவைப்பதில் எவ்வளவு பயனுடையவையாய் இருந்தனவென்பதை ஆராய்வதுதான் இந்த அத்தியாயத்தின் நோக்கம்.

விலைக்கட்டுப்பாட்டின் தத்துவமும் நுட்பமும்

அரசாங்கம் விலைகளைக் குறைப்பதற்கு எடுக்கும் நேரடியான நடவடிக்கைகளைமட்டுமன்றி, விலைகள் திடீரென்று உயர்வதையும் அதிகமாக விழுவதையும் தடுப்பதற்கான மறைமுக நடவடிக்கைகளையும் 'விலைக் கட்டுப்பாடு' என்னும் தொடரின் விரிந்த பொருளில் வழங்கும். ஆகவே, இதன் நோக்கம் ஏறக்குறைய நிலையான விலையளவை வைத்திருப்பதே. கொள்கையளவில் சாதாரண காலங்களில், கட்டுப்பாடற்ற தொழில்கள் இயங்கும் சுதந்திரமான அமைப்பில், போட்டியிடும் தொழில்களுக்

கிடையே உற்பத்திச் சாதனங்களை விலையமைப்பானது சரியான முறையில் பகிர்ந்தளிக்கும். ஆனால், நிலையான பொருளாதார வளர்ச்சி உண்டாவதோடு, துய்ப்போருக்குச் செய்பொருள்களைத் திருப்தியான முறையில் பங்கிடு செய்வதற்குரிய கருவியாகவும் அது அமைகிறது. உண்மையில், விலையமைப்பு கட்டுப்படுத்தப் படாமல் இயங்கினால் திருப்திகரமாக இருப்பதில்லை. ஆகவே, ஏதாவதொருவிதமான கட்டுப்பாடு அல்லது ஒழுங்கு வேண்டி யிருக்கிறது. குறிப்பாக அசாதாரணமான காலங்களிலும். ஓரளவு சாதாரணமான காலங்களிலும்கூட இது தேவையா கிறது. போருக்காகக் கிடைக்கக்கூடிய சாதனங்களையெல்லாம் அரசாங்கம் திரட்டவேண்டிய முக்கிய நோக்கத்துடன் போர்க் காலத்தில் கட்டுப்பாடற்ற விலையமைப்பை நிறுத்திவைக்க வேண்டிய அத்தியாவசிய நிலை ஏற்படுகிறது. குறிப்பிட்ட அளவு சாதனங்களே இருக்கும்போது, அந்த நிலையில் மக்கள் துய்ப்புக்கு வேண்டிய பொருள்களைப் போருக்காகத் திருப்ப வேண்டியுள்ளது. அரசாங்கம் பண அளிப்பின்மீது தனக்குள்ள அதிகாரத்தினால், சாதாரண விலையமைப்பைக் கொண்டே தனக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் பெறலாம். ஆனால், உண்மையான சாதனங்களைப் பெருக்குவதில் துன்பம் இருக்கும் போது அரசாங்கம் அதிகம் செலவழித்தால், பணவீக்க விலை தவிர்க்கமுடியாமல் வந்துவிடும். அதனால் அரசாங்கம் ஒரே அளவு பொருள்களைப் பெறுவதற்கு மேலும் மேலும் அதிகப் பணத்தைச் செலவிடவேண்டிவரும். அன்றியும், இந்தக் கொள் கையால் சமூகத்தில் மேலும் அதிக வித்தியாசங்கள் உண்டாகி, அதனால் விலையமைப்பும் நீதியற்றது என்று கருதும்படி ஆகி விடும்.

சாதாரணமான காலங்களில்கூட, கட்டுப்பாடற்ற தொழில் கள் இயங்கும் பொருளாதார அமைப்பில் இயற்கையாக அமைந் துள்ள தீமைகளால் விலையமைப்பைக் கட்டுப்படுத்தாமல் விட்டால் சமூகத்திற்கு அதிக நன்மை உண்டாகுமா என்பது ஐயமே. கட்டுப்பாடற்ற தொழில்கள் இயங்கும் பொருளாதார அமைப்பின் தனி இயல்புகளான போட்டியால் உண்டாகும் அழிவு, வருமானத்தில் அதிக ஏற்றத்தாழ்வுகள், பெரிய அளவில் வேலை யின்மை ஆகியவை தோன்றுதவாறு ஏதேனும் ஒருவகையான கட்டுப்பாடு அல்லது ஒழுங்கு செய்யப்படவேண்டும் என்பது தெளிவு. பொருள்களுக்குப் போட்டி அடிப்படையில் தேவை உண்டாகும்போது வருமானத்திலும் செல்வத்திலும் ஏற்றத் தாழ்வு இருந்தால், சிலருக்கே அதனால் நன்மை ஏற்படுகிறது. மேலும், இதனால் மக்கள் நலத்திற்கு அதிகம் தேவையில்லாத ஆடம்பரப் பொருள்கள்போன்ற சில பொருள்களின் உற்பத்

திக்கு இது வழிகோலுகிறது. ஆகவே, அதிகபட்ச சமூக நலன் உண்டாகவேண்டுமென்ற பொருளாதாரக் குறிக்கோளையடைவ தற்குக் கட்டுப்பாடற்ற தொழில் முறையைவிட திட்டமிட்ட கட்டுப்பாடுகளும் ஒழுங்கும் உள்ள ஒரு முறையே மேலானது.

எப்படி இருப்பினும், அரசாங்கம் பெரிய அளவு நாட்டின் சாதனங்களைத் திரட்டி நாட்டின் பொருளாதாரத்தில் அதிகமாக வும் விரைவாகவும் மாற்றங்களை உண்டாக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், அல்லது விரைவாக விலைகள் இறங்கி மந்தநிலை உண்டாகும் அறிகுறி காணப்படும்போது இவ்வாறு ஏற்படலாம். சாதாரண விலையமைப்பே போதும் என்று நம்பியிருப்பது நியாயமன்று. போரினால் நாட்டுப் பொருளாதாரம் சிதறும் போது இத்தகைய நிலை உண்டாகலாம்; அல்லது சாதாரண அமைதிக் காலத்தில் அரசாங்கம் விரைவாகப் பொருளாதார வளர்ச்சியை உண்டாக்க முயலும்போது இந் நிலை ஏற்படலாம். அப்போது உண்மைச் சாதனங்களை ஒரு பொது அமைப்பின்கீழ் ஒன்றுகத் திரட்டிப் பகுதிபகுதியாகப் பிரித்து ஒதுக்கவேண்டி யிருக்கும். அயல் நாட்டுக் கொடுப்பல்நிலையில் பல நாடுகளுக் கிடையே நிலைமை சரியில்லாவிட்டால், அப்போது இந்த நிலை ஏற்படலாம். விலைகள் அசாதாரணமாக இயங்குவது பொரு ளாதார நிலை சரியில்லை என்பதற்கு அறிகுறியாகும். மக்களின் உண்மை வருமானத்தில் அதிக வித்தியாசங்கள் உண்டாகாமல் தடுப்பதற்கும், பொதுவாகத் துய்ப்போர் நலனைப் பாது காப்பதற்கும் பணவீக்க விலையுயர்வைத் தடுப்பது அவசியமாகும். அதுபோலவே திடீரென்று விலைகளின் இறங்குமுகம் காணுவதை யும் நிறுத்தி, உற்பத்தி செய்வோரையும் நாட்டுப் பொருளாதா ரத்தையும் பாதுகாக்கவேண்டும்.

விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நேர்முகமானவை யாகவோ மறைமுகமானவையாகவோ இருக்கலாம். நேர்முக மான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மூன்று வகைப்படும்: (அ) விலை முடக்கம், அதாவது, விலைகளை அவை உள்ள நிலையி லேயே நிறுத்திவைத்தல். இது சாதாரணமாக விலைக் கட்டுப் பாட்டுக் கொள்கையில் முதல் படியாகும். விலையேற்றத்தை விரைவில் நிறுத்தவும், பொது விலையளவைப் பாதிக்கும் பல அம் சங்களையும் விரிவாக ஆராய்ந்து ஒருவிஞ்ஞான முறையான கொள் கையை வகுப்பதற்கும் அரசாங்கத்திற்கு அவகாசம் இல்லாத போது இந்தத் தற்காலிக ஏற்பாடு செய்யப்படும். சென்ற மகாயுத்தம் ஆரம்பித்த காலத்தில், இந்தியா உட்படப் பல நாடு கள் பல பொருள்கள் விஷயத்தில் இவ்வாறு செய்தன. இந்த நடவடிக்கை செயல்படுத்துவதற்கு எளிதாக இருப்பதோடு

உடனடியாகப் பலனளிக்கக்கூடியது. ஆனால், இதில் பெரிய குறைகள் உள்ளன. ஏனெனின், இது பொருளாதாரத்தின் உயிர்த் துடிப்புத் தன்மையைப் புறக்கணித்து, பருவகால அல்லது தற்காலிக அம்சங்களால் உண்டாகும் ஒரு விலையமைப்பை நிலையாக இருக்கும்படி செய்துவிடுகிறது. (ஆ) இரண்டாவது முறை, செலவுடன் இலாபத்தைக் கூட்டும் முறை. இதன்படி, உற்பத்திச் செலவுகள் கணக்கிடப்பட்டு, உற்பத்தி செய்பவருக்குத் தக்க இலாபம் கிடைக்கும்படி செய்யப்படும். இது நெகிழ்ச்சி பெற்றிருப்பதே இதன் முக்கியச் சிறப்பாகும். ஆனால், உற்பத்தியாளர்களின் நலனைப் பாதுகாப்பதில், இது துய்ப்போரின் நலனைக் காற்றில் பறக்கவிட்டுவிடுகிறது. ஏனெனின், இது விலை ஏறும் வேகத்தைத்தான் குறைக்கிறதேயன்றி அதைத் திறமையாகக் கட்டுப்படுத்துவதில்லை. இதைச் செயல்படுத்துவதும் கடினம். ஏனெனின், வெவ்வேறு தொழில்களில் வெவ்வேறு பொருள்களின் உற்பத்திச் செலவைக் கணக்கிடுவதும், அதற்கேற்ப விலைகளைச் சரிசெய்வதும் முடியாத காரியம். (இ) கடைசியாக, நிலையான உச்சவரம்பு முறை ஒன்றுண்டு. இதன்படி, பல்வேறு பொருள்களுக்கு விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் உச்ச விலையை நிர்ணயிப்பார்கள். உச்ச விலையை நிர்ணயிக்கும்போது, உற்பத்திச் செலவும் பொருள்களுக்குள்ள தேவையின் தன்மையும் கருத்தில் கொள்ளப்படும். இது துய்ப்போரின் சக்திக்குமேல் போகாமலும், உற்பத்தியாளருக்கு இலாபகரமாக இல்லாமலும் இருக்கும்படி நியாயமாக இருக்கவேண்டும். உச்ச வரம்பை முடிவு செய்துவிட்டால், அதிகாரிகள் முடிந்தவரையில் அவ் வரம்பைக் கடைப்பிடிக்கவேண்டும். உற்பத்திச் செலவு அதிகமாகி அநீதி ஏற்படும் என்ற நிலையில்தான் அவர்கள் அவ் விலையை உயர்த்தவேண்டும். உற்பத்திச் செலவுடன் இலாபத்தைக் கூட்டும் முறையைவிட இது விலையமைப்பை அதிக நெகிழ்ச்சியற்றதாகச் செய்வதால், விலையளவில் அதிக நிலைப்புத் தன்மையை உண்டாக்கும் ஆற்றல் இதற்குண்டு. அன்றியும், இது உற்பத்தியாளர்கள் செலவைக் குறைக்கும்படியாகவும் தூண்டும். இந்த முறையிலும் குறைகள் இல்லாமல் இல்லை. நாளடைவில் உச்ச விலைதான் நியாயமான அல்லது சரியான விலையென்று வியாபாரிகள் நம்பி, விலைகளைச் செயற்கையாக அந்த நிலையிலேயே வைத்திருப்பார்கள். அதிக விலைக்குக் காரணமாகிய அளிப்புநிலை மாறியபோதும் அவர்கள் இப்படிச் செய்வார்கள்[1]. மேலும், எல்லா விலைநிர்ணய முறைகளைப் போலவே, உச்ச விலை முறையும் ஒரே பொருளை உற்பத்தி செய்யும் பல தொழில்களின் திறமையைப் புறக்கணித்து

[1] F. R. J. Jerris, 'Price Control', 1949, p. 98.

அந்நியை இழைத்துவிடுகிறது. அதிகத் திறமையுள்ள தொழில்களின் உற்பத்திச் செலவை மனத்தில் கொண்டு உச்ச விலையை நிர்ணயித்தால், இறுதிநிலையில் உள்ள பல தொழில்கள் அழிந்து அளிப்புநிலை சீர்குலைந்துவிடும். சாதாரணத் திறமையுள்ள தொழில்களைக் கருதி விலைநிர்ணயம் செய்தால், அப்போதும் இறுதிநிலையில் உள்ள தொழில்கள் அழிந்துவிடும் நிலை ஏற்படுகிறது. ஆகவே, அளிப்புநிலை சீர்குலையாமல் இருக்கவேண்டுமானால், திறமை குறைவான தொழில்களுக்கு உதவிக் கொடை அளிக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இது ஒரு சமூகத் தீமையாக மாறிவிடுகிறது. ஏனெனின், இது திறமையற்ற தொழில்களுக்குச் செயற்கையான ஆதரவளிப்பதாகும். இத்தகைய ஆதரவில்லாவிட்டால், அவை பொருளாதார முன்னேற்றத்தில் தாமாகவே அழிந்துவிடும்.

இந்த நேர்முக விலைக் கட்டுப்பாட்டு முறைகளுக்கு உதவியாகச் சாதாரணமாகச் சில மறைமுகக் கட்டுப்பாட்டு முறைகளையும் பயன்படுத்துவார்கள். நிருவாகி நிர்ணயித்த விலை பொருளாதார ரீதியில் பயனுள்ளதாக இருப்பதற்கு அடிப்படையான அளிப்புச் சக்திகளையும் தேவைச் சக்திகளையும் தக்கபடி மாற்றிக் கொள்வதற்கு உதவியாக இந்த விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இருக்கும். பண அளிப்பைக் கட்டுப்படுத்துதல், செலாவணிப் பெருக்கத்தைக் கட்டுபடுத்துதல், வரிவிதிப்பினாலும் கடன் வாங்குதலினாலும் அதிக வாங்குந்திறனை ஈர்த்துக் கொள்ளுதல் (இது நிகரத் தேவையைக் குறைக்கும்), உள்நாட்டில் உற்பத்தியைப் பெருக்கும் நடவடிக்கைகள், ஏற்றுமதிகளைக் கட்டுப்படுத்தியும் இறக்குமதிகளை ஊக்கியும் அளிப்பு நிலையை உறுதிப்படுத்துதல், சாதனங்களைச் சீரான முறையில் பகிர்ந்து ஒதுக்கீடு செய்தல், பங்கீட்டு முறையினால் பொருள்களைப் பகிர்ந்தளித்தல், போதுமான கடத்து வசதிகளை ஏற்பாடு செய்தல் முதலியவை இவற்றில் அடங்கும். விலைகள் ஏறுவதைத் தடுக்கவும், உள்ள விலைகளைக் குறைக்கவும், ஒரு குறைந்த எல்லைக்குக் கீழ் இறங்காமல் விலை வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தவும், கீழ் நிலையில் உள்ள விலைகளை உயர்த்தவும் இவை திறமிக்க உதவியான நடவடிக்கைகளாகும். இருப்புகளையெல்லாம் அரசாங்கமே வாங்கத் தயாராகி அதற்கு ஒரு குறைந்தபட்ச விலையே நிர்ணயிக்கப்படும். அன்றியும், உற்பத்தியும் அளிப்பும் கட்டுப்படுத்தப்படும்.

இந்த நடவடிக்கைகள் எவ்வாம் எடுக்கப்பட்டாலும், விலைக் கட்டுப்பாடு எல்லாப் பொருள்களையும் தழுவியதாகவும், கட்டாயமாகச் செயல்படுத்தப்படுவதாயும் இருந்தால்தான் உண்மையில்

பயனளிக்கும். சில பொருள்களைக் கட்டுப்பாட்டுக்குட்படுத்தாமல் விட்டுவிட்டால், அந்தப் பொருள்களுக்கு அதிகத் தேவையும் இருந்தால், கட்டுப்பாடு செய்யப்பட்ட பொருள்களை விட்டுக் கட்டுப்பாடு செய்யப்படாத பொருள்களை உற்பத்தி செய்ய முற்படுவார்கள். கட்டுப்படுத்தப்படாத பொருள்கள் ஆடம்பர வகையைச் சேர்ந்தவையாயோ, சமூகத்திற்குத் தேவையில்லாதவையாயோ இருந்தால், இந்தப் பதிலுற்பத்தி முறையினால் பொருளாதார, சமூக நலன்கள் பாதிக்கப்படும். பொருளாதார அமைப்பில் மாறுதல்கள் ஏற்படும்போதும், போரின்போதும் இத்தகைய பதிலுற்பத்தி உண்டாவதற்கு அதிக இடம் உண்டு.[1] நிகரத் தேவைமீது விலைக் கட்டுப்பாடு உண்டாக்கும் மனத்தத்துவ மாறுதலினால், விலைக்கட்டுப்பாட்டைக் கண்டிப்பாகச் செயல்படுத்தவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. கட்டுப்பாட்டைக் கண்டிப்பாக நடத்தாமல் அது பயனற்றதாகக் காணப்படின், நடப்பு விலைகளைவிட எதிர்பார்க்கும் விலைகள் அதிகமாக இருக்கும். இதனால் சில்லறை வியாபாரிகளிடமிருந்தும் துய்ப்போரிடமிருந்தும் தேவை மிகுந்து, அதனால் கட்டுப்பாடு மேலும் வலுவை இழக்கிறது.

இந்தியாவில் விலைக் கட்டுப்பாட்டின் தன்மை

1941 தொடக்கம்முதல் 1951 முடியும்வரை பத்து வருடங்களுக்கு மேலாக இந்தியாவில் பொது விலையளவு மொத்தத்தில் விடாமல் ஏறிக்கொண்டிருந்தது. சில ஆண்டுகளில் உயர்வு விகிதத்தில் மாறுதல்கள் இருந்தன. ஆகவே, அரசாங்கம் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பெரும்பாலும் பணவீக்கத்திற்கெதிரான நடவடிக்கைகளாகவே இருந்தன. 1943-ல் கச்சாப் பருத்தி, கச்சாச் சணல் ஆகியவை சம்பந்தமாக மட்டும் இவ்வாறில்லை. அப்போது இந்தப் பொருள்களின் விலைகள் குறைந்ததால், அரசாங்கமானது ஏக்கர் அளவைக் கட்டுப்படுத்தல், குறைந்தபட்ச விலைகளை நிர்ணயித்தல், ஓரளவுக்குக் கீழே விலைகள் இறங்கினால் பொருள்களை அரசாங்கமே வாங்கிவிடுதல் போன்ற சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. எனினும், இந்த விலையாதரவு நடவடிக்கைகள் விசேஷ நிலையில் மேற்கொள்ளப்பட்டவை. ஏனெனின், இந்தப் பத்தாண்டு முழுவதிலும் அநேகமாக எல்லாப் பண்டங்களுக்கும் விற்போர் மார்க்கெட்டே நிலவியிருந்ததால், துய்ப்போர் நலனைக் கருதி விலைகளைக் கீழே இறக்கிவைக்கவேண்டியதாயிற்று.

[1] A. J. Brown, 'The Great Inflation,' 1939-51 (1955) p. 144.

போர் தொடங்கியவுடன் கண்டிப்பான விலைக் கட்டுப்பாட்டு முறை உடனே கொண்டுவரப்படவில்லை. மேலும், பிறகு பல ஆண்டுகள் மேற்கொள்ளப்பட்ட முறைகள் எல்லாம் அந்தந்த நிலைக்கேற்ப அமைந்தவை; ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையினால் தோன்றியது. அரசாங்கத்தின் முழுக் கவனமும் முயற்சியும் போர் நடத்துவதிலும், பிறகு சில ஆண்டுகள் உள் நாட்டில் அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்துவதிலும் திருப்பப்பட்டதால், அந்த விசேஷ நிலையில் பொதுவாக நன்கு திட்டமிடப்பட்ட விஞ்ஞான முறையான விலைக் கட்டுப்பாட்டுத் திட்டம் இல்லாமலிருந்ததை நாம் பொறுத்துக்கொள்ளலாம். எனினும், போரின் ஆரம்பமுதல் அரசாங்கம் மேற்கொண்ட விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளையெல்லாம் சேர்த்துப் பார்த்தால், அது பணவீக்க எதிர் நடவடிக்கைகளை யெல்லாம் பயன்படுத்திவிட்டது என்பது தெரியும். அவசியமான பொருள் களாகிய உணவு தானியங்கள், பயறு, வனஸ்பதி, சர்க்கரை, வெல்லம், பருத்தித் துணிகள் முதலியவைகளுக்கும், கச்சா ரப்பர், கச்சாச் சணல், கச்சாப் பருத்தி, எஃகு, சிமென்டு, நிலக்கரி போன்ற தொழிற் பொருள்கள் ஆகியவைகளுக்கும் உச்ச விலை நிர்ணயிப்பதற்கு நேரடி நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டது இவற்றில் அடங்கும். இந்த நேரடி விலைக் கட்டுப்பாட்டு முறை களுடன் மறைமுகக் கட்டுப்பாட்டுத் திட்டங்களும் விரிவாகக் கையாளப்பட்டன. அளிப்பு நிலையைச் சீர்திருத்துவதற்கு வரி முதலிய சலுகைகளை உணவு உற்பத்திக்கும் செய்பொருள் களுக்கும் அளித்து அதிக உற்பத்திக்கு ஊக்கமளிக்கப்பட்டது. அன்றியும், அவசியமான பொருள்களையும், உற்பத்தி முதலீட்டுப் பொருள்களையும் இறக்குமதி செய்ய வசதியும் அளிக்கப்பட்டது; மூலதனம் வெளியேறுவதைத் தடுக்கவும், நாணயமாற்றில் ஊகவாணிகத்தைத் தடுக்கவும், அந்நியச் செலாவணியைப் பயன்படுத்துவதில் சிக்கனத்தைக் கையாளுவதற்கும் ஏற்று மதிக் கட்டுப்பாடும் நாணயமாற்றுக் கட்டுப்பாடும் மேற் கொள்ளப்பட்டன. மேலும், தேவையைப் பொறுத்தவரையில், செலாவணியைக் கட்டுப்படுத்தியும், அதிகலாப வரி உட்படப் பட வரிவிதிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டும், பட்ஜெட் பற்றுக்குறைகளைக் குறைத்தும், கடன் வாங்குதல், சேமித்தல் ஆகிய வழிகளில் அதிக வாங்குந்திறனைக் குறைத்தும், பணம் சம்பந்தமான நடவடிக்கைகளால் சமூகத்தினிடமிருந்த வாங்குந் திறன் கட்டுப்படுத்தப்பட்டது. கடைசியாக, கச்சாப் பொருள் களையும் துய்ப்புப் பொருள்களையும் நன்கு பங்கீடு செய்வதற் காகத் தொழிற் கச்சாப் பொருள்களாகிய எஃகு, சிமென்டு, நிலக்கரிபோன்ற பொருள்களை ஒதுக்குவதற்குத் திட்டங்கள்

செயல்படுத்தப்பட்டன. மேலும், நகரப் பகுதிகளில் உணவு, உடை, மண்ணெண்ணெய் முதலிய அத்தியாவசியமான பண்டங்கள் பங்கீடு செய்யப்பட்டன.

இந்த நடவடிக்கைகள் விலைகளைக் கட்டுப்படுத்துவதில் எவ்வளவு தூரம் பயனுள்ளவையாய் இருந்தன என்பதை அறிவதற்கு, விலை இயக்கத்தின் முக்கியமான கட்டங்களையும், ஒவ்வொரு நிலையிலும் செயல்பட்டுவந்த பணவீக்கச் சக்திகள் பணவாட்டச் சக்திகளின் முக்கியத்துவத்தையும் மனத்தில் கொள்ளவேண்டும். 1939-க்கும் 1951-க்கும் இடையில் நம் நாட்டில் விலைப்போக்கின் முக்கியக் கட்டங்கள் அத்தியாயம் 2-லும் 3-லும் குறிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு :

(அ) 1939 செப்டெம்பருக்கும் 1940-ன் மத்திக்கும் இடையில் திடீரென்ற ஏற்றமும் இறக்கமும். இவை போர் தொடங்கியவுடனும் அதன் விளைவாகவும் பண்டங்களுக்கு உண்டாகிய உடன வாணிகத் தேவையினால் ஏற்பட்டன.

(ஆ) 1940-ன் பிற்பாதியிலிருந்து 1943-ன் மத்திவரையில் விலையளவில் படிப்படியான உயர்வு காணப்பட்டது. 1940 ஆகஸ்டில் மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண் 108·4-லிருந்து 1943 ஜூனில் 241·7-க்கு ஏறியது. இந்தக் காலத்தில் தொழில் உற்பத்தியும் விவசாய உற்பத்தியும் சிறிது முன்னேற்றம் கண்டன என்பது குறிப்பிடத்தக்கது. பிந்தியது முந்தியதை விட அதிகமாயிருந்தது. ஆனால், போருக்காக அரசாங்கம் செய்த பிரம்மாண்டமான செலவினால், பண அளிப்பில் மிகுந்த பெருக்கம் உண்டாயிற்று. சிறு நாணயங்கள் உட்பட மொத்தப் பண அளிப்பு 1940 மார்ச்சில் ரூ 532 கோடியாக இருந்து 1943 மார்ச்சில் ரூ. 1,198 கோடிக்கு உயர்ந்தது. இது ஆண்டுக்கு 40 சதவீதத்திற்குமேல் ஆகும்.

(இ) 1943-ன் நடுவிலிருந்து 1945-ன் கடைசிக் கால்பகுதி வரையுள்ள காலத்தில் விலையளவு ஓரளவு நிலையாயிருந்தது. 1943 ஜூனுக்கும் 1945 டிசம்பருக்கும் இடையில் மொத்த விற்பனை விலையின் பொதுக் குறியீட்டெண் 4 பாயின்டுகள்தாம் உயர்ந்தது. அதே காலத்தில் தொழில் உற்பத்தியிலும் விவசாய உற்பத்தியிலும் குறைவு காணப்பட்டது. ஆனால், பண அளிப்பு மட்டாகவே பெருகுகிறது.

(ஈ) 1946-க்கும் 1951-ன் முதல் கால்பகுதிக்கும் இடையில் பொது விலையளவில் உயர்வு உண்டாயிற்று. 1947–48-லும் 1950–51-லும் உண்டான விரைவான உயர்வு, மட்டான உயர்வுக்

காலங்களுக்கிடையில் மாறிவந்தது. இக் காலத்தில் உற்பத்தி மிகவும் கீழ்நிலையில் இருந்தது; பண அளிப்பும் அதிகம் பெருகவில்லை. 1946 மார்ச்சுக்கும் 1948 மார்ச்சுக்கும் இடையில், பண அளிப்பு ரூ.2,121 கோடியிலிருந்து ரூ. 2,237 கோடிக்கு உயர்ந்தது. இது ஆண்டுக்கு 3 சதவீதமாகும். பட்ஜெட் பற்றுக்குறையின் அளவில் குறைவு உண்டானதும், அயல் நாட்டுக் கொடுப்பல் நிலையில் அதிகப் பற்றுக்குறை ஏற்பட்டதும் இதற்குக் காரணங்களாகும்.

காலக்கிரமப்படி கட்டுப்பாட்டு முறைகளையும், அவை கொண்டுவரப்பட்டு நடத்தப்பட்ட வேகத்தைக் கொண்டும், விலைகள் அவை பாதித்த விதத்தைக் கொண்டும் இவ்வாறே பிரித்தறிய முடியும். 1939-க்கும் 1942-க்கும் இடையில் முதலில் கொண்டுவரப்பட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், நாட்டில் நிலவிய விலைகளை ஓரளவுதான் பாதித்தன. 1943-க்கும் 1947-க்கும் இடையில் விலைக் கட்டுப்பாடு மிக விரிவாகவும் கடுமையாகவும் கொண்டுவரப்பட்டது. 1947–48-ல் உரிய காலத்திற்கு முன்பே கட்டுப்பாட்டை நீக்க முயற்சி செய்யப்பட்டது. 1948–51 ஆண்டுகளில், 1947–48-ல் நீக்கப்பட்ட அல்லது தளர்த்தப்பட்ட கட்டுப்பாடுகள் மீண்டும் புகுத்தப்பட்டுக் கடுமையாக்கப்பட்டன. கொரியப் போரினாலும் மதிப்பிறக்கத்தினாலும் கட்டவிழ்த்து விடப்பட்ட பணவீக்கச் சக்திகளைக் கட்டுப்படுத்துவதற்கு மேலும் சில கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. இந்த நடவடிக்கைகளை இப்பொழுது மேலும் விரிவாக ஆராய்வோம்.

முதல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், 1939-42

நாட்டின் பாதுகாப்பை நிலைநிறுத்தவும், போரைத் திறமையாக நடத்தவும் போர் தொடங்கியவுடன் இந்திய அரசாங்கம் 1939 செப்டம்பர் 3ஆம் தேதி வெளியிட்ட இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படிதான் நிர்வாக அதிகாரத்தைப் பெற்றது. உடனே, மாகாண அரசாங்கங்களுக்கு ஓர் அறிவிப்புமூலம் சில அதிகாரங்கள் மாற்றப்பட்டன. அவற்றுள், அவை வாழ்க்கைக்குத் தேவையான உணவுப் பொருள்கள், உப்பு, மண்ணெண்ணெய், மலிவுரகப் பருத்தி ஆடைகள் முதலியவற்றின் விலைகளை நிர்ணயிப்பதற்கு அதிகாரம் பெற்றன. 1939 செப்டம்பர் முதல் தேதி இருந்த விலைகளுக்குமேல் 10 சதவீதம் இவைகளுக்கு உச்ச விலையாக நிர்ணயிக்கப்பட்டது. இது ஒருவகை விலை முடக்கமே. சில நாட்களுக்குப் பிறகு, உச்ச விலையை நிர்ணயிப்பதில் உற்பத்திச் செலவு அதிகரிப்பும், இறக்குமதிப் பொருள்களுக்கு

இறக்குமதிச் செலவில் அதிகரிப்பும் கணக்கில் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டன.

போர் தொடங்கியவுடனேயே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படினும், இந்தநிலையில் மேற்கொள்ளப்பட்ட கட்டுப்பாடுகள், விலைமாற்றத்தினால் உண்டாகக்கூடிய தீமைகளைக் குறைப்பதை விட அரசாங்கம் போரை வெற்றிகரமாக நடத்துவதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. உண்மையில், விலையேற்றம் 1930-க்கும் 1939-க்கும் இடையில் உள்ள ஆண்டுகளில் உண்டான மந்தநிலையிலிருந்து மெதுவாக முன்னேறிவந்த மூலப்பொருள் உற்பத்தியாளர்களுக்கு நன்மையாக இருக்கும் என்ற காரணத்தினால் அரசாங்கத்தினால் வரவேற்கப்பட்டது. நிதி அங்கத்தினர், எல்லாப் பொருள்களின் விலைகளும் ஒன்றாக ஏறிவருவதால் அஞ்சுவதற்குக் காரணம் ஒன்றுமில்லை என்று கூறினார்[1]. இந்த நிலையில் அரசாங்கம் மேற்கொண்ட பணம், வரிபற்றிய சில நடவடிக்கைகள் பணவீக்கத் தடுப்பு விளைவையளித்தன என்பதை மறுக்கமுடியாது. ஆனால், அவை அந்த நோக்கத்துடன் கையாளப்படவில்லை. உதாரணமாக, அமிதலாப வரி கொண்டு வரப்பட்டபோது, விலைக் கட்டுப்பாட்டைவிட நியாயம்தான் அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. போரினால் யாருக்கு அதிக லாபம் கிடைக்கிறதோ அவர்கள்மீதுதான் போருக்கு நிதி திரட்டுவதற்காக அதிக வரிவிதிக்கவேண்டுமென்று கூறப்பட்டது. ஏற்றுமதிகளையும் இறக்குமதிகளையும் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளைப்பற்றியும் இவ்வாறே கூறலாம். ஏற்றுமதிக் கட்டுப்பாட்டின் முக்கிய நோக்கம், அத்தியாவசியமான பொருள்கள் பகைவர் வசப்படாமலிருப்பதும், போரை வெற்றிகரமாக நடத்துவதற்குப் பொருள்களைத் தவறாமல் பெறுவதுமேயாகும்; மக்கள் நுய்ப்புக்காக நாட்டில் பொருள்களைச் சேமித்துவைப்பது என்பது முக்கிய நோக்கமன்று[2]. இதுபோலவே, 1940 மேயில் ஒரு போர் நடவடிக்கையாக இறக்குமதிக் கட்டுப்பாடும் விதிக்கப்பட்டது. முதலில் அதன்படி சில நுய்ப்புப் பொருள்கள் இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது; பிறகு 1940, 1941ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்படாத எஃகு, அரைகுறையாக உருவாக்கப்பட்ட எஃகு, எந்திரக் கருவிகள், மற்றக் கருவிகள் ஆகியவற்றிற்கும் அனுமதியளிக்கப்பட்டது. இதன் நோக்கம், முக்கியமாக, அளவாக இருந்த கப்பலேற்று சுமையைச் சரியாகப் பயன்படுத்து

[1] பட்ஜெட் உரை, 1940–41.

[2] 'Economic Controls in India,' Ministry of Commerce and Industry, p. 45.

வதும் அயல்நாட்டுச் செலாவணியைச் (குறிப்பாக டாலர் செலாவணியை) சேமிப்பதும் ஆகும்.

முதலில் நடந்த விலைக் கட்டுப்பாட்டு மாநாடுகளும் இவ் விஷயத்தை முக்கியமாகக் கருதவில்லை. 1939 அக்டோபர் 18ஆம் தேதி நடந்த முதல் விலைக் கட்டுப்பாட்டு மாநாட்டின் பொது வான கருத்து என்னவென்றால், விவசாயப் பொருள்களின் விலை யேற்றத்தை அந்த நிலையில் தடுக்கவேண்டியதில்லை என்பதே. அடுத்த இரண்டு மாநாடுகளிலும் இதே மனப்பான்மை காணப் பட்டது. விலைக் கட்டுப்பாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கவேண் டிய பொறுப்பு முக்கியமாக மாகாண அரசாங்கங்களிடம் விடப் பட்டது. முதல் மூன்று விலைக் கட்டுப்பாட்டு மாநாடுகளும், அப்போதுள்ள நிலையை அப்படியே விட்டுவிடலாம் என்றும், மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டிய அளவுக்கு நிலைமை மிக மோசமாக இல்லை என்றும் யோசனை கூறியது.[1] இருப்பினும், 1941-ல் உணவுப் பொருள்களின் விலையில் (குறிப் பாகக் கோதுமை) அதிக ஏற்றம் உண்டானதால், அரசாங்கம் உண்மை நிலையை உணர்ந்து, உணவு உற்பத்தி, பங்கீடு, உணவு தானியங்களின் விலைகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக் கைகள் எடுத்தது. பாரசீகத்திற்கும் மற்ற மத்தியக் கிழக்கு நாடு களுக்கும் உணவு தானியங்களை ஏற்றுமதி செய்வதைத் தடுத்தும், இறக்குமதி வரியைக் குறைத்தும் நீக்கியும்கூட அதிக விலையேற்றம் உண்டாயிருந்தது. 1941 நவம்பரில் சட்டப்படி விலைகளுக்கு உச்ச வரம்பு விதிக்கப்பட்டது; லையால்பூரிலும் ஹாபூரிலும் (இடத்தில் கொண்டுபோய்க் கொடுப்பதற்கு) மணங்குக்கு ரூ. 4-60-க்கு மேல் கோதுமையில் மொத்த விற்பனை செய்யக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டது. எனினும், அளிப்புக் குறைவினால் இந்த விலையை நிலைநிறுத்த முடியவில்லை. அதிக உற்பத்தி பெறவும், நன்கு பங்கீடு செய்யவும், இந்தியாவிற்கு ஒரு கோதுமை ஆணையாளர் நியமிக்கப்பட்டார். 1942, ஏப்ரல் 30ஆம் நாள் வெளியிடப்பட்ட ஒரு கோதுமைக் கட்டுப்பாட்டு உத்தரவின்படி, உற்பத்தி இடத்திலிருந்து உபயோகிக்கும் இடங்களுக்குக் கோது மையை ரயிலில் கொண்டுசெல்வதை ஒழுங்குபடுத்துவதற்கு முயற்சி செய்யப்பட்டது. அடுத்த மாதம் உணவு தானியக் கட்டுப்பாட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதன்படி எல்லா மொத்த வியாபாரிகளும் கட்டாயம் அனுமதி பெறவேண்டு மென்று கட்டாயப்படுத்தப்பட்டது. சிறிது காலத்திற்குப் பிறகு உணவு தானியத்தில் ஊகவாணிகம் செய்வது தடுக்கப்பட்டது.

1. 'Indian Finance,' 1942 (Annual Number), p. 19.

1942-ன் இறுதியில், அகில இந்திய அடிப்படையில் எல்லா உணவு தானியங்களையும் வாங்கவும், கொண்டுசெல்லவும், பங்கீடு செய்யவும் ஆன நடவடிக்கைகளையெல்லாம் இணைப்பதற்கு ஓர் உணவு இலாகா அமைக்கப்பட்டது. எனினும், இந்த நடவடிக்கைகள் சிறிதளவே வெற்றிபெற்றன. கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அதிக அளவில் பதுக்கலையும் கள்ளச் சந்தையில் விற்பதையும் அதிகமாக்கின. 1942 மத்தியிலிருந்து கோதுமை விலைக் கட்டுப்பாடு பெயரளவில்தான் இருந்தது. அடுத்த ஆண்டு தொடக்கத்திலேயே, கட்டுப்பாட்டு விலைக்குக் கோதுமை கிடைப்பது கடினமாயிருந்ததால், முதன்மையான மொத்த மார்க்கெட்டுகளில் கோதுமை விலைக் கட்டுப்பாடு நீக்கப்பட்டுவிட்டது.

தொழில் கச்சாப் பொருள்கள் விஷயத்திலும்கூட உற்பத்தி, பங்கீடு, விலைகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டன. 1941 ஆகஸ்டில் சட்டப்படி இரும்பையும் எஃகையும் உற்பத்தி செய்யவும் பங்கீடு செய்யவும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. 1942 ஆகஸ்டில் சிமென்டுமீது சட்டப்படி கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது. அதே ஆண்டில், இந்திய ரப்பர்க் கட்டுப்பாட்டு உற்பத்தி உத்தரவுப்படி ரப்பர் மீதும் கட்டுப்பாடு வந்தது. அதன்படி, கிடைக்கக்கூடிய பொருள்களையெல்லாம் அரசாங்கத்திற்கோ அல்லது அப்போதைக்கப்போது அரசாங்கம் நியமிக்கும் சிலருக்கோ அரசாங்கம் நிர்ணயித்த விலைக்கு விற்கவேண்டும். 1942 ஏப்ரலில் கிடைக்கும் சர்க்கரையை நியாயமான விலைக்கு நியாயமான முறையில் பங்கீடு செய்வதற்காகச் சர்க்கரைமீதும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

இந்த ஆண்டுகளில் விலைக் குறியீட்டெண்களைப் பார்த்தால், விலையின்மீது இந்த நடவடிக்கைகளால் குறிப்பிடத்தக்க பயன் ஏதும் விளையவில்லை என்பது விளங்கும். 1942-43-ல் போர் தொடங்கியதுமுதல் முதல் முறையாகக் குறிப்பிடத்தக்க அளவு விலையேற்றம் உண்டானபோது, உற்பத்தியில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது. இதற்கு மாறுக, விலையளவில் ஏற்றம் போலவே பண அளிப்புப் பெருக்கத்தின் விகிதமும் இருந்தது. 1942 ஏப்ரல் முதல் 12 மாதங்களில் மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண் 145·9-லிருந்து 220·1-ஐ அடைந்தபோது, ஏழுக் கத்தில் இருந்த நோட்டுகளும் 55 சதவீதம் உயர்ந்தன. ஆகவே, பொது விலையளவில் உயர்வுக்குப் பெரும்பாலும் காரணம், அரசாங்கத்தின் அதிகச் செலவீடுகளும், அளவுகடந்து பணஅளிப்பில் பெருக்கம் உண்டானதும்தான். இதற்கெதிராக அரசாங்கம்

காலங்கடந்து அரைகுறையன மனத்துடன் கொண்டுவந்த கட்டுப்பாடுகள் அதிகப் பயனளிக்கவில்லை.

விலைகள் அதிக அளவுக்கு ஏறியபிறகே அரசாங்கம் நிலைமையின் கடுமையை உணர்ந்தது என்பது தவிரக் கட்டுப்பாடுகள் வெற்றிகரமாக நடைபெறுததற்கு வேறு காரணங்களும் உண்டு. நம் பொருளாதார அமைப்பின் தன்மையில் திறன்மிக்க கட்டுப்பாட்டு முறைகளை எளிதில் நடத்தமுடியாது. நாட்டின் பரந்த அளவும், கடத்து வசதிகள் சீர்குலைதல், பெரும்பாலான மக்கள் கல்வியற்றவர்களாக இருத்தல், சமூகத்தினிடமிருந்து பொதுவாக ஒத்துழைப்பின்மை, குறிப்பாக வியாபாரிகளின் ஒத்துழைப்பின்மை, மொத்த வியாபாரிகளும் சில்லறை வியாபாரிகளும் சரியான நிறுவன அமைப்பின்றி இருத்தல் ஆகியவை திறமையான கட்டுப்பாட்டு அமைப்பைச் செயல்படுத்துவதற்குத் தடையாயிருந்தன. இன்றும் இத் தடைகளில் பெரும்பாலானவை உள்ளன. பொருளாதார அமைப்பில் பணப்பற்றில்லாத பெரும் பகுதி இன்னும்இருக்கிறது. இலட்சக்கணக்கான சிறு விவசாயிகள் அல்லதுஉற்பத்தியாளர்களால்உற்பத்தி நடைபெறுகிறது. இவர்கள் உற்பத்தி செய்யும் பலவகைப் பொருள்களை எளிதில் தரப்படுத்தமுடியாது. இவை தவிர, நகரப் பகுதிகளில் உணவுக் கட்டுப்பாட்டை நடத்தமுடியாததற்கு இரண்டு அடிப்படைக் காரணங்கள் உள்ளன. சுமார் 50 முதல் 55 மில்லியன் எண்ணிக்கையுள்ள பிழைப்புக்கே போதாமல் விவசாயம் செய்யும் விவசாயிகளின் உபரி எல்லையிலிருந்து நகரங்களுக்கு உணவு கிடைக்கிறது. இந்த உணவு குறைவானது. கிராமத்திலுள்ள உற்பத்தியாளர்கள்பணம் வேண்டுமென்று விரும்பினால்தான் இவ்வளவும் மார்க்கெட்டிற்கு வரும். அவர்களிடம் பணம் இருந்து அதன் மதிப்புக் குறைந்து விட்டிருந்தால், துய்ப்பைக் குறைத்து உணவுப் பொருள்களை நகரங்களுக்கு அனுப்பவேண்டுமென்ற ஊக்கம் இராது. மேலும், நகரங்களுக்கு அதிக விவசாயப் பொருள்கள் வந்தாலும்கூட, இன்னும் சரியாக அமைக்கப்படாமல், எண்ணிக்கையில் குறைவாயுள்ள வாங்கும் சந்தைகளின்மூலமாகத்தான் கட்டுப்பாடுகளை நடத்தவேண்டியிருக்கும். மாகாண அரசாங்கங்களின் போக்கினால் இந்தியாவில் மூதலில் விலைக் கட்டுப்பாட்டின் ஆரம்ப நிலையில் மற்றொரு கடுமையான பிரச்சினை தோன்றியது. மாகாணங்கள் விலைக் கட்டுப்பாட்டைப்பற்றி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளில் ஓர் இணைப்பான தன்மை காணப்படவில்லை. ஒவ்வொரு மாகாணமும் ஒரு பொருளைப் பொறுத்தவரையில் தன் நலன் பாதிக்கப்படாத முறையில் விலைக் கட்டுப்பாட்டு முறையில் அக்கறை காட்டிற்று. பஞ்சாப், கோதுமை விலைக்

கட்டுப்பாட்டை எதிர்த்தது. வங்காளம் சணலையும், பம்பாயும் மத்திய மாகாணமும் பருத்தித் துணிகளையும் கட்டுப்படுத்துவதை விரும்பவில்லை. ஒரு சமயத்தில், பஞ்சாப், கோதுமை ஏற்றுமதியைத் தடைசெய்தது. மத்திய அரசாங்கத்தின் தலையீட்டினால் இத் தடை நீக்கப்பட்டது. இதுபோலவே உபரி மாகாணங்களாகிய பஞ்சாபும் சிந்துவும் பற்றாக்குறை மாகாணங்களின் நலனைப் பாதிக்கும் முறையில் கொள்ளை லாபம் அடித்ததை மத்திய அரசாங்கம் நிறுத்தவேண்டியதாயிற்று. ஆகவே, மக்களிடமிருந்தும் மாகாண அரசாங்கங்களிடமிருந்தும் ஒத்துழைப்பில்லாதபோது, அரசாங்கம் ஆரம்பத்தில் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பயன்தரும் யோனதில் வியப்பொன்றுமில்லை.

கூடுமைபான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் விலைகளை அவை பாதித்த தன்மையும், 1943–47

1942–43-ல் விலைகள் அபரிமிதமாக ஏறியதால், ஒரு திறமை மிக்க விலைக் கட்டுப்பாட்டு முறையைக் கையாளவேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் உணர்ந்தது. 1943ஆம் ஆண்டு, நாட்டுப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளும் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்ட காலத்தின் ஆரம்பமாகும். முந்திய ஆண்டுகளில் கடைப்பிடிக்கப்பட்டு, அரைகுறையான மனத்துடன் நிறை வேற்றப்பட்ட நடவடிக்கைகள் புத்துயிர் பெற்றன. அதே சமயத்தில் புதிய நடவடிக்கைகளும் புகுத்தப்பட்டன. அவை நாட்டில் பொருளாதாரக் கட்டுப்பாடுகளின் எல்லையை மிகவும் விரித்து, அவற்றின் திறமையையும் அதிகரித்தன. அரசாங்கம் மேற்கொண்ட பல்வேறு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் விலைத் துறையில் முத்திரைத் தாக்குதலை உண்டாக்கின. முதலாவதாக, நேர்முக விலைக் கட்டுப்பாட்டை விரிவுபடுத்தியது; இரண்டாவதாக, நாட்டின் அளிப்பு நிலையைச் சீர்திருந்தியது; மூன்றாவதாக, அதில் வாங்குந் திறனைத் திரும்பப் பெற்றது. 1943 மேயில், மத்திய அரசாங்கம் புதிதாகத் தொழில் சிவில் சப்ளை இலாகா ஒன்றைத் தோற்றுவித்து, அதனிடம் பருத்தித் துணிகளின் உற்பத்தி, பங்கீடு ஆகியவைமீது விரிவான கட்டுப்பாடு விதிக்கும் பொறுப்பை ஒப்படைத்தது. இதற்காக 1943 ஜூனில் பருத்தி ஆடை, நூல் (கட்டுப்பாட்டு) உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதே சமயத்தில் பருத்திநூல், ஆடை ஆகியவற்றின் உற்பத்தி, வாணிபம், விலைகள் ஆகியவற்றின்மீது கட்டுப்பாட்டைச் செலுத்துவதுபற்றித் தனக்கு ஆலோசனை கூறுவதற்காக அரசாங்கம் ஒரு பருத்தி ஆடைக் கட்டுப்பாட்டுக் குழுவை அமைத்தது. உச்ச

விலையை நிர்ணயிக்கும் முறை மிகவும் விரிவாக்கப்பட்டு, முடிந்த வரையில் உச்ச விலையைக் குறைக்க முயற்சி செய்யப்பட்டது. சில பொருள்களின் அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிப் பதற்கு மாகாண அரசாங்கங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இதைச் செயல்படுத்துவதற்கு உதவியாக வணிகர்கள் தம் இருப் புகளைக் கட்டாயமாக அறிவிக்கவேண்டுமென்று வற்புறுத் தவும், பதுக்கலுக்கெதிரான நடவடிக்கை எடுக்கவும், வேண்டும் போது தேவையானால் அனுமதிபெற்ற வியாபார முறையைப் புகுத்தவும் அவைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. பதுக்கல், கொள்ளை லாப அவசரச் சட்டம் (1943 அக்டோபர்), எந்தப் பொருளுக்கும் அதிகபட்ச விலையை நிர்ணயிப்பதற்கு அரசாங்கத் திற்கு அதிகாரம் வழங்கியது. அதன்படி, ஆலைக் கருவிகள், பாதரட்சைகள், பவுண்டன் பேனாக்கள், கூவர பிளேடுகள், மருந்துகள், மூலிகைகள்போன்ற துய்ப்புக்கு வேண்டிய செய் பொருள்களின் விலைகள் நிர்ணயிக்கப்பட்டன. 1944-ன் மத்தி யில் தாவர எண்ணெய்ப் பொருள்கள்போன்ற சில புதுவகைப் பொருள்களுக்கு உச்ச விலைகள் விதிக்கப்பட்டன. துய்ப்புப் பொருள்கள் (கட்டுப்பாடும் பங்கீடும்) உத்தரவுப்படி, பருத்தித் துணி உட்படப் பல அவசியமான பொருள்களுக்கு உச்ச விலைகள் குறைக்கப்பட்டன. விலைக் கட்டுப்பாடு மிகவும் விரிவாக்கப் பட்டு, வாணிகம், தொழில் ஆகியவற்றில் எந்தத் துறையும் அதி லிருந்து தப்பாமல் செய்யப்பட்டது.

விலைக் கட்டுப்பாட்டை விரிவாக்கிக் கண்டிப்பாகச் செய்த துடன், உள்நாட்டில் துய்ப்புக்காக வேண்டிய பொருள்களின் அளிப்பின் முன்னேற்றம் காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. அதிக உற்பத்திக்கு ஊக்கமளித்தும், நன்கு பங்கீடு செய்தும், துணிகள் தோல்பொருள்கள் போன்ற பலவற்றை ஏற்றுமதி செய்வதற்குத் தடைவிதித்து ஏற்றுமதிக் கட்டுப்பாட் டைக் கடுமையாக்கியும், பல துய்ப்புப் பொருள்களின் இறக்கு மதியைத் தாராளமாக்கியும் அளிப்பில் முன்னேற்றம் காண வழி செய்யப்பட்டது. இங்கிலாந்திற்கு ஹைதரலி குழு சென்றதன் விளைவாக, இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்குத் துய்ப்புப் பொருள்களை அதிகமாக இறக்குமதி செய்வது ஏற்பாடு செய்யப் பட்டது. இந்தியாவில் உற்பத்தியாகும் பொருள்கள்மீது பாது காப்புப் படைகளின் மொத்தத் தேவையைக் குறைக்கவும் ஏற் பாடு செய்யப்பட்டது. மேலும், அரசாங்கம் துய்ப்புப் பொருள் உற்பத்திக்குத் தேவையான கச்சாப் பொருள்களையும், கருவிகளை யும், எந்திரங்களையும் தன் கணக்கில் இறக்குமதி செய்து பிறகு நாட்டில் உள்ள தொழிற்சாலைகளுக்கு விற்பதற்கும் ஒப்புக் கொண்டது. போர் முடிந்ததால் வெளிநாட்டுப் படைகள்

படிப்படியாகத் தம் நாட்டிற்குத் திரும்பியபோதும், 1945-ன் பிற்பகுதியில் நாட்டின் அளிப்புநிலையில் இருந்த துன்பம் சிறிதும் குறையவில்லை.[1] நெசவாலைத் தொழில் (உற்பத்திக் கட்டுப்பாட்டு உத்தரவு (1945 ஜூன்) ஆலை உற்பத்தித் துணிகளைத் தரப்படுத்தி பம்பாயிலும் டெல்லியிலும், துணிப்பங்கீட்டைப் புகுத்துவதற்குக் காரணமாயிருந்தது. 1946-ன் தொடக்கத்தில் கொண்டுவரப்பட்ட புதிய திறந்த பொது அனுமதிப்படி (Open General Licence), இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்த்தப் பட்டது. முக்கியமாகத் தொழில்களுக்கு வேண்டிய பல பொருள்கள் உட்படப் பல இறக்குமதிப் பொருள்கள் கட்டுப் பாட்டிலிருந்து நீக்கப்பட்டன. வணிக நோக்கத்துடன் பதுக்கப்படுவதால் பருத்தி அளிப்பு குறைவதைத் தடுக்க, 1943 மேயில் பருத்தி நஷ்டமேற்படாமல் செய்யும் ஒப்பந்தங்கள் தடைசெய்யப்பட்டன. பிறகு இதையடுத்து (சரக்கைச் சேர்ப் பிக்கும் ஒப்பந்தம் நீங்கலாக) பருத்தி ஆடையிலும் நூலிலும் முன் நோக்கிய ஒப்பந்தங்களில் பேரம் செய்வது தடுக்கப்பட்டது. விரைவில் எல்லாப் பொருள்களுக்கும் உலோகக் கட்டிகளுக்கும் முன்னேக்கிய பேர மார்க்கெட் தடை விஸ்தரிக்கப்பட்டது. அதே சமயத்தில் பம்பாய் அரசாங்கம் பம்பாய்ப் பங்குமாற்றுச் சந்தை அதிகாரிகளை, கூட்டுப் பங்குகள், பங்குச் சீட்டுகள் (stocks and shares) ஆகியவற்றில் வணிகவாணிகத்தைத் தடுப் பதற்குத் திறமிக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டது. வணிகவாணிகத் தொழில்களில் மூலதனச் சாதனங்கள் சிதறிவிடுவதைத் தடுக்கவும், போரை நடத்து வதற்கு உதவும் துறைகளில் அவற்றைச் செலுத்தவும், அவசிய மான துய்ப்புப் பொருள்களை உற்பத்தி செய்யவும், 1943 மேயில் மூலதன வெளியீட்டுக் கட்டுப்பாட்டு உத்தரவின்படி மூலதன வெளியீட்டின் மீது கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன.

சமூகத்தினிடம் உள்ள அதிக வாங்குந்திறனைத் திரும்பப் பெறுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுள், அமிதலாப வரி, வருமான வரித் திட்டங்களின்படி கட்டாய டெபாசிட்டு முறை யைப் புகுத்தியதும், சிறு சேமிப்புத் திட்டத்தைத் தீவிரப்படுத்தி யதும் அடங்கும். பத்திரங்களில் முதலீடு செய்யும் பழக்கம் இல் லாத மக்களிடமுள்ள வாங்குந்திறனைக் குறைப்பதற்கு, 1943-ன் பிற்பகுதியில் ரிசர்வ் பாங்கு தங்கத்தை விற்கத் தொடங்கியது. இங்கிலாந்து, அமெரிக்க அரசாங்கங்கள் இந்தத் தங்கத்தைத் தாமே கொடுத்து விற்கச் செய்தன. விற்ற பணத்தை அவர்கள் இந்தியாவில் தம் போர்ச் செலவுக்காக எடுத்துக்கொண்டனர்

[1] Reserve Bank of India, 'Reports on Currency and Finance,' 1945-46, p. 19.

இத் தங்கம் இறக்குமதி செய்யப்பட்டதால், இந்தியாவின் ஏற்று மதியிலும் இறக்குமதியிலும் இருந்த வித்தியாசம் குறைந்தது. அதை நம் நாட்டில் விற்றதால், மக்களிடமிருந்த அதிகப் பணம் ஓரளவு திரும்பப் பெறப்பட்டது. 1940-ல் தொடங்கப்பட்ட பாதுகாப்புக் கடன்களும் இதேபோலப் பயன்பட்டன.

இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட பல கட்டுப்பாட்டு உத்தரவுகள் 1946 அக்டோபர் முதல் தேதியில் காலாவதியாகவிருந்தன. நம் நாட்டிலும் வெளியிலும் இருந்த அரசியல் பொருளாதார நிலைகளை உத்தேசித்து, இந்த அவசரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கு உதவியாயிருந்த அதிகாரங்களை அப்படியே வைத்துக்கொள்வது அவசியம் என்று தெரிந்தது. 1946 செப்டம்பர் 25ஆம் தேதி வெளியிடப்பட்ட அவசர விதிகள் (தொடர்ச்சி) அவசரச் சட்டத் தின்மூலம் இவ்வாறு செய்யப்பட்டது. அதே நாளில் அத்தியா வசியப் பொருள் அளிப்பு 6 தற்காலிக அதிகாரங்களில் அவசரச் சட்டம் வெளியிடப்பட்டது. அது வாணிபம், வியாபாரம் ஆகிய வற்றின் மீதும், உணவுப் பொருள் அளிப்புப் பங்கீடு ஆகியவை மீதும், பருத்தி ஆடைகள் அவசியமான பொருள்கள் மீதும், பெட் ரோலியம், நிலக்கரி, இரும்பு, எஃகு உள்படப் பெரும்பாலான தொழில் கச்சாப்பொருள்கள் மீதும் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாடு நீடிக்க அதிகாரம் வழங்கியது. எனினும், இந்தியப் பாதுகாப்புச் சட்டம் காலாவதியானவுடன், 1943ஆம் ஆண்டின் பதுக்கல், கொள்ளை லாப (தடுப்பு) அவசரச் சட்டம், 1944ஆம் ஆண்டின் துய்ப்புப் பொருள் (கட்டுப்பாடு, பங்கீடு) சட்டம் ஆகியவையும் காலாவதியாகும்படி விட்டுவிடப்பட்டன. ஆனால், இந்த அவசரச் சட்டங்களில் கண்ட சில அதிகாரங்கள் மாகாண அரசாங்கங்களுக்கு மாற்றியளிக்கப்பட்டன.

1943 ஏப்ரலுக்கும் 1945-ன் முடிவுக்கும் இடையில், விவசாய உற்பத்தியிலும் தொழில் உற்பத்தியிலும் சீர்கேடு உண்டாயிருந்து பணப்பெருக்கமும் அளவுகடந்து இருந்தும்கூட, மொத்தத்தில் விலையளவு நிலையாயிருந்ததால் போரின் கடைசி இரண்டாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கட்டுப்பாட்டு நட வடிக்கைகள் எவ்வளவு பயனுள்ளவையாய் இருந்தன என்பது விளங்கும். இந்தக் காலத்தில் 1943 ஏப்ரலில் பொது மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண் 230·5-லிருந்து, 1945 டிசம்பரில் 251·4-க்கு உயர்ந்தது. இதற்குள்ளாகக் கட்டுப்பாட்டு அமைப்பு, சோதனை நிலையைக் கடந்து நாட்டின் பொருளாதார அமைப்பும் போர் தேவைக்கேற்ப மூடுக்கப்பட்டிருந்தது. நாட்டின் பொரு ளாதாரத்தின் தன்மையே மாறிவிட்டிருந்தது. இதன் விளைவாக

நாட்டின் பொருளாதார அமைப்பின் பல பகுதிகள் கட்டுப் பாட்டுக்கு இசைந்து வந்தன. விலைகள் 1941-ன் இரண்டாம் கால்பகுதியில் கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருந்த நிலை தடுத்து நிறுத்தப்பட்டு, நாட்டின் விலையமைப்பில் ஓரளவு நிலைப்புத் தன்மை உண்டாக்கப்பட்டது.

கட்டுப்பாட்டு நீக்கத்தின் தோல்வி, 1947-48

1945-ல் போர் முடிந்தது முதலாகச் சமூகத்தின் சில பகுதி களில், கட்டுப்பாடுகளை மேலும் வைத்திருப்பதற்குக் காரண மில்லை என்ற கருத்து வளர்ந்து வந்தது. பலவகையான செயற் கைக் கட்டுப்பாடுகள், நிதிக் கட்டுப்பாடுகள், வரிக்கட்டுப்பாடு கள் ஆகியவை பொருளாதாரம் இயங்குவதைத் தடுத்துவிட்டன என்றும், அவை இல்லாமலிருந்தால் தேவைக்கேற்ப உற்பத்தி சரிசெய்யப்பட்டிருக்குமென்றும், பதுக்கலும் கள்ளச் சந்தையும் மறைந்துவிடும் என்றும், விலைகள் இயல்பான நிலைக்கு வந்துவிடு மென்றும் கூறப்பட்டது. அரசாங்கம் இதேபோல எண்ணி, 1947-ன் இறுதியில் படிப்படியாகக் கட்டுப்பாடு நீக்கப்படும் என்று தன் கொள்கையை அறிவித்தது. பருப்புகள், சர்க்கரைமீதிருந்த உற்பத்தி, பங்கீடு கட்டுப்பாடுகள் முதலில் நீக்கப்பட்டன. உடனே உணவுப் பொருள்கள் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப் பட்டன. அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் பருத்தி, பருத்தித் துணி, நூல் ஆகியவையும் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டன. எஃகு, சிமென்ட், நிலக்கரி ஆகியவைகளுக்கு உற்பத்திச் செலவு அதி கரித்ததால், அவற்றின் கட்டுப்பாட்டு விலை உயர்த்தப்பட்டது.

1947-ல் அரசாங்கம் கட்டுப்பாட்டு நீக்கத்தை மேற்கொண் டதற்குக் கொள்கையளவில் ஆதரவு கொடுக்கமுடியுமாயினும், கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கும் நீக்குவதற்கும் இதைவிட மிகவும் சரியல்லாத நேரம் வேறு இருக்க முடியாது என்றுதான் கூறவேண்டும். 1947 பிப்ரவரியில் பண்டங்களின் விலைக்குழு ஒன்று சரியான ஒரேமாதிரியான விலைக் கொள்கையை வகுப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. அது ஏழே மாதம் அற்ப ஆயுளுடன் நிலவியது. அதனால் பயன் ஒன்றும் ஏற்படவில்லை. நாட்டில் பொருள் அளிப்பு நிலை மிகவும் சீர்குலைந்துவிட்டது. தொழிலில் அதிக அமைதியின்மை உண்டாகி, சமயச் சண்டைகளாலும் கச்சாப் பொருள் பற்றாக்குறையாலும் குலைவு ஏற்பட்டு, தொழில் உற்பத்தி குறைந்தது. பருத்தித் துணி உற்பத்தி 1946-47-ல் 3,863 மில்லியன் கெஜமாகக் குறைந்தது. ஆனால், 1945-46-ல் 4,651 மில்லியன் கெஜமாகவும், 1944-45-ல் 4,726 கெஜமாகவும் இருந்

தது. சர்க்கரை உற்பத்தியும் கீழ்நிலையை அடைந்துவிட்டது. 1945-46-லும் 1946-47-லும் அரிசி, கோதுமை முதலிய தானியங்களின் உற்பத்தி, சராசரியைவிட மிகவும் குறைந்துவிட்டது. வெளியிலிருந்து வரத்தும் குறைந்துவிட்டது. ஏனெனின், அரசாங்கம் அயல்நாட்டுச் செலாவணியைப் பாதுகாப்பதற்காக, இறக்குமதிக் கட்டுப்பாட்டுக் கொள்கையை மேற்கொண்டிருந்தது. கடத்து வசதிக் குறைவினால் உள்நாட்டில் பங்கீடு தடைபட்டது. அரசாங்கம் அகதிகள் புனரமைப்புக்காகவும் அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும் அதிகப் பணத்தைச் செலவிட்டதால், பட்ஜெட்டில் கணிசமான பற்றுக்குறை ஏற்பட்டது. 1947-48 நிதியாண்டில் பொதுமக்களிடமிருந்த பணம் ரூ. 109 கோடி அதிகரித்தது. ரூ. 2,128 கோடியிலிருந்து ரூ. 2,237 கோடிக்கு உயர்ந்தது. இந்த வாங்குந்திறன் பெருக்கமும், அடங்கிக் கிடந்த தேவை வெளிப்பட்டதும், நாட்டில் பணவீக்க நெருக்கடியை அதிகரித்தன.

ஆகவே, கட்டுப்பாடுகளை நீக்கியவுடன், விலைகள் திடீரென்று ஏறி, 1948 ஜூலையில் பொருளாதார ஆலோசகரின் பொதுக் குறியீட்டெண் என்றுமில்லாத புதிய உச்ச அளவாகிய 389·6-ஐ எட்டியதில் வியப்பொன்றுமில்லை. எல்லாப் பொருள்களின் விலையும் ஏறின. 1947 நவம்பருக்கும் 1948ஜூலைக்கும் இடையில்அரை குறை செய்பொருள்களின் விலையளவு 33·9 சதவீதமும், உணவுப் பொருள்கள் 32·5 சதவீதமும், செய்பொருள்கள் 30·7 சதவீதமும், தொழில் கச்சாப் பொருள்கள் 19·1 சதவீதமும், பலவகைப் பொருள்கள் 16·6 சதவீதமும் ஏறின. கட்டுப்பாட்டிலிருந்து நீங்கிய பொருள்களின் விலைதான் மிகவும் அதிகமாக ஏறின. உணவுப் பொருள்களில் அரிசி, கோதுமை ஆகியவை 49·4 சதவீதம் உயர்ந்தன. பிண்ணுக்கு, பருத்தி நூல் ஆகிய அரைகுறைச் செய்பொருள்கள் 99·1 சதவீதமும் 76·2 சதவீதமும் முறையே ஏறின. செய்பொருள்களில் நெசவுத் துணிகள் 42·5 சதவீதமும், தொழில் கச்சாப் பொருள்களில் நாரும் எண்ணெய் விதைகளும் 30·5 சதவீதமும் 9·9 சதவீதமும் முறையே உயர்ந்தன. பம்பாயில் இந்த உச்சவிலையின்போது முரட்டுத் துணிகளின் மொத்த விற்பனை விலைகள், 1948 ஜனவரியில் ஒத்துக்கொண்டபடி மில் முதலாளிகள் தாமாகவே விரும்பிக் கட்டுப்படுத்திய விலையைவிட 100 சதவீதம் அதிகமாக இருந்தன. அதே சமயத்தில் நேர்த்தியான துணிவகைகள் 250 சதவீதம்வரை உயர்ந்தன. அரிசி, கோதுமை போன்ற தானியங்களின் விலைகள் சில பற்றுக்குறைப் பகுதிகளில் கட்டுப்பாட்டுக்கு முன் இருந்த விலையைவிட 100 முதல் 250 சதவீதம்வரை ஏறின.

எனவே, கட்டுப்பாட்டு நீக்கம் அதிகச் செலவுமிக்க சோதனை யாகிவிட்டது. இது விவேகமற்ற அசந்தர்ப்பமான நடவடிக்கை என்பதில் ஐயமில்லை. மேலே கூறிய காரணங்களால், விலையளவில் 29 சதவீதம் முழுவதும் கட்டுப்பாட்டு நீக்கத்தினால் உண்டானதன்று என்றும், அது அரைகுறையாகவன்றி முழுவதுமாக எல்லாப் பொருள்களையும் தழுவி, செயல்படுவதற்கு அவகாசமும் கொடுக்கப்பட்டிருந்தால், அதிக உற்பத்தியும், அதனால் நிலைமை எளிதாகியிருக்குமென்றும், கட்டுப்பாடுகள் விலகியிருந்த சிறிது காலத்திலேயே துணிகள், சர்க்கரை போன்ற சில பொருள்களின் உற்பத்தி கணிசமாகப் பெருகியது என்றும் சிலர் கூறுவது பொருந்தாததாகும்.[1] கட்டுப்பாட்டு நீக்கத்தில் விலைகள் திடீரென்று ஏறியதை மறுக்கமுடியாது. ஆனால், இந்த அசந்தர்ப்பமான சோதனையினால், உற்பத்தி அதிகரித்தது என்பது ஐயமே.

இதன் பிறகு அரசாங்கத்திற்கு அறிவு பிறந்தது. மறைந்திருந்த பணவீக்கம் கட்டுப்பாட்டு நீக்கத்தினால் செயல்படத் தொடங்கியதென்பதை உணர்ந்து, 1948 ஜூலைக்குள் அரசாங்கம் தன் கொள்கையை மாற்றிக்கொள்ள முடிவுசெய்தது. துணி விலைகளில்தான் அதிக ஏற்றம் உண்டானதால் இதற்கு முதலில் மீண்டும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. 1948 ஜூலை 30ஆம் தேதியன்று அரசாங்கம், துணிக்கும் நூலுக்கும் நியாயமான ஆலை வெளியேற்று (ex-mill) விலையை நிர்ணயித்து அதைத் துணிகள் மீதும் நூலின்மீதும் பொறித்து மாகாணங்களுக்கும் இராச்சியங்களுக்கும் கோட்டாமுறையில் ஒதுக்கீடு செய்து, சில்லறை வியாபாரிகள் விற்கவேண்டிய விலையின் உச்ச அளவையும் நிர்ணயிக்கப் போவதாக அறிவித்தது. அன்றியும் கச்சாப் பருத்திக்குக் குறைந்த அளவு விலையும் உச்ச விலையும் நிர்ணயிக்கப்பட்டன. உணவைப் பொறுத்தவரையில் மாற்றப்பட்ட உணவுக் கொள்கைப்படி விலைக் கட்டுப்பாட்டை மீண்டும் கொண்டுவரவும், எல்லா முக்கிய உணவு தானியங்களையும் கொள்முதல் செய்து பங்கீடு செய்யவும் முயற்சி செய்யப்பட்டது. அன்றியும், உபரிப் பகுதிகள், தன்னிறைவுப் பகுதிகள், பற்றாக்குறைப் பகுதிகள் ஆகியவற்றைத் தனித்தனியே பிரித்துவைத்தும், அரசாங்க அலுவலர்மூலம் உபரியைக் கொள்முதல் செய்தும் பற்றாக்குறை மாகாணங்களுக்கு உணவு இறக்குமதிக்காக உதவிக் கொடைகள் கொடுத்தும், வியாபாரிகள் அனுமதி வழங்கியும், பங்கீட்டை மேலும் விஸ்தரித்தும் நடவடிக்கைகள் எடுக்க உத்தேசிக்கப்பட்

[1] 'Controls—A Study' என்ற நூலைக் காண்க (Federation of Indian Chambers of Commerce and Industry, 1952); அன்றியும் ராம்கோபால் அகர்வால் எழுதிய 'Price Controls in India Since 1947,' (1956) என்ற நூலையும் காண்க.

டது. 1948 அக்டோபர் 4ஆம் தேதியன்று பணவீக்க குறைப்புத் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டது. அதன் நோக்கம், மேலும் விலைகளும் வாழ்க்கைச் செலவும் ஏறுவதைத் தடுப்பதும் நியாயமான அளவுக்கு இவற்றைப் படிப்படியாகக் குறைப்பதும் ஆகும் இந்தநோக்கங்களையடைவதற்குமக்களிடமுள்ள வாங்குந்திறனைக் கட்டுப்படுத்துவதும், அளிப்பைப் பெருக்குவதும் வழிகளாக வற்புறுத்தப்பட்டன. முதலாவது நோக்கத்தைச் சரிக்கட்டப் பட்ட பட்ஜெட்டுகளாலும், அத்தியாவசியமான பொருள் உற்பத்திக்கு உடனடியாக உதவாத முதலினைச் செலவைக் குறைத்தும், அமித லாப வரி டெபாசிட்டு முதலியவைகளைத் திருப்பிக் கொடுப்பதை ஒத்திப்போட்டும். ஒருவர் தபால் நிலையச் சேமிப்பு டெபாசிட்டுகளாகவோ தேசியச் சேமிப்புப் பத்திரங்களாகவோ வைத்திருக்கக்கூடிய தொகையின் உச்ச அளவை உயர்த்தியும், கஜானா டெபாசிட்டு ரசீதுகளை வழங்கியும், அரசாங்கத் தொழில் நிறுவனங்கள் அளிக்கும் இலாப ஈவை வரையறுத்தும், ஆடம்பரப் பொருள்கள்மீது வரிவிதித்தும் அடைய உத்தேசிக்கப்பட்டது. உள்நாட்டில் உற்பத்தியை ஊக்குவித்தும், அதிக இறக்குமதிகளுக்கு அனுமதியளித்தும் பொருள் அளிப்பை அதிகரிக்கக் கருதினர். தொழில் உற்பத்தியை ஊக்குவதற்குத் தொழில்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டன. அவை தேய்மானக் கழிவை அதிகரித்தல், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் சில புதிய தொழில்களுக்கு வரிவிலக்கு அளித்தல், எந்திரங்கள், கருவிகள் ஆகியவைமீதும், அத்தியாவசியமான தொழில் கச்சாப் பொருள்கள்மீதும் இருந்த இறக்குமதி வரிகளைக் குறைத்தல், சில ஏற்றுமதிகளுக்கு வரிகளைக் குறைத்தல் அல்லது ஒழித்தல், சிமெண்ட்டு, எஃகு, துணிகள் ஆகிய முக்கியத் தொழில்களுக்குக் கடத்து வசதிகளை முதன்மையாக அளித்தல் முதலியன.[1]

இந்த நடவடிக்கைகளின் பயனைப் பொது விலையளவில் காணலாம்.

மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண் 1948 ஜூலையில் உச்ச நிலையாகிய 389·6-லிருந்து ஆகஸ்டில் 382·9-க்கும், 1949 மார்ச்சில் 370·2-க்கும் இறங்கியது. தொழில் கச்சாப் பொருள்கள் தவிர மற்ற எல்லா வகையான பொருள்களிலும் பொதுவாக வீழ்ச்சி உண்டாயிற்று. செய்பொருள் வகையில் துணிகளும், அரைகுறைச் செய்பொருள் வகையில் பருத்தி நூலும் கணிசமாக வீழ்ந்தன. 1948 ஜூலைக்கும் 1949 மார்ச்சுக்கும் இடையில்

[1] Reserve Bank of India, 'Report on Currency and Finance', 1948-49, p. 67.

அட்டவணை 72

விலைக் குறியிட்டெண்களில் மாறுதல், 1947–49

பொருள் வகைகள்	1947 நவ.	1948 மார்ச்	1948 ஜூலை	(1)ஐ விட (3) எவ்வளவு சதவீதம் மாறியது என்பது	1949 மார்ச்	(3)ஐ விட (5) எவ்வளவு சதவீதம் மாறியது என்பது
	(1)	(2)	(3)	(4)	(5)	(6)
I. உணவுப் பொருள்கள்	294·8	347·1	390·7	+32·5	376·5	— 3·6
II. தொழில் கச்சாப் பொருள்கள்	377·9	397·7	449·9	+19·1	462·8	+ 2·9
III. அரைகுறைச் செய் பொருள்கள்	252·5	285·8	338·2	+33·9	322·4	— 4·7
IV. செய்பொருள்கள்	283·2	324·3	370·2	+30·7	329·4	—11·0
V. பலவகை	460·8	448·7	537·3	+16·6	515·2	— 4·1
VI. எல்லாப் பொருள்களும்	302·0	340·7	389·6	+29·0	370·2	— 5·0

(ஆதாரம்: 'Report on Currency and Finance', 1948–49, Reserve Bank of India)

முற்கூறியது 17·7 சதவீதமும், பிற்கூறியது 18·1 சதவீதமும் வீழ்ந்தன. அதே சமயத்தில், வாழ்க்கைச் செலவிலும் வீழ்ச்சி உண்டாயிற்று. பம்பாய் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண், (அடிப்படை, 1939 ஆகஸ்டு=100), 1948 டிசம்பரில் 310-லிருந்து 1949 மார்ச்சில் 296-க்குப் பின்னிட்டது. அன்றியும் 1948 ஆகஸ்டுக்கும் 1949 மார்ச்சுக்கும் இடையில் மக்களிடமிருந்த பண அளிப்பில் ரூ. 18 கோடி நிகரமாகக் குறைந்தது.

1949–51-ல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

1949-ல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேலும் வலுப்படுத்தப்பட்டன. 1949-ன் நடுவில், அத்தியாவசியப் பொருள் அளிப்பு (தற்காலிக அதிகாரங்கள்) சட்டம், 1946, திருத்தப்பட்டு அதன் வரம்புகள் கச்சாப் பருத்தி (கொட்டை நீக்கப்பட்டதும் கொட்டை உள்ளதும்), பருத்தி விதைகள், கல்கரி, நிலக்கரியிலிருந்து பெறப்படும் பொருள்கள் ஆகியவை கொண்டுவரப்பட்டன. எனினும், 1949 செப்டம்பரில் ரூபாயை மதிப்பிறக்கம் செய்ததால்தான் கட்டுப்பாடுகளை உடனே கடுமையாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ரூபாயை மதிப்பிறக்கம் செய்ததால், சில ஏற்றுமதிகளின் ரூபாய் விலைகள் அதிகரிக்குமென்றும், வியாபாரிகளில் ஒரு வகுப்பாருக்கு எதிர்பாராமல் பெரிய இலா

பங்கள் கிடைக்கும் என்றும் அச்சம் உண்டாயிற்று. இது உள் நாட்டில் விலையமைப்பைப் பணவீக்கமுறையில்பாதிக்கும். ஆகை யால், இந்த எதிர்பாராத இலாபத்தில் ஒரு பகுதியையேனும் அரசாங்க கஜானுவில் சேர்த்துக்கொள்ளவேண்டியதும், மேலும் விலையளவு ஏறுமல் நடவடிக்கை எடுக்கவேண்டியதும் அவசிய மாயின. ஆகவே, 1949 செப்டம்பரில் ஓர் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அதன்மூலம் அரசாங்கம் தாவர எண் ணெய்கள், எண்ணெய் விதைகள், வனஸ்பதி, அரக்குத் தகடு, எஃகு, புகையிலை ஆகியவைமீது ஏற்றுமதி வரியினை விதிக்கவும், கச்சாச் சணல், சணல் பொருள்கள் ஆகியவற்றின்மீது உள்ள வரியை அதிகரிக்கவும் அதிகாரம் பெற்றது. இந்த நடவடிக்கை யின்படி கடுகு, எண்ணெய்மீது பவுண்டுக்கு 8 அணு வீதம் ஏற்று மதி வரியும் கட்டுப்பாடுள்ள எல்லாவகையான இரும்பு, எஃகு வகைகளுக்கு 45 சதவீதம் பெறுமான விகித வரியும் போடப்பட் டது; இரும்பு எஃகு தகடுகளுக்குமட்டும் 30 சதவீதம் பெரு மான விகிதவரி போடப்பட்டது. சாக்குத் துணிக்கு ஏற்றுமதி வரி டன்னுக்கு ரூ. 80 ஆக இருந்தது ரூ. 350 ஆக உயர்த்தப் பட்டது. மேலும், சணல் பொருள்களில் முன்னேக்கிய வாணிபம் செய்வதை இந்திய அரசாங்கத்தின் கட்டளைப்படி மேற்கு வங்காள அரசாங்கம் தடைசெய்தது.

1949 அக்டோபரில் வகுக்கப்பட்ட எட்டு அம்சத் திட்டப்படி, விரிவான விலைக் கட்டுப்பாட்டு முறை தொடங்கப்பட்டது. அத்தியாவசியமான பொருள்களின் சில்லறை விலைகளில் 10 சத வீதம் குறைக்கவேண்டுமென்பது அதன் நோக்கங்களில் ஒன்று. அயல்நாட்டுச் செலாவணிச் செலவைக் குறைந்த அளவாக்க வேண்டுமென்பதும், ஊக வாணிக விலையேற்றத்தைத் தடுப்பதும், நாட்டில் சேமிப்பை உயர்த்துவதும், உற்பத்தியைப் பெருக்கு வதற்கு முதலீட்டை ஊக்குவதும் அதன் மற்ற உத்தேசங்க ளாகும். அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளைக் குறைப்ப தற்கு அரசாங்கம் உணவு தானியங்களின் விலையில் 3 முதல் 15 சதவீதம் வரை குறைக்கப்படுமென்று அறிவித்தது. கடத்து வசதிக்கட்டணங்களையும் மற்ற வழிச் செலவுகளையும் குறைத்தும், கொள்முதல் விலையைக் குறைத்தும் இவ்வாறு செய்யப்படும். இந்திய அரசாங்கத்தின் கொள்கைப்படி, மாகாண அரசாங்கங் களும் அரிசி, கோதுமை, தினை வகைகள் ஆகியவற்றின் விலைகளைக் குறைத்தன. செய்பொருள்கள், தொழில் கச்சாப் பொருள்கள் ஆகியவற்றுள், துணி, நூல், சர்க்கரை ஆகியவற்றின் உச்ச விலைகள் குறைக்கப்பட்டன; வார்ப்பிரும்பின் தொழிற்சாலை வெளியேற்று நியாய விலை சுமார் 7 சதவீதம் குறைக்கப்பட்டது.

பெரும்பாலும் எல்லாவகையான இரும்பு, எஃகு பொருள் களுக்கும், நீராவி நிலக்கரி, மந்த நிலக்கரி, கல்கரி ஆகியவை களுக்கும் விலைகள் கணிசமாகக் குறைக்கப்பட்டன. முதலீட் டுக்கு ஊக்கமளிப்பதற்குத் தொழில் லாப வரி ஒழிக்கப்பட்டு, வருமான வரியில் சில சலுகைகள் அளிக்கப்பட்டன. ஊக வாணி கத்தைத் தடுக்க, ஏற்றுமதி செய்யப்படும் சணல் பொருள்களுக்கு உச்சவிலை நிர்ணயமும், பருத்தி விதைகளில் முன்னேக்கிய பேரத் தடுப்பும், கச்சாப் பருத்திமீது ஏற்றுமதி வரி உயர்வும், கருப்பு மிளகு ஏற்றுமதிக்கு 30 சதவீதம் பெறுமான விகித வரிவிதிப்பும், சுத்தப்படுத்தப்படாத சர்க்கரையின் சில வகைகளில் முன் னேக்கிய பேரம் விருப்ப பேரம் ஆகியபேரத் தடுப்பும் கையாளப் பட்டன.

1950-ல் விவசாய உற்பத்தி 1948, 1949 ஆண்டுகளைவிடச் சிறிது முன்னேறியது. தொழில் துறையில், உருவாக்கப்பட்ட எஃகு உற்பத்தி 1948-ல் 856 மில்லியன் டன்னாக இருந்து 1950-ல் 1,005 மில்லியன் டன்னாக உயர்ந்தது. ஆனால், பருத்தி நூல், பருத்தித் துணிகள், சணல் செய்பொருள்கள் ஆகியவற்றின் உற் பத்தி குறைந்தது. சில முக்கியமான பொருள்களின் விலைகள் ஏறினும், இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட முக்கியப் பண் டங்களின் மதிப்பு 1950 காலண்டர் ஆண்டில் ரூ. 50,138 லட்சம் ஆயிற்று. 1949-ல் இது ரூ. 60,763 லட்சமாக இருந்தது. எனினும், மதிப்பிறக்கத்தைத் தொடர்ந்து விலையளவு அதிகமாக ஒன்றும் ஏறவில்லை. பொதுக் குறியீட்டெண் 1949 ஆகஸ்டில் 389·0-லிருந்து அக்டோபரில் 393·3-க்கு ஏறியது; ஆனால், டிசம் பரில் 381·3-க்கு இறங்கி, மீண்டும் 1950 மார்ச்சில் 392·4-க்கு ஏறியது. 1949 ஆகஸ்டுக்கும், 1950 மார்ச்சுக்கும் இடையில், உணவுப் பொருள்கள், செய்பொருள்கள் ஆகியவற்றின் விலை களில் சிறிது குறைவு காணப்பட்டது. ஆனால், தொழில் கச்சாப் பொருள்களும் பலவகைப் பொருள்களும் விலை ஏறின.

1950 ஜூனில் கொரியப் போர் தொடங்கியதால், இந்தியா வின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் கடும் சோதனைக்குள்ளாக்கப் பட்டன. நாட்டில் பொருளாதார நிலை, நிலைப்புத் தன்மைக்கு உகந்ததாக இல்லை; தொழில் உற்பத்தி 1949 அளவில் ஏறக் குறைய இருந்தது; சணல், பருத்திபோன்ற கச்சாப் பொருள் உற்பத்தி முன்னேறியது; ஆனால், உணவு உற்பத்தி மிகவும் குறைந்துவிட்டது. உலக முழுவதிலும் ஆயுதப் பெருக்கமும் இருப்புச் சேமிப்பும் இருந்ததால், சணல் பொருள்கள், பருத்தித் துணிகள், கச்சாப் பருத்தி, வீணைக்கப்பட்ட பருத்தி, கச்சா உரோ

மம் போன்ற சில ஏற்றுமதிப் பொருள்களுக்கு வெளித் தேவை அதிகமாக இருந்தது. இதனால் சாதகமான அயல்நாட்டுக் கொடுப்பல் நிலை உண்டாயிற்று. 1950–51-ல் மக்களிடமிருந்த பண அளிப்பு ரூ. 99·2 கோடி அதிகமாயிற்று. ஆனால், முந்திய ஆண்டில் ரூ. 18·4 கோடி குறைந்தது. ஷெட்யூல் பாங்குச் செலாவணியும், 1949–50-ல் சுருங்கியிருந்து இப்போது பெருகியது. வியாபார நடவடிக்கையிலும் அதிகரிப்பு காணப்பட்டது. இவையெல்லாம் சேர்ந்து விலைகளை உயர்த்தின. இந்த நிலையைச் சமாளிப்பதற்கு அரசாங்கம் புதிதாக எட்டு அம்சத் திட்டம் ஒன்றை அறிவித்தது. 1950 செப்டம்பரில், பொருள்களின் அளிப்பும் விலையும்பற்றிய அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அது மேலும் சில பொருள்களை அளிப்பதற்கும், பங்கிடுவதற்கும், விலை நிர்ணயம் செய்வதற்கும் கட்டுப்பாடுகளை விதிக்க அதிகாரம் வழங்கியது. சில பொருள்களின் உள்நாட்டு விலைகளும் வெளி நாட்டு விலைகளும் அதிக வித்தியாசமாக இருந்ததால், புதிய ஏற்றுமதி வரிகள் விதிக்கப்பட்டன, அல்லது ஏற்கெனவே இருந்த வரி விகிதங்கள் சாக்குப்பை (கோணி), கச்சாப் பருத்தி, வீஞ்சுக்கப் பட்ட பருத்தி, கச்சா உரோமம் போன்றவற்றிற்கு அதிகரிக்கப் பட்டன. கச்சாப்பருத்தியிலும் கச்சாச் சணலிலும் வட்ட பேரங் களைக் குறைக்கவும், அவற்றை மில்களுக்கு ஒழுங்கார்க அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டன. எனினும், கொரியாவில் போர் நீண்டதாலும், இறக்குமதி விலைகள் உயர்ந்ததாலும், ஏற்றுமதி கள் அதிகம் செய்யவேண்டியிருந்ததாலும், இந்த நடவடிக்கை களால் விலைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆகவே, அர சாங்கம் கரும்பு, சர்க்கரை, வெல்லம் போன்ற பல பொருள்களின் விலைகளை ஏற்றவேண்டியதாயிற்று. 1951-ன் ஆரம்பத்தில் வெளி நாடுகளில் விலையேற்றத்தினாலும் அதிகச் சுமைக் கூலியாலும், இறக்குமதி செய்யப்பட்ட தானியங்களின் தொகுப்பு விலைகள் அதிகரிக்கப்பட்டன. கச்சாப் பருத்தி இறக்குமதி விலைகள் அதி கரித்ததாலும், உள்நாட்டுப் பருத்தியின் அக விலைகள் அதிகரித்த தாலும், பருத்தித் துணிகளின் விலைகளை உயர்த்தவேண்டிய தாயிற்று. 1951-ன் முதல் கால்பகுதியில், முரட்டு, நடுத்தர, நேர்த்தி, அதிக நேர்த்தித் துணிகளின் விலைகளும், கச்சா ரப்பரின் விலையும் உயர்த்தப்பட்டன. கச்சாச் சணல், சணல் பொருள்கள் ஆகியவற்றின் விலைகளும் உயர்ந்தன. இவற்றின் தொகுபலன் என்னவென்றால், 1950 மார்ச்சில் 392·4ஆக இருந்த பொதுக் குறி யீட்டெண், 1951 மார்ச்சில் 438·6 ஆக உயர்ந்தது. தொழில் கச்சாப்பொருள்களும் பலவகைப் பொருள்களும்தான் மிக அதிக மாக உயர்ந்தன. முதலில் கூறியது 490·1-லிருந்து 608·9-க்கும், இரண்டாவது 630·6-லிருந்து 753·4-க்கும் சென்றன.

இந்த ஆராய்ச்சியிலிருந்து, 1939 முதல் 1951 வரையில் அரசாங்கம் மேற்கொண்ட பல கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முக்கியமாக நான்கு வகைப்படும் என்று தெரிகிறது; முதலாவது, நேரடியாக உச்ச விலைகளை நிர்ணயிப்பது; இரண்டாவது, ஊக வாணிகத்தைக் கட்டுப்படுத்துவது; மூன்றாவது, அதிக வாங்குந் திறனைத் திரும்பப் பெறுவது; நான்காவது, உள்நாட்டில் உற்பத்தியை ஊக்கியும் அதிக இறக்குமதிகளுக்கு உதவி செய்தும் உள்நாட்டு அளிப்பைப் பெருக்க நடவடிக்கைகள் எடுப்பது. இந்த நடவடிக்கைகள் விரிவாக இருப்பினும், இவை வேண்டும்போது சிறிது சிறிதாக மேற்கொள்ளப்பட்டன; ஓர் இணைப்பான, கட்டுக்கோப்பான, நன்கு சிந்தித்துச் செய்யப்பட்ட திட்டமாக இல்லை. அன்றியும் வருமானங்களையும் செலவுகளையும் கட்டுப்படுத்துவதற்குத் தீவிரமாக முயற்சியும் செய்யப்படவில்லை. அதிக வாங்குந்திறனைத் திரும்பப் பெறுவதற்கு அதிக வரிவிதிப்பு, உள்நாட்டில் கடன் வாங்குதல் ஆகிய முறைகளை அரசாங்கம் கையாண்டதால், மக்களின் செலவிடக்கூடிய வருமானம் குறிப்பிடத்தக்க அளவு குறைந்ததா என்பது ஐயமே. இக் குறைகள் இருந்தும், மேலே கூறியதிலிருந்து, இந்தியாவில் விலைக்கட்டுப்பாடு மொத்தத்தில், சில ஆண்டுகளில் விலைகள் ஏறும் வேகத்தைக் கணிசமாகக் குறைப்பதிலும், மற்றக் காலங்களில் விலைகளை நிலையாக வைப்பதிலும் வெற்றி கண்டது என்பது தெளிவாகிறது.

12. விலைக் கொள்கை தோன்றுதல்

1951-52-ல் விலையளவில் 1940-க்குப் பிறகு முதல் தடவையாக அதிகக் கீழ்நோக்கம் உண்டாகிப் பின்னிறக்கம் ஏற்படும் வரையில், விலைகளை இறக்கிவைப்பது அல்லது அவை ஏறும் வேகத்தை மட்டுப்படுத்துவதுதான் பிரச்சினையாக இருந்தது. அந்த ஆண்டில் விலைகள் வேகமாக இறங்கியதால், விலைக் கட்டுப்பாட்டை இரு திசைகளிலும் இயங்கச் செய்யவேண்டிய அவசியம் முக்கியமானதென்று உணரப்பட்டது. அரசாங்கத்தின் நோக்கம் விலைகளும் ஏறுமல் தடுத்து நிறுத்துவது மட்டுமன்றிப் பொது விலைகள் எந்தப் பக்கமும் அதிகமாக மாறுமல் நிலையான அளவில் நிறுத்திவைப்பதும் ஆகும் என்பதை உணர்ந்தனர். வெறும் விலைக்கட்டுப்பாட்டிற்குப் பதில் ஒரு விலைக்கொள்கை வேண்டும் என்பதே இதன் பொருளாகும்.

1952 முதல் அரசாங்கமானது பொது விலையளவை ஒருநிலையில் நிறுத்துவதையும், அதிக ஏற்றவிறக்கம் உண்டாகாமல் தடுப்பதையும் தன் நோக்கமாகக் கொண்டுள்ளது. 1955 வரையில் முதலில் சில ஆண்டுகளில், அதிக சிரமமின்றி விலைகள் ஆண்டு தோறும் மாறுதவாறு பார்த்துக்கொள்வது சாத்தியமாயிருந்தது. ஆனால், பிந்திய ஆண்டுகளில் விலைகள் படிப்படியாக மேலேறின. விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு விடாமல் முயன்றும் (குறிப்பாக உணவு தானிய விலைகள்), அவற்றில் தொடர்ந்து ஏறுமுகம் இருந்தது. முதல் திட்டக் காலத்தில் விலைகள் எளிதில் நிலையாக்கப்பட்டதற்குக் காரணம், இரண்டு எதிரெதிரான சக்திகள் இயங்கியதே. முதலாவதாக, காலநிலையின் காரணமாகவும், அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் காரணமாகவும், விவசாய உற்பத்தியும் தொழில் உற்பத்தியும் மிகவும் சீர்திருந்தின. நாட்டில் அளிப்புநிலை எளிதாகிவிட்டதால் விலைகள் இயற்கையாக இறங்க அது உதவியது. இரண்டாவதாக, அபிவிருத்திக்காக இக் காலத்தில் மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கங்களும் அதிகமாகச் செல-

வழித்தன. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பல அம்சங்களை நிறைவேற்றுவதற்காகப் பிந்திய கட்டங்களில் அதிகப் பற்றாக்குறை நிதியாக்கம் செய்ததால், பண அளிப்பிலும் பாங்குச் செலாவணியிலும் பெருக்கம் செய்யவேண்டியதாயிற்று. பண்டங்கள் அளிப்பில் அபிவிருத்தி இல்லாமல் இருந்திருந்தால், அது பணவீக்கச் சக்தியாக மாறியிருக்கும். உண்மையில், இந்த இரண்டு எதிரான சக்திகளுமே விலைகளை நிலைக்கச் செய்வதற்குப் பெரிதும் உதவியிருக்கக்கூடும். எனினும், இந்தக் காலத்தில் அரசாங்கம் இதற்காக எடுத்துக்கொண்ட பல உறுதியான நடவடிக்கைகளையும் நாம் அற்பமானவை என்று எண்ணி விடக்கூடாது. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கும், சேமநல அரசை ஏற்படுத்துவதற்கும் ஏற்ப, நம் பொருளாதாரத்தில் ஒரு நிலைப்புத் தன்மை இருக்கவேண்டிய அவசியத்தை அரசாங்கம் உணர்ந்து, இந்த நோக்கத்தை மனத்தில்கொண்டு தன் விலைக் கொள்கையை வகுத்துள்ளது.

1951-ன் மத்தியில் பின்னிறக்கம் தோன்றி, அந்த ஆண்டு செல்லச் செல்ல அதிக வேகத்தையடைந்தது. ஆனால், அந்த ஆண்டின் முதல் பகுதியில் விலைகள் அதிகமாகவே இருந்தன. அவை 1951 ஏப்ரலில் உச்சநிலையையடைந்தன. சில கட்டுப்பாடுகளை வைத்திருந்து மேலும் கடுமையாக்க வேண்டிய அவசியமும், பல பொருள்களின் கட்டுப்பாட்டு விலையை உயர்த்த வேண்டிய அவசியமும் இதனால் ஏற்பட்டன. தரக் கட்டுப்பாட்டை விதித்தும், அனுமதி பெற்ற வியாபார முறையை மேற்கொண்டும் பருத்தியின்மீது கட்டுப்பாடு வலுப்படுத்தப்பட்டது. 1950ஆம் ஆண்டில் பண்டங்களின் அளிப்பும் விலையும்பற்றிய சட்டத்தின் எல்லைக்குள், குரோமியத் தாது, கச்சாச் சணல், சணல் பொருள்கள் ஆகிய மூன்று பொருள்கள் கொண்டுவரப்பட்டன. உற்பத்திச் செலவு உயர்ந்ததற்காக உற்பத்தியாளருக்கு ஈடளித்து, அதனால் அதிக உற்பத்திக்கு ஊக்கமளிக்க கட்டுப்பாடு செய்யப்பட்ட பல பொருள்களின் விலைகள் உயர்த்தப்பட்டன. இவற்றுள் கச்சா ரப்பர், கச்சாப் பருத்தி, எஃகு, துத்தநாகம் பூசப்பட்ட தகடுகள், கம்பிகள், வெள்ளீயத் தகடுகள், வார்ப்பிரும்பு, உணவுத் தானியங்கள், பெட்ரோலியப் பொருள்கள், பருத்தித் துணிகள் முதலியவை அடங்கும். பருத்தித் துணிகளுக்கு ஒவ்வொரு காலாண்டுக்கும் விலைகள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் பம்பாயில் உள்ள பருத்தி விலைகளின் அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டன. 1949 நவம்பரில் பருத்தி ஆடைத் தொழில் நடத்துவோர் தாமாக விரும்பி ஒப்புக்கொண்ட 4 சதவீதக் குறைப்பு, 1951 ஏப்ரலிலிருந்து திருப்பியளிக்கப்பட்டது. 1951 ஜூலை முதல் மூன்றாண்டுகளுக்கு

எஃகு உற்பத்தி செய்வதில் முதன்மையானவர்களுக்கு அளிக்கப் பட்ட 'பிடிப்பு' (retention) விலைகள் ஒரு டன்னுக்கு ரூ. 33 வீதம் உயர்த்தப்பட்டன. அன்றியும், கோதுமை, அரிசி, பெட். ரோலியப் பொருள்கள் ஆகியவற்றின் வெளியீட்டு விலைகள் உயர்த்தப்பட்டன.

1951-52-ல் விலைகள் இறங்கியதற்கு உள்நாட்டுச் சூழ்நிலை களும் வெளிநாட்டுச் சூழ்நிலைகளும் காரணமாய் அமைந்தன. ஆனால், உள்நாட்டில் பணவாட்டத்தின் விளைவு அதிகமாக இல்லை. நவம்பர் 1951-ல் பாங்கு வட்டி வீதத்தை 3-லிருந்து 3½ சதவீதமாக உயர்த்தியதும், ஷெட்யூல் பாங்குகளுக்கு நிதி யளிப்பதில் இந்திய ரிசர்வ் பாங்கு கடைப்பிடித்த கடுமையான கொள்கையும், எளிய பணக்கோளின் முடிவைக் குறிக்கும். சுறு சுறுப்பான பருவம் தொடங்கும்போது இந்த நடவடிக்கைகள், எடுக்கப்பட்டதால், விலை வீழ்ச்சிக்கு மனோதத்துவ முறையான காரணமும் இருந்தது எனலாம். 1951-52-ல் உண்டான கணிச மான வருவாய் இன உபரியும், அமெரிக்கக் கோதுமைக் கடன் விற்று வரவும் சேர்ந்து, அரசாங்கம் தன் ரொக்க இருப்புகளை எடுக்காமலேயே பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதி யைப் பெறுவதற்கு உதவின. மேலும், அளிப்பு நிலையிலும் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது. எனினும், 1951-ன் பிற்பகுதியில் தொடங்கிய விலைகளின் இறங்குமுகம், அமெரிக்காவில் இருப்புச் சேர்ப்புத் திட்டம் மாற்றப்பட்டதாலும், நம் ஏற்றுமதிப் பொருள்கள் பலவற்றிற்கு வெளியிலிருந்து தேவை குறைந்த தாலும் முக்கியமாக ஏற்பட்டது. இந்த வெளிக் காரணங்கள் இல்லாமலிருந்தால், பணம் சம்பந்தமான நடவடிக்கைகள் மட்டும் அந்த அளவுக்கு விலைகள் குறைவதற்குக் காரணமாயிருந்திருக்க முடியாது.

விலைகளின் இறங்குமுகத்தைத் தடுப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், முன்பிருந்த பணவீக்க எதிர் நடவடிக்கைகளை மாற்றும் முறையிலேயே இருந்தன. நாட்டில் அளிப்பு நிலை சீர்திருந்தியதால், விலைகள் திடீரென்று குறைந்து விடாமல் இருப்பதற்குத் தேவையை ஊக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகவே, அரசாங்கம் பல பொருள்களின் உற்பத்தி மீதும் பங்கீட்டின்மீதும் இருந்த கட்டுப்பாடுகளை நீக்கியது. இவ்வாறு கொள்கையை மாற்றிக்கொள்வதற்கேற்ப இப் பொருள்களின் அளிப்பு கணிசமாகப் பெருகியிருந்தது. 1952-ன் நடுவில், அதிக உற்பத்தியும் இறக்குமதியும் உண்டாகி, உணவுப் பொருள் அளிப்பு நிலையில் அதிக முன்னேற்றம் காணப்பட்டது. ஆகவே, சில இராச்சிய அரசாங்கங்கள் உணவு தானியங்களின்

மீதுள்ள கட்டுப்பாட்டைத் தளர்த்த அனுமதிக்கப்பட்டன. சட்டப்படியான பங்கீட்டுத் தேவைகளைக் குறைத்தல், இராச்சியங்களுக்குள் தடையில்லா வாணிபத்தை மீண்டும் நடத்துதல், கொள்முதலை மாற்றுதல் அல்லது நிறுத்தி வைத்தல், சிக்கன நடவடிக்கைகளைத் தளர்த்துதல் போன்ற பல வழிகளில் இக் கட்டுப்பாட்டுத் தளர்ச்சி செயல்பட்டது. 1952 மார்ச் முதல் தேதிக்குப் பிறகு சில இராச்சியங்கள் தவிர மற்றப் பற்றுக்குறை இராச்சியங்களுக்கு உணவு இறக்குமதிகளுக்காக அளிக்கப்பட்ட உதவிக் கொடை நிறுத்தப்பட்டது. 1954-ன் நடுவிற்குள் வரி சம்பந்தமான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுவிட்டன. அடுத்த ஆண்டு மார்ச்சில் மண்டலங்களுக்கிடையே கோதுமையைக் கொண்டு செல்வதற்கு இருந்த தடைகள் நீக்கப்பட்டன. இவ்வாறு உணவுப் பொருள்கள்மீதிருந்த எல்லாக் கட்டுப்பாடுகளும் ஒழிக்கப்பட்டன. சர்க்கரையின் உற்பத்தி, அளிப்பு ஆகியவைகளுக்கேற்ப அதன்மீதிருந்த கட்டுப்பாடும் படிப்படியாக நீக்கப்பட்டது. 1954-ன் முடிவில், 1954-55 பருவ காலத்தில் சர்க்கரை, வெல்லம், கற்கண்டு ஆகியவற்றின் விலைமீதும் பங்கீட்டின்மீதும் சட்டப்படியான கட்டுப்பாடு ஒன்றும் இராது என்று அறிவித்தது. ஆனால், சர்க்கரை உற்பத்தியில் 25 சதவீதம் அரசாங்கத்தின் விருப்பம்போல் பயன்படுத்திக்கொள்ள அதனிடம் தொடர்ந்து இருக்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. 1952-ன் பிற்பகுதியில், சைக்கிள்கள், சைக்கிள் பகுதிகள், தூணைக் கருவிகள், சைக்கிள் டயர்கள், டியூப்கள், மின்சார பல்புகள் ஆகியவற்றின் விலைகள்மீதும், இருப்பு அறிவிப்புமீதும் இருந்த கட்டுப்பாடுகள் எடுக்கப்பட்டன. வனஸ்பதியின் விலைக்கட்டுப்பாடும், பிண்ணாக்கு உற்பத்தி, விலை, கொண்டு செல்லுதல், பங்கீடு ஆகியவற்றின்மீதிருந்த தடையும் நீக்கப்பட்டன. நேர்த்தியும் அதிநேர்த்தியுமான பருத்தித் துணிகள் பங்கீட்டுக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, மில்கள் தடையின்றி விற்கக்கூடிய முரட்டுத் துணி, நடுத்தர துணிகள் உற்பத்தி செய்யப்படும் சதவீதம் 1952 ஏப்ரலில் 50-லிருந்து 80-க்கு உயர்த்தப்பட்டது; பிறகு 1953 மார்ச்சில் 85-க்கு மேலும் உயர்த்தப்பட்டது. 1952-ன் கடைசிக் காலபகுதியின் தொடக்கத்திலிருந்து, மக்கள் விரும்பும் பெரும்பாலான துணி வகைகள் மீதிருந்த விலைக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது. இதன் விளைவாக 1953 மார்ச் முடிவிற்குள், துணி உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கின்மீதுதான் விலைக் கட்டுப்பாடு இருந்தது. சுங்க வரிக் குழுவின் திட்டப்படி பருத்தித் துணி விலைகளுக்கு அளிக்கப்பட்டு வந்த வழக்கமான காலாண்டு விலக்குக் கைவிடப்பட்டது. 1953-ல் பருத்தித் துணிகளின் உற்பத்தி முன்னேறி, தேவை மந்தமானதால் 1953

ஜூலையில் எஞ்சியிருந்த விலை, பங்கீட்டுக் கட்டுப்பாடுகள் எல்லாம் ஒழிக்கப்பட்டன. அயல்நாட்டுப் பருத்தியிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட நூல் முழுவதையும் ஆலைகள் தடையின்றி விற்கலாம் என்று அளிக்கப்பட்ட சலுகை போலவே, 1952 மத்தியிலிருந்து செய்யப்பட்ட நூலில் ஒரு பகுதிக்கும் சலுகை அளிக்கப்பட்டது. அனுமதி வழங்கும் முறையை எளிதாக்கியும், அனுமதி பெறுவோருக்கு வேண்டிய தகுதிகளைத் தளர்த்தியும், கச்சாப் பருத்திமீதிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. 1952-ன் இறுதியில், மூன்றாண்டுகளுக்குப் பிறகு, பம்பாயில் பருத்தியில் முன்னேக்கிய வாணிகம் அனுமதிக்கப்பட்டது. மண்டலப் பிரிவுகள் நீக்கப்பட்டதால், 1954 ஜூலையில் பருத்தியைக் கொண்டுசெல்வதற்கு இருந்த கட்டுப்பாடும் ஒழிக்கப்பட்டது. 1955 பிப்ரவரி தொடக்கத்தில், பங்கீட்டுக் கட்டுப்பாடுகள் நிறுத்திவைக்கப்பட்டன. பருத்திக்குக் 'கீழ்நிலை' விலையும் 'மேல்நிலை' விலையும் நிர்ணயிப்பதுபற்றிய கட்டுப்பாடு மட்டும் இருந்தது. 1953 ஆரம்பத்தில், எல்லாவிதமான இரும்பு எஃகு குழாய்களும், விலைக் கட்டுப்பாட்டிலிருந்தும் பங்கீட்டுக் கட்டுப்பாட்டிலிருந்தும் விடுவிக்கப்பட்டன. 1950-ல் செய்யப்பட்ட, பொருள்களின் அளிப்பும விலைகளும்பற்றிய சட்டம், பிறகு நீட்டிக்கப்பட்டு, 1954 பிப்ரவரி 14ஆம் தேதியிலிருந்து காலாவதியாகுமாறு விடப்பட்டது.

ஆனால், 1947-48-ன் அனுபவம் கட்டுப்பாடுகளை நீக்குவது எளிதாயினும், மறுபடியும் அவற்றை விதிப்பதும் விலைகளைக் கட்டுப்படுத்துவதும் மிகவும் கடினம் என்பதை அரசாங்கத்திற்குக் காட்டியது. ஆகவே, 1952 முதல் அரசாங்கம் படிப்படியாகக் கட்டுப்பாட்டு நீக்கக் கொள்கையைக் கையாண்டாலும், மறுபடியும் தேவைப்பட்டால் பொருளாதார அமைப்பின்மீது, அதை விதிப்பதற்கான அதிகாரங்களை வைத்துக்கொண்டிருந்தது. ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் அபிவிருத்திக்காக அரசாங்கம் அவசியமாகச் செலவழித்து வந்த காரணத்தினால், கட்டுப்பாட்டு ஆயுதங்களைத் தயாராக வைத்திருக்கவேண்டியது குறிப்பாக அதிகமாயிற்று. 1951ஆம் ஆண்டின் தொழில் (வளர்ச்சி, ஒழுங்கு) சட்டத்திற்கு ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்து, கட்டுப்பாடுகளை மீண்டும் விதிப்பதற்கு அரசாங்கம் போதிய அதிகாரத்தைப் பெற்றது. மேலும், 1952-ல் உணவுக் கட்டுப்பாடு மிகவும் தளர்த்தப்பட்டபோது விலைகள் கட்டுக்கடங்காமல் போவதைத் தடுப்பதற்கு மத்திய அரசாங்கம் 1947-48-ல் செய்ததுபோலவே, 1952ஆம் ஆண்டின் உணவு தானிய (அனுமதி, கொள்முதல்) உத்தரவின்படி தனக்கு வேண்டிய அதிகாரங்களைப் பெற்றது. இராச்சிய அரசாங்கத்தின் அனுமதி

பெற்ரூலன்றி எவரும் உணவு தானியங்களை வாங்குதல், விற்றல், சேமித்தல் போன்ற செயல்களைச் செய்யக்கூடாது என்று இதன் படி தடைசெய்யப்பட்டது. 1946ஆம் ஆண்டின் அத்தியாவசியப் பொருள் அளிப்பு (தற்காலிக அதிகாரங்கள்) சட்டம், சில வருடங்களுக்கு நீட்டிக்கப்பட்ட பிறகு 1955 ஜனவரி 26ஆம் தேதி காலாவதியாகவிருந்தது. இதன்படி அரசாங்கம் அத்தியாவசியப் பொருள்களைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரம் பெற்றிருந்தது. ஆகவே, 1955 ஜனவரி 21ஆம் நாள் ஜனாதிபதி அத்தியாவசியப் பொருள் அவசரச் சட்டம் (1955) ஒன்றைப் பிறப்பித்தார். பிறகு இதற்குப் பதில் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டது. இந்த மசோதா சட்டமாக்கப்பட்டபோது, அதில் கூறியிருந்தபடி அத்தியாவசியமான பொருள்களின் உற்பத்தி, அளிப்பு, பங்கீடு, வாணிபம், வர்த்தகம் ஆகியவற்றின்மீது கட்டுப்பாட்டைச் செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டது.[1] 1946ஆம் ஆண்டின் அத்தியாவசியப் பொருள் அளிப்பு (தற்காலிக அதிகாரங்கள்) சட்டப்படி சில பொருள்களின் முன்னேக்கிய வாணிபத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பெறப்பட்டிருந்த அதிகாரங்கள், 1955-ன் ஆரம்பத்தில், 1952ஆம் ஆண்டின் முன்னேக்கிய ஒப்பந்தங்கள் (ஒழுங்கு) சட்டத்திற்கு ஆரம்பத்திற்கு மாற்றப்பட்டன. இதன்படி, அகில இந்திய அடிப்படையில் பொருள்களில் முன்னேக்கிய வாணிபத்தை ஒழுங்குபடுத்த ஏற்பாடு செய்யப்பட்டது. 1953 செப்டம்பரில் முன்னேக்கிய மார்க்கெட்டுகள் குழுவும் நியமிக்கப்பட்டது.

அளிப்புநிலை சீர்திருந்தியதால் விலைகள் இறங்குமுகமாவதைத் தடுப்பதற்குப் படிப்படியான கட்டுப்பாட்டு நீக்கக் கொள்கை மேற்கொள்ளப்பட்டது. இதோடு, விலையை நிலைப்புடைய தாக்குவதற்குக் கடந்த சில ஆண்டுகளில் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளாவன : (அ) அளிப்பையும் தேவையையும் சரிக்கட்டுவதற்கு ஏற்றுமதிகளையும் இறக்குமதிகளையும் ஒழுங்குபடுத்துவது; (ஆ) அளிப்பு, தேவை ஆகியவைகளின் நிலைக்கேற்ப விலைகளை மேலோ கீழோ இழுத்துச் சரிசெய்தல்;

[1] இவையாவன : (1) கால்நடைத் தீவனம், பிண்ணாக்கும் மற்றச் சத்துகளும் உள்பட. (2) நிலக்கரி, கல்கரியும் நிலக்கரியிலிருந்து கிடைக்கும் மற்றப் பொருள்களும் உள்பட. (3) மோட்டார்களின் பாகங்களும் துணைக் கருவிகளும். (4) பருத்தி, உரோம ஆடைகள். (5) உணவுப் பொருள்கள், உணவாகும் எண்ணெய்களும் எண்ணெய் விதைகளும் உள்பட. (6) இரும்பும் எஃகும், இவற்றிலிருந்து செய்யப்படும் பொருள்கள் உள்பட. (7) காகிதம், பத்திரிகைத் தாள், அட்டை, கார்ப் பலகைகள் உள்பட. (8) பெட்ரோலியமும் பெட்ரோலியப் பொருள்களும். (9) கொட்டை நீக்கப்பட்ட அல்லது கொட்டையுள்ள கச்சாப் பருத்தியும், பருத்தி விதையும். (10) கச்சாச் சணல். Reserve Bank of India, 'Report on Currency and Finance', 1954–55. p. 35.

(இ) விவசாய விலைகளை நிலைக்கச் செய்வதற்கு விலைக்குப் பண ஆதரவு அளித்தல்; (ஈ) விவசாய விலைகள் ஏறுவதைத் தடுப்ப தற்கு அண்மையில் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

(அ) விலையளவை நிலைநிறுத்துவதற்கு ஏற்றுமதி, இறக்குமதிகளை ஒழுங்குபடுத்துவது.

கொரியப் பொருளாதார வீக்கத்தின் முடிவு, வெளிநாட்டுத் தேவை உள்நாட்டில் விலைகளை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதைக் காட்டிற்று. இந்திய ஏற்றுமதிகள் பின்னிட்டதால், ஏற்றுமதிப் பொருள்களின் விலைகள் திடீரென்று குறைந்தன. இது மற்ற வாணிபப் பகுதிகளையும் பாதித்தது. ஆகவே, உள் நாட்டு நிலைக்கேற்ப அரசாங்கத்தின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டியது அவசியமாயிற்று. அதுமுதலாக அரசாங்கத்தின் கொள்கை உள்நாட்டில் விலை மாறுதலுக்கும், அயல்நாட்டுக் கொடுப்பல் நிலைக்கும் ஏற்ப ஏற்று மதிகளையும் இறக்குமதிகளையும் தளர்த்துவதோ கட்டுப்படுத்து வதோ ஆகும். சிறிது காலத்திற்கு, அரசாங்கத்தின் இறக்கு மதிக் கொள்கையின் அடிப்படை அம்சமாகிய டாலர் பகுதியி லிருந்து இறக்குமதிகளைக் கடுமையாக ஒழுங்குபடுத்துவது, டாலர் பகுதியல்லாத இடங்களிலிருந்து இறக்குமதிகளை ஓரளவு தாராளமாக்குவது என்பது மாறுமல் இருந்தது. ஆனல், ஏற்று மதிகளைப் பொறுத்தவரையில், ஏற்றுமதி வரிகளைக் குறைத்து வெளிநாடுகளிலிருந்து வாங்கும் அளவை அதிகரிக்க முயற்சி செய்யப்பட்டது; ஏற்றுமதிக் கோட்டாக்களைத் தாராளமாக்கி யும், பருத்தித் துணிகள் சணல் பொருள்கள் போன்ற பல முக்கியமான பொருள்களைத் தடையில்லாத அனுமதிக்குட்படுத் தியும் ஏற்றுமதி ஊக்குவிக்கப்பட்டது. 1953-ன் முதல் பாதியில் பருத்தித் துணி,சாக்குத் துணி,ஆளிவிதை, ஆளிவிதை எண்ணெய் ஆகியவைமீது ஏற்றுமதி வரி குறைக்கப்பட்டது. ஆனல், புகை யிலை விதை எண்ணெய், சணல் சிறப்புப் பொருள்கள், பலவகை சணல் செய்பொருள்கள் (துணிகள் பைகள் தவிர) ஆகியவற்றின் மீதிருந்த வரிகள் நீக்கப்பட்டுவிட்டன. மின்சார விசிறிகள் போன்ற உள்நாட்டுச் செய்பொருள்கள் தாராளமாக ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டன. கச்சாப் பருத்தி, ஆமணக்கு, கடலை எண்ணெய் ஆகியவற்றிற்கு ஏற்கெனவே இருந்த ஏற்றுமதிக் கோட்டாக்கள் அதிகரிக்கப்பட்டன. சர்க்கரை போன்ற சில பொருள்களை ஏற்றுமதி செய்வதற்குத் தற்காலிகமாக இருந்த தடை நீக்கப்பட்டு, அவற்றிற்கும் ஏற்றுமதிக் கோட்டாக்கள் வழங்கப்பட்டன. ஏற்றுமதிகளை மேலும் ஊக்குவதற்கு, வெளி நாட்டு மார்க்கெட்டுகளைப் பிடிக்கக்கூடிய எஃகு பொருள்

உற்பத்தியாளர்களுக்கு அதிக ஏற்றுமதி கோட்டா ஒதுக்கப் பட்டது; அமெரிக்காவில் சணல் பொருள்களின் விற்பனையை அபி விருத்தி செய்வதற்காக இந்திய சணல் ஆலைச் சங்கத்திற்கு நிதி உதவி அளிக்கப்பட்டது. அன்றியும், அனுமதி வழங்கும் முறையும் ஓரளவு எளிதாக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளால் சில முக்கியப் பொருள்களுக்குக் குறிப்பாகப் பருத்தி, சணல் செய் பொருள்களுக்கு வெளிநாட்டுத் தேவையில் மறுமலர்ச்சி உண்டா யிற்று. 1953-ன் முதல் பாதியில் பொருள்களின் விலைகள் பொது வாக ஏறுவதற்கு இவை ஓரளவு உதவியாயிருந்தன. எனினும், தொழில் கச்சாப் பொருள்களிலும் ஏற்றுமதிப் பொருள்களிலும் (விலையில்) ஏற்றுமதி தரகர் தொழில் தலைதூக்கியதால், அரசாங்கம் தன் கொள்கையை மாற்றிக்கொண்டது. அத்தியா வசியப் பொருள்களின் அளிப்புநிலையை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் 1953 மத்தியில் சர்க்கரையை இறக்குமதி செய்தும், தேங்காய் எண்ணெய், கொப்பரை ஆகியவைகளின் இறக்குமதி யைத் தாராளமாக்கியும், பனை எண்ணெய், கொப்பரை, சர்க் கரை, பருத்தி விதை எண்ணெய் ஆகியவைகளுக்கு இறக்குமதி வரியைக் குறைத்தும், கடலை எண்ணெய் ஏற்றுமதிக்குத் தடை விதித்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

1954-ன் முதல் காற்பகுதியில் மீண்டும் விலைகள் இறங்குமுகம் கண்டன. அதுமுதலாக, 1954-ன் மூன்றும் காற்பகுதி தவிர, 1955-ன் மத்திவரையில் விலைகள் இறங்கிக்கொண்டே இருந்தன. ஏற்றுமதித் தேவையில் மந்தமும், உள்நாட்டில் உற்பத்தி பெருகியதால் அதிக இருப்புகள் சேர்ந்ததும், இதற்கு முக்கியக் காரணங்கள். இறக்குமதிகளைத் தாராளமாக்கிச் சர்க்கரை, பருத்தி போன்ற அத்தியாவசியப் பண்டங்களின் பற்றாக்குறை யைப் போக்குவதற்கு அரசாங்கம் முன்பு கடைப்பிடித்த கொள் கையும், பர்மாவிலிருந்து அதிக அளவு அரிசியை இறக்குமதி செய்யவேண்டுமென்ற முடிவும் இறக்குமதி தரகர் தொல்லைக்குள் ளாயின. ஆகவே, தாராள ஏற்றுமதிக் கொள்கையைக், கடைப் பிடிக்க வேண்டியதாயிற்று. 1953-ல் முன்பு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீண்டும் கொண்டுவரப்பட்டன. கட்டுப்பாடு களை மேலும் தளர்த்தி ஏற்றுமதிக்கு வழிசெய்யப்பட்டது. தாவர எண்ணெய்கள், எண்ணெய் விதைகள், கருப்பு மிளகு, பருத்தி போன்ற பல பொருள்கள்மீதிருந்த ஏற்றுமதி வரி குறைக்கப் பட்டது அல்லது நீக்கப்பட்டது. அரிசி, பருப்புகள், பிண்ணாக்கு, வெல்லம், சில கோதுமைப் பொருள்கள் ஆகியவற்றை ஓர் எல் லைக்குட்பட்டு ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இலவச அனுமதி தொடர்ந்து வழங்கப்பட்டதும் பருத்தித்

துணிகள், எண்ணெய், எண்ணெய் விதைகள் போன்ற பல பொருள்களுக்கு ஏற்றுமதிக் கோட்டாக்கள் உயர்த்தப்பட்டன. 1954 அக்டோபரில் இந்தோ-சீன வர்த்தக ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. அதன்படி இந்தியாவிலிருந்து புகையிலை ஏற்றுமதி செய்ய ஏற்பாடாயிற்று. எனினும், இந்த ஏற்றுமதி தாராள நடவடிக்கைகளால் துணிகள் அதிகம் பாதிக்கப் படவில்லை. ஏனெனின், இத் தாராளத் தன்மை ஏற்றுமதி களுக்கு மட்டுமன்றி இறக்குமதிகளுக்கும் ஓரளவு காட்டப் பட்டது. எனினும், மொத்தத்தில் இந்தக் காலத்தில் உள்நாட் டின் பொருளாதார நிலையையும் விலையளவையும் மனத்தில் கொண்டே அரசாங்கம் தன் வெளிநாட்டு வாணிபக் கொள் கையை மாற்றிக்கொண்டதென்று தெரிகிறது. ஏற்றுமதிகளையும் இறக்குமதிகளையும் ஒழுங்குபடுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைகள் உள்நாட்டு விலைகளைத் தக்கபடி மாற்றின என்பதில் யாதோர் ஐயமுமில்லை. ஆனால், இப்படி அடிக்கடி வாணிபக் கொள்கையை மாற்றியது, நாட்டின் தொழில்மீதும் வாணிபத்தின்மீதும் எந்த அளவுக்குப் பாதகமான விளைவை உண்டாக்கிற்று என்பதும் ஆராயவேண்டிய விஷயம்.

(ஆ) நேரடியான விலைமாற்றங்கள்

அரசாங்கம் வாணிபக் கொள்கையையும் வரிக்கொள்கை யையும் இப்படி அமைத்துக்கொண்ட அதே சமயத்தில், நாட் டில் உற்பத்திச் செலவையும் தேவையின் நிலையையும் மனத்தில் கொண்டு, பல பொருள்களின் விலைகளை நேரடியாக மாற்றியது. உற்பத்திச் செலவுகள் அதிகரித்ததற்காக உற்பத்தியாளர்களுக்கு ஈடுசெய்யும் பொருட்டு 1952-ன் மத்தியிலிருந்து இரும்பு, எஃகு, ரப்பர் ஆகியவற்றின் விலைகள் உயருவதற்கு அனுமதியளிக்கப் பட்டது. 1952 ஜூனில், ரயில் சுமைக் கூலி அதிகரித்ததால், எல்லா வகையான வார்ப்பிரும்புக்கும் சட்டப்படி அனுமதிக்கப் பட்ட விற்பனை விலையில் ஒரு டன்னுக்கு ரூ. 10 வீதம் உயர்த்த அனுமதி வழங்கப்பட்டது. 1953 நவம்பரில் மைசூர் இரும்பு எஃகு தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட விலையதிக மான வார்ப்பிரும்பை, மற்ற இரண்டு பெரிய கம்பெனிகளால் உற்பத்தி செய்யப்பட்ட வார்ப்பிரும்பின் விலைக்கே விற்கவேண்டு மென்று வசதி செய்வதற்காக, அதன் விலை மேலும் உயர்த்தப் பட்டது. பிடிப்பு விலைகள் அதிகரித்ததாலும், இறக்குமதி செய்யப் பட்ட எஃகு அதிக விலையுள்ளதாயிருந்ததாலும், சமனுக்கு நிதியில் (equalization fund) உண்டான குறைவைத் தவிர்ப்பதற்கு 1952-ல் இரண்டு தடவை எஃகின் விற்பனை விலை உயர்த்தப் பட்டது. 1952-ல் 100 பவுண்டுகளுக்கு ரூ. 128-லிருந்து ரூ. 138

ஆக உயர்த்தப்பட்ட முதல்வகை கச்சா ரப்பரின் உச்சவிலை மூன்று ஆண்டுகள் கழித்து மேலும் ரூ. 12 உயர்த்தப்பட்டு ரூ. 150 ஆயிற்று. அண்மையில் அது ரூ. 155·12 ஆகவும் உயர்ந்தது. மற்றவகை ரப்பருக்குத் தக்கவாறு விலை வித்தியாசம் ஏற்படுத்தப் பட்டது. 1955-ல் நிலக்கரிக்கும் எஃகிற்கும் மேற்கொண்டு விலைகள் ஏற்றப்பட்டன. ஆனால், வேண்டும்போது சில விலைகள் தாழ்த்தப்பட்டன. 1952-ன் இறுதியில் 1951-52-ல் இருந்த இருப்புச் சர்க்கரையின் தொழிற்சாலை விலையேற்று விலை ஒரு மணங்திற்கு வட இந்தியத் தொழிற்சாலைகளுக்கு ரூ.30-8/34-14-ல் இருந்து ஒரே சீராக ரூ. 27-க்கும், தென்னிந்தியத் தொழிற்சாலை களுக்கு ரூ. 29-12/33-0-விருந்து ரூ. 28-க்கும் குறைக்கப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட மைலோ, கோதுமை ஆகியவற்றின் விலை 1952, 1953-ல் படிப்படியாகக் குறைக்கப்பட்டது. இறக்கு மதி செய்யப்பட்ட கோதுமை, அரிசி ஆகியவற்றின் விலை 1954-55-ல் மேலும் குறைக்கப்பட்டது. 1952-53 பருவ காலத் திற்காக உயர்த்தப்பட்ட பருத்தியின் குறைந்த அளவு விலை. 1954-55 பருவத்திற்கு கண்டி ஒன்றுக்கு ரூ 55 குறைக்கப்பட்டு ரூ. 495 ஆயிற்று. பிறகு, ஒரு சூத்திரத்தினால் கரும்பின் விலை சர்க்கரையின் விலையோடு நீக்கப்பட்டது. அதன்படி வெவ்வேறு பகுதிகளில் கரும்பு விளைவிப்பவர்கள், சர்க்கரை உற்பத்திச் செல வுக்கும் கரும்பு உற்பத்திச் செலவுக்கும் உள்ள விகிதப்படியே சர்க்கரைக்குக் கிடைக்கும் நிகரவிலையின் அளவில் பங்குபெற வேண்டும்.

நிர்வாக உத்தரவினால் இவ்வாறு உண்டாக்கப்பட்ட பல விலை மாறுதல்கள், விலையமைப்பில் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பகுதியில் ஒரு நெகிழ்ச்சித் தன்மையை உண்டாக்கின. இல்லா விடின், அளிப்புக்கும் தேவைக்கும் தொடர்பில்லாத முறையில் விலைகள் அதிகம் மாறியிருக்கும். அதனால் விலைகளை நிலை நிறுத்த முடியாமல் போயிருக்கும். அன்றியும் விலைகளை இவ்வாறு மேல் நோக்கியும் கீழ்நோக்கியும் மாற்றியமைத்ததால், துய்ப்போர் குறைவான உற்பத்திச் செலவினாலும் அதிக உற்பத்தியினாலும் நன்மையடைந்தனர்; உற்பத்தியாளர்கள் அதிக உற்பத்திச் செலவினால் நஷ்டமடையாமல் பாதுகாக்கப்பட்டனர்.

(இ) விலைக்குப் பண ஆதரவளித்தல்

விலைகளை நிலைக்கச் செய்வதில் அரசாங்கம் விவசாய விலை களுக்குப் பண ஆதரவளிப்பது ஒரு முக்கியமான அண்மைக் கால நிகழ்ச்சியாகும். விவசாயத்தின் விசேஷத் தன்மையால் இவ் விஷயத்தில் அதற்குத் தனிச் சலுகை காட்டுவது அவசிய

மாகும். விலை மாறுதலுக்கேற்ப விவசாய உற்பத்தி அதிகமாக மாறுவதில்லை. விவசாயத்தை ஒரு வாழ்க்கை வழியாகக் கொண்டுள்ள பின்தங்கிய நாடுகளில் மட்டுமன்றி, விவசாயத்தை மிகுந்த அளவுக்கு வர்த்தக மயமாக்கியுள்ள முன்னேற்றமான நாடுகளிலும் இது உண்மையாகும்.[1] பொருளாதார அமைப்பின் மற்றப் பகுதியில் ஓரளவு நிலையான விலைகளும் ஏற்ற இறக்கங்கள் உள்ள உற்பத்தியும் அளிக்கும் வருமானத்தைவிட, ஓரளவு நிலையான உற்பத்தியும் ஏற்ற இறக்கங்கள் உள்ள விலைகளும் விவசாயிகளுக்கு அளிக்கும் வருமானம் நிலையற்றதாகும்.[2] இதன் விளைவு என்னவென்றால் விவசாயப் பொருள்களுக்குத் தேவை அதிகரித்தால், விவசாய விலைகள் மிகவும் அதிகமாகின்றனவே யன்றி, விவசாய உற்பத்தி அவ்வளவு அதிகமாவதில்லை. ஆகவே, பணவீக்கத்தின்போது விவசாயிகள் நன்மையடைகிறார்கள். தற்கு மாறுகப் பணவாட்டத்தின்போது விவசாயிகள் பெறும் விலைகள் மற்ற விலைகளைவிடக் குறைவாயிருக்கும். இதற்குக் காரணம் என்னவென்றால், சாதாரணமாக மிகக் குறைவாயிருக்கும் விவசாய உற்பத்தியின் நெகிழ்ச்சித் தன்மை, விலைகள் அதிகரிக்கும்போதைவிட விலைகள் குறையும்போது, மேலும் குறைவதேயாகும்.[3] சிறிய பண்ணை விவசாயம் நிகழும் நாட்டில் இது மேலும் உண்மையாகும். வளர்ச்சி குன்றிய பொருளாதாரத்தில் தேசிய வருமானத்தில் பெரும்பகுதி விவசாய வருமானமேயாகும். எனவே, இப் பிரச்சினையை மேலும் பெரிதாக்கக்கூடிய சில அம்சங்கள் இங்கு அதிகம் உண்டு. முதலாவதாக, முன்னேற்றமுள்ள நாடுகளிலும் முன்னேற்றம் குறைந்த நாடுகளிலும், விவசாய விலைகளிலும் வருமானத்திலும் மாறிமாறி வரும் ஏற்ற இறக்கங்கள் பொதுவாக இருப்பினும் முன்னேற்றம் குறைந்த நாடுகளில் பிரதேசங்கள்தோறும் ஏற்ற இறக்கங்களால் துன்பமுண்டாகும். இதற்குக் காரணம், இந்த நாடுகளில் கடத்து வசதிகள் அவ்வளவு திருப்திகரமாக இன்மையே. மேலும், இந்தியா போன்ற பரந்த பூகோள அமைப்புடைய நாடாயின், பிரதேசம் தோறும் நிலமும் காலநிலையும் வேறுபடுவதால், இப் பிரச்சினை மேலும் கடுமையாகிறது. வளர்ச்சி குன்றிய நாடுகளில் நிலைப்புத்தன்மை இல்லாததற்கு மற்றொரு காரணம், விரைவான பொருளாதார வளர்ச்சியினால் உண்டாகும் பொதுவான விவசாய

[1] உதாரணமாக 'Economic Stability in the Post-war World', பக். 76, 85 காண்க.

[2] B. D. Giles, 'Agriculture and Price Mechanism,' in 'Oxford Studies in Price Mechanism', eds. Wilson and Andrews, 1951, pp. 173–203.

[3] Geoffrey S. Shepherd, 'Agricultural Price Analysis', Third Edition, 1950. p. 16.

உற்பத்திப் பெருக்கத்திற்கேற்ப உடனே தேவை அதிகரிக்காது. ஆகவே, விலைகள் குறைந்து, உற்பத்தியைப் பாதிக்கும்.

இந்தியாவின் பொதுவிலைக் கொள்கையில், விவசாய விலைகளுக்கு முதன்மையளிக்க வேண்டுமென்பதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. இந்தியா முதன்மையாக விவசாய நாடாயிருப்பதால், விலைக்குறியீட்டெண்ணில் விவசாயப் பொருள்களின் விலைகள் முக்கிய இடம் பெறுகின்றன. விவசாயப் பொருள்களிலும், பயிர் செய்யப்படும் நிலத்தில் 80 சதவீதம் உணவுப் பயிர்கள் விளைவிக்கப்படும் நிலமாகும். ஆகவே, பொது விலைக்கும் பொருளாதார நிலைப்புக்கும் உணவு விலைகளின் நிலைப்பு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உணவுப் பயிர்களில், கோதுமை, அரிசி ஆகியவற்றின் விலைகள்தான் விவசாயப் பொருள்கள் எல்லாவற்றின் விலைகளும் நிலைப்பதற்குக் காரணமாயிருக்கின்றன. மற்றவற்றின் விலைகளை ஒழுங்குபடுத்தமுடியாவிடினும் இந்த இரண்டு உணவுப் பயிர்களின் விலைகளையாவது முன்கூட்டியே முடிவுசெய்யப்பட்ட வரம்புகளுக்குள் வைத்திருக்க வேண்டியது அவசியம். மக்களில் 60 சதவீதத்தினர் விவசாயத்திலிருந்து வருமானம் பெறுகின்றனர். இவர்கள் விவசாய விலைகள் உயருவதைத்தான் விரும்புவார்கள். இதற்கு மாறுக, தொழில்களிலும் நகரங்களிலும் உள்ள விவசாயம் செய்யாத 40 சதவீத மக்கள், ரொக்கமாகப் பணம் வாங்கும் விவசாயிகள். நிலமில்லாதவர்கள் ஆகியோர் உணவு விலைகள் குறைவதால் நன்மையடைகின்றனர். இந்தியாவில், குறிப்பாக இப்போதுள்ள நிலையில் விவசாயப் பொருள்களின் விலைகளில் அதிகக் கருத்தைச் செலுத்தவேண்டுமென்பதற்கு இரண்டாவது முக்கிய காரணம், அரசாங்கத் துறையில் இப்போது முதலீடு அதிகமாகி, எதிர்காலத்தில் மேலும் அதிகமாகும் என்பதுதான். நாட்டில் பெரும்பாலோர் தம் வருமானத்தில் பெரும்பகுதியை உணவிற்காகவே செலவிடுகிறார்கள். பணச் சந்தையில் அதிகப் பணம் செலுத்தப்பட்டு அதிக வேலையும் அளிக்கப்பட்டால், இப்படிக் கிடைக்கும் அதிகப் பணவருமானம், உணவுத் துறையில் அதிக நெருக்கடியை உண்டாக்கும். நம் பொருளாதாரத்தின் விலையமைப்பில் உணவுப் பொருள்களின் விலைகளே மிக முக்கியமுடையவை யாகையால், இது பணவீக்கப் போக்கை உண்டாக்கிவிடும். எனவே, விவசாயிகளின் நலனைக் கருதி ஒரு குறைந்த அளவு வருமானம் கிடைக்கும்படியும், வருமானத்தில் பருவங்களாலும் பிரதேசங்களாலும், ஏற்ற இறக்கச் சுழற்சிகளாலும் மாறுதல் உண்டாகாதவாறும் பாதுகாப்பு அளிப்பதோடு, நாட்டில் விவசாய விலைகளுக்கு ஓர் உச்ச அளவையும் நிர்ணயிப்பது அவசியமாகும்.

உலகம் முழுவதிலும் நீண்ட நாட்களாக விவசாய விலைகளின் நிலைப்பற்ற தன்மையும், அவற்றின் ஏற்ற இறக்கங்களால் நாட்டுப் பொருளாதாரத்தில் பாதகமான விளைவுகள் உண்டாவதும் பொருளாதாரத் துறையினரின் கருத்தைக் கவர்ந்துள்ளன. நிகரத் தேவையை அதிகரிப்பதற்குக் கெயின்ஸ் கூறிய யோசனைகள் தோன்றுவதற்கு முன்பு, உற்பத்தியைக் கட்டுப்படுத்தி விவசாயப் பொருள்களின் விலையை நிலைநிறுத்த முயற்சி செய்யப்பட்டது. மார்க்கெட்டிற்குப் பொருள்களை அளிப்பதைக் கட்டுப்படுத்துவதற்குக் கடைப்பிடிக்கப்படும் வழக்கமான வழிகள், பயிர் செய்வதைக் கட்டுப்படுத்தி உற்பத்தியை வரையறுத்தல், ஏக்கர் பரப்பைக் கட்டுப்படுத்துதல், ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுடன் கூடிய மார்க்கெட்டில் கட்டுப்பாடு, மார்க்கெட்டிற்கு இருப்புகள் செல்லாமல் நேரடியாகப் பிடித்து வைத்தல் முதலியவையாகும். இந்த வகையான கட்டுப்பாடுகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள், 1930–39-ல் பிரேசிலில் காப்பி விலைக் கட்டுப்பாடு, கியூபாவில் சர்க்கரைக் கட்டுப்பாடு, ஸ்டீவன்சன் செய்த ரப்பர்க் கட்டுப்பாடு முதலியன. இவைபெல்லாம் பல காரணங்களால் தோல்வியுற்றன.[1] அண்மைக் காலத்தில் பல நாடுகள் நன்கு சிந்தித்து விஞ்ஞான முறைப்படி அமைக்கப்பட்ட விலைக் கொள்கைகளைச் செயல்படுத்திவருகின்றன. அக் கொள்கைகளை அமைப்பதில், தேசிய வருமானத்தின்மீதும் நிகரத் தேவையின் மீதும், அடக்க விலை விகிதங்கள் முதலியவைமீதும் விவசாய ஏற்ற இறக்கங்களின் விளைவை நன்கு சிந்தித்துள்ளனர். பொதுவாக இந்தக் கொள்கைகளின் நோக்கங்களாவன: விவசாயிகளுக்கு நிலையான உண்மை வருமானம் கிடைக்கச் செய்வதற்கு, விவசாயிகள் வாங்கும் பொருள்களின் விலைக்கும் விவசாயப் பொருள்களின் விலைக்கும் நியாயமான சமத்துவத்தை நிலைநாட்டுவது; அதிக நிலையான விவசாய விலைகளால் விவசாயிகளுக்கு அதிகப் பொருளாதாரப் பாதுகாப்பு அளிப்பது; கடைசியாக, தேவைக்கேற்ப உற்பத்தியை மாற்றுவதில் உதவிசெய்வது, இந்த நோக்கங்களுக்கேற்ப, அமெரிக்கா விவசாயிகளுக்குக் கடன்களை வழங்கியும், கொள்முதல் ஒப்பந்தங்களைச் செய்துகொண்டும், பண்டக்கடன் கார்ப்பரேஷன் மூலமாகச் சரக்குகளை வாங்கியும் விலைக்குப் பண ஆதரவு அளிக்கும் திட்டங்கள் பலவற்றைக் கையாண்டு வருகிறது. அமெரிக்காவில் விலைக் கொள்கையின் குறிப்பான நோக்கம் பொதுவான விலைச்சமத்துவம் அன்று; ஒவ்வொரு விவசாயப் பொருளுக்கும் விலைச்சமத்துவம் அளிப்

[1] உதாரணமாக, 'Jules Backman' எழுதிய கட்டுரை 'Government Control of Prices', அத். XI, 'Planned Society Yesterday, Today and Tomorrow', (ed. by Findlay Mackenzie, 1937) என்ற நூலில் காண்க.

பதே; அதாவது, ஒவ்வொரு வகை உற்பத்தியாளருக்கும் (உதாரணம், கோதுமை, பருத்தி, பட்டாணி) வருமானத்தில் சமத்துவத்தை உண்டாக்குவது. இங்கிலாந்தில் கோதுமை, பார்லி, ஓட்ஸ், உருளைக்கிழங்கு, பால், முட்டை, உரோமம் போன்ற பல பண்டங்களுக்கு அரசாங்கம் விலை உத்தரவாதம் அளிக்க ஒப்புக்கொண்டு, விவசாயிகளுக்குப் பொருளாதாரப் பாதுகாப்பு அளிக்கிறது. மேற்கு ஐரோப்பாவில் பல நாடுகளிலும், இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் அறுவடைக் காலத்திற்குப் பல மாதங்கள் முன்னரே உத்தரவாத விலைகள் அறிவிக்கப்படும். ஆகையால், இப்படி அறிவிக்கப்பட்ட விலைகளுக்கேற்ப விவசாயிகள் தம் உற்பத்தித் திட்டங்களை மாற்றியமைத்துக் கொள்ளமுடிகிறது. இவ்வாறு அந்த நாடுகளில் தேவைக்கேற்ப உற்பத்தியைச் சரிசெய்ய முயற்சி செய்யப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கைகள் திருப்திகரமான பயனை அளித்து வருகின்றன. ஆனால், இந்தியா போன்ற நாடுகளில் இவற்றை முழுவதுமாக அப்படியே கடைப்பிடித்தால், அதேபோலப் பயன் கிடைக்கும் என்று உத்தரவாதம் கூறமுடியாது. ஏனெனின், இந்த இருவகையான நாடுகளுக்கும் இடையே, பொருளாதார அமைப்பின் தன்மையிலும், உற்பத்தியிலும், மார்க்கெட்டிங் முறையிலும் நிறைய வித்தியாசமிருக்கிறது. உதாரணமாக இங்கிலாந்தில் விவசாயப் பொருளாதாரம் முக்கியமாக ஓர் உணவுத் தொழிலாக இருப்பதாலும், இந்தியாவில் அது உணவையும் தொழில் கச்சாப் பொருள்களையும் தழுவியதாக இருப்பதாலும், இங்கிலாந்தில் செய்வதுபோலவே இந்தியாவிலும் முழுவதுமாகச் செய்வது முடியாது.[1] இந்தியாவில் நடத்தப்படும் எத்தகைய விவசாய விலைக்கொள்கையும் இந்தியப் பொருளாதாரத்தின் சிறப்பியல்புகளைத் தழுவியதாய் இருக்கவேண்டும்.

இந்தியாவில் விவசாய விலைகளை நிலைபெறச் செய்வதற்கும் விவசாயிகளுக்கு நிலையான வருமானம் கிடைக்கச் செய்வதற்கும் அண்மையில்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முன்னரே கூறியபடி, 1952 வரையில் அரசாங்கம் தீர்க்கவேண்டிய பிரச்சினை, பொது விலையளவைக் குறிப்பாக உணவு விலைகளை இறக்கிவைத்து அதனால் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதே யாகும். 1951–52-ன் பின்னிறக்கத்திற்குப் பிறகு, 1953-ன் முதல் பாதியில் உணவுப் பொருள்களின் விலைகளும் தொழில் கச்சாப் பொருள்களின் விலைகளும் மறுமலர்ச்சியடைந்தன. ஆனால், 1953-ன் மூன்றும் கால்பகுதிக்குப் பிறகு, அதிக

[1] K. S. Sonachalam, 'Indian Journal of Agricultural Economics', Conference Number, 1955.

உற்பத்தியாலும், மார்க்கெட்டுகளில் அதிகப் பொருள்கள் கிடைத்தமையாலும், இந்த விலைகளில் திடீரென்று பின்னடைவு உண்டாயிற்று. உணவுப் பொருள்களின் மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண் 1953 ஆகஸ்டில் 407·0 ஆக இருந்து, 1954 ஜூனில் 343·2 ஆகவும், அதே காலத்தில் தொழில் கச்சாப் பொருள்களின் விலைகள் 488·7-லிருந்து 441·0-க்கும் இறங்கின. இதற்கு மாறாக, 1953 ஆகஸ்டில் செய்பொருள்கள் 370·8-லிருந்து 1953 டிசம்பரில் 363·8-க்கு இறங்கிப் பிறகு மறுமலர்ச்சியடைந்து, 1954 ஜூனில் 378·7-ல் நின்று, 1953 ஆகஸ்டு நிலையிலிருந்து சிறிது உயர்வைக் காட்டின. இந்தக் குறுகிய காலத்திற்குள் வாணிப மாற்று வீதம் விவசாயிகளுக்கு அதிக பாதகமாகத் திரும்பி விட்டதையே இது காட்டுகிறது. மொத்த வருமானமாகிய ரூ. 10,000 கோடியில் ரூ. 5,000 கோடி அல்லது சரிபாதி விவசாயப் பொருள்களின்மூலம் கிடைப்பதால், விவசாய விலைகளின் வீழ்ச்சியால் கிராமப் பகுதிகளில் வாங்குந்திறன் கணிசமாகக் குறைந்திருக்கவேண்டும். ஆகவே, யூனியன் அரசாங்கம் விவசாய விலைகளுக்கு ஆதரவளிக்க முடிவு செய்தது.

சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட்டால், விலைக் கட்டுப்பாட்டில் நேரடியான முறைகள் நல்ல பலனைத் தரும். ஆனால், நாட்டில் அளிப்பையும் தேவையையும் ஒழுங்குபடுத்திப் பிறகு, இதைப்போன்ற விலைக்கொள்கை கடைப்பிடிக்கப்பட்டால் அதிக வெற்றி கிடைக்கும். அநுபவத்தில், குறிப்பிட்ட சில பண்டங்களின் அளிப்பையும் தேவையையும் கட்டுப்படுத்துவதற்கு மிக்க பயனுள்ள வழி என்று தெரிந்தது யாதெனில், அரசாங்கம் மார்க்கெட்டில் புகுந்து தன் கணக்கில் கொள்முதல், விற்பனை நடவடிக்கைகளை மேற்கொண்டு நடத்துவதுதான். இந்தியா போன்ற ஒரு நாட்டில் பருவகால ஏற்ற இறக்கங்களை மட்டுமன்றி, பிரதேச முறையான வேறுபாடுகளையும் நீக்கவேண்டுமானால், விலைகள் மிகவும் குறையும் தன்மையுள்ள இடங்களில் குறைந்த அளவு சிக்கனமான விகிதங்களில் முக்கியமான பண்டங்களை வாங்கி, இப்படிச் சேர்க்கப்பட்ட இருப்புகளை, விலைகள் அதிகமாக ஏறும் இடங்களில் வெளியிடவேண்டும். இந்த வேலையை வெற்றி பெற நடத்தவேண்டுமானால், தேவையுள்ள பண்டங்களுக்கு, பொது விலையளவையும், போட்டியாக உள்ள பயிர்களின் விலையளவையும், வாழ்க்கைச் செலவையும், அளிப்பு, தேவை நிலைகளையும் அனுசரித்து, உயர்ந்த அளவு விலையையும் குறைந்த அளவு விலையையும் நிர்ணயிக்கவேண்டும். விவசாயிகளின் உண்மை வருமான அளவை ஒரு நிலையில் நிறுத்தவேண்டுமானால், விவசாயிகளுக்கு உண்டாகும் செலவுகளை, அதாவது, அவர்களால் வாங்கப்

படும் பண்டங்களை அநுசரித்து இந்த அதிகபட்ச, குறைந்தபட்ச எல்லைகளை நிர்ணயிப்பது முக்கியமாகும். விவசாயப் பொருள்களின் விலைகளும் அல்லாத பொருள்களின் விலைகளும் சாதாரண நிலையில் இருந்த காலத்தை அடிப்படையாகக்கொண்டு இவ்விரண்டுக்கும் சமத்துவத்தை நிலைநாட்ட, உயர்ந்தபட்ச விலைகளையும் குறைந்தபட்ச விலைகளையும் நிர்ணயிக்கவேண்டும்.[1] இறுதியாக, இந்த நடவடிக்கைக்கு அதிக நிலையான நிதிவசதிகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அன்றியும், போதிய கிடங்குவசதியும் இருக்க வேண்டும். விலைகள் துணைக்குழு 1½ மில்லியன் டன் உணவு தானியங்களை நிலையான இருப்பாக வைத்திருக்கவேண்டுமென்று பரிவுரை கூறியது. இது போதாது என்று தோன்றுகிறது. மூன்று முதல் நான்கு மில்லியன் டன் உணவு தானியங்களை இருப்பாக வைத்துக் கொள்வதற்கு ரூ. 75 முதல் ரூ. 100 கோடிவரையில் நடைமுறை முதல் வேண்டுமென்று அண்மையில் மதிப்பிடப்பட்டது.[2]

இறந்த மார்க்கெட்டு நடவடிக்கையாக விவசாய விலைக்கு ஆதரவு கொடுக்கும் செயல் 1954 மத்தியில் யூனியன் அரசாங்கத்தினால் தொடங்கப்பட்டது. எனினும், இவ் விஷயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சோதனை முறையிலேயே இருந்தன. அவை விரிவாக இல்லை. அன்றியும், இந்தக் கொள்கையில் அடங்கிய குறிப்பான பிரச்சினைகளை விரிவாகவும் விஞ்ஞான முறையிலும் ஆராய்ந்து, அவ்வடிப்படையில் அமைக்கவில்லை. அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் உருவாகியுள்ள முறைப்படி, நிருவாக நுட்ப முறையும் திருப்தியாக இல்லை. இந்தக் கொள்கையை வகுப்பதில் அரசாங்கத்தின் நோக்கம், உணவு தானிய உற்பத்தியாளர்களுக்கு இலாபகரமாக இல்லாத அளவுக்கு விலைகள் வீழ்ந்துவிட்டால், அவர்களுக்கு ஆதரவளிப்பதுதான். உத்தரப்பிரதேசம், ராஜஸ்தானம், பஞ்சாப் இராச்சியங்கள் கோதுமைக்கு மணங்குக்கு ரூ. 10 வீதம் இந்தக் குறைந்தபட்ச எல்லையை நிர்ணயித்தன. 1954-ன் இறுதியில், இந்திய அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து கம்பையும் சோளத்தையும் மணங்கு ரூ. 5-8-0 வீதமும், நினையை மணங்கு ரூ. 6 வீதமும் குறிப்பிட்ட மார்க்கெட்டுசளில் நடப்புப் பருவத்தில் வாங்குவதென்று முடிவு செய்தது. பிறகு, பல இராச்சியங்களில் விவசாய விலை ஆதரவு

[1] V. T. கிருஷ்ணமாச்சாரி குழு, 1924–25 முதல் 1928–29 வரையுள்ள காலத்தை அடிப்படைக் காலமாகக்கொண்டு சமத்துவ விலைகளை நிர்ணயிக்க வேண்டுமென்று யோசனை கூறியது. போருக்குப் பிறகு சில ஆண்டுகளில் இருந்த விலைகளைவிட, விவசாய விலைகள் கீழே இறங்காமல் இது தடுக்கும்.

[2] 1955 நவம்பர் 3ஆம் தேதி 'ஹிந்து' பத்திரிகையில் வெளியிடப்பட்ட, சென்னைப் பல்கலைக்கழக 'கோகலே வைப்பு நிதிச் சொற்பொழிவுகள்' 1955–56, வரிசையில் டாக்டர் R. N. பொடுவல் நிகழ்த்திய, 'விவசாய விலைக் கொள்கை' என்ற சொற் பொழிவு.

பரவியது. 1956-ன் ஆரம்பத்தில், உத்தரப்பிரதேசம், இராச்சியம் முழுவதிலும் பயற்றின் குறைந்த அளவு விலையை மணங்குக்கு ரூ. 6 என்று நிர்ணயித்து, அதையும் விலை ஆதரவுத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவந்தது. 1955 மார்ச்சில், உத்தரப்பிரதேசம், பம்பாய், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தானம், மத்திய பாரதம், விந்தியப் பிரதேசம், போபால் ஆகிய ஏழு இராச்சியங்களில் கம்பு, தினை, சோளம் ஆகிய தானியங்களுக்கு விலை ஆதரவு அளிக்கப்பட்டது. சென்னையில், முக்கிய உணவுகளாகிய அரிசி, தினை போன்ற பண்டங்களின் விலைகளைக் கவனிக்கவும், அவற்றின் விலைகளை நிலை நிறுத்துதற்கு உடனடியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஒரு தனிக்குழு நிறுவப்பட்டது. இந்தத் திட்டம் திறமையாகச் செயல்படுவதற்கு, யூனியன் அரசாங்கமும் இராச்சிய அரசாங்கங்களும் மேற்கொண்ட இந்த நடவடிக்கைகள் சரியாக இணைக்கப்பட்டும் ஒன்றுபடுத்தப்பட்டும் இருக்கவேண்டும் என்று இப்பொழுது தெரிகிறது. இவ் விஷயத்தில் செய்யப்பட்ட முயற்சிகளால் விவசாய விலைகள் மிகச் சிறிய அளவே ஏறின என்று தெரியவருகிறது. 1954-ன் மத்தியில் விலை ஆதரவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டாலும், 1955வரையில் உணவு விலைகள், தொழில் கச்சாப்பொருள்கள் ஆகியவற்றின் விலைகள் குறைந்து கொண்டே இருந்தன. உணவுப் பொருள்களின் மொத்த விற்பனை விலைக்குறியீட்டெண் 1954 ஜூனில் 343·2 ஆக இருந்து 1955 மார்ச்சில் 297·0-க்கு மேலும் பின்னிட்டது. அதே காலத்தில் தொழில் கச்சாப் பொருள்கள் 441·0-லிருந்து 412·7-க்கு இறங்கின.

(4) விவசாய விலைகள் ஏறுவதைத் தடுப்பதற்கு அண்மையில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள்

1955-ன் மத்தியிலிருந்து, பொதுவாக விலைகளில் ஏறுமுகம் இருந்து வருகிறது. உணவுப் பொருள்களும் தொழில் கச்சாப் பொருள்களும் மிகவும் உயர்ந்து, 1955 மேக்கும் 1960 ஜூனுக்கும் இடையில் முறையே 46 சதவீதமும், 49 சதவீதமும் ஏறின. கம்பின் விலை மிக அதிகமாக 150 சதவீதமும், அரிசி, கோதுமை, பயறு ஆகியவை முறையே 54 சதவீதம், 52 சதவீதம், 111 சதவீதமும் ஏறின. இந்த விலை மாறுதலுக்குக் காரணம் ஓரளவு இந்தக் காலத்தில் சில வருடங்களில் உற்பத்தி குறைந்ததும், ஓரளவு அரசாங்கம் அதிகச் செலவு செய்ததும், பணஅளிப்பில் பெருக்கம் உண்டானதுமேயாகும். ஆகவே, விலை ஏறுவதைத் தடுப்பதற்கு விலை ஆதரவு நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்பட்டு, விலைக் கொள்கையும் கைவிடப்பட்டது. முழு வேலையளிப்பை நெருங்காத ஒரு பொருளாதார அமைப்பில், சிறிது படிப்படியான எதிர்பாராத விலையுயர்வு தொழிலுக்கும் உற்பத்

திக்கும் ஊக்கம் தருவதாயினும்,[1] இந்தியாவில் இப்போதுள்ள நிலையில், அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிபெற நிறைவேற்றப் படவேண்டுமானால், உணவு விலைகள் கட்டுக்கடங்காமல் போவ தைத் தடுக்கவேண்டுமென்பது உண்மையே. அன்றியும், முதல் திட்டத்தின் இறுதியில் விவசாய விலைகள் வீழ்வதற்குக் காரணமா யிருந்த கணிசமான உற்பத்திப் பெருக்கம், சாதகமான பரு வங்கள் தொடர்ந்து வந்ததனால் ஏற்பட்டதுதான் என்பதை மறந்துவிடலாகாது. அத்தகைய நல்ல பருவங்கள் ஒழுங்காக வரும் என்ற உத்தரவாதமளிக்க முடியாததாலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதியளிப்பதில் அதிகப் பணவீக்க ஆற்றல் உண்டாக்கப்பட்டுவிட்டதாலும், அதிகத் தேவை நெருக் கடி தொடர்ந்து இருக்கக்கூடும் என்பதனாலும், அடுத்த சில ஆண்டுகளில் விவசாய விலைகள் இறங்குவதைத் தடுப்பதற்குச் செயற்கையான ஆதரவளிப்பதைவிட அவற்றைத் தாழ்த்தி வைப்பதற்கே நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருக்கும் என்ற எண்ணம் உண்டாகிறது.

கடந்த மூன்றாண்டுக் காலமாக, உணவுப் பொருள்களின் விலைகளும், மற்ற விவசாயப் பொருள்களின் விலைகளும் ஏறாமல் தடுப்பதற்கு அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள், அளிப்பு நிலையையும் பங்கீட்டு முறையையும் சீர்திருத்தியும், தேவையை, குறிப்பாக, ஊகவாணிகத் தேவையைக் கட்டுப்படுத் தியும் விலையளவை நிலைநிறுத்த வேண்டுமென்ற நோக்கம் உடையவையே. உள்நாட்டில் முடிந்த அளவு அதிகமாக உற் பத்தியைப் பெருக்குவதற்கு விடாமல் முயற்சிகள் தொடர்ந்து செய்யப்பட்டிருப்பினும், துய்ப்போருக்கு வேண்டிய உணவு அளிப்பைப் பெருக்குவதற்கு உணவை இறக்குமதி செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1956-ல் அமெரிக்க அரசாங்கத்தின் பொதுச் சட்டம் 480-ன்படி (P.L. 480), கோதுமையை இறக்குமதி செய்வதற்கும், பர்மாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதற்கும் ஒப்பந்தம் செய்துகொள்ளப் பட்டது. அடுத்த ஆண்டில் அமெரிக்காவுடன் செய்துகொண்ட மற்றோர் ஒப்பந்தத்தின்மூலம், முதலில் பருத்தி, புகையிலை, பால்பண்ணைப் பொருள்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்வ தற்காக இருந்த நிதிகளைத் திருப்பி 8 லட்சம் டன் கோதுமை இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. 1958-ல் பொதுச் சட்டம் 480-ன்படி 38 லட்சம் டன் கோதுமை பெறுவதற்கு

[1] George L. Mehren, Discussion of the Paper on 'Production and Distribution Problems under Direct Price Controls' by Don Pearlberg. 'Journal of Farm Economics', American Farm Economic Association, 1951, p. 685.

அமெரிக்காவுடன் மேலும் ஏற்பாடு செய்யப்பட்டது. அன்றியும் 1959 மார்ச்சில் அமெரிக்காவுடன் ஒரு பண்டமாற்று ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படி இந்திய மாங்கனீசு, இரும்பு கலந்த மாங்கனீசு, 'மற்றும் ஒத்துக்கொள்ளப்பட்ட மற்றப் பொருள்கள்' ஆகியவற்றிற்குப் பதிலாக, 4·5 லட்சம் டன் அமெரிக்க உபரி தானியம் பெற ஏற்பாடாயிற்று. இதனேடு, 1958-ல் கனடாவிலிருந்து கனடா டாலரில் 33·8 மில்லியன் மதிப்புள்ள 5·4 லட்சம் டன் கோதுமை வாங்குவதற்காக இரண்டு தள்ளிப்போட்ட செலுத்து ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டன. 1960-ல் மேலும் அதிக உணவு தானியங்களைப் பெறுவதற்காக, 30 லட்சம் டன் கோதுமையையும் கோதுமை மாவையும், பருத்தி, புகையிலை, உணவு தானியங்கள் போன்ற வேறு பொருள்களையும் வாங்கும் பொருட்டு, 1959 நவம்பரில் அமெரிக்காவுடன் பொதுச் சட்டம் 480-ன்படி நான்காவது ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடப் பட்டது. அன்றியும் கனடாவுடனும் கோதுமை பெறுவதற்காக மேலும் இரண்டு ஒப்பந்தங்கள் முடிக்கப்பட்டன. அமெரிக்கா, பர்மா, ஐக்கிய அரபுக் குடியரசு ஆகியவற்றிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதற்காகப் புதிய ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. 1960 மேயில் அமெரிக்காவுடன் பொதுச்சட்டம் 480-ன்படி கனடியோக ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டு, அடுத்த நான்கு ஆண்டுகளில் 16 மில்லியன் மெட்ரிக் டன் கோதுமையும், ஒரு மில்லியன் மெட்ரிக் டன் அரிசியும் பெற ஏற்பாடாயிற்று. 1956 முதல் 1959 முடிய நான்கு ஆண்டுகளில் செய்யப்பட்ட உணவு இறக்குமதிகள் முறையே 1·2, 35·9, 31·7, 38·1 லட்சம் டன்கள் ஆகும். அதே சமயத்தில், தொழில் கச்சாப் பொருள்களின் ஏற்றுமதி (முக்கியமாகக் கச்சாப் பருத்தியும் உணவு தானியங்களும்) கட்டுப்படுத்தப்பட்டது அல்லது முற்றிலும் தடுக்கப்பட்டது.

உணவு தானியங்களை இறக்குமதி செய்வதில் அரசாங்கம் நம் நாட்டுப் பொருளாதாரத்தின் மொத்தத் தேவையை மனத்தில் கொண்டிருப்பினும், விலைகளை ஓரளவு நிலையாக வைத்திருப்பதற்கு, நாட்டில் பல இராச்சியங்களுக்கும் பகுதிகளுக்கும் இடையே இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களைச் சரியாகப் பங்கிடு செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யவேண்டியதாயிற்று. இதற்காக உணவு மண்டலங்களை ஏற்படுத்தி, இறக்குமதி செய்யப்பட்ட உணவு தானியங்களைக் கட்டுப்பாட்டு விலைக்கு அளிக்கப் பங்கீட்டு முறை ஒழுங்குபடுத்தப்பட்டது. அன்றியும், அரசாங்கம் வெவ்வேறு மண்டலங்களிலும் இராச்சியங்களிலும் கிடைத்த உணவு தானியங்களைக் கொள்முதல் செய்து, தன்கீழ் உள்ள நிறுவாகத்தினர் மூலமாகப் பங்கீடு செய்ய வழிசெய்தது.

1956-ல் இறக்குமதி செய்யப்பட்ட உணவு தானியங்களைப் பங்கீடு செய்வதற்காக நாட்டின் பல பகுதிகளில் மொத்தம் 20,000 நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டன. 1958-ன் இறுதியில் இறக்குமதி செய்யப்பட்ட உணவு தானியங்களை அதிக விலைக்கு விற்பதைத் தடுப்பதற்காக இந்திய அரசாங்கம், இறக்குமதி செய்யப்பட்ட உணவு தானிய (அதிகாரம் பெறுத வியாபாரத் தடுப்பு) உத்தரவு (1958) ஒன்றைப் பிறப்பித்தது. அதன்படி அதிகாரம் பெற்ற வியாபாரிகள் அன்றி வேறு எவரும் இறக்குமதி செய்யப்பட்ட உணவு தானியங்களில் சிறிதளவேனும் விற்பதோ சேமித்து வைப்பதோ கூடாதென்று தடுக்கப்பட்டது. மண்டல முறையின் நோக்கம் ஒவ்வொரு மண்டலமும் கூடியவரையில் தன்னையே நம்பியிருக்க வேண்டும் என்பதே. 1957-ன் நடுவில் மூன்று கோதுமை மண்டலங்கள் உண்டாக்கப்பட்டன. பஞ்சாப், ஹிமாசலப் பிரதேசம், டெல்லி ஆகியவை ஒரு மண்டலம்; உத்தரப் பிரதேசம் மற்றொரு மண்டலம், இராஜஸ்தானம், மத்தியப் பிரதேசம், பம்பாய் (பம்பாய் நகரம் நீங்கலாக) ஆகியவை மூன்றுவது மண்டலம்; பிறகு இவை மாற்றியமைக்கப்பட்டு ஐந்து மண்டலங்களாக்கப்பட்டன. அவை (1) பஞ்சாபும், யூனியன் பிரதேசங்களாகிய ஹிமாசலப் பிரதேசமும் டெல்லியும்! (2) உத்தரப் பிரதேசம்; (3) மத்தியப் பிரதேசம்; (4) இராஜஸ்தானம்; (5) பம்பாய். இந்த மண்டல ஏற்பாட்டின் படி, ஒவ்வொரு மண்டலத்திற்குள்ளும் கோதுமையும் கோதுமைப் பொருள்களும் தடையின்றிக் கொண்டுசெல்லப்படலாம். ஆனால், சம்பந்தப்பட்ட இராச்சியங்கள் அனுமதியளித்தாலன்றி மண்டலங்களுக்கிடையே ஏற்றுமதியும் இறக்குமதியும் அனுமதிக்கப்படுவதில்லை. 1957 ஜூலையில் கோதுமை மண்டலம்போல அரிசி மண்டலம் ஒன்று உண்டாக்கப்பட்டது. அதில் தென் இராச்சியங்களாகிய ஆந்திரப் பிரதேசம், கேரளம், சென்னை, மைசூர் ஆகியவை அடங்கும். இதன் நோக்கம் ஒவ்வொரு பகுதியும் தன்னிறைவுடன் இருக்கவேண்டுமென்பதும், அரிசியைக் குறுக்கே கொண்டுசெல்லக்கூடாது என்பதும் ஆகும். 1958 செப்டம்பரில் பஞ்சாபும், யூனியன் பிரதேசங்களாகிய ஹிமாசலப் பிரதேசமும் டில்லியும் சேர்ந்து இரண்டாவது அரிசி மண்டலம் ஒன்று உண்டாக்கப்பட்டது. 1959-ன் கடைசியில், உபரி இராச்சியமாகிய ஒரிஸ்ஸாவையும், பற்றுக்குறை இராச்சியமாகிய மேற்கு வங்காளத்தையும் சேர்த்து கிழக்கு அரிசி மண்டலம் உண்டாக்கப்பட்டது. ஒவ்வொரு மண்டலத்திலும் மத்திய அல்லது இராச்சிய அரசாங்கங்கள் உணவு தானியங்களை வாங்கி அவற்றை நியாய விலைக்கடைகள் மூலம் விற்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக 1957-ல் அத்தியாவசியப் பண்டச் சட்டம்

(1955) திருத்தப்பட்டது. இதனால், முந்திய மூன்று மாதங்களில் இருந்த சராசரி மார்க்கெட்டு விலைக்கு வியாபாரிகளிடமிருந்து இருப்புகளைப்பெற அரசாங்கம் அதிகாரம் பெற்றது. இராச்சிய அரசாங்கங்களுக்கு ஆங்காங்குள்ள தேவை, அளிப்பு நிலைகளையொட்டி வாங்கும் விலையையும், விற்கும் விலையையும் நிர்ணயிக்க உரிமை அளிக்கப்பட்டது. ஆகவே, 1958-ல் பல இராச்சிய அரசாங்கங்கள் தங்கள் கணக்கில் அரிசியையும் நெல்லையும் வாங்க முற்பட்டன. இருப்பினும், விலையேற்றத்தைத் தடுக்கவும், கொள்முதல் செய்ய வசதி உண்டாக்கவும், மத்திய அரசாங்கமும் பெரும்பாலும் எல்லா இராச்சியங்களுக்கும் நெல்லுக்கும் அரிசிக்கும் அதிகபட்சக் கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயித்தது. மேலும், பல இராச்சியங்கள் மொத்த வியாபாரிகளுக்கு அனுமதி வழங்கியும், அவர்களுடைய கொள்வினை கொடுப்பினைகளுக்கு அன்றுடம் கணக்கு வைத்துக்கொள்ளுமாறு உத்தரவிட்டும், குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை தனித்தனி தானியங்களின் இருப்புகள், கொள்முதல், விற்பனை ஆகியவைபற்றிய விவரங்களை அரசாங்கத்திற்கு அனுப்புமாறு கோரியும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீண்ட காலக் கொள்கையாகப் பங்கீட்டை ஒழுங்குபடுத்துவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஒரு முக்கிய நடவடிக்கை, 1959 ஏப்ரலில் உணவு தானியங்களில் அரசாங்க வாணிகத்தைத் தொடங்கியதுதான். இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாவது, நுய்ப்போர் கொடுக்கும் விலைக்கும், உற்பத்தியாளர் பெறும் விலைக்கும் உள்ள வித்தியாசத்தை மிகக் குறைந்த அளவாகச் செய்வதும், அதே சமயத்தில் இருதிறத்தாருக்கும் நியாயமான விலை கிடைக்கச் செய்வதும் ஆகும். ஆரம்பத்தில் அரசாங்கத்தின் நோக்கம், கோதுமை, அரிசி ஆகியவற்றைமட்டும் அரசாங்க வாணிகத்தின் எல்லைக்குள் கொண்டுவருவதும், இதை லாபமும் நஷ்டமும் இல்லாத முறையில் நடத்துவதும்தான். உற்பத்தியாளருக்குக் குறைந்தபட்ச விலை கிடைக்கும்படி செய்வதற்காகக் கட்டுப்பாட்டு விலையில் உற்பத்தியாளரிடமிருந்து உணவு தானியங்களை வாங்குவதற்கு அரசாங்க அலுவலர்களை அரசாங்கம் நியமிக்கும். இவ் விலைகள் ஓர் இராச்சியம் அல்லது பிரதேசம் முழுவதும் ஒரே மாதிரியாக இருக்கும். ஆரம்ப நிலையில் சில்லறை விலைகள் கட்டுப்படுத்தப்படமாட்டா. எனினும், அரசாங்க வாணிகத்தின் இறுதி நோக்கம், நியாயவிலைக் கடைகளை அதிகரித்தும், சில்லறை வியாபாரத்தைத் நுய்ப்போர் கூட்டுறவுகள் மூலமாக நடத்தியும், சில்லறை விலைகளைத் தக்கபடி மாற்றவேண்டும் என்பதே. மற்றொருபுறம், கிராமங்களில்

பண்ணைகளில் கிடைக்கும் உபரியைச் சேவா கூட்டுறவுகள் சேகரிக்கும். அரசாங்க வாணிகத்தை ஆரம்பித்த முதல் இராச்சியம் ஒரிஸ்ஸாதான். அங்கு 1959 ஜனவரி முதல்தேதி நடைமுறைக்கு வந்த ஒரிஸ்ஸா உணவு தானியக் கட்டுப்பாட்டு உத்தரவுப்படி, அரசாங்கம் அனுமதிபெற்ற வணிகர்கள்மூலமாக அரிசி, நெல் உபரியையெல்லாம் கொள்முதல் செய்ய அதிகாரம் பெற்றது. இவ் வணிகர்கள் அரசாங்கம் நிர்ணயித்த குறைந்தபட்ச விலைகளுக்கு உற்பத்தியாளர்களிடமிருந்து தானியங்களை வாங்கிக் குறிப்பிட்ட விலைகளுக்கு அரசாங்கத்திற்கு விற்கவேண்டுமென்று ஒப்பந்தத்தினால் கட்டுப்படுத்தப்பட்டனர். எனினும், உணவு தானியங்களில் அரசாங்க வாணிகம் வெற்றிபெறவில்லை. 1959-ல் மேற்கு வங்காளம், பீகார் ஆகிய இரண்டு இராச்சியங்கள் அரிசி கொள்முதல் செய்வதைக் கைவிட்டன. சென்னையும் மைசூரும் 1959-60 பயிர்களுக்குக் கொள்முதல் நடவடிக்கை எடுப்பதில்லை என்று முடிவுசெய்தன. 1959-60-ல் பஞ்சாப், மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், அஸ்ஸாம், ஒரிஸ்ஸா ஆகிய ஆறு இராச்சியங்களில்மட்டும் கொள்முதல் தொடர்ந்து நடந்தது.

நல்ல பங்கீட்டு முறையை ஏற்படுத்தி உணவுதானிய விலைகளை ஒழுங்குசெய்வதற்கு மத்திய, இராச்சிய அரசாங்கங்கள் எடுத்துக் கொண்ட பெரும்பாலான நடவடிக்கைகள், 1957-ல் யூனியன் அரசாங்கம் உணவு விலைகளின் ஏற்றத்தைப்பற்றி ஆராய்வதற்கு அமைத்த குழுவின் பரிவுரைகளை ஒட்டியே இருந்தன. 1957-ன் இறுதியில் அக் குழு அளித்த அறிக்கையில், விலைநிலைப்புக் குழு ஒன்றை ஏற்படுத்தவும், உணவு தானியங்களைத் திறந்த மார்க்கெட்டில் வாங்கவும் விற்கவும் ஓர் உணவு தானிய நிலைப்பு நிறுவனத்தை அமைக்கவும், உத்தியோகப் பற்றற்ற மத்திய உணவு ஆலோசனைக் குழு ஒன்றை நிறுவவும், விலைத் துப்பறியும் பிரிவு ஒன்றை உண்டாக்கவும் பரிவுரைகள் சிலவற்றைக் கூறியிருந்தது.

அதிக இறக்குமதிக்கும், கிடைக்கக்கூடிய சாதனங்களை நன்கு பங்கீடு செய்வதற்கும் ஏற்பாடுசெய்ததுடன், பணக்கட்டுப்பாடு, செலாவணிக் கட்டுப்பாடு, முன்னேக்கிய மார்க்கெட்டு கமிஷன் ஆகியவை மூலமாகத் தேவையை, குறிப்பாக, ஊகவாணிகத் தேவையைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பொதுவாகச் செலாவணிப் பெருக்கத்தைத் தடுக்க, பாங்கு விகிதம், மனத்தை மாற்றுதல், தேர்ந்தெடுத்த செலாவணிக் கட்டுப்பாடு போன்ற வழக்கமான முறைகள் எல்லாம் கையாளப்பட்டன. 1956 மார்ச் முதல் தேதியில், ரிசர்வ் பாங்கு,

உண்டியல் மார்க்கெட் திட்டப்படி தான் கடன் கொடுக்கும் விகிதத்தை 3 சதவீதத்திலிருந்து 3¼ சதவீதமாக (அதாவது, பாங்கு விகிதத்தைவிட ¼ சதவீதம் குறைவாக) உயர்த்தியது. பிறகு 1956 நவம்பர் 21ஆம் தேதிமுதல் 3½ சதவீதமாக உயர்த்தியது. அடுத்த ஆண்டில், மாமூல் தவணை உண்டியல்கள்மீது ஸ்டாம்பு கட்டணம் உயர்த்தப்பட்டதால், மாமூல் தவணை உண்டியல்கள் மீது ஷெடியூல் பாங்குகள் வாங்கும் கடன் விகிதம் நிகரமாக ½ சதவீதம் உயர்ந்தது. அதே சமயத்தில், அரசாங்கப் பத்திரங்கள்மீது அந்தப் பாங்குக் கடன் கொடுக்கும் விகிதம் 3½ சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக உயர்த்தப்பட்டது. 1957 மே 16ஆம் தேதிமுதல் பாங்கு விகிதமே 4 சதவீதமாக்கப்பட்டது. ஆனால், மாமூல் தவணை உண்டியல்கள்மீது ஸ்டாம்பு கட்டணம் 1 சதவீதத்தில் ஐந்தில் ஒரு பங்காகக் குறைக்கப்பட்டது. ஆகவே, ஷெடியூல் பாங்குகள் மாமூல் தவணை உண்டியல்கள்மீது வாங்கும் கடன் விகிதம் நிகரமாக 4⅕ சதவீதத்திற்குக் குறைந்தது. அண்மையில் பங்குமாற்றுச் சந்தையில் உண்டாகும் பொருளாதார வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், நேர்மைப் பங்குச் சீட்டுகள் மீது அளிக்கப்படும் பாங்குச் செலாவணியின் அளவைக் கட்டுப்படுத்துவதற்கும், ஷெடியூல் பாங்குகள் நேர்மைப் பங்குச் சீட்டுகள்மீது அளிக்கும் கடனுக்குக் குறைந்தபட்சம் 50 சதவீதம் இறுதிநிலை இருக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டது. அன்றியும், 1960 மார்ச் 11ஆம் தேதியன்று ரிசர்வ் பாங்கு முதல் தடவையாக அந்தத் தேதிமுதல் ஷெடியூல் பாங்குகள் தம் மொத்த டெபாசிட் பொறுப்புகளின் உயர்வில் 25 சதவீதத்திற்குச் சமமான தொகையை ரிசர்வ் பாங்கில் அதிக இருப்பாக வைக்க வேண்டுமென்று கோரிக் காப்புநிதி விகிதத்தை மாற்றும் அதிகாரத்தைப் பயன்படுத்தியது. பிறகு 1960 மே 6ஆம் தேதி முதலாக இந்தக் காப்புநிதிக் கட்டுப்பாடு, நடப்புப் பொறுப்புகள், தவணைப் பொறுப்புகள் ஆகியவற்றின் உயர்வில் 50 சதவீதமாக உயர்த்தப்பட்டது. இவை தவிர, பாங்குகளுக்குக் கடிதங்கள், உத்தரவுகள் மூலமாக அதிகச் செலாவணிப் பெருக்கம் உண்டாவதைத் தடுக்கவேண்டியதன் அவசியத்தை ரிசர்வ் பாங்கு கவர்னர் வற்புறுத்தினர்.

விலையளவைக் கட்டுப்படுத்துவதற்காக 1960 செப்டெம்பர் 21ஆம் தேதியன்று இந்திய ரிசர்வ் பாங்கு பணம் சம்பந்தமாக மூன்று நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாகக் கடைசியாக அறிவித்தது. அவையாவன: (1) ஒவ்வொரு பாங்கும் ரிசர்வ் பாங்கிலிருந்து வாங்கக்கூடிய கடன் கோட்டா அதிகரித்தால், அதற்கு அபராத வட்டி விதம் விதிப்பது. இந்தக்

கோட்டா என்னவென்றால், ஒவ்வொரு ஷெடியூல் பாங்கும் ரிசர்வ் பாங்கில் வைத்திருக்கவேண்டிய காப்புநிதியில் 50 சதவீதமாகும். இந்த எல்லைவரையில் ஷெடியூல் பாங்குகள்மீது பாங்கு வட்டி வீதம் விதிக்கப்படும். கடன்கள் 100 சதவீதத்திற்கு அதிகமாகவும், 200 சதவீதத்திற்குக் குறைவாகவும் இருந்தால், ரிசர்வ் பாங்குக்குக் கொடுக்கவேண்டிய வட்டிவீதம் பாங்கு விகிதத்தைவிட 1 சதவீதம் அதிகமாகும். கோட்டாவைவிட 200 சதவீதத்திற்குமேல் கடன் வாங்கினால், பாங்கு விகிதத்தைவிட 2 சதவீதம் வட்டி உயரும். (2) பாங்குகள் வாடிக்கைக்காரர்களுக்குச் சாதாரணமாகக் கடன்கொடுக்கும் விகிதம் ½ சதவீதம் உயர்த்தப்பட்டது. கூட்டுறவு பாங்குகள் உட்பட மற்ற பாங்குகளுக்கு ஷெடியூல் பாங்குகள் கொடுக்கும் கடன்கள் எல்லாவற்றின்மீதும் குறைந்தபட்ச வட்டி வீதம் 5 சதவீதமாக இருக்கவேண்டும். பாங்குகளின் குறைந்தபட்ச வட்டி வீதமே 5 சதவீதம் அல்லது அதற்குமேல் இருந்தால், அவை தம் சராசரி வட்டிவீதம் மேலும் ½ சதவீதம் உயருமாறு செய்யவேண்டும். (3) குறுகிய தவணை டெபாசிட்டுகளுக்கு பாங்குகள் கொடுக்கும் வட்டி வீதம் கட்டுப்படுத்தப்பட்டது. (பாங்குகள் தமக்குள் வைத்துக்கொள்ளும் டெபாசிட்டுகள் நீங்கலாக) டெபாசிட் தேதியிலிருந்து 21 நாட்களுக்குமேல் மிகாமல் காலவதியாகக்கூடிய, அல்லது வேண்டுகோளின்மேல் திருப்பித்தரப்படக்கூடிய எந்த டெபாசிட்டுக்கும் ஷெடியூல் பாங்குகள், பாங்கு வட்டி வீதத்திற்குக்கீழ் 2 சதவீதத்திற்கு அதிகமாக வட்டி கொடுக்கக்கூடாது[1]. இந்த நடவடிக்கைகள் 1960 அக்டோபர் முதல் தேதியிலிருந்து செயல்முறைக்கு வந்தன. இந்த நடவடிக்கைகளின் முக்கிய நோக்கம், மத்திய பாங்கிலிருந்து ஷெடியூல் பாங்குகள் கடன் வாங்குவதாலும், அளவுகடந்த செலாவணிப்பெருக்கம் உண்டாவதாலும் விலைகள் உயர்வதைத் தடுத்து, அவற்றைக் கீழே இறக்கிவைப்பதேயாகும். 1960, செப்டெம்பர் 9ஆம் தேதியில், மத்திய பாங்கிலிருந்து மற்ற பாங்குகள் வாங்கிய கடன் தொகை ரூ. 52·04 கோடியாகவும், முந்திய ஆண்டில் அதே காலத்தில் ரூ. 1·78 கோடியாகவும் இருந்ததிலிருந்து ரிசர்வ் பாங்கு இத்தகைய கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டது நியாயம் என்றே கூறலாம். ஷெடியூல் பாங்குகளின் மொத்தக் கடனளிப்பும் ரூ. 1,000 கோடிக்குமேல் இருந்தது. பாங்கு வீதத்தை உயர்த்தும் வழக்கமான முறையைவிட இந்த மூன்று நடவடிக்கைகளும் பாங்குகளின் கடன் கொள்கையையும் ஊகவாணிகச் செயல்களையும் நேரடியாகப் பாதிக்கும். ஷெடியூல் பாங்குகளின் மொத்த நடப்புப் பொறுப்புகளும் தவணைப் பொறுப்புகளும் ரூ. 2,000 கோடிக்குமேல் இருப்பதால்,

[1] 'ஹிந்து', 1960, செப்டெம்பர் 23, 24ஆம் தேதிகள்.

இந்திய ரிசர்வ் பாங்குச் சட்டத்தின் பிரிவு 42, உட்பிரிவு (1)-ன்படி, அவை ரிசர்வ் பாங்கில் வைத்திருக்கவேண்டிய காப்பு நிதி ரூ. 60 கோடிக்கு இருக்கும். பொதுவாக பாங்குவட்டி வீதம் விதிக்கத்தக்கவாறு பாங்குகள் பெறக்கூடிய கடன் இதில் பாதி அல்லது ரூ. 30 கோடியாகும். இந்த அளவுக்குமேல் போனால் அபராத வட்டி வீதம் விதிக்கப்படும். பாங்குகள் தம் வாடிக்கைக்காரர்களிடம் பெறும் வட்டிவீதம் இப்போது 6½ முதல் 7½ சதவீதம்வரை இருக்கிறது. ரிசர்வ் பாங்கின் கட்டளைப்படி இது இப்போது ½ சதவீதம் உயர்த்தப்படும்.

இந்தப் பணம் சம்பந்தமான நடவடிக்கைகள் எந்த அளவுக்கு விலைகள் ஏறுமல் தடுக்கும் என்பதை இப்போது கூற முடியாது. பங்குச் சீட்டுகளின் விலைகளில் ஊகவாணிக வீக்கம் உண்டாவதை அவை ஐயமின்றித் தடுக்கும். உண்மையில், உடனடியாகப் பங்கு மார்க்கெட்டில் விலைகள் குறைந்தன. செலாவணிச் சுருக்கமும் சில பண்டங்களின் விலைகள் குறையும்படி செய்யலாம். குறிப்பாக, நாட்டில் பணமார்க்கெட்டின் நன்கு அமைக்கப்பட்ட பகுதிக்குட்பட்ட பேரங்களில் இவ்வாறு நிகழலாம். அண்மையில் பணமார்க்கெட்டின் நன்கு அமைக்கப்பட்ட பகுதி வளர்ந்துவருகிறதென்றும், தொழிலிலும் வர்த்தகத்திலும் 50 சதவீத நிதியளிப்பை அது கையாளுகிறது என்றும் ரிசர்வ் பாங்கு கவர்னர் குறிப்பிட்டார்[1]. இதற்கு மாறுகத் தொழில்களும் ஏற்றுமதி வியாபாரமும் கடுமையாகப் பாதிக்கப்படும் என்றும், தொழிலுக்கும் வாணிகத்திற்கும் நிதியளிக்க வேறு நிறுவனங்கள் முன்வரக்கூடும் என்றும் அச்சம் ஏற்படுகிறது. இந்த நடவடிக்கைகள் தேவை இனத்தில், அதிலும் குறுகிய எல்லைக்குள்தான் இயங்கும் என்பதை வற்புறுத்தவேண்டியுளது. உற்பத்தியிலும் அளிப்பிலும் பாதகமான விளைவுகள்ஏற்பட்டால், சாதனங்களின் அளிப்புக்கும் தேவைக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்காமல் அப்படியே இருக்கும்படி செய்து, இவ்விரண்டையும் குறைத்து, செலாவணிக் கட்டுப்பாடு விலையளவைப் பாதிக்காதவாறு செய்துவிடும்.

பாங்கு விகிதம், மனமாற்றம்போன்ற பொதுவான செலாவணிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மொத்தச் செலாவணி அளவைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டவை. இவற்றுடன், உணவு விலைகளும் சில கச்சாப் பொருள்களின் விலைகளும் ஊகவாணிகத்தினால் விலை ஏறுவதைத் தடுக்கத் தேர்ந்தெடுத்த

[1] இந்திய பாங்கர்கள் கழகத்தின் 33ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் (1960, ஆகஸ்டு 18) ரிசர்வ் பாங்க் கவர்னர் உரை. 'Indian Finance,' கல்கத்தா, 1960, ஆகஸ்டு 27ஆம் தேதி.

செலாவணிக் கட்டுப்பாட்டு முறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தேர்ந்தெடுத்த செலாவணிக் கட்டுப்பாட்டு முறைகளின் முக்கிய நோக்கம், அத்தியாவசியப் பண்டங்களின் அளிப்பிலும் இயக்கத்திலும் உண்டாகும் பருவகால மாறுதல்களால் விலைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களை மட்டுப்படுத்துவதேயாகும். இந்தக் கொள்கையை நிறைவேற்றுவதில் இரண்டு வழிகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. முதலாவது, விவசாயப் பொருள்கள்மீது கொடுக்கப்படும் கடனின் அளவை நிர்ணயித்தல்; இரண்டாவது, முந்திய காலத்தில் கொடுக்கப்பட்ட உயர்ந்த அளவு கடனையொட்டி, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அல்லது பருவத்திற்குக் கொடுக்கப்படும் மொத்தக் கடனை வரையறுத்தல். 1956-ன் முற்பகுதியில் பாங்குகள் சில பொருள்களின்மேல், குறிப்பாக உணவுப் பொருள்கள், பருத்தித் துணிகள், நூல் ஆகியவற்றின்மேல் கொடுத்த கடன்கள் அளவுக்கு மிஞ்சி அதிகமாக இருந்தன என்று தெரிந்தது. அன்றியும், சில இடங்களில் பாங்குக் கடன் நெல்லையும் அரிசியையும் ஊகவாணிக நோக்கத்துடன் பதுக்கிவைப்பதற்காக ஓரளவு பயன்படுத்தப்பட்டது என்றும் தெரிந்தது. இந்தப் போக்கைத் தடுக்க, 1956 மே 17-ல் பொதுவாகப் பண்டங்கள்மீது அதிகக் கடன்கள் அளிக்கக் கூடாதென்றும், நெல் அரிசி ஆகியவற்றின்மீது அளிக்கப்படும் கடன்களுக்கு இறுதிநிலையை 10 சதவீதம் அதிகமாக்கும்படியும், இந்த இரண்டு பண்டங்கள்மீதும் புதிய கடன்களையோ கடன் எல்லைகளையோ ரூ. 50,000-க்கு மேல் போகாமல் வரையறுத்துக்கொள்ளும்படியும் ரிசர்வ் பாங்கு மற்ற பாங்குகளுக்குக் கட்டளையிட்டது. மேலும், அவை நெல் அரிசி ஆகியவற்றின்மீது அளிக்கப்படும் கடன்களை முந்திய ஆண்டில் அதே காலத்தில் அளிக்கப்பட்ட கட்ன்களைவிட 125 சதவீதத்திற்கு மேல் போகாதவாறு குறைத்துக்கொள்ளும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டன. பிறகு ஒவ்வொரு முறையும் செலாவணிப் பெருக்கம் அதிகரிக்கப்பட்டபோதும், இந்த நடவடிக்கைகள் மேலும் கடுமையாக்கப்பட்டன. 1957-ன் மத்தியில், உணவு தானியங்களுக்கு இறுதிநிலைக் கட்டுப்பாடு 40 சதவீதமாக உயர்த்தப்பட்டது. பாங்குகள் அளிக்கும் கடன் அளவு, நெல்லுக்கும் அரிசிக்கும் முந்திய ஆண்டில் அதே காலத்தில் அளிக்கப்பட்ட கடன் அளவில் 66½ சதவீதத்திற்கு மேலும், மற்ற உணவு தானியங்களுக்கு 75 சதவீதத்திற்கு மேலும் போகாதவாறு பார்த்துக்கொள்ளும்படி உத்தரவிடப்பட்டன. மேலும், பாங்குகள் உணவு தானியங்களின்மீது ரூ. 50,000-க்குமேல் புதிய கடன்களை அளிக்கக்கூடாதென்றும், அந்த உணவு தானிய ஈட்டின் மதிப்பு ரூ. 50,000-க்கும் குறைவாயிருந்தால், அவற்றின்மேல்

அப்போது அளிக்கப்பட்ட கடன் எல்லையை உயர்த்தக்கூடாதென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டன. 1958 ஆரம்பத்திலிருந்து நெல், அரிசி, கோதுமை, மற்ற உணவு தானியங்கள் ஆகியவற்றின் அளிக்கப்படும் கடனுக்கு உயர்ந்த எல்லை, 1955, 1956, 1957ஆம் ஆண்டுகளில் அதே மாதங்களில் அளிக்கப்பட்ட அது போன்ற சராசரிக் கடன்களில் முறையே 75 சதவீதமாகவும், 80 சத வீதமாகவும் உயர்த்தப்பட்டது. அன்றியும்,உபரி இராச்சியங்களில் உள்ள பாங்குகள்தாம் தமக்கு அனுமதிக்கப்பட்ட கடன் அளவை உணவு தானியங்களின்மீதே அளித்தன என்பது முந்திய கால அநுபவத்திலிருந்து தெரிந்தது. இது கட்டுப்பாட்டின் நோக்கத்தையே தோல்வியுறச் செய்வதாகும். ஆகவே, ஆந்திரப் பிரதேசத்திலும் மத்தியப் பிரதேசத்திலும் உள்ள பாங்குகள் ஒவ்வொரு மாதமும், 1957–ல் அதே மாதத்தில் குறிப்பிட்ட உணவு தானியங்கள்மீது கொடுத்திருந்த கடன் அளவில் 60 சதவீதத்திற்குமேல் போகாதவாறு தம் கடன் அளவுகளை வைத்திருக்குமாறு உத்தரவிடப்பட்டன. குறிப்பாக, 1958-ன் இறுதியில் பஞ்சாப், மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் ஆகியவற்றில் கோதுமை, நெல், அரிசி ஆகியவற்றின் விலைகள் கூடும்போதும், பாங்குக் கடன்கள் அதிகரிக்கும்போதும் இத் தகைய கடன் கட்டுப்பாட்டு முறைகளும் கடுமையாக்கப்பட்டன.

தேர்ந்தெடுத்த கட்டுப்பாட்டு முறை, பருத்தித் துணிகள், எண்ணெய் விதைகள், சர்க்கரைபோன்ற மற்றப் பண்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. சர்க்கரை விலை பருவத்திற்கேற்ப ஏறுவதைத் தடுப்பதற்கு, 1957 ஜூனில் பாங்குகளுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. அதன்படி, பாங்குகள் சர்க்கரைமேல் கொடுக்கும் கடனுக்குக் குறைந்தபட்ச இறுதிநிலை 35 சதவீதம் இருக்கும்படியாக இறுதிநிலையை 10 சதவீதம் உயர்த்தவேண்டுமென்றும், முந்திய ஆண்டில் இதன்மேல் கொடுக்கப்பட்ட கடன் அளவில் 10 சதவீதத்திற்குமேல் போகாதவாறு கடன் அளவுகளைக் குறைத்துக்கொள்ளவேண்டுமென்றும் கூறப்பட்டது. 1958-ல் இந்த இறுதிநிலை தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்பட்டு, கலால்வரி செலுத்தப்பட்ட இருப்புகளுக்கு 45 சதவீதமாக உயர்த்தப்பட்டது. தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்படும் மற்றக் கடன்களுக்கு இறுதிநிலைக் கட்டுப்பாடு கிடையாது. அதனால் சர்க்கரை உற்பத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்படாமல் இருக்கும். உணவு தானியம், சர்க்கரையோடு, 1959 ஆரம்பத்தில் நிலக்கடலை போன்ற எண்ணெய் விதைகள்மீது அளிக்கப்படும் கடனும் கட்டுப்படுத்தப்பட்டது.

தொழில்கச்சாப் பொருள்களை ஊகவாணிக நோக்கத்துடன் ஏலம் கேட்பதைத் தடுப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மற்றோர் அண்மைக்கால நடவடிக்கை யாதெனின், முன்னேக்கிய மார்க்கெட் குழு மூலமாக முன்னேக்கிய ஒப்பந்தந்தங்களைத் தடுப்பது. 1957 பிப்ரவரி 11ஆம் தேதி முதலாக, முன்னேக்கிய மார்க்கெட் குழுவின் ஒப்புதலுடன் கிழக்கிந்தியப் பருத்திச் சங்கம், பருத்தியில் முன்னேக்கிய ஒப்பந்தங்கள்மீது கடுமையான இறுதி நிலையை விதித்தது. இரண்டு மாதங்கள் கழிந்து, முன்னேக்கிய மார்க்கெட் குழு, இறுதிநிலை டெபாசிட்டு விகிதங்களை மேலும் அதிகரித்தது. 1959-ன் இறுதியில் பருத்தி விலை கண்டி ஒன்றுக்கு ரூ. 720-க்குமேல் போனால் பருத்தியில் முன்னேக்கிய ஒப்பந்தங்களுக்காகச் செலுத்தப்படவேண்டிய இறுதி நிலைத் தொகையை பேல் ஒன்றுக்கு ரூ. 25-லிருந்து ரூ. 75 ஆக மேற்படி குழு உயர்த்தியது.[1] விலைகள் ரூ. 750-க்கு மேல் போனால் செலுத்தப்பட வேண்டிய இறுதிநிலைத் தொகையும் ரூ. 15-லிருந்து ரூ. 25 ஆக உயர்த்தப்பட்டது. ஆலைகள் அதிக இருப்புகள் வைப்பதைத் தடுக்க, 1959 டிசம்பரில் பருத்தித் துணி ஆணையாளர், மூன்றுமாத உபயோகத்திற்கு வேண்டிய அளவைவிட அதிகப் பருத்தியை வாங்கவோ இருப்பு வைக்கவோ கூடாதென்று தடைஉத்தரவு வெளியிட்டார். மேலும், ஒரு கோட்டா முறையும் கொண்டு வரப்பட்டது. அதன்படி, 1958–59 பருவத்திற்கு, ஆலைகள் உபயோகிக்கும் அளவில் 50 சதவீதத்திற்குமேல் முதலில் பருத்தியை வாங்கக்கூடாது. சில பகுதிகளில் உள்ள ஆலைகள் மட்டும் 60 சதவீதம்வரையில் வாங்கலாம். நிலக்கடலை, ஆமணக்கு விதை ஆகியவற்றிற்கு நிலவர விலை கண்டி ஒன்றுக்கு ரூ. 165-க்கு மேல் இருந்தால், முன்னேக்கிய கொள்முதலின் நிகரக் கடன் மதிப்பில் கண்டி ஒன்றுக்கு ரூ. 15 இறுதிநிலையாகச் செலுத்த வேண்டுமென்று 1957 பிப்ரவரியில் கட்டாயப்படுத்தப்பட்டது. இவற்றிற்கு முன்பிருந்த இறுதிநிலை ரூ. 1 முதல் ரூ. 4 வரையில் தான். 1957-ன் நடுவில் இந்த உயர்ந்த இறுதிநிலை டெபாசிட்டு விகிதங்கள் நீக்கப்பட்டன. ஆனால், அந்த ஆண்டின் இறுதியில், பம்பாய் எண்ணெய், எண்ணெய் விதை மாற்றுச் சந்தை மீதும், மற்ற ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கங்கள்மீதும், அவை செய்யும் முன்னேக்கிய நிலக்கடலை ஒப்பந்தங்களுக்குக் கண்டி ஒன்றுக்கு விசேஷ இறுதிநிலையாக ரூ. 25 செலுத்தவேண்டுமென்று விதிக்கப்பட்டது. 1958 ஜூலையில் இந்திய அரசாங்கம் குறிப்பிட்ட சில தானியங்கள், பருப்புகள் ஆகியவற்றை வாங்கவோ, விற்கவோ செய்யப்படும் முன்னேக்கிய ஒப்பந்தங்களையும், மாற்றத்தக்கவையல்லாத குறிப்பிட்ட பட்டுவாடா ஒப்பந்தங்களையும் தடை

1 ஒரு கண்டி = 500 ராத்தல்.

செய்தது. 1959 மார்ச் 2ஆம் தேதியன்று இத் தடை அரிசிக்கும் நெல்லுக்கும் விதிக்கப்பட்டது. எண்ணெய் விதைகளுக்கு முன்னேக்கிய மார்க்கெட் குழு, 1959 ஏப்ரலில், கண்டி ஒன்றுக்கு ரூ. 165, ரூ. 175, ரூ. 185–50, ரூ. 198-க்குமேல் செய்யப்படும் ஒப்பந்தங்களுக்கு முறையே ரூ. 15, ரூ. 125, ரூ. 45, ரூ. 65 என்று முன்னேக்கிய ஒப்பந்தங்களுக்கு இறுதிநிலையை உயர்த்தியது. 1960-ன் ஆரம்பத்தில், கண்டி ஒன்றுக்கு நிலக்கடலை ஒப்பந்தங்கள் ரூ. 212–50-க்கு மேல் விலை ஏறினால், ரூ. 106–25 விசேஷ இறுதி நிலையாக்கப்பட்டது; நிலக்கடலைக்கும், கடலை எண்ணெய்க்கும் உச்ச விலைகள் நிர்ணயிக்கப்பட்டன. முதல் தடவையாக, நஷ்ட மில்லா ஒப்பந்தங்களுக்கும் மாற்றத்தக்க குறிப்பிட்ட பட்டுவாடா ஒப்பந்தங்களுக்கும் இறுதிநிலை முறை விஸ்தரிக்கப் பட்டது. இதேபோல ஆமணக்கு விதை, ஆளிவிதை, கச்சாச் சணல், சணல் பொருள்கள் ஆகிய ஒப்பந்த பேரங்கள்மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

1956 முதல் தேர்ந்தெடுத்த கடன் கட்டுப்பாட்டு முறைகள் நன்கு பயன்படுத்தப்பட்டும், ஓரளவு மாறுதலின்றிச் செயல்படுத்தப்பட்டும் இருப்பினும், விலையளவின்மீது இவற்றின் விளைவு அதிகம் இல்லை. செலாவணிப் பெருக்கம் அதிகமாக இருந்த காலத்தில் இவற்றைக் கடுமையாக்கியதால், சில சமயங்களில் விலைகள் உடனே ஓரளவு குறைந்தன. ஆனால், இவ் விளைவு நீடித்திருக்கவில்லை. 1958–59-ல், அரிசியின் விலை முந்திய ஆண்டின் அளவில் இருந்தது. ஆனால், கோதுமையின் விலையும் மற்ற உணவு தானியங்களின் விலையும் அதிகமாக ஏறின; எண்ணெய் விதைகள் குறிப்பாக நிலக்கடலை அதிகம் ஏறின. ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தேர்ந்தெடுத்த கடன் கட்டுப்பாட்டு முறைகள் விளைவித்த சிறிதளவு பயனும் அண்மையில் சில மாதங்களாகக் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1960 மே-யில் ரிசர்வ் பாங்கு கவர்னர், நடப்பு மந்த காலத்தில் (மேமுதல் நவம்பர்வரை) கடன்களின் அளவை ரூ. 110 கோடி குறைக்கும் படி ஷெட்யூல் பாங்குகளுக்கு உத்தரவிட்டார்; ஆனால், இந்தக் காலத்தின் முதல்பாதியில் இந்தத் தொகையில் பத்தில் ஒரு பங்கு கூடக் குறையவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றியும், நெல், அரிசி, கோதுமை, சர்க்கரை, வெல்லம், நிலக்கடலை, மற்ற எண்ணெய் விதைகள் ஆகியவற்றின்மீது அண்மையில் சில மாதங்களில் அளிக்கப்பட்ட கடன் அளவு (நிலக்கடலை தவிர), முந்திய ஆண்டைவிட 1960-ல் உண்மையில் அதிகமாகவே இருந்தது. ஜூலையின் மத்தியில், எண்ணெய் விதைகள்மீது அளிக்கப்பட்ட கடன் ரூ. 20 கோடியாக இருந்தது; ஆனால், 1959-ல் ரூ. 31 கோடி

யாக இருந்தது; சர்க்கரைமீதும் வெல்லத்தின்மீதும் அளிக்கப் பட்ட கடன், முந்திய ஆண்டின் அளவைவிட ரூ. 25 கோடி அதிக மாகி ரூ. 65 கோடிக்கு உயர்ந்தது. அரிசி, கோதுமை ஆகிய வற்றின்மீது அளிக்கப்பட்ட கடனும் சிறிது அதிகமாயிற்று. இது சம்பந்தமாக ரிசர்வ் பாங்கு அளித்த சமாதானமாவது, நாட்டின் பொருளாதாரம் தொழில்மயமாக மாறிப் படிப்படியாக முன் னேறிவருவதால், வழக்கமான சுறுசுறுப்புப் பருவம், மந்த பருவம் என்னும் வேறுபாடு மறைந்துவருகிறது என்பது.[1] ஆனால், இச் சமாதானம் பொருத்தமாகத் தெரியவில்லை. இத்தகைய விலைக் கட்டுப்பாடுகள் தற்காலிகமாகப் பயன் தருவது, மனே தத்துவ முறையான மாறுதல்களிலேயேயன்றி, நிலைமையில் எந்த விதமான அடிப்படை மாறுதல் உண்டானதாலும் அன்று. தேர்ந்தெடுத்த கடன் கட்டுப்பாட்டு முறைகள் நாட்டின் மத்தியச் செலாவணி ஸ்தாபனத்தினால் கையாளப்படும் செலா வணிக் கருவியாக இருப்பதால், பணப்பற்றில்லாத பகுதி பெரி தாக உள்ள ஒரு பெரிய நாட்டில், அதனால் பயன் அதிகம் இராது. மேலும், பொருளாதார முன்னேற்றம் உள்ள நாடுகளைவிட இந் நாட்டில் கடன் பணமானது மொத்தப் பண அளிப்பில் ஒரு சிறு பகுதியாகவே உள்ளது. ஆகையால், இவற்றால் உண்மையில் நிலை யான, அல்லது அதிகப் பயன் உண்டாகுமென்று எதிர்பார்ப்பதில் பயனில்லை. அன்றியும், ஒரு நாட்டில் பொது விலையளவு, அளிப்பையும் தேவையையும் பாதிக்கக்கூடிய பல அம்சங்களைப் பொறுத்தது; இவற்றைத் தேர்ந்தெடுத்த கடன் கட்டுப்பாட்டு முறைகள் பாதிக்கப்படமாட்டா. இந்த நடவடிக்கைகள் ஒரு குறுகிய எல்லையில்தான் பயனளிக்கும். அதாவது, பாங்குக் கடனால் உண்டாகும் தேவை நெருக்கடியை மட்டும் இவை பாதிக்கும். எனவே, இந்த முறைகள் செயல்படுத்தப்படாமலிருந்தால் விலை களின் ஏறுமுகம் இன்னும் அதிகமாக இருந்திருக்கக்கூடும் என்று கூறி, இத்தகைய விலைக் கட்டுப்பாட்டு முறையின் வெற்றி அல் லது தோல்வியைப்பற்றி நாம் முடிவுகட்டவேண்டும்.

எனினும், அண்மையில் கையாளப்பட்ட முறைகளைப்பற்றி மேலும் சில செய்திகளைக் கூறவேண்டியுள்ளது. உண்மையில் இவற்றின் அற்பப் பயன் ஒரு பெரிய கேள்வியை எழுப்புகிறது. அது என்னவென்றால், அளிப்பு, தேவை ஆகிய இயற்கையான சக்திகள் நிலைமையைத் தாமே நன்கு சமாளித்திருக்க முடியாதா என்பதே பொருளையோ பணத்தையோ கட்டுப்படுத்தும் எத்தகைய கட்டுப்பாடுகளும் போட்டிக்கு எதிரானவை. கொள்கையளவில், போட்டியினால் பொருள்கள் அதிகமாகவும்

[1] 'ஹிந்து', 1960, செப்டெம்பர் 8ஆம் தேதி.

மலிவாகவும் உள்ள இடங்களிலிருந்து அவை குறைவாகவும் விலை அதிகமாகவும் உள்ள இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விலை ஏற்ற இறக்கங்கள் மட்டுப்படுத்தப்படும். ஊகவாணிக இருப்புச் சேமிப்பு விற்பதற்காகவும், அதன்மூலம் லாபம் பெறுவதற்காகவுமே செய்யப்படுகிறது. ஆகவே, சில இடங்களில் அதிக விலையும் பொருள் பற்றாக்குறையும் இருந்தால், தானாகவே அங்குப் பொருள்கள் கவரப்பட்டு வந்து தேவை நெருக்கடியைக் குறைக்கும். இது தருக்க ரீதியாக மனத்தைக் கவருகிறது. ஆனால், இந்தியாவில் இப்போதுள்ள நிலைமையில், கீழ்வரும் காரணங்களால் தடையிலாப் போட்டியானது திறமையாகச் செயல்படாது என்று கூறலாம்.

முதலாவதாக, உணவு தானியத்தில் பொதுப் பற்றாக்குறை இருக்கிறது. விரைவாக வளர்ந்துவரும் மக்கள்தொகையின் தேவைக்கேற்ப உற்பத்தி போதிய அளவு இன்மையால் இந் நாட்டின் பல பகுதிகளுக்கிடையே போட்டியால் நியாயமான பங்கீடு உண்டாகுமென்றாலும், அடிப்படையில் பற்றாக்குறை இருப்பதால், அந்த அளவுக்குப் பணவருமானம் பெருகும்போது வருமானத்தினால் உணவுக்குத் தேவை மிகவும் உயரும் நிலையில், விலைகள் ஏறாமலிருக்க முடியாது. உண்மையில், இந்தியாவில் சிறந்த போட்டிமுறையில் ஏற்படக்கூடிய பங்கீட்டுக்கு இடமில்லை; ஏனெனின், அதிக வருமானமுள்ள சில விவசாய நாடுகளைப்போல் நம் நாட்டில் விவசாயம் இன்னும் வர்த்தகமயமாக்கப்படவில்லை; நம் நாடு மிகவும் பரந்தது; இங்குப் போதிய கடத்து வசதிகளும் இல்லை. இரண்டாவது காரணம் யாதெனின், மேற்கூறிய சிரமங்களினால் ஊகவாணிபத்திற்காகப் பதுக்குதல் சாதாரணமாக நிகழ்வதோடு, வேறு நிலையில் இருப்பதைவிட மாறுபட்ட ஓர் அம்சமாகவும் காணப்படுகிறது. ஒரு கட்டமைந்த, வளர்ச்சிபெற்ற, போட்டிப் பொருளாதார அமைப்பில் ஊகவாணிகமானது ஏற்ற இறக்கங்களை மட்டுப்படுத்தக்கூடிய கருவியாகத் திறமையாகச் செயல்படக்கூடும். ஆனால், நம் நாட்டில் அது தவறாமல் தீய விளைவுகளைத்தான் உண்டாக்குகிறது. பெரும்பாலும் ஊகவாணிகர்கள், நகரப் பகுதிகளிலேயே பெரிய இருப்புகளைச் சேமித்து இலாபம்பெற விரும்புகிறார்கள்; அவற்றைத் தொலைவிலுள்ள பற்றாக்குறைப் பகுதிகளுக்கு அனுப்ப விரும்புவதில்லை; இருப்புச் சேர்க்கப்பட்ட இடத்திலேயே வைத்து அதிக விலைக்கு விற்கிறார்கள். இத்தகைய சமூக விரோத நடவடிக்கை, அளிப்பு, தேவை ஆகிய நிலைகளை மீறி விலைகள் மிகவும் உயர்வதற்குக் காரணமாகிறது; அன்றியும், பொருள்கள் குறைந்த வருமானமுடையவர்களுக்கும் ஏழை

களுக்கும் கிடைக்காமல் போய்விடுகிறது. சமூக நீதிப்படி, இத்தகைய நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டு, வேறு வழிகளில் நியாயமான பங்கீடு செய்யப்படவேண்டும்.

வளரும் பொருளாதார அமைப்பில், முதலீட்டளவு படிப்படியாக உயர்ந்தே தீரும். இந்தியாவில் நீண்ட காலத்தில், மற்ற முதலீடுகளைவிடத் தீவிர முதலினத் திட்டங்களின் முதலீடு வேகமாக உயரும் என்பது உறுதி. விரைவாக வளர்ந்துவரும் மக்கள் தொகையினுல்மட்டுமன்றி, மக்களில் பெரும்பகுதியினர் வறுமை நிலைக்குக்கீழே வாழ்ந்துவருவதால், பணவருமானம் பெருகும்போதெல்லாம் உணவுப் பொருள்களுக்கும் ஏற்ற அவசியமான துய்ப்புப் பொருள்களுக்கும் தேவை அதிகமாகி வரும். அதாவது, நீண்ட காலத்திற்கு உணவுப் பற்ருக்குறைப் பிரச்சினை நம்மிடையே இருந்துவரும். இதுவரையில் சாதித்ததை விட இன்னும் அதிகமாக ஆண்டுதோறும் உணவு உற்பத்தியைப் பெருக்கினுலன்றி இப் பிரச்சினை தீராது. இதற்கு நம் கட்டுப்பாட்டு முறைகளைத் திருத்தி மாற்றவேண்டும். அப்படிச் செய்தால்தான், நம் நாட்டில் தோன்றக்கூடிய விசேஷப் பிரச்சினைகளை அவற்ருல் திறமையாகச் சமாளிக்கமுடியும். அண்மையில் சில ஆண்டுகளில் உருவாகிவந்துள்ள கட்டுப்பாட்டு முறைகள் நன்கு சிந்தித்துச் செய்யப்பட்டவையாயினும், அவற்றை உருவாக்கியதிலும் செயல்படுத்தியதிலும் சில அடிப்படைக் குறைகள் இருந்ததால், அவை சிறிதளவே பயனளித்தன. அண்மையில் கொண்டுவரப்பட்ட கடன் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறிப்பாகத் தேர்ந்தெடுத்த வகையைச் சேர்ந்தவை, இப் பிரச்சினையை மேலெழுந்தவாரியாகத் தீண்டுகின்றனவேயன்றி அடிப்படையைத் தொடவில்லை. விலையுயர்வுக்குக் காரணங்களான பலவற்றுள் ஒன்றைத்தான் அவை தாக்குகின்றன. இத்தகைய முறையில் இப் பிரச்சினையைச் சிறிது சிறிதாகத் தீர்க்க முயல்வது அதிகத் தீமையையே விளைவிக்கும். இவை இல்லாமலிருந்தாலே மேல் என்று தோன்றுகிறது. இதனுல் மனேதத்துவ முறைப்படி தீய விளைவு உண்டாகிறது. எந்தவகைக் கட்டுப்பாடும், எதிர்காலத்தில் வரும் பற்ருக்குறையையோ பஞ்சத்தையோ காட்டும் அறிகுறியாகும். ஆகவே, அதை முற்றிலும் விரிவாகக் கடைப்பிடிக்காவிட்டால், எந்தச் சமூக விரோத நடவடிக்கைகளை அது கட்டுப்படுத்த முடியும் என்று நினைத்தோமோ, அவற்றையே அது மேலும் வளர்க்கும். நம் நாட்டில் விலைச்சல், அளிப்பு, தேவை ஆகியவை ஒவ்வொரு பிரதேசத்திற்கும் எவ்வாறுள்ளன என்பது நமக்குத் தெரியாது; தெரிந்தால்தான் எந்த நியாயமான பங்கிட்டு முறையையும்

வெற்றிபெறச் செயல்படுத்தமுடியும். இராச்சியங்களுக்கிடையே ஒத்துழைப்பின்மையும், இராச்சியங்களுக்கும் மத்திய அரசாங்கத்திற்குமிடையே ஒத்துழைப்பின்மையும், இராச்சிய அளவிலும் மத்திய அரசாங்க அளவிலும் விவசாய இலாகாவிற்கும் மற்ற இலாகாக்களுக்கும் இடையே ஒத்துழைப்பின்மையும்பற்றி நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். விலைகளைக் குறைக்கும் திட்டம் வெற்றிபெற வேண்டுமானால், இப் பிரச்சினையின் அளவையும் தன்மையையும்பற்றி நன்கு உணர்வதும், நிலைமையைச் சரியாக மதிப்பிடுவதும் இன்றியமையாத தேவைகளாகும். இறுதியாக, கட்டுப்பாடுகள் வெற்றியளிப்பது, அவற்றை நடத்திவைக்கும் நிருவாகத்தின் திறமையையும் பெரிதும் சார்ந்திருக்கிறது. நிருவாகத் துறையினர் விழிப்புடனும் சுறுசுறுப்புடனும் இல்லாமல், நியாய உணர்ச்சியும் நீதி உணர்ச்சியும் இல்லாமல் இருந்தால், நன்கு திட்டமிடப்பட்ட பங்கீட்டு முறையும் கட்டுப்பாட்டு முறையும் சீரழிந்துவிடும்.

கட்டுப்பாடுகளின் எதிர்காலம்

திட்டமிட்ட அபிவிருத்தியின் ஆரம்பநிலையில் இருக்கும் ஒரு நாட்டில் கட்டுப்பாடுகள் எந்த அளவுக்குத் தேவை என்பதைப் பற்றி இனி ஆராய்வோம். போர்க்காலத்திலோ, போரையடுத்த ஆண்டுகளிலோ கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகளில் பல, அவை தோன்றியதற்கு அவசியமான காரணங்கள் இல்லாததால் படிப்படியாக நீக்கப்பட்டன. எஞ்சியிருக்கும் சில கட்டுப்பாடுகளும் மிகவும் தாக்கப்படுகின்றன. மற்ற நாடுகளைப்போல நம் நாடு சிறியதாகவும் கட்டமைப்புடனும் இல்லாத காரணத்தால் விலைக்கட்டுப்பாடுகள் திறமையாகச் செயல்படமுடியாது என்பது முன்னரே கூறப்பட்டது. இந்தியாவில் கட்டுப்பாடுகள் குறிப்பிட்ட அவசியத்தை முன்னிட்டு அப்போதைக்கப்போது பொருளாதாரத்தின்மீது திணிக்கப்பட்டனவேயன்றி, அவற்றின் அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்து அவ்வாறு செய்யப்படவில்லை. வியாபாரச்சமூகத்தினர், கட்டுப்பாடுகள் உற்பத்தியைப் பாதிக்கின்றன என்றும், நிருவாகத்தின்மீது அதிகச் சுமையைப் போட்டுள்ளன என்றும், அரசாங்கத்திற்கு அதிகச் செலவை யளிக்கின்றன என்றும் கூறுகிறார்கள்[1]. இவை தவிர, விலைக் கட்டுப்பாட்டிலுள்ள சில சாதாரணக் குறைகளையும் சுட்டிக் காட்டுகின்றனர். மார்க்கெட் விலைக்குக் கூடிய அளவில் கிட்டத்தட்ட இருக்குமாறு கட்டுப்பாட்டு விலையை எவ்வளவு கருத்துடன் நிர்ணயித்தாலும், அது எதேச்சாதிகாரமான முறையில்

1 இந்தியத் தொழில், வர்த்தகச் சங்கங்களின் சமஷ்டி, 'கட்டுப்பாடுகள்—ஓர் ஆராய்ச்சி', 1952, பக். 96–97.

நிர்ணயிக்கப்படுவதால், செயற்கைத் தன்மையுடையது. ஓர் உத்தரவாதமான விலையை நிர்ணயிப்பதால், பொருள்களும் சாதனங்களும் வீணுக்கப்படுகின்றன. கட்டுப்பாட்டு முறைகள் விரிவாகவும் கடுமையாகவும் இருக்கும் அளவுக்கு, செலவுக்கும் விலைக்கும் உள்ள தொடர்பு நெகிழ்ச்சியற்றதாகிவிடுகிறது. இந்த நெகிழ்ச்சியற்ற தன்மை பொருளாதார முன்னேற்றத்திற்குப் பகையாகும். பல சமயங்களில் அதனால் இரு பக்கங்களில் ஊகவாணிகமும் கருப்பு மார்க்கெட்டும் தோன்றுகின்றன. மேலும், அவை ஒருமுறை கையாளப்பட்டால், அவற்றை விஸ்தரித்துக்கொண்டே போகவேண்டியிருக்கும். உதாரணமாக, அத்தியாவசியப் பொருள்களைக் கட்டுப்பாடு செய்தால், ஆடம்பரப் பொருள்களின் உற்பத்தி பெருகுகிறது. இதனால் பொருளாதாரத்தின் சமநிலை கெடுகிறது. அதைச் சரிப்படுத்துவதற்கு, ஆடம்பரப் பொருள்களையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டியிருக்கிறது. ஆகவே, தனிப்பட்டோர் வாழ்க்கையில் தலையீட்டிற்கு முடிவே இல்லாமல்போகிறது[1]. மக்களில் ஒரு பகுதியினரிடமிருந்து மற்றொரு பகுதியினருக்குக் கட்டுப்பாடுகள் மூலம் உண்மை வருமானத்தை மாற்றினால், சமூகத்திற்குத் தீமை ஏற்படுகிறது. உற்பத்தி ஊக்கம் குறையுமாறு கட்டுப்பாடுகள் பாதகமாகச் செயல்படுவதால், தேசிய வருமானம் குறைகிறது. இவையும் மற்றக் குறைகளும் அவை உண்மையானவையோ கற்பனையானவையோ, கட்டுப்பாடற்ற விலைகளை ஆதரிப்போரால் எல்லாவிதமான பொருளாதாரக் கட்டுப்பாடுகளையும் நீக்கிவிடவேண்டும் என்பதற்காகக் கூறப்படுகின்றன.

ஆனால், விலைக் கட்டுப்பாட்டுக்குத் தேவையான நிலை இருக்கிறதா இல்லையா என்பதைப் பொறுத்துதான் அது வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்சினை தோன்றுகிறது. கட்டுப்பாடற்ற விலை உபாயம் சாதாரண நிலையில்தான் பயன்படும். விலைமுறைக்கு இயற்கையான காரணங்கள் தாமே, பொருளாதார அமைப்பில் பெரிய மறுமாறுதல்களைச் செய்யமுடியாது.[2] ஆகவே, பொருளாதார அமைப்பில் பெரிய மாறுதல்கள் உண்டாகும்போது, உதாரணமாகப் போர்க் காலத்திலோ அமைதிக் காலத்திலோ அரசாங்கம் அதிகமாகச் செலவழிக்கும் போது பணவீக்கப் போக்கு ஏற்பட்டாலோ, பன்னூட்டுக் கொடுப்பல்நிலையில் சங்கடங்கள் உண்டானாலோ கட்டுப்பாடுகள் அவசியமாகின்றன. எனினும், போர்க்காலத்தில் அரசாங்கம்

[1] F. R. J. Jervis, 'Price Control', pp. 208-9.

[2] H. D. Henderson 'The Inter-war Years and Other Papers', ed., by Henry Clay, 1955, p. 419.

அதிகமாகச் செலவழிப்பதற்கும், அமைதிக் காலத்தில் அபிவிருத்திக்காக அப்படிச் செலவிடுவதற்கும் வித்தியாசம் உண்டு. போர்க் காலத்தில், சாதாரண நிலையில்போல் அல்லாமல், கட்டுப்பாடுகளை விரைவாக மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. நாடு போரில் ஈடுபட்டிருக்கும்போது அரசாங்கம் அதிகமாகச் செலவழிப்பது ஒரு தற்காலிக நிகழ்ச்சியாகும். ஆனால், அது பொருளாதார அபிவிருத்திக்காகத் திட்டமிட்டு அதிகமாகச் செலவழிக்கும்போது, அச் செலவு தொடர்ந்து இருக்கும். போர்க்காலத்தில் அழிவு வேலைக்காக முதலீடுகள் செய்யப்படுகின்றன. ஆனால், அமைதிக் காலத்தில் அவற்றால் கண்கூடான சொத்துகள் உருவாகி அவை அதிக உற்பத்திக்கு உதவுகின்றன. ஆகவே, போர்க்காலச் செலவின் பணவீக்க ஆற்றல், அமைதிக்காலத்தில் அபிவிருத்திக்காகச் செய்யப்படும் செலவின் பணவீக்க ஆற்றலை விட அதிகமானது. இவ்வாறன்றி, சாதாரண காலத்தில் பொருளாதாரக் கட்டுப்பாடுகளைச் செயல்படுத்துவது கடினமாகும். ஏனெனின், அப்பொழுது பொருளாதார முறையான நாட்டுப்பற்றோ, ஓர் அவசர உணர்ச்சியோ உண்டாவதில்லை.

இந்தியாவில் கட்டுப்பாடுகளின் எதிர்காலம் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியோடு இணைந்திருக்கிறது. பொருளாதார வளர்ச்சிக்கு, முதலீட்டு அளவை உயர்த்தவேண்டியிருப்பதால், விலைக் கட்டுப்பாடு அவசியமாகிறது. அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் முதலீடு செய்வதற்கு அதிகம் செலவு செய்யவேண்டும். இச் செலவு உடனடியாகவோ, குறுகிய காலத்திலோ பொருள் பெருக்கத்திற்கு உதவுவதில்லை. இந்த முதலினைச் செலவுகள், வருமானங்களிலிருந்து செய்யப்படும் நடப்புச் சேமிப்புகளை மிஞ்சிவிடுவதால், அவை மேலும் வருமானத்தை உண்டாக்குகின்றன. இப் புதிய வருமானங்களைச் செலவிடும்போது, உள்ள இருப்புகள் குறைந்து, பொருளாதாரத்தில் பணவீக்க நெருக்கடி உண்டாகிறது.[1] இந்தப் போக்கைக் கட்டுப்படுத்தாமல் விட்டால், அது பணவீக்க அடக்க விலை உயர்வைத் தொடர்ந்து உண்டாக்கும். அது வலுப்பெறும்போது, நாட்டுப் பொருளாதாரத்தைச் சீர்குலையச் செய்து, புதிய முதலீட்டையும் உற்பத்தியையும் தடைசெய்து திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின் நோக்கத்தையே அழித்துவிடும். அளிப்பும் தேவையும் சரிக்கட்டப்படாததால் உண்டாகும் இப் பணவீக்க நெருக்கடியை விலைக் கட்டுப்பாட்டினால்மட்டும் நிறுத்திவிட முடியாது என்பது உண்மையே. தேவையைக் குறைக்கவும் உற்பத்தியைப் பெருக்கவும் தேவைக்கேற்ப அளிப்பைப் பெருக்கவும் எடுக்கப்படும் நடவடிக்கைகளே இப் பிரச்சினையின் அடிப்

[1] R. G. Hawtrey, 'Economic Rebirth,' 1946, p. 135.

படையைத் தாக்கும். எனினும், இந்த நடவடிக்கைகள் உட்பட ஒரு விரிவான பணவீக்க எதிர்ப்புக் கொள்கைக்கு ஆரம்பம், விலைக் கட்டுப்பாட்டு முறையேயாகும். ஏனென்றால், விலைக் கட்டுப்பாட்டு அடிப்படையை அமைத்து, பணவீக்கத்தைத் தடுக்கும் முறையான ஒதுக்கீடுகள், பங்கீடு, அரசாங்க வருமானம் ஆகிய நிலையான ஏற்பாடுகளைத் தக்க நிலையில் அமைப்பதற்கான அவகாசத்தையளிக்கிறது[1].

பொருளாதார வளர்ச்சியின்போது விலைக் கட்டுப்பாடோ, அதைவிட அதிகமான ஒன்றோ தேவையென்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின் சாரமாவது, கிடைக்கக்கூடிய சாதனங்களை ஒரு பொதுவான அமைப்பின்படி, அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் வெவ்வேறு முதலீட்டுத் துறைகளுக்கு ஒதுக்குவதுதான். திட்டமில்லாவிட்டால் இருக்கக்கூடிய பொருளாதார அமைப்பினின்றும் வேறான ஒரு பொருளாதார அமைப்பை உருவாக்குவதற்குத்தான் இத்தகைய ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்படுகிறது. கட்டுப்பாடற்ற விலையமைப்பில், இத்தகைய ஒதுக்கீடு, அவசியமான துறைகளில் வேண்டிய அளவு முதலீடு செய்வதும் முடியாத காரியம். ஆகவே, விலைக் கட்டுப்பாட்டையும் பொருள் கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்துவது முக்கியமாகிறது. உண்மையில் கட்டுப்பாட்டு முறை எவ்வளவுக்கெவ்வளவு விரிவாக இருக்கிறதோ, அது எவ்வளவுக்கெவ்வளவு கடுமையாகச் செயல்படுத்தப்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி மிக எளியதாகவும் வெற்றியளிக்கக்கூடியதாகவும் இருக்கும். ஜனநாயக ஆட்சியில் நம்பிக்கை கொண்ட ஒரு நாட்டில் பொருளாதாரக் கட்டாய முறை சாத்தியமன்று. ஆனால், பேராசிரியர் மீட் (Meade) கூறியுள்ளதுபோல, 'கட்டாயமான திட்டத்திற்கும், விலைகள் கட்டுப்பாடின்றி இயங்குவதற்கும் இடையில் ஒரு நடுத்தரமான வழி சாத்தியமே. இவ் வழி, செலாவணி முறையையும் விலையமைப்பையும் நன்கு பயன்படுத்தும். ஆனால், பணவீக்கத்தைத் தடுக்கும்படியான முறையில் இவற்றைக் கட்டுப்படுத்தும்; செல்வத்தையும் வருமானத்தையும் நல்ல முறையில் பங்கிடுவதற்கும், சர்வாதீன அமைப்பு தோன்றுவதைத் தடுப்பதற்கும் இவற்றைக் கட்டுப்படுத்தும்.'[2]

அபிவிருத்திக்குச் சாதனங்களைத் தேடுவதில் பற்றாக்குறை நிதியாக்கத்தையே அதிகம் நம்பியிருப்பதாலும், இந்தியாவில்

[1] J. K. கால்பிரெய்த், 'விலைக் கட்டுப்பாடு', The American Economic Review-வில், (அநுபந்தம்), 1943 மார்ச், பக். 258-9.

[2] J. E. Meade, 'Planning and the Price Mechanism', 1948, p. 11.

கட்டுப்பாடுகள் அவசியம் என்பது உறுதியாகிறது. திட்டமிட்ட வளர்ச்சியில் சென்ற ஒன்பதாண்டுகளில் பற்றுக்குறை நிதியாக்கம் ரூ. 1,450 கோடியாயிற்று. இது திட்டங்களின் மொத்தச் செலவில் 27 சதவீதமும், ஆண்டுக்குச் சராசரி ரூ. 160 கோடியும் ஆகும். இந்தவிதமான நிதியாக்கத்தின் பணவீக்க ஆற்றல்பற்றி முன்பே கூறப்பட்டது[1]. இந்தவிதமான அதிக நிதியாக்கத்தினால் சாதாரணமாக உண்டாகும் விலையுயர்வு உண்மையான சாதனங்களை அரசாங்கத்துறைக்கு மாற்றுவதில் உதவுமென்றாலும், அது கைகடந்துபோய் கட்டுக்கடங்காத பணவீக்கமாக மாறிவிடக்கூடிய அபாயத்தைத் தடுப்பதற்குப் போதிய அளவு முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது மிகவும் முக்கியம். வரி வருமானத்தை உயர்த்தவேண்டிய அவசியம் வரிவிதிப்பு விசாரணைக் குழுவினால் வற்புறுத்தப்பட்டது[2]. திட்டக் குழுவும், வளரும் பொருளாதார அமைப்பில் நடப்பு வருவாய்கள் முதலினத் திட்டங்களுக்குக் கணிசமான அளவில் நிதியளிக்கவேண்டும் என்பதை உணர்ந்துள்ளது.[3] மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகலில் உத்தேசிக்கப்பட்டுள்ள வெவ்வேறு நிதியளிப்பு வழிகளில், பணவீக்கமில்லாத சாதனங்களையே அதிகம் நம்பியிருக்கவேண்டுமென்று கூறியுள்ளது இந்த அவசியத்தை உணர்ந்தேயாகும். இந்த நகலில் 1961-62 முதல் 1965-66 வரை ஐந்தாண்டுகளில் பற்றுக்குறை நிதியாக்கம் ரூ. 550 கோடி அல்லது அரசாங்கத் துறையின் மொத்தச் செலவீடாகிய ரூ. 7,250 கோடியில் 8 சதவீதத்திற்கும் குறைவாக இருக்கவேண்டுமென்றும், நடப்பு வருவாய்களும், கடன்களிலிருந்தும் சேமிப்புகளிலிருந்தும் ரூ. 4,500 கோடிக்கு, அல்லது 62 சதவீதத்திற்கு உயர்த்தப்படவேண்டுமென்றும் குறிக்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக வெளிநாட்டு இருப்பில் போதிய காப்பு நிதியை வைத்திருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். ஏனெனின், அவசியமாகும்போது உள்நாட்டில் அளிப்பு நிலையை வலுப்படுத்துவதற்குச் செய்யப்படும் இறக்குமதி உபரிக்கு நிதியளிப்பதற்கும், விலைகளில் அளவு கடந்து ஏறுமுகம் உண்டானால் அதைத் தடுப்பதற்கும் இது அவசியம். இந்த நோக்கத்தையுடைய வெளிநாட்டுச் செலாவணியையும் வாணிபத்தையும் தொடர்ந்து கட்டுப்படுத்தவேண்டும். இறுதியாக, முன்னரே கூறிய காரணங்களால் விவசாயப் பொருள்கள், தொழில் கச்சாப் பொருள்கள் ஆகிய

1 அத்தியாயங்கள் 6, 7ஐக் காண்க.

2 'Report of the Taxation Enquiry Commission' (1955). Vol. I, pp. 96-7.

3 இந்திய அரசாங்கம், திட்டக் குழு, 'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்', பக். 82.

வறுரின் விலைகளை முடிந்தவரையில் ஏற்ற இறக்கங்கள் அதிகம் இல்லாதவாறு கட்டுப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் வேண்டும். இதற்கு உச்ச விலை, குறைந்த விலைகளை நிர்ணயிப்பதோடு, விலைக் கட்டுப்பாட்டைச் செயல்படுத்துவதற்கு உதவியாக அளிப்புகளையும் கட்டுப்படுத்தவேண்டும். உருவாக்கப்பட்ட தொழில் உற்பத்திப் பொருளகளுக்கும் இதே முறையை விஸ்தரிப்பதில் தடையொன்றுமில்லை. உண்மையில், கச்சாப் பொருள்களையும், விவசாயப் பொருள்களையும் கட்டுப்படுத்துவதைவிட செய்பொருள்களின் விலைகளையும் கட்டுப்படுத்துவது மிக எளிதாகும். இந்த நடவடிக்கைகள் உற்பத்தியைத் தடைசெய்யும் என்று வழக்கமாகக் கூறப்படும் வாதம் பொருத்தமன்று. அமெரிக்காவில், போர் நடந்த ஆண்டுகளில் இத்தகைய கட்டுப்பாடுகளைச் செயல்படுத்திய அனுபவத்திலிருந்து, கட்டுப்பாடுகளால் உற்பத்தி குறையவில்லை என்று தெரிகிறது. விலைக் கட்டுப்பாடும் வியாபாரிகளின் நடவடிக்கைக்குத் தடையாய் இல்லை என்று தெரிகிறது[1]. ஆகவே, கட்டுப்பாட்டு முறைகளால் உலகம் போய்விடும் என்று வியாபாரிகள், அஞ்சுவதற்குக் காரணமில்லை. போர்க்காலத்தில் போல நிகரத் தேவை அதிகமாக இருக்கும்போது, விலைக் கட்டுப்பாடு தொழில் உலகத்தைத் தடைசெய்வதில்லை. ஆகவே, அமைதிக் காலத்திலும், அதிக முதலீட்டுச் செலவினைலும், வேலையளிப்பின் அளவு அதிகரிப்பதனாலும், விவசாயத் துறையின் பெரும் பகுதிகள் பணம்பெறுவதனாலும் நிகரத் தேவை அதிகமாவதால், விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளால் தொழில் உலகம் குறைந்துவரும் என்று அஞ்சுவதற்குக் காரணம் இல்லை. ஆனால், இந்த நடவடிக்கைகள திருப்தியாகச் செயல்பட வேண்டுமானால், முக்கியமாகச் செய்யவேண்டியவை, நிருவாக அமைப்பின் தரத்தை உயர்த்துவதும், உழலை ஒழிப்பதும், பொது நலனைப் பாதுகாப்பதில் உண்மையான ஆர்வமும் திறமையுமுள்ள ஒரு குழுவாக அதை மாற்றவேண்டுவதும் ஆகும். தனியார் துறையில் செய்யப்படும் முதலீட்டையும், மூலத் தொழில்களில் கூலியளவையும், அயல்நாட்டு வாணிபத்தின் போக்குகளையும் அரசாங்கம் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டியது முக்கியமாகும். இவை ஒழுங்குமுறைகளே அன்றிக் கட்டுப்பாடுகள் அல்ல. சமூகப் பொருளாதார நீதியை அடிப்படையாகக்கொண்ட சேமநல அரசை உருவாக்கும் லட்சியத்தையுடைய ஒரு நாட்டில், அந்த லட்சியத்தை அடைவதற்கு உறுதியான வழிதிட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியே என்று நம்பியுள்ள ஒரு நாட்டில், இவை தவிர்க்கமுடியாதவையும் அவசியமானவையும் ஆகும்.

[1] George Katona, 'Price Control and Business' 1945, pp. 206–7.

கலைச்சொல் அகராதி

ஆங்கிலம்—தமிழ்

A

Accommodation	—	பணவசதி
Acceleration	—	வேகவளர்ச்சி
Accumulation of capital	—	முதல் திரட்சி
Ad valorem	—	பெறுமான விகித
Agricultural labourers	—	விவசாயத் தொழிலாளிகள்
Allocation of resources	—	சாதனப் பங்கீடு
Analysis	—	பகுத்தாய்வு
Annuities	—	ஆண்டுத் தொகை

B

Balance of trade	—	வாணிபக் கொடுப்பல்தில
,, favourable	—	சாதக வாணிபக் ,,
,, unfavourable	—	பாதக வாணிபக் ,,
Balance of payments	—	அயல்நாட்டுக் கொடுப்பல்நில
Bank	—	பாங்கு
Banks, commercial	—	வாணிப பாங்குகள்
Bank, schedule	—	ஷெட்யூல் பாங்கு
Bank credit	—	பாங்குச் செலாவணி
Bankers' deposit	—	பாங்குகளின் வைப்பு
Bank rate	—	பாங்கு வீதம்
Bank, reserve	—	ரிசர்வ் பாங்கு
Bill	—	உண்டியல்
Bill, usance	—	மாமூல் தவணை உண்டியல்
Bonus	—	போனசு
Budget	—	பட்ஜெட், வரவுசெலவுத் திட்டம்
Budget, deficit	—	பற்றுக்குறை பட்ஜெட்
Budget, family	—	குடும்ப வரவுசெலவுத் திட்டம்
Business	—	வியாபாரம், தொழில்

C

Call money	—	அழைப்புக் கடன்
Capital	—	மூலதனம், முதல்

Capital market	—	மூலதன மார்க்கெட்
Capital goods	—	முதற்கருவிப் பொருள்கள்
Capital assets	—	முதலினச் சொத்துகள்
Capital gain	—	முதலீட்டு ஆதாயம்
Capital account	—	முதலினக் கணக்கு
Central Bank	—	மைய பாங்கு
Chamber of Commerce	—	வாணிபர் சங்கம்
Clearing	—	தீர்வு
Commonwealth	—	காமன்வெல்த்
Commerce	—	வாணிகம், வர்த்தகம்
Commercial enterprise	—	வாணிகத் துணிவு
Commodities	—	பண்டங்கள்
Competition	—	போட்டி
Consumer	—	துய்ப்போர்
Contraction of demand	—	தேவைச் சுருக்கம்
Consumption	—	துய்ப்பு
Constituents	—	கூறுகள்
Corporation	—	கார்ப்பரேஷன்
Cost	—	செலவு, அடக்க விலை
Cost of living	—	வாழ்க்கைச்.செலவு
Cost of living index number	—	வாழ்க்கைச் செல்வுக் குறியீட்டெண்
Costs of production	—	ஆக்கச் செலவு, உற்பத்திச் செலவு
Credit creation	—	பாங்குச் செலாவணி சிருட்டி
,, expansion	—	பாங்குச் செலாவணிப் பெருக்கம்
,, contraction	—	பங்குச் செலாவணிச் சுருக்கம்
Currency	—	செலாவணி
Currency notes	—	கரன்சி நோட்டுகள், செலாவணித் தாள்கள்
Current account	—	நடப்புக் கணக்கு
Curve	—	வளைகோடு
Customs duty	—	சுங்கத் தீர்வை

D

Data	—	விவரங்கள்
Dear money policy	—	அரும்பணக் கோள்
Debt, public	—	அரசாங்கக் கடன்
Debt, floating	—	குறுங்காலக் கடன்
Debt, funded	—	நிலையாக்கிய கடன்

Debt, unfunded — நிலையாக்கப்படாத கடன்
Debt, national — நாட்டுக் கடன்
Deficit — பற்றுக்குறை
Deflation — பணவாட்டம், பணச்சுருக்கம்
Deferred payment — தள்ளிப்போட்ட செலுத்து
Demand — தேவை
,, deposits — நடப்பு வைப்புகள்
,, elasticity of — தேவையின் நெகிழ்ச்சி
Deposit — டெபாசிட்டு, வைப்பு
,, current — நடப்பு வைப்பு
,, time — தவணை வைப்பு
Depreciation — மதிப்பிறக்கம், தேய்மானம்
,, fund — தேய்மான ஈட்டு நிதி
Depression — மந்தம்
Devaluation — மதிப்புக் குறைப்பு
Diseconomies — சிக்கன இழப்புகள்
Disi nflation — பணவீக்கக் குறைப்பு
Disequilibrium — சமனறு நிலை
Distribution — பங்கீடு
Dividend — இலாப ஈவு

E

Earnings — சம்பாத்தியம், வருமானம்
Economic development — பொருளாதார வளர்ச்சி
Econ omy — பொருளாதாரம், பொருளாதார அமைப்பு
Economists — பொருளாதாரத் துறையினர்
Elasticity — நெகிழ்ச்சி
Employment — வேலை
,, Exchange — வேலைத் தகவல் நிலையம்
Ent erprise — தொழில்துணிவு
Equilibrium — சமநிலை
Exchange, foreign — அயல்நாட்டுச் செலாவணி

F

Factors of production — உற்பத்திக் காரணிகள்
Finance — நிதி
,, bill — நிதி மசோதா
Fluctuations — ஏற்ற இறக்கங்கள்
Full employment — வேலை நிறைவு
Futures — முன்னேக்கிய பேரங்கள்

G

Gold reserves	—	பொன்காப்பு நிதி
Goods	—	பொருள்கள்
Grants	—	மானியங்கள்
Government undertaking	—	அரசாங்கத் தொழில்

I

Immobility	—	இடம்பெயராமை
Import duties	—	இறக்குமதி வரிகள்
,, quotas	—	,, கோட்டாக்கள்
Income-tax	—	வருமானவரி
Incentive	—	தூண்டுகோல்
Income, money	—	பணவருமானம்
,, real	—	உண்மை வருமானம்
,, national	—	நாட்டு (தேசிய) வருமானம்
Index numbers	—	குறியீட்டெண்கள்
Indirect tax	—	மறைமுக வரி
Industry	—	தொழில்
Industrialisation	—	தொழில்மயமாக்கல்
Inequality of incomes	—	வருமான ஏற்றத்தாழ்வு
Inflation	—	பணவீக்கம்
International trade	—	பன்னாட்டு வாணிபம்
International Monetary Fund	—	பன்னாட்டுச் செலாவணி நிதி
Investment	—	முதலீடு
Inventories	—	இருப்புகள்
Issued capital	—	வெளியிட்ட மூலதனம்

J

Joint-stock Companies	—	ஜாயின்ட் ஸ்டாக்கு கம்பெனிகள்

K

Key industry	—	ஆதார (மூல)த் தொழில்

L

Labour	—	தொழிலாளர்
Lag	—	பின்னடைவு, பின்தங்கல்
Lease	—	குத்தகை
Levy	—	வரி

Liability — பொறுப்பு
Liquidity preference — ரொக்க விருப்பம்
Loan — கடன்
Luxuries — ஆடம்பரப் பொருள்கள்

M

Management — நிருவாகம்
Manufactured goods — (பொறி) செய்பொருள்கள்
Margin — இறுதிநிலை
Marginal propensity to consume — இறுதிநிலைத் துய்ப்பு நாட்டம்
Market — மார்க்கெட்டு
Maximum — உச்ச, உயர்ந்தபட்ச
Measures — நடவடிக்கைகள்
Means of production — உற்பத்திச் சாதனங்கள்
Money — பணம்
,, market — பண மார்க்கெட்
,, paper — தாள் (காகிதப்) பணம்
Money, quantity theory of — பணப் பரிமாணக் கோட்பாடு
Monetary — பணவாக்க
Multiplies — பெருக்கி

N

National products — நாட்டின் மொத்த ஆக்கம்
National output — நாட்டின் மொத்த உற்பத்தி
Net — நிகர
Notes — நோட்டுகள், பணத்தாள்கள்
Note-issue — நோட்டு வெளியீடு
Notes, currency — செலாவணித் தாள்கள்

O

Operation — நடவடிக்கை
,, open market — வெளிச்சந்தை நடவடிக்கை
Organised — கட்டமைந்த
Output — உற்பத்தி
Overfull employment — அமிதவேலைப் பெருக்கம்

P

Payments — செலுத்தினங்கள்
Per capita income — தலா வருமானம்
Price, retail — சில்லறை விலை

Price control	—	விலைக் கட்டுப்பாடு
,, wholesale	—	மொத்த விலை
Private sector	—	தனியார் துறை
Producers' goods	—	முதலீட்டுக்குரிய பண்டங்கள்
Problem	—	பிரச்சினை
Progress	—	முன்னேற்றம்
Public sector	—	அரசாங்கத் துறை
,, revenue	—	,, வருவாய்
,, expenditure	—	,, செலவு
,, investment	—	,, முதலீடு
Purchasing power	—	வாங்குந் திறன்

R

Raw materials	—	கச்சாப் பொருள்கள்
Recovery	—	மறுமலர்ச்சி
Receipt	—	வரவு
Reparation	—	பரிகரிப்பு
Reserve, cash	—	ரொக்கக் காப்பு நிதி
Resources	—	வளப்பொருள்கள், சாதனங்கள்
Revenue	—	வருவாய்
Royalty	—	ராயல்டி

S

Saving	—	சேமிப்பு
Securities	—	பத்திரங்கள்
Selective credit control	—	தேர்வுக் கடனளிப்புக் கட்டுப்பாடு
Shares	—	பங்குகள்
Speculation	—	ஊகவாணிகம்
Stabilisation	—	நிலைபேறுக்கம்
State trading	—	அரசாங்க வாணிகம்
Statistics	—	புள்ளியியல்
Standardisation	—	தரப்படுத்தல்
Stock	—	இருப்பு
Stocks	—	கூட்டுரிமைப் பங்குகள்
Stock exchange	—	பங்குமாற்றுச் சந்தை
Subsidy	—	உதவிக் கொடை
Supertax	—	மேல்வரி
Supply	—	அளிப்பு
Surplus	—	உபரி

T

Tariff	—	சுங்கவரிகள்
Taxation	—	வரிவிதிப்பு
,, direct	—	நேர்முக வரிவிதிப்பு
Technical	—	தொழில்நுட்ப
Technique	—	நுட்பவினைமுறை
Terms of trade	—	வாணிபமாற்று வீதம்
Time deposit	—	தவணை வைப்பு
Treasury bill	—	கசாஞ உண்டியல்
Trade	—	வாணிபம், வர்த்தகம்
Transport	—	கடத்து

U

Undertaking	—	தொழிலீடுபாடு
Under-employment	—	வேலைக்குறைவு
Under-developed	—	வளர்ச்சி குறைந்த
Unemployment	—	வேலையின்மை
,, frictional	—	பிறழ்ச்சிக் காரண வேலையின்மை
nit	—	அலகு, பகுதி
Usance bill	—	மாமூல் தவணை உண்டியல்

V

elocity of circulation	—	புழக்க வேகம்

W

Wage	—	கூலி
Weighted index number	—	நிறையிட்ட குறியீட்டெண்
Wear and tear	—	தேய்மானம்

பொருள் அகரவரிசை

அ

அகதிகள் புனரமைப்பு, 307
அகர்வால்,ராம்கோபால், மேற்கோள், 382 அடிக்.
அஞ்சல், தந்திக் கட்டணங்கள், போர்க்காலத்தில் உயர்த்தப்படுதல், 136
அஞ்சலக, ஐந்தாண்டு ரொக்கப் பத்திரங்களும் பத்தாண்டுப் பாதுகாப்புப் பத்திரங்களும், 140
அஞ்சலக, பாதுகாப்பு சேமிப்பு பாங்கு, 140
அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம், 1955; திருத்தம், 334, 335
அத்தியாவசியப் பண்டங்கள், அவசரச் சட்டம், 1955, 320; அத்தியாவசியப் பொருள் அளிப்பு (தற்காலிக) அதிகாரங்கள், சட்டம் 1946, 320; 1949-ல் திருத்தப்பட்டது 310; 1946-ல் அவசரச் சட்டம், 305
அபிவிருத்தி செலவு, 1951-52-லிருந்து 1955-56 வரை, 1939-க்கு முன் சாதாரணச் செலவுடன் ஒப்பிடுதல், 153, 154; விலையேற்றம், 84, 85
அமித லாப வரி, 39; ஒழிக்கப்பட்டது, 147; டிபாசிட்டுகள், 309
அமெரிக்கா, விவசாய விலைக் கொள்கை, 328; விவசாய விலை ஆதரவு, 330; 1938-ல் தொழில் மறுமலர்ச்சி, 32; இரண்டாவது உலகப்போரில் வாழ்க்கைச் செலவு, 285; 1950-லிருந்து, 286; சுழற்சி ஏற்ற இறக்கங்களும் வளர்ச்சி குறைந்த நாடுகளின்மீது விளைவும், 197; மிளகு இறக்குமதியில் குறைவு, 78; பணவீக்கத்தை ஏற்றுமதி செய்தல், 71, 73; சணற் பொருள்களுக்குத் தேவைக்குறைவு, 235; உணவுக் கடன், 204; போர்க் காலத்தில் முழு வேலையளிப்பு, 16; 1939-43-ல் உற்பத்தி உயர்வு, 230; நில ஊக வாணிகம், 23; கடன் குத்தகை வெள்ளி, 200; இந்தியாவில் துருப்புகளுக்காகப் பணம் கொடுத்தல், 107; 1940-44-ல் ஆண்டு விலையுயர்வு சதவீதம், 51; 1937-38-ல் குறைவு, 33; 1949-66 இரண்டாவது உலகப் போரில், 52; 1945-49, 216; 1948-49-ல் சிறிது பின்னிறக்கம், 203; 1951-52-ல் மட்டான வீழ்ச்சி, 77; 1942-க்கும் 1945-க்கும் இடையில் மட்டான உயர்வு, 53; 1946 வரை ஓரளவு நிலைப்பு, 88; 1950-51-ல் உயர்வு, 70; 1940-ல் உயர்வு தடுக்கப்பட்டது, 39; பண அளிப்பில் நடப்பு வைப்புகளின் அளவு, 95; அரசாங்க வருவாய்க்கும் நாட்டு வருமானத்திற்கு முள்ள விகிதம், 27; போர்ச் செலவுக்கும் அரசாங்கத்தின் மொத்தச் செலவுக்கும் உள்ள விகிதம், 125; பின்னிறக்க நிலை, 85; 1945-ல் கட்டுப்பாட்டு நீக்கமும் விலையுயர்வும், 59; இருப்புச் சேர்ப்புத்

திட்டம், 20, 74; கூலி லாப விகிதம், 30; போர்க் காலப் பொருளாதாரக் கட்டுப்பாடுகள், 351; கோதுமைக் கடன், 112, 205, 209, 316

அயல்நாட்டுக் கொடுப்பல்நிலை, இந்தியாவில் முதல் தடவையாகத் தொகுக்கப்படுதல், 198; நடப்பு அல்லது வருமானக் கணக்கு, 188; 1946–49-ல் பற்றுக்குறைகள், 202; பண அளிப்பின்மீது விளைவு, 192, 193; நாட்டுப் பொருளாதார பணிகள்மீதும் வருமானத்தின்மீதும் விளைவு, 190–191; விலைகள்மீது 190, 215–221; 1952-ல் இந்தியாவில் விலைகள்மீது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், 211, 215; 1952 முதல் உபரி, 210, 211; வளர்ச்சி குறைந்த நாடுகளில், 194, 195

அர்ஜென்டினா, விவசாயப் பொருள் விலை, 43; இரண்டாம் உலகப் போரின்போது விலை உயர்வு, 51; 1940-ல் நிறுத்தப்பட்டது, 38, 39; ஆஸ்திரேலியாவில் வாழ்க்கைச் செலவு, 285, 286; இறக்குமதியில் வெட்டு, 75; பணத்தாள் புழக்க மிகுதி, 44; விலைக் கட்டுப்பாடு, 53; 1945–49-ல் விலையளவு மற்ற நாடுகளுடன் ஒப்பிடப்படுதல், 216; இரண்டாம் உலகப் போரில் விலை உயர்வு, 51, 52; 1951–52, 77

அரசாங்க உணவு தானிய வாணிபம், 336, 337

அவசர நிலை ஏற்பாடுகள் (தொடர்ச்சி) அவசரச் சட்டம், 1946, 305

அளவுகடந்த பணவீக்கம், 10, 12

அனுமதி வழங்கும் முறை கச்சாப் பருத்திக்கு எளிமையாக்கப்படுதல், 320

ஆ

ஆக்ஸ்ஃபோர்டு புள்ளியியல் கழகம், 283

ஆசிய தூரக் கிழக்கு நாடுகளுக்குப் பொருளாதாரக் குழு, 184

ஆஸ்திரியா, 1920–29-ல் அளவு கடந்த பணவீக்கம், 10

இ

இங்கிலாந்து, விவசாய விலை ஆதரவு, 330; இரண்டாவது உலகப் போரில் வாழ்க்கைச் செலவு, 286, 287; 1955–59, 287; தேயிலைக் கட்டுப்பாட்டு நீக்கம், 83; இந்திய அரசாங்கம் இதற்காகச் செய்த செலவு, 106; ஹைதரி தூதுக் குழு, 303; 1952-ல் இறக்குமதிக் குறைவு, 74; 1939–43-ல் நாட்டுப் புழக்கத்தில் உயர்வு, 44, 54; போருக்குப் பிறகு பண எளிமை, 192, 193; 1940-44-ல் ஆண்டு விலையுயர்வு சதவிகிதம், 51; 1937–38-ல் விலைக் குறைவு, 32, 33; இரண்டாவது உலகப் போரில் உயர்வு, 52; 1945–49, 216; 1950–51, 70, 77; மதிப்பிறக்கத்திற்குப் பிறகு உயர்வு, 67; இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு போக்குகள், 59; 1946 வரை நிலைப்பு, 88; விலைக் கட்டுப்பாடு, 53; இந்தியாவில் கொள்முதல், 44; விவசாயவிலைகள் நிலைபேறுக்கம், 328; 1939–45-ல் மொத்தச் செலவு, 124

இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் 1939 நவம்பர் ஒப்பந்தம், 128

இணைப்பான உற்பத்தித் திட்டம், 249

இத்தாலி, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு விலையேற்றம், 60

இந்திய இராச்சியங்களில் விவசாய விலை ஆதரவு, 330, 331
இந்தியப் பாதுகாப்புச் சட்டம், 105
இந்தியப் பாதுகாப்பு விதிகள், 297, 305
இந்தியாவின் வெளிநாட்டுப் பொதுக் கடன் திரும்பச் செலுத்துதல், 199
இந்தியத் தொழில், வர்த்தகச் சங்கங்களின் சம்மேளனம், 308
இந்தியன் பைனான்ஸ், 179, 239, 299
இந்தியச்சணல் ஆலைகள் சங்கம், 322
இந்தியத்தொழிலாளர் கெஜட், 237, 242, 259, 261, 269-272, 274
இந்திய ரப்பர் கட்டுப்பாடு, உற்பத்தி உத்தரவு, 300
இந்திய அரசாங்கத்தின் தொழில் தகவல் நிலையம், 255, 256; தொழில் துறை, 50
இந்திய ரிசர்வ் பாங்குச்சட்டம், 107; பின்னிறக்கத்திற்கெதிரான நடவடிக்கைகள், 80; பண அளிப்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள், 110, 111; தங்க விற்பனை, 140; தேர்ந்தெடுத்த கடன் கட்டுப்பாடு, 80, 341, 343; பண அளிப்பின் வழிகள், 94, 95
இந்தோ-சீனா வர்த்தக ஒப்பந்தம், 323
இந்தோனீசியா ஏற்றுமதி வீக்கம், 20
இந்தோ-பாகிஸ்தான் வியாபார ஒப்பந்தம், 73
இந்தோ-இங்கிலாந்து ஒப்பந்தம், 1948, 205
இந்தோ-அமெரிக்கத் தொழில் நுட்பக் கூட்டுறவு ஒப்பந்தம், 247
இரண்டாம் உலகப் போரின் நிதிச்சுமை; இந்தியாவின் பங்கு, 128
இராச்சியங்களுக்கு மத்திய அரசாங்கத்தின் உதவி, 156
இராணுவக் கலைப்பு, இரண்டாம் போரின் இறுதியில், 61
இராணுவச் செலவும் செலாவணிப் பெருக்கமும், 130, 131
இலங்கை, 1950-51-ல் ஏற்றுமதி வீக்கம், 20; மொத்தப் பண அளிப்பில் நடப்பு வைப்புகளின் அளவு அதிகம், 95; தேயிலை ஏற்றுமதிக்குத் தடை, 83
இறக்குமதி செய்யப்பட்ட உணவு தானிய உத்தரவு, 1958, 334
இறக்குமதிகள் இங்கிலாந்தில் குறைப்பு, 74; உணவு அதிகரிப்பு, 202; விலைமாறுதலுக்கேற்ப மாறுமை, 219; தாராளமாக்குதல், 202, 210; குறைத்தல், 63, 69
இறக்குமதி செய்யப்பட்ட உணவு தானியங்களுக்கு உதவிக் கொடை நிறுத்தப்படுதல், 318
இறக்குமதி வரிகளுக்கு சர்சார்ஜ், 135. 136; வருமான வரிகளுக்கு, 135, 136

ஈ

ஈடுசெய் நிதியாக்கம், 188
ஈடுசெய் அரசாங்க நிதியாக்கம், 204
ஈரான், இரண்டாம் உலகப் போரின்போது வாழ்க்கைச் செலவு, 55
ஈஸ்டர்ன் எகானமிஸ்டு, 115, 225, 228, 238, 241, 243

உ

உண்டியல் மார்க்கெட்டு திட்டம், 8
உணவு, விவசாய அமைப்பு (F A.O.), 282
உணவுப் பொருள்களும் வாழ்க்கைச் செலவும், 265

உணவு இலாகா அமைப்பு, 1942, 300
உணவு தானியக் கட்டுப்பாட்டு உத்தரவு, 1942, 299
உணவு தானிய (அனுமதி, கொள்முதல்) உத்தரவு, 1952, 319
உணவு உற்பத்தி அதிக உயர்வும் 1954-55 விலை வீழ்ச்சியும், 250
உணவுப் பங்கீடு, 50
உத்தரவாத விலைகள், இங்கிலாந்தில், 328
உத்தரப் பிரதேசத் தொழில் விசாரணைக் குழு, 239
உயர்ந்த பதிப்புள்ள நோட்டுகளுக்கு அதிகத் தேவை, 121
உற்பத்தி அமைச்சு, 249

ஊ

ஊகவாணிகமும் பண்ட விலைகளில் சரிவும், 78; விலையேற்றம், 36, 45, 46
ஊகவாணிக நோக்கத்துடன் ஏலத்தில் நிலங்களின் மதிப்பை உயர்த்துதல், 173; அமெரிக்காவில் பொருள்களைப் பதுக்குதல், 70

எ

எஃகிற்குப் பிடிப்பு விலை, 316
எகனமிக் ரிகார்டு, 92 அடிக்.
எகிப்து, ஆண்டு விலையுயர்வு, 1940-44, 41
எட்டு அம்சத் திட்டக் கட்டுப்பாடு, 310, 311
எயின்ஜிக் பேராசிரியர் பால், மேற்கோள், 4, 5 அடிக். 24 அடிக்., 89 அடிக்.
எல்லாப் பொருள்களுக்கும் திறந்த பொது அனுமதி, 64
எளிய பணக்கோள், 62, 140; 1951-ல் முடிவு, 317

ஏ

ஏற்றுமதிப் பொருள்கள், விலை வீழ்ச்சி, 39; மதிப்பிறக்கத்தினால் விலையேற்றம், 66, 67
ஏற்றுமதிகள், 1948-49-ல் குறைவு, 203; 1953-ல் ஊக்குவித்தல், 321
ஏற்றுமதி முன்னேற்றக் குழு, 249
ஏன்ஜெல், பேராசிரியர் J. W., மேற்கோள், 26 அடிக்., 92, 115 அடிக்.

ஐ

ஐக்கிய அரபுக் குடியரசு, அரிசி இறக்குமதி, 333
ஐந்தாண்டுத் திட்டங்கள், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் அயல்நாட்டுக் கொடுப்பல்நிலைப் பற்றுக்குறை, 210, 212, 219; பட்ஜெட் பற்றுக்குறைகள், 158, 160, 161; அதிகப் பண வருமான வேகம், 119; பண அளிப்புப் பெருக்கம், 114, 161; அதிகச் செலவீடு, 111; உத்தேசிக்கப்பட்ட செலவு, 154, 155; மத்திய இராச்சிய அரசாங்கங்களின் செலவு, 156, 157; வருவாய் இனங்கள், 159; விலையேற்றம், 85; செலவுக்கு இராச்சியங்கள் அளித்த பங்கு, 159; இறுதியில் திடீரென்று அதிகச் செலவு, 85; இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட மதிப்பீட்டுச் செலவு, 157; பற்றுக்குறை நிதியாக்கம், 156, 157, 321; நிதியளிப்பு, 155, 156, 164, 174; மறுபரிசீலனை, 166, 167; முக்கியத்துவம் உள்ள திட்ட அம்சங்கள், 167; அயல்நாட்டுக் கொடுப்பல்நிலைப் பற்றுக்குறை, 213, 214, 220, 221; பணவீக்க ஆற்றல், 331; மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட நிதியம்சம், 185, 186, 351

ஐ. நா. சமூகக் குழு, 281
ஐரோப்பியப் பொருளாதாரக் குழு, 71

ஒ

ஒடுக்கப்பட்ட பணவீக்கம், 10
ஒரிஸ்ஸா உணவு தானியக் கட்டுப்பாட்டு உத்தரவு, 336

க

கசானு டெபாசிட் ரசீதுகள், 309
கட்டுப்பாடுகள், இங்கிலாந்தில் முறைகள், 53; ஒழிப்பு, 83; 319; பருத்தித் துணிமீது 319; சர்க்கரைமீது, 319
கட்டுப்பாட்டு நீக்கம், 64; விலை யேற்றம், 306, 307
கட்டுக்கடங்காத பணவீக்கம், 12, 52, 54
கடன் வாங்குதல், பணவீக்க எதிர் நடவடிக்கை, 139; பட்ஜெட் பற்றுக்குறைக்கு நிதியளிக்க, 127
கண்கூடல்லாத வாணிப இனங்கள், 188, 213
கண்கூடான வாணிப இனங்கள், 187
கடோனு, பேராசிரியர் ஜார்ஜ், மேற்கோள், 352 அடிக்.
கல்டோர், பேராசிரியர் நிகொலாஸ், மேற்கோள், 184 அடிக்.
கலால் வரிகள், 135, 136
கனடா, போரின்போது வாழ்க்கைச் செலவு, 286; உணவு இறக்குமதி, 333; எஞ்சின்கள் இறக்குமதி, 205; செலாவணித் தாள் புழக்கத்தில் உயர்வு, 44, 54; உற்பத்தியில் உயர்வு 1939-44, 230; விலையுயர்வு 1940-ல் நிறுத்தப்பட்டது, 39; இரண்டாம் உலகப் போரில் உயர்வு, 52, 53, 88; 1945-க்குப் பிறகு உயர்வு, 59; 1949-ல் குறைவு, 66

கா

காட்கில், பேராசிரியர் D. R. சொவானி, N. V., மேற் கோள், 122 அடிக்.
காமன்வெல்த் அமைச்சர்கள் மாநாடு, 208
கார்ப்பொரேஷன் வரி, 1948–49-ல் உயர்வு, 148, 149
கால்பிரெயித், பேராசிரியர் J. K. மேற்கோள், 380
காப்பு நிதி விகிதம், மாறுதல், 338

கி

கியூபா, 1930–39-ல் சர்க்கரைக் கட்டுப்பாடு, 327
கியூரி, பேராசிரியர் லாச்லின் மேற்கோள், 89 அடிக்
கிராக்கிப் படிகள், பணவீக்க ஆற்றல், 42, 60. 61
கிராமப் பகுதிகளில் கூலியின் போக்கு, 279–281
கிரீஸ், 1920–29-ல் பணவீக்கம், 10; இரண்டாம் உலகப் போரில் விலையேற்றம், 52; இரண்டாம் உலகப் போரில் கட்டுக்கடங்காத பணவீக்கம், 54, 60
கிருஷ்ணமாச்சாரி (V. T.) குழு, 330
கில்லோ, பேராசிரியர், H. B., மேற்கோள், 189
கிழக்கு அரிசி மண்டலம், 334
கிழக்கிந்தியப் பருத்திச் சங்கம், 342
கிளே, பேராசிரியர் ஹென்றி, மேற்கோள், 348 அடிக்.

கு

குரிஹாரா, பேராசிரியர் மேற் கோள், 26

கூ

கூலி அளிப்புச் சட்டம், 268, 275
கூலிப் பட்டியல் உயர்வு, 236, 241
கூலி அளவு விலையினைப் பாதித்தல், 242

கெ

கெயின்ஸ் பிரபு, J. M., மேற் கோள், 6, 15, 190

கொ

கொரியா, போர்த் தொடக்க மும் அயல்நாட்டுக் கொடுப் பல் நிலையும், 200, 208; தொழில் நடவடிக்கை, 110; கச்சாப் பொருள்களின் அதிக விலைகள், 57, 70, 77, 85, 87; இருப்புச் சேர்த்தல், 74; பண அளிப்பு, 110; இருப்புச் சேர்ப்பு, 70; கட்டுப்பாட்டு அமைப்பில் துன்பம், 311
கொரியப் பொருளாதார வீக்க மும் மந்தமும், 86, 181
கொழும்புத் திட்டம், 29

கோ

கோதுமை ஆணையாளர் நிய மனம், 299
கோதுமைக் கட்டுப்பாட்டு உத் தரவு, 1942, 299
கோல்டன் வைஸர், பேராசிரி யர், மேற்கோள், 4, 16

கை

கைம்மாறு இல்லாத மாற்றல் கள், 188
கைல்ஸ், B.D., மேற்கோள், 325 அடிக்.

ச

முதாய வளர்ச்சித் திட்டம், 247
சமனுக்கு நிதி, எஃகு விலைகளை நிலை நிறுத்துவதற்கு, 323, 324
சர்வதேச சங்கம், 10, 45
சர்வதேச சங்கத்தின் மாதாந் தரப் புள்ளிவிவரச் செய்தி, 36

சா

சாங், T. C. மேற்கோள், 198 அடிக்.
சாட்பீல்டு செட்டில்மென்டு, 129

சி

சிந்திரி உரத் தொழிற்சாலை, 248
சித்தரஞ்சன் எஞ்சின் தொழிற் சாலை, 248
சியர்ஸ் பேராசிரியர் டட்லி, மேற்கோள், 282
சிலி, இரண்டாம் உலகப் போரில் விலையுயர்வு, 52
சிறு சேமிப்பு இயக்கம், 64, 148, 152, 169, 171

சு

சுங்கவரிக் குழுவின் பருத்தித் துணி விலைகளுக்கான சூத் திரம், 319
சுவிட்சர்லாந்து, 1940—44-ல் விலையேற்றத்தில் ஆண்டு உயர்வு சதவீதம், 1949-ல் விலை இறக்கம், 66; 1939–43-ல் நோட்டுப் புழக்க அதிகரிப்பு, 44, 54; இரண்டாவது உல கப் போரில் விலையுயர்வு, 52, 88
சுவீடன் விலையேற்றத்தில் ஆண்டு உயர்வு சதவீதம் 1940–44, 51; நோட்டுப் புழக்கத்தில் அதிகரிப்பு, 1939–43, 44; இரண்டாவது உலகப் போரில் விலையேற் றம், 52

சூ

சூயஸ் நெருக்கடி, 163

செ

செலவு ஏற்றப் பணவீக்கம், 8, 10, 11, 179

செலாவணி ஈர்ப்பும் திரும்பு தலும், 96; இரண்டாம் உல கப் போரில் பல நாடுகளில் பெருக்கம், 52
செலாவணிக் கட்டுப்பாடு, மூன்று வழிகளில், 337, 338
செலாவணிக் கட்டுப்பாடு, 198, 199
செலாவணியிலிருந்து ஓட்டம், 45

சே

சேமநல அரசு, 1, 30, 316, 352
சேவா கூட்டுறவுகள், 336

சோ

சோணைலம், பேராசிரியர், K. S., மேற்கோள், 328
சோம்பிக் கிடக்கும்இருப்புகள், மதிப்பீடுகள், 117

டா

டாட்டா இரும்பு, எஃகு தொழிற்சாலை, 239
டாலர் இறக்குமதி, நிறுத்தி வைத்தல், 1949 ஜூனுக்கும் செப்டம்பருக்கும் இடையில், 208, 209
டாலர் பற்றுக்குறை, 202, 203, 220

டி

டின்பர்ஜென், பேராசிரியர், ஜான், மேற்கோள், 14

டு

டுன்வாய், U. மேற்கோள், 22

டெ

டெபாசிட் திட்டம், வருமான வரி, அமிதலாப வரிகள், 138, 304
டெய்லர், சர் ஜேம்ஸ், 44
டென்மார்க்கு, ஆண்டுதோறும் விலையுயர்வு, 1940-44, 51; பணவாட்டக் கொள்கை, 75; 1952-ல் தொழில் உற்பத்தியில் வீழ்ச்சி, 74

தி

திரும்பப்பெறக்கூடிய போர்ச் செலவு, 129, 130, 199
திறந்த பொது அனுமதி, 63, 64, 304

து

துய்ப்புப் பொருள்கள் (கட்டுப்பாடு, பங்கீடு) உத்தரவு, 303
துருக்கி, வாழ்க்கைச் செலவு உயர்வு, 55; 1949-ல் சிறிது விலை இறக்கம், 66

தொ

தொழில் (வளர்ச்சி, ஒழுங்கு) சட்டம், 1951, 319
தொழில், சிவில் சப்ளை இலாகா, 302
தொழில்கள் போர்க்காலத்தில் பெருக்கம், 232
தொழில் தகராறுகள் அதிகரிப்பு, 1947-ல் 63
தொழிலாளர் கெஜட், பம்பாய், 263
தொழில் உற்பத்தி, போர்க் காலத்தில், 230, 231—233, 235; 1951 முதல் முன்னேற்றம், 245—247
தொழிற்சாலைகளில் வேலையளிப்பு, போருக்குப் பிறகு குறைவு, 339; போர்க்காலத்தில் உயர்வு, 234
தொழில் அபிவிருத்திக் குழு, 249
தொழிற்சாலைச் சட்டம், (1948), 276
தொழில் கோர்ட்டு தீர்ப்பு, 276
தொழில் தகராறுகள், 249, 269

தொழில் சம்பாத்தியங்கள், தொழில்களுக்கும் பிரதேசங்களுக்கும் இடையில் குறைந்த வித்தியாசம், 270, 271
தொழில் நிதிக் கார்பொரேஷன், 249
தொழில் லாபவரி விகிதத்தில் குறைப்பும் ஒழிப்பும், 148, 150
தொழிலாளர் உற்பத்தித்திறன் போரிலும் போரின் அடுத்த சில ஆண்டுகளிலும் குறைவு, 239
தொழில் கச்சாப் பொருள்மீது சட்டப்படியான கட்டுப்பாடு, 300
தொழிலாளர் பண வருமான உயர்வு, 268, 269; உண்மை வருமானம், 274, 279

தூ

தூண்டுதல் வரிவிதிப்பு, 148
தூரக்கிழக்குப் போர் பரவுதல், 42, 46; தேசிய வருமானமும் அதிகத் தேவையும், 209

தெ

தென்னப்பிரிக்கா, விலையேற்றத் தடுப்பு, 1950—39

தே

தேசிய அபிவிருத்திக் குழு, 167
தேசிய வருமானக் குழு, 115
தேசிய வருமானம் உற்பத்திப் போக்கைக் காட்டுதல், 226, 229
தேசிய வருமான ஆராய்ச்சி, 61, 177, 194
தேர்ந்தெடுத்த கடன் கட்டுப்பாடு, 341, 343, 346

ந

நடப்பு வைப்புகள், பணமாக, 90, 91; மொத்தப் பண அளிப்பின் அளவு, 95
நடுத்தர வகுப்பார் வாழ்க்கைச் செலவு, 282–284
நர்க்ஸே, பேராசிரியர் ரக்நார், மேற்கோள், 22

நா

நாட்டுப் பிரிவினை, அதனால் அதிக அரசாங்கச் செலவு, 150 பண அளிப்பின்மீதும், கச்சாப் பொருள்கள்மீதும், உணவின் மீதும் விளைவு, 239
நார்வே, விலைகள் இறங்குமுகம், 74; நோட்டுப் புழக்கத்தில் உயர்வு, 54; இரண்டாம் உலகப்போரில் விலையேற்றம், 52
நாராயண பிரசாத், P.S., மேற்கோள், 217

நி

நிகரத் தேவை, போர்க்காலத்தில் அதிகரிப்பு, 234, 352
நிதிச்சட்டம், 1942, 137
நிதிக்குழுவின் பரிவுரை, 158
நியாய விலைக் கடைகள், 334, 335
நியூஜிலாந்து, விலையேற்றத்தில் ஆண்டு சதவீதம், 1940–44, 51
நிருவாக அமைப்பு, திறமையும் விலையுயர்வும், 52, 352
நில ஊகவாணிகம், 23

நெ

நெதர்லாந்து இரண்டாம் உலகப் போரின்போது விலையேற்றம், 52; நோட்டுப் புழக்கத்தில் அதிகரிப்பு, 53

நோ

நோட்டுப்புழக்கம், இரண்டாம் உலகப் போரில் பெருக்கம், 106, 107

ப

பட்ஜெட் கொள்கை, போருக் குப்பிந்திய ஆண்டுகளில் நிலை யின்மை, 145, 146
பட்ஜெட் பற்றுக்குறைகள் 1946-51, 63, 69, 151; பண அளிப்பின் மீதும் விலைகள் மீதும் விளைவு 123—127; 1951-56 பற்றுக்குறைகளும் பண அளிப்பின்மீது விளைவும், 160, 162
பண்டக் கடன் கார்ப்பரேஷன், அமெரிக்காவில், 327
பண்ட விலைக் குழு, 305
பணவீக்கம் கட்டாய வரி, 10
பணத்தின் சுழற்சி வேகம், 115, 249
பண அளவுக் கோட்பாடு, 3, 5
பணத்தின் வருமான வேகம், 1939—46-ல் குறைவு, 114—119; 1951—54-ல் அதிகம், 119—121
பணவீக்கம், நன்மைகள், 21; மூலதன ஆக்கம், 22; தேவை உயர்வுப் பணவீக்கம், 8; அபாயங்கள், 21, 22; விளைவு கள், 20, 31; அதிகத்தேவைப் பணவீக்கம், 13, 174—176, 179; ஏற்றுமதிப் பணவீககம், 19, 23, 217; அமெரிக்காவி னுல் ஏற்றுமதி, 71, 73; பண வீக்கமும் உழவர்களும், 22, 23; நிலஉகவாணிபம், 22, 23; உற்பத்தி செய்வோர், 24; பொருள், 3, 253; இரண் டாம் திட்டத்தில், 174—182; விவசாய, தொழில் உற்பத்தி முன்னேற்றத்திற்குத் தடை, 230; அரசியல் அபாயங்கள், 27; உற்பத்தி முயற்சி, 25, 26; கட்டுக்கடங்காத பணவீக் கம், 45; சமூக விளைவுகள், 27; வளர்ச்சி குன்றிய நாடு களில், 28, 33; முழு வேலை குறைந்திருக்கும் நிலையில், 15, 16; சேமநல அரசுக் குறிக்கோள், 30, 31
பணவீக்க வித்தியாசம், 142
பண அளிப்பு, ஏற்ற இறக்கத் திற்குக் காரணங்கள், 101, 104; அமைப்புக் கூறுகள், 90—92, 1948-49 முதல் குறைவு, 109; 1953-54 முதல் பெருக்கம், 110, 111; உயர்வு குறைவுகளுக்குக் காரணங் கள், 93 94; பதுக்கல் தேவை கள், 119, 121; போருக்குப் பிந்திய ஆண்டுகளில், 145; விலைகளின்மேல் விளைவு 43—45, 89, 90, 119, 121, 122, 161, 162; நீண்ட கால வேறு பாட்டுக்கு காரணங்கள், 99—101; குடும்பம் ஒன்றுக்கு, 121; பருவகால மாறுதல் கள், 95—98; 1939-க்கும் 1956-க்கும் இடையில் மாறு தல்கள், 101, 106—114
பத்தாண்டு நிலமாற்றுத் திட் டம், 247
பதுக்கல், கொள்ளை (தடுப்பு) அவசரச் சட்டம், 303, 304
பம்பாய் அரசாங்கத் தொழில் நிலையம், 255
பர்மா வீழ்ச்சியால் அரிசி அளிப் பின் மீதும் விலைமீதும் விளைவு, 48, 235
பருத்தித் துணி, நூல் (கட்டுப் பாடு) உத்தரவு, 1943—302
பரிவர்த்தனைச் சமன் கணக்கு, 194
பருத்திக்குக் 'கீழ்நிலை', 'மேல் நிலை' விலைகள், 319
பருத்தித் துணிக் கட்டுப் பாட்டுக் குழு, 302
பருத்தித் துணித் தொழில் (உற் பத்திக் கட்டுப்பாடு) உத் தரவு, 304
பருத்தியில் நஷ்டமில்லாத ஒப் பந்தங்கள் ஒழிப்பு, 304
பழுப்புச் சந்தையும் கறுப்புச் சந்தையும், 25
பற்றுக்குறை நிதியாக்கம், பொருளாதார வளர்ச்சிக்கு, 183; முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், 156, 161, 164;

பணவீக்க விளைவு, 16; வளர்ச்சி குறைந்த நாடுகளில் பணவீக்க ஆற்றல், 181, 185; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பண அளிப்பின் மீதும் விலைகள்மீதும் விளைவின் மதிப்பீடு, 167, 175, 177, 179—186, 187—190, 217, 220, 221, 251, 350, 351
பன்னிரண்டாண்டு தேசியச் சேமிப்புப் பத்திரங்கள், 140
பூன்ஞட்டுப் பொருள்கள் மாநாடு, 74
பன்ஞட்டுச் செலாவணி நிதி, 188, 205, 214
பன்ஞட்டு ரோம ஆராய்ச்சிக் குழு, 28

பா

பாகிஸ்தான், கச்சாப் பொருள்களுக்கு இந்தியாவை நம்பியிருத்தல், 67
ஏற்றுமதிப் பணவீக்கம், 19; உறவு இல்லாமை, 239; மொத்தப் பண அளிப்பில் நடப்பு வைப்புகளின் அளவு, 95அடிக்., சணல் உற்பத்தியில் குறைவு, 82
பாங்கு வீதம், 1951 நவம்பரில் உயர்த்தப்பட்டது, 317
பாதுகாப்புக் கடன்கள், 139
பாதுகாப்புச் சேமிப்பு இயக்கம், 139, 140
பாலகிருஷ்ணா, பேராசிரியர் R., மேற்கோள், 240
பாலஸ்தினம், விலைகளில் ஆண்டு சதவீத உயர்வு, 51

பி

பிரான்ஸ் பண அளிப்புப் பெருக்கம், 60; நோட்டுப் புழக்கம், 44; இரண்டாம் உலகப் போருக்குப்பின் பணவீக்கம், 60; மூலதன வெளியேற்றம், 24, 25
பிரெஸ்ஸியானி — துர்ரோனி, பேராசிரியர், மேற்கோள், 4 அடிக்.
பிரேசில், காப்பிக் கட்டுப்பாடு, 327
பிரைஸ், G., மேற்கோள், 92 அடிக்.
பிரௌன், பேராசிரியர் A. J., மேற்கோள், 2 அடிக்., 240 அடிக்., 294 அடிக்.
பிலிப்பைன்ஸ், ஏற்றுமதிப் பணவீக்கம், 19
பிளாக், G.L., மேற்கோள், 121 அடிக்.
பிறழ்ச்சிக் காரணவேலையின்மை, 17
பின்னிறக்கம் 1951-52-ல், 73, 74, 316; துய்ப்போருக்கு, 79; உற்பத்தியாளருக்கு, 79, 80; எதிராக அரசாங்க நடவடிக்கைகள், 79, 80, 82
ஃபிஷர், பேராசிரியர் இர்விங், மேற்கோள், 3 அடிக்.

பெ

பெடரல் ரிசர்வ் புல்லட்டின், 4, 121
பெடரல் ரிசர்வ் சிஸ்டம், 90
பெரு, 2ஆம் உலகப் போரில் விலையேற்றம், 52
பெல்ஜியம், தொழில் உற்பத்தியில் குறைவும் வேலையின்மையும், 74; நோட்டுப் புழக்கத்தில் அதிகரிப்பு, 1939-43, 44; இரண்டாம் உலக மகாயுத்தத்தில் விலைகள் அதிகரிப்பு, 52; 1949-ல் குறைவு, 66
பெனி, M. அடா, மேற்கோள், 255 அடிக்.

பே

பேக்மன், ஜூலஸ், மேற்கோள், 327

பொ

பொடுவல், டாக்டர் R. N., மேற்கோள், 140 அடிக்., 330 அடிக்.

பொருள்களின் அளிப்பும் விலையும்பற்றிய அவசரச் சட்டம், 313
பொருள்களின் அளிப்பும் விலையும்பற்றிய சட்டம், 1950, 316; காலாவதியாகுமாறு விட்டுவிடுதல், 319

போ

போர்த்துகல், 1940-44-ல் ஆண்டு விலையுயர்வு சதவீதம், 51, 2ஆம் உலகப் போரில் விலையுயர்வு, 52
போர்த் தேவையும் விலையேற்றமும், 45, 46
போர் நிதியளிப்பு, பணவீக்க விளைவு, 128, 130, 131; தன்மை, 124
போருக்கு நிதியளித்தல், 133

ம

மண்டலங்களில் கோதுமை இயக்கம், 1955-ல் கட்டுப்பாட்டு நீக்கம், 318
மண்டலமுறை, உணவு தானியப் பங்கீட்டில், 333, 334
மத்திய சம்பளக் குழு, 270
மத்திய டிராக்டர் நிறுவனம், 248
மத்தியக்கிழக்குநாடுகள், இரண்டாம் உலகப் போரில் விலையுயர்வு, 52; 1950-ல் தேவைப் பெருக்கம், 208
மதிப்பிறக்கம், பாதுகாப்பு நடவடிக்கை, 206; வெளிநாட்டுக் கொடுப்பல் நிலைமீது விளைவு, 206, 207; விலையளவின்மீது மந்த விளைவு, 57 66, 67
மந்த பருவம், சுறுசுறுப்பான பருவம், 96
மலேயா, 1951-ல் ஏற்றுமதி வீக்கம், 20; மொத்தப் பணஅளிப்பில் நடப்பு வைப்புகளின் அளவு, 95
மனமாற்றம், 111, 336
மறுகட்டுப்பாடு, 1948, 309

மா

மார்க்கன், பேராசிரியர் தியோடார், மேற்கோள், 223

மி

மில்லிகன், மாக்ஸ், பேராசிரியர், மேற்கோள், 90

மீ

மீட், பேராசிரியர், J.E., மேற்கோள், 189 அடிக்., 191, 350

மு

முதல் ஐந்தாண்டுத்திட்டத்தில் கடன்களிலிருந்து வரவு, 159, 171
முழு வேலையளிப்பு, போர்க் காலத்தில், 232
முன்னேக்கிய ஒப்பந்தங்கள் (ஒழுங்கு) சட்டம், 1952, 320
முன்னேக்கிய மார்க்கெட்டு கமிஷன், 1953, 320, 336, 342, 343
முன்னேக்கிய வாணிபம் பருத்தியில், 319; சணலில், 311
முன்னேக்கிய பேரங்களும் விருப்ப பேரங்களும், 312
முன்னேற்ற விளைவு வாழ்க்கைச் செலவுப் போக்கில், 283

மூ

மூலதனம், போர்க்காலத்தில் நன்கு பயன்படுத்துதல், 232; போருக்குப்பின் புதுப்பிக்க வேண்டிய அவசியம், 237
மூலதன லாபவரி, 147; ஒழிப்பு, 148
மூலதன வெளியீட்டுக் கட்டுப்பாட்டு உத்தரவு, 1943, 304; 1947-49-ல் எண்ணிக்கையில் குறைவு, 239, 240; 1951 முதல் அதிகரிப்பு, 249, 250

மெ

மெக்கன்ஸி, பேராசிரியர் பிண்ட்லே, மேற்கோள், 317
மெக்ஸிகோ, இரண்டாம் உலகப் போரில் விலையேற்றம், 52
மெஹ்லின் ஜார்ஜ், L., மேற்கோள், 332

மை

மைசூர் இரும்பு-எஃகு தொழிற்சாலை, 323

ர

ரபி உற்பத்தி இயக்கம், 245

ரா

ராபர்ட்ஸன், பேராசிரியர் D. H., மேற்கோள், 89
ராவ், பேராசிரியர், V.K.R.V., மேற்கோள், 18

ரெ

ரெய்ஸ்மேன், சர் ஜெரெமி, மேற்கோள், 138

ரொ

ரொக்க விருப்பமும் பணவீக்கமும், 176, 177

ரௌ

ரௌலண்ட்ஸ், சர் ஆர்ச்சிபால்டு, மேற்கோள், 282

லி

லியாகத் அலிகான், நிதியமைச்சர், 147

லெ

லெபனானில் வாழ்க்கைச் செலவு உயர்வு, 55
லெர்னர், பேராசிரியர், மேற்கோள், 17 அடிக்.

லே

லேன், W.R., மேற்கோள், 92 அடிக்.

வ

வரதாச்சாரியார், சர் S., 61
வரிவிதிப்பு, பணவீக்கத் தடுப்பு நடவடிக்கை, 135, 136
வரிவிதிப்பு விசாரணைக்குழு, 83, 169, 171, 351
வரிவிதிப்பு, இறுதிநிலை விகிதம், 172
வரி, வியாபாரத்திற்கும் தொழிலுக்கும் சலுகை, 147, 149; முதலீட்டுக்கும் உற்பத்திக்கும் ஊக்கமளிக்கும் நடவடிக்கைகள், 148, 149; போர்க்காலத்தில், 135, 136; இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதியளிக்கும் சாதனங்கள், 157
வருவாய்க் காப்பு நிதி, 139
வருமானவரி, மூன்னூல் செலுத்துதல், 138; கட்டாய டெபாசிட்டு, 304
வளர்ச்சி குறைந்த நாடுகள், அயல் நாட்டுக் கொடுப்பல் நிலையும் பிரச்சினைகளும், 198—200; பணவீக்கம், 13—20

வா

வாங்குவோர் பணவீக்கம், 8
வாங்குந்திறன் சமத்துவக் கோள், 189
வாணிபக் கொடுப்பல் நிலை, இந்தியாவிற்குச் சாதகம், 1939—45, 199, 200
வாழ்க்கைச் செலவு, அகில இந்திய சராசரி, தொழிலாளர் குறியீட்டெண், 257; இந்தியாவில் குறியீட்டெண்களின் குறைகள், 259, 260; மாறுவதன் பொருளாதார முக்கியத்துவம், 251; மற்ற நாடுகளுடன் இந்தியாவை

ஒப்பீடுதல், 286, 287 ; இந்தியாவில்உயர்வு, 41 ; இரண்டாம் உலகப் போரில் பல நாடுகளில், 53—55; பம்பாய், நாகபுரி, சென்னையில் போக்குகள், 263; கூலி பெறுவோர் குறியீட்டெண், 255, 256

வி

விலைகள், உணவுப் பொருள், 325, 330; கச்சாப் பொருள்கள்—35, 36, 81, 82,போக்கில் முக்கியக்கட்டங்கள்,1939-56, 35. 36, 56, 57, 296, 297, 1952-ல் மறுமலர்ச்சி, 82, 83; கட்டுப்பாட்டு நீக்கத்திற்குப் பிறகு உயர்வு, 307; 1955 முதல், 331
விலைக் கட்டுப்பாடு, தற்காலிக நடவடிக்கைகள், 295; எதிரான வாதங்கள், 349; வெற்றிக்கு நிபந்தனைகள், 294,295; மாநாடுகள், 299; செலவுடன் கூடுதல் முறை, 293; இந்தியாவில் சங்கடங்கள், 300; நேரடி முறைகள், 293, 294; மாறுத உச்ச அளவு முறை, 293; மறைமுக நடவடிக்கைகள், 293; போரின் ஆரம்ப ஆண்டுகளில் சிறிது வெற்றி, 300; அவசியம், 348—352 கோதுமை மீது, 303 ; சிமெண்ட், 302; இரும்பு, எஃகு, சர்க்கரை—விலை முடக்கம், 292, 298
விலைகள் துணைக்குழு, 330
விவசாய உற்பத்தி, போர்க் காலத்தில் உயர்வு 213. 231; குறைவு, 216; குறைவிற்குக் காரணங்கள், 220 ; 1951 முதல் முன்னேற்றம், 226 ; நெகிழ்ச்சிக் குறைவு,323, 324
விக்செல், பேராசிரியர் K., மேற்கோள், 6
விக்டோரியா ரூபாய் நாணயங்கள் திரும்பப் பெறுதல், 105
விசேஷ அரசாங்க நிதியாக்கம், 203
விலைக் கட்டுப்பாட்டில் மாறுத உச்ச அளவு முறை, 292
விலைக் கட்டுப்பாட்டில் செலவுடன் சேர்த்தல் முறை. 292
வில்ஸனும் ஆண்ட்ரூசும், மேற்கோள், 325 அடிக்
வில்லியம்சும் சாப்மெனும், மேற்கோள், 23 அடிக்.

வெ

வெளிநாட்டுச் சொத்துகளின் இயக்கம், 212
வெளி உதவி முதல் திட்ட காலத்தில் அதிகாரம், 157; இரண்டாம் திட்டத்தில்,173; அயல் நாட்டுக் கொடுப்பல் நிலைமீது விளைவு, 199
வெற்றுக் கடன்கள், 1944—45, 139
வெங்கட்ராமையர் தீர்ப்பு, 276

வே

வேலைத் தகவல் நிலையங்கள், 61
வேலைக் குறைவு, 19

ஹ

ஹங்கேரி, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அளவு கடந்த பணவீக்கம், 10, 60

ஹா

ஹாட்ரி, பேராசிரியர் R. G., மேற்கோள், 192, 349 அடிக்.
ஹார்ட், பேராசிரியர் A. G., மேற்கோள், 11—25 அடிக்.
ஹாரிஸ், பேராசிரியர், சைமூர், 10, 22 அடிக்.
ஹாலண்டு, பணவாட்டக் கொள்கை, 74, 75
ஹான்சென், பேராசிரியர் ; பெண்ட், மேற்கோள், 7

ஹி

ஹிந்து, சென்னை, 338, 344

ஹெ

ஹெண்டர்சன், பேராசிரியர் H.D.. மேற்கோள், 348
ஹெல்பெரிச், பேராசிரியர், மேற்கோள், 4

ஹே

ஹேபர்லர், பேராசிரியர் காட் பிரைட்வான், மேற்கோள், 16

ஹை

ஹைதராபாத் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண், 258
ஹைதர் தூது, இங்கிலாந்திற்கு, 303

ஹோ

ஹோல்ஸ்மன், F. D. மேற் கோள், 9 அடிக்.

ஷ

ஷண்முகம் செட்டி, சர் R. K., 147

ஷா

ஷா, பேராசிரியர் எட்வர்டு, S., மேற்கோள், 91

ஷெ

ஷெடியூல் பாங்குகள், கடன் கொள்கை, 111, கடன்மீது கட்டுப்பாடு, 341, 343
ஷெப்பர்டு, பேராசிரியர் ஜாப்ரி S., மேற்கோள், 325

ஜ

ஜப்பான், விலையில் ஆண்டு சத வீத உயர்வு, 50 ; போட்டி ஒழிப்பு, 46 ; 1937–38-ல் பின் னிறக்கம் இன் மை, 32 ; மொத்தப் பண அளிப்பில் நடப்பு வைப்புகளின் அளவு, 95 ; இரண்டாம் உலகப் போரில் விலையுயர்வு, 52

ஜா

ஜாயின்டு ஸ்டாக் கம்பெனி கள், 233

ஜெ

ஜெர்வில், பேராசிரியர் F.R. J., மேற்கோள், 348 அடிக்.
ஜெர்மனி, விலைகளில் ஆண்டு சதவீத உயர்வு, 1940–44, 51; வாழ்க்கைச் செலவும் உணவு விலைகளும் தடுத்து நிறுத்தப் பட்டது, 54; மூலதன வெளி யேற்றம், 25 ; அளவுகடந்த பண வீக்கம், 4, 10, 60 ; நோட்டுப் புழக்கத்தில் உயர்வு 1939–43, 44; இரண் டாம் உலகப் போரில் விலை யுயர்வு, 2, 3

ஸ்

ஸ்டர்லிங், சேருதலும் பண அளிப்பும், 107 ; ஸ்டர்லிங் பகுதி, 74, 205; இருப்புகள், மாற்றுவதற்கு உச்சவரம்பு, 205 ; கடனைத் திரும்பச் செலுத்துதல், 140
ஸ்டீவன்சனின் ரப்பர் கட்டுப் பாடு, 326
ஸ்பெயின், 1940–44-ல் ஆண்டுச் சராசரி விலையேற்றச் சத வீதம், 51; இரண்டாம் உல கப் போரில் விலையுயர்வு, 52

தமிழ் வெளியீட்டுக் கழகம்

சென்னை-9

1966 வரை வெளியிட்டுள்ள நூல்கள்

பொருளாதாரம்

*1.	பொருளாதாரம்-II ...	...	சி. வேலாயுதம்	... 9—00
2.	புதுமைப் பொருளாதாரக் கூறுகள்	...	திருமதி ஆர். தாமரஜாட்சி	... 12—00
3.	பொருளாதாரம் ஓர் அறிமுகம்-I	...	தி. சி. மோகன்	... 12—00
4.	,, II	...	எம். ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன்	... 10—75
5.	பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு	...	க. முத்தையன்	... 7—00
*6.	பணவியலும் பாங்கியலும்-II ...	...	சி. வேலாயுதம்	... 11—50
7.	நவீன பாங்கு இயல் ...	...	க. வெற்றிவேல்	... 7—50
*8.	இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும்	...	பி. வி. ஸ்ரீநிவாசன்	... 5—50
*9.	அரசாங்க நிதி இயல் ...	...	அர. சேஷாசலம்	... 4—75
10.	இந்தியப் பொருளியல்-I ...	...	எம். பாலசுப்பிரமணியன்	... 10—00
11.	,, II ...	...	எம். லூர்துநாதன்	... 4—25
12.	நமது பொருளாதாரப் பிரச்சினை-I	...	சி. சுந்தரராஜன்	... 10—75
13.	,, II	...	எஸ். குழந்தைநாதன்	... 10—50
14.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு-I	...	கீ. சீ. இராமசாமி	... 6—00
15.	,, II	...	,,	... 6—00
16.	அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி	...	தி. சி. மோகன்	... 5—00

17.	அமெரிக்கப் பொருளாதார வரலாறு–I	...	மு. கு. சுப்பிரமணியம்	—	11—00
18.	,, II	...	பி. வி. சீனிவாசன்	...	6—00
19.	,, III	...	,,	...	6—50
20.	அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்–I	...	மா. குமாரசாமி	...	10—00
21.	,, II	...	அர. சேஷாசலம்	...	9—50
22.	இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி–I	...	தே. வேலப்பன்	...	10—00
23.	,, II	...	ஜி. சிதம்பரம்	...	8—00
24.	பணம்—சிறு விளக்கம் ...	...	கோ. இராதாகிருஷ்ணன்	...	10—00
*25.	வணிக இயலின் தத்துவங்கள் ...	...	கு. ஆளுடைய பிள்ளை	...	9—50
26.	பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில் வாணிபப் புரட்சி	...	சூ. ரா. கறுப்பண்ணன்	...	11—00
27.	பென்ஹாம் பொருளாதாரம்–I	...	ஏ. குழந்தை	...	11—00
28.	,, II	...	எஸ். குழந்தைநாதன்	...	7—00
*29.	வரவுசெலவுத் திட்டம் ...	...	ஆர். ரங்காச்சாரி	...	6—00

வரலாறு

*30.	பிரிட்டன் வரலாறு–I ...	...	கி. ர. அனுமந்தன்	...	10—00
*31.	,, II ...	...	,,	...	9—75
*32.	ஐரோப்பிய வரலாறு–I ...	...	டி. வி. சொக்கப்பா	...	4—50
33.	ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றாண்டுகாலச் சரித்திரம்	...	வை. விருத்தகிரீசன்	...	15—00
34.	இங்கிலாந்து வரலாறு–I ...	...	இரா. அண்ணாமலை	...	13—00
35.	,, II ...	...	பா. மாணிக்கவேலு	...	13—00
36.	,, III ...	...	என். ஜே. ராஜகோபால்	...	8—00
37.	,, IV ...	...	,,	...	8—00

* மூலநூல் (Original Book)

வரலாறு—தொடர்ச்சி

38.	இங்கிலாந்தின் வரலாறு-I ...	...	க. த. திருநாவுக்கரசு	... 15—00
39.	,, II ...	...	எம். எக்ஸ். மிராண்டா	... 8—00
40.	,, III ...	...	,,	... 5—00
41.	இந்தியாவின் சிறப்பு வரலாறு-I	...	தி. வெ. குப்புசாமி	... 7—50
42.	,, II	...	ஏ. உஸ்மான் ஷெரீப்	... 9—00
43.	,, III	...	அ. பாண்டுரங்கன்	... 11—00
44.	கிரேக்க நாட்டு வரலாறு-I	...	சைமன் ஐ. எஸ். பாக்கியநாதன்	... 7—50
45.	,, II	...	,,	... 7—00
46.	,, III	...	பி. இராமானுஜம் தேவதாஸ்	... 7—75

அரசியல்

*47.	இந்திய அரசியலமைப்பு ...	...	வீ. கண்ணையா	... 4—75
48.	அரசியலுக்கு ஓர் அறிமுகம் ...	...	டி. செல்லப்பா	... 8—50
49.	தற்கால அரசியல் அமைப்புகள் ...	...	மோ. வள்ளுவன் கிளாரன்சு	... 8—50
50.	பன்னாட்டு அரசியல்-I ...	...	திருமதி நூர்ஜஹான் பாவா	... 16—00
51.	பொதுத்துறை ஆட்சி இயல்-I ...	...	வீ. கண்ணையா	... 9—00
52.	,, II ...	...	அ. ஜெகதீசன்	... 7—25
53.	பொதுத்துறை ஆட்சியியலுக்கு ஓர் அறிமுகம்-I	...	வீ. கண்ணையா	... 7—50
54.	,, II	...	டி. செல்லப்பா	... 7—50

உளவியல்

55.	குழந்தை உளவியல்-I ...	...	கி. ர. அப்புள்ளாச்சாரி	... 8—00
56.	,, II ...	...	,,	... 7—00

57.	உட்கவர் மனம்	...	சி. ந. வைத்தீஸ்வரன்	...	7—00
58.	இளையோர் உளவியல்–I	...	தி. இரா. அரங்கராசன்	...	12—00
59.	,, II	...	,,	...	9—00
60.	சமூக உளவியல்	...	என். வேதமணி மானுவேல்	...	9—25
61.	பிறழ்நிலை உளவியல்	...	அ. பெசன்ட் கிரீப்பர்ராஜ்	...	11—00
62.	பித்தரின் உள்ளம்	...	,,	...	3—00
*63.	குமர உள்ளம்	...	டாக்டர் மு. அறம்	...	6—25

தத்துவம்

64.	இந்து சமயத் தத்துவம்	...	ஞா. ராஜாபகதூர்	...	5—50
*65.	அறிவு ஆராய்ச்சி இயல்	...	ஆர். இராமானுஜாச்சாரி	...	3—50
*66.	மேலை நாட்டுத் தத்துவம்	...	ஆர். எஸ். தேசிகன்	...	3—50
67.	அத்துவித தத்துவம்	...	ஜி. எம். காந்தி	...	6—50
68.	ஆங்கிலேயப் பயன்வழிக் கொள்கையினர்	...	மோ. வள்ளுவன் கிளாரன்சு	...	5—50
69.	இந்தியத் தத்துவம்	...	வ. அ. தேவசேனுபதி, பா. நா. சண்முகசுந்தரம்	...	3—50

அறவியல்

70.	அறவியல்—ஓர் அறிமுகம்	...	கோ. மோ. காந்தி	...	8—50

அளவையியல்

71.	அளவை இயல்—தொடக்க நூல்	...	கி. ர. அப்புள்ளாச்சாரி	...	2—50

* மூல நூல் (Original Book)

மானிடவியல்

*72.	மானிடவியல் ...	...	ம. சு. கோபாலகிருஷ்ணன் ...	4—75
73.	பண்பாட்டுக் கோலங்கள் ...	...	கி. பூ. சுப்பிரமணியன் ...	5—50
74.	இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை	...	எஸ். இலட்சுமி ...	3—50

சமூகவியல்

75.	சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	...	ஜெ. நாராயணன் ...	10—00

புவியியல்

76.	ஆசியா–I ...	...	கொ. சேஷ. நரசிம்மன் ...	9—50
77.	,, II ...	...	,, ...	8—75
78.	ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல்	...	ஏ.எஸ். நாராயணன் ...	8—50
*79.	தென்கிழக்கு ஆசியா ...	...	ஜி.கிருஷ்ணமூர்த்தி ...	8—50
*80.	வட அமெரிக்கா ...	...	குமாரி இரா. அலமேலு ...	8—25
*81.	தென் அமெரிக்கா ...	...	எம். என். பத்மநாபன் ...	9—00
*82.	தென் கண்டங்கள்—ஆஸ்திரேலியா	...	திருமதி எச். நியூமன் ...	4—00
*83.	,, —ஆஃபிரிக்கா ...	...	எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர் ...	3—25
*84.	புவிப்புறவியல்-II ...	...	நா. அனந்தபத்மநாபன் ...	6—00
*85.	செய்முறைப் புவியியல் ...	...	சு. ஜெயச்சந்திரன் ...	9—00
*86.	மக்கட் பரப்பியல் ...	...	வி. எஸ். அனந்தபத்மநாபன் ...	6—25
*87.	சமுத்திரவியல் ...	...	கோ. இராமசாமி ...	6—50
88.	காலநிலை இயல்-I ...	...	கொ. சேஷ. நரசிம்மன் ...	10—00
89.	,, II ...	...	,, ...	5—00

90. வளியியலுக்கு ஓர் அறிமுகம் ...	... கோ. இராமசாமி	...	11—00
*91. புவி அமைப்பு இயல் ...	... சி. விசுவநாதன்	...	4—75

புள்ளியியல்

*92. புள்ளியியல்—அறிமுகம் ...	... சு. வைத்தியநாதன்	...	10—00
93. புள்ளியியல் முறைகள்-I ...	... கோ. சண்முகசுந்தரம்	...	10—00
94. ,, II ...	... கே. ஆர். இராஜகோபாலன்	...	14—00
95. நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்	... தி. வி. லட்சுமிநரசிம்மன்	...	6—50

உயர் கணிதம்

*96. ஆயத்தொலை வடிவகணிதம் ...	... டி. கே. மாணிக்கவாசகம் பிள்ளை	...	12—50
*97. வகை நுண்கணிதம் ...	... ,,	...	8—00
*98. தொகை நுண்கணிதம் ...	... தி. கோவிந்தராசன்	...	9—00

விலங்கியல்

*99. விலங்கியல் ...	... பெ. மா. அண்ணாமலை, இரா. முருகேசன்	...	12—00

பௌதிகவியல்

100. ஒளி நூல் ...	... ச. சம்பத்து	...	10—00

* மூல நூல் (Original Book)

விஞ்ஞானம்

*101. வானவெளி வெற்றி	...	... டாக்டர் எம். ஏ. தங்கராஜ்	... 6—00
*102. ரேடியோ	...	... ,, பி. திருஞானசம்பந்தம்	... 4—75
*103. எக்ஸ்-கதிர்கள்	...	... பெ. நா. அப்புசாமி, ஜே. பி. மாணிக்கம்	4—50
*104. பாம்புகள்	...	... பெ. மா. அண்ணாமலை	... 3—50
*105. தாவரம்—வாழ்வும் வரலாறும்	...	... டாக்டர் கு. சீனிவாசன்	8—00
*106. கரும்பு	...	... கு. பெரியசாமி	... 4—00

மருத்துவம்

*107. நீரிழிவு-சுயரோகம்	...	... டாக்டர் ஜி. வேங்கடசாமி, டாக்டர் ஏ. கதிரேசன்	... 2—50
108. மகப்பேறும் மாதர் நோயும்	...	... டாக்டர் (குமாரி) மணிமேகலை	... 8—25
*109. பாக்டீரியா	...	... சு. சுந்தரம்	... 2—50

பொறியியல்

110. நீங்களே வீட்டைக் கட்டலாம்	...	... கே. வி. கிருஷ்ணராஜ், சி. ஆர். சுப்பிரமணியம், ஆர். இராமசாமி, கே. வேணுகோபால்	... 8—50

சட்டம்

*111. குற்றவியல் சட்டம்	...	... எம். சண்முகசுப்பிரமணியம்	... 10—00

பொது நூல்கள்

112. மகாத்மா காந்தி	...	... சரஸ்வதி தங்கையன்	... 3—25
113. விவசாயப் புரட்சி	...	... வி. கார்த்திகேயன்	... 8—00
114. சேமக் கை-நூல்	...	... ஆ. சுப்பிரமணியம்	... 2—50
*115. முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்		... எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்	... 9—00
*116. உணவும் ஊட்டமும்	...	... தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார்	... 4—50

* மூல நூல் (Original Book)

தமிழ் வெளியீட்டுக் கழகப் புதிய வெளியீடுகள், 1967

பொருளாதாரம்

பன்னாட்டுப் பொருளாதாரம்–I, II	— பி. டி. எல்ஸ்வொர்த்
பொருளாதார ஆய்வு நூல்–I, II	— எட்வர்ட் நெவின்
வளர்ச்சியுறுத நாடுகளின் அரசாங்க நிதியியல்	— ஏ. ஆர். பிரெஸ்ட்
வளர்ச்சி குறைந்த நாடுகளின் முதலாக்கம்பற்றிய சிக்கல்கள்	— ராக்னர் நர்க்ஸ்
1939 முதல் இந்தியாவில் பணவீக்க விலைப் போக்குகள்	— பிரைட் சிங்
பொருளாதார வளர்ச்சிபற்றிய கட்டுரைகள்	— வி. கே. ஆர். வி. ராவ்

வரலாறு

ஆக்ஸ்ஃபோர்டின் இந்திய வரலாறு–I, II, III	— வின்சென்ட் ஏ. ஸ்மித்
முகலாயப் பேரரசு–I, II	— ஏ. எல். ஸ்ரீவத்ஸவா

அரசியல்

இந்திய அரசியலமைப்புத் திட்டம்	— எம். வி. பைலீ
இந்திய ஆட்சி அமைப்புமுறை வளர்ச்சி–I	— எச். என். சின்ஹா
பன்னாட்டரசியல்–II	— ஃபிரெடரிக் எல். ஷூமன்
மக்கள் ஆட்சி	— கே. சந்தானம்
1919 முதல் சர்வதேச உறவுகளும் உலக அரசியலும்	— எஸ். என். தார்
சமூக, அரசியல் கொள்கையின் அடிப்படைகள்	— எர்னஸ்ட் பார்க்கர்

தத்துவம்

மெய்ப்பொருளியல்–ஓர் அறிமுகம்–I	— ஏ. ஜே. பாம்

புவியியல்

சிஷோமின் வாணிகப் புவியியல்–I, II	எல். டட்லி ஸ்டாம்ப்
பௌதிகப் புவியியலும் புவியமைப்பியலும்	— எல். டட்லி ஸ்டாம்ப்

தாவரவியல்

தாவரங்களின் வாழ்வியல்	— எஸ். சுந்தரம்

மருத்துவம்

புற்றுநோய்	— ஆர். ஜே. எஸ். ஹாரிஸ்